..தியபதிப்பு
..திப்புரிமை : பாவை பதிப்பகம் ©.

விலை - ரூ. 70.00

தபாலில் பெற
பாவை பதிப்பகம்
37-A, வடக்காவணி மூல வீதி,
மதுரை - 625 001. ✆ 2628642
என்ற முகவரிக்கு M.O. செய்யவும்.

குறிப்பு : புக் கொரியரில் அனுப்பப்படும்.

வெற்றி உறுதி!

S. Sujitha BA

## பொருளடக்கம்


| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| (1) | பெண்ணியல் ஓர் அறிமுகம் | 1 |
| | (i) மகளிரியல் தோற்றமும் வளர்ச்சியும் | |
| | (ii) அமெரிக்காவில் வாக்குரிமை அமைப்பு | |
| | (iii) புதிய பெண்ணிய இயக்கம் | |
| | (iv) பெண்ணியக் கோட்பாடு | |
| | (v) பெண்ணியத்தின் வகைகள் | |
| (2) | பெண்ணியக் கோட்பாடுகள் | 15 |
| | (i) ஷோவால்டரின் கோட்பாடு | |
| | (ii) மொழியியல் | |
| | (iii) எகர்டர் லெர்னர் | |
| | (iv) ஷெர்லி ஆர்டினர் | |
| (3) | பாரம்பரிய இந்தியச் சமுதாயம் | 26 |
| | (i) ஆண் வழிச் சமுதாயம் | |
| | (ii) வேதங்கள் | |
| | (iii) திருமணங்கள் | |
| | (iv) இந்துக்கள் | |
| | (v) பெண்ணியச் சிந்தனைகள் | |
| | (vi) கோயில்கள் | |
| | (vii) இசை, நடனம் | |

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| (4) | **வரலாற்றுக் காலங்களில் பெண்கள் நிலை** | 48 |
| | (i) கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய இந்தியாவில் பெண்கள் | |
| | (ii) மௌரியர்களுக்கும் குப்தர்களுக்கும் இடைப்பட்ட காலம் | |
| | (iii) குப்தர்கள் காலம் | |
| | (iv) சங்க காலத்தில் பெண்கள் நிலை | |
| | (v) பல்லவர் காலத்தில் பெண்கள் நிலை | |
| | (vi) பாண்டியர் காலத்தில் பெண்கள் நிலை | |
| | (vii) சோழர் காலத்தில் பெண்கள் நிலை | |
| | (viii) விஜய நகரப் பேரரசின் போது பெண்கள் நிலை | |
| | (ix) முகமதியர் காலத்தில் பெண்கள் நிலை | |
| (5) | **இந்திய பெண்ணின முன்னோடிகள்** | 62 |
| | (i) அன்னிபெசன்ட் | |
| | (ii) இந்திரா காந்தி | |
| | (iii) பண்டித ரமாபாய் | |
| | (iv) சரோஜினி நாயுடு | |
| | (v) ருக்மணி தேவி அருண்டேல் | |
| | (vi) எ்மார்க்ரெட் கசின்ஸ் | |
| | (vii) கமலா நேரு | |

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| | (viii)விஜயலட்சுமி ரெட்டி | |
| | (ix) முத்துலெட்சுமி ரெட்டி | |
| | (x) சாவித்திரி பூலே | |
| (6) | **பெண்களுக்கான அமைப்புகள்** | 90 |
| | (i) பெண்கள் ஆன்மீக சபா | |
| | (ii) சக்தி சமிதி | |
| | (iii) ஆர்ய மஹிளா சமாஜம் | |
| | (iv) சாரதா சமன் | |
| | (v) விதவை மறுமண அமைப்பு | |
| | (vi) இந்து சமுதாய சீர்திருத்த இயக்கம் | |
| | (vii) பாரத மஹிளா பரிஷத் | |
| | (viii) இந்தியப் பெண்கள் கழகம் | |
| | (ix) இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு | |
| | (x) ஔவை இல்லம் | |
| | (xi) இந்திய தேசிய பெண்கள் குழு | |
| | (xii) அகில இந்திய பெண்கள் மாநாடு | |
| (7) | **ஆசியாவில் பெண்கள் நிலை** | 96 |
| | (i) சீனாவில் பெண்கள் நிலை | |
| | (ii) ஜப்பானில் பெண்கள் நிலை | |
| | (iii) இஸ்லாத்தில் பெண்கள் நிலை | |
| | (iv) அரேபியாவில் பெண்கள் நிலை | |

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| (8) | இந்தியாவில் பெண் தொழில் முனைவோர் | 119 |
| | (i) பெண் தொழில் முனைவோர் பற்றிய கோட்பாடுகள் | |
| | (ii) பெண் தொழில் முனைவோரின் பணிகள் | |
| | (iii) பெண்களின் ஈடுபாடும் செயல்களின் வகைகள் | |
| | (iv) பெண் தொழில் முனைவோருக்கான அமைப்புகள் | |
| | (v) மாநில அமைப்புகள் | |
| | (vi) பெண் தொழில் முனைவோர்களின் வளர்ச்சி | |
| | (vii) குறை களையும் வழிகள் | |
| | (viii) இந்தியாவில் பெண்கள் தொழில் முனைவோர் இயக்கம் | |
| (9) | இந்தியாவில் பெண்களுக்கான அரசுத்திட்டங்கள் | 135 |
| | (i) மைய அரசுத் திட்டங்கள் | |
| | (ii) மாநில அரசுத் திட்டங்கள் | |
| | (iii) தமிழக அரசின் பெண்ணிய மேம்பாட்டிற்கான திட்டங்கள் | |
| | (iv) மகளிர் சுயஉதவிக் குழுக்கள் | |
| (10) | பெண்கள் மேம்பாட்டில் ஐக்கிய நாட்டவையின் பங்கு | 149 |
| | (i) ஐக்கிய நாட்டாரின் செயல்பாடுகள் | |
| | (ii) பெண்களுக்கு எதிரான பலதரப்பட்ட | |

4

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| | பாகுபாடுகள் பற்றிய சிறப்புக் கூட்டமும், திட்டமும் | |
| (11) | பெண்ணின் மதிப்பு நிலை | 164 |
| | (i) 21–ம் நூற்றாண்டில் பெண்கள் நிலை | |
| | (ii) பெண்ணியத்தின் காந்தீயச் சிந்தனை | |
| | (iii) பெண்ணியத்தின் சமுதாய நோக்கு | |
| | (iv) பத்மஸ்ரீ நாகிஸ்தத் | |
| | (v) பெண்மையின் பெருமை | |
| | (vi) பெண்களுக்கான அமைப்புகள் | |
| (12) | பெண்ணினச் சிக்கல்கள் | 179 |
| | (i) ஊடகங்கள் | |
| | (ii) வரதட்சணை | |
| | (iii) குழந்தை மணம் | |
| | (iv) பலதார மணம் | |
| | (v) விதவைகள் | |
| | (vi) பெண்ணடிமைத்தனம் | |
| | (vii) பெண் பணியாளர் | |
| | (viii) பெண்ணுரிமைச் சட்டங்கள் | |
| (13) | சொத்துரிமைச் சட்டமும் வாரிசுரிமைச் சட்டமும் | 199 |
| | (i) இந்துச் சட்டம் | |


5

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| | (ii) முகமதியச் சட்டம் | |
| | (iii) கிறித்துவச் சட்டம் | |
| | (iv) வரதட்சணை ஒழிப்புச் சட்டமும் பெண்கள் மீதான தாக்கமும் | |
| | (v) திருமண உறவு மற்றும் விவாகரத்து | |
| (14) | **பழங்குடிப் பெண்கள் மற்றும் தலித் பெண்கள்** | 217 |
| | (i) பழங்குடிப் பெண்கள் | |
| | (ii) தலித் பெண்கள் | |
| | (iii) அரசியலமைப்பு கூறும் வழிமுறைகள் | |
| (15) | **பாலியல் வன்முறையும் சட்டங்களும்** | 223 |
| | (i) சட்டங்கள் | |
| | (ii) பொருள் விளக்கம் | |
| | (iii) வன்முறை | |
| | (iv) உச்சநீதிமன்றம் வகுத்துள்ள வழிமுறைகள் | |
| (16) | **பெண்களும் சுற்றுப்புறச்சூழலும்** | 230 |
| | (i) மக்கள் தொகைப் பெருக்கம் | |
| | (ii) பெண்கள் நலன் | |
| | (iii) சிப்கோ இயக்கம் | |
| | (iv) அப்பிக்கோ இயக்கம் | |
| | (v) வனசுரக்ஜா சமிதி | |

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| (17) | **பெண்ணின கடமையும் வள்ளுவமும்** | 236 |
| | (i) இல்லற மாந்தரின் கடமை | |
| | (ii) வாழ்க்கைத் துணைவி | |
| | (iii) பரத்தையர் நிலை | |
| (18) | **சுவாமி விவேகானந்தர் கருத்தில் பெண்கள்** | 246 |
| | (i) மேலை நாட்டுப் பெண்களும் இந்தியப் பெண்களும் | |
| | (ii) பெண்களுக்கு சுதந்திரம் வேண்டும் | |
| | (iii) இல்லறத்தின் பெண்கள் | |
| | (iv) நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு | |
| | (v) இந்தியப் பெண்களின் சிறப்புகள் | |
| | (vi) வரதட்சணை அகற்றுதல் | |
| 1. | பெண்ணியல் | |
| 2. | பெண்ணியக்க கோட்பாடுகள் | |
| 3. | பாரம்பரிய இந்தியச் சட்டம் | |
| 4. | வரலாற்றுக் காலங்களில் பெண்கள் நிலை | |
| 5. | இந்தியப் பெண்ணின முன்னோடிகள் | |
| 6. | பெண்களுக்கான அமைப்புகள் | |
| 7. | ஆசியாவில் பெண்கள் நிலை | |

| | பாடத்தலைப்புகள் | பக். எண் |
|---|---|---|
| 8. | இந்தியாவில் பெண் தொழில் முனைவோர் | |
| 9. | இந்தியாவில் பெண்களுக்கான அரசுத் திட்டங்கள் | |
| 10. | பெண்கள் மேம்பாட்டில் ஐக்கிய நாட்டவையின் பங்கு | |
| 11. | பெண்ணின் மதிப்பு நிலை | |
| 12. | பெண்ணினச் சிக்கல்கள் மற்றும் நீக்கும் வழிகள் | |
| 13. | சொத்துரிமைச் சட்டமும் வாரிசுரிமைச் சட்டமும் | |
| 14. | பழங்குடிப் பெண்கள் மற்றும் தலித்பெண்கள் | |
| 15. | பாலியல் வன்முறையும் சட்டங்களும் | |
| 16. | பெண்களும் சுற்றுச்சூழலும் | |
| 17. | பெண்ணின கடமைகளும் வள்ளுவமும் | |
| 18. | சுவாமி விவேகானந்தர் கருத்தில் பெண்கள் | |
| 19. | மீடியாவும் பெண்களும் | |
| 20. | இன்றைய பெண்கள் நிலை | |




# 1. பெண் இயல் (WOMEN STUDIES)

**முன்னுரை** மகளிரியல் தேவை - மகளிரியல் தோற்றமும் வளர்ச்சியும் - செனீகா பால்ஸ் - மாநாடு - அமெரிக்காவில் வாக்குரிமை அமைப்பு - புதிய பெண்ணிய இயக்கம் - இங்கிலாந்தில் பெண்ணிய இயக்கத்தின் இறுதிநிலை - பெண்ணியக் கோட்பாடு - பாலியல் வேறுபாடுகள் - பெண்ணியத்தின் வகைகள் - தாரளப் பெண்ணியம் தீவிரவாதப் பெண்ணியம் - சமதர்மப் பெண்ணியம் - மார்க்ஸிய பெண்ணியம் உணர்வு நிலை பெண்ணியம்

18/9/19

அறிவியல், தொழில்நுட்பம், அரசியல், பொருளியல், வரலாறு, பண்பாடு போன்ற பல துறைகளும் வலுப்பெற்றுள்ள இந்நாளில் பெண்ணியமும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் உலக நாடுகள் பலவற்றிலும் பெண்ணியம் வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக அமெரிக்காவில் பெண்ணியமும், பெண்கல்வியும் செல்வாக்குப் பெற்றன. அமெரிக்காவில் பெண்மைக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் காரணமாக பெண்கல்வி விரிவாக்கம் பெற்றது. பெருமளவு கல்விநிலையங்களில் பெண்களும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். கல்விப்பாடத்திட்டத்தில் பெண்ணியம், பெண்கல்வி, பாலியல் கல்வி போன்றவை சேர்க்கப்பட்டன. பெண் கல்வியின் தேவை அங்கு பெருமளவில் வலியுறுத்தப்படுகின்றது. எனவே பெண்ணியம் பற்றிய சிந்தனையையும், அறிவையும் பெருக்கிக் கொள்ளல் அவசியமானதாகின்றது.

## பெண்ணியம் அல்லது மகளிரியலின் தேவை

எந்த ஒரு பாடப் பிரிவும் தேவையின்றி படிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவை ஒவ்வொன்றும் ஏதாவதொரு வழியில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 20–21 ஆம் நூற்றாண்டுகளில் பெண்கள் மற்றும் பெண்ணியத்தின் எழுச்சி வேகமானதாக உள்ளது. தந்தை வழிச் சமுதாயமான ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் இரண்டாம்தர நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பலவழிகளில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர். குடும்பம் என்ற அமைப்பினாலும் சமூகம் என்ற கட்டுக்கோப்பினாலும் அவர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தார்கள். பெண்கள் உரிமைகளற்றவர்களாய், அடிமைகளாய், காமப்போதைப்பொருளாய், குழந்தைபெறும் இயந்திரமாகக் கருதப்பட்டனர். மனிதாபிமான நோக்கில் அவர்கள் இயங்கவில்லை. அவர்களுடைய பொறுமை, பணிவு, அடக்கம், சகிப்புத் தன்மை, சுய ஆற்றல், எதனையும் தாங்கிக் கொள்ளும் பண்பு போன்றவை நிறைவு செய்யக் கூடிய

கல்வி முறையோ, பாடத் திட்டமோ உருவாக்கப்படவில்லை. அவை அனைத்துமே ஆண்களுக்குச் சாதகமாய் சார்புடையதாகவே உள்ளன. பாடத்திட்டங்களுக்கு ஆண்களும் அவர்களுடைய செயல்கள் போன்றவையுமே அடிப்படைகளாக அமைந்துள்ளன. சமுதாயத்திலும், சமூக அமைப்பிலும் பெண்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். அவர்கள் தேக்க நிலையுடையவர்களாய்க் கருதப்பட்டனர். அவர்களது பங்கும் நிராகரிக்கப்பட்டுள்ளது. பெண்கள் சமுதாயத்தில் தனித்து வாழ முடியாதவர்கள் என்ற நிலை எழுந்தது. சமுதாயத்தில் தனித்து வாழ முடியாதவர்கள் என்ற முத்திரையும் குத்தப்பட்டது. அவர்களுக்கெனத் தனிப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் மறுக்கப்பட்டுள்ளன. ஆனால் வளர்ந்துவரும் உலக சமுதாயத்தில் பெண்களின் பங்கு பெரிதும் உணரப்படுவதால் மகளிரியல் பற்றித் தெரிந்து கொள்ளல் அவசியமாகின்றது. மேலும் பெண்கள் இன்று சமஉரிமை கொண்டுள்ளமையால் மகளிரியல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## மகளிரியம் ஒரு விளக்கம்

மகளிரியல் என்பது விரிவான ஒரு பாடமாக இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

மேரி ரிட்டர் பியர்டு என்ற அமெரிக்கப் பெண்மணி 1934ல் மகளிரைப் பற்றியோர் விளக்கமளித்தார். பொருளியல் மற்றும் அரசியல் பின்னணிகளில் அவர் தமது விளக்கத்தைத் தந்தார். மகளிரியல் பற்றிய கொள்கைகளை அறிந்து கொள்ளல், அமெரிக்கப் பெண்களின் நிலையைப் புரிந்து கொள்ளல், தேசிய நோக்கில் பெண்ணியத்தின் தாக்கம் பற்றி உணர்தல், மரபுவழியில் பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை ஆய்வு செய்தல் ஆகியன அவருடைய கருத்துக்களுக்கு அடிப்படைகளாக விளங்கின. பெண்ணியல் அல்லது மகளிரியல் (Women Studies) என்பது பெண்களுக்கான நீதி, சமத்துவம் மற்றும் உடல்நலம் பல்வேறு செய்திகளையும் கூடிய ஒரு பாடமாகும். அதே நேரத்தில் மகளிர் கல்வி என்பது பெண்களுடைய பிரச்சனை, பாலியல் வேறுபாடு, பெண்களின் நிலை, பெண்களின் தன்மை, பங்கு ஆகியவற்றைப் பற்றிப் படிப்பது ஆகும். அதுவே மகளிரியல் எனப்படுகிறது.

பொருளியல் உலகில் பொருளாதார உரிமை முக்கியத்துவம் பெற்றுள்ளது. உலக நாடுகள் பலவற்றில் பெண்களுக்கு பெரும்பாலும் சொத்துரிமை தரப்படவில்லை. பெண்கள் பல்வேறு உரிமைகளற்றவர்களாய் இருக்கும் போது அவர்களுக்குச் சொத்துரிமை இல்லை என்பது வியப்புக்குரியதல்ல. பெண்கல்வித் திட்டமானது இன்று உலகநாடுகளில் செல்வாக்குப் பெற்றுள்ளது. பாரம்பரியத்தைப் போற்றக் கூடிய வகையில் சமுதாய ஒற்றுமை பாதுகாக்கப்பட வேண்டும். வீட்டில் ஒற்றுமை உருவாக்கப்பட்டால் நாட்டு ஒற்றுமை வலுப்படும். அதற்கு அடிப்படையாக உள்ளது பெண்களுக்கு சமத்துவ உரிமையை நல்குவதாகும். எனவே தான் 1983ல் சார்லௌட் பேபஞ்ச், சான்ட்ரோ பொல்லாக் ஆகியோர் பெண் கல்விக்கு முக்கியத்துவமளித்துள்ளனர்.

## மகளிரியலின் நோக்கம்

1985ல் டெல்லியில் அரசு அறிவியல் கழகம் சார்பாக மகளிர் கல்விக்குழு ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்தது. அதில் பெண்கல்வி மற்றும் மகளிரியல் பற்றிய நோக்கங்களை வெளிப்படுத்தியது. அது கூறிய கீழ்க்காணும் காரணங்களை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

1. இன்றைய சமுதாயத்தில் பெண்கள் பற்றிய மனப்பான்மையைப் புரிந்து கொண்டு அவர்களைப் பற்றிய தவறான எண்ணங்களை மாற்றியமைத்தல்.

2. ஒரு நாட்டின் சமுதாய மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கு பெண்களின் சக்தியும் முக்கியம் என்பதை உணர்ந்து அதனையொரு மூலப்பொருளாகப் பயன்படுத்த வேண்டும்.

3. சமூகத்தில் காணப்படும் பெண்கள் பற்றிய தவறான எண்ணங்களையும், மதிப்பீட்டையும் நீக்கி பெண்களைப் பற்றி மக்கள் மனதில் ஒரு விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

4. அனைத்துத் துறைகளிலும் பெண்கள் இடம் பெற்றுள்ள தன்மையை உணர்தல் அந்நிலையில் பெண்கள் எல்லாப் பணிகளிலும் ஈடுபடக்கூடிய வகையில் புதிய கல்வித்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அவற்றின் மூலம் சமத்துவ சமுதாயம் உருவாக்கப்படவும், பாலியல் சமத்துவம் ஏற்படுத்தவும், தேசிய உணர்வை உண்டாக்கவும் எத்தகைய வழிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை தெரிந்து கொள்ளல்.

5. பலதரப்பட்ட கோட்பாடுகள் மற்றும் ஆய்வுகளின் மூலம் எவ்வாறு பெண்ணின வேறுபாடுகளைக் களைய வகை செய்யப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளல். அதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளைத் தெரிந்து கொள்ளல்.

6. பல்வேறு பாடத் துறைகளுடன் தொடர்புடையதாய் பெண்ணியக் கல்விக்காக உருவாக்கப்பட உள்ள பொதுப்பாடத்திட்டம்தனைத் தெரிந்து கொள்ளல்.

7. நடைமுறையிலுள்ள பலவிதமான தன்னார்வ அமைப்புகளுடன் சேர்ந்து உயர் கல்வி மூலம் பெண்களின் பிரச்சனைகளுக்குக் காணப்படும் தீர்வுகளைத் தெரிந்து கொள்ளல். மேலே கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காகப் படிக்கப்படும் மகளிரியலின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

## மகளிரியல் தோற்றமும் வளர்ச்சியும்

மகளிரியல் அல்லது பெண்ணியம் என்ற இயக்கமானது மிக நீண்டதொரு வரலாற்றை உடையது. பெண்களின் நிலையானது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் எவ்வாறு இருந்தது என்ற அடிப்படையில் மகளிர் தமது நிலையை உணரத்தலைப்பட்டமையே மகளிரியல் தோற்றத்துக்குக் காரணமாயிற்று. தமது உரிமைகளுக்காகவும், துன்பங்களுக்கு எதிராகவும், குறுகிய

எல்லைவட்டத்திலிருந்து விடுபடவும் பெண்கள் போரிடலாயினர். இவ்வுரிமை சார்ந்த இயக்கம் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 19ஆம் நூற்றாண்டில் வலுப்பெற்றது. அது இரு நிலைகளாகச் செயல்பட்டது.

1830ல் அமெரிக்காவில் முதன்முறையாக பெண்ணிய இயக்கம் தோன்றியது. அது பின்னர் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவலாயிற்று. அதன் காரணமாக பெண்களின் உரிமைகளும், சலுகைகளும் விரிவடையலாயின. ஆண்களுக்குச் சமமான அளவில் தமக்கும் உரிமைகள் வேண்டும் என்பதற்காகப் பல போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அன்டாய்னட் பிரௌன், சூசன்டி அண்டனி, லூசில்ஸ்டோன் ஆகியோர் அப்போராட்டங்களில் ஈடுபட்டனர்.

1860 ல் அமெரிக்காவில் இரண்டாம் முறையாக மகளிரியல் வலுப்பெறலாயிற்று. இது உலகளாவிய இயக்கமாகப் பரவலாயிற்று. அதுபெண்ணுரிமை பற்றி பலநாடுகளின் அரசுகளையும் எண்ணச் செய்தது.

## செனீகா பால்ஸ் மாநாடு

1848ல் அமெரிக்காவில் நியூயார்க்கிலுள்ள செனீகா பால்ஸ் என்னுமிடத்தில் பெண்கள் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. உலக மகளிரியல் வரலாற்றில் அது ஒரு திருப்புமுனையாகவும், மைல் கல்லாகவும் எண்ணப்பட்டது. லுக்ரீஷியா மாட், எலிசபெத்காடி, ஸ்பின்டன் ஆகியோர் அம்மாநாட்டைக் கூட்டக் காரணமாயிருந்தனர். அம்மாநாட்டில் பெண்களுக்கு அடிப்படையான உரிமைகள், சலுகைகள், தேவைநிறைவு ஆகியன தரப்பட வேண்டுமென்பதற்கான வேண்டுகோள் அரசின் முன்வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. திருமணமான பெண்களுக்கான சொத்துரிமை, கல்வித் துறையில் பெண்களுக்கு அதிக அளவில் பங்களித்தல், கிறித்துவ தேவாலயத் திருச்சபை, வர்த்தகத்துறை ஆகியவற்றிலும் பெண்களுக்கு அதிக சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனப்பட்டது. இது ஒரு வழிகாட்டும் இயக்கமாகச் செயல்பட்டது.

## அமெரிக்காவில் வாக்குரிமை அமைப்பு

அமெரிக்கப் பெண்ணியவாதிகள் 1869ல் பெண்களுக்கு வாக்குரிமையானது பெண்களுக்கான பிற உரிமைகளைவிட மிக முக்கியமானதெனக் கருதினார்கள். அதற்கென அமெரிக்க பெண்கள் ஓட்டுரிமைச் சங்கம் என்ற அமைப்பையும் உருவாக்கினார்கள். அதற்கான மற்றொரு அமைப்பான தேசிய அமெரிக்கப் பெண்களின் ஓட்டுரிமைச் சங்கம் 1890ல் உருவாக்கப்பட்டது. சூசன் அண்டனி, எலிசபெத் ஸ்டென்டன் ஆகியோர் அப்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவ்வமைப்பு பெண்கள் வாக்குரிமைக்காகக் கடுமையாகப் போராடியது. பலநிலைகளில் இருந்த பெயர்களும் இக்கருத்துக்கு ஆதரவளித்து அச்சங்கத்தில் உறுப்பினரானார்கள். பெண்களின் ஓட்டுரிமையில் பல உரிமைகள் உள்ளடங்கியுள்ளன என்ற கருத்து வலுப்பெற்றது. பெண்வாக்குரிமைக்காகப் பெண்களின் பலதரப்பட்ட அமைப்புகளும் போராடின. அதன் விளைவாக 1920ஆம் ஆண்டில் ஆன்டனி சீர்திருத்தச் சட்டம் என்ற பெயரில் 19 ஆவது



திருத்தச் சட்டமாக பெண்களுக்கு அமெரிக்காவில் வாக்குரிமை வழங்கப்பட்டது.

## புதிய பெண்ணிய இயக்கம் (New Feminist Movement)

அமெரிக்கா: பலதுறைகளில் முன்னோடியாக விளங்கிய அமெரிக்காவில் பெண்ணிய நோக்கும் விரிவடைந்தது. 1960ல் புதிய பெண்ணிய இயக்கம் செயல்படத் தொடங்கியது. அதன் செயல் முறைகளும் விளக்கமும் மக்கள் மனதில் விழிப்புணர்வை ஏற்படுத்தின. ஆண்களின் அடக்குமுறைக்கு எதிரான பெண்களின் போராட்டத்திற்கு அது வழிவகுத்தது. அதன் விளைவாக அமெரிக்கா அதிபரான ஜான். எப். கென்னடி பெண்களின் தகுதிபற்றி ஆராய்வதற்காக ஒரு குழு ஒன்றினை அமைத்தார். அதனையொட்டி பால்வேறுபாடின்றி ஒத்த செயலில் ஈடுபடும் ஆண், பெண் இருபாலருக்கும் எவ்விதமான வேறுபாடுமின்றி ஒரே மாதிரியான ஊதியம் வழங்கப்படுமெனப்பட்டது. 1963ல் கென்னடி சமமான சம்பளச் சட்டத்தில் கையொப்பமிட்டார். அதன் விளைவாக பெண்கள் பற்றிய விழிப்புணர்வு இயக்கம் விரிவடையலாயிற்று. சமுதாயக் கட்டுப்பாடுகள் பெண்களின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக உள்ளனவென்பது வெளிப்படுத்தப்பட்டன. பெட்டி ப்ரெய்டன் கிராமியப் பெண்களின் இரங்கத்தக்க நிலையைச் சுட்டிக்காட்டினார். அவருடைய பெரு முயற்சிகாரணமாக 1966 அக்டோபரில் பெண்களின் தேசிய அமைப்பாக (National Organizaion of women: Now) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. பெண்களின் குடியுரிமை மற்றும் பெண்களுக்குச் சீர்திருத்தம் போன்ற கருத்துக்களை அது வலியுறுத்தியது. அவ்வமைப்பின் பணிகள் அமெரிக்க அரசின் கண்களைத் திறந்தது. அவ்வமைப்பின் வலியுறுத்தல் காரணமாக அப்போதைய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் லிண்டன் ஜான்சன் பெண்கள் முன்னேற்றத்தை மனத்திற்கொண்டு, தனது அரசு நியமனங்கள் மற்றும் பிற செயல்களில் பாலியல் வேறுபாட்டைத் தவிர்க்கும் என்று அறிவித்தார். அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. பெண்ணுரிமைச் சட்டவரைவு அமெரிக்கப் பாராளுமன்றமான காங்கிரஸில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1967ல் கருச்சிதைவு செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றார்கள். அதே ஆண்டில் பயர்ஸ்டோன் என்பவரால் அமெரிக்காவில் பெண்கள் தீவிரவாத அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் விளைவாக ஐக்கிய நாட்டவை 1975க்கும் 1985க்கும் இடைப்பட்ட பத்தாண்டு காலத்தை பெண்கள் ஆண்டு என்று அறிவித்தது. ஜெர்மனி, பிரான்சு போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் பெண்களுக்கான சமத்துவக் கல்வி, சமஉரிமைகள், ஒரே பணிக்கான சமஊதியம் கருச்சிதைவு உரிமை ஆகியவை தரப்பட்டன. பெண்ணியக் கொள்கையானது ஸ்பெயின், ஹாலந்து, ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளிலும் வலுப்பெறலாயிற்று.

அமெரிக்காவில் 1970 ஆம் ஆண்டு ஆகஸ்டு 26 ஆம் நாள் பெண்கள் வாக்குரிமை பெற்ற நாளாகக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி பெண்களின் அமைப்புகள் தமது உரிமைப் போராட்டங்களைத் தொடர்ந்தன. அவை தேசிய மகளிர் போராட்டம் எனப்பட்டன. அமெரிக்க மாநிலங்கள்

பலவற்றிலும் இப்போராட்டமானது அமெரிக்க பெண்கள் தேசிய அமைப்பு மூலமாக மேற்கொள்ளப்பட்டது. அனைத்து நிலைகளிலும் சமத்துவம் வேண்டிப் போரிட்ட இந்தப் போராட்டத்தில் 50,000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்றார்கள். வரலாறுகாணாத மிகப் பெரிய பெண்கள் ஊர்வலம் ஒன்று அப்போது நடைபெற்றது. இதன் விளைவாக 1974–ல் அமெரிக்க தேசிய பெண்கள் அமைப்பில் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கு இலட்சமாக உயர்ந்தது. பெண்களின் உரிமைகளை வலியுறுத்துவதற்கான ஊடகமாக பத்திரிக்கையும் செய்தித்தாட்களும் பயன்படுத்தப்பட்டன. பெண்களுக்கெனத் தனிப்பட்ட பத்திரிக்கைகள் வெளியிடப்பட்டன. பெண்கள் இயக்கக் குரலான 'தி வுமன்' (The Women) மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றது. 'குவெஸ்ட்' (Quest) என்ற பத்திரிக்கை 1974 ஆம் ஆண்டு முதலும், 'சைன்' (Sign) என்ற பத்திரிக்கை 1975 ஆண்டிலிருந்தும் வெளிவந்தன

தேசிய கருக்கலைப்புக் குழு உருவாக்கப்பட்டு 1967க்குப் பின் அதன் கிளைகள் அமெரிக்காவின் பலபகுதிகளிலும் உருவாக்கப்பட்டன. அமெரிக்க மாநிலங்கள் பலவற்றிலும் கருக்கலைப்புக்கான தனிப்பட்ட சட்டங்கள் இயற்றப்பட்டன. மெக்ஸிகோவில் உலகப் பெண்கள் மாநாடு 1975ல் நடைபெற்றபோது அதில் சுமார் 5000 பெண்கள் பங்கேற்றனர். தாராளப் பெண்ணியம், சமதர்ம நோக்குடைய பெண்ணியம் ஆகிய கருத்துக்கள் அம்மாநாடு மூலம் விரிவாக்கம் பெற்றன. அதன் பின்னர் தீவிரவாத பெண்ணிய இயக்கத்தின் தாக்கம் அதிகரித்தது. ஆண்களிடமிருந்து விடுதலை என்ற நோக்கில் பெண்ணிய ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது.

## இங்கிலாந்தில் பெண்ணிய இயக்கம்

'ஆதவன் என்றும் மறைவதில்லை' என்று கூறக்கூடிய ஆங்கிலப் பேரரசில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பெண்ணிய இயக்கம் வலுப்பெறலாயிற்று. தமது உரிமைக்காகப் பெண்கள் போராடலாயினர். ஆங்கில வாக்குரிமைக் கழகமானது 1903 ல் ஆங்கிலப் பெண்மணிகளுக்கு வாக்குரிமை வேண்டுமெனப் போராடியது. 1914 முதல் 1919வரை நடைபெற்ற முதல் உலகப்போரின் போது இங்கிலாந்தில் பெண்ணிய இயக்கத்தில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்கலாயினர். ஆங்கிலப் பாராளுமன்றம் 1918ஆம் ஆண்டில் பெண்கள் வாக்குரிமைச் சட்டவரைவினை ஏற்றுக்கொண்டது. அதன் விளைவாக 30 வயதுடைய பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அது தொடர்ந்து பெண்களை மீண்டும் தமது உரிமைகளுக்காகப் போரிடலாயினர். எனவே பத்து ஆண்டுகட்கு உள்ளாகவே 1928ல் சமத்துவ வாக்குரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி 21 வயதை எட்டிய ஆண், பெண் இருபாலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. ஆங்கிலப் பெண்களின் நீண்ட காலக் கனவு நனவாயிற்று.

1970 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாஸ்கோவில் நடைபெற்ற தேசியக் கூட்டு மாநாடு(National Gathering) இங்கிலாந்து நாட்டில் புதிய பெண்ணிய இயக்கம் வளரக் காரணமாயிற்று. மாஸ்கோ மாநாட்டில் 600 பிரதிநிதிகளுக்கு



மேலானோர் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் நான்கு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமான வேலையும் ஊதியமும் தரப்படவேண்டும்.
2. பெண்களுக்கும் சமமான கல்விவசதியை நல்குதல்
3. பெண்களின் சுய விருப்பத்திற்கேற்ப கருத்தடை மற்றும் கருச்சிதைவு செய்து கொள்ளல்
4. குழந்தைகள் இலவசமாகப் பராமரிக்கப்பட வேண்டும்

மேலே கூறப்பட்டுள்ளவற்றையொட்டி இங்கிலாந்தில் 1973ல் 'பெண்கள்' (Women) என்ற விடுதலை பயிற்சிப் பட்டறை உருவாக்கப்பட்டது. அதன் கிளை அமைப்புகள் பிரிஸ்டன், எடின்பர்க் போன்ற இடங்கள் உருவாக்கப்பட்டன. இவ்வமைப்புகள் பெண்ணுரிமை மற்றும் விடுதலைக்காகப் பாடுபட்டன. பத்திரிக்கை ஊடகங்களிலும் இப்போராட்டத்திற்கு ஆதரவு தந்தன. 'பர்மிங்ஹாம் போஸ்ட்' (Burming ham Post), 'திடைம்ஸ்' (The Times) 'தி கார்டியன்' (The Gardian) போன்ற பத்திரிக்கைகள் தமது இதழ்களில் குறிப்பிட்ட இடத்தைப் பெண்கள் பகுதியென ஒதுக்கின. 1972 ஆம் ஆண்டிலேயே பெண்களுக்காகத் தனிப்பட்ட பத்திரிக்கையாக ஸ்பார்ட் ரிப் என்ற பத்திரிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அது ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே அப்பத்திரிக்கையின் 20,000 பிரதிகள் விற்பனையாயின. இவ்வாறு பத்திரிக்கைகள் பெண்ணியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த காரணத்தால் பெண்விடுதலைக் கோட்பாடு விரிவாக்கம் பெற்றது. தொடர்ந்து பல சட்டங்களும் இயற்றப்பட்டன.

1975ல் பாலியல் வேறுபாட்டுத் தடைச் சட்டம், சமமான ஊதியச் சட்டம் போன்றவை இயற்றப்பட்டன. அதனால் பெண்கள் அதிக அளவில் உரிமைகளைப் பெற்றனர். 1975ஆம் ஆண்டிலேயே இலண்டனில் பெண்கள் நூலகம் ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்விளைவாக பெண்கள் ஆராய்ச்சி மையம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது. பெண்கள் இயக்கம் பற்றிய ஆய்வு நூலானது ப்யூகாட் நூலகம் என்ற நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

1977ல் தேசிய பெண்கள் மாநாடு இலண்டனில் கூட்டப்பட்டது. பெண் பிரதிநிதிகளைக் கொண்டிருந்த இம்மாநாடு ஆணாதிக்கத்தையும் ஆண்களின் வன்முறையையும் கண்டித்தது. 1978ல் பர்மிங்ஹாமில் மற்றுமொரு தேசிய பெண்கள் மாநாடு நடைபெற்றது. அவ்வமயம் புரட்சிகரமான பெண்ணிய இயக்கமானது பெண்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக சில கோரிக்கைகளை வெளியிட்டது. அதன்படி ஆண்களின் வன்முறை வெறுக்கப்பட்டது. பெண்களின் மேலாண்மைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. பெண்களை அடக்கி ஒடுக்குவதும் கண்டிக்கப்பட்டது.

இவ்வாறு பெண்ணிய இயக்கம் 20 ஆம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் பெருமளவு விரிவாக்கம் பெற்ற அமைப்பாக வலுப்பெற்று 1979க்கும் 1995க்கும் இடைப்பட்ட காலத்தில் இறுதிநிலையொன்றினை எட்டியது.

## பெண்ணிய இயக்கத்தின் இறுதிநிலை

1980க்குப் பின்னால் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் பெண்ணிய இயக்கத்தின் பிடியில் இறுக்கம் தளரலாயிற்று. அதற்குக் காரணம் பன்னாட்டளவில் பெரும்பாலான நாடுகளில் பெண்ணிய இயக்கம் தனது ஆதிக்கத்தைச் செலுத்தியலாயிற்று. பெண்ணியம் ஒரு சர்வதேச அமைப்பாக வலுப்பெறலாயிற்று. பெண்களின் வளர்ச்சி பற்றிய தாக்கம் அவர்களது கல்விமேம்பாடு காரணமாக விரிவடையலாயிற்று. அரசியல், கல்வி, தொழில், வாணிபம், தொழில் நுட்பம் போன்ற பல துறைகளிலும் பெண்களின் ஈடுபாடு ஆழமாக வேரூன்றலாயிற்று. உலக நாடுகளின் பெண்ணுரிமையைப் பெறவும், போற்றிக் காப்பதற்கும் பெண்களின் அமைப்புகள் பல உருவாக்கப்பட்டன. பெண்கள் நலச் சங்கங்கள், எழுத்தாளர்கள் சங்கங்கள், பணியாற்றும் பெண்கள் அமைப்புகள், பெண்கள் கூட்டுறவு அமைப்புகள், பெண்கள் சமதர்மச் சங்கம், பெண்கள் பாதுகாப்பு மையம் என்பன போன்ற அமைப்புகள் பல உருவாக்கப்பட்டன. 1981ல் ஹோபியா என்னுமிடத்தில் உலகளாவிய பெண்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டில் இந்தியா, ஜப்பான், தென்அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றார்கள். அவர்கள் பெரும்பாலும் பெண்ணியவாதிகளாகவே இருந்தனர். அந்த மாநாட்டில் குடும்பப் பண்புகள், குழந்தை பிறப்பு, குழந்தை நலம், பாலியல் சிக்கல்கள், பெண்களுக்கான பொருளாதார விடுதலை போன்ற கருத்துக்கள் பற்றிப் பேசப்பட்டன. 1986ல் நைரோபியா நாட்டில் மற்றொரு சர்வதேச பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் வீடுகளில் பணியாற்றும் பெண் தொழிலாளர்கள் பற்றியும் ஊதியமில்லாத வேலைகள் பற்றியும் வாதிடப்பட்டது.

1990க்குப் பின் பெண்ணியம் அல்லது மகளிரியலானது பன்னாட்டு அளவில் செல்வாக்கு பெற்றது. பெண்ணின் துன்பங்கள், துயரங்கள் போன்றவை பலவழிகளில் வெளியிடப்பட்டன. குறிப்பாக ஐக்கிய நாட்டவையிலும் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள் எழுப்பப்பட்டன. 1992ல் நடைபெற்ற பன்னாட்டு சுற்றுச்சூழல் மாநாட்டிலும் பெண்ணியத் துயரங்கள் பற்றிய கருத்துக்கள் வெளியிடப்பட்டன. 1994ல் கென்யாவில் நடைபெற்ற பன்னாட்டு மக்கள்தொகை மாநாட்டிலும், 1995ல் சீனாவில் பெய்ஜிங்கில் நடைபெற்ற சர்வதேச பெண்கள் மாநாட்டிலும் பெண்ணியக் கருத்துக்கள் வலுப்பெற்றன. (பெண்களின் வளர்ச்சி, பெண்ணுரிமை, பெண்களுக்கான சமத்துவம், அமைதி) போன்ற கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. பெய்ஜிங் நாட்டில் 30,000க்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்றார்கள் பாலியல் பாகுபாடுகள், பொருளியல் அடிப்படையிலான சிக்கல்கள், பெண்களுக்கான பொருளாதார உரிமைகள் மற்றும் உத்தரவாதம் போன்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றின் மூலம் பெண்ணியம் அல்லது மகளிரியல் இன்று வளர்ந்து வரும் ஒரு முக்கியப் பண்பு என்பது புலனாகின்றது.

W-I compl



## பெண்ணியக் கோட்பாடு (Concept of feminian)

பெண்ணியக் கோட்பாடு அல்லது மகளிரியல் பற்றிய கருத்து என்பது பெண்கள் இன்று அரசியல், பொருளியல், சமூகவியல் போன்றவற்றில் கொண்டுள்ள இடத்தைப் பற்றி தெரிந்து கொள்ளுதல் ஆகும். பெண்கள் உடல் மற்றும் உளவியல் ரீதியாக எவ்வாறு சமுதாயத்தில் பின்னடைவு பெற்றுள்ளனர் என்பதையும் வெளிப்படுத்துவது பெண்ணியக் கோட்பாடாகும். பண்பாட்டுத் தன்மை (Cultural feature), தந்தைவழிச் சமுதாயம் (Matrianchal society), தாய்வழிச் சமுதாயம் (Patrianchal Society), பாலியல் வேறுபாடுகள் (Sexual differences), தொழில் மற்றும் சக்திக் கோட்பாடு, (Labour and power ideas), தாராளதன்மை (Liberalisum), மகளிரியல் பண்புகள் (Anthuroglogical ideas) போன்றவற்றை வெளிப்படுத்தும் பண்பாக உள்ளது. பெண்ணியக் கோட்பாடாகும். பெண்ணியக் கோட்பாடு என்பதற்குப் பலதரப்பட்ட விளக்கங்கள் தரப்படுகின்றன.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சர் எட்வர்ட் பர்னெட் டெய்லர் என்ற மானிடவியலறிஞர் பண்பாடு என்பதற்குக் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தருகின்றார். "சமுதாயத்தில் ஆண், பெண் உறவு ஏற்படுத்துகின்ற இடத்திலிருந்து அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், ஒழுங்கு மற்றும் பழக்க வழக்கம் ஆகியவற்றை பெறுகின்றனர்". இதுவே பண்பாடு எனப்படுகிறது. இதன்மூலம் பாலியல் பாகுபாடு பாராட்டப்படவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

மனித இனத்தின் நடைமுறை வாழ்க்கைகளில் ஆணினம் மேம்பட்டதாகவும், பெண்கள் தாழ்வானவர்களாகவும் கருதப்படுகின்றனர். சமுதாயத்தில் ஆண், பெண் என்ற பால் பாகுபாடும் பிரிவினைக்கு ஒரு காரணமாகக் கொள்ளப்பட்டது. சமுதாய ஏற்றத்தாழ்வுக்கு ஆண், பெண் வேறுபாடும் வழிகோலியது. இதனை காலே மில்லட் (Kale Millet) என்பவர் "ஆண்கள் பெண்களை அடக்கியாளுவதற்கு உரிமை பெற்றவர்கள் என்பது ஆண்களின் பிறப்புரிமை" என்று கூறுகின்றார். எனவே ஆணாதிக்கத்தின் காரணமாகவே சமுதாயத்தில் வேறுபாடுகள் உருவாக்கப்படுகின்றன என்பதும் தெளிவாகின்றது. இந்நிலையில் சமுதாயத்தின் தன்மைகளை உணர்ந்து கொள்ளல் மூலமாகவும் பெண்ணியத்தின் தன்மையை அறிந்து கொள்ளலாம். எனவே அவை பற்றியும் அறிந்து கொள்ளல் அவசியம்.

### தாய்வழிச் சமுதாயம் (Matriarchal Society)

தாய்வழிச் சமுதாயம் என்பது பெண்களுக்கு முன்னுரிமை தரப்பட்ட ஒரு சமுதாயமாகும். அச்சமுதாயத்தின் அடித்தள அமைப்பான குடும்பம் தாயைத் தலைமையாளராகக் கொண்டு இயங்கும். அவரே குடும்பத் தலைவி. சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சிக்கு பெண்களே காரணம் எனப்படுவர். சமுதாய வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பெண்களே பொறுப்புடையவர்களாக ஆக்கப்படுகின்றனர். சமுதாயப் பணிகளிலும் செயற்பாடுகளிலும் பெண்கள் முன்னணி நிலையும் முன்னுரிமையையும் தரப்படுகின்றனர். பெண்களுக்கு மரியாதையையும், முக்கியத்துவமும் தரப்படுகின்றது. பெண்கள் சுய

சார்புடையவர்களாய்த் திகழ்வர். அவர்கள் ஆண்களைச் சார்ந்திருப்பதில்லை. பெண்ணைச் சார்ந்தவர்கள் மரியாதை தரப்பட்டு செல்வாக்குடன் விளங்குவர். பெண்கடவுளர்கள் முன்னணியில் வைத்துப்போற்றப்படுவர்.

### தந்தைவழிச் சமுதாயம் (Patriarchal Society)

தந்தை வழிச் சமுதாயம் என்பது ஆணாதிக்கச் சமுதாயமாகும். அதில் ஆணாட்சி அல்லது தந்தை ஆட்சி காணப்படும். "பொருளாதாரத்தை மையமாக வைத்து முதலாளித்துவம் மூலம், சமுதாயம் தந்தைவழியை வலியுறுத்துகின்றது" என பாரெட் (Barrelt) என்பவர் கூறுகின்றார். காரல்மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகிய இருவரும், "தனிநபர் சொத்து உருவாவதற்கு முதலாளித்துவம் காரணம்" என்கின்றனர். முதலாளித்துவ அடிப்படையில் பெண் தொழிலாளர்களை ஆண்வர்க்கத்தினர் சுரண்டுகின்றனர். தந்தைவழிச் சமுதாயத்தில் ஆண்களின் மேலதிகாரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தந்தையானவர், தாய், குழந்தைகள், இளையவர்கள் மற்றும் பணியாளர்களை அடக்கியாளுவார்கள். ஒரு சமுதாயத்தில் பெண் ஒருவர் தனியாக வாழ இயலாது என்ற நோக்கில் அச்சமுதாயம் இயங்குகின்றது. பெண் ஒரு ஆணின் நிழலாகவே இருக்க முடியும் என்ற தன்மை நிலவும். பெண்களுக்கு சுதந்திரம், உரிமை, தனித்துவம் ஆகியன காணப்படுவதில்லை.

### பாலியல் வேறுபாடுகள்

பாலியல் என்பது உயிரியலின் அடிப்படையில் உருவாவது. இம்முறையானது பெண்கள் ஆண்களின் கீழுள்ள துணைவர்கள் எனப்படுகின்றனர். ஒக்லே என்பவர் கூறும்போது "ஒரு குடும்பத்தில் ஒரு பெண் வீட்டுவேலை செய்வதென்பது பெண்களுக்குக் கிடைத்த இயற்கையான ஒன்று" என்கிறார். ஏனெனில் பண்டைக்காலத்தில் மனிதன் வேட்டைக்குச் சென்று உணவு சேகரிக்கச் செல்லுகையில் மனைவியானவள் வீட்டுவேலைகளில் ஈடுபட வேண்டியவராயிருந்தார். மேலும் மானிடவியலார் கருத்துப்படி ஆண்கள் சுறுசுறுப்பானவர்கள், திறமை மிக்கவர்கள், பொறுமைமிக்க பெண்கள் வீட்டுவேலை செய்வதற்கே தகுதியுடையவர்கள். சமூகவியலானது, தொழில் பகுப்புகளை பாலியல் அடிப்படையில் பிரித்துக் காட்டுகின்றது. பெண்கள் வீட்டுவேலை செய்வதற்கு மட்டுமே உள்ளவர்கள். ஆணின் பணித்தன்மைகளும், பெண்களின் சக்தியும் மாறுபட்ட தன்மை கொண்டவை. பெண்களின் உழைக்கும் திறனில் காணப்படும் குறைகாரணமாக அவர்கள் குறைந்த ஊதியத்தைப் பெறுகின்றனர். குழந்தைகளைப் பெறுதல், அவற்றைப் பராமரித்து வளர்த்தல், குடும்பப்பணிகளை ஆற்றுதல் ஆகியன அவர்களுடைய பணிகள் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அதே நேரம் கடினமான பணிகளில் ஈடுபடுவது, ஆண் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துவது, பெண்களைப் பாதுகாப்பது போன்றவை ஆண்களின் கடமை எனப்படுகிறது.

மேலே கூறப்பட்டுள்ளவையைக் காணும் போது பெண்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள பிரச்சனைகளைத் தீர்க்க முடியாதவர்களாயுள்ளனர் என்பது புலனாகின்றது.



### பாலியல் அரசியல்

ஆண்கள் மேலாதிக்கத்தில் பெண்களுடைய நிலையானது திருமண உறவுகளைவைத்துத் தீர்மானிக்கப்படுகிறது. சமுதாயத்தில் பெண்களை ஆண்கள் கட்டுப்படுத்துதல் என்பது பாலின அரசியல் எனப்படுகிறது. குடும்பத்தில் ஆண்களுக்கே முதலிடம் தரப்படுகின்றது. பெண்கள் பிற்பட்ட இரண்டாந்தரப் பிரிவினராகவே கருதப்படுகின்றனர். பொருளியல் நோக்கிலும் பெண்கள் ஆண்களை விடத் தாழ்ந்தவர்களாகவே எண்ணப்படுகின்றனர். கல்வி, உயர்கல்வி, தொழில்கள், தனிநபர் சொத்து ஆகியவற்றில் ஆண்களுக்கே முக்கியத்துவமும் முன்னுரிமையும் தரப்படுகின்றது. பெண்களை விட ஆண்கள் மேம்பட்டவர்கள் என்ற கருத்து மேலோங்கிக் காணப்படுகின்றது.

### சக்தி

பெண்களை விட ஆண்கள் சக்தியும் ஆற்றலும் கொண்டவர்கள் என்ற கருத்து பொதுவானதாக நிலவுகின்றது. தனது தேவைகளை நிறைவு செய்து கொள்ள, விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்ள, தாகத்தைத் தணித்துக் கொள்ளத்தரப்பட்ட உரிமைகளைப் போல் உரிமைகள் தரப்பட்டுள்ளன. சமுதாய சமத்துவம் காணப்படவில்லை. அரசியலிலும் பெண்களுக்கு இரண்டாம்தர இடமே தரப்படுகின்றது. ஆண்களின் சக்தி காரணமாக சீரான வல்லமைச் சமன்பாடு நிலைநாட்டப்படவில்லை. அதனால் பெண்கள் மீதான வன்முறை ஆதிக்கம் ஆண்களால் சுமத்தப்படுகின்றது. ஆண்களின் வலிமை காரணமாக பாலியல் பலாத்காரம், சுரண்டல் ஆகியன திகழுகின்றன. சக்தி அதிகாரம் காரணமாகவே பெண்கள் வர்த்தகப் பொருட்களாக மாற்றப்படுவதுடன் அடிமைகளாகவும் ஆக்கப்படுகின்றனர். குடும்பம் மற்றும் சமூகத்தில் எழக்கூடிய பிரச்சனைகளாலும், பெண்களே அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

### விடுதலை

சமுதாய, பொருளாதாரக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுபடல், விடுதலை எனப்படுகின்றது. அது அடிமைத்தனம், தேக்க நிலை, பின்தங்கிய நிலை ஆகியவற்றிலிருந்து விடுபடுதலும் விடுதலை எனப்படும். எனவே ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் கட்டுப்பாடுகள் பலவற்றிலிருந்து விடுபடல் விடுதலை எனப்படும். பெண்கள் தம்முடைய உரிமைகளுக்காகப் பாடுபடுதலும் விடுதலையின் பாற்பட்டதேயாகும். ஆண்களுக்குச் சமமான வேலைவாய்ப்பு ஊதியம் போன்றவை வலியுறுத்தப்படும் போது பெண்விடுதலை என்பது பின்னணியாக உள்ளது. சமுதாயம், குடும்பம், பணியிடங்கள் ஆகியவற்றில் பெண்கள் கட்டுப்படுத்தப்படுவதைத் தடுப்பதும் விடுதலையாகக் கருதப்படுகின்றது.

எனவே பெண்ணியக் கோட்பாடானது பலதரப்பட்ட கருத்துக்களை உள்ளிட்ட ஒன்று என்பது தெளிவாகின்றது.

## பெண்ணியத்தின் வகைகள்

பெண்கள் மற்றும் பெண்கள் பற்றிய அல்லது அவர்களுடன் தொடர்புடைய பலசெய்திகளைப் பயிலுதல் பெண்ணியம் எனப்படும். பெண்ணுரிமை பற்றி உணரமுற்படுதலும் பெண்ணியம் சார்ந்ததே. பாலியல் நோக்கிலும், பொருளியல் மற்றும் சமத்துவ நோக்குகளிலும் பெண்களின் உரிமைகளைப் பற்றி உணரமுற்படுவது பெண்ணியம். சுருங்கக் கூறினால் பெண்களின் உண்மைநிலையை, ஆய்ந்தறிந்து, வெளிப்படுத்துவது பெண்ணியம் பற்றிய படிப்பேயாகும். ஆணாதிக்கச் சமுதாயத்தில் அவர்கள் பெற்றுள்ள அரசியல், பொருளியல், சமூக, சட்ட உரிமைகள் போன்றவற்றை ஒப்பிட்டுப் பார்த்து பெண்களுக்கு அவை எந்த அளவிற்குத் தரப்பட்டுள்ளன என்பதை விளக்குவது பெண்ணியமாகும். தந்தைவழிச் சமுதாயம், பாலியல் பாகுபாடுகள், அடிமைத்தனம் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடுவது பெண்ணிய இயக்கமாகும். பெண்ணிய வாதிகளின் கருத்துப்படி பெண்ணியம் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றது. அவை

அ. தாராளப் பெண்ணியம் (Liberal Feminine)

ஆ. தீவிரவாதப் பெண்ணியம்(Radical Feminine)

இ. சமதர்ம பெண்ணியம் (Socialist Feminine)

ஈ. மார்க்ஸிய பெண்ணியம்(marcist Feminine)

உ. உணர்வு நிலை பெண்ணியம் (Prycho Feminine)

என்பனவாகும். இவை ஒவ்வொன்று பற்றியும் தனித்தனியாகக் காணுதல் அவசியம்.

### அ. தாராளப் பெண்ணியம் (Liberal Feminine)

தாராளப் பெண்ணியம் என்பது 18ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்தில் எழுந்து பரவியதாகும். பெண்களின் உரிமைகள் ஒரு நிரூபணம் என்ற நூலானது(An Indication of the Rights of Women) பெண்களுக்கும் ஆண்களைப்போல் அனைத்து நிலைகளிலும் நிகரான , சமமான உரிமைகள் தரப்படவேண்டுமெனக் கூறுகின்றது. ஜே.எஸ்.மி தமது பெண்களின் அடிமைத்தனம் (Subjection of women) என்ற நூலில் பெண்விடுதலை பற்றி வலியுறுத்தியுள்ளார். பெண்கள் தேவையற்ற கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் தமக்குச் சரி எனப்பட்டதைச் செய்யும் உரிமையுடையவர்களாக பெண்கள் திகழவேண்டுமென்றார். பல பணிகளிலும் அவர்களுக்குச் சமத்துவமும் சம உரிமையும் தரப்படவேண்டுமென்பது அவருடைய கருத்து. தமது குடும்பச் சொத்துக்களில் அவர்களுக்கும் பங்கு பெறும் உரிமை தரப்படவேண்டும். அரசியலுரிமையில் அவர்கள் வாக்குரிமை பெற்றிருக்கவேண்டும். பெண்கள் இயற்கையாகவே ஆண்களை விடக் குறைவான அறிவுடையவர்கள் என்ற கருத்தும், உடல்ரீதியாக ஆண்களைவிட பெண்கள் குறைவான ஆற்றல் உடையவர்கள் என்ற கருத்தும் எதிர்ப்புக்குள்ளானது. இது தாராள மக்ளிரியலில் காணப்படும் பண்பாகும்.



இந்நிலையில் பெண்கள் தாமாகவே முடிவெடுத்து பல செயல்களில் ஈடுபட வேண்டுமென்ற கருத்தையும் தாராளப் பெண்ணியம் வலியுறுத்துகின்றது. ஆண்கள் அனுபவிக்கக் கூடிய பொருளாதார சந்தர்ப்பங்கள், பொது உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றைப் பெண்களும் பெறவேண்டும். சமத்துவ மின்மை என்பது சமுதாயத்தில் இயற்கையாக எழுந்ததல்ல அது படிப்படியாகச் சுமத்தப்பட்டதாகும். பழக்க வழக்கம், வழக்காறுகள், பாரம்பரியப் பண்புகள் ஆகியன அதற்குக் காரணமாகின்றன. அவை தவிர்க்கப்படுவதுடன் பாலியல் அடக்குமுறைகளும் கட்டுப்படுத்தப்படவேண்டும்.

கல்விநிலைகளில் அவர்களுடைய திறமையும், மதிப்பும் குறைத்து மதிப்பிடப்படும் நிலை மாறவேண்டும். சமமான கல்வி பெற்றவர்களுக்கு சமமான பணிவாய்ப்பு, சமமான பணிக்கான சமமான ஊதியம் ஆகியன தரப்பட்டு அவர்கள் காக்கப்படவேண்டும்.

### ஆ. தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminine)

பெண்ணியத்தின் தாய் எனப்படும் பெட்லிப்ரெய்டன் பெண்களின் வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பாதுகாப்பது தீவிரவாதப் பெண்ணியம் என்று குறிப்பிடுகின்றார். தீவிரவாதப் பெண்ணியவாதி தந்தை வழி முறையானது பெண்களை ஒடுக்குகின்றதெனக் கூறுகின்றார். தந்தைவழிச் சமுதாயத்தில் காணப்படும் பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் , பாரம்பரியப் பண்புகள் சமுதாயத்தில் உயிரியல் நோக்கில் பெண்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன. அச்சமுதாயத்தில் பெண்கள் வரலாற்று ரீதியாக அடிமைப்படுத்தப்பட்ட உறுப்பு என்று கருதுகின்றனர். ஆணாதிக்கமும் ஆண்களின் அதிகாரமும் அவர்களால் வெறுக்கப்படுகின்றது. தீவிரவாதப் பெண்ணிய நோக்கில் பெண்கள் எதற்கும் யாரையும் சார்ந்திருக்கத் தேவையில்லை. தற்சார்பு நோக்கில் பெண்கள் சுதந்திரமாக இயங்குவதை தீவிரவாதப் பெண்ணியம் ஆதரிக்கின்றது. குழந்தைக்குத் தாயாகி அவர்களைப் பொறுப்புடன் வளர்த்து ஆளாக்கும் பெண்ணைக் கட்டுப்படுத்தி அடக்கியாளுவதை தீவிரவாதப் பெண்ணியம் எதிர்க்கின்றது. தீவிரவாதப் பெண்ணியவாதிகள் தாய்வழிச் சமுதாயத்தின் ஆதரவாளர்களாக உள்ளனர். பாலியல் பலாத்காரம், கட்டாயத்தாய்மை ஆகியன எதிர்க்கப்படுகின்றன. தீவிரவாதப் பெண்ணியலார் பெண்ணினத்தின் பெருமையை நிலை நாட்டுதலைத் தமது நோக்கமாகக் கொள்ளுகின்றனர்.

### இ. சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminine)

பெண்களின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, சமத்துவம் ஆகியவற்றிற்கு சமதர்மப் பெண்ணியவாதிகள் முக்கியத்துவமளிக்கின்றனர். இவர்களுடைய கருத்தியலில் மார்க்ஸியப் பெண்ணியமும், தீவிரவாதப் பெண்ணியமும் இணைந்து கிடத்தலைக் காணலாம். பெண் விடுதலையே சமுதாயச் சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கம் என்று அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பெண்களின் அடக்குமுறையை பிற அடக்குமுறைகளுடன் ஒப்பிட்டு நோக்கி ஒரு முடிவுக்கு வந்து அம்முறையில் பெண்ணியத்தை இணைத்துப் பார்ப்பது சமதர்மப் பெண்ணியமாக உள்ளது. ஆணாதிக்கச் சமுதாயத்திலிருந்து

விடுபட்டு, ஆண்களைப் போல் பெண்களும் பல நிலைகளிலும் சம உரிமை வழங்கப்படவேண்டுமென்பதை சமதர்மப் பெண்ணியவாதிகள் கூறுகின்றார்கள். ஆண்களின் அடக்குமுறைகளிலிருந்து பெண்களை விடுபடச் செய்தலென்பது அவர்களுடைய தலையாய நோக்கம்.

### ஈ. மார்க்ஸிய பெண்ணியம் (Marcist Feminine)

மார்க்ஸியம் பெண்ணியம் பற்றி நேரடியாக எதனையும் குறிப்பிடவில்லை. ஆனால் பெண்கள் மேற்கொள்ளும் பணிகளைப் பற்றிக் கூறுகின்றது. ஒரு குடும்பமானது முதலாளித்துவக் கோட்பாட்டுடன் எவ்வாறு தொடர்புடையது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. மேலும் பெண்கள் எவ்வாறு குறைந்த ஊதியத்திற்கு வேலைக்கு அமர்த்தப்பட்டு சுரண்டலுக்கு உள்ளாகின்றனர் என்பதை வெளிப்படுத்துகின்றது. செல்வந்தர்களின் இல்லங்களில் பெண்பணியாளர்கள் எவ்வாறு அடிமைகளாகச் செயல்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. பெண்களின் சக்தியும், உழைப்பும் எவ்வாறு சுரண்டலுக்கு உள்ளாகின்றதென்பதும் தெளிவுபடுத்தப்படுகின்றது. பெண் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களால் எவ்வாறு இலாபம் அதிகரிக்கப்படுகிறதென்பதும் கூறப்படுகின்றது.

### உ. உணர்வுநிலை பெண்ணியம் (Psycho Feminine)

சமுதாயத்தில் நிலவும் தன்மைகள் மற்றும் செயற்பாடுகள் பெண்கள் மனத்தில் உருவாக்கக்கூடிய எண்ணங்களைப் பிரதிபலிப்பது உணர்வுநிலைப் பெண்ணியம். பெண்கள் எவ்வாறு தனிமைப் படுத்தப்படுகிறார்கள் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. அன்பு, பாசம், பற்றுதல், சார்புத்தன்மை, தனித்துவம் போன்ற பல மனஉணர்வுகளுக்கு ஆளாகும் பெண்கள் நிலைபற்றி விளக்குவது உணர்வுநிலைப் பெண்ணியம். அவர்கள் எவ்வாறு சமூகச் சூழல்களால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதை சுட்டிக்காட்டுவது உணர்வுநிலைப் பெண்ணியம். குடும்பச் சூழல்கள், அயல்நாட்டுப் பண்பாட்டுத் தாக்கம், கல்விகற்பதால் ஏற்பட்ட விளைவு போன்றவையும் உணர்வுநிலைப் பெண்ணியம் பற்றியவையாக உள்ளன.

இவ்வாறு மகளிரியல் அல்லது பெண்ணியமானது வளர்ந்து வரும் சமுதாய அமைப்பின் முக்கியமான இடம் பெற்றுள்ளது.



# 2. பெண்ணியக் கோட்பாடுகள்
## (FEMENIST THEORIES)

**முன்னுரை** — ஷோ வால்டரின் கோட்பாடு - உடற்கூறு -மொழியியல் - உளப் பாங்கு பண்பாடு - எகர்டர் லெர்னர் - ஷெர்லி ஆர்டினர்

ஆண்டவன் படைப்பில் ஆண், பெண் இருவரும் சமம். ஆனால் ஆண்டவன் படைத்த மனிதன் தனது ஆதிக்கத் தன்மை காரணமாக பல்வேறு பாகுபாடுகளுக்கும் காரணமானான். சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமய வேறுபாடுகளைப் புகுத்தினான். அதே சமயம் பால் வேறுபாடு காரணமாக பெண்களையும் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு உட்படுத்தி பெண் என்பவள் பிற்பட்டவள், பேதை என முத்திரை குத்தி ஒதுக்கினான். ஆனால் உடற்கூற்று வேறுபாடு காரணமாக அவர்களுடைய ஆற்றல், தன்மை, வலிமை, பொறுமை, ஆகியவற்றைச் சரிவர மதிப்பிடத் தவறினான். எனவே ஏற்றத்தாழ்வற்ற பொதுமைநிலையுடைய பெண்ணினத்தை அவர்களின் பணிகள், பொறுப்புகள், கடமைகள், உரிமைகள், சமூகத்தில் அவர்களுக்குத் தரப்பட்டுள்ள இடம் ஆகியவற்றினடிப்படையில் விளக்கிக் கூறுவது பெண்ணியம். சுருங்கச் சொல்லின் பெண்களின் தன்மை, அமைவு ஆகியவற்றை விவரிப்பது பெண்ணியம் எனலாம். பெண்ணும் மானிட இனத்தின் ஓர் அங்கமேயாதலால் அவளை மற்றொரு இனமான ஆண்இனத்தினின்றும் பிரித்து ஒதுக்கி, தாழ்நிலைக்குத் தள்ளப்படுவதைத் தவிர்க்க முயலும் செயற்பாடுகளைச் சுட்டிக்காட்டுவது பெண்ணியம். பெருமைக்குரிய, போற்றுதலுக்குரிய இனமான பெண்ணினம் தமக்கெனத் தனிப்பட்ட குணப்பாங்குகள் பலவற்றைக் கொண்டுள்ளது. இதன் மூலம் பெண்ணியம் சில கோட்பாடுகளுக்கு உட்பட்டு இயங்குகின்றதென்பது வெளிப்படுகின்றது. ஆதலால் பெண்ணியக் கோட்பாடுகள் பற்றிக் காண வேண்டிய கட்டாயம் எழுகின்றது. அதன் வாயிலாக பெண்ணினம் பற்றிய செய்திகளையும் உணரவியலும். ஆகவே பெண்ணியக் கோட்பாடுகள் பற்றித் தொடர்ந்து காண்போம்.

ஒரு இயல் அல்லது சிந்தனை என்பது குறிப்பிடக்கூடிய வரையறைகளுக்கு உட்பட்டு மதிப்பீடு செய்ய உதவும் அளவு கோலுக்கு உட்பட்டதாய் அமையும். மேலும் அவற்றின் தோற்றம், இயக்கம் என்பனவும் வரலாற்று நோக்கில் படிப்படியான மாற்றங்களைப் பெற்றதாக அமையும். பெண்ணியம் என்பது ஒரு கட்டுபாட்டிற்குள் அல்லது நிலவியல் எல்லைக்குள் கட்டுப்படுத்தக்கூடியதல்ல. அது உலகளாவியது. நிலவியல் வேறுபாடுகளால் இனவேறுபாடுகளான பெண்ணியம் பற்றி உலக நாடுகளிடையே காணப்படும் கோட்பாடுகளும் விரிநிலைத் தன்மையடைகின்றன. "தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்று பெண்ணை இறைவனுக்குச் சமமாகக் கொண்டாலும்

இயல்பு வாழ்க்கையில் தாய்வழிச் சமுதாய அமைப்பு இன்றி தந்தைவழிச் சமுதாயமாகவே உலக இயக்கம் உள்ளது. எனவே பெண்ணியக் கோட்பாடுகள் எவ்வாறு பெண்களுக்கோர் கருத்தமைவாக உள்ளனவென்பதைக் காணலாம்.

பெண்ணியம் என்பதற்கான மதிப்பு தரப்படாமையால் பெண்ணியக் கோட்பாடுகள் எழவோ அல்லது விவரிக்கப்படாமலோ போயின. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணிய ஆய்வும் கோட்பாடுகளும் வலுப்பெறலாயின. மேலும் பெண்ணியம் பற்றி பேசுவது சமூக முரண்பாட்டிற்கு வழிகோலும் எனக்கருதப்பட்டமையாலும் பெண்ணியக் கோட்பாடுகள் உருவாவதில் காலதாமதம் காணப்பட்டது. பெண்கள் பற்றிய எண்ணங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அறிவியல் நோக்கில் அவர்களைப் பற்றியும் அவர்களுடைய குணவியல்புகளைப் பற்றியும் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருதல் என்பது இயலாததொன்றாயிருந்தது. ஆனால் பல துறைகளிலும் பெண்கள் தமது ஆற்றல்கள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்தித் தமக்கென ஓரிடத்தைப் பெற்றுள்ள இன்றையநாளில் அவர்கள் பற்றிய சிந்தனைகளும் பெண்ணியக்கோட்பாடுகளும் விரிவாக்கம் பெற்று வலுப்பெறலாயின. பெண்களின் தனித்தன்மையை வெளிப்படுத்தி நிலைநாட்டக்கூடிய வகையில் பெண்ணியக் கோட்பாடுகள் தோன்றலாயின். பெண்மை பற்றிய புதிய விளக்கங்கள், மதிப்பீடுகள், பெண்களின் வெளிப்பாடு, பால்வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் புறவியல் பணிகளில் அவர்களது ஈடுபாடு, பங்கு ஆகியன பெண்ணியக் கோட்பாட்டிற்கு அடிப்படை நிலைகளாக அமையலாயின.

பெண்கள் ஒடுக்கப்பட்டவர்கள்(Oppressed), அடக்கிக் கட்டுப்படுத்தப்பட்டவர்கள் (Repressed), உணர்வுகளின் வெளிப்பாடாக உள்ளவர்கள்(Expressive), என்று மாறுபட்ட கோணங்களில் பார்க்கப்படுகையில் புதிய கோட்பாடுகள் பெண்ணிய நோக்கில் உருவாகின்றன. அவை தற்காலச் சூழல்கள் சார்புடைய வகையில் வெளிப்படுகின்றன. பழமைச்சூழலின் அடிப்படையில் மாற்றங்களின் தன்மைகளுக்கேற்ப புத்தாக்கமாய் அக்கோட்பாடுகள் மலர்ந்துள்ளன. அவை பற்றித் தொடர்ந்து காண்போம்.

## ஷோவால்டரின் கோட்பாடு:

### உடற்கூறு:

பெண்ணியம் என்பது அவர்களுடைய உடற்கூறு அமைப்பு, மொழியியல் அவர்களது உளப்பாங்கு மற்றும் பண்பாடு என்ற ஒன்றுக்கொன்று தொடர்புடைய பண்புகளால் உருவாக்கப்படுகின்றது. ஆண், பெண் உடலமைப்பில் காணப்படக்கூடிய வேற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் அவர்களது படைப்பு, பணி ஆகியவற்றில் மாறுபட்ட தன்மைகளை உருவாக்குகின்றனவென்பது முதற்கோட்பாடு. இக்கோட்பாட்டின்படி பெண் ஏன் தாழ்வாகவும், குறைவாகவும் மதிப்பிடப்படுகின்றாள்? என்ற வினாவிற்கு விடை காணப்படுகின்றது. பெண் மாதந்தோறும் உள்ளாகக் கூடிய உடற்கூறு உபாதை, மகப்பேறு போன்றவற்றால் பெண்ணின் திறன் குறைகின்றது.



இதனால்தான் ஆணினைவிட பெண் குறைவானவள் எனப்படுகின்றாள். பெண்ணின் மூளையும் ஆணின் மூளையை விடச் சிறியதெனக் கருதப்பட்டது. அதனால் அவளுடைய சிந்தனையும் குறைவானதாகவே இருக்குமெனப்பட்டது. ஆனால் ஷோவால்டர் அதனை மறுக்கின்றார். குழந்தைப்பேறு என்னும் படைப்புத் தொழிலுக்குக் காரணமான பெண்ணின் உடலமைப்பும், அவளது மூளையும் படைப்பாற்றலுக்கு ஏற்றவை என்பது அவருடைய கருத்து. மேலும் பெண் படைப்பாளர்கள் ஆண்களின் இயக்கத்தை உயர்த்திப் பேசுவதை மனமார ஏற்பதில்லை. ஆனால் காலம், மரபு பண்பாட்டு நோக்கில் அவற்றை ஏற்கிறாள். எனவே உடல்பற்றிய பண்புகாரணமாகப் பெண்ணைக் குறைத்து மதிப்பிடல் போலித்தனமானது. ஏற்கவொண்ணாதது என்பதே ஷோவால்ட்டரின் கருத்து. மேலும் சமூகத்தில் அவள் பெற்றுள்ள இடம், சமூகம் அவளைக் காணும் பார்வை, பலதரப்பட்ட வாழ்வியல் தூண்டல்களை அவள் எதிர்கொள்ளும் தன்மை போன்றவை அவளது உடற்கூற்றியல் சார்ந்தவை. ஆகவே படைப்பாற்றலில் பெண் ஆணினின்றும் மாறுபட்டவளாகிறாள். அதனால்தான் பெண்ணின் படைப்பாற்றல் பற்றி இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. மேலும் படைப்பாற்றல் என்னும் பண்பு நோக்கம், படைக்கும்முறை, தன்மை ஆகியவற்றுடன் தொடர்புடையது. அவை அவளது உடற்கூற்றின் வலிமை மற்றும் ஆற்றலைச் சார்ந்துள்ளவை. பெண் ஒரு தூண்டலுக்கேற்பத் துலங்குகையில் அல்லது ஒரு அறைகூவலைச் சந்திக்கும் போது அவளுடைய வெளிப்பாடுகளில் தனித்தன்மை அல்லது இயல்புக்கு மாறான பண்புகள் உள்ளனவாவெனில் இல்லையெனத் துணிந்து கூறலாம். ஆண்களின் படைப்புகளை விட பெண்ணின் படைப்புகள் குறைந்த அளவினதாக உள்ளன. இதற்கு உடற்கூற்றியல் மட்டும் காரணமாவதில்லை. பயிற்சி மற்றும் திறமைகாரணமாகப் பெண்ணினம் அவற்றை அதிக அளவினை உடையனவாகச் செய்துகொள்ளவியலும். எனவே உடற்கூறு அடிப்படையில் பெண்ணியப் பண்பினை மதிப்பிடல் தவறான மற்றும் முறையற்ற ஒன்றாகும்.

### மொழியியல்

அடுத்து வருவது மொழிச்சார்புடையது. மொழியியலானது ஆண் பெண் என்ற இருபாலரையும் உள்ளிட்ட சமூகத்தில் ஒருகருத்துப் பரிமாற்றக் கருவியேயாகும். மொழிச்சார்புடைய சொற்கள் அச்சொற்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட சொற்றொடர்கள் ஆகியன ஆண், பெண் என்ற பிரிவினைக்கு அப்பாற்பட்டவை. இருவருக்கும் பொதுவானவையேயன்றி மாறுபட்டவையல்ல. ஆண்கள் உரத்தகுரலில் கடினமாக அழுத்தத்துடன் ஆணித்தரமாகப் பேசுகையில் பெண் அமைதியாக, கனிவுடன், இனிமையாக அமைதியான சொற்களைக் கையாண்டு பேசும்பொழுது பேச்சுமுறையில் வேறுபாடும், மாறுபாடும் தென்படுகின்றன. பெண்ணானவள் மென்மையானவள். எனவே உடற்கூற்று நோக்கில் அவளுடைய சொற்களும், மொழியும் அத்தன்மைய நிலையினதாகவே அமைதல் வேண்டுமெனச் சமுதாயம், குறிப்பாக ஆண் சமூகம் எண்ணுகின்றது. இது வலுக்கட்டாயமாகப் பெண்ணினத்தைப் பின்னடையச் செய்ய மேற்கொள்ளப்பட்ட செயல் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். இருப்பினும் இருபாலரது சொற்களில் சில பாகுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றனவென்பதையும் மறுக்கவியலாது.

எடுத்துக்காட்டாகப் பெண்கள் தாம் சொல்ல வந்த செய்தியைச் சுற்றி வளைத்துச் சொல்லுதல், முதுமொழிகள் மூலம் கருத்துக்களை எடுத்தியம்புதல், பொதுப்படக் கூறுதல், விரும்பத்தகாத சுடுசொற்களை தவிர்த்தல் என்பன பெண்களின் பண்புகளாக உள்ளன. ஆனால் இவை மரபுவழியாக கட்டுப்பாடு காரணமாக மீற முடியாமல் பின்பற்ற படுவதென்பதையும் மறக்க கூடாது. மேலும் பெண்கள் எல்லா நேரங்களிலும் இதே தன்மையைப் பின்பற்றுவதில்லை. மேலும் அச்சமும், கூச்சமுமின்றி ஆண்கள் பயன்படுத்தும் அவச்சொற்கள், சுடுசொற்கள் மற்றும் கடுமையான சொற்களை அவர்கள் பேசுவதில்லை. இருப்பினும் மொழியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஆண் பெண் வேறுபாடுகளை அளவிடல் அல்லது மதிப்பீடு செய்தல் தவறானதாகும். பெண்ணினமும் தனக்கெனத் தனிப்பட்ட, தமது கருத்துக்களை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தக்கூடிய மொழியினைக் கொண்டுவிளங்க வேண்டுமென பிரான்சு நாட்டில் பெண்ணியத்தைப் போற்றுவோர் கருதுகின்றனர். பெண்களின் கருத்துக்கள் உணர்வுகள் அடிப்படையில் எழுகின்றன ஆகையால் அவர்கள் பின்னடைவு பெறுவார்கள் எனப்படுகின்றனர். இதுவும் ஏற்புடையதல்ல. காதியர் போன்ற அறிஞர்கள் குறிப்பிடும்போது தமது மௌனம் காரணமாக வரலாற்று வட்டத்திற்கு வெளியில் நிறுத்தப்பட்டுள்ள பெண்கள், ஆணினத்திற்குச் சம அளவில் பேச மற்றும் எழுதத்தொடங்கினால் அவர்கள் வரலாற்றுப் பெண்களுக்குப் பொருந்தாதவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு வெறுத்து ஒதுக்கப்படுகின்றார்கள். எனவே பெண்களுக்கான இத்தகைய மொழி சார்ந்த தடைகள் நீக்கப்படவேண்டும். ஆண்களின் சிந்தனையை வெளிப்படுத்தப் பயன்படுத்தும் மொழி பெண்ணினத்திற்கும் தரப்படவேண்டும். ஆண்கள் பெண்ணினம் பற்றிக் குறைத்து மதிப்பிட்டு அதற்காக உருவாக்கியுள்ள கருத்துக்கள் தடுக்கப்படவேண்டும்.

ஷோவால்டர் கூறுவது போல் மகளிருக்கெனத் தனிப்பட்ட மொழியியல் தொன்மைக் காலத்திலிருந்தே நிலவிவந்தது. தாய்வழிச் சமுதாயம் படிப்படியாக, ஆணாதிக்கச் சமுதாயம் மலர்ந்தபோது மறையத்தொடங்கியது என இராபர்ட் கிரேவ்ஸ் குறிப்பிட்டுள்ளார். தமது பொதுமைக் கருத்துக்களை வெளியிட தனிப்பட்ட மொழி தேவைப்பட்டது. தமிழகத்தில் உருவாக்கப்பட்டு பெண்களைப் பாகுபடுத்திய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற தன்மைகள் ஆண்களுக்கு ஆதரவானவையாக இருந்தனவே ஒழிய பெண்களுக்குச் சாதகமானவையல்ல. சமயத்துறையிலும் அவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. வெறியாடல் அல்லது மருளாடல் என்ற நிலையில் உன்மத்தநிலையில் கூறும் உளறல்கள் அவர்களது மொழியாகக் கருதப்பட்டது. அவர்கள் தீய ஆவிகளின் பாதிப்புகளுக்கு உள்ளாகிவிட்டனர் என்று முத்திரையிடப்பட்டு ஒதுக்கப்பட்டனர். அரசியலிலும் அவர்களுக்கு உரிய பங்களிக்கப்படவில்லை. அவர்கள் ஆளப்படுவோரேயன்றி ஆள்பவர்களல்ல என்ற நோக்கில் அவர்கள் பேசமுடியா மௌனிகளாக்கப்பட்டிருந்தனர். எனவே மொழியடிப்படையில் பெண்கள் ஆண்கள் என்ற பகுப்பு நீக்கப்பட பெண்கள் ஈடுபாடு காட்ட வேண்டுமென்ற ஷோவால்டரின் கருத்து ஏற்புடையதே.



மேலே கூறப்பட்ட நிலையில் பெண்கள் மொழித்திறன் கொண்டவர்களாய் தாம் சொல்லவந்த கருத்துக்களை அச்சவுணர்வின்றி ஆணித்தரமாக, அழுத்தம் திருத்தமாக கூறவேண்டும். அதனை செயல்படுத்த முடியாமல் செய்யும் தடைகளைத் தகர்க்க வழிகாணவேண்டும். எனவே பெண்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக, அவர்கள் சொல்லக்கூடாது, செய்யக்கூடாது என்பதற்காக அவர்களால் முடியாது என்று சப்பைக்கட்டு கட்டினர் என்ற ஷோவால்டரின் வாதம் சரியானதே. சொல், செயல், உடல், மனம் போன்றவற்றில் பெண்களுக்குள்ள முட்டுக்கட்டைகள் நீக்கப்படவேண்டும். அது பெண்ணினத்தைப் பெருமைபடக் கூடிய வழிகளில் இட்டுச் செல்லும் என்பது அவருடைய கருத்து.

## உள்ளப்பாங்கு

உடல், மொழி ஆகிய அடிப்படைகளில் பெண்கள் பாகுபடுத்தப்பட்டு, பின்னுக்குத் தள்ளப்பட்டதைப்போல் அவர்களுடைய உள்ளப்பாங்கும் ஒரு கருவியாகக் கருதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனவே பெண்ணினக் கோட்பாட்டில் பெண்களின் மனப்பாங்கு என்ன நிலையைக் கொண்டுள்ளதென்பதையும் தெரிந்துகொள்ளல் அவசியமானதாகின்றது. உளவியல் நோக்கில் பெண்களின் உடலமைப்புக் கூறுகாரணமாக அவர்களது உள்ளமும் தனித்தன்மை கொண்டு இயங்குகின்றது. உள்ளம் என்ற நோக்கிலும் மகளிர் பிற்பட்டவர்கள் என்றே கருதப்பட்டது. தியோடர்ரே போன்றோர் இதற்கு மாறாக பெண்களின் உடல் அமைப்பு அவர்களுடைய பணிகளுக்கு தடைகளற்றதாய் உள்ளதெனக் கூறுகின்றனர். இருப்பினும் ஓர் எதிர்மறை நோக்கிலேயே மாதர் மதிப்பிடப்பட்டனர். லக்கன் போன்றோர் கூறுகையில் உடலமைப்பு நோக்கில் பெண் ஆணைவிடக் கீழானவள் என்ற உள்ளுணர்வு உருவாக்கப்பட்டுவிட்டதென்று பகர்கின்றனர். இத்தகைய மனவுணர்வு இளவயதிலேயே பெண் மனத்தில் ஊட்டப்பட்டு விடுவதால் அதனை அழித்தல் அல்லது எடுத்தெறிதல் கடினமான காரியமாகின்றது. ஆணினத்தால் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டதால் ஏற்பட்டுள்ள ஒதுக்கவுணர்வு, தமது கருத்துக்கள் மற்றும் செயல்களுக்கு உரிய ஆதரவு தரப்படாமை, எத்தகைய எதிர்ப்புகள் எந்த நேரத்தில் எழுமோ என்ற அச்சவுணர்வு, ஏற்கனவே தான் வகிக்கும் பிற்பட்ட தேக்கநிலை காரணமாக எழுந்த தோல்வி மனப்பான்மை போன்றவை பெண்ணினத்தை ஆணினத்திடமிருந்து வேறுபடச் செய்கின்றன. அவர்கள் சமூகச் சூழல், சமுதாய நியதிகள், சமய அடிப்படையிலான கட்டுப்பாடுகள், குடும்பத்தின் தாக்கம் ஆகியன சிக்மண்ட் பிராய்டு போன்ற உளவியலாளரையும் ஒருபுறச் சார்புடைய நோக்கிலேயே சிந்திக்க வைத்துள்ளன. இது மில்லர் என்பவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர் 'அதிகமாக்கப்பட்ட வலியுறுத்தல்' (Added Emphasis) என்ற நூலில் உள்ளது உள்ளபடி கூறப்படாமல் எதிர்மறையாகக் கூறப்படுவதால் ஏற்படும் முறையற்ற தவறான விளைவுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதன்மூலம் பெண்களின் உளப்பாங்கு அடிப்படையில் எதிர்மறைக் கருத்துக்களே செறிவு பெற்றுள்ளமையால் அவர்களது உண்மையான உள்ளம் உள்ளவாறு வெளிப்படுத்தப்படவில்லை என்பது கண்கூடு.

பெண்கள் தமது சிந்தனையில் எண்ணற்ற கனவுகள், ஆசைகள், விருப்பங்கள் ஆகியவற்றைத் தேக்கி வைக்கின்றனர். ஆனால் அவற்றிற்கான வழிகள் அல்லது வழக்கங்களைப் பின்பற்றுவதில் முரண்பாடுகள் எழுகின்றன. இதனையே மில்லர், ஆண்,பெண் என்ற இருபாலரிடையேயும் மாறுபட்டபோக்கு பலகாரணங்களால் ஏற்படுகின்றனவென்பதை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார். பெண்களது உள்ளம் பற்றிய கோட்பாடுகளில் பந்தம், பாசம், பற்று, அன்பு, ஆசை, குடும்பம் என்ற சூழ்நிலை சார்ந்த குறுகிய வட்டத்திற்குள் இயங்குவதால் பெண்ணியம் பின்னடைகின்றதென்பது கூறப்பட்டுள்ளது. ஆனிபிராட், பார்பரா ரிக்னி, டக்ளஸ் போன்றோர் பெண்களின் உளவியல் நோக்கி எழுந்த பலதரப்பட்ட படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு பெண்கள் பற்றிய தனிப்பட்ட கோட்பாடு ஒன்றினை உருவாக்க முற்பட்டனர்.

நான்ஸி யெஸடாரோ என்பவர் உளவியல் நோக்கில் எழுந்த மாறுபாடு பற்றிய கருத்தை வெளியிட்டுள்ளார். அவரது கருத்துப்படி ஒரு குழந்தை தன்னைப் பற்றி உணரும்போது தனது நிலையைப் பற்றி எண்ணுகின்றது. அவ்வமயம் அதன் உள்ளத்தில் இணைந்த அல்லது மாறுபட்ட கருத்துக்கள் மலர்கின்றன. ஒரு பெண் குழந்தை தாயிடமிருந்து தான் வேறுபட்டவள் என்பதை உணரும் போதும் தாயும் தானும் ஒன்று என்று கருதுகின்றது. ஆனால் ஆண் குழந்தையானது தாய் தன்னை ஈன்றெடுத்தாலும் தாயினின்றும் தான் வேறுபட்டவரென்ற கருத்தைக் கொள்ளுகின்றது. இதன் மூலம் பெண் குழந்தையிடமுள்ள இணக்க உணர்வானது ஆண் குழந்தையிடம் விலக்கம் அல்லது வேறுபாடு அல்லது மாறுபட்ட உணர்வாக விரிவாக்கம் பெறுகின்றது. தாயினின்றும் தான் வேறுபட்டவரென உணர்ந்த பின்னரே பிற குழந்தைகளிடமிருந்து வேறுபட்டதை உணருகின்றனர். படிப்படியாகவே பாலுணர்வு உணரப்படுகின்றது. இவையனைத்துமே உள்ளத்தின் வெளிப்பாடுகளே. இவை குறை, இழப்பு போன்றவற்றிற்குக் காரணமாகின்றன. மேலும் இவை பெண்களால் தெளிவாக உணரப்படுகின்றன. சமூகச் சூழல் பண்பாட்டுச் சூழல் போன்றவை அவர்களுடைய உள்ளப்பண்புகளுக்கு நிலைக்களனாக அமைகின்றன. எனவே ஆணின் மேம்பட்ட தன்மை அவர்களது மனத்தின் அடித்தளத்தில் ஆரம்பத்திலேயே குடும்பத்தினராலும், சமூகத்தினராலும் ஊட்டப்பட்டுவிடுவதால் அவற்றினின்றும் அவர்களால் விடுபட முடிவதில்லை. அத்தகைய நிலையில் அவர்கள் ஆணடிமைகளாக ஆக்கப்படுகின்றனர். இருப்பினும் கடந்தகாலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் பாலமெனத் திகழும் வரலாற்றில் இன, மொழி, சமய வேறுபாடுகளின் தாக்கங்களைக் காணுகிறோம். ஆனால் பெண்ணியம் பற்றிச் சிந்திக்காமல் காலப்போக்கில் அவர்களது தன்மை மற்றும் நிலை என்னவென்று மட்டுமே எண்ணுகிறோம். அதற்கான காரணிகளைக் கணக்கிடுவதுமில்லை. கவனிப்பதுமில்லை. எனவேதான் உளவியல் நோக்கில் பின்தங்கிய நிலையில் உள்ள பெண்ணினம் பற்றிச் சீராக ஆய்வு செய்திட சமூகப் பண்பாட்டு நோக்கில் அவர்களுடைய நிலை என்னவென்பதை ஆய்வு செய்ய வேண்டும்.



## பண்பாடு

பண்பாடு என்பது சமூக வாழ்க்கையின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைக் குறிக்கக்கூடியது. பண்பாடு என்பது மக்களின் பலதரப்பட்ட பண்புகளையும் வெளிப்படுத்தக்கூடியது. அதில் தாராளத்தன்மை, விரிவாக்கம், பழமைப்பற்று, சமயச் சடங்காச்சாரங்கள், வாழ்வின் நியதிகள் போன்ற பலவும் உள்ளடக்கப்பட்டிருக்கும். மேலும் பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தில் பலதாக்கங்களை ஏற்படுத்தக்கூடியது. 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' ஆதலால் பெண்ணினம் பண்பாட்டுடன் எவ்வாறு தொடர்புடையதென்பதைக் காணுதல் அவசியமாகின்றது. பெண்ணியக் கோட்பாட்டில் பண்பாடானது முழுமையான அதே நேரம் அவர்களுடைய தனித்தன்மைகளை உணர்த்தவல்ல, வேறுபாடுகளை எடுத்தியம்பக் கூடிய கூறுகளையும் உள்ளடக்கியுள்ளது. இப்பண்புகள் சமூகச் சூழல்களுக்குக் காரணமானவை. மேலும் மனிதன் அல்லது பெண்ணின் உடலமைப்புக் கூறுகள், மனிதர்கள் பேசும் மொழி, அவர்களுடைய உள்ளப்பண்புகள் ஆகியவை அனைத்தும் தனிமனிதக் கூறுகள் சார்ந்துள்ளவையாகையால் அவை பண்பாட்டுடன் தொடர்புடையனவாகின்றன. எனவே பெண்ணியத்திற்கும் பண்பாட்டுக்குமிடையிலான தொடர்பு பற்றி விளக்குவதும் ஒரு பெண்ணினக் கோட்பாடாகின்றது. இதன் மூலம் பெண்ணியம் பற்றிய செய்திகளை தெளிவாக உணரலாம்.

பெண் சமுதாயத்தின் ஒரு அங்கம். அதனின்றும் அவளைப் பிரிக்கவோ, ஒதுக்கவோ இயலாது. பெண்களின் நிலை, செயல்கள், ஆற்றல்கள், மேம்பட்டதன்மை, தாழ்வுற்றநிலை போன்றவை பண்பாட்டுப் பரிமாணத்திற்குள் உள்ளடக்கப்படக்கூடியவை. மனிதனின் நடத்தை, நடையுடை பாவனை, எழுத்து, பேச்சு, மொழி உணர்வு, உறவு முறை போன்றவை பண்பாட்டினைப் பிரதிபலிக்கின்றன. பெண்ணினமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. ஒரு பண்பாட்டின் தன்மையையொட்டியே சமுதாயத்தின் இயக்கமும் செயல்களும் நடைபெறுகின்றன. முறையற்ற, தவறான, தேவையற்ற சொற்கள், செயல்கள் ஆகியவற்றினை சமூகம் அங்கீகரிக்காமல் நிராகரித்துவிடும். இதற்குக் காரணம் பண்பாட்டு மேம்பாடுதான். தற்புகழ்ச்சி, பிறரைப் பழித்துரைத்தல், செய்யத்தகாதன செய்தல் ஆகியவற்றை வெறுக்கும் சமுதாயப் பண்பாடு, அறத்தை நிலைநாட்டல், தர்மத்தைப் பேணுதல், தற்சார்புடமை, ஈதல், இசைபட வாழ்தல் ஆகியவற்றைப் போற்றுகிறது. மனிதனின் அறிவாற்றப் பெருக்கம், அறிவியல் மேம்பாடு, பொருளியல் தாக்கம், பலவற்றையும் வினவியறிதல், மனிதாபிமான நோக்குடன் கூடிய அணுகுமுறைகளை அனைத்துநிலைகளிலும் கையாளுதல் என்பனவற்றின் வளர்ச்சி மனிதனை இன்று பண்பாட்டின் உயர்மட்டத்திற்கு அழைத்துச் செல்லக் கூடியவையாய் அமைகின்றன. எனவே பெண்ணியம் பற்றி எண்ணும் போது பண்பாட்டுக்கோட்பாடு வலிமையும் ஆற்றலும், ஏற்புடமையும் பெறுகின்றதென்ற ஷோவால்டரின் கூற்று முக்கியத்துவம் பெறுகின்றது.

## கெர்டா லெர்னர்

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பாதியிலிருந்து பெண்கள் பற்றிய சிந்தனைகள் வலுப்பெற்றன. வரலாற்றாளர்கள், சமூகவியலார், மானிடவியலார் போன்றோர் பெண்ணியம் பற்றிய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் நல்கினர். வரலாற்றில் பெண்களின் பங்கு மற்றும் நிலைபற்றி ஆய்தலென்பது, கருத்து வேறுபாடுகளை உருவாக்கினாலும், சிறப்புப் பெற்றுள்ளது. பெண்ணினம் உரிய இடத்தைப் பெறாமல் உள்ளதென்பது உணரப்பட்டது. கெர்டா்லெர்னர் என்பவர் உலக வரலாற்றில் பண்பாடு மற்றும் நாகரிக அடிப்படைகளில் பெண்ணினம் ஏன் விடுபட்டுவிட்டதென எண்ணி அதற்கான காரணங்களைக் கூறுகின்றார். வரலாற்று நிகழ்ச்சிகள், செயல்கள் ஆகியன ஆணைப் பற்றியே உள்ளன. சில நேரங்களில் பெண்களுடனான தொடர்பு பற்றிப் பேசப்படுகின்றது. நப்பசலையார், நச்செள்ளையார், ஔவையார், வெள்ளிவீதியார் போன்ற சங்ககால பெண்பாற் புலவர்கள் இருந்தனரென்ற செய்தியை தமிழக வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. விஷ்வ வாரா, அபாலா, கோஷா, மைத்ரேயி போன்ற பெண்பாற் புலவர்கள் ரிக் வேதத்தில் சுட்டப்படுகின்றனர். இருபதாம் நூற்றாண்டில் வை.மு. கோதைநாயகி, சூடாமணி, இராஜம் கிருஷ்ணன் போன்றோர் சமுதாயத்தில் பெண்கள் நிலையைப் படம்பிடித்துக் காட்டினார்கள். சமுதாயத்தைப் பிரதிபலிக்கக் கூடியவற்றை வெளிப்படுத்திய இலட்சுமி, ஜோதிர் லதா கிரிஜா, சிவசங்கரி, கிருத்திகா, சிவகாமி, பாமா போன்ற பெண் இலக்கியப் படைப்பாளர்கள் தமிழக வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். அரசியல் வரலாறு மேம்பட்டிருந்த காலத்தில் அரசியல் பண்பாட்டுத் தன்மைகளே முக்கிய இடம் பெற்றன. ஆனால் பொருளியல் வரலாறு விரிவடைந்தாலும் பெண்கள் பற்றி குறிப்புகள் இல்லை. காரணம் பெண்களைப் பற்றிய செய்திகள் சான்றுகள் மூலம் பெறப்பட்டுத் தொகுக்கப்படவேண்டுமென்ற எண்ணம் எழவில்லை. மகளிரைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவமும் தரப்படவில்லை. வரலாற்றில் பெண்கள், அவர்களது உணர்வு, ஆற்றல், அனுபவம், பாதிப்பு போன்றவை எண்ணப்படவேயில்லை. குடும்ப தலைவர் குடும்பத்தின் காவலரெனக் கருதி 'குலபதி' 'கிருஹபதி' போன்ற நிலைகளில் வைத்துப் போற்றப்பட்டபோது பெண்டிர் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்து இல்லத்தின் பெருமையை நிலைநாட்ட வேண்டிய இல்லாளாகவே கருதப்பட்டனர். இல்லறம் சிறக்கப் பெண்கள் நல்லறம் கொண்டவர்களாக இருக்கவேண்டுமென்ற நிலையில் ஒழுக்கப் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தமையை வரலாற்றில் காண முடிகின்றதேயொழிய அவர்களது சாதனைகளைக் காண முடியவில்லை. ஜோன் ஆப் ஆர்க், பிளாரன்சு நைட்டிங்கேல், மகாகேதரின், சுல்தானா ரஷியா, நூர்ஜகான், இலட்சுமிபாய், த்வாகெர்சூஸி வேலுநாச்சியார் போன்ற விரல்விட்டு எண்ணத்தக்கவர்களாவர். இவற்றின் மூலம் வரலாற்றில் பெண்கள் பங்கினை நன்கறியலாம். மேலும் அவர்களுக்குத் தரப்பட்டுள்ள இடம் மிக மிகக் குறைவானதாகவே உள்ளதென்பது கண்கூடு. இதனால்தான் மகளிரின் நிலை, மதிப்பு, செயற்பாடுகள் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்டு தனிப்பட்ட வரலாறு ஒன்று எழுதப்படவேண்டுமெனக் கூறும் கெர்டா லெர்னரின் உண்மைக் கூற்று ஏற்புடையதாகின்றது. அது வரலாற்று வரைவியல் முறையில் இணைக்கப்பட வேண்டிய ஒன்றாகவும் அமைகின்றது. இந்நிலையிலும் பெண்கள் இரண்டாம்தர நிலையிலேயே வைத்து எண்ணப்பட்டுள்ளரென்பது வெளிப்படை.



## ஷெர்லி ஆர்டினர்

ஷெர்லி ஆர்டினர் மற்றும் எட்வின் ஆர்டினர் ஆகியோர் அமைதியாக்கப்பட்ட பெண்கள் குழு ஆளுமைக் குழுவான ஆணினத்துடன் பிணைக்கப்பட்டுள்ளதென்பதை விவரித்துள்ளனர். ஆயினும் பெண் குழுவானது ஆண் குழுவைப்போல் ஒரு தனித்தன்மை கொண்ட வலிமையான இடத்தைப் பெறவில்லை. பெண்கள் தம்மைப்பற்றிக் கொண்டுள்ள கருத்துக்களும், செய்கைகளைப்பற்றிய அவர்களுடைய கண்ணோட்டங்களும் ஆண்களின் கருத்தமைவுகளை விட மாறுபாடு கொண்டவை. எனவே பெண்ணின வரலாறு பற்றிக் காணவேண்டிய கட்டாயம் எழுகின்றது. பெண்களின் தனிப்பட்ட குணவியல்புகள் ஒரு பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களைக் கண்டால் அது வரலாற்றுக்குப் பெருமை சேர்ப்பதாகும். இன்று உலகளாவிய நிலையில் பெண்ணியம் பற்றிய கோட்பாடுகள் மாற்றமடைந்து பழமைத்தன்மையினின்றும் விடுபட்டுவிட்டன. பெண்ணினமும் முந்தைய மூடப்பழக்கவழக்கங்களை விடுத்து தமது விருப்பங்கள் அடிப்படையில் ஆற்றல், திறமை, ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றது. ஆணுக்குப் பெண் அடிமையில்லை என்பதையும், ஆண்களுக்குச் சமமானவர்கள் என்பதையும் சில நிலைகளில் ஆண்களைவிட மேம்பட்டவர்கள் என்பதையும் நிரூபிக்கின்றனர். உலகியலறிவு, பொது அறிவு ஆகியவற்றை வானொலி, தொலைக்காட்சி, கல்வி போன்ற ஊடகங்களின் வாயிலாகப் பெற்று தம்முடைய நிலையை உயர்த்திக் கொண்டுள்ளனர். இன்றைய பொருளியல் உலகம், பொருளாதாரப் பண்புகள் அடிப்படையில் பெண்களைப் பின்னுக்குத் தள்ளுவதைத் தவிர்த்துவிடுகிறது. [illegible] நோக்கம், கண்ணோட்டம் ஆகியன ஆணின நியதிகளுக்குச் [illegible] வலிமைபெற்றுள்ளன. அவர்களுக்கு சமூகம் விதித்திருந்த [illegible] இன்று பல்வேறு காரணங்களால் தகர்ந்து போய்விட்டன. அச்சம், [illegible] அடிமைச் சிறுமதி ஆகிய முரண்பாடுகளைக் களைந்து, [illegible] வாய்மூடி மௌனிகளாய் இருந்தவர்கள் இன்று விழிப்புணர்வு [illegible] திகழ்கின்றனர். இப்பண்பாட்டு மாற்றம் வரலாற்றில் பொறிக்கப்பட [illegible] ஒரு அத்தியாயம்.

விதியைக் காரணங்காட்டி [illegible] களுக்கு உட்பட்டு பின்னுக்குத் தள்ளப்பட்ட பெண் [illegible] பண்பாடு ஒரு எல்லை வரையறைக்கு உட்படுத்தப்பட்டு [illegible] உணர்ந்து தம்முடைய ஆளுமைப் பண்புகளை வெளி [illegible] வருகின்றனர். கலைகள், சடங்குகள், விழாக்கள், கொ [illegible] ஆகியவற்றின்போது தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படு [illegible] வழிபாடு, செவ்வாய், வெள்ளி, நவராத்திரி, வரலட்சுமி [illegible] பெண்கள் தம்முடைய வலிமையையும் தேவைகளை [illegible] மேற்கொள்ளும் வாய்ப்புகளாயிருந்தன. இவற்றின் [illegible] அடிப்படையில் அவர் தம்மை வருத்திக் கொள்ளும்போது [illegible] பொதுநல்நோக்கை, ஆற்றலை

மறைமுகமாக வெளியிடலை அனைவரும் சிந்தித்தல் அவசியம். ஐந்து பூதங்களிடமும் சக்தி உண்டு என்பதும் அச்சக்தி மறைபொருள் ஆற்றல் என்பதும் பாண்டவர் ஐவர், திரௌபதி அவர்களை அடக்கியாண்ட சக்தி என்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றதெனக் கொள்ள வேண்டுமேயன்றி பாரதம் பெண்மையை அடக்கியாள உருவாக்கப்பட்டதென்றோ அல்லது பலர் ஒரு பெண்ணைத் திருமணம் (Polyandry) செய்து கொண்டனரென்பதை வெளிப்படுத்தவோ உருவாக்கப்பட்டதெனக் கொள்ளலாகாது. பாரதி கூறும்,

" மாகாளி பராசக்தி உருஷிய நாட்டில் கடைக்கண் வைத்தாள்
ஆங்கே ஆகாவென்றெழுந்து பார் யுகப்புரட்சி"

என்ற வரிகள் பெண்மையை ஏற்றிக் கூறுவனவாக உள்ளன வென்பதை நாம் சிந்தித்தல் வேண்டும்.

பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடு என்பது இதுவரை பெண்மையை, பெண்இனத்தைப் பற்றிய கருத்துக்களை வெளியிடப் பயன்படுவதொன்று. ஆணுக்கு பெண் அடிமை என்ற நிலையில் பெண்ணின் தன்மைகளை ஆய்ந்தறிந்து அவர்களுடைய நிலையை வெளிப்படுத்தித் தெளிவுபடுத்துவதே பெண்ணியக் கோட்பாடு. படைக்கும் சக்தி கொண்ட பெண் இல்லையெனில் படைக்கும் தொழில் இல்லாத நிலை ஏற்படும். அவ்வமயம் பெண்ணில்லாத உலகம் கற்பனைக்கு அப்பாற்பட்ட தொன்றாகவே திகழும். அதுபற்றி எண்ணவோ, எழுதவோ இயலாது. இயற்கையின் அறைகூவல்களுக்குச் செவிசாய்த்து தூண்டல்கள் பலவற்றிற்கேற்ப துலங்கி தன்னையும், தன்னுடைய நிலையையும் காத்துக் கொள்ளும் பெண்ணினம் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி சுயமாகச் செயல்பட வகைசெய்யப்பட்டால் பெண்ணினம் விடுதலையான, சுதந்திரமான வாழ்வினை எட்டி பொதுநலம் பேணத் துணை செய்யுமென்பதும் ஒரு தற்காலத்திய கோட்பாடு. ஆனால் அத்தகைய தடைகள், தளைகள் இன்று தகர்ந்து வருகின்றன. அதனால் பல துறைகளில் பெண்களால் தனிப்பட்ட பிறரால் ஏற்றுக் கொள்ளத்தக்க முத்திரையைப் பதிக்க முடிகின்றது.

ஆண்களைவிடப் பெண்ணியமே இயற்கை மற்றும் சுற்றுச்சூழல்களுக்கு மிக அருகாமையில், நெருக்கமான தன்மையைக் கொண்டுள்ளனரென்பது மற்றொரு கோட்பாடு. செய்தி ஊடகங்கள், அறிவியல் ஆய்வுகள், நாடகம், சினிமா, தொலைக்காட்சி, நீதித்துறை, கல்விக் கோட்பாடுகள், இலக்கியத்திறன் போன்றவற்றில் அவர்கள் காட்டும் ஈடுபாடு ஆகியன அவர்களுடைய படைப்பாற்றலுக்கு ஆதாரமாகின்றன. மேலும் அவை அவர்கள் பழமைப் பற்றிலிருந்து விடுபட்டு புதுமைப் பெண்களாய் பொலிவுற மேம்படுகின்றனரென்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. பெண்ணியத் தன்மையை விளக்கும் கோட்பாடுகள், ஆணின் நோக்கில் மட்டும் காணக்கூடிய ஒருபுறச் சாா்புடைய தன்மைக்கு அப்பாற்பட்டதாய், பெண்மைக்கு முக்கியத்துவமளிப்பதாய் இருசாராரையும் சமநிலையில் வைத்து ஆய்வுசெய்ய வேண்டுமென்பதை வெளிப்படுத்துகிறது. பழைய பண்பாட்டு மரபுகளில் காணப்படும் குறைகள், முரண்பாடுகள் ஆகியன களையப்படவேண்டும். இம்மாற்றம் காலத்தின் கட்டாயம். வரலாற்றுப் பின்னணியில் பெண்கள் நிலையை மையக்கூறாகக் கொண்டு சுழல்வட்ட முறையில் (Spiral Circle)



அவர்களுடைய வளர்ச்சி எண்ணப்படவேண்டும். ஆண், பெண் இருபாலரும் ஒத்த தன்மையுடையவராய் உலகியல் நடத்தவேண்டும். இன, சாதி, பொருளியல் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதைப்போல் ஆண், பெண் பாகுபாடு பாராட்டப்பட்டால் அது இன்றைய பண்பாட்டிற்கு பொருந்தக் கூடியதோ, ஒவ்வக்கூடியதோ அல்ல. எனவே பெண்ணியம் பற்றி எண்ணுகையில் பண்பாட்டுத் தன்மைக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். இன்றைய சூழல்கள் அடிப்படையில் அவர்கள் ஒப்பிட்டு நோக்கப்பட வேண்டும். மேலும் பெண்கள் இயல்பாகவே பெற்றுள்ள வலிமை, ஆற்றல் ஆகியன இயற்கையாக அவர்கள் பெற்றுள்ளவை. எடுத்துக்காட்டாக பொறுமை, விடாமுயற்சி, சகிப்பாற்றல் போன்றவை இயற்கை பெண்களுக்கு நல்கியுள்ள வரப்பிரசாதம். இன்றைய தொழில் நுட்ப உலகில் நுண்மையான பணிகளை ஆற்ற அவர்கள் பொருத்தமானவர்களாகும்போது அவர்களுடைய வளர்ச்சிக்கான மற்றொருபடி கட்டப்படுகின்றது.

இன்றைய அரசியல், சமூகச் சூழல்களில் பண்பாட்டு வரலாறு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவ்வாறு பண்பாடு பற்றிக் கூறுகையில் பண்பாட்டின் நிலைக்களனாகத் திகழும் பெண் பற்றிய கருத்துக்களும் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். ஆடவர்களின் பொற்காலம் பெண்ணினத்தின் கற்காலம் ஆனாலும் பெண்ணினம் பின்னுக்குத் தள்ளப்படக்கூடியதல்ல. பெண்கள் தானாகவே படைக்கும் ஆற்றலைக் கொண்டவர்கள் அவர்கள் பின்னணியில் காண்கையில் அவர்களது தனித்துவம் முக்கியத்துவம் உடையது மேலும் பெண்ணினம் என்பது அடிமைத்தனம், அறியாமை என்ற கூறுகளுக்கு அப்பாற்பட்டதென்பதும் உணரப்பட்டுள்ள இக்காலகட்டம் வரலாற்றில் ஏற்படும் திருப்பங்களை ஒத்ததாக உள்ளது. இன்று பெண்கள் பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அவ்வமயம் அவர்களுடைய செயற்பாடுகள், ஆற்றல்கள் ஆகியன எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன எனக் காண்பதும் தேவை. அப்போது அவர்களது பணிச்சூழல் முக்கியத்துவம் பெறுகின்றது. பணியின் தன்மை, பணியிடம், பணியினால் வெளிப்படுத்தும் படைப்புகள் ஆகியனவற்றிற்கு ஏற்ப பெண்களே இன்று நியமனம் செய்யப்படும்போது ஒரு விரிநிலைத்தன்மை உருவாக்கப் பட்டுள்ளமையை உணரலாம். பணிச்சூழல்கள் பெண்களையும் அவர்களுடைய பண்புகள் மற்றும் பண்பாடுகளையும் மாற்றி அமைக்கின்றன. எனவே உளப்பகுப்பாய்வுடன், இயற்கைநியதியுடன் சுற்றுச்சூழலும் பெண்ணியத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றதென்பதை நாம் நன்குணரலாம். இக்கோட்பாடுகள் பெண்ணியம் என்பதன் தன்மைகள், பண்புகள் மற்றும் நிலைகளின் மதிப்பீடுகளாகவே அமைகின்றன.

ஆண், பெண் வேறுபாடுகள் காணப்பட்டாலும் இருவரையும் சமநிலையில் வைத்து நோக்கும் அடிப்படையிலேயே இன்றைய கோட்பாடுகள் எழுந்துள்ளன. பண்டைய பெண்களின் நிலை பற்றிய தன்மைகளையும் சிந்தித்து இன்றைய 21–ஆம் நூற்றாண்டில் பெண்களின் நிலையையும் கருத்திற்கொண்டு உருவாக்கப்படும் கோட்பாடுகளே வரலாற்றுக்குப் பொருந்துவனவாக அமையும். தூண்டல், துலங்கல் முறை, திருகு வட்டச்சுருள் முறை, காலவட்ட முறை ஆகியனவே பெண்ணியக் கோட்பாடுகளுக்கு இன்று அடித்தளமாக அமைவதையும் மறந்துவிடக்கூடாது. பெண்கள் ஆணடிமைகள் என்ற ஆதிக்க கோட்பாடுகள் நீக்கப்பட்டு சமுதாயத் தேவை, சுற்றுச்சூழல், பெண்ணியப் பண்புகள் ஆகியவற்றினடிப்படையில் வரலாறு உருவாக்கப்படுதல் வேண்டும்.

# 3. பாரம்பரிய இந்தியச் சமுதாயம்

## (TRADITIONAL INDIAN SOCIETY)

**முன்னுரை:** ஆண்வழிச் சமுதாயம் - பல்வேறு இனம் - வேதங்கள் - திருமணம் - இந்துக்கள் - உட்பிரிவுகள் - கடவுளை வணங்கும் முறை - பெண்ணினச் சிந்தனைகள் - விதவைகள் - வாரிசுரிமை - ஆட்சிமுறை - கல்விக் கொள்கைகள் - கோவில்கள்

பாரத பூமி பழம்பெரும் பூமி. பலகாலம் நீடித்திருக்கக்கூடிய, பலரையும் கவரக் கூடிய பல பண்பாட்டுத் தன்மைகளையும் உள்ளடக்கியது. இந்தியப் பண்பாடு ஒரு கலப்புப் பண்பாடு. அப்பண்பாட்டில் பலதரப்பட்ட பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள் வழக்காறுகள், மரபுகள் விரவிக்கிடக்கின்றன. இந்தியச் சமுதாயத்தின் எண்ணற்ற உணர்வுகள், அதன் மக்களின் நடத்தை, நடையுடை பாவனை ஆகியன தனித்தன்மை கொண்டவை. மரபுகள் பலவற்றை உள்ளிட்ட இந்தியச் சமுதாயம் வேற்றுமைகள் பலவற்றுள் ஒற்றுமை காணும் பாங்கினை உடையது. இந்தியப் பண்பாடு சில முக்கியக் கூறுகளையும் உள்ளடக்கியது. பலதரப்பட்ட தன்மைகளுக்கு இலக்கான இந்தியப் பண்பாடு, அஹிம்சை, பொறுமை, சகிப்புத்தன்மை, அமைதி, உண்மை, எளிமை, மக்கள் தொண்டு, சுயகட்டுப்பாடு, ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கர்மம், மறுபிறவி, உலகியல் வாழ்க்கையிலிருந்து விடுப்பு போன்ற கருத்துக்களை நடைமுறையில் கொண்டு இலங்குகின்றது. பல கடவுள் கோட்பாட்டில் நம்பிக்கையுடைய இந்துச் சமுதாயம், உருவவழிபாடு, சடங்குகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. சாதிப்பாகுபாடுகள் உண்டு. ஆயினும் அனைவரும் இறைப்பற்று நிரம்பியவர்கள். சாந்தப்படுத்துதல் அல்லது அமைதிப்படுத்துதல் என்ற நோக்கில் இறைவனிடம் சரணடைதல் என்ற தத்துவம் பொதுவாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. கோட்பாடுகள், தத்துவங்களுக்கு மதிப்பளிக்கும் இந்திய திருநாடு பொருளியல் நோக்கிலும் பின்தங்கியதல்ல. இந்தியச் சமுதாயமானது தேக்க நிலையின்றி முன்னேறிச் செல்லும் ஆற்றல் கொண்டது. உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் மீது மதிப்பும் பற்றுதலும் காட்டவல்லது. எனவே இந்தியாவில் பல மரபுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியனவும் இந்தியாவில் காலப்போக்கில் உருவானவையே.

### ஆண் வழிச் சமுதாயம்

இந்தியச் சமுதாயத்தில் ஆண்வழிச் சமுதாய முறையே (Patriarchal) ஒரு மரபாகப் பின்பற்றப்பட்டுவந்துள்ளது. ஆரியர் வருகை முதல் 'குடும்பம்'



என்பது சமுதாயத்தின் அடித்தள அமைப்பாகக் கொள்ளப்பட்டிருந்தது. குடும்பமானது 'குலம்' அல்லது 'கிருஹம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டு ஆண்வழி முறையில் செயல்பட்டது. 'குலபதி' அல்லது 'கிருஹபதி' எனப்பட்ட தந்தையானவர் குடும்பத் தலைவராக விளங்கினார். இம்மரபு இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது. மேலும் கூட்டுக்குடும்ப முறையானது நடைமுறையிலிருந்தது. ஆனால் காலப்போக்கில் தொழில் அடிப்படையில் சமுதாயம் விரிவடைந்த போது தொழில் காரணமாக ஆண்கள் வேற்றிடங்களில் வாழ நேரிட்டது. அவ்வமயம் திருமணமான ஆண்கள் காலத்தின் கட்டாயத்தின்பேரில் கூட்டுக்குடும்பம் என்ற நிலையினின்றும் விட்டகல வேண்டியவராயிருந்தனர். தந்தையின் மரணத்திற்குபின் மூத்தமகன் குடும்பப் பொறுப்பை ஏற்று பேணிப் பாதுகாக்கும் முறை ஏற்பட்டது. அதுவும் மரபு சார்ந்ததாக ஆக்கப்பட்டது. 'பஞ்சமஹாயக்ஞம்' என்ற நோக்கில் ஐவகைக் கடமைகளும் மரபுவழியாகப் பின்பற்றப்பட்டன. ஆனால் மனிதப்பண்பாட்டு மாற்றங்களால் அவை மாறுபாடடைந்து விட்டன.

### பல்வேறு இனம்

இந்தியச் சமுதாயமானது இன்றிருக்கக் கூடிய வேகமான வளர்ச்சியை 18ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் பெற்றிருக்கவில்லை. ஆயினும் மாற்றங்கள் அல்லது வளர்ச்சி இல்லையெனக் கூறிவிட முடியாது. அவ்வளர்ச்சியானது படிப்படியான ஒன்றாக மாறியது. கிரேக்கர், பாரசீகர், இந்தோபார்த்தியர், குஷானர், சாகர், பஹலவர், அரேபியர், துருக்கியர், ஆப்கானியர், போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் போன்ற பலருடைய ஊடுருவல்கள் காரணமாக அம்மாற்றங்கள் உருவாயின. அவை மரபுகளாகப் படிப்படியாக வளர்ந்துள்ளன. நடைமுறை மாற்றங்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கும் பொருந்துமென்ற மரபு உருவாக்கப்பட்டது. இதற்குக் காரணம் இந்தியச் சமுதாயத்தின் மரபு சார்ந்த பண்பான மாற்றங்களை மதித்து ஏற்றுக் கொள்ளும் பண்பு ஆகும். மேலும் இந்தியாவைப் பொறுத்தவரை அரசியல் தன்மைகள், பொருளியல் வேறுபாடுகள் போன்றனவும் மரபுகளில் மாற்றங்களை உருவாக்கின. குறிப்பிட்ட சமயத்தையும், கடவுள்களையும் ஒரே முறையில் பின்பற்றுவதும் மரபே. சாதி, திருமணம், பெண்கள் நிலை போன்றவற்றில் மரபுகளின் தாக்கம் மிகுதியாகவே காணப்பட்டது.

தாராளத்தன்மையும், பழமையைப் போற்றும் பண்பினையும் கொண்ட இந்தியப் பண்பாட்டில் சீரான ஓட்டம் காணப்படுகின்றது. அது தொடர்ச்சியானதாக எப்போதும் குறுக்கீடுகள் அற்றதாக உள்ளது. காஷ்மீர் முதல் கன்னியாகுமரிவரை பரந்து நீண்டுகிடக்கும் பாரதத்தை, பரதனின் நாடு என்ற வகையில் பாரத் அல்லது பாரதவர்ஷம் என்பதும், சீனா தவிர பிறபகுதிகளை உள்ளிட்டதாக விளங்கும் ஜம்பூத்வீபம் என்றழைக்கப்படுவதும், பதஞ்சலி தமது மகாபாஷ்யத்தில் ஆர்யவர்த்தம் என்றழைத்ததுமான இந்தியத் திருநாட்டினை இந்தியா, இந்துஸ்தானம் என்றழைப்பதும் மரபாகவே உள்ளது.

### வேதங்கள்

வேதங்களில் பழமையானதும் 10 மண்டலங்களையுடைய

1017 சூத்திரங்களையும் உள்ளிட்டதுமான ரிக் வேதம் ஏறத்தாழ கி.மு. 1700 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. அதன் பத்தாவது மண்டலமான புருஷஷிக்தம், பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவுகள்பற்றிக் கூறுகின்றது. அவர்களுள் இறுதியானவர்கள் ஆரியரல்லாதோர் என ஒதுக்கி வைக்கப்பட்டனர். அதன் விளைவாக தாழ்த்தப்பட்டோர், தீண்டப்படாதோர் என்ற பிரிவு உருவாக்கப்பட்டு மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு 20ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றங்களால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. காலப்போக்கில் மேலே கூறப்பட்ட ஒவ்வொரு பிரிவுக்குமான குறிப்பிட்ட கடமைகள் அல்லது பணிகளை ஒதுக்கும் மரபு தோன்றி அது பல கிளைகளை உடைய சாதியாக உருவெடுத்து சமுதாயப் பிளவுகளுக்கு வழிவகுத்தது. பிராமணர் என்போர் சமுதாயத்தின் உயர்மட்டப் பிரிவினர் அவர்கள் பலவித உரிமைகளைத் தமது அறிவாற்றல் காரணமாகப் பெற்றிருந்தனர். சத்திரியர் அல்லது ராஜன்யர்கள் எனப்பட்ட பிரிவினர் வீரமும் ஆற்றலும் கொண்டவராயிருந்தனர். அவர்கள் மக்களின் வணிகராகவும், தொழில் பிரிவினராகவும் இயங்கினர். சூத்திரர் என்போர் ஏவல் பணியாளர்களாகச் செயல்பட்டனர். ஆரம்பத்தில் தொழில்கள் பரம்பரை வழக்கமானவையாக இல்லை. ஆனால் காலப்போக்கில் தொழில் பெருக்கம் காரணமாக குறிப்பிட்ட தொழிலைச் செய்பவர்கள் கொல்லர், தச்சர், வணிகர் என்ற பெயர்களைப் பெற்றார்கள். கலப்புத் திருமணம் அல்லது பிரதிலோமாத் திருமணம் என்பது அவர்களால் ஏற்கப்படவில்லை. எனவே தொழில் பிரிவினர் இறுக்கமடைந்து சாதி என்ற மரபுக்கு உட்பட்டுத் தமது தனித்தன்மையைப் போற்றலாயினர். இவையனைத்தும் சமுதாய அல்லது 'சமூக தர்மம்' என்னும் மரபு உருவாயிற்று. இந்நிலையில் மனிதர்களைத் தூய்மையானோர், தூய்மையற்றோர் என்ற இனப்படுத்தும் மரபு இந்தியச் சமுதாயத்தில் மட்டுமே காணப்பட்ட சாபக்கேடாகும். தந்தை வழிச் சமுதாயம் என்ற மரபுகாரணமாக பெண்களுக்கு மதிப்பும் உரிமைகளும் தரப்படவில்லை.

வேறெந்த நாடுகளிலும் காணாதவாறு இந்தியாவில் மட்டுமே, உபநிடதங்கள் மற்றும் தர்மசாத்திரங்கள் காலத்தில் மனிதனுடைய வாழ்க்கையை நான்கு பிரிவுகளாகப் பகுத்துப் பார்க்கும் மரபு இருந்தது. பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் பொருந்துமெனக் கூறப்பட்டிருந்த அம்மரபின்படி வாழ்க்கை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பிரம்மச்சாரியம் (திருமண வாழ்வுக்கு முந்திய நிலை), கிருஹஸ்தம் (குடும்ப வாழ்க்கை), வனப்பிரஸ்தம் (குடும்பத்திலிருந்து கொண்டே குறிப்பிட்ட வயதுக்குப்பின் சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்ளுதல்) சந்நியாசம் (குடும்ப வாழ்வைத் துறந்து முழுமையான துறவற வாழ்வைப் பின்பற்றுதல்) என்பனவே அவை. தர்மத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நிலையில் உள்ளவரும் குறிப்பிட்ட கடமைகளை ஆற்றவேண்டுமென்ற மரபும் வகுக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டது.

## கிருஹிய சூத்திரம்

கிருஹிய சூத்திரம் மூலம் வாழ்க்கையின் புனிதச் சடங்குகள் என்றும் 16 சமஸ்காரங்கள் உருவாக்கப்பட்டு அவற்றை ஒவ்வொருவரும் கைக்கொண்டு



நடக்கவேண்டுமென்ற மரபு எழுந்தது. அத்தகைய சடங்குகள் மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்புவரை பகுத்து வைக்கப்பட்டிருந்தன. அவை கீழ்காண்பவையாகும்.

1. கர்ப்பதானம் – கருக்கொள்ளல்
2. புருஷாவனா – ஆணைப் போற்றுதல்
3. சீமந்தோமநயனா – முடியிழத்தல்
4. ஜடாகர்மன் – உலக உரிமைகள்
5. நாமகரணா – பெயர் சூட்டல்
6. நிஷ்க்ரமனா – முதலில் வீட்டை விட்டு வெளியேறுதல்
7. அன்னபிரசன்னா – முதலில் உணவு ஊட்டுதல்
8. சூதகரனா – மொட்டையடித்தல்
9. கர்ண வேகா – காது குத்துதல்
10. வித்யாரம்பம் (அல்லது) அட்சர ஆரம்பம் – அறிவு புகட்டத் தொடங்குதல் அல்லது கற்கத்துவங்குதல்
11. உபநயனம் – நூல்புனைதல்
12. கேசாந்தம் – முடிவெட்டுதல்
13. சம்வர்த்தனா – படிப்புப் பயிற்சி
14. விவாகம் – திருமணம்
15. பாணிகிரஹணம் – ஒப்படைப்பு
16. அந்த்யேஷி – இறுதிச் சடங்கு

இவையனைத்தும் ஒவ்வொரு தனிமனிதனும் தன்வாழ்வில் பின்பற்ற வேண்டிய புனிதக்கடமைகள் என்ற மரபும் எழுந்தது. அவற்றைக் கைக்கொள்ளுதல் மூலம் பிறப்பு முதல் இறப்பு வரை சீரான, ஒழுக்கமான வாழ்க்கை வாழவியலுமென்ற நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. மேலும் இவற்றின் மூலம் மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வு உருவாக்கப்படும் என்று கருதப்பட்டது. அவற்றுக்குச் சமய அங்கீகாரமும் வழங்கப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவற்றை இன்றும் பலரும் மரபாகப் போற்றுகின்றனர். எடுத்துக்காட்டாக தொட்டிலிடல், பெயர்சூட்டல், மொட்டை அடித்தல், காதுகுத்துதல், திருமணம், இறப்புச் சடங்குகள் போன்றவற்றை மரபு வழியாக இந்தியச் சமுதாயப் பிரிவினர் கைக்கொள்ளுகின்றனர். இத்தகைய மரபுகள் இந்தியப் பண்பாட்டில் ஒரு படிநிலையாகக் கொள்ளப்படுகின்றன. பெற்றோருக்கு முக்கியத்துவமளித்தல், பரம்பரைகளுக்கு மதிப்பளித்தல், குடும்பச் சூழலுக்கு அனுசரித்தல் என்பன 'கிரஹ பந்தம்' அல்லது 'குடும்பத் தொடர்பு' என்ற மரபுகளாகக் கொள்ளப்படுகின்றன.

## திருமணம்

திருமணங்கள், அவற்றின் வகைகள், அவற்றினை நடைமுறைப்படுத்துதல், அதற்கான சடங்குகளை மேற்கொள்ளுவதும் மரபு சார்ந்தவையாயுள்ளன. திருமணத்தைப் பொறுத்தவரை ஒருவனுக்கு ஒருத்தி (Monogamy) என்பதே பொதுவான மரபாயிருந்தது. இன்றும் இருந்து வருகின்றது. அரச குடும்பத்தினர், உயர்குடியாளர் போன்ற பிரிவினரிடையே பலதார மணம்(Polygamy) பரவிக்கிடந்தது. ஒரு பெண் பலரை மணந்து (Polyandry) கொள்ளும் வழக்கத்தைத் தெரிந்து வைத்திருந்தனர். ஆனால் அது பெரிதும் நடைமுறை வழக்கிலில்லை. அனுலோமா மற்றும் பிரதிலோமாத் திருமணங்கள் அதாவது உட்பிரிவு மற்றும் வெளிப்பிரிவினருடனான திருமணங்கள் (Endogamous and Exogamous) குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கேற்பத் தீர்மானிக்கப்பட்டன. திருமணங்களிலும் பலதரப்பட்ட சடங்குகளையும் பின்பற்றும் மரபுகள் எழுந்தன. அவை கீழ்க் காண்பனவாயிருந்தன.

| | | |
|---|---|---|
| வாக்தானா | – | நிச்சயதார்த்தம் |
| வரவார்மா | – | முறையாக ஒப்புக்கொள்ளல் |
| கன்யாதானா | – | பெண்ணை ஒப்புக்கொடுத்தல் |
| விவாஹஹோமா | – | திருமண வேள்வி |
| பாணிக்கிரஹண்ம் | – | கையைப் பற்றுதல் |
| ஹிருதய அபார்கா | – | மனதைத்தொடுதல் |
| ஸப்தபடி | – | ஏழு வளமைப்படிகள் |
| அஸ்மரோக்னா | – | அம்மி மிதித்தல் |
| சூர்யாவலோகனா | – | சூரியனைப் பார்த்தல் |
| துர்வதரிசனம் | – | அருந்ததி பார்த்தல் |
| த்ரிராத்ரவிரதா | – | மூன்று இரவு உண்ணாவிரதம் |
| சதுர்த்திகர்மா | – | நான்காம் நாள் சடங்கு |

திருமணங்கள் முழுநிறைவு பெற்றதாய்த் திகழ அதன் முழுப்பயனையும் எட்ட மேலே கூறப்பட்ட திருமணச்சடங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற மரபு நியதியாக்கப்பட்டுள்ளது. திருமணங்களில் பண்டைத்தமிழர் களவு மற்றும் கற்பு மணங்களைக் கொண்டிருந்ததைப் போல் அசுர, பைசாச, ராட்ச மற்றும் கந்தர்வ மணமுறைகள் பின்பற்றப்பட்டன. இன்று அந்த மரபுகள் மாற்றப்பட்டு காதல் திருமணம், சீர்திருத்த திருமணம், சமய அடிப்படையிலான திருமணங்கள் என்த் திரிபு பெற்றுள்ளன. விவகாரத்து என்ற மரபு காணப்படவில்லை. சில நேரங்களில் விதவைத் திருமணங்கள் உண்டெனினும் அவை பொதுவாக நடைபெறவில்லை. வேதகாலத்தில் குழந்தைகளில்லாத விதவைகள் தம்து



கொழுந்தனைத் திருமணம் செய்து கொள்ளும் வழக்கமிருந்தது. அது நியோகா திருமணம் எனப்பட்டது. குப்தர்கள் காலத்திலும் 'ஸேவாமா' என்ற முறைப்படியான திருமணம், 'அனுலோ' என்ற கலப்புத் திருமணம் இருந்தது. இன்றும் கலப்புத் திருமணங்கள் ஆதரிக்கப்படுகின்றன. விதவைகள் மறுமணம் ஏற்கப்படுகிறது. சதி அல்லது உடன்கட்டை ஏறும் வழக்கம் நிறுத்தப்பட்டுவிட்டது. சாரதாச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னர் பால்ய விவாகம் தடுக்கப்பட்டது. இன்று ஆணின் திருமண வயது 21 என்றும் பெண்ணின் திருமண வயது 18 என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் திருமணம் என்பது வாழ்க்கையில் புனிதச் சடங்காகக் கொள்ளும் மரபாக உள்ளதென்பது வெளியாகின்றது.

பின் வந்த இந்திய ஆட்சியாளர்கள் காலத்திலும் திருமணம் முக்கியமான சடங்கு என்ற மரபு காணப்பட்டது. ஒரு மன்னர் பல பெண்களை மணந்து கொண்டாலும் ஒருவருக்கே மகிஷி அல்லது மாதேவி என்ற பட்டம் சூட்டப்பட்டது. அரச குடும்பத்தில் திருமணமான பெண்கள் தேவியர் எனப்பட்டனர். 'பரிவிருக்தி' என்றும் திருமணமான பெண் மதிப்பு மிக்கவளாயிருந்தாள். அரசகுடும்பத்தைச் சார்ந்திராத பெண்கள் 'வாமினி' எனப்பட்டனர். போர்களில் வெற்றி பெற்றதால் பெறப்பட்ட பெண்கள் 'பலகலி' எனப்பட்டனர். எனவே திருமணம் என்பது எல்லா கால கட்டங்களிலும் புனிதத்தன்மை கொண்ட சடங்காகக் கொள்வது மரபு. எனவே இந்நிலையில் இந்தியாவில் எண்வகைத் திருமணங்கள் நடைமுறையிலிருந்தன என்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. பிரம்மா | – | சீதனத்துடன் தன்இனப்பெண்ணை ஒரு ஆடவன் கொள்ளுதல். |
| 2. தைவா | – | ஒரு குடும்பஸ்தர் தனது பெண்ணை வேள்வி இயற்றும் பிராமணருக்கு சம்பளமாகக் கொடுத்தல். |
| 3. ஆர்ஷா | – | சீதனமாக பசு மற்றும் எருதுகளை பெண் விலையாகத் தருதல். |
| 4. பிராஜ பத்யம் | – | தந்தை தன் பெண்ணை எவ்விதமான சீதனமும் தராமல் கட்டித்தருதல். |
| 5. காந்தர்வம் | – | ஆண், பெண் இருபாலரின் சம்மதத்துடன் நடைபெறுவது. இது கள்ளத்தனமானது என்றும் கருதப்படுகிறது. |
| 6. அசுரம் | – | விலை கொடுத்து வாங்குதல் |
| 7. ராட்சசம் | – | கட்டாய மணம் |

8. பைசாசம் – தூங்கிக் கொண்டிருக்கும் பெண்ணை குடிபோதை அல்லது வெறியில் தூக்கிச் சென்றுவிடல்.

மேலே கண்டவற்றுள் முதல் நான்கும் மரபுரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை. பின்னர் குறிப்பிடப்பட்ட நான்கினையும் புத்தியுடைய மேலோர் ஏற்பதில்லை.

இந்நிலையில் இல்லறத்தினர் கைக்கொள்ள வேண்டிய நித்திய கடமைகள் எனக் கூறப்பட்ட 'பஞ்சமகாயக்ஞம்' என்பனவும் மரபு அடிப்படையிலுள்ளவையாகையால் தெரிந்து கொள்ளவேண்டும்.

1. பிரம்மயக்ஞா – வேதங்கள் ஓதி உலகநாயகனான பிரம்மாவைத் துதித்தல்.
2. பிதிர்யக்ஞா – நீத்தோர் வழிபாடு. குறிப்பிட்ட பிதிர் கடன்களை ஆற்றுதல்.
3. தேவயக்ஞா – புனித வேள்வி, புனித நீராட்டு போன்ற வழிகளில் இறைவனைத் தொழுதல்
4. பூதயக்ஞா – பறவைகள், மிருகங்கள், ஆவிகள் ஆகியவற்றை தானியங்கள் மற்றும் பிற உணவுப் பொருட்களைத் தூவி வணங்குதல்
5. புருஷயக்ஞா – விருந்தோம்பும் நோக்குடன் ஆண்களை வணங்குதல்

இவற்றை தினமும் மும்முறை உஷக்காலம் அதாவது அதிகாலை, மதியம், மற்றும் சூரிய அஸ்தமனம் ஆகிய காலங்களில் செய்ய வேண்டுமெனப்பட்டது. இன்றளவும் இது ஒரு மரபாக குறிப்பிட்ட பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## இந்துகள்

இந்துக்களின் பெரும்பான்மையோர் தனது அகம் மற்றும் புறத்தோற்றங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுவதில் ஈடுபாடு காட்டுவதும் மரபாகும். அனைத்து சாதியினரும் 'கூழானாலும் குளித்துக்குடி' என்ற முதுமொழிக்கேற்ப குளிப்பதற்கும் முக்கியத்துவம் நல்குகின்றனர். மாசுபாடுகள், சுத்தமற்றவை போன்றவற்றால் ஏற்படும் தீமைகளைக் களையவும், அசைவ உணவு மற்றும் இயற்கைக்கு மாறான உணவு ஆகியவற்றால் ஏற்படும் உபாதைகளையும் நீக்க அன்றாடம் குளித்தல் ஒரு வழக்காக மாறியுள்ளது. வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்தலென்பது பெண்களின் தலையாய கடமை.

## உட்பிரிவுகள்

இந்துக்களுள் பல உட்பிரிவுகள் காணப்படினும் சைவப்பிரிவினர், வைணவப் பிரிவினர் என்ற பகுப்பு மரபுவழியாக வந்த சமயப்பிரிவுகளாகும்.



சிவனை வழிபடுவோர், விஷ்ணுவை வழிபடுவோர் என இருவகையினரான அவர்களுள் சிவனைப் பின்பற்றுவோர் 'லிங்கதாரிகள்' எனவும் விஷ்ணுவைப் பின்பற்று போர்'நாமதாரிகள்' எனவும் அழைக்கப்படுவது மரபு. லிங்கம், நாமம் ஆகிய இரண்டும் மறைபொருட்களாக சிவனையும், விஷ்ணுவையும் குறிக்கப் பயன்படுகின்றன. நாமமிடும் பிரிவினர் நெற்றி சாய்வான நிலையில் இரு கோடுகளையும் இரண்டுக்கும் மத்தியில் நேரான கோடு ஒன்றையும் இட்டுக் கொள்ளுகின்றனர். அது ஒரு குறியீடாகக் கருதப்படுகின்றது. அதேபோல் சைவப்பிரிவினர் நெற்றி முழுவதும் திரு நீற்றினைப் பூசி பட்டையிடுகின்றனர். சிவலிங்கத்தை தாயத்துக்குள் பொதிந்து கையிலும், கழுத்திலும் அணிந்து கொள்கின்றனர். இதேபோல் சக்தி வழிபடுவோர் தம்மை சாக்தர்கள் என்றும், விநாயகரை வழிபடுவோர் தம்மை கணாபத்தியத்தை மேற்கொள்ளுவோரென்றும், சூரிய வழிபாட்டினர் சௌமாரப் பிரிவினர் என்றும், கந்தனை வழிபடுவோர் கௌமாரப்பிரிவினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். அதேபோல் விஷ்ணு வழிபாட்டினர் விஷ்ணுவை பத்து அவதாரமாக வணங்கியபோது சிவனை வழிபடுவோரும் அக்கடவுளை நடராஜர், பிச்சாடனர், லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி, பைரவர் எனப் பல பெயர்களில் தனித்தன்மை ஊட்டப்பட்டவராகக் கருதப்படுவதும் மரபேயாகும். இம்முறையில்தான் தாய்த்தெய்வமான சக்தியையும் இந்துக்கள் துர்க்கை, காளி, கொற்றவை, பழையோள், மஹிசாசுரமர்த்தினி என்ற பல அம்சங்களாக வழிபடுகின்றனர். அவர்களுக்கெனத் தனிப்பட்ட பொருட்களும் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவை மரபுவழியாக அவர்களைச் சுட்டும் நினைவுப் பொருட்களாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சங்கு, சக்கரம் விஷ்ணுவுடனும், திரிசூலம் சிவனுடனும், வேலாயுதம் முருகனுடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. கருடன், காளை, மயில் ஆகியன அவர்களுடைய வாகனங்களாகச் சுட்டப்படுகின்றன. அதேபோல் நவராத்திரி விழா சிவனுடனும், கந்தசஷ்டி முருகனுடனும், விஷ்ணுவுடன் பிரம்மோற்சவமும் தொடர்பு படுத்தப்படுகின்றன. இவையனைத்தும் மரபுவழியாகப் பின்பற்றப்பட்டு வருவனவாகும்.

மேலே கூறப்பட்டுள்ளவை தவிர 108 திவ்ய தேசங்கள் விஷ்ணுவுடனும், 12 ஜோதிர்லிங்கத் தலங்கள் சிவனுடனும், அறுபடை வீடுகள் முருகனுடனும் தொடர்புபடுத்தப்பட்டு தொன்றுதொட்டு இன்றுவரை பின்பற்றப்படுவதன் மூலமும் அத்திருத்தலங்களுக்கு யாத்திரை செல்வதென்பதும் மரபுசார் நிகழ்ச்சிகளேயாகும். இவையனைத்தும் நம்பிக்கை மற்றும் பற்றுதல்(faith) ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்தனவாகும். பழங்காலம் முதல் இன்றைய காலம்வரை குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றுதலும் ஒரு மரபாகவே கொள்ளப்பட்டது. மேலும் தந்தையின் சமயத்தைப் பின்பற்றுவது, குடும்பத்திலுள்ளோர் கடமையெனக் கொள்ளப்பட்டு நடைமுறையில் வந்துள்ளது. இதில் மாற்றங்கள் ஏற்படுவதில்லை. அதேபோல் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட தெய்வங்களுக்கான விழாக்களை, கோள்களின் இயக்க அடிப்படையில் தீர்மானித்தல் , அவ்விழாக்களின் ஒரே சீரான தொடர்ந்த வழியில் நடத்துவதும் மரபு வழியில் மேற்கொள்ளப் படுகின்றன. கால்கோள் விழா, விழாக்களை'நிகழ்த்துதல், துவஜமிறக்குதல்,

தேரோட்டம் போன்றவையனைத்தும் மரபு சார்ந்தவையே. இவற்றையொட்டிய நிலையில் ஒவ்வொரு வைணவ, சைவத் திருக்கோயில்களிலும் நித்திய பூஜைகள் மற்றும் காலக் கட்டளைகளை நிறைவேற்றத் தனிப்பட்ட குருக்கள் எனப்படும் அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கோவிலுள்ள தெய்வங்களுக்கான பணிகளை ஆற்றுவதிலும் ஈடுபடுகின்றனர். அர்ச்சகர்கள் என்போர் குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களாய் பரம்பரை உரிமையுடன் செயல்படுவதின் மூலம் அவர்கள் மரபுவழி சார்ந்தவர்கள் என்பது புலனாகும்.

புரோகிதர் என்றும் அர்ச்சகர்களே குறிப்பிட்ட குடும்பச் சடங்குகளை இயற்றவும் பயன்படுத்தப்படுகின்றனர். சாபங்கள், பாபங்கள், கோள்களினால் ஏற்படும் தீய விளைவுகள் ஆகியவற்றை நீக்க குறிப்பிட்ட மந்திரங்களை ஓதி யாகங்கள் செய்ய அவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். அது இன்று மட்டும் மேற்கொள்ளப்படுவதல்ல. தொன்றுதொட்டு நிகழும் செயலாகும். பஞ்சாங்கங்கள் வெளியிடல், அவற்றின்படி பலன் கணித்தல் ஆகியனவும் மரபுவழிப் பணிகளாகும்.. புரோகிதர்கள் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்தும் கோள்களின் இயக்கப்படி பஞ்சாங்கத்தின் மூலம் நல்ல நேரத்தைக் கணித்துப் பல நல்ல செயல்களில் ஈடுபடுகின்றனர். சமயச் சடங்குகள் தவிர சமூக நோக்கிலே பல நலன்களை மேற்கொள்ளும் பணியும் அவர்களுடையதாகவே உள்ளது.

வழிபாட்டின் போது கூறப்படும் மந்திரங்களும் வழிபாட்டு முறைகளில் ஒன்றாக இன்றும் மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய மந்திரங்களை உச்சரிப்பதால் மன ஒருமைப்பாட்டுடன் இறைவனைக் கட்டி தனது வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. கடவுளை வாழ்த்தவும், வேண்டவும் அவை பயன்படுகின்றன. “உலகம் கடவுளின் கட்டுப்பாட்டில் உள்ளது; கடவுள் மந்திரங்களுக்கு கட்டுப்பட்டவர்” என்ற நம்பிக்கையில் மந்திரங்கள் மற்றும் வேண்டுதல்கள் வாயிலாக இறைவன் வணங்கப்படுகின்றான்.

‘ஓம் நமச்சிவாயா’, ‘ஓம் நாராயணாய’, ‘ஓம் கந்தாய’ போன்ற தனித்தனி மந்திரங்கள் தனிப்பட்ட கடவுளர்களுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர கடவுள்களுக்கான காயத்திரி மந்திரங்களும் உள்ளன. இவையெல்லாம் இன்றெழுந்தவையல்ல பண்டைக்காலத்திலிருந்து வழிவழியாக வந்த சந்ததியனரால் வழங்கப்பட்டு வருவதாகும். மந்திரங்களைப் பயன்படுத்தும் முறையும் மரபுசார்ந்துள்ளது. ஆனால் இன்று தனிப்பட்ட காயத்ரி மந்திரங்களுக்கு மாறாக தமிழகக் கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்பட்டாலும் அவை பாரம்பரிய வழக்காற்றினடிப்படையில் எழுந்த ஒரு செயல் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

## கடவுளை வணங்கும் முறை

கடவுளைத் தொழும்போது சங்கல்பத்துடன் அதாவது ஆழமான சிந்தனையுடன் முறையான வழிகளில் வழிபாடுகளை ஆற்றவேண்டும்



என்பதும் மரபு வழியானதே. இத்தகைய ஆழ்ந்த சிந்தனை வயப்பட்ட வழிபாடு கெட்ட செயல்களைத் தவிர்த்து மனித மனத்தை நன்னெறிபுடன் செயல்பட வகை செய்கின்றது. இதேபோல் பூஜைகளும் கீழ்க்கண்டவாறு அன்று முதல் இன்று வரை கோயில்களில் நடந்தேறுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. ஆவாஹனம் | – | கடவுளை அழைத்தல் |
| 2. ஆசானம் | – | கடவுள் அமர இருக்கை வழங்குதல் |
| 3. ஸ்வாகதா | – | அவருடைய குறையற்ற வரவினைப் போற்றுதல் |
| 4. பாத்யா | – | நீர் வழங்கி பாதங்களைக் கழுவுதல் |
| 5. ஆர்க்யா | – | நீருடன், பூ, சுகந்தம், சந்தனப்பொடி ஆகியவற்றைத் தருதல் |
| 6. அஸமானியா | – | குறிப்பிட்ட வழியில் சுத்தம் செய்து கொள்ளல் |
| 7. மது–பார்கா | – | தேன், சர்க்கரை, மற்றும் பால் கலவையை பாத்திரத்தில் நல்குதல். |
| 8. ஸ்நானஜலா | – | நீர் வழங்கல் |
| 9. பூஸன் அபாரானஸ்யா | – | துணிகள், ஆடைகள், ஆபரணங்களை வழங்குதல் |
| 10. கந்தம் | – | சந்தனப்பொடி |
| 11. அக்ஷாடஸ் | – | தானியங்கள் மற்றும் குங்குமக் கலவை. |
| 12. புஷ்பம் | – | பூ |
| 13. தூபம் | – | நறுமணப்பொருட்கள் |
| 14. தீபம் | – | சூடம் காட்டல் |
| 15. நைவேத்தியம் | – | சமைக்கப்பட்ட உணவு, பழம், வெற்றிலை போன்ற உண்ணும் பொருட்களை வழங்கல் |

சடங்குகள், கிரியைகள் மேற்கொள்ளப்படும் முன் அவை நடைபெறும் இடங்களை கழுவி சுத்தம் செய்தலும் வழிவழியாக மேற்கொள்ளப் படுவதொன்றாகும். மேலும் திருமணம், சடங்கு, உபநயனம் போன்ற நற்காரியங்கள் நடப்பதை தெரிவிக்கும் அடையாளமாகவும், வரும் விருந்தினர் நிழலில் அமர்வதற்காகவும் வீட்டின் முன்பந்தல் அமைப்பதும் ஒரு மரபு.

நோன்புகளியற்றல், உண்ணாமலிருத்தல் போன்றன சில நலன்களைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. அவைகள் ஆண்கள், பெண்கள், அனைத்து இந்துக்கள் போன்ற பலராலும் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய விரதங்களை பெண்கள், ஆண்கள், முதியோர், முடமானவர்கள் போன்றோரும் மேற்கொள்ளுகின்றனர். அவையும் இறைவனைத் தன்பால் ஈர்த்து அவனை அமைதிப்படுத்தித் தனது தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவாக அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்கள் விரதநாட்கள். மாதந்தோறும் ஏகாதசி விரதம் மேற்கொள்ளப்படுகின்றது. மாசிமாதம் வரும் சிவராத்திரி முக்கிய விரததினம். விரததினத்தன்று மதியம் மட்டும் உணவருந்துகின்றனர். கோகுலாஷ்டமி, யுகாதி, சங்கராந்தி போன்றவையும் விரத நாட்களாகும். உடல்நலம் மற்றும் சுகாதார நோக்கிலும் இது வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும். இந்து சமயத்தின் அனைத்துப் பிரிவினரும் விரதமிருக்கின்றனர். மார்கழி மாதம் பெண்கள் பாவை நோன்பினை ஏற்கின்றனர். சமய அடிப்படையிலும், சுயநலநோக்கிலும் மேற்கொள்ளப்படும் இத்தகைய விரதங்கள் அல்லது நோன்புகள் மனவலிமையை ஊட்ட வல்லனவாகும். இத்தகைய நிலைகளில் போதை வஸ்துகள் ஆகியன தவிர்க்கப்படுகின்றன. பெண்கள் அதிக அளவில் பலதரப்பட்ட விரதங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டு விரதமேற்கின்றனர்.

மூடநம்பிக்கைகள் என்பனவும் தொன்று தொட்டு இன்றுவரை இந்தியாவெங்கும் நடைமுறையிலுள்ளவை. வாழ்க்கையுடன் அவை ஒன்றிவிட்டவை. நோய், தோல்வி, வீழ்ச்சி, தவறு போன்றவற்றுடன் கெட்ட சகுனம், விரும்பத்தகாத கனவு போன்றவையனைத்தும் மூடநம்பிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன. தும்மல், ஆந்தை அலறல், பல்லி சொல்லல், கண் இமை துடித்தல், பூனை குறுக்கே செல்லல், தவறான சொற்களைக் கேட்டல் போன்ற பல மூடநம்பிக்கைகள் விரும்பியோ, விரும்பாமலோ ஆண்கள், பெண்கள் என்ற பலராலும் ஏற்கப்படுகின்றன. பகுத்தறிவுக்கு ஒவ்வாத இச்செயல்கள் நற்காரியங்களில் ஈடுபடப்போகுமுன் வெறுக்கப்படுகின்றன. இதற்கெனத் தனிப்பட்ட பரிகாரங்களையும் செய்தல் என்பதும் நம்பிக்கையடிப்படையில் செய்யப்படுவது தொடர்ந்து நடைபெற்று வரும் செயலாகும்.

## பெண்ணினச் சிந்தனைகள்

பெண்ணினச் சிந்தனைகள் பற்றி அறிய முற்படும்போது திருமணமான பெண்களுக்கான விதிமுறைகளும் கோட்பாடுகளும் எவ்வாறு வழிவழியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். 20–ஆம் நூற்றாண்டுவரை பெண்கள் ஆண்களுக்கு அடுத்த நிலையில் கட்டுப்படுத்தப்பட்டே வைக்கப்பட்டு வந்தனர். கணவனுக்குக் கட்டுப்பட்டவளாகச் செயல்பட வேண்டிய பெண் தன்னுடைய கடமைகளையும், செயற்பாடுகளையும் அடக்கி வைக்கப்பட்ட நிலையிலேயே செயல்படுத்த வேண்டியவர்களாயிருந்தனர். 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்ற கோட்பாடு நிலைப்பாட்டுடன் இயங்கி வருகின்றது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், வயதான, குறைபாடுகளுடைய, தவறான நடத்தைகளை உடைய, மனம் மற்றும் உள்ள அளவில் குறைபாடுடைய, கூன், குருடு, செவிடு ஆகிய நிலைகளை உடைய, ஊனமானவர்களையும்



அவர்கள் நீக்கிவிட இயலாது. ஏனெனில் அவர்களுக்கு திருமண உறவை தவிர்க்கக் கூடிய சட்டங்களோ வழக்காறுகளோ வழக்கத்திலில்லை. திருமணமான பெண் தன்னுடைய கணவர் தவிர, மாமனார், மாமியார், நாத்தனார் போன்றவர்களின் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக உள்ளனர். தன்னுடைய வாழ்வை, நிலையைத் தீர்மானித்துக்கொள்ளும் உரிமை அவளுக்கு எப்போதும் தரப்பட்டதில்லை. விதவைகளின் நிலை அதன் காரணமாக மிக இடர்பாடுடையதாயிருந்தது. சமூகத்தில் அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாய், பாவப்பட்டவர்களாய்க் கருதப்பட்டனர். தம்முடைய குடும்பக் கடமைகளை ஆற்றுவதில் அக்கறையும், கவனமும் செலுத்த வேண்டியவர்களாய் இருந்தனர். தமது ஆற்றாமை, இயலாமை, கோபம், குற்றங்கள் ஆகியவற்றைத் தமக்குள் புதைத்து வைத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர். யாருடனும் சண்டையிடல் அல்லது வாதிடலிலிருந்து அவர்கள் தவிர்க்கப்பட்டார்கள். கணவரின் அனுமதியின்றி அவர் தம்முடைய விருப்பங்கள் மற்றும் தேவைகளை நிறைவு செய்து கொள்ளுவதனின்றும் தவிர்க்கப்பட்டனர். அவருடைய ஒப்புதலின்றி அவர்கள் தமது கடமைகளிலிருந்தும் வழுவக்கூடாது எனப்பட்டது. அனைவரையும் போற்றிப் பாராட்டல், உதவிசெய்தல் என்ற பண்புகளைக் கொண்டிருக்கவேண்டும். போற்றுதல்கள், பிறர்தரும் பொருட்கள் ஆகியவற்றிற்கு ஆசைப்பட்டுத் தம்மை இழந்துவிடுவதனின்றும் அவர்கள் தடுக்கப்பட்டனர். சுருக்கமாக அவர்களுடைய ஒழுக்கப் பண்புகள் பலநிலைகளிலும் வலியுறுத்தப்படுவது ஒரு நிலையாக விளங்கியது. அயலவர்களைப் பேசுவதனின்றும் அவர்கள் தடுக்கப்பட்டனர். பின் தூங்கி முன் எழும் பேதையெனப்பட்ட அவள் கணவனுக்குப் பின்னரே உணவருந்த வேண்டியவளாய் இருந்தாள்.

குடும்பச் செலவினங்களில் தலையிட அவளுக்கு உரிமையில்லை. மஞ்சள் பூசிக் குளித்து அன்றாடம் துவைத்து உடைகளை உடுத்த வேண்டுமென்பதும் காலந்தோறும் நடைமுறையிலிருந்து வந்தன. அதேபோல் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதும் அவளுடைய பொறுப்பாகும். கோபதாபங்கள், வெறுப்புகள் ஆகியவற்றிற்கு அவள் ஆளாகக்கூடாதென்று காலந்தோறும் மரபுவழியாக எண்ணப்பட்டது. விருந்தினரை வரவேற்று உபசரிக்க வேண்டிய பொறுப்பும் பெண்ணைச் சார்ந்ததாகவே இருந்தது.

கருத்தரித்த பெண்கள் அவ்வமயம் மேற்கொள்ளப்படவேண்டிய அனைத்து செயல்களிலும் தவறாது ஈடுபட வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட்டனர். கருவுற்ற பெண்கள் முன்னர் தேங்காய் உடைப்பது தவிர்க்கப்பட வேண்டுமெனப்பட்டது. கடுமையான அதிர்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சிகளைக் காணக்கூடாது; இவைபோன்ற கட்டுப்பாடுகள் அனைத்தும் மரபுவழியாக சுமத்தப்பட்டவையாகும். கணவரின் செயல்கள் அனைத்தும் மனைவிக்கு மகிழ்வூட்டக் கூடியவை என்று அவள் எண்ணவேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது; கணவனிடம் அவதூறான செய்திகளைக் கூறக்கூடாது. மேலும் அவனால் தரப்படும் இன்னல்கள் இடையூறுகளையும் எதிர்ப்புக்காட்டாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். கணவர் அயலூர் சென்றுவிட்ட நேரங்களில் அவள் வீட்டிலுள்ள பெண்களுடன்

படுத்துறங்கவேண்டும். இத்தகைய அடிமைத்தனமான வாழ்க்கை மனையாள் மீது சுமத்தப்பட்டிருந்தமையால் மனைவியில்லாத ஒரு மனிதன் முழுமையற்றவன் எனக் கருதப்பட்டான். இத்தகைய பண்புகள் சமுதாயத்தில் ஊறிய, புரையோடிய ஆனால் நீண்ட காலப் பண்புகள் என்பதை மறந்துவிடக்கூடாது.

## விதவைகள்

இந்நிலையில் மரபுவழியாகவே விதவைகள் நிலை இரங்கத்தக்க தாயிருந்தது. அவர்கள் சமூகத்தால் நிந்திக்கப்பட்டு, வெறுக்கப்பட்டு, அதிருப்திக்கு ஆளானவர்கள். அவர்கள் சமூக அந்தஸ்துகளின்றி மூலையில் முடங்கி கிடக்க வேண்டியவர்களாயிருந்தனர். சுமங்கலியாகத் தன்வாழ்க்கையை முடித்துக் கொண்டால் அது பெண் வாங்கி வந்த வரம் எனப்பட்டது. அதே காரணத்தால் விதவைப் பெண் ஒதுக்கப்பட்டாள். கணவனை இழந்த துன்பத்துடன், எவ்வித உரிமையுமின்றி, சொந்த விருப்பு வெறுப்புகளை மனத்திற்குள் புதைத்துக் கொண்டு இவ்வுலகிலேயே நரக வாழ்வைச் சந்திக்க வேண்டுமென்பது பாரம்பரியமாக மேற்கொள்ளளப்பட்ட செயல். பெண் தன் கணவனை இழந்ததும் பிற பெண்கள் அவளுடைய துக்கத்தில் பங்கேற்பதும், கூட்டாக அழுது அரற்றுவதும், ஆறுதல் சொல்வதும், பின்னர் விலகிச்செல்வதும் மரபுவழிப் பணிகளாகும். விதவைகள் தான் சாகும்வரை மௌனத்தின் பிரதிநிதியாகச் செயல்படுகின்றாள். கலர் புடவைகளை அணிதல், பொட்டிட்டு கொள்ளல், ஆபரணங்களை அணிவதனின்றும் நீக்கிக் கொள்ளுதல், கணவனால் அணிவிக்கப்பட்ட புனித முடிச்சான தாலியைக் கழற்றுதல் எனப்பல செயல்களுக்கு ஆளாகின்றாள். உலக பந்தங்கள், ஆசாபாசங்கள் ஆகியன அவருக்கு தடுக்கப்பட்டவையாகின்றன. மனிதாபிமானமற்ற சமூகக் கொடுமைகளால் அவர்கள் நடைபிணமான வாழ்க்கையை வாழ வேண்டியவர்களாயினர். ஆனால் இன்று பாரம்பரியக் கொடுமைகள் ஒடுக்கப்பட்டு விதவைகள் மறுமணம் சமுதாயத்தால் ஏற்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பண்டைக்காலங்களில் இல்லாத சதி அல்லது உடன்கட்டை ஏறல் என்ற கோட்பாடு இடையில் தோன்றி காலப்போக்கில் சமூக சீர்திருத்த இயக்கங்களாலும், சட்டத்தின்மூலமாயும் நீக்கப்பட்டுவிட்டது.

## வாரிசுரிமைகள்

தனக்குப்பின் தனது சொத்துக்களுக்கு வாரிசாக வேண்டுமென்பதற்காகவும், தம்முடைய அந்திம காலங்களில் தம்மைக் காப்பாற்றுவதற்கும், இறந்தபின் பிதிர்க்கடன்களை ஆற்றவும் தனக்கு ஆண்மகவு வேண்டுமென எண்ணிவருவது இந்துச் சமுதாயம். இது வழிவழியாக வந்த பாரம்பரியப் பண்பாட்டு வழக்கமாகும் ஆண்மகவு வேண்டுமென்பதற்காக அவர்கள் பல முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். அவற்றுள் ஒன்றுதான் தன்னுடைய வாரிசைத் தத்து எடுத்துக்கொள்ளல் என்பதாகும். பரம்பரை உரிமையாகப் பின்பற்றப்பட்டு வந்த தத்து எடுக்கும் கொள்கையானது. டல்ஹௌசியின் தத்து ரத்து அல்லது நாடிழக்கும் கொள்கை அல்லது அவகாசியிலிக் கொள்கை(Doctrine of Lapse) மூலம்



தடுக்கப்பட்ட போதிலும் பின்னர் அக்கோட்பாடு வலுவிழந்தது. தத்து எடுத்தல் என்ற பரம்பரை வழக்கம் இன்றும் நடைமுறையிலுள்ளது. இதுவும் பாரம்பரிய இந்து சமுதாயத்தின் அழியாத நினைவுச் சின்னமாகத் திகழ்கின்றது. அவ்வாறு தத்து எடுக்கப்பட்ட ஆண்மகவு தன்னுடைய இயல்பான தந்தையிடமிருந்து முழுமையாகப் பிரிக்கப்பட்ட அவருடைய குடும்பத்தினருடனும் எவ்வித தொடர்புமில்லாத வேற்று மனிதனாகவே ஆக்கப்படுகின்றது. தன்னுடைய சுவீகாரத் தந்தையை தனது தந்தையாகக் கொண்டு அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் தான் ஆற்ற வேண்டிய கடமைகளை ஆற்றுகின்றனர். அதனால் சுவீகாரத் தந்தையின் சொத்துக்கும் தத்து எடுக்கப்பட்ட அக்குழந்தை உடமையாளராகின்றது. மேலும் தத்து எடுத்தல் என்பதும் ஒரு சமய மற்றும் சமூகச் சடங்காகவே மேற்கொள்ளப்படுகின்றது. அதே நேரம் பெண் சிசுக்களை கொலை செய்யும் சமுதாயத்தில் பெண்களை தத்து எடுத்தல் என்பதும் நடைபெறவில்லை. ஆனால் பெண்களின் முக்கியத்துவமும் பெருமைகளும் உணரப்பட்டுவிட்ட இன்றைய சமுதாயத்தில் பெண் பிள்ளைகளைத் தத்து எடுத்தல் என்பது ஏற்புடையதாக ஆகிவிட்டது.

சொத்துரிமையிலும் பாரம்பரிய உரிமைகள் பின்பற்றப்படுகின்றன. எத்தனை ஆண்மக்கள் இருந்தாலும் தந்தையின் சொத்தில் அவர்களுக்கு சமமான பங்கு உண்டு. ஆனால் பெண்களுக்கு அந்த உரிமை காலங்காலமாக தவிர்க்கப்பட்டு வந்தது. ஆனால் இன்று சட்டமே தந்தையின் சொத்தில் பெண்களுக்கு உரிமையுண்டு என்று கூறுகின்றது. இது பெண்களின் மேம்பாட்டிற்கு அரசுகள் தரும் மதிப்பு எனில் மிகையாகாது. தந்தையும் சொத்து விஷயத்தில் தன் மகன்களுக்கிடையில் எவ்விதமான பாகுபாட்டையும் காட்டுவதில்லை. ஆண்மக்கள் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தாலும் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையை மேற்கொண்டாலும் சொத்துரிமை ஆண்மக்களின் பாரம்பரிய பரம்பரை உரிமையாகும்.

## ஆட்சிமுறை

ஆட்சியிலான அரசு இயலிலும் பாரம்பரியமும் பரம்பரை முறையும் செயல்பட்டன. வர்த்தகமும் வாணிபமும் முன்னே, கொடி பின்னே என்று இந்தியாவுக்குள் வர்த்தகம் செய்ய வந்த அந்நிய ஆதிக்கவாதிகளான ஐரோப்பியரான ஆங்கிலேயர் வருகைக்கு முன்னர் பண்டைக்காலம் தொட்டு பேரரசர்களும், சிற்றரசர்களும் பாரத பூமியில் அரசோச்சினரென்பது வரலாறு காட்டும் உண்மை. வேதகாலத்திலேயே ராஜன், ஏக்ராட், சாம்ராட், விராட், சர்வபூமா போன்ற பெயர்களில் மன்னர்கள் அழைக்கப்பட்டதற்கான சான்றுகள் உண்டு. காலப்போக்கில் மன்னர்கள், மாமன்னர் ஒளிசான்ற பயனுள்ள வகையில் அரசுபிரிந்தனவென்பதற்கான ஆதாரங்களும் உண்டு. "மன்னன் மனிதப்பிறவி என்ற கருத்தும், மானிடனெனினும் தெய்வங்களால் நேசிக்கப்பட்டவன்" என்ற கருத்து பரம்பரையாகக் கொள்ளப்பட்டது. அதனால்தான் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்" என்றும் போக்கு எழுந்தது. மக்கள் நலனே தமது நலன் என்றும் மக்கள் நலனிலேயே தனது நலன் அடங்கியிருக்கின்றதென்ற கருத்தும் மன்னர்களிடையே காணப்பட்டதால்தான்

"முறைசெய்து காக்கும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்ற நியதி எழுந்தது. இதன் மூலமாக அரசபதவியின் தெய்விக உரிமைக் கோட்பாடு நிலைநாட்டப்பட்டது. மன்னனை "இறைவன்" என்றும் அவனுடைய உறைவிடத்தை "கோ இல்" என்றும் அழைத்தனர்.

அரசு மற்றும் அரசியலுடன் தொடர்புடையதாய் வேதகாலத்திலேயே சபா, சமிதி, விதாதா போன்ற அமைப்புகள் இருந்தன. பின்னர் மௌரியர் ஆட்சிக்காலத்தில் அமைச்சர், புரோகிதர், தானைத் தலைவர், யுவராஜா ஆகியோரை உள்ளிட்ட 'மந்திரி பரிஷத்' என்ற அமைப்பு எழுந்தது. இதனால் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் கூறுவதுபோல் "சக்கரமொன்று தானாக இயங்காது; எனவே மன்னர் அமைச்சர்களை அமர்த்தி அவர்களது கருத்துக்களை அறியவேண்டும்" என்ற முறை தோன்றிற்று. அது அமைச்சரவை ஏற்பட வகை செய்தது. சங்ககாலத் தமிழகத்திலும் நாற்பெருங்குழு, ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற அமைப்புகள் காணப்பட்டனவென்று இலக்கியங்கள் பகர்கின்றன. ஐம்பெருங்குழுவில் மக்கள் பிரதிநிதிகள், ஆசான், நிமித்திகர், மருத்துவர், அமைச்சர்கள் ஆகியோர் இருந்தனர். எண்பேராயத்தில் கரணத்தியலவர், கருமக்காரர், ககைச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளி மறவர் ஆகிய பிரிவினர் காணப்பட்டனர். இதுபோன்ற அமைப்புகளை இஸ்லாமியப் பேரரசியாளர்களும் கொண்டிருந்தனர். இந்து சாம்ராஜ்யம் கண்ட சிவாஜி எட்டு உறுப்பினர்களைக் கொண்ட 'அஷ்ட பிரதான்' என்ற அமைச்சரவையைக் கொண்டு செயல்பட்டார். பீஷ்வா, அமத்தியர், மந்திரி, சுமந்த், சச்சிவ், பண்டிட்ராவ், சேனாபதி, நியாயதிஸ் ஆகிய எண்மர் அஷ்டப் பிரதானிகளாயிருந்தனர். காலப்போக்கில் ஆங்கிலேயர் ஆதிக்கம் மன்னராட்சிதனை மட்டுப்படுத்தி மேலை நாட்டு முறையிலான அலுவலர்கள் படிநிலையிலான, பிரதிநிதிகளடங்கிய, பாராளுமன்ற அமைப்பினை உருவாக்கியது. மன்னர்கள் இந்திய விடுதலைக்குப்பின், பெயரளவில் ஊதியமும், மானியமும் பெற்று வந்தனர். இறுதியில் மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டதுடன் மன்னர்களின் இறுதி எச்சமும் மறைந்துவிட்டது. ஆண்டான் அடிமை என்ற பேதமும் மறைந்துவிட்டது.

## கல்விக்கொள்கை

பண்டை காலந்தொட்டே கல்வியை இந்தியர் போற்றினர். கல்வி அவர்களால் கைக்கொள்ளப்பட்டது. ஆரம்ப காலத்தில் கல்வியானது. பிராமணர்களுக்கு மட்டுமே உரியதென்று என்ற நிலை இருந்தது. கல்வியறிவில் மேம்பட்ட அவர்களுடைய தன்மை சமூகமட்டத்தின் மேற்படியில் அவர்களை அமர்த்தியது. குருகுலங்கள் மூலம் கல்வி தரும் முறை ஏற்பட்டது. முகமதியர் காலத்தில் மக்தப்புகள், மதர்ஷாக்கள் என்ற கல்வியமைப்புகள் உருவாக்கப்பட்டன. தத்துவம், சமயம், கணிதம், வானியல், சோதிடம் போன்றவற்றிலும் மேம்பட்டிருந்த இந்தியக் கல்வி மேலைநாட்டுக் கல்வியமைப்புடன் ஒப்பிட்டு நோக்குகையில் மாறுபட்ட தன்மை கொண்டதாகவே விளங்கியது. நாலந்தா, தட்சசீலம், போன்றவை மிக



உன்னதமான பல்கலைக்கழகங்களாகத் திகழ்ந்தன. காஞ்சி, பாகூர், ஷோனங்களின் போன்ற இடங்களிலிருந்த கடிகைகள் என்றும் கல்வி நிலையங்கள் மேம்பட்டிருந்தன. இடைக்காலத் தமிழகத்தில் மடங்கள் எழுந்து அவை கல்விக் கூடங்களாகச் செயல்பட்டன. அவையனைத்தும் பாரம்பரியகல்விக்கே முக்கியத்துவம் நல்கின. இந்நிலையானது 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து மாற்றத்திற்குள்ளாயிற்று.

கிறித்துவ சமயப் பரப்பு ஊழியர்களின் முயற்சி, ஆங்கிலேயரின் கல்விக் கொள்கை, ராஜாராம் மோகன்ராய் போன்றோர்காட்டிய பேரார்வம், தாமஸ்கேரி, மார்ஷ்மன், டேவிட்ஹேர், யார்டு முதலானோருடன் ஏசு சபையினரும் கல்விச் சாலைகள் நிறுவினர். பம்பாய் வில்சன் கல்லூரி, சென்னை கிறிஸ்துவ மற்றும் லயோலா கல்லூரிகள், திருச்சி புனித சூசையப்பர் கல்லூரி, பாளையங்கோட்டை ஷேவியர் மற்றும் ஜான் கல்லூரிகள், சென்னை பச்சையப்பன் கல்லூரி ஆகியன எழுந்தன. 1854–ல் வெளியிடப்பட்ட வுட் அறிக்கை 'இந்திய கல்விக்கான மகாசாசனம்' எனப்பட்டது. 1882–ல் உருவாக்கப்பட்ட ஹன்டர் குழு, 1917–ல் உருவாக்கப்பட்ட சாட்லர் குழு, 1940–ல் உருவான இராதாகிருஷ்ணன் குழு 1952–ல் உருவாக்கப்பட்ட டாக்டர் இலட்சுமண சுவாமி குழு, 1956–ல் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழு, 1966–ல் வெளியிடப்பட்ட கோத்தாரி அறிக்கை ஆகியன கல்வித்துறையில் காணப்பட்ட பாரம்பரிய முறைகளில் தேவைப்பட்ட மாற்றங்களை உருவாக்கின. அறிவியல், தொழில் நுட்பம், கணினி போன்றவை. இன்று மேம்பாடுற்றுள்ளன. அத்துடன் பெண்கல்விக்கெனத் தனிப்பட்ட பள்ளிகள், கல்லூரிகள் நாடெங்கும் உள்ளன. பொறியியல், கல்வியியல், மருத்துவம், சட்டவியல் போன்றவற்றிலும் இருபாலரும் இணைந்து பயிலும் முறை உள்ளது. இவ்வாறு பாரம்பரியக் கல்வி படிப்படியான மாற்றங்களை பெற்றுள்ளது. இன்று உலகத்தரத்துக்கு இணையாக விளங்குகின்றது.

## கோயில்கள்

இந்தியப் பாரம்பரியப் பண்பாட்டில் மற்றொரு முக்கிய இடத்தை வகிப்பது கோயில்கள். வழிபாட்டுத் தலங்களான கோயில்கள் இல்லாத ஊரே இந்தியாவில் இல்லையெனலாம். இந்தியப் பண்பாட்டிற்கும், சிற்பக்கலைகளுக்கும் உறைவிடமாகத் திகழக்கூடிய கோயில்கள் பாரம்பரிய நோக்கில் பலதரப்பட்ட மரபுகளை உள்ளடக்கியுள்ளன். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழியானது கோயில்களின் தன்மையைப் பறைசாற்றும். தொன்று தொட்டு இன்றுவரை கோயில்களை எழுப்புவது, புனருத்தாரணம் செய்தல், சடங்குகளை நிறைவேற்றல், வழிபாடுகளியற்றல், விழாக்கள் நடத்துதல் என்பன வழிவழியாக பக்தர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் முறைகளாகும். இறைவனின் அருளைப் பெறுதல் வேண்டி தானம் வழங்கல், கோயில்களுக்கு மானியங்கள் வழங்கல் போன்றனவும் மரபுசார்ந்தவைகளாக உள்ளன. ஆற்றின் கரைகள், குளக்கரைகள், மலை உச்சி, தனித்த அமைதியான இடங்கள் நெடுஞ்சாலை ஓரங்கள் ஆகியவற்றில் கோயில்களைக் கட்டும் மரபு காணப்படுகின்றது.

கிராமங்களிலும் கிராமதேவதைகள் மற்றும் சிறு தெய்வங்களுக்கான கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. கிராமத் தெய்வங்கள் காக்கும் கடவுளெனக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தமிழகத்தில் அய்யனார் வழிபாடு தொன்றுதொட்டு நிகழ்ந்து வருகின்றது. சொரிமுத்து அய்யனார், கருக்குவேல் அய்யனார், அருஞ்சுனைகாத்த அய்யனார் போன்றவை அதற்குச் சான்று பகரும். கோவில்களில் புரோகிதர்களாகப் பெண்கள் நியமிக்கப்படும் முறை இந்து முறை வழக்கிலில்லை.

கோயில்களின் அமைப்புகளிலும் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்படுகின்றன. கொடிமரம், பலிபீடம், முகமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை, பரிவார தேவதைகள் போன்றவை எவ்வாறு அமைக்கப்படவேண்டுமென்ற விதிமுறைகள் உள்ளன. கருவறையிலுள்ள தெய்வத்தினைத் தவிர்த்து தெற்குநோக்கி தட்சிணாமூர்த்தியையும், வடக்குநோக்கி துர்க்கையையும், வடகிழக்கு மூலையில் நவக்கிரகத்தை பிரதிஷ்டை செய்வதும் மரபு வழியில் வந்ததொன்றாகும். சிற்ப சாஸ்திரங்கள் மற்றும் ஆகமவிதிகளுக்குட்பட்டு கோயில்களை அமைப்பதும் தெய்வங்களை பிரதிஷ்டை செய்வதும் பாரம்பரியமானவை. ஒவ்வொரு நாளிலும் நாள்வழிபாடுகள் ஆற்றப்படுதல், பூஜை நேரங்களில் பல உபசாரங்களை மேற்கொள்ளல் ஆகியன மரபுவழி சார்ந்தவையே. மாதாந்திர மற்றும் ஆண்டுக்கான விழாக்கள், கோள்கள் மற்றும் விண்மீன்களின் இயக்கத்தை யொட்டி நடைபெறுகின்றன. அவ்வமயம் கால்கோள் விழா நடத்துதல், புறப்பாடு, வீதியுலா திருமஞ்சனம், தேரோட்டம் போன்ற நிகழ்ச்சிகள் மரபுவழியாக ஏற்கப்படுகின்றன. மேலும் கோவில்களுடன் தல விருட்சங்களையும், தீர்த்தங்களையும் தொடர்பு படுத்துதல் மரபு. ஆகம விதிகளுக்கு உட்பட்டு குறிப்பிட்ட ஆண்டுகட்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடத்துவதும் மரபுதான். கடவுள் விக்ரகத்தை குறிப்பிட்ட கல்லைத் தேர்ந்தெடுத்து செய்து நிலைநாட்டுவதும், வீதியுலாவரும் தெய்வ படிமங்களை பஞ்சலோகத்தால் செய்வதும் மரபு.

பக்தர்களிடம் இறையுணர்வை எழுப்ப வேண்டுமென்ற நோக்கில் தினந்தோறும் இறைவனுக்கு ராஜஉபசாரம் அல்லது தேவ உபசாரம் மேற்கொள்ளப்படுகின்றது. கோவில்களின் பொருளாதார நிலைக்கு ஏற்ப இத்தகைய உபசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சிவன், விஷ்ணு மற்றும் பிற கடவுள்களைப் பிரதானமாகக் கொண்ட கோயில்களுக்கும் இது பொருந்தும். இவை ஆகமமுறைப்படி அமைகின்றன. சிவனைப் பொறுத்தவரை காரணாகமம், காமிகாமம், வீராகமம், ஸிந்தாகமம், வதுலாகமம், காலோத்தாராகமம், சுப்ரபேதாகமம், மகுடாகமம் மற்றும் வியாமளாகமம் என்ற ஒன்பது ஆகமுறைகள் பின்பற்றப்படுகின்றன. விஷ்ணுவைப் பொறுத்தவரையில் வைகானஷ ஆகமம், பஞ்சராத்ர ஆகமம் ஆகியன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆகமங்கள், மந்திரங்கள், தினசரிச் சடங்குகள், யந்திரங்கள் மற்றும் படிமக்கலை ஆகியன பற்றி எடுத்தியம்புகின்றன. படிமங்களைப் பொறுத்தவரை உத்தம, மத்திம மற்றும் அதமதசதாளங்கள் என்ற முறைகள் மரபு வழியாகப் பின்பற்றப்படுகின்றன.



நித்திய கட்டளை பூஜைகளாக கீழ்க்கண்டவற்றை மேற்கொள்ளும் மரபு கோயில்களில் பின்பற்றப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| விஷ்வரூபம் | – | காலை 5.30 மணி |
| உதயமார்த்தாண்டம் | – | காலை 6.45 மணி |
| காலசந்தி(திரி) | – | காலை 7.45–8.15 மணி |
| ஒத்தக்கட்டளை | – | காலை 8.20 மணி |
| உச்சிக்காலம் | – | மதியம் 12.30 முதல் 12.45 மணி |
| சாயரட்சை | – | மாலை 5.00 முதல் 6.00 மணி |
| அர்த்தசாமம் | – | இரவு 9.15 முதல் 9.30 மணி |
| ஏகாந்தம் | – | இரவு 9.35 மணி |

இவை கோயில்களின் வருவாய், முக்கியத்துவம் போன்றவற்றிற்கேற்ப மாற்றப்பட்டாலும் தவிர்க்கப்படுவதில்லை. மேலும் கோயில்களில் அவற்றின் தன்மைக்கேற்ப கீழ்க்காணும் வகையான விளக்குகளும் காட்டப்படுவதும் மரபாகும். அலங்கார தீபம், சர்ப்ப தீபம், புருஷா மிருகதீபம், மயில் தீபம், யோனி தீபம், புலி தீபம், குதிரை தீபம், சிம்ம தீபம், அன்ன தீபம், சேவல் தீபம், சக்தி தீபம், கும்ப தீபம், ஆமை தீபம், மேரு தீபம், நட்சத்திர தீபம், கற்பூர தீபம் என்பனவே அவை.

ஒவ்வொரு பூஜையின் போதும் முன்னர் கூறப்பட்டவாறு பலதரப்பட்ட உபசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுள் ஷோடஷோபசாரம் என்பது பல பெரிய கோயில்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அவை கீழ்க்கண்டனவாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆவாஹனம் | – | வரவேற்பு |
| 2. | ஸ்தாபனம் | – | அமர்த்துதல் |
| 3. | பாத்யம் | – | பாதங்களைக் கழுவுதல் |
| 4. | ஆக்மனா | – | பானங்கள் தருதல் |
| 5. | ஆர்க்யா | – | தலையில் நீர் தெளித்தல் |
| 6. | அபிஷேகம் | – | நீராட்டல் |
| 7. | வஸ்திரம் | – | ஆடையணிவித்தல் |
| 8. | கந்தம் | – | சந்தனம் பூசுதல் |
| 9. | தூபம் | – | சாம்பிராணி காட்டுதல் |
| 10. | தீபம் | – | விளக்கு |
| 11. | நிவேதனம் | – | உணவளித்தல் |

12. புஷ்பாஞ்சலி – மலர் வழங்கல்
13. ஹோமம் – புகையூட்டல்
14. கீதம் – இசை
15. நர்த்தனம் – நடனம்
16. உத்வாகனம் – அர்ப்பணம்

இறைவன் மனிதவடிவிலுள்ள மன்னருக்குச் சமமானவர் என்ற நோக்கில் அவரைப் பெருமைப்படுத்தப்படும் வகையில் இத்தகைய உபசாரங்கள் பாரம்பரிய மரபுகளாக செயல்பட்டு வருகின்றன.

மேலே கூறப்பட்டுள்ளவைப் போல் திருவிழாக்களும் பாரம்பரியம் மிக்கவையாய் உள்ளன. திருவிழாக்கள் இந்துக்கோயில்களில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பாரம்பரிய நிகழ்வுகளாகும். இந்து நாட்காட்டி சார்பில் திருவிழாவிற்கான நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. 27 நட்சத்திரங்களுக்கேற்ப அவை தீர்மானிக்கப்பட்டு கொண்டாடப்படுவது வழக்கமாகும். கோள்களின் இயக்கத்திற்கேற்ப நல்ல நேரங்கள் கணிக்கப்படுகின்றன. திருவோண நட்சத்திரம் வைணவர்களுக்கும், திருவாதிரை சைவ சமயத்தினருக்கும் புனிதமானவையெனக் கொள்ளப்படும் மரபும் உள்ளது.

இராமனது முடிசூட்டு நாள், ஆயர்பாடிக் கண்ணன் ஆயர்களை கடும் மலையிலிருந்து காப்பாற்றிய திருநாள், நரகாசுரனை விஷ்ணு வதம் செய்த நாள் என்ற நோக்குகளில் தீபத் திருநாளான தீபாவளி அக்டோபர்–நவம்பர் மாதங்களில் இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகின்றது. துர்க்கா பூஜை என்னும் தசரா என்பது அக்டோபர் மாதம் பத்து நாட்களுக்கு கொண்டாடப்படும் ஒரு இந்தியத் திருவிழாவாகும். போர்த்தெய்வமான துர்க்கை அசுரனை அடக்கி வெற்றி கொண்ட விழாவாக இது கொண்டாடப்படுகிறது. கிருஷ்ணனுடன் தொடர்புடைய ஹோலி என்றும் வண்ண விழா பிப்ரவரி மார்ச் மாதங்களில் கொண்டாடப்படுவது மரபாக உள்ளது. விநாயக சதுர்த்தி என்னும் தேசிய திருவிழா ஆகஸ்டு,செம்டம்பர் மாதங்களில் கொண்டாடப்படுகிறது. இதுவும் விநாயகர் விக்கினங்களைத் தீர்ப்பவர் என்ற முறையில் உருவாக்கப்பட்டது. ஆகஸ்டு–செப்டம்பர் மாதங்களில் கேரளத்தில் கொண்டாடப்படும் ஓணம் திருவிழா. விஷ்ணு வானவர் மாபலிச் சக்கரவர்த்திக்கு மோட்சமளித்ததைப் பெருமையுடன் கொண்டாடும் விழாவான இதுவும் கேரள மரபுப்படி கொண்டாடப்படுகின்றது. திருச்சூர் பூரம்விழா, ஆந்திராவில் பிரம்மோற்சவம், ஒரிசாவில் பூரி ஜகன்னாதர் விழா, மதுரை சித்திரை திருவிழா போன்றவையும் மரபுசார்ந்த திருவிழாக்களாகும்.

திருவிழாக்களை கொண்டாடுதல் என்பது பாரம்பரியப் பழக்கமாகும். காலம், இடம், சூழல் போன்றவற்றிற்கேற்ப அவை நடைபெறுகின்றன. அதே நேரத்தில் அவை சமூகப் பண்பாக மேற்கொள்ளப்படும் ஒரு மரபுச்செயல் என்பதையும் அது சமயத்துடன் தொடர்புடைய தென்பதையும் நாம்



மறந்துவிடக்கூடாது. திருவிழாக்களில் குறிப்பிட்ட கடவுள்கள் முதன்மைப் படுத்தப்படுகின்றனர். அதனால் அக்கடவுள்களின் உருவஅமைப்புகள் மரபு வழியாக உருவாக்கப்பட்டு செல்வாக்கடைகின்றன. அத்துடன் விநாயக சதுர்த்தியின் போது பாரம்பரிய முறைப்படி விநாயகர் உருவங்களைச் செய்வதும், கார்த்திகை மற்றும் தீபாவளி காலங்களில் அகல் விளக்குகளை மரபுப்படி உருவாக்குவதும் இந்தியாவின் பாரம்பரியத் தன்மைக்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன. இதே போன்றுதான் பலவித கடவுள்களை வடிவமைப்பதிலும் ஒரே சீரான பாரம்பரிய முறை செயலில் உள்ளது.

பாரத பூமி விவசாயத்திற்கு முக்கியத்துவம் தரக்கூடிய நாடு விவசாயமானது மரபு வழியாக மேற்கொள்ளப்படுகின்றது. பிரிக்கப்பட்டுத் தூண்டப்பட்டு, மரபு அடிப்படையிலான வாரிசுரிமை காரணமாக பலரால் மேற்கொள்ளும்போது நிலத்தைப் பண்படுத்துதல், உழவிடல், உரமிடல், நீர்பாய்ச்சுதல், களையெடுத்தல், கதிரறுத்தல் போன்ற பல நிலைகளிலும் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்படுகின்றன. விவசாயம் பாரம்பரிய இந்தியச் சமுதாயத்தை நமக்கு உணர்த்தும் மற்றொரு பணியமைப்பாகும். பெருமளவில் பழைய முறையிலேயே விவசாயம் மேற்கொள்ளப்படுவதும் பாரம்பரிய விவசாய முறைக்கு மட்டுமின்றி இந்தியா பாரம்பரிய மரபு வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் தரும் நாடு என்பதும் விளங்கும்.

இந்தியக் கோயில்களும் இந்தியப் பாரம்பரியத்தின் நினைவுச் சின்னங்களாக அமைகின்றன. திராவிட, வேசரா அமைப்பு முறைகளில் அவை உருவாக்கப்பட்டாலும் அவை கோபுரங்கள், விமானங்கள் போன்ற வற்றைக் கொண்டுள்ளன. அவை பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டுகளாகும். அவற்றில் அமைவுமுறை அதாவது ஏகதள, துவிதள, திரிதள விமானங்கள், மூன்று நிலை, ஐந்து நிலை, ஏழு நிலை விமானங்கள் போன்றவை அமைக்கப்படும்போது அவற்றில் இந்திய புராணக் கதைகள் சார்ந்த சிற்பங்களை கதை சிற்பங்களாக அமைக்கும் முறை உள்ளது. அல்லது குறிப்பிட்ட கடவுள்களின் பிறப்பு மற்றும் திருவிளையாடல்களை சின்னமாக அமைப்பது வழக்கம். கோவில் தூண்களின் அமைப்பு, விமானங்களில் கர்ணம், கூடு, கிரீவம் போன்ற அமைப்புகளை உருவாக்குவதும் மரபு வழியான ஆகமங்கள் சார்ந்துள்ளன. பல்லவர்கள், சோழர்கள், சாளுக்கியர்கள், இராஷ்டிரகூடர், பாண்டியர், விஜயநகர ஆட்சியாளர், ஹொய்சாளர், நாயக்கர் போன்றவர்களின் கலைப்படைப்புகளைக் காண்கையில் அவை மரபு வழியாகப் படிப்படியாக வளர்ந்து வந்தவை என்பது கண்கூடு.

## இசை

இசை, நடனம் போன்றவையும் இந்தியப் பாரம்பரியக் கலைப்படைப்புகளாகும். தொன்று தொட்டு இசையும் பாடலும் இணைக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகார காலத்திலேயே 11 வகை ஆடல்கள் இருந்தனவெனக் கூறும்போது ஆடற்கலையானது இந்தியப் பண்பாட்டின் தொன்மைக்கலை என்பதை உணரலாம். மாதவி 11 வகையான ஆடல்களிலும் கற்றுத் தேர்ந்து தலைக்கோலி என்ற பட்டம் பெற்றவள் என்பதன் மூலம் பெண்ணின் தன்மையை நாம் நன்கறியலாம். அதேபோல் கொடுகட்டி,

குடக்கூத்து, குரவைக்கூத்து, பாவைக்கூத்து, மரக்கால்கூத்து போன்ற கூத்துக்களும் இன்றும் வழக்கிலுள்ளன. சிவன் பிரபஞ்ச நடன கர்த்தாவாகக் கொள்ளப்படுகின்றார். சரஸ்வதி, நாரதர் போன்றோர் வீணையுடன் இணைத்துக் காட்டப்படுகின்றனர். தமிழக சமயக் குரவர்கள் நால்வருள் அப்பர் என்ற திருநாவுக்கரசரும், ஞான சம்பந்தரும் இசைவல்லுநர்களாவர். ஆழ்வார்களின் பன்னிரு திருமுறைகளும், சைவநாயன்மார்களின் பதிகங்களும் இசையூட்டிப் பாடத்தக்கனவேயாகும். கோவில்களில் உள்ள தூண்கள், கோபுரங்கள் ஆகியவற்றிலும் நாட்டிய வகைகளான கரணங்கள், வாத்தியக் கருவிகள் போன்ற சிற்பங்கள் உள்ளன. கூத்து, ஆடல், நடனம், நாடகம் ஆகியவற்றுடனும், இசை பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. குடுமியான் மலையிலுள்ள இசைக் கல்வெட்டு இசையின் பெருமையை விளக்கும். சப்தஸ்வரங்கள் கர்நாடக இசையின் அடித்தளங்களாகும். சங்கீத மும்மூர்த்திகளின் செயல்கள் தமிழகத்தின் இசையை மேம்படச் செய்துள்ளன. பண்டைய பாரம்பரியங்களைப் பின்பற்றியே அருணாசலக் கவிராயர் தமது ராமநாடக கீர்த்தனையையும், கோபாலகிருஷ்ண பாரதியார் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளையும் பாடியுள்ளனர். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தும் இசைக்கலையின் பாரம்பரிய மேம்பாட்டிற்குச் சான்று பகர்வதாகும். சாமவேதம் இசையோடு கூடியதென்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

கொட்டு, யாழ், முழவம், குழல், பறை, டக்கை, துடி, மிருதங்கம், தபேலா, சரோட், வீணை, ஸிதார், சாரங்கி, நாதஸ்வரம், உடுக்கை, பம்பை, மத்தளம், தில்ருபா, ஷெனாய், ஜலதரங்கம் போன்ற தோல், துளை மற்றும் நரம்புக் கருவிகள் இந்தியாவின் பாரம்பரிய இசைக்கு மெருகூட்டும் கருவிகள்.

## நடனம்

நடனம் அல்லது நாட்டியம் என்பதும் இந்தியாவின் பாரம்பரியக் கலைகளில் ஒன்று. தீபகற்பத்தென்னிந்தியாவில் பக்திச்சுவை, முகபாவம் ஆகியன நிரம்பப் பெற்றுள்ள பாரநாட்டியம் புகழ்பெற்றுள்ளது. இது சமயம் மற்றும் அரசவைத் தொடர்புடையதாயிருந்தது. ... இசைக்கேற்ப முகபாவங்களுடன் அங்க அசைவுகளையும் உட...கள் விழிப்புணர்வுக்... பின்பாட்டாளர், ஜதி, இசைக்கருவிகளின் ஒலி, ...தின் கட்டாயம்' என்பது பரத நடனக்கலைஞர் ஆடுவார். தனிப்பட்ட ப...ர்களின் மேம்பட்ட தன்மை புகழ் பெற்றுள்ளனர். பரதநாட்டியக் கல... எனவே கால ஓட்டத்தில் பாவனைகளும், ஆடை அலங்காரங்களும், ஆ...ள்ளனார்கள் என்பதைக் பாரம்பரியத்திற்கே உரியன. மேலும் அவை பெண்...

கதக்களி என்பது கேரள மாநிலத்தின் ப... ...ாவில் பெண்கள் நாடகமாகும். தனிநபர் நடிப்பாற்றலை வெளிப்படுத்தக்... பண்டைய காவியங்களான இராமாயணம், மகாபாரத... காட்சிகள் கதக்களி மூலம் நடித்துக்காட்டப்படுகின்றன... ...முதாயமாயிருந்தது. இதில் பங்கேற்கின்றனர். இரவில் தொடங்கி அதிக... , பலதாரமணம் அதிக நிகழ்ச்சி நிகழும். அக்கலைஞர்களின் ஒப்பனை... ...ந்த மேம்பட்ட நிலையையும் வித்தியாசமானவை. பேரிகை, முரசு போன்றவற்றி... தகப்பன்—மக்ள், சகோதர— கதகளி நடனங்கள் நடைபெறும்.



மேலே கூறப்பட்டவைபோல் அஸ்ஸாம் மற்றும் வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் மணிப்புரி நடனமும், பஞ்சாபில் பாங்ரா நடனமும், ஆந்திராவில் குச்சுப்புடி நடனமும் சிறப்புடையவை. மோகினியாட்டம், கரக ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற கிராமிய நடனங்களும் இந்தியக் கலாச்சாரத்தையும் பண்பாட்டினையும் வெளிப்படுத்தும் மரபுசார்கலைகளாகும். இவைபோல் கேரளத்தில் நடைபெறும் களரிபயத்து என்பதும் வீரம் சார்ந்த ஒரு கலையாகும்.

இந்தியத் திருநாட்டில் பல வேற்றுமைகள் காணப்பட்டாலும் கலைகளைப் போற்றுதல், மதிப்பளித்தல் என்பது இந்திய மாநிலங்களில் வாழும் மக்களிடையே மேற்கொள்ளப்படும் பொதுவானதாகும். அவை இந்தியாவில் வேற்றுமைகளுக்குள் ஒற்றுமையை உருவாக்கும் பண்புகளுள் ஒன்றாகும். தமிழகத்திலுள்ள கோலாட்டம், கும்மி, ஏற்றப்பாட்டு, நடவுப்பாட்டு போன்றவையும் சிதம்பரம் கோவிலில் பின்பற்றப்படும் 'நாட்டியாஞ்சலி', திருவையாற்றில் மேற்கொள்ளப்படும் 'ஆராதனை விழா' உதகமண்டலத்தின் 'கோடைவிழா' போன்றவை இந்தியப்பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு அடித்தளமாக உள்ளன.

இவைபோன்றே விளையாட்டுத்துறையிலும் கபடி, ஹாக்கி போன்றவை இந்தியப் பாரம்பரிய விளையாட்டுக்களாக எண்ணப்படுகின்றன. மேலும் விருந்தோம்பல், மதசகிப்புத்தன்மை, பொறுமை போன்ற தனிநபர் பண்புகளும் இந்தியரிடையே காணப்படும் பாரம்பரியப் பண்புகளாகும். பாரம்பரியம் மிக்க இந்துச் சமுதாயம் உலகளவில் இன்று மேம்பட்ட தொருநிலையைக் கொண்டுள்ளது.

...காஜி, மைத்ரேயி...

பிற்கால வே...
இல்லை. சமண, பெ...
நிலைக்குத் தள்ளப்ப...
சிறு குறிப்புகளும் க...
உரிமைகளையுடைய...
'பிரம்மவதினி' என...

மௌரியர்களு...

கி.மு. இ...
இடைப்பட்ட கா...
தென்பதைத் தெரி...
பரந்த மாற்றங்கள் ஏ...

# 4. வரலாற்றுக் காலங்களில் பெண்கள் நிலை

# (THE STATUS OF WOMEN THROUGH THE AGES)

**முன்னுரை** வேத காலம் - குப்தர்கள் காலம் - சங்க காலத்தில்பெண்கள் நிலை - பாண்டியர் காலத்தில் பெண்கள் நிலை - சோழர் காலத்தில் பெண்கள் நிலை - பல்லவர் காலப் பெண்கள் நிலை - விஜய நகரப் பேரரசின் பொது பெண்கள் நிலை - முகமதிர் காலத்தில் பெண்கள் நிலை

ஆதியந்தமில்லா காலவெள்ளத்தில் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன வரலாற்றுடன் தொடர்புடையவை. இந்நிலையில் கடந்த காலத்திற்கும், நிகழ்காலத்திற்கும் இடையேயான பாலமான வரலாறு எதிர்காலத்திற்கு மனித இனத்தை அழைத்துச் செல்லுகின்றது. எனவே கடந்த காலப் பெண்களின் நிலையினை உணர்ந்து கொண்டால் இக்காலத்தில் அவர்கள் பெற்றுள்ள வளர்ச்சியை நாம் உணரவியலும். இம்முறையின் வாயிலாக பெண்ணினத்தின் வளர்ச்சிக்கூறுகளை உணர்ந்து கொள்ளலாம். பெண்ணை ஒரு செழிப்புத் தெய்வம்(Fertility goddess) என்ற நிலை இன்று மாறிவிட்டது. அத்துடன் பாலினரீதியான வேலைபகுப்பு (Gender division of labour) முறை அப்போது காணப்படவில்லை. ஏனெனில் வீட்டுக்குள் செய்யும் வேலைகளே பெண்களின் வேலைகள் என ஒதுக்கப்பட்டிருந்தன. ஆகவே பெண்கள், ஆண்களைச் சார்ந்து வாழவேண்டிய நிலை காணப்பட்டது. ஆனால் இன்று நிலை மாறிவிட்டது. பெண்கள் சமூகத்தில் பல பணிகளில் பங்கேற்பது இன்றைய நிலையாகிவிட்டது. மேலும் பெண்கள் விழிப்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட காலமிது. 'மாற்றங்கள் காலத்தின் கட்டாயம்' என்பது வரலாறு புகட்டும் பாடம். இவற்றுடன் பெண்களின் மேம்பட்ட தன்மை பண்பாட்டு மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன. எனவே கால ஓட்டத்தில் பெண்கள் எவ்வாறிருந்து மாற்றங்களுக்கு உள்ளானார்கள் என்பதைக் காணலாம்.

## கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய இர் [illegible] ாவில் பெண்கள்

**வேதகாலம்**

வேதகாலச் சமுதாயமானது தந்தை [illegible] முதாயமாயிருந்தது. ஒருதாரமணம் பெரிதும் வழக்கிலிருந்தமையா[illegible], பலதாரமணம் அதிக அளவில் காணப்படாமையாலும் பெண்கள் பெற்றிரு[illegible]ந்த மேம்பட்ட நிலையையும் மதிப்பினையும் நாம் நன்குணரலாம். அதேபோல் தகப்பன்—மக்கள், சகோதர–



சகோதரி உறவுமுறையிலான திருமணங்களும் தடை செய்யப்பட்டிருந்தன. அதனாலும் பெண்களுக்குத் தரப்பட்ட மதிப்புதனை நாம் நன்கறியலாம். குழந்தை மணம் பற்றிய செய்திகள் இன்மையால் பெண்கள் வயதுக்கு வந்தபின்னர் திருமண ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது என்பது தெளிவு. அதனால் பெண்ணின் மேம்பட்ட தன்மையை நன்குணரலாம். திருமணமான பெண்கள் மதித்து போற்றப்பட்டார்கள். குழந்தைகள் அல்லது வாரிசு இல்லாத விதவைகள் மறுமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அது 'நியோகா' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. திருமணத்தின் வாயிலாக ஆண்வாரிசுதனைப் பெறுதல் பெருமளவு விரும்பப்பட்டது. மேல்மட்டப் பிரிவினரான பிராமணர்களும் சத்திரியர்களும் கீழ்நிலையிலுள்ள பெண்களை மணந்துகொள்வது அனுமதிக்கப்பட்டது. வைசியரும், சூத்திரரும், மேல்நிலை வகுப்புப் பெண்களைத் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப்பட்டது. இவை அநுலோமா, பிரதிலோமாத் திருமணங்கள் எனப்பட்டன. விபச்சாரம் போன்றவை வழக்கிலிருந்தன.

செல்வாக்குற்ற நிலையிலிருந்த பெண்கள், ஆண்களின் பாதுகாப்பிலேயே இருந்தனர். அவர்களுடைய சுதந்திர வாழ்வு காரணமாக அவர்களுடைய மதிப்பு மேம்பட்டிருந்தது. சபா, சமிதி போன்ற அமைப்புகளில் அங்கம் வைத்த அவர்கள் வேள்விச் சடங்குகளிலும் பங்கேற்றனர். ஆரம்பத்தில் ஐந்து பெண்களும் பின்னர் 20 பெண்களும் பலவித பாடல்களை இயற்றினார்கள். அவர்கள் கேளிக்கைகள், நடனங்கள், விருந்துகள் ஆகியவற்றில் பங்கேற்றனர். பிற்கால வேதகாலத்தில் பெண்கள் தம்முடைய அரசியல் அதிகாரங்களை விட்டுவிட வேண்டியவர்களாயிருந்தனர். காலப்போக்கில் அவர்களுடைய நிலையில் தாழ்வு ஏற்பட்டது. ஆன்மீக விவாதங்களில் அவர்கள் பங்கேற்றார்கள். அரசியர் முடிசூட்டும் விழாவில் பங்கேற்றார்கள். சுருங்கச்சொன்னால் அவர்களுடைய நிலை ஆண்களை விடக் கீழானதாக இருந்தது. வேதகாலம் மற்றும் பிற்கால வேதகாலத்தில் பெண் குழந்தைகள் விரும்பப்படவில்லை. பெண்கள் கல்வி மிக உயர்ந்த நிலையில் காணப்பட்டது. விஷ்வவர்கா, கோஷா, லோபமுத்ரா, அபாலா, கார்ஜி, மைத்ரேயி போன்றோர் படித்த பெண்களாயிருந்தனர்.

பிற்கால வேத காலத்திற்குப்பின் பெண்களின் நிலை மேம்பட்டதாக இல்லை. சமண, பௌத்த சமயங்களின் காலத்தில் அவர்கள் பிற்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் பற்றிய சிறு குறிப்புகளும் காணக்கிடக்கின்றன. பெண்கள் கல்வி பயிலும் உரிமைகளையுடையவர்களாய் இருந்தார்கள். பெண்மாணவியர் 'பிரம்மவதினி' எனப்பட்டனர்.

## மௌரியர்களுக்கும் குப்தர்களுக்கும் இடைப்பட்ட காலம்

கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பெண்கள்நிலை எவ்வாறிருந்த தென்பதைத் தெரிந்து கொள்ளல் அவசியம். அக்காலகட்டத்தில் விரிவான, பரந்த மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை. அவர்கள் ஆண்களைச்

சார்ந்தே வாழ்ந்தனர். அவர்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படவில்லை. தனக்கு வாரிசு இல்லையெனினும் விதவைகள் தமது கணவரின் சொத்துக்களைப் பெறும் உரிமையைப் பெற்றிருந்தார்கள். திருமணமான, திருமணமாகாத பெண்கள் சமயக் கடமைகளை ஆற்றுவதனின்றும் தடுக்கப்பட்டிருந்தனர். நெறிதவறுதல் மற்றும் கொலை போன்றவற்றிற்கு அவர்களுக்கும் கடும் தண்டனைகள் வழங்கப்பட்டன. மனுவின் தர்மசாஸ்திரப்படி உண்மையான நம்பிக்கையான மனைவி கடவுள் தந்த வரப்பிரசாதம் எனக் கருதப்பட்டாள். பிராமணர் ஒருவர் சூத்திரப் பெண்ணை மணந்து கொள்ளல் தடை செய்யப்பட்டிருந்தது. அரச குடும்பத்தினரிடையே சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் விரிவாக்கம் பெற்றது.

## குப்தர்கள் காலம்

குப்தர்கள் காலத்தில் பெண்கள் உயர்வான நிலையை எய்தினர். வாத்ஸ்யாயனர் குறிப்பிட்டபடி அவர்கள் 'ஆகவித்யா' என்ற 64 கலைகளிலும் மேம்பட்டவர்களாக இருக்கவேண்டுமென எண்ணப்பட்டனர். அவர்கள் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டியவர்களாய் இருந்தனர். மனைவியானவள் கணவனுக்குக் கட்டுப்பட்டு அடங்கியிருப்பது கடமையெனக் கொள்ளப்பட்டது. தனது கணவனை கடவுளாகக் கொள்ள வேண்டிய பெண்கள் அவனுடன் இணைந்து சமயச் சடங்குகள் மற்றும் கடமைகளை ஆற்ற அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் தம்மிடமுள்ள குறைகள் மற்றும் தவறுகளை தவிர்த்து பெரியவர்களை மதிக்க வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் பிறரிடம் பரிவுகாட்ட வேண்டியவர்களாயிருந்தனர். அன்பு பாராட்ட வேண்டிய நிலையிலிருந்தனர். பணியாளர்கள் மூலம் தமது தேவைகளை நிறைவு செய்து கொள்ள அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்ட அக்காலத்தில் குடும்ப பொருளாதாரத்தைக் கொண்டுசெலுத்தும் பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. குடும்பபொறுப்பு மற்றும் சுமைகளுடன் பலதரப்பட்ட பொருளாதாரப் பணிகளையும் ஆற்ற வேண்டியவர்களாயிருந்தனர். ஒழுக்கநெறி பற்றிய விதிகள் குறைவுடலாயின. கற்பு நெறி தவறியவர்கள் தவமியற்றல் மூலம் தமது பாவங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்ற நிலை காணப்பட்டது. விதவைகளைப் பொறுத்தவரை பழைய நிலையே நிலைத்துக் காணப்பட்டது. ஆங்கிலரசு போன்றோர் சதி அல்லது உடன் கட்டை ஏறுதலுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள். ஆங்கிரஸ், வியாக்ரபாதர் மற்றும் உசானா போன்றோர் கூறும்போது பிராமண விதவைகள் உடன்கட்டை ஏறத்தேவையில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர். விதவைகள் மறுமணம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் விதவைகளுக்கு சமூக முக்கியத்துவம் தரப்படவில்லை. கணிகையரும், நடனப் பெண்டிரும் அதிக அளவு உரிமைகளுடன் தமது நிலையைத் தக்க வைத்துக் கொண்டிருந்தனர். பெண்கள் சில உரிமைகளைப் பெற்றிருந்தாலும் அவர்களுடைய நிலை குறைவுடையதாகவே காணப்பட்டது. குப்தர்கள் காலத்திலும் பர்தா முறை காணப்படவில்லை.

பெண்களுக்கு ஸ்திரீதனம் என்ற நோக்கில் குறிப்பிட்ட அளவு சொத்தினை நகைகளாகவும் உடைகளாகவும் கொண்டிருந்தனர். சமணக்



கோட்பாடுகளின்படி பெண்கள் பானை செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிய வருகின்றது. சமய அடிப்படையில் அவர்கள் சில உரிமைகளைப் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒருபோதும் புரோகிதர்களாகச் செயல்பட்டதில்லை. இடைக்காலத் தொடக்கத்திலும் குப்தர்கள் காலந்தொட்டும் தந்திரக் கோட்பாடுகள் வளர்ந்தன. அதேநேரம் பெண்கடவுளரை வணங்குவதும் முக்கியத்துவம் பெறலாயிற்று. மஹிசாசுரமர்த்தினி என்ற பெண்தெய்வம் அப்போது செல்வாக்குப் பெற்றமையால் உண்மையை உணரலாம். அதேநேரம் பெண்கள் துறவுக்கோலம் பூண்டனர் என்பதற்கான ஆதாரங்கள் இல்லை. அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் எப்போதும் ஒதுக்கப்பட்ட நிலையிலேயே தனித்து வாழ்ந்தார்கள். அர்த்த சாஸ்திரம் மூலமாகவே அந்தப்புரமானது கடும் கட்டுக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததென்பது தெரிய வருகின்றது. கணவருடைய ஒப்புதலுக்கு மாறாக குடித்தல் மற்றும் கேளிக்கைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு மூன்று பணம் அபதாரமாக விதிக்கப்பட்டது. அவருடைய அனுமதியின்றி வீட்டைவிட்டு பிறபெண்களுடன் சென்றால் ஆறுபணம் அபதாரம் செலுத்த வேண்டியவர்களாயிருந்தனர். கணவர் தமது பெண்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தும் வழக்கம் பெரிய அளவில் இருந்தது. பெண் உரிமையும் கட்டுப்படுத்தப்பட்டதாயிருந்தாலும் அது முழுமை பெற்றதாக இல்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆனால் பெண்கள் போற்றிக் காக்கப்பட வேண்டுமென்பதில் அக்கறை காட்டப்பட்டது. அவர்கள் பாதுகாக்கப்பட்டு, உணவு அளிக்கப்பட்டு, ஆடை அணிகலன்கள் தரப்பட்டு எப்போதும் ஆதரிக்கப்பட வேண்டிய நிலையில் இருந்தார்கள். ஆனால் பெண்களை அடித்துத் துன்புறுத்தும் ஆண்கள் இயற்றும் வேள்விச் சடங்குகளை கடவுள் ஏற்றுக் கொள்வதில்லை என்ற கருத்தும் வேதகாலத்தில் நிலவியது.

பொதுவாகவே விதவைகள் அமங்கலமானவர்கள் என்ற அடிப்படையில் தவிர்க்கப்பட்டார்கள். அவர்கள் வாழ்க்கையும் வசதிகளும் மிகக் குறைந்தே காணப்பட்டன. ஆனால் இடைக்காலத்தில் சதி அல்லது உடன்கட்டை ஏறுதலால் அவர்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள். காலப்போக்கில் பல மாற்றங்கள் காணப்பட்டாலும் பொதுவாகவே இடைக்காலம் வரை அவர்கள் நிலை இரங்கத்தக்கதாகவே காணப்பட்டது.

## சங்ககாலத்தில் பெண்கள் நிலை

சங்க இலக்கியங்கள் பலவற்றிலும் அக்காலத்து மக்களைப் பற்றி தெரிந்துகொள்ளும் ஆதாரங்கள் உள்ளன. சங்ககாலத்தில் பெண்கள், ஆண்களுடன் சமஅந்தஸ்து உடையவர்களாய் இருக்கவில்லை. பெண்களின் தன்மைகள், குணவியல்புகள், கடமைகள், செயற்பாடுகள் ஆகியவை ஆண்களைவிட மாறுபட்டதாகவே இருந்தன. ஆனால் அவர்களது வாழ்க்கையானது கொடுமைமிக்கதாகவோ, மோசமானதாகவோ காணப்படவில்லையெனினும் அது இரங்கத் தக்கதாகவே காணப்பட்டது. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியன பெண்களுடன் இணைக்கப்பட்டிருந்த குணப்பண்புகளென தொல்காப்பியம் கூறுகின்றது. அவர்கள் பேச்சுகள் கட்டுப்படுத்தப்பட்டவையாயிருந்தன. அவர்கள் தமது அன்பு, காதல்

போன்றவற்றை சொல்மூலமாக இல்லாமல் செய்கைகள் வாயிலாக வெளிப்படுத்தினார்கள். அவர்கள் சமுதாயத்தை அண்டிவாழும் நிலையில் இருந்தனர். அவர்கள் போர்களில் ஈடுபடுவதின்றும் தடுக்கப்பட்டிருந்தார்கள். சொற்றிறம்பாமைதான் கற்பு எனக் கருதப்பட்டு கற்புநெறிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அது பெண்கள் கொண்டிருக்க வேண்டிய மதிப்புமிக்க சொத்து எனக் கருதப்பட்டது. குறுந்தொகையின் கூற்றுப்படி வயதுக்கு வந்த பெண்கள் கற்பினைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக வீட்டிற்குள் மூத்தோர் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டுமென்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு ஆண்களுக்கு ஆலோசனை கூறும் உரிமை தரப்படவில்லை. "தையல் சொல் கேளேல்" என்பது பொது நோக்காயிருந்தது. அவர்களுக்கு மனிதர்களின் வழிகாட்டிகளாகச் செயல்படும் உரிமையும் தரப்படவில்லை. "பெண் புத்தி பின் புத்தி" என்ற நிலையில் அவர்கள் தேக்க நிலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

திருமணமான பெண் கணவனுக்குக் கட்டுப்பட்டவளாக்கப்பட்டாள். கணவனைக் கண் கண்ட தெய்வமெனக் கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டாள். தெய்வம் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை என்ற நிலை காணப்பட்டது. சொல், செயல் மற்றும் எண்ணத்தில் அவர்கள் நேர்மையுடையவர்களாகச் செயல்பட வேண்டியவர்களாயிருந்தனர். ஒழுக்க பண்பும், கற்பு நெறியும் கொண்ட பெண்கள் பெருமளவில் மதிக்கப்பட்டார்கள். போற்றப்பட்டார்கள் நகர்புறங்கள், கிராமங்கள், சேரிப்பகுதிகளில் ஏழைப்பெண்களின் நிலை வருந்தத்தக்கதாகவே காணப்பட்டது. அவர்கள் பொழுதுபோக்கு, கேளிக்கைகளில் ஈடுபடப் பொதுவாக அனுமதிக்கப்பட்டார்கள். ஏழைப் பெண்கள் கூடை சுமந்து பொருட்களை விற்றும், வீடுகளில் வேலைக்காரிகளாக பணியாற்றியதுடன் கழனிகளிலும், தோட்டங்களிலும் ஆண்களுடன் செயல்பட்டு வந்தனர்.

உயர்தரக் குடும்பம் மற்றும் சாதியினைச் சார்ந்தவர்கள் வீட்டுக்குள் இருந்தார்கள். ஆனால் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படவில்லை. அனைத்து நிலைகளில் இருந்த பெண்களும் கோயில்களுக்குச் செல்லவும், தொழுகை செய்யவும் உரிமை பெற்றிருந்தனர். சிலப்பதிகாரம் கூறுவதைப்போல் விழாக்காலங்களில் அவர்கள் ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். வெளியிடங்களுக்குச் சென்று தமது நண்பர்களை அழைக்கும் வழக்கமும் கொண்டிருந்தனர். மாலைவேளைகளில் அவர்கள் பலதரப்பட்ட பொழுதுபோக்குகளில் ஈடுபட்டார்கள். பந்தாட்டம், கழங்காடுதல், ஊசலாடுதல் போன்றவை பொழுதுபோக்குகளாகக் காணப்பட்டன. பெண்களின் மரியாதையும் பெருமையும் கொண்டவர்களாக இருந்தார்கள். அவ்வையார், நப்பசலையார், நச்செள்ளையார், பெருங்கோப்பெண்டு, வெண்ணிக் குயத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பலர் இருந்தார்கள்.

திருமணத்திற்கு முன் தந்தை அல்லது சகோதரர், திருமணத்திற்குப்பின் கணவர், விதவைநிலையை அடைந்தால் தமது மகன்கள் கட்டுப்பாட்டிலும் வாழ்ந்து வந்தார்கள், அரசியார் முதல் கடைசியில் பணிபுரியும் நிலையிலுள்ள கடைசியர் வரை சொத்துரிமை கொண்டவர்களாக



இருக்கவில்லை. பொதுவாக அவர்களுக்கு சொத்துரிமை இல்லை. அவர்கள் படைவீரர்களாக போருக்குச் செல்லவில்லை. அமைச்சர்களாகவும், தூதவர்களாகவும் பணிபுரிவதின்றும் பெண்கள், சங்க காலத்தில் தடுக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அழகிய, வலிமையுள்ள, ஆற்றலும் வலிமையும் உள்ள பெண்கள் காவலர்களாக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அரசவையுடனும் மன்னர்களுடனும் தொடர்புகொண்டவர்களாய் "உரிமைச் சுற்றம்" எனப்பட்டார்கள். அரசனின் அந்தப்புரத்தில் எண்ணற்ற பெண்கள் காணப்பட்டார்கள். அவர்கள் "உரிமை மகளிர்" எனப்பட்டார்கள். சிலப்பதிகாரம் கூறியவாறு அவர்கள் பலதரப்பட்ட உரிமைகளைக் கொண்டிருந்தார்கள். பல்லாக்குகளில் செல்லுதல், அரசரின் பூங்காக்களுக்கு செல்லுதல், தங்கத்தினாலான வெற்றிலைப் பெட்டியைப் பயன்படுத்துதல், யாக் எருமையின் முடியிலான விசிறிகளைப் பயன்படுத்துதல் போன்ற உரிமைகள் அவர்களுக்கு இருந்தன.

பெண்களின் திருமண வயது 12 ஆகக் கருதப்பட்டது. திருமணத்திற்குமுன் காதலித்தல் என்ற வழக்கமும் காணப்பட்டது. அனைத்து நிலையில் இருந்த பெண்டிரும் தமது தலைக்கு எண்ணெய் வைக்கும் உரிமையைக் கொண்டிருந்தனர். அவர்கள் பூச்சூடியும் பலவித ஆபரணங்கள் மற்றும் உடைகளாலும் தம்மை அலங்கரித்துக் கொண்டனர். தங்கம், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள், மணிகள் ஆகியவற்றாலான ஆபரணங்களை அவர்கள் அணிந்தனர். கைவளை, தோடு, தொடி, குழை, மேகலை, சிலம்பு, நூபுரம், சுட்டி, மெட்டி போன்ற பலதரப்பட்ட அணிகலன்களை அவர்கள் அணிந்தனர். உமட்டியர் என்றும் உப்பு விற்பனையாளர்கள் இருந்தார்கள். களமர், கடைசியர், என்போர் கழனிகளில் செயல்பட்டார்கள். நெக்லஸ், செயின்கள், பதக்கங்கள் போன்றவை அவர்களுடைய பொருளாதார அடிப்படைகளைச் சார்ந்தவையாயிருந்தன. தமது உடம்பில் சிவப்பு, மஞ்சள் போன்ற வண்ணங்களைப் பூசி மெருகூட்டிக் கொண்டனர். அஞ்சனமையைத்தீட்டி தமது கண்களுக்கு அழகூட்டிக்கொண்டனர். பெண்கள் "தீப்பாய்தல்" என்ற செயல் மூலம் சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற செயலை மேற்கொண்டனர். தொல்காப்பியம் இதனைக் "கொண்டான் தலையொடு முடிந்த நிலை" எனக் கூறுகின்றது. எனவே கணவர் மரணத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளும் வழக்கம் சங்க காலத்திலேயே பெண்களிடம் இருந்ததென்பது தெளிவு. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியனின் இளம் மனைவி தனது கணவரின் மரணத்திற்குப்பின் சதிமூலம் தன் உயிரைமாய்த்துக் கொண்டார். பலதாரமணம், குழந்தை மணம் போன்றவை காணப்பட்டாலும் ஒருவர் பல ஆண்களை மணந்து கொள்ளும் வழக்கம் காணப்படவில்லை. பெண்கள் தம்மை ஞானியராக மாற்றிக் கொள்ள உரிமை பெற்றிருந்தனர். துறவறம் மேற்கொண்டனர். எடுத்துக்காட்டாக மணிமேகலையைக் கூறலாம்.

பெண்கள் இசை, நடனம் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டினார்கள். தம்மை அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்பம் காட்டினார்கள். குறிப்பாக மாதவி தன்னை பலவிதமான நறுமணப்பொருட்களில் அலங்கரித்துக் கொண்டாரென சிலப்பதிகாரம் கூறுகின்றது. யாழ்மீட்டல் அவர்களுடைய ஒரு சிறப்பம்சமாகும். அதேநேரம் அவர்களுக்கு தந்தையின் சொத்தில்

உரிமையில்லை. பெண்கள் ஆண்களைவிடக் கீழானவர்கள் என்ற நிலை இருந்தது. பலதரப்பட்ட வகையினராகப் பெண்கள் பகுக்கப்பட்டாலும் அவர்கள் பண்பாட்டின் நிலைக்களனாகத் திகழ்ந்தார்கள். மேலும் காளி, கொற்றவை, பழையோர் போன்ற பெண்தெய்வங்களும் வழங்கப்பட்டமை மூலம் பெண்களின் நிலையை உணரலாம். தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு பற்றிய ஏராளமான செய்திகள் கிடைக்கின்றன. அதேபோல் கற்புக்கு முக்கியத்துவம் தரக்கூடிய வகையில் பத்தினி வழிபாடு தமிழகத்தில் நிலவியிருந்த தென்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

## பாண்டியர் காலத்தில் பெண்கள் நிலை

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த நான்மாடக்கூடலாம் மாமதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு அரசோச்சியவர்கள் பாண்டியப் பேராட்சியாளர்கள். அவர்களுடைய ஆட்சியில் பெண்கள் நிலை எவ்வாறிருந்ததென்பதை வரலாற்று நோக்கில் உணர்தல் வேண்டும். அப்போது நாம் தமிழகத்தில் காலப்போக்கில் பெண்களின் தன்மையை புரிந்துகொள்ளவியலும். சமுதாயத்தில் பெண்களின் நிலை மதிப்புமிக்கதாய்க் காணப்பட்டது. ஆனால் பொது மற்றும் அரசியல் வாழ்வில் பெரியதொரு பங்கினைப் பெற்றிருக்கவில்லை. பெண்கள் பெருமளவில் மதிப்புமிக்க மனைவியராகத் திகழ்வதையே விரும்பினார்கள். அவர்கள் தம்முடைய பணிகள் செயல்கள் ஆகியவற்றைத் தமது கணவர் சார்ந்ததாகவே வைந்திருந்தார்கள்.

பெண்களில் பொருளில்லாதவர்கள் பின்தங்கியிருந்தார்கள். அவர்கள் குடிசைத்தொழிலிலும் பிற தொழில்களிலும் ஈடுபட்டார்கள். ஏழ்மை நிலையிலிருந்த பெண்கள் கூலிவேலையில் ஈடுபட்டார்கள். பாய் முடைதல், நெசவு, தயிர், மோர் விற்றல், உப்பு மற்றும் காய்கறிகள் விற்றல் போன்றவை அவர்களால் விற்கப்பட்டன. அவர்கள் வாழ்க்கை பொருள் நோக்குடையதாகவும் இருந்தது.

பொழுதுபோக்கு நிலையில் அவர்கள் இசை, நடனம் ஆகியவற்றில் ஈடுபட்டார்கள். அவர்கள் கல்விகற்க அனுமதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய சமய மற்றும் இலக்கிய உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ஆதாரங்களும் இல்லை. அவர்களுடைய உரிமைகள் மற்றும் இலக்கிய உணர்வுகளை வெளிப்படுத்தக்கூடிய ஆதாரங்களும் இல்லை. இருப்பினும் எண்ணற்ற கல்வெட்டுகள் வாயிலாகப் பெண்களும் கோவில்களுக்கு ஏராளமான தானங்கள் வழங்கினர் என்பதைக் காணும் போது அவர்கள் சொத்துடையவர்களாகவும் தானதர்மம் செய்வதில் ஈடுபாடு கொண்டவர்களாயிருந்தனர் என்பதும் வெளிப்படுகின்றது.

பெண்களுக்கு திருமணம் செய்து வைத்தல் என்பது பெற்றோரின் தலையாய கடமை எனப்பட்டது. ஏழைகளின் இல்லங்களில் திருமணச் சடங்குகள் எளிமையானவையாயிருந்தன. திருமணம் என்பது பலவித சடங்குகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. திருமணங்களின் போது உறவினர் வரவழைக்கப்பட்டு ஆசிர்வதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். திருமணம் செய்து கொண்ட ஆணும் பெண்ணும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். தீவலம் வருதல் போன்ற பண்டைய சடங்குகளும் நடைமுறையிலிருந்தன. மணமகன் வீட்டார் திருமணச் செலவினை ஏற்றுக் கொண்டனர். திருமணங்கள் பெற்றோரால் ஏற்பாடு செய்யப்பட்டன. பெண்கள் நல்ல கணவன் அமைய வேண்டுமென்பதற்காகப் பல நோன்புகளியற்றும் வழக்கமும் காணப்பட்டது.



பாண்டியர் காலத்தில் பெண்களை கோவிலுக்கு பொட்டுக்கட்டி அர்ப்பணிக்கும் வழக்கமும் காணப்பட்டது. தேவதாசி முறை வழக்கில் இருந்தது. அப்பெண்கள் இறைப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு இறைவனின் திருவீதி உலாக்களின்போது ஆடல்பாடல்களில் ஈடுபட்டனர். அப்பிரிவினர் நடனம், இசை ஆகியவற்றில் தேர்ந்தவர்களாயிருந்தனர். அவர்களுள் சிலர் செல்வக்குடியில் பிறந்தவர்களாகவும் இருந்தார்கள். ஆயினும் தம்மை இறைப்பணியில் இணைத்துக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு சமுதாயத்தில் பெரும் அந்தஸ்து தரப்பட்டது. அவர்களால் இசை, நடனம் ஆகியன போற்றப்பட்டன.

பெண்கள் அடிமைகளாகவும் விற்கப்பட்டனர். செல்வந்தர்களின் இல்லங்களிலும் அவர்கள் பணியாளர்களாகச் செயல்பட்டனர்.

## சோழர் காலத்தில் பெண்கள் நிலை

விஜயாலய வம்சாவழிச் சோழர் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் பல வழிகளில் மேம்பாட்டைக் கண்டது. அக்காலகட்டத்தில் பெண்களின் நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஏராளமான கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. அவர்களுடைய நிலையில் பலதரப்பட்ட மாறுபட்ட செய்திகள் கிடைக்கின்றன.

அடிமை முறை வழக்கத்திலிருந்த சோழப் பேரரசில் அடிமைகள் கோயில் பணிகளுடன் தொடர்பு கொண்டவர்களாயிருந்தனர். பெண்கள் இறைவனுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதற்காகத் தாமே தம்மை கோயில் அடிமைகளாக ஆக்கிக் கொண்டார்கள். அவர்களுடன் அவர்களுடைய தோழியரும், உறவினர்களும் தம்மை விற்றுக் கொண்டனர். எனவே அவர்களுடைய உரிமைகளை நாம் நன்குணரலாம். வயலூர்க்கோவிலில் திருப்பதிகம் பாடுவதற்கும் இறைவனுக்கு வெண்சாமரம் வீசுவதற்கும் பெண்கள் அடிமைகளாக வாங்கப்பட்டனர் எனக் கல்வெட்டு கூறும்போது அவர்களது அடிமைத்தனம் புலனாகிறது. கி.பி. 1119ல் பெண்கள் திருவல்லம் கோயிலுக்கும் 1175ல் திருவாலங்காட்டு கோயிலுக்கும் தேவரடியார்களாக விற்கப்பட்டார்கள். இதுவும் அவர்களது அடிமைத்தனத்தை விளக்குகின்றது. செல்வந்தர்களும் பெண் அடிமைகளைக் கொண்டிருந்தார்கள். மேலப்பெரும் பள்ளம் என்னுமிடத்திலுள்ள கோயில்களிலும் இத்தகைய அடிமைகள் இருந்தனரென்பதற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. எனவே பெண்கள் கோயிலுடன் தம்மை இணைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்ததென்பதை நாம் காணலாம். குலோத்துங்கச் சோழனின் 49ஆம் ஆண்டு கல்வெட்டு ஒன்று படைத்தலைவன் பாண்டிய பல்லவரையன் என்பவன்

தமது குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு திரிசூல முத்திரையிட்டு, திருவல்லம் கோயிலுக்கு தேவரடியார்களாக ஆக்கினான் என்று கூறுகின்றது. பெண்களும் அடிமைகளைக் கொண்டு செயல்பட்டனர். வயிராதரன் என்ற அரசியல் அலுவலர் ஒருவர் தம்முடைய அடிமைகளுடன் தன் மனைவிக்கு சீதனமாகத் தரப்பட்ட அடிமைப் பெண்களையும் திருவலங்காட்டு கோயிலுக்கு அடிமைகளாக விற்றான் எனக்கூறும் போது பெண் அடிமைகள் இருந்தனர் என்பது தெளிவு.

சமையலில் தேர்ச்சி பெற்றிருந்த பெண்கள் புடவைகள் அணிந்தார்கள். அவர்கள் மேலாடை அணியவில்லை. ஆனால் மார்க்கச்சு அணிந்திருந்தனர். ஆனால் விதவிதமான துணிகளில் ஆன ஆடைகளை அணிதல் அப்போதிருந்தது. பாலாவி, பூந்துகில், பட்டு, வெண்பட்டு, மென்துகில் அணிந்தனர். நறுமணப் புகை ஊட்டுதல் மூலம் மணம்வீச ஏற்பாடு செய்து கொண்டனர். பெண்களின் ஒப்பனைக்கலை மேம்பட்டுக் காணப்பட்டது. எண்ணற்ற கோயில் சிற்பங்கள் இவற்றிற்குச் சான்றளிக்கும். நீராடும்போதும் பெண்கள் நறுமணப் பொருட்கள் கலந்த நீரில் நீராடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். அஞ்சனமையை கண்களுக்குத் தீட்டிக்கொள்ளும் பாரம்பரிய வழக்கம் சோழர் காலத்திலும் தொடர்ந்தது. கொண்டையில் பூச்சூட்டிக் கொண்டார்கள். நறுமலர் மாலைகளை அணிந்து கொண்டார்கள். மணிமாலை, பொன்தட்டுமாலை, கற்பூர மாலை, தீம்பூமாலை போன்ற மாலைகளை அணிந்திருந்தார்கள். திருமணம் செய்து கொள்ள இருக்கும் மணப்பெண்ணின் உடலில் சிவப்புநிறப் பொடிகளைப் பூசிக்கொண்டார்கள். பொன்னாலான சீப்பு, யானைத் தந்தத்திலான சீப்பு ஆகியவற்றைப் பெண்கள் பயன்படுத்தினர். ஒப்பனை மூலம் தமது அழகிற்கு மெருகூட்டிக் கொள்ளுதல் என்பது பெண்களால் மேற்கொள்ளப்பட்ட முக்கியப் பண்புகளாகும்.

கூத்து, நடனம், நாட்டியம் ஆகியவற்றில் பின்பாட்டுப் பாடிய பெண்கள் தோரியமடந்தையர் எனப்பட்டனர். அவர்கள் இசை, நடனம் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தார்கள். பொது மக்களிடம் ஒருதாரமணமே காணப்பட்டது. மணமகன் வீட்டார் மணமகளுக்கு தொடுவிலை தந்தனர். திருமணத்தின் போது பெண்கள் மகட்கொடையாக நிலங்களைப் பெற்றார்கள். பெண்களின் சீதனச் சொத்தினை விற்பதற்கான உரிமைகளைக் கணவர் பெற்றிருக்க வில்லை. பெண்களின் திருமண வயது 12 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பெற்றோர் தமது பெண்ணை தாரை வார்த்துக் கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது. அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் போன்ற சடங்குகள் திருமணப் பெண்ணுடன் தொடர்புபடுத்தப்பட்டன.

பெண்கள் பந்தாடல், நீர் விளையாட்டு, ஊஞ்சலாட்டம், பொம்மைகளை வைத்து விளையாடல், இசை, நடனம் போன்றவற்றின் மூலம் பொழுது போக்கினர். இசை, நடனம் ஆகியவற்றில் விற்பன்னர்களான பெண்கள் தளிச்சேரிப் பெண்டிர் எனப்பட்டனர். அவர்கள் கோவில்களுடன் தம்மை இணைத்துக் கொண்டிருந்தனர். சோழ மாமன்னன் இராஜராஜன் காலத்தில் இசை, நடனம் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்த பெண்கள் நாட்டின் பல



பாகங்களிலிருந்தும் ஒன்று திரட்டப்பட்டனர். அவர்கள் தஞ்சை பிரஹதீசுவரர் ஆலயத்தருகில் தனித்தெருவில் குடியமர்த்தப்பட்டார்கள். திருக்கோவிலூர் கல்வெட்டு மூலம் 32 நடனமாதரும் நடிகையரும் அவ்வூரிலுள்ள திருவீரட்டானேசுவரர் ஆலயத்தில் இருந்தனரென்பது தெரியவருகின்றது. இறைவனுக்கான பல பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவர்கள் 'தேவரடியார்' எனப்பட்டனர். கணிகையர் என்ற பெயரிலும் அழைக்கப்பட்ட பெண்கள் திருமணம் செய்து கொள்ளவில்லையாதலால் 'பதியிலார்' எனப்பட்டார்கள். சமுதாயத்தில் அவர்களுடைய மதிப்பு மேம்பட்டுக் காணப்பட்டது. அவர்கள் மரியாதை மிக்கவர்களாயிருந்தனர். செல்வந்தர்களான அவர்கள் சைவசமயத்தினர்களாய் இருந்தனர். சோழப் பேரரசியாளர்களும் சிறப்புமிக்க பெண்களுக்கு 'தலைக்கோலி' என்ற பட்டத்தை வழங்கினர். ஜெயங்கொண்ட சோழன், மதுராந்தகன் போன்றோரும் சிறந்த பெண்களுக்கு பட்டங்கள் வழங்கிப் பாராட்டினார்கள்.

பிற்காலச் சோழர்கள் காலத்தில் பெண்கள், அடிமைகளாக விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர். 'ஆள் விலைப் பிரமாண இசைவுத்திட்டு' என்ற ஆவணம் மூலம் பெண்கள் விற்பனை செய்யப்பட்டனர். விவசாயப் பணியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மாறுபட்ட, தனித்தனியான ஊதியங்கள் தரப்பட்டன. ஆயினும் பெண் அடிமைகள் கோயில்களில் மட்டுமே காணப்பட்டார்கள். இதன்மூலம் சமுதாயத்தில் பெண்கள் நிலை மேம்பட்ட ஒன்றாகக் காணப்பட்டதெனலாம். செல்வந்தர்கள் பணவசதிகாரணமாக பல பெண்களைத் திருமணம் செய்துகொண்டனர். அரசியல் சூழ்ச்சி காரணமாக, அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பல பெண்களைத் திருமணம் செய்துகொண்டனர். சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்னும் வழக்கம் காணப்பட்டது. அல்லூர் மற்றும் திருக்கோவிலூர் கல்வெட்டுக்கள் மூலம் சதி என்றும் வழக்கம் பற்றி உணர முடிகின்றது. கங்காதேவி என்ற கொடும்பாளூர் அரசி, சுந்தர சோழனின் மனைவி வானவன் மாதேவி, முதலாம் இராஜேந்திரன் மனைவி வீரமாதேவி போன்றோர் சதி அல்லது உடன்கட்டை ஏறுதலை மேற்கொண்டனர். எனவே உடன்கட்டை ஏறும் வழக்கம் பற்றி கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆனால் காலப்போக்கில் பிற்காலச் சோழர்கள் காலத்தில் அவ்வழக்கம் மறைந்துவிட்டது.

பெண்கள் ஒப்பனையிலும் அலங்காரத்திலும் நேரத்தினைச் செலவிட்டார்கள். அஞ்சனம் தீட்டிக்கொள்ளல், பூச்சூட்டிக் கொள்ளல், சிகையலங்காரம் செய்து கொள்ளல், நறுமணப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியன அவர்களுடைய சிறப்புகளாயிருந்தன. இவ்வாறு சோழர்காலத்தில் பெண்கள் நிலை மேம்பட்டே காணப்பட்டதெனலாம்.

### பல்லவர்காலப் பெண்டிர்நிலை

பல்லவர் காலத்தில் மேல்மட்ட சமுதாயத்திலிருந்த பெண்களின் நிலை பாராட்டத்தக்க நிலையில் காணப்பட்டது. அவர்கள் சொத்துரிமை பெற்றவர்களாயிருந்தனர். அதனால் அவர்கள் தாமே, சுதந்திரமாக தானங்களை அறிவித்து வழங்கும் உரிமை பெற்றிருந்தார்கள். சாதாரணமாக

ஒருதாரமணம் வழக்கத்திலிருந்தது. சமுதாயத்தில் கீழ்மட்டத்திலிருந்த பெண்கள் நெசவுத்தொழில், நூல் நூற்றல், பூக்களை விற்றல், பால் விற்றல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். பெண்கள் தம்முடைய வீட்டுக் கடமைகளை ஆற்றுவதில் அதிக ஈடுபாடு கொண்டவர்களாயிருந்தனர். பல்லவர் காலத்தில் சதி அல்லது உடன்கட்டை ஏறும் வழக்கம் செல்வாக்குடன் திகழவில்லை. பெண்கள் சமையற்கலையில் கைதேர்ந்தவர்களாயிருந்தனர். பெண்கள் கரை, கடிப்பு, செவிப்பூ, தோடு, குண்டலம், மகரக்குழை, நூபுரம், மேகலை போன்ற அணிகலன்களைப் பயன்படுத்தினர். அவர்கள் பூமூலம் தம்மை அலங்கரித்துக் கொள்வதில் பெருநாட்டம் உடையவர்களாயிருந்தனர். பெண்கள் சமய அடிப்படையில் நோன்புக்ளியற்றும் வழக்கம் விரிவடைந்தது. குறிப்பாக மார்கழிமாத நோன்பு சிறப்புடையதாகக் காணப்பட்டது.

பல்லவர் காலத்தில் நடனக்கலையும் இசைக்கலையுடன் போற்றப்பட்டது. பல்லவப் பேராட்சியாளரும் குறுநில மன்னர்களும் பரதநாட்டியத்தைப் போற்றிப் பாதுகாத்தனர். ரங்கபதாகா என்ற அரசி அதாவது இராஜசிம்மனின் மனைவி, மிகச்சிறந்த நாட்டிய மேதையாகத் திகழ்ந்தார். ரிஷபத்தலையார், தேவரடியார், கூத்தி, தளிச்சேரி பெண்டிர் போன்றோர் நடனத்துறையில் மேம்பட்டவர்களாயிருந்தனர். தட்டை, விக்ருதை, பிராட்டயாய், பக்தை, எடை, அலங்கரை மற்றும் ருத்ரகணிகை ஆகியோர் ஏழுவகை ஆடல் அழகியராவர். பல்லவர்காலத்தில் பெண்கள் நிலை இரங்கத்தக்கதாக இருக்கவில்லை.

## விஜயநகரப் பேரரசின் போது பெண்கள் நிலை

வர்ணாஸ்ரம தர்மம் மற்றும் இந்து தர்மத்தைப் போற்றிய விஜயநகரப் பேரரசுக்காலம் இந்தியவரலாற்றில் வியக்கத்தக்க மாற்றங்களை உருவாக்கியது. அக்காலகட்டத்தில் பெண்கள் நிலை உன்னதமானதாயும் மதிப்புமிக்கதாயும் காணப்பட்டது. பெண்கள் அரசியல், சமூக, இலக்கியத் துறைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு விளங்கினார்கள். அயல்நாட்டுப் பயணியான பேயஸ் அக்காலத்தில் பெண்கள்நிலை மேம்பட்டிருந்ததெனச் சான்றளிக்கின்றார். திருமணமான பெண்கள் கணவருக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். ஆனால் அது மதிப்பும் மரியாதையுமுடைய கீழ்ப்பட்ட தன்மையாயிருந்தது. திருமணம் வரை பெண்கள் பெற்றோர் கட்டுப்பாட்டிலிருந்தனர். திருமணமும் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டன. திருமணத்திற்குப் பின் அவள் மாமியாரால் கட்டுப்படுத்தப்பட்டாள். திருமணமான பெண்கள் வீட்டின் நிர்வாகப் பொறுப்பினைக் கொண்டு செலுத்துவதைத் தமது கடமையாகக் கொண்டனர். தமது இறுதிக் காலத்தைப் பெண்கள் தமது மகனுடன் கழித்தார்கள். பெண்கள் அனைவருடனும் பாராட்டத்தக்க நல்லுறவைக் கொண்டிருந்தனர். ஆனால் விதவைகளின் நிலை இரங்கத்தக்கதொன்றாகவே காணப்பட்டது. அவர்களது சமூக உரிமைகளனைத்தையும் அவர்கள் இழக்க வேண்டியவர்களாயிருந்தனர். அவை மறுக்கப்பட்டன. அவர்களைப் பார்ப்பதே பாவம் எனக் கருதப்பட்டது. அவர்களைக் கண்டால் சகுனத்தடை என்ற நிலை இருந்தது. பார்போஸா என்ற பயணி குறிப்பிட்டதுபோல் அந்தப்புரப் பெண்டிரிடம் அவர்களுடைய



எண்ணிக்கை காரணமாக போட்டிகளும், பொறாமைகளும் காணப்பட்டன. அவர்கள் தமக்குள் பொறுப்புணர்வை வளர்த்துக் கொண்டிருந்தனர். அரசரின் துணைவியரும் அவரால் விரும்பப்பட்டோரும் அரசர் செல்லுமிடங்களுக் கெல்லாம். உடன் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்று நிக்கோலோ கான்டி குறிப்பிட்டுள்ளார். பெரும்பாலான ஏழைப் பெண்கள் ராஜாங்க சமயலறையில் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார்கள். செல்வந்தர்களின் பெண் குழந்தைகள் அரசர்களின் மனைவியர்களாக்கப்பட்டனர். நன்னிஸ் குறிப்பிட்டபடி திக்கற்ற பெண்கள் அரண்மனையில் பல பணிகளில் ஈடுபட்டனர். தீவட்டி ஏந்துபவர்களாகவும், சோதிடர்களாகவும் வரும் பொருளுரைப்பவர்களாகவும், அரண்மனைக் கணக்கர்களாகவும் செயல்பட்டார்கள். மேலும் பேரரசின் பல பகுதிகளிலும் நிகழும் நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுபவர்களாகவும் பெண்கள் பயன்பட்டனர். அவர்கள் இசையில் ஈடுபாடு காட்டினர். வாய்ப்பாட்டு மற்றும் இசைக் கருவிகளை மீட்டுதல் போன்றவை அவர்களால் மேற்கொள்ளப்பட்டன. போர்க்களங்களுக்கும் அவர்கள் படைவீரர்களுடன் சென்றனர். விழாக் காலங்களில் பெண்கள் இறைவன் முன் நடனமாடும் வழக்கம் காணப்பட்டது.

அப்துர் ரஸாக் என்ற பாரசீக பயணி 1442ல் குறிப்பிட்டவாறு அக்காலத்தில் பரத்தமைத் தொழிலில் ஈடுபட்டோர் காணப்பட்டனர். அவர்கள் அழகிலும் செல்வத்திலும் மேம்பட்டவர்களாயிருந்தனர். தெருக்களில் நின்று கொண்டு தேவைப்பட்டவர்களையும், செல்வந்தர்களையும் கவரக் கூடியவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கெனத் தனிப்பட்ட சிறப்புரிமைகள் காணப்பட்டன. அவர்களுடைய தொழிலுக்கெனத் தனிப்பட்ட வரிகளை அரசுக்குத் தந்தனர். அவ்வாறு அவர்களிடமிருந்து பெறப்பட்ட பணம் பொதுச் செலவுகளுக்கும் அரசு ஊழியர்களின் சம்பளத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. இவற்றின் மூலம் விஜய நகரப் பேரரசில் பரத்தமைத் தொழிலானது சட்ட பூர்வமான தொழிலாயிருந்ததென்பதை உணரலாம்.

பெண்களுக்கு மற்போர், கத்திகளைப் பயன்படுத்துதல், கேடயங்களை உபயோகித்தல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டது. பெண்கள் இசை, நடனம் போன்றவற்றில் நுண்கலைகளில் பேரார்வம் காட்டினர். அவர்கள் கல்வி, கேள்விகளிலும் பேரார்வங்காட்டினர். குமார கம்பணனின் மனைவி கங்காதேவி 'மதுரா விஜயம்' மற்றும் 'வீரகம்பராய சரிதம்' ஆகிய நூற்களை எழுதினார். 'வரதாம்பிகா பரிணயம்' என்ற நூலானது திருமலாம்பா என்பவரால் எழுதப்பட்டது. அந்நூலானது அச்சுதராயா மற்றும் வரதாம்பா ஆகியோரின் திருமணம் பற்றிக் கூறுகின்றது. இராமபத்ராம்பா என்பவரால் 'இரகுநாதாபி உதயம்' என்ற நூல் எழுதப்பட்டது. இவற்றால் பெண்கல்விக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டதென்பது புலனாகின்றது.

பெண்கள் கோயில்களுடன் சம்பந்தப் படுத்தபட்டிருந்தனர். தினந்தோறும் குறிப்பிட்ட பூஜை நேரங்களில் அவர்கள் இறைவன் முன் ஆடிப்பாடினர். விழாக் காலங்களில் கோவில் சப்பரத்தின் முன் கடவுள் சிலைகளைச் சுமந்து செல்லும் பொறுப்பும் அவர்களுடையதாயிருந்தது. அத்தகைய பணிப்பெண்களுக்கான ஊதியம் கோவில் பணத்திலிருந்து தரப்பட்டது. அவர்கள் பொதுவாக 'தேவரடியார்' எனப்பட்டனர்.

திருமணமான பிராமணப் பெண்கள் வீடுகளைவிட்டு வெளியேறுதல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. சதி என்பது வழக்கிலிருந்ததெனினும் பிராமண விதவைகள் அதனை ஏற்கவில்லை. அவர்கள் மொட்டையடிக்கப்பட்டு சில சடங்குகளுக்கு உட்படுத்தப்பட்ட ஒதுக்க நிலைக்குத் தள்ளப்பட்டனர். விதவைகள் மறுமணம் வழக்கத்திலிருக்கவில்லை.

சதி என்றும் கடுமையான வழக்கம் எல்லாத் தரப்பினரிடமும் காணப்பட்டது. திருமணம் ஆவதற்கு முன் கல்யாண நிச்சயதார்த்தம் ஆன பெண் கூட தமக்கு நிச்சயிக்கப்பட்ட வரன் இறந்துவிட்டால் தானும் சதிக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டியவளாயிருந்தாள். பார்போஸா(1514), நன்னிஸ்(1535–36), சீசர் பிரடரிக்கா(1567), லின்ஸோடென்(1583), டிலாவெல்லி(1623) போன்றோர் அப்போது வழக்கத்திலிருந்த சதி பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். சில நேரங்களில் கணவனின் மரணத்திற்குப்பின் நான்கு மாதங்கள் கழித்து சதியானது மேற்கொள்ளப்பட்டது. நன்னிஸ் என்பவர் கூறிய வண்ணம் லிங்காயத்துகள் கணவன் இறந்தவுடன் மனைவியையும் சேர்த்து புதைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் சதி என்பது கட்டாயப் படுத்தப்படவில்லை என்பதைச் சமகால கல்வெட்டுகள் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் சமுதாயக் கொடுமைகளிலிருந்து விடுபட, கணவனை இழந்த விதவைகள், பெரிதும் சதியினை மேற்கொண்டார்கள்.

சமுதாயத்தில் பலதார மணமும், மணவிலக்கும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் வரதட்சணை என்னும் சமூகக் கொடுமை வழக்கத்திலிருந்தது. ஆனால் செல்வந்தர்களும், மன்னர்களும் பலதார மணத்தை ஆதரித்தனர்.

இவ்வாறு விஜயநகரப் பேரரசின் பெண்கள் நிலை பலராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே இருந்தது.

## முகமதியர் காலத்தில் பெண்கள் நிலை

இக்காலகட்டத்தில் பெண்கள் நிலை ஒடுக்கப்பட்டதாயிருந்தது. அவர்கள் அடிமை நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தனர். இந்தியாவில் காணப்பட்ட அடிமைச் சந்தையில் ஆண், பெண் அடிமைகள் விற்கப்பட்டார்கள். வீட்டு வேலைகளுக்காக பெண்கள் அடிமைகளாக விலைக்கு வாங்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் விருப்பப்படி பெண் அடிமைகள் குறிப்பிட்ட வேளைகளில் விடுவிக்கப்பட்டார்கள். பால்ய விவாகம், திருமணமான பெண் கணவனுக்கு அடங்கிச் செயல்படுதல் என்ற நிலைகள் தொடர்ந்து காணப்பட்டது. சில நேரங்களில் திருமணங்கள் நிறுத்திவைக்கப்பட்டன. விதவை மறுமணம் நிலைநாட்டப்படவில்லை. சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் என்ற வழக்கம் தொடர்ந்தது. இபின் பதுதா குறிப்பிடுகையில், பறையடித்து முழக்கமிடும் சத்தத்துடன் ஒரு பெண் தன்னை தனது இறந்துவிட்ட கணவரின் சிதை தீயில் விழுந்து மாய்த்துக் கொள்ளும் வழக்கம் இருந்ததெனக் கூறுகின்றார்.



வாரிசு இல்லாமல் உள்ள விதவைகள் சொத்துரிமை கொண்டவர்களாய் இருந்தனர். அவற்றைப் பயன்படுத்த, பாதுகாக்க, விற்பனை செய்ய அவர்களுக்கு உரிமை இருந்தது. எனவே இந்துச் சட்டத்திலும் சொத்துரிமை விரிவாக்கம் பெற்றமையை நாம் நன்குணரலாம்.

அக்காலகட்டத்தில் பெண்கள் ஒதுக்க நிலையில் வைக்கப் பட்டிருந்தார்கள். தமது முகங்களைப் பிறர் காணாதிருக்க பர்தா முறை விரிவாக்கம் பெற்றது. மேல்நிலை இந்துப் பிரிவினரிடமும் இம்முறை பழக்கத்திலிருந்தது. இம்முறையானது அராபியர் மற்றும் துருக்கியரால் இந்தியாவிற்குள் கொண்டு வரப்பட்டது. இம்முறை வட இந்தியாவில் அதிக அளவில் விரிவாக்கம் பெற்றது. மேலும் பர்தா முறையானது பெண்களின் பாதுகாப்பு நோக்கில் மேற்கொள்ளப்பட்டதெனலாம். சமுதாயத்தில் மேல்மட்டப் பிரிவினரிடையே பர்தா முறையானது அந்தஸ்து நிகழ்ச்சியாகக் கொள்ளப்பட்டது. சமயக் காரணங்களும் கற்பிக்கப்பட்டன. ஆயினும் பர்தா முறை பெண்ணியத்திற்கு எதிரிடையான கோட்பாடாகவே திகழ்ந்தது.

# 5. இந்தியப் பெண்ணின முன்னோடிகள்

## (PIONEERING INDIAN WOMEN)

**முன்னுரை:** அன்னிபெசன்ட் - சகோதரி நிவேதிதா - இந்திரா பிரியதர்ஷினி - பண்டித ரமாபாய் - சரோஜினி நாயுடு ருக்மணி தேவி அருண்டேல் - மார்க்ரெட் கசின்ஸ் - கஸ்தூரிபா காந்தி - கமலா நேரு - விஜயலெட்சுமி பண்டிட் முத்துலெட்சுமி ரெட்டி - சாவித்திரிபாய் - மேரி கிளப் வாலா ஜாதவ் - சௌந்திரம் ராமச்சந்திரன் - லெட்சுமி - N.மேனன் - சரளா செவது ராணி - மணிபென் படேல் - அம்மு சுவாமி நாதன் - ருக்மணி தேவி இலட்சுமிபதி

19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியத் திருநாட்டில் பெண்ணினம் வேகமான முன்னேற்றத்தைக் கண்டது. தனிப்பட்ட பெண்கள் பலர் தமது அருஞ்செயல்களால் முன்னோடிகளாக திகழ்ந்தனர். அக்கால கட்டத்தில் தம்முடைய தனித்த ஆற்றலாலும் முயற்சியாலும் முன்னணி நிலையை எய்தினர். இந்தியாவின் சுதந்திரப் போராட்டம், பெண்கள் மறுமலர்ச்சி, உரிமைப்போராட்டங்கள், ஆணாதிக்கத்தினின்றும் விடுபட ஏற்பட்ட செயல்கள், கல்வித்துறையில் மேம்பாடு போன்றவற்றில் குறிப்பிட்ட பெண்ணின முன்னோடிகளை அறிந்துகொள்ளல் வேண்டும். அயல்நாட்டினைச் சேர்ந்த அன்னிபெசன்ட், சகோதரி நிவேதிதா ஆகியோரின் பங்கினையும் அறிதல் அவசியம்.

19ம் நூற்றாண்டில் மனிதாபிமான உணர்வுகள், உலகியல் மேம்பாட்டுத் தத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்திய சமூக சீர்திருத்தவாதிகளின் செயல்கள் பெண்கள் முன்னேற்ற இயக்கங்களுக்கு வித்தாக அமைந்தன. இந்து சமயம், பௌத்தம், சமணம், இஸ்லாம், ஜொராஸ்டிரியானிசம் போன்றவை பெண்களைத் தாழ்த்திப் பேசவில்லை. 1880க்குப் பின் டப்ரின் மருத்துவ நிலையங்கள் உருவாக்கப்பட்ட பின் இந்தியப் பெண்களின் நலனுக்கான நவீன மருந்துகளைப் பயன்படுத்துவனாக செய்யப்பட்டது. தீவிர தேசியவாத இயக்கம் இந்தியாவில் வலுப்பெற்றபோது இந்தியப் பெண்களின் பங்கு சுதந்திரப் போராட்டத்தில் விரிவடைந்தது. 1918க்குப்பின் அவர்கள் அரசியல் ஊர்வலங்களில் பங்கேற்றனர். அயல்நாட்டுக் கடைகளில் மறியலில் ஈடுபட்டனர். கதர் உற்பத்தியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். 1937ல் இந்திய அமைச்சரவைகள் இந்திய மாநிலங்களில் நிறுவப்பட்டபோது பெண்கள் பலர் அமைச்சர்களாக்கப் பட்டனர். எண்ணற்றோர் தல நிர்வாகப் பொறுப்புகளில் பங்கேற்றனர். 1920ல் தொழிற் சங்கங்களும், குடியானவர் இயக்கங்களும் வலுப்பெற்ற போது அவற்றுள் பெண்கள் பங்கு மகத்தானதாயிருந்தது. 1920க்குப்பின் பெண்கள் வலுப்பெற்றனர். அவர்களுக்கெனப் பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன. 1927ல் நடைபெற்ற அகில இந்திய பெண்கள் மாநாடு அவர்களுக்கு ஒரு விழிப்புணர்வைத் தந்தது. எனவே அவை பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும்.



### அன்னிபெசன்ட் (1847-1933)

தன்னை ஒரு 'இந்திய டாம் டாம்' என்று அறிவித்துக் கொண்ட அயர்லாந்துப் பெண்மணியே அன்னிபெசன்ட். தன் வாழ்வின் ஆரம்ப நிலையில் பல எதிர்ப்புகளையும் முட்டுக்கட்டைகளையும் சந்தித்தார். குறிப்பாக ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்களில் அவரால் பட்டம் பெற இயலவில்லை. ஆனால் விடாமுயற்சி, தளரா மன உறுதி ஆகியவற்றை அவர் தாம் சந்தித்த எதிர்ப்புகள் வாயிலாகப் பெற்றார். தனது 40ஆவது வயது முதல் அவருடைய கவனம் சமூகப்பணியில் சென்றது. தொடர்ந்து தமது எண்ணங்களுக்கு பிராட்லா (Bradlough) வின் நேஷனல் ரிஜிஸ்டர்(National Register) என்ற பத்திரிக்கை வாயிலாக எழுத்து வடிவம் தந்தார். 1874 முதல் பெண்களின் அரசியல் நிலை பற்றிப் பேசலானார். எடின்பரோ மற்றும் பிற இடங்களில் உள்ள சேரிப்பகுதிகளில் வாழ்ந்து வந்த ஏழ்மைக்குடும்பத்தினரின் வாழ்க்கையைக் கண்டு மனமாற்றம் கொண்டார். இத்தகைய கடும் இன்னல்களுக்கிடையில் இலண்டன் பல்கலைக்கழகம் மூலம் தாவரவியலில் சிறப்புப்பட்டம் பெற்றார். அப்போது ஜ்யார்ஜ் பெர்னாட்ஷாவுடன் தொடர்பு ஏற்பட்டது. சமூகம் மற்றும் அரசியல் பணிகளில் ஈடுபட்டிருந்த அவர் பிரம்மஞானக் கோட்பாட்டினாலும் ஈர்க்கப்பட்டார். அதனால் முன்னேற்றம் மற்றும் சீர்திருத்த இயக்கங்களில் ஈடுபட்ட ஒரு சிலருள் அன்னிபெசன்ட் உயர் மட்டத்திலிருந்தார். இந்த நேரத்தில் தான் இங்கிலாந்திலேயே இந்தியாவுக்கு தன்னாட்சி வழங்கப்பட வேண்டுமென முழங்கினார்.

1893ல் இந்தியா வந்தடைந்த அன்னிபெசன்ட் இந்தியாவில் காணப்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக இந்தியாவில் நிலவிய சமூக கேடுகள், கொடுமைகள், அரசியல் குறைபாடுகள் ஆகியவற்றைக் களைய வேண்டுமென்பதில் கவனம் செலுத்தலானார். இந்தியாவில் அடையாறில் நிறுவப்பட்டிருந்த பிரம்ம ஞான சபையின் தலைவரானார். அந்நிய அயல்நாட்டவர் ஆட்சி காரணமாக ஏற்பட்ட இன்னல்கள், அரசியல் இயக்கத்தின் தேவை ஆகியன அவரது போக்கினை மாற்றியமைத்தன. பகவத்கீதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்தியத் தத்துவத்தைப் பலரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக சென்னை, வாரணாசி ஆகிய இடங்களில் இந்து உயர்நிலைப் பள்ளிகளை உருவாக்கினார். அது பின்னர் மோகன் மாளவியாவினால் பெனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டது. பாரத் ஸ்கவுட் மற்றும் கைட் அசோஷியேசன் (Bharat Scout and Guide Association) அவரால் உருவாக்கப்பட்டதே.

1916ல் இந்திய விடுதலைப்போராட்டத்தில் முக்கியத் திருப்புமுனையாக தன்னாட்சி இயக்கத்தைத் துவக்கினார். அன்றைய

அரசுக்குத் தொல்லையளித்ததாக அவர் இந்தியாவை விட்டு வெளியேறக் கேட்டுக் கொள்ளப்பட்டதை ஏற்க மறுத்ததால் ஊட்டியில் சிறைவைக்கப்பட்டார். 1917ல் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் தலைவராக ஆக்கப்பட்டார். இவ்வாண்டில்தான் அடையாறிலுள்ள கையெழுத்துச் சுவடி நூலகத்தை ஏற்படுத்தினார். ருக்மணிதேவி மூலம் பரதநாட்டியத்தையும் பரப்ப வகை செய்தார். ஹிந்துஸ்தான் ஸ்கவுட் அசோஷியேசன் (Hindustan Scout Association) என்பதும் அவரால் உருவாக்கப்பட்டதே.

இந்தியாவின் ஆன்மீகப் பெருமளவில் ஈடுபாடுகாட்டிய அன்னிபெசண்ட் 20 ஆண்டுகள் இந்து ஆன்மீக மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார். இந்திய அரசியலில் மறுமலர்ச்சி காணப்படுபட்ட அவர் "அடக்குமுறை அதிகரிப்பு, உரிமை ஒடுக்கப்படல், மாணவர்கள் துன்புறுத்தப்படல், புரட்சி அபாயம்" ஆகிய காரணங்களால் இந்திய அரசியலுடன் தம்மை இணைத்துக் கொண்டார்.

1914ல் முதல் உலகப்போர் தொடங்கியபோது இங்கிலாந்தில் அவர் பயணம் செய்து கொண்டிருந்தார். "இங்கிலாந்தின் தேவை, இந்தியாவுக்கு ஒரு வாய்ப்பு" என்று அறிவித்தார். போர்க்காலத்தில் ஆங்கிலேயருக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்தலின் மூலம் இந்தியா சுய ஆட்சி பெற முயல வேண்டுமென்று அறிவித்தார். 1907ல் காங்கிரசில் ஏற்பட்ட சூரத் பிரிவினையை சீராக்க பின்னர் திலகர் போன்றவர்களை மீண்டும் காங்கிரசில் சேர வகை செய்தார். 1916ல் லக்னோ காங்கிரஸ் மூலம் காங்கிரஸ்— முஸ்லீம் லீக் கட்சி உடன்பாடுக்கான வகை செய்தார்.

பிற நாடுகளைப் போல் இந்தியாவுக்கும் டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்த காமன்வில் என்ற வாரஇதழையும், நியூ இந்தியா என்ற தினசரி இதழையும் நடத்தினார். அவரது தன்னாட்சி பிரச்சாரம் தேசிய விழிப்புணர்வை ஊட்டியது. அடக்குமுறைக்களை ஏவிய ஆங்கில ஆதிக்கப்பேரரசு அவரிடம் பெற்ற ரூ20,000/ — காப்புத் தொகையைப் பறிமுதல் செய்தது. அவருடன் அருண்டேல், வாடியா ஆகியோர் சிறைப்படுத்தப்பட்டாலும் மக்கள் எதிர்ப்பு காரணமாக விடுவிக்கப்பட்டனர். 1919ஆம் ஆண்டின் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் அவரால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. ஜாலியன் வாலாபாக் படுகொலைச் செய்தியை அறிந்து இந்திய அமைச்சர் மாண்டேகுவைச் சந்தித்து அது பற்றி விசாரணைக் குழு நிறுவவேண்டுமென்று வலியுறுத்தினார். 1920ல் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியபோது அதனை எதிர்த்து காங்கிரசிலிருந்து விலகினார். பின்னர் ஆன்மீகத்தில் ஈடுபட்ட அவர் 1933ல் காலமானார்.

## சகோதரி நிவேதிதா (1867-1957)

எண்ணற்ற ஆன்மீகவாதிகளையும், மாமுனிவர்கள் பலரையும் புத்தர், மகாவீரர், குருநானக் போன்ற சமயத்தோற்றுவிப்பாளர்களையும் கொண்டது இந்தியத் திருநாடு. இப்புண்ணிய பூமியில் மக்களின் சிந்தனைகள்



விரிவானவையாய் போற்றுதலுக்கு உள்ளானவையாயிருந்தன. அதேநோக்கில்தான் அயல்நாடுகளிலிருந்து வருவோரையும் வரவேற்கும் பண்புடையதாயிருந்தது. இந்தியாவில் இந்தியாவுக்குள் பலதரப்பட்ட நோக்கங்களுடன் அயல்நாட்டுப் பயணியர் பலகால கட்டங்களில் இந்தியாவுக்கு வந்தனர். அத்தகைய தனிப்பட்ட அயல்நாட்டவர் வரிசை மிக நீண்டதொன்றாகும். பாஹியான், யுவான் சுவாங், இட்சிங் போன்ற சீனப்பயணியர் இந்தியாவில் புத்தருடன் தொடர்புடைய புனிதத் தலங்களைத் தரிசிக்கவும், அம்மாமுனிவர் பற்றிய செய்திகளைத் திரட்டவும் இந்தியாவிற்கு வந்தனர். இத்தகைய அயல்நாட்டவருள் பெண்கள் இருவர் மிக முக்கியமானவர்கள். அவர்களுள் ஒருவர் அன்னிபெசண்ட் மற்றவர் சகோதரி நிவேதிதா. இருவருமே சமகாலத்தவர்.

இவரும் அன்னிபெசன்டைப்போல் தன்னலமற்ற தியாகச் சுடராகத் திகழ்ந்தவர். இவரும் அயர்லாந்து நாட்டினரே. ஆன்மீகப் பண்பினால் மேம்பட்டு இந்தியாவுக்கு வந்தவர். மார்க்ரெட் நோபிள் என்பது அவருடைய இயற்பெயர். இராமகிருஷ்ணர் இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட அவர் 28, அக்டோபர் 1867ல் டன்கன்னானில் பிறந்தவர். தனது தந்தையாரின் ஈடுபாடு காரணமாக அயர்லாந்தின் தன்னாட்சி இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். தனது 17ஆவது வயதில் தமது படிப்பை முடித்த நோபிள் ஆசிரியப் பணியை ஏற்றுக் கொண்டார். அப்போது பெஸ்டலாக்ஸி, புராய்பெல் போன்ற கல்வியாளர்களின் சிந்தனைகளால் கவரப்பட்டார். அப்போதே சமயம் பற்றிய பல செய்திகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமுடைய வராயிருந்தார்.

சிகாகோ உலக சமயப் பாராளுமன்றத்தில் 11, செப்டம்பர் 1893—ல் இந்தியாவின் பெருமை அதன் சமயக் கோட்பாடுகளில் உள்ளனவென்பதை நிலைநாட்டிய பின் இங்கிலாந்து திரும்பிய இந்திய சமய விடிவெள்ளி விவேகானந்தரை இலண்டனில் சந்தித்தார். சுவாமிஜியின் சொற்பொழிவு ஒன்றுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். இந்தியாவின் ஆன்மீகச் சிங்கத்தின் வேதாந்தக் கோட்பாடுகளும் அவற்றை அவர் தெளிவாக வெளிப்படுத்திய நிலையும் நோபிளால் பெரிதும் போற்றப்பட்டன. சந்நியாசியான விவேகானந்தர் மீது ஆன்மீகப்பற்றுதல் ஏற்பட்டது. விவேகானந்தர் இந்தியாவின் விடுதலை பெண்கள் கைகளில் உள்ளன என்று எண்ணியவர். வறுமை, ஏழ்மை, கல்வியறிவின்மை ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்டிருந்த இந்தியர் நிலையை விவேகானந்தர் வாயிலாக மார்க்ரெட் நோபிள் புரிந்துகொண்டார். அதேநேரம் கல்வி புகட்டலின் வாயிலாக இந்தியப் பெண்களை நெறிப்படுத்த வியலுமென்ற விவேகானந்தரின் கருத்தும் அவருக்கு ஏற்புடையதாகவே இருந்தது.

மேலும் இந்தியப் பெண்களின் அறியாமை, மூடநம்பிக்கைகளில் பற்றுதல், அயல்நாட்டு கோட்பாடுகள் மற்றும் செயற்பாடுகளிலான சரண்டல், தம்முடைய வீட்டுச் சிக்கல் போன்றவற்றிலிருந்து இந்தியப் பெண்களை மீட்க ஒரு பெண்மணியின் உதவி தேவை என்பதை உணர்ந்திருந்தார். நோபிள் என்ற அயல்நாட்டுப் பெண்மணியிடம் தமது நிலைகளைத் தெளிவுபடுத்தினார்.

ஆனால் அவர் மார்க்ரெட்டை வற்புறுத்த விரும்பவில்லை. இருப்பினும் மார்க்ரெட் நோபிள் இந்தியப் பெண்களின் மேம்பாட்டிற்குச் செயல்பட முடியுமென்பதைச் சுட்டிக்காட்டினார். விவேகானந்தரின் வேதாந்தச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட மார்க்ரெட் இந்தியா பற்றிய பல செய்திகளையும் திரட்டினார். தொடர்ந்து வேதாந்த அமைப்புகளை நடத்தவும் உதவி செய்தார்.

மார்க்ரெட்டுக்கு இந்தியச் சூழல், தட்பவெப்பநிலை பிடிக்குமா? பயணிகளாக வரக்கூடியவர்கள் இந்தியமக்களின் போஷகர்களாகத் திகழ முடியுமா? என்பன போன்ற ஐயங்கள் சுவாமிக்கு இருந்தன. இந்தியப் பெண்களின் சூழல்களும் அவர்களுக்கு உதவி விழிப்புணர்வை ஊட்டுவதிலும் மார்க்ரெட்டுக்கு பெரும் எதிர்காலம் உண்டு என்பது வெளியாயிற்று. இந்தியாவில் நிலவும் அந்நிய ஆதிக்கத்தின் இடர்பாடுகள் எந்த அளவுக்கு மார்க்ரெட்டைப் பாதிக்குமெனத் தெரிந்திருந்தாலும் 1896ல் இந்தியா வந்தடைந்தார். கல்கத்தாவைத் தமது இருப்பிடமாகக் கொண்டார். அவ்வமயம் சர். ஜகதீஸ் சந்திரபோஸ் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டார். அவர்கள் நடத்திய கல்விக்கூடங்களையும் பெத்தூன் கல்லூரியையும் அறிந்துகொண்டார்.

அக்குடும்பத்தினர், விதவைகள் மறுவாழ்வுக்காகவும் கல்வியறிவற்ற நிலையில் காணப்பட்ட பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் மேற்கொண்ட முயற்சிகள் மார்க்ரெட்டைக் கவர்ந்தன. அவர்களுக்குக் கல்வியறிவு ஊட்டப்பட்டது. நிவேதிதாவும் ஒரு பள்ளியை நிறுவினார். அதில் கல்வி கற்றபெண் நிவேதிதாவின் எதிர்பார்ப்புகளுக்குமாறாக கல்வி முடிந்ததும் திருமணம் செய்து கொண்டார். இத்தகைய சிக்கல்களுடன் பொருளாதாரச் சிக்கலும் அவருக்கு இருந்தது. இந்தியாவுக்குள் பல இடங்களுக்கும் சென்று வேதாந்தத்தைப் பரப்புதல், தமது பணத்தேவைகளை நிறைவு செய்துகொள்ளல் போன்ற பணிகளில் ஈடுபட்டார். அவ்வமயம் அமெரிக்காவிலிருந்து விவேகானந்தரின் சொற்பொழிவால் கவரப்பட்டு இந்தியா வந்த, சகோதரி கிறிஸ்டைன் என்பவர் சகோதரி நிவேதிதாவின் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க முன்வந்தார்.

விவேகானந்தருடனும், அவருடைய சீடர்களுடனும் இந்தியப் பகுதிகளுக்குப் பயணம் செய்த நிவேதிதா பல நூல்களை எழுதினார். நான் பார்த்த தலைவர் (The Master ASI saw him) "பயணக் கதைகள் (travel tales) போன்ற முக்கியமானவைகளாகும். பலவார மாத இதழ்களிலும் தமது கருத்துக்களை எழுதி வெளியிட்டார். இந்தியாவில் ஆங்கில ஆதிக்கத்தின் வெறித்தனமாக செயல்கள், காசனின் வங்கப் பிரிவினையின் விளைவுகள், அரவிந்தருக்கு ஏற்பட்ட அரசியல்கதி ஆகியன நிவேதிதாவின் எண்ணங்களுக்கு வலுவூட்டின. இத்தகைய அரசியல் ஈடுபாடுகளில் அவர் தம்மை இராமகிருஷ்ணர் இயக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டார்.

ஜெகதீஸ் சந்திர போஸின் செடிகள் பற்றிய ஆய்வுக்கு உலகின் பல இடங்களிலிருந்தும் வரவேற்பு காணப்பட்டபோது ஆங்கில அரசு அதனை அங்கீகரிக்க மறுத்தபோது அவர் மனம் வேதனையால் துடித்தது. ஆனால் தமது எண்ணங்கள் செயல்பட்டபோது தமது ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தினார். கல்கத்தா மக்கள் காலரா, பிளேக் போன்ற நோய்களால் வருத்தத்திற்குள்ளானபோது தன்னுடைய வலிமை காரணமாக அவற்றை எதிர்த்தார். இந்திய மற்றும் ஆங்கில நண்பர்கள் அவருடைய ஆலோசனைகளையும், ஆதரவையும் நாடினர். விவேகானந்தரால் பெருமைபடுத்தப்பட்ட நிவேதிதா அவருடைய மரணத்திற்குப் பின் அவரது சீடர்களால் போற்றப்பட்டார். இந்தியாவுக்குத் தன்னை அர்ப்பணித்த அப்புனித ஆத்மா இவ்வுலக வாழ்க்கையை 7 அக்டோபர் 1957ல் நீத்தது.



## இந்திரா பிரியதர்ஷினி ( 1917-1984)

### முன்னுரை:

பாரதரத்னா பண்டித நேருவின் ஒரே வாரிசு. அவருடைய குடும்ப பாரம்பரியம் இந்திராவையும் அரசியல்வாதியாக்கியது. 1936ல் அவருடைய தாயாரின் மறைவு, அவரைத் தனது தந்தையுடன் நெருங்கியதால் நேருவின் அரசியல் தாக்கமும் ஈடுபாடும் இந்திராவைத் தொற்றிக் கொண்டது. பொறுப்புகளும் அதிகரித்தன. 1966 ஜனவரியில் அவர் இந்திய பிரதமர் ஆனார். 1971ல் பாகிஸ்தான்போரில் தமது ஆற்றலையும், வீரத்தையும் விவேகத்தையும் வெளிப்படுத்தினார். 1977 முதல் 1979வரை அவர் அரசியல் அஞ்ஞான வாசம் புரியவேண்டியவராயிருந்தார். ஆனால் 1980 தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் மீண்டும் பிரதமரானார். ஆனால் அப்போது ஏற்பட்ட அவருடைய மகன் சஞ்சய் காந்தியின் மரணம் அவரை உலுக்கியது. 1984அக்டோபர் 31 ஆம் நாள் சுடப்பட்டார். சிக்கலான நேரங்களிலும் தெளிவான முடிவுகளை எடுத்து தன்னுடைய நிலையைத் தக்க வைத்துக்கொள்ளும் தன்னம்பிக்கை பெண்களால் பின்பற்றப்பட வேண்டுமென்பதற்கு உதாரணமாயிருந்தார்.

### பிறப்பும், இளமைப்பருவமும்

இந்திரா பிரியதர்ஷினி என்று அழைக்கப்பட்ட இந்திரா காந்தி 1917ம் ஆண்டு நவம்பரம் 19ம் தேதி ஜவஹர்லால் நேருக்கும், கமலா நேருவுக்கும் ஒரே பெண்ணாக பிறந்தவர். உத்திர பிரதேச மாநிலத்தில் உள்ள அலகாபாத் ஆனந்த பவன் என்ற செல்வாக்கு மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய தாத்தா மோதிலால் நேரு, இவருடைய தாய் தந்தையுடன் அனைவருமே சுதந்திர போராட்டத்திற்கு பாடுபட்டதால் அவரது இளமைகால கல்வி தடைப்பட்டது.

### கல்வி

இவர் அலகாபாத்தில் உள்ள மாடர்ன் பள்ளி சுவிட்சர்லாந்து நாட்டில் ஜெனிவாவில் உள்ள சர்வதேசபள்ளி, கல்கத்தாவில் உள்ள சாந்தினி கேதன் பள்ளி, ஆக்ஸ்போர்டு சாமர்வேல் பள்ளி போன்ற கல்வி நிறுவனங்களில் பயின்றவர். இவர் மாணவியாக படிக்கும்போதே வரலாற்று பாடத்திலும் சமதர்ம கொள்கையையும் ஆர்வமாக கற்றார்.

### இந்திரா காந்தியின் திருமணமும், சுதந்திர போராட்டத்தில் பங்கும்

லண்டனில் படித்துக் கொண்டு இருக்கும் போது பெரோஸ்காந்தி என்பவரை காதலித்தார். ஆனால் இவருடைய காதலுக்கு நேரு சம்மதிக்கவில்லை. ஏனென்றால் அவர் சௌராஷ்டிரா (or) பார்ஸி இனத்தைச் சேர்ந்தவர். எனினும் இவரது திருமணம் 1942–ம் ஆண்டு மார்ச் 26–ம் தேதி காந்திஜியின் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு இந்திரா பிரியதர்ஷினி என்பவர் இந்திரா காந்தி என அழைக்கப்பட்டார். பின் இருவரும் 1942–ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டு சிறை சென்றனர். 1947–ல் இந்தியப் பிரிவினையின்போது ஏற்பட்ட இனக்கலவரத்தை தடுத்து நிறுத்த காந்தியடிகளோடு பாடுபட்டனர். இவர் இருவருக்கும் ராஜீவ்காந்தி, சஞ்சய்காந்தி, என்று இருமகன்கள் உள்ளனர்.

### இந்திரா காந்தியின் அரசியல் பிரவேசம்

கமலா நேருவின் இறப்புக்குபின் ஜவஹர்லால் நேருக்கு உற்ற துணையாக இருக்க வேண்டி தனது ஆண் உள்ளங்கொண்ட பிள்ளையுடன் டெல்லியில் உள்ள தீன்மூர்த்தி பவனில் குடியேறினார். வீட்டுப்பராமரிப்பைத் தவிர தந்தையோடு பல வெளிநாட்டு பயணங்களில் பங்கேற்றார். அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தார். உள்நாட்டு, வெளிநாட்டு, அரசியல் பிரமுகர்களையெல்லாம் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் இவருக்கு அரசியலில் ஈடுபடுவதற்கான ஆர்வம் அதிகரித்தது. தன் தந்தையோடு பல அரசியல் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். 1946ல் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஆனார். 1955–ல் காங்கிரஸ் கட்சியின் காரிய கமிட்டிக்கு உறுப்பினர் ஆனார். 1958ல் பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். காங்கிரஸ் ஆட்சியில் மகளிர் பிரிவுக்கு தலைவியாகவும் ஆக்கப்பட்டார். இவ்வாறு கட்சியில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தி 1959–ல் காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு நேருவுக்கு பிறகு அவரது குடும்பத்திலேயே அரசியல் வாரிசு உருவாயிற்று. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவி வகித்ததில் இவருக்கு 4வது இடம் உண்டு. காங்கிரஸ் கட்சி தலைவர் ஆன உடன் நாடு முழுமைக்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். வறுமை, ஊழல் போன்றவற்றை ஒழிப்பதில் முனைப்புடன் காணப்பட்டார். இளைஞர்கள் அதிகமாக ஆட்சியில் பங்குபெற வேண்டும் என்று அதிகமாக வலியுறுத்தினார். எ.கா:– காங்கிரஸ் இல்லாத மற்ற அரசாங்கம் அமைவதை எதிர்த்தார். கேரளாவில் கம்யூனிச கட்சியின் அரசாங்கம் நம்பூதிரிபாட் தலைமையில் அமைவதை எதிர்த்தார். பிரிவு 356–ஐ பயன்படுத்தி காங்கிரஸ் இல்லாத அரசியலை நீக்க வேண்டும் என்று குரல் கொடுத்தார். இதனால் பெரோஸ் காந்திக்கும், இந்திரா காந்திக்கும் இடையே தீவிர கருத்து வேறுபாடு ஏற்பட்டது. 1960–ல் திடீரென பெரோஸ்காந்தி இறந்தவுடன் தீவிரமாக இன்னும் அரசியலில் ஈடுபட்டார். நேருவின் ஆட்சிக்காலத்திலேயே தனக்கென அரசியலிலும், ஆட்சியிலும், கட்சியிலும் ஒரு அடிப்படையான அடித்தளத்தை அமைத்துக் கொண்டார்.



### 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற பங்களாதேஷ் போரில் இந்திரா காந்தியின் பங்கு

1971–ல் பாகிஸ்தானில் நடைபெற்ற உள்நாட்டு போரில் கிழக்கு வங்காளத்திற்கும், மேற்கு பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற போரில் ஷேக் முஜிபூர் ரகுமான் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதற்காக இப்போரில் கலந்து கொண்டார். இப்போரின் மூலமாக பங்களாதேஷ் என்ற புதிய நாடு உருவாவதற்கு காரணமாக இருந்தவர் இந்திராகாந்தி. இதன் மூலமாக இந்திரா காந்தியின் புகழ் இந்திய அரங்கில் ஓங்கி ஒலித்தது.

### சிம்லா ஒப்பந்தம் ஏற்பட காரணமாக இந்திரா காந்தி

இவ்வொப்பந்தம் இந்திராகாந்திக்கும் அப்போதைய பாகிஸ்தானின் பிரதமர் சுல்பீகான் அலி பூட்டோவுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம். இவ்வொப்பந்தத்தின் மூலம் இந்தியா பாகிஸ்தான் இடையே உள்ள காஷ்மீர் பிரச்சனைக்கு இடைக்கால நிவாரணம் கண்டார். மேலும் இவ்வொப்பந்தம் பல் துறைகளில் ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைந்தது.

### MISA(மிசா) பிரகடனம்: (உள்நாட்டு பாதுகாப்பு காப்பாற்றுச் சட்டம்) (Maintenance of Internal Securing Act)

1971–ம் ஆண்டு மே மாதம் முதல் 1972–ம் ஆண்டு ஜீன் மாதம் வரை 13 மாதங்கள் இப்பிரகடனம் இந்தியாவில் நாடு முழுமைக்கும் செயல்படக் காரணமாக இருந்தவர் இவர். இப்பிரகடனத்தின் மூலமாக காரணம் காட்டாமல் எவர் ஒருவரையும் கைது செய்து காலவரையறையின்றி காவலில் வைக்கலாம். அரசியலில் இப்பிரகடனத்தின் மூலமாக பதுக்கல்காரர்கள், எல்லைக் கடத்தல் காரர்கள், வரி ஏய்ப்போர், சமூக விரோதிகள், தனது அரசியல் எதிரிகள், தனது அரசாங்கத்திற்கு வேண்டாதவர்கள் என 6000 பேரை இப்பிரகடனச் சட்டத்தின் மூலமாக தண்டிக்கப்பட காரணமாக இருந்தார்.

### நெருக்கடி நிலைப்பிரகடனம் கொண்டு வருதல்

இப்பிரகடனம் சித்தார்த்தர் ஷங்கரே என்பவரின் ஆலோசனையின் படி 1975ஆம் ஆண்டு ஜுன் மாதம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த பக்ருதீன் அலி அகமது என்பவர் மூலம் கொண்டுவரப்பட்டது. இந்திராகாந்தி, உள்நாட்டு குழப்பங்களால் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து வந்துள்ளதாக கூறி பிரகடனம் அறிவிக்கப்பட்டது. இப்பிரகடனத்தின் மூலமாக முக்கியத் தலைவரான ஜெயபிரகாஷ் நாராயணன், மொரார்ஜி இராஷ்டிரிய சுயம் சேவக் சங்கத்தின் தேசாய், முக்கியத் தலைவர்கள் 35000 பேர் விசாரணையின்றி காவலில் வைக்கப்பட்டனர். இப்பிரகடனத்தின் மூலமாக பத்திரிக்கை சுதந்திரம் கடுமையாக்கப்பட்டது. ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்பட்டன. அரசு ஊழியர்களின் ஊதியம் முடக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன.

### 20 அம்ச திட்டம் கொண்டுவருதல்

இந்திய நாட்டினை மிகப்பெரிய வல்லரசு நாடாக மாற்ற வேண்டும் என்று எண்ணிய இந்திராகாந்தி இத்திட்டத்தை கொண்டுவர காரணமாக

இருந்தவர். இதன் மூலமாக அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி வேளாண்மையில் மிகப்பெரிய மாற்றம், அணு ஆயுத உற்பத்தியில் மற்ற நாடுகளுக்கு நிவாரண வளர்ச்சி, கிராமப்புற முன்னேற்றம், பெருந்தொழில்களில் வளர்ச்சி போன்ற அம்சங்களை கொண்டு இத்திட்டத்தை வெளியிட்டுச் செயல்படுத்தினர்.

### 1977ஆம் ஆண்டு பொது தேர்தலில் இந்திராகாந்தி படுதோல்வி

இந்திரா காந்தி இந்தியாவை நெருக்கடி நிலைக்கு கொண்டு சென்ற இச்செயல் 1977–ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் படுதோல்வி அடையக் காரணமாக இருந்தது. இத்தேர்தலின் மூலமாக மொரார்ஜி தேசாயின் தலைமையில் ஜனதா கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது. பின் பல காரணங்களுக்காக இந்திராகாந்தி கைது செய்யப்பட்டார்.

### இந்திரா காந்தியைப் பழிவாங்க முனைந்த ஜனதா கட்சி அரசாங்கம்

1977ஆம் ஆண்டு சி.பி.ஐ.–ஆல் இந்திரா காந்தி அக்டோபர் 3ல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவரது நெருக்கடி கால கட்சியில் நடைபெற்ற அத்துமீறல்களை விசாரிப்பதற்காக விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டது. பின் மக்களவையில் இருந்து நீக்கப்பட்டு பீகார் சிறையில் அடைக்கப்பட்டார். இவ்வாறு ஜனதா கட்சி அரசாங்கத்தால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்.

### 3வது முறையாக ஆட்சி அமைத்தல்

1980ஆம் ஆண்டு ஜனவரி 3ந் தேதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்திராகாந்தியின் காங்கிரஸ் கட்சியின் 542 இடங்களில் போட்டியிட்டு 351 இடங்களில் வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் காரணம் ஜனதா கட்சி அரசாங்கம் ஒரு நிலையான அரசாங்கத்தை கொடுக்காததுதான். பதவிகளுக்காக அவர்கள் போட்டியிட்டுக் கொண்டு சண்டையிட்டது இந்திராகாந்தி மீண்டும் எழுச்சி பெறுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது.

### ஆப்பரேஷன் புளூ ஸ்டார் (Operation Blue Star)

1984ஆம் ஆண்டு சுமார் 70,000 ராணுவ வீரர்களை சீக்கியர்களின் புனித தளமான பொற்கோயிலுக்குள் சூழ்ந்து அங்கு சிக்கிய தீவிரவாதிகளை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இயக்கம்தான் ஆப்பரேஷன் ஆஃப் புளூ ஸ்டார் என்று அழைக்கப்பட்டது. இவ்வியக்கம் சுமார் 800 முதல் 1000 சீக்கியர்கள் கொல்லப்பட காரணமாக இருந்தது.

### அணு ஆயுத வெடிப்புச் சோதனையில் உலக நாடுகள் பிரமிக்கதக்க செயலை உருவாக்கியது

உலகில் இந்திய நாடும் அணு ஆயுத தயாரிப்பில் ஒரு முன்னனி நாடுகளில் ஒன்று என்பதை காட்டுவதற்காக சிறந்த அறிவியல் விஞ்ஞானியான ராஜா மன்னார் என்பவருடைய தலைமையில் அணு ஆயுதச் சோதனையை நடத்த ஏற்பாடு செய்தார். இதன்படி இந்தியாவில் முதன்முதலில் ராஜஸ்தானில் உள்ள பொக்ரான் என்ற இடத்தில் இரண்டு அணுகுண்டு சோதனைகளை நடத்தி உலக நாடுகளே வியக்கும் வண்ணம் அணு ஆயுத உற்பத்திக்கு திட்டம் வகுத்துக் கொடுத்தார். தனது பகை நாடுகளை மிரளவைக்கும் அளவு, சவால் விடக்கூடிய நிலையில் இச்சம்பவம் அமைந்தது. இதன் மூலமாக உலக அரங்கில் ஆக்க பூர்வ பணிகளுக்கு மட்டுமே அணுசக்தி பயன்படுத்தப்படும் என்பதை கோடிட்டுக் காண்பித்தார்.



### அணுசக்தி துறையில் அவர் மேற்கொண்ட முக்கிய நடவடிக்கைகள்

சென்னை கல்பாக்கம் மற்றும் ராஜஸ்தானில் கோட்டா ஆகிய இடங்களில் அணுமின் நிலையம் அமைக்கப்பட காரணமாக இருந்தவர். மேலும் நாட்டின் பாதுகாப்பு துறையில் முக்கிய ஏவுகணை பிருத்திவி தயாரிப்பதற்கு காரணமாக அமைந்தவர். ஐந்து ஆண்டுத் திட்டத்தின் மூலமாக நேரு ஆரம்பித்து வைத்த தொழிற் வளர்ச்சியை பன்மடங்காக்கி நாட்டில் உற்பத்தி பொருட்களை அதிகமாக்கியவர் இவரே.

### மதிப்பீடு

ஆப்பரேஷன் ஆப் புளூ ஸ்டார் மூலமாக சீக்கியர்களின் வெறுப்பை சம்பாதித்த இந்திரா காந்தி 1984ஆம் ஆண்டு அக்டோபர் 31ம் தேதி காலையில் சாப்பன்சிங் என்ற மெய்காப்பாளரால் சரமாரியாக குண்டுகள் துளைக்க சுட்டுக் கொல்லப்பட்டார். நாட்டில் காந்திஜிக்கு அடுத்தாற்போல் படுகொலை செய்யப்பட்டு இறந்தார். இந்தியா வளர்ச்சி அடைந்த நாடுகளில் முக்கியமான ஒன்றாக இருப்பதற்கு இவருடைய பங்கும் ஒரு காரணம் எனக் கூறலாம்.

## பண்டித ரமாபாய் (1858-1922)

இந்தியப் பெண்களின் விடுதலை இயக்கத்திற்கு அடித்தளம் அமைத்து தந்தவர் பண்டிதரமாபாய். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடியவர். 1889ல் மும்பையில் கூடிய ஐந்தாவது இந்திய தேசிய காங்கிரஸில் ஒன்பது பெண்களுடன் பங்கேற்று உரையாற்றியவர். அப்போதே குடும்பப் பெண்களுக்குத் தேவையான உரிமைகள் தரப்படவேண்டுமென்று வாதிட்டார். விதவைகளை, பிறரைச் சார்ந்து வாழும் பண்பினராகச் செய்யும் மூடப்பழக்க வழக்கத்தைச் சாடினார். தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக் கொள்ளும் உரிமை கொண்டுள்ள ஆண்களைப்போல் பெண்ணுக்கும் அத்தகைய உரிமை வேண்டுமென வற்புறுத்தினார். ஆன்மீக உணர்வினால் ஆண்களைவிட அதிக உந்துதலைப் பெறும் பெண்கள் கல்விகற்கவும், உரிமை பெற வேண்டும். ஒன்பதுவயதுப் பெண் ஒருத்தி தன்னுடைய கணவன் இறந்தபோது அவனுடைய சிதையில் உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றபோது அவளைக் காப்பாற்றினார். சட்டமும், பெண்கள் ஆண்களுக்கு கட்டுப்பட்டுச் செயல்பட வேண்டுமென வற்புறுத்தியபோது ரமாபாய் அதனை எதிர்க்கத் தலைப்பட்டார். தனது தந்தையார் ஆனந்த சாஸ்திரி, ரமாபாயின் 16ஆவது வயதில் காலமானபோது அவருக்குத் தேவையான கடமைகளைச் சரிவர ஆற்ற இயலவில்லை.

அதேபோல் அவருடைய தாய் இலட்சுமிபாய் டோங்ரே தன்னுடைய வாழ்வின் இறுதிக்கட்டத்தில் இருந்தபோது இருந்தும் உயிர்வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

அமரகோஷம், சித்தாந்தம், கீதை மற்றும் மகாபாரதம் போன்றவற்றிலிருந்து பல கருத்துக்களைத் தெரிந்து வைத்திருந்தார். தனது தாயின் இறந்த உடலைச் சுமந்து சென்று சிதையிலிடத் தனக்கு உரிமையுண்டு என்று வாதிட்டு ஆணுடன் சமஉரிமை கொண்டாடியவர் ரமாபாய். தமது பெற்றோரின் இறப்புக்குப் பின் கதாகாலட்சேபம் செய்து தமது தேவைகளை நிறைவு செய்து கொண்டார். அவருடைய சமஸ்கிருத அறிவும் இந்து ஆன்மீகத் தத்துவங்களில் காட்டிய ஈடுபாடும் அவருக்குத் துணை நின்றன. அவளுடைய சொல்லாற்றல் பலராலும் பாராட்டப்பட்டது. தம்மை கல்விக் கடவுளின் அடிமை எனக் கருதிய ரமாபாய் பிறரால் பண்டித என்ற அடைமொழியுடன் போற்றப்பட்டது பெருமைக்குரியதேயாகும்.

பெண்களின் பெருமையை நிலைநாட்டப்பாடுபட்ட பண்டித ரமாபாய் சீதா தேவகி, திரௌபதி, சாவித்திரி போன்றோரின் வாழ்க்கையை எடுத்துச் சொல்லுவதில் நிபுணராயிருந்தார். குழந்தை மணம் மற்றும் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டமையைக் கடுமையாகச் சாடினார். சாத்திரங்கள் படித்த ஆடவர் உலகம் பெண்களைச் சமஉரிமை கொண்டவர்களாக நடத்த வேண்டுமெனக் கூறினார். கேசவ சந்திரசென்தான் அவருக்கு வேதத்தைப் பயின்று அதன் சாரத்தைப் பெண்கள் புரிந்துகொள்ள வேண்டுமெனக் கூறினார். திருமண பந்தம் மூலம் இணைக்கப்படும் ஆண், பெண் இருவரும் சமஉரிமை கொண்டவர்களாகச் செயல்பட வேண்டுமென்றார். தயானந்த சரஸ்வதியையும் அவர் சந்தித்தார். புனாவில் மகாதேவ் கோவிந்த ரானடேவின் ஆதரவில் பல சொற்பொழிவுகளை ஆற்றினார். அவ்வமயம் இந்து சமயத்தில் காணப்படும் நலத்துறைகளைச் சாடினார்.

1882க்குப் பின் பெண்கல்வி பற்றித் தமது கருத்துக்களை வெளியிட்டார். பெண்கள் ஆசிரியைகளாக நியமிக்கப்பட வேண்டுமென்றார். அரசு ஆண் மற்றும் பெண் ஆசிரிய, ஆசிரியைகளிடம் எவ்வித பேதமும் பாராட்டக்கூடாதென வலியுறுத்தினார். பெண்கள் மருத்துவத்துறையில் பங்கு பெறவேண்டுமென்றார். அதனால் பெண்களுக்கான மருத்துவ நிலையங்கள் உருவாக்கப்பட்டன. 1883ல் இங்கிலாந்துக்குச் சென்ற ரமாபாய் பெண்கள் பாதுகாப்பு இல்லங்களுக்குச் சென்று பார்த்தார். அத்தகைய அமைப்பு முறையில் இந்தியப் பெண்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வழிவகுத்தார். 1888ல் அவருடைய நூலான 'மேல் ஜாதி இந்துப் பெண்கள்' (The High Caste Hindu Women) என்பது வெளியிடப்பட்டது. பாஸ்டனில் அவரது நினைவாக 'பண்டித ரமா பாய் அசோஷியேசன்' உருவாக்கப்பட்டது. மராத்திய மொழியில் பாலோதியான் (Bolodyan) என்ற நூல் எழுதினார். லோக்ஸ்திரி (Lok silthi) என்ற நூலையும் எழுதினார். இவற்றின் மூலம் அவருடைய மொழியறிவை நாம் நன்கறியலாம்.

விதவைகள் மற்றும் ஒதுக்கப்பட்ட பெண்களுக்காக 'சாரதாசதன்' என்ற அமைப்பினை உருவாக்கினார். சாரதா என்ற மறுமணம் செய்து கொண்ட



விதவை அவ்வமைப்பின் முதல் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டிருந்தார். ஆர்.ஜி. பண்டார்கர், எம்.ஜி. ரானடே போன்றோர் அவ்வமைப்பின் ஆலோசகர்களாகத் திகழ்ந்தனர். பெண்களை தன்னம்பிக்கை உடையவர்களாகவும், சுதந்திரமானவர்களாக இயங்கச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்தையும் உடையதாயிருந்தது. அவ்வமைப்பின் உறுப்பினர்களான பெண்களுக்கு பல தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டது. தையல்வேலை, மட்பாண்டங்கள் செய்தல், தோட்டவேலை போன்றவை அத்தகைய பணிகளாகும். அங்கு பெண்களுக்கு ஒரு விடுதலையான நிலை காணப்பட்டது.

சமூக சீர்திருத்தம் என்ற நோக்கில் ஆண்களிடம் காணப்பட்ட முறைகேடுகளான சூதாட்டம், குடி போன்றவற்றைத் தவிர்க்க முற்பட்டார். விதவை மறுமணத்தை நடைமுறையில் நடத்திக் காட்டியவர் ரமாபாய் கோதுபாய் என்ற விதவையை அன்னை சாகேப் கார்வே என்பவருக்குத் திருமணம் செய்து வைத்து புரட்சி ஏற்படுத்தினார். ரமாபாயின் வேண்டுகோளின்படி பெண்களுக்கான ஆசிரமம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

மராட்டிய மாநிலத்தில் பண்டித ரமாபாயின் அருஞ்செயல்களால் பெண்கள் முன்னேற்றம் சீராக நடைபெறச் செய்யப்பட்டது. கடுமையான எதிர்ப்புகளை பழமைவாதிகளும், அச்சுறுத்தல் காட்டியபோதும் அவர் அச்சமடையவில்லை. இந்தியப் பெண்களின் நலனுக்குப் போராடுவதைத் தமது தலையாய பணியாகக் கொண்டார். தொற்று நோயான பிளேக் புனேயைத் தாக்கியபோது தாக்கப்பட்டோரின் துயர்துடைக்க அவர் ஆற்றிய பணிகள் போற்றப்படுவனவாகும்.

அவரது அன்பும், பாசமும் பலருக்கு முன்னோடிகளாகும். துன்பங்கள் கண்டு துவண்டுவிடாமல் தனது சேவாசதனை சுய சார்புடைய அமைப்பாக ஆக்கினார். அவருடைய செயல்பாடுகள் பெண்களை முன்னேற்றப்பாதையில் கொண்டு செலுத்தின.

## சரோஜினி நாயுடு(1876-1949)

இந்தியக் கவிக்குயில் சரோஜினி நாயுடு மிகச்சிறந்த பேச்சாளர். அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைத் தலைவருள் ஒருவர் காந்தியடிகள் இந்தியா வருவதற்கு முன்பே அவர் காங்கிரஸ் மகா சபையுடன் தொடர்புகொண்டிருந்தார். பல ஆண்டுகளாக காங்கிரஸ் மகாசபையின் பணியாற்றிய அவர்1925ல் கான்பூர் காங்கிரஸ் மகாசபையின் தலைவராக்கப்பட்டார். அவர் அவ்வமயம் காங்கிரஸ் தலைவராயிருந்த காந்தியடிகளிடமிருந்து அப்பொறுப்பைப் பெற்றுக்கொண்டார். காங்கிரஸ் தலைவராக அவர் எதனையும் எழுதிவைத்துக் கொள்ளாமல் தானே பேசியதன் மூலம் தன்னுடைய பேச்சாற்றலை வெளிப்படுத்தினார். ஆங்கில மொழியின் நுண்மாண் நுழைபுலம் கொண்ட அவர் சிறந்த கவிஞராகத் திகழ்ந்தவர். பொன்வாயில்படி (The Golden Threshold) (1905), காலப்பறவை (The Bird of time) (1912) உடைக்கப்பட்ட சிறகு (The Broken wing 1917) போன்றவை அவருடைய கவிதைப் படைப்புகள். அவருடைய ஆங்கிலப் பண்டப்புக்கள் இந்தியக் கல்லூரிகளில் பாடநூற்களாக வைக்கப்படும் அளவிற்குத்

கருத்துடையனவாயிருந்தன. காந்திஜியால் 'இந்தியாவின் நைட்டிங்கேல்' என்று புகழப்பட்ட அவர் தமது நண்பர்களிடமும், ஆதரவாளர்களிடமும் கொண்டிருந்த மதிப்பு அளவிடற்கரியது. அரசியல் ஈடுபாடுகளால் அவர் பலமுறை சிறைப்பட்டார். அரசியலில் அவர் கொண்டிருந்த மோகம் அவரது கவிதை இயற்றும் ஆற்றலுக்கு தடையாயிருந்தமையால் கவிதையை விட்டு விட்டு இந்தியாவுக்குத் தம்மை அர்ப்பணித்தார். மிகச் சிறந்த நாட்டுப்பற்றாளராக சரோஜினி இந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் அருகில் வருவதற்குப் பாடுபட்டார். முஸ்லீம்லீக் தலைவர் ஜின்னாவுக்கு நெருங்கிய நண்பராகச் செயல்பட்டார். இந்தியா விடுதலை பெற்றதும் அன்றைய ஐக்கிய மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவருடைய ஒப்பற்ற செயல்களால் அப்பணி பெருமை பெற்றது. ஒரு மாநில ஆளுநர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கோர் முன் மாதிரியாகச் செயல்பட்டார்.

நாயுடு வம்சத்தினரான அவர் பிராமணரல்லாத நாயுடுவை, 1872–ஆம் ஆண்டின் பிரம்மோ திருமணச் சட்டத்தின்படி, 1898–ல் சென்னையில் திருமணம் செய்துகொண்டார். ஜெயசூர்யா(1899), பத்மஜா(1900), ரண்தீரா (1902) மற்றும் லீலாமணி (1903) ஆகியோர் அவரது குழந்தைகள். அகோரநாத் மற்றும் சுந்தர்தேவி ஆகியோரின் மகளான சரோஜினி நாயுடு, தமது பன்மொழிப் புலவரான தந்தையின் ஈடுபாடு காரணமாகவே ஆற்றல் வாய்ந்த பேச்சாளராக முடிந்தது. அறிவாற்றல், திறமை, மரியாதை ஆகியவற்றின் மறு அவதாரமே சரோஜினி என்றால் மிகையாகாது. 22 பிப்ரவரி 1944ல் காலஞ்சென்ற கஸ்தூரிபாவின் நினைவு நிதிக்காக ஒரு கோடியே 31 இலட்சம் ரூபாய்கள் இந்தியா முழுவதிலுமிருந்து திரட்டிக் கொடுத்தார். அப்பணமே கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு நிதியாகப் பயன்படுத்தப்பட்டது. அது காந்திஜி மீது அவர் கொண்டிருந்த பற்றுதலுக்கு ஆதாரமாகும். இந்தியாவின் பெருமையையும், புகழினையும் அயல்நாடுகளில் நிலைநாட்டினார். காந்திஜியுடன் இந்தியாவின் பெண்பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்றார். அயரா உழைப்பினால் 2, மார்ச் 1949ல் காலமானார்.

## ருக்மணிதேவி அருண்டேல் (1904.1986)

29 பிப்ரவரி 1904ல் ஒரு மகாமகநாளில் நீலகண்டசாஸ்திரி என்பவரின் மகளாக மதுரையில் பிறந்தார். இளம் வயது முதலே அவர் பரதநாட்டியத்தால் ஈர்க்கப்பட்டிருந்தார். மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்னும் குழுவின் மூலமாக தேவதாசிகளின் நடனமான சதிராட்டத்தைக் கற்றுக் கொண்டார். 1935ல் பிரம்ம ஞானசபை மாநாட்டில் தமது நாட்டியத்தை அரங்கேற்றினார். ஜ்யார்ஜ் அருண்டேல் என்ற ஆங்கிலேயர் அவருடைய கணவர். அவர் நாட்டியமென்பது ஓர் ஆன்மீகக்கலை என்று ஈடுபாடு கொண்டிருந்தார். அவர்தான் 'சதிர்' என்பதை 'பாரதநாட்டிய'மென்று அழைத்தார். பாரதம் என்ற பெயரை நம் தாயகத்திற்கு வழங்கிய பரதனின் பெயருக்கேற்பவும், நாட்டிய சாஸ்திரம் என்ற நூலின் ஆசிரியராக பரதன் விளங்கியதாலும் தனது நாட்டியத்தைப் பரதநாட்டியம் எனப் பெயரிட்டு அழைத்தார். 'பாவம்' அதாவது உணர்ச்சி 'ராகம்' அல்லது இன்னிசை, 'தாளம்' அல்லது 'சந்தம்' ஆகிய மூன்றும்



பரதநாட்டியத்தில் முப்பெரும் பண்புகளாகும். சர்வதேச கலாநிலையம் அவரால் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஒரு மாணவியுடன் துவக்கப்பட்ட அவ்வமைப்பு வெகு குறுகிய காலத்தில் ஒரு பன்னாட்டு அமைப்பாக மாறியது. இசை நாட்டியம் ஆகியவற்றால் கலாசேத்திரத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. ஓவியம் தீட்டல், ஆந்திர கலம் காரிப்பணி, பட்டு மற்றும் பருத்தித் துணிகளில் பூவேலைப்பாடு ஆகியனவும் அவரைக் கவர்ந்திழுத்தன. பிரம்ம ஞானம், சைவ உணவு உண்ணல், கால்நடைபராமரிப்பு ஆகியனவும் அவருடைய எண்ணங்கள் மூலம் நடை முறைப்படுத்தப்பட்டன. அவர் இருமுறை இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவை (Rajya sabha) உறுப்பினராகத் திகழ்ந்தார். அவர்தான் இந்தியாவில் குழந்தைகளுக்கான முதல் பாண்டிசேரி பள்ளியை இந்தியாவில் நிறுவியவர்.

அவரால் தரப்பட்ட பலவகையான பயிற்சிகளும் அப்பழுக்கற்றவையாயிருந்தன. மிகச் சிறந்த மேதைகளான பாபநாசம் சிவன் போன்றோரை கலாஷேத்திரத்தில் ஆசிரியப்பணியில் அமர்த்தினார். குருகுல அமைப்பு முறையில் பயிற்சிகள் திறந்தவெளியில் தரப்பட்டன. அல்லது அடையார் ஆலமரத்தின் கீழ்தரப்பட்டன. இந்தியப் பண்பாட்டில் அசைக்கவொண்ணாத இடத்தைப் பெற்றிருந்த அவர் இந்தியக் கலை மற்றும் சமூக முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்டவராயிருந்தார். தைரியமும், ஒழுக்க பண்பில் ஈடுபாடு கொண்ட கலாஷேத்திரம் அவருடைய பெயரினை நிலைநாட்டும் ஒரு நினைவுச் சின்னமாகும் நடனத்துறையில் அவர் ஆற்றியபணி அளவிடற்கரியதாகும். அவர் ஒரு பன்முகச் செம்மலாகத் திகழ்ந்தார். இந்தியத் தாயின் கலையமைப்பான நாடகக்கலைக்குப் பெருமை சேர்த்தவர். அவர் அழகினை ரசிக்கும் ஒரு கவிஞராகவும் திகழ்ந்தார்.

## மார்க்ரெட் கசின்ஸ்( 1878.1954)

மார்க்ரெட் கசின்ஸ், அவ்வுருடைய கணவர் ஆகிய இருவரும் அயர்லாந்துப் பெண்மணியான அன்னிபெசன்ட்டுடன் இணைந்து நாற்பதாண்டுகள் காலம் இந்திய முன்னேற்றத்திற்கு வழிகோலினார். இந்தியப் பெண்கள் முன்னேற்ற இயக்கத்தின் முன்னணி வீராங்கனையாகத் திகழ்ந்தார். இந்தியப் பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டிருந்தார். இந்தியப் பெண்மணிகளுக்கு கல்வி அளித்து அவர்கள் மூலமாக இந்திய விடுதலை எட்டப்பட வேண்டும் என்றார். ஆந்திராவில், சித்தூர் மாவட்டத்தில் மதனப்பள்ளியில் அதற்கான பள்ளி நிறுவப்பட்டது. அகில இந்திய பெண்கள் அமைப்பாக அது வளர்ச்சியடைந்தது. அதன்கிளைகள் இந்தியாவெங்கிலும் உருவாக்கப்பட்டன. மதனப்பள்ளியில் பெண்களுக்காக உருவாக்கப்பட்ட பள்ளி 'தென்னக சாந்திநிகேதன்' எனப்பட்டது. பிரம்மஞான கல்லூரியில் அவர்கள் படைப்பேயாகும். பெண்கள் இய்க்கம் பெண்களால் நடத்தப்பட வேண்டுமென எண்ணிய அவர் கையெழுத்து அல்லது கட்டைவிரல் அடையாளம் வாங்கி அவர்களுடைய கல்விபெற வேண்டுமென்ற ஆர்வத்தை அளவிட எண்ணினார். இவ்வாறு மார்க்கரெட்கசின்ஸ் இந்தியப் பெண் கல்வியில் ஒரு திருப்பு முனையை உருவாக்கினார்.

## கஸ்தூரிபா காந்தி (1869-1944)

காந்திஜியின் உடலும் உயிருமாக விளங்கிய கஸ்தூரிபா காந்தியை மகாத்மா ஆக ஆக்கவும் அவரை 'இந்தியாவின் தந்தை' என்ற பட்டத்திற்கு உரியவராகவும் ஆக்கினார். அண்ணலின் அஹிம்சைக் கோட்பாட்டினையும் அறநெறிக் கோட்பாட்டினையும் அணுவளவும் பிறழாது பின்பற்றியவர். பிறரது தேவைகளை நிறைவு செய்வதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். அவர் காந்திஜியை மன்னர்களுக்கெல்லாம் மேம்பட்டவராகவும் மன்னர்களை உருவாக்குபவர் என்பதையும் புரிந்து கொண்டிருந்தார். தன்னம்பிக்கையின் உறைவிடமாக விளங்கியவர். தென் ஆப்பிரிக்காவிலும், இந்தியாவிலும் காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கங்களில் பங்கேற்றும் பலமுறைகள் சிறைச்சாலைக்குச் சென்றவர். ஹரிலால், மணிலால், ராம்தாஸ், தேவதாஸ் ஆகிய நால்வரும் அவருடைய மக்கள்.

காந்தியடிகள் தமது உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது பெண்கள் கதர் வளர்ச்சி மற்றும் குடிபோதையைத் தவிர்த்தல் ஆகிய பணிகளில் ஈடுபடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டபோது கஸ்தூரிபா மதுபானக் கடைகள் முன்பு மறியலில் ஈடுபட்டார். கதர் விற்பனையிலும் ஈடுபட்டார். 1944 பிப்ரவரி 22 ஆம் நாள் ஆகாகான் அரண்மனையில் அவர் காலமானார். கஸ்தூரிபா இல்லாத வாழ்க்கையைத் தன்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாதெனக் காந்தியடிகள் கூறுமளவிற்கு அவர் மதிப்புடையவராயிருந்தார். சபர்மதி ஆசிரமவாதிகளுக்கு அவர் அன்னையாகத் திகழ்ந்தார். தினமும் நூல் நூற்பதைத் தவறாமல் மேற்கொண்டிருந்தார். 1943 பிப்ரவரி–மார்ச்சில் காந்தியடிகள் தமது உண்ணாவிரதத்தைத் தொடங்கியபோது கஸ்தூரிபா ஒரு வேளை உணவுதனையே ஒவ்வொருநாளும் உண்டார். கஸ்தூரிபாவிடமிருந்தே சத்தியாக்கிரகம் பற்றிதான் அறிந்துகொண்டதாகக் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளார். தமது சுயதுன்பங்களை எதிர்க்கும் ஒரு கருவியாக சத்தியாகிரகத்தைக் கடைப்பிடிப்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார். தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்திஜி தம்பதியினர் இந்தியா திரும்புகையில் பெற்ற பரிசுகள் தொகை ஆகியவற்றை கஸ்தூரிபா விரும்பினார். ஆனால் காந்திஜி அதனை ஒரு தர்மப்பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு இந்தியர்களைச் சென்றடைய வேண்டுமென்றார். அதனை மறுப்பேதுமின்றி கஸ்தூரிபா ஏற்றுக்கொண்டார். காந்திஜி சிறைப்பட்ட நேரங்களில் எல்லாம் பாவினுடைய பேச்சுகள் மிகக் குறைவாயிருந்தன. காந்தியடிகளுக்காக தீண்டத்தகாதோர் எனப்பட்ட ஹரிஜன சேவையிலும் கஸ்தூரிபா தன்னை இணைத்துக் கொண்டார். தாமே இலட்சுமி என்ற ஹரிஜனப் பெண்ணைத் தமது பெண்ணாக சுவீகாரம் செய்துகொண்டு அவளுடைய திருமணத்தையும் நடத்திவைத்தார். தமது குடும்பத்தினரைப்போல அனைவரிடமும் பாசமும் பற்றுதலும் கொண்டிருந்தார். காந்தியடிகளின் அருஞ்செயல்களில் அன்னை கஸ்தூரிபாயின் பங்கு வியக்கத்தக்கதாயிருந்தது.



## கமலாநேரு (1900-1936)

8, பிப்ரவரி, 1916ல் பாரதரத்னா பண்டித ஜவஹர்லால் நேருவைத் திருமணம் செய்து கொண்ட கமலா கௌல் காஷ்மீர் பண்டிட் குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்போது கமலாவுக்கு வயது 17தான். பண்டிட் மற்றும் மௌல்விகள் வாயிலாக வீட்டிலேயே கல்வி பயின்று தம் அறிவினைப் பெருக்கிக் கொண்டார். ஆரம்ப காலத்தில் தன்னைச் சுற்றியுள்ள சமூகம் பற்றி எண்ணாமல் வாழ்வின் அடிப்படை மதிப்புகளிலேயே அக்கறை காட்டினார். காந்திஜியின் சாத்விகச் சட்ட மறுப்பு இயக்கம் கமலாவை காந்திஜியின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்கத் தூண்டியது. அர்ப்பணிப்பு ஆர்வம் அவரிடம் மேலோங்கியது. 1921 முதல் 1923 வரையுள்ள காலகட்டங்களில் ஜவஹர்லால் நேரு சுமார் 350 நாட்கள் சிறையிலடைக்கப்பட்ட போதும் அவர் அதுபற்றிக் கவலைப்படாமல் நேருவின் செயற்பாடுகளை அங்கீகரித்தார். அவருடன் இணைந்து செயல்பட்டு அவருடன் சிறைப்படுத்தப்பட்டார். 1931க்குப் பின் அவரது உடல்நலம் குறையலாயிற்று. இருப்பினும் அலகாபாத் மாவட்ட காங்கிரஸ் தலைவி என்ற நிலையில் அரசியலில் ஈடுபட்டார். காந்தியடிகள் சாத்வீக சட்டமறுப்பு இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். அயல்நாட்டு வாழ்க்கையும், உடையமைப்பும் மாற்றப்பட்டன. கதர் அவர்களுடைய குடும்பத்தின் சொத்தாக்கப்பட்டது. மருத்துவர் மற்றும் நண்பர்களின் ஆலோசனையைப் புறக்கணித்து அயல்நாட்டுக் கடைகளில் மறியல் செய்வதையும், பெண்களை சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்யத் தயார் செய்வதிலும் அவர் கவனம் செலுத்தினார். 'தேசிய சேவிகா சங்கம்' என்ற அமைப்பின் வாயிலாக அயல்நாட்டுத்துணி பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். தம்க்கு ஏற்பட்ட தீராத காசநோய் காரணமாக 28, பிப்ரவரி 1936ல் தமது 36வது வயதில் அவர் காலமானார். அவரைப்போல் உண்மையான, புத்திசாலித்தனமான கடவுள் பற்றுள்ள பெண்மணியைத் தான் கண்டதில்லை என காந்தியடிகள் புகழாரம் சூட்டினார்.

அவர் எதனையும் ஊன்றிக் கவனிக்கும் தன்மை கொண்டவராயிருந்தார். கல்வியில் நாட்டம் செலுத்திய கமலா உருது படிப்பதிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். இளவயதிலேயே காலஞ்சென்ற கமலா ஆழ்ந்த நாட்டுப்பற்றுடையவராயிருந்தார். சமூகப் பணியாளரான கமலா பெண்கள் முன்னேற்றத்திலும் ஈடுபாடுகாட்டினார். அவரும் ஒருமாதம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இறுதிநாட்களில் இறையுணர்வுடன் செயல்பட்ட கமலா பேலூர் இராமகிருஷ்ண மடத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். அரியதொரு வயதில் அவர் மரணமடையாதிருந்தால் கமலாவின் விடுதலை இயக்கப்பணிகள் விரிநிலை பெற்றிருக்கக்கூடும். இருப்பினும் பெண்கள் எவ்வாறிருக்க வேண்டுமென்பதற்கு கமலா ஒரு எடுத்துக்காட்டெனில் அது மிகையாகாது.

## விஜயலட்சுமி பண்டிட் (1900-1990)

ஸ்வரூபராணி, மோதிலால் நேருவின் மகளாகவும், நேருஜியின் சகோதரியாகவும் ஆகஸ்டு 18, 1900த்தில் பிறந்த விஜயலட்சுமி பண்டிட்

டிசம்பர்1, 1990ல் டோராடுனில் காலமானார். தனது வாழ்க்கை சரித்தை 'மகிழ்ச்சியின் நோக்கம்'(The scope of joy) என்ற நூலாக எழுதினார். அவருடைய காலப்பகுதியில் இந்தியத் துணைக் கண்டமானது எதிர்ப்புகள், குழப்பங்கள் மற்றும் மாற்றங்கள் பலவற்றிற்கு உட்பட்டுக் கொண்டிருந்த காலமாகும். அவருடைய குடும்பத்தில் பாரம்பரியப் பண்புகளும், புதுமைத் தன்மைகளும் இணைந்த ஒரு தன்மை காணப்பட்டன. 1937ஆம் ஆண்டிலேயே அவர் இந்தியாவின் முதல் பெண் அமைச்சராக்கப்பட்டார். அப்பொறுப்பினை வைத்த உலகின் இரண்டாவது பெண்மணியும் விஜயலட்சுமி பண்டிட்தான். 1946ல் ஐக்கிய நாட்டவைக்குச் சென்ற குழுவிற்குச் தலைமையேற்றுச் செயல்பட்ட பெண்மணியும் அவர்தான் 1953–ல் ஐக்கிய நாட்டவையின் பொதுச் சபையின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற முதல் பெண்ணும் விஜயலட்சுமிதான். 1947க்குப் பின் மாஸ்கோ, வாஷிங்டன் மற்றும் லண்டன் போன்ற இடங்களில் முதல் இந்தியத்தூதுவராக அவர் பணியாற்றினார். 1916ஆம் ஆண்டில் அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கத்தில் தொண்டராகச் செயல்பட்டார். தென்ஆப்பிரிக்காவில் இந்தியத் தொழிலாளர்கள் பட்டுக் கொண்டிருந்த துன்பங்களையும், துயரங்களையும் எதிர்ப்பதற்காகச் செயல்பட பெண்களைத் தயாரிக்க அலகாபாத் பல்கலைகழகத்தில் மேயோ மன்றத்தில் ராமேஸ்வரி நேருவால் கூட்டப்பட்ட கூட்டத்திலும் தன்னுடைய பதினாறாவது வயதில் பங்கேற்றார். அக்கூட்டம் அவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

1932ல் அலகாபாத்தில் மேற்கொள்ளப்பட்ட பொது இந்திய விடுதலை வாக்குறுதிக்கான கூட்டத்தில் அவர் பேசிய பேச்சிற்காக கைது செய்யப்பட்டார். அவருக்கு 18 மாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. 1940 முதல் 1942வரை அகில இந்திய பெண்கள் கூட்டமைப்பில் தலைவராகச் செயல்பட்டார். 1952, 1964 ஆகிய ஆண்டுகளில் இந்தியப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விஜயலட்சுமி 1952–ல் சீனாவிற்கான முதல் இந்திய நல்லெண்ணத் தூதுக்குழுவில் உறுப்பினராகப் பங்கேற்றார். நேருஜியின் மரணத்திற்குப்பின் அவரது தொகுதியில் போட்டியிட்டு வென்று பாராளுமன்றத்திற்குச் சென்றார். 1975 முதல் 1978 வரை இந்திராகாந்தியால் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையைக் கடுமையாகச்சாடி சர்வாதிகாரம் என்றார். அவர் காங்கிரஸில் பேரவையைத் தமது இல்லமாகக் கருதினார். இந்திய அரசியல் என்பது சமூக மற்றும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தேவைப்பட்ட ஒன்று என்று கருதினார். அத்துடன் மனித உரிமைகள் மற்றும் பெண்களை வலிமையுடையச் செய்தல் என்று கருதினார். எனவே பெண்ணினத்தில் ஒரு வழிகாட்டியாக அவர் திகழ்ந்தாரென்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

## முத்துலெட்சுமி ரெட்டி (1886-1968)

புதுக்கோட்டையில் திருக்கோகர்ணப்பகுதியில் வாழ்ந்த நாராயண்சாமி சந்திரம்மாள் தம்பதியரின் மூத்த மகளாகப் பிறந்தார். சுந்திரம்மாள், நல்முத்து என்ற தங்கைகளும், இராமையா என்ற தம்பியும் அவருடைய உடன்பிறப்புக்கள் அவரது தந்தை, தாயார் புதுக்கோட்டை



மகாராஜா கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றியவர். இளமையிலேயே அறிவாற்றலும் திறமையும் கொண்டவராகத் திகழ்ந்தார். வீட்டுக் கணக்கு மற்றும் வரவு செலவுகளைத் தெரிந்து கொள்ளும் நோக்குடன் நான்கு வயதில் திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டார். ஆனால் அவருடைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பு காரணமாக அவரது பெற்றோர்கள் அவரை மெட்ரிகுலேசன் வரை படிக்க அனுமதித்தனர். அவ்வாண்டு தேர்வில் 100 பேர் பங்கு பெற்றனர். ஆனால் பத்துபேர் மட்டுமே தேர்ச்சியடைந்தார்கள். அவர்களுள் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். அவ்வாறு அவர் பெற்ற வெற்றி மூலம் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்ற கேள்வியை முறியடித்தார். சமுதாய நலனுக்காகவும், பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் தன்னுடைய அறிவாற்றலையும் திறமையையும் பயன்படுத்திய அவர் பலதுறைகளில் முதன்மை பெற்றவராயிருந்தார்.

மெட்ரிகுலேசன் தேர்வில் முதன்மை பெற்ற முத்துலட்சுமி, புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் முதன்முறையாகச் சேர்க்கப்பட்ட பெண் மாணவி இவர்தான். 1907ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட முதலாவது ஒரே பெண்மணி முத்துலட்சுமிரெட்டிதான். அரசினர் மகப்பேறு மற்றும் கண் மருத்துவமனையில் பயிற்சி மருத்துவராகச் சேர்ந்த முதல் பெண்மணியும் அவர்தான். ஆங்கிலப்பேரரசு அரசோச்சிய போது சட்டசபைக்குள் பிரவேசித்த முதல் பெண்மணி முத்துலட்சுமிதான். 1939ல் சென்னை மாநகராட்சியில் முதல் ஆல்டர்வுமன் (Alder women) ஆகப் பொறுப்பேற்றவரும் அவரே. தமிழ்நாடு சமூக ஆலோசனைக் குழுவின் முதல் தலைவியாக 1954ல் பணியாற்றியவர் முத்துலட்சுமி ரெட்டியாவார்.

ஒரே பெண் மருத்துவரான அவருடைய தொழில் செழிப்புற்றிருந்தது. விசாகப்பட்டினம் கிங் ஜ்யார்ஜ் மருத்துவமனையில் பணியாற்றிய டாக்டர் டி. சுந்தர ரெட்டி எம்.ஆர். சி பட்டம் பெற்றவர். திருமணப்பேச்சு எடுக்கப்பட்டவுடன் டாக்டர் இருவரும் சந்தித்தனர். அப்போது தன்னுடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்க் கேட்டுக் கொண்டார். அவர் ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவ வசதியளிக்க உதவ வேண்டுமென விடுத்த வேண்டுகோளையும் அவர் ஏற்றுக் கொண்டார். முத்துலட்சுமி ரெட்டியின் சமூக மற்றும் அரசியல் பணிகளில் அவருக்குச் சுதந்திரம் நல்கவும் கணவர் ஒப்புக் கொண்டார். 1914ல் சமாஜ்சட்டப்படி திருமணம் நடைபெற்றது. அத்தம்பதியரின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருக்கவில்லை. சுந்தர ரெட்டிமேற்படிப்பிற்காகப் பெருந்தொகையைக் கடனாக வாங்கியிருந்தார். புதுக்கோட்டை மன்னரிடம் கொண்டிருந்த சீரான தொடர்பு காரணமாக அவருக்கு புதுக்கோட்டை பெரிய மருத்துவமனையில் உயர் மருத்துவ அதிகாரியாக பணியாற்றும் வாய்ப்பினை முத்துலெட்சுமி ரெட்டியின் தந்தை வாங்கித்தந்தார்.

படிப்பு முடிந்தபின் அவருக்குப் பல இடங்களிலும் பணியாற்ற வாய்ப்புக்கிட்டியது. ஆயினும் அவர் சமுதாயப் பணியையே தம்முடைய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டார். டாக்டர் ஜிப்மர் அவர்களின் உதவியாளராக மகப்பேறு மருத்துவராகச் செயல்பட்டார். அங்கிருந்த

ஆங்கிலப் பெண்கள் முத்துலெட்சுமியை இந்தியர் என்ற ஒரே காரணத்திற்காக வெறுத்து ஒதுக்கினர். இத்தகைய இனவேறுபாடுகளால் துன்பத்திற் குள்ளாக்கப்பட்ட முத்துலெட்சுமி தன்னுடைய ஊரான புதுக்கோட்டைக்குத் திரும்பினார். உள்ளூரிலும் கிராமப்புறங்களிலும் இருந்த ஏழைப் பெண்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சையளித்தார்.

முத்துலட்சுமி ரெட்டி தம்பதியினருக்கு ராம்மோகன், கிருஷ்ணமூர்த்தி என்ற இரு மகன்கள். மூத்தவரான ராம்மோகன் டில்லியில் திட்டக்குழு இயக்குநராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இளையவரான கிருஷ்ணமூர்த்தி ஒரு மருத்துவர். அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் புற்று நோயாளிகளைக் காப்பாற்றும் பொறுப்பிலிருப்பவர்.

அண்ணல் காந்தியடிகள் மற்றும் அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோரின் தூண்டல்கள் காரணமாக அவர் ஒரு சமூக சேவகியானார். பெண்களின் மூடநம்பிக்கையை விடுத்து அவர்கள் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் மேம்பாட்டில் கவனம் செலுத்தினர். பெண்ணொருவரை பொதுப் பணியில் காண்பது அரிதாகக் காணப்பட்ட அக்காலத்தில் பெண்கள் முன்னேற்றத்தில் ஈடுபடலாயினர் 1926ல் இங்கிலாந்துக்கு மேற்படிப்புக்குச் சென்ற அவர் அதனை முடித்துத் தாயகம் திரும்பியபோது பாரீசில் நடைபெற்ற பன்னாட்டு பெண்கள் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாகப் பங்கேற்றார். அதன்பின்பு இந்திய பெண்கள் அமைப்பு (Indian Women Association) மேற்கொண்ட முயற்சிகளால் தமிழ்நாட்டுச் சட்டசபை கவுன்சில் துணைத் தலைவரானார்.

1917ல் அன்னிபெசன்ட் அம்மையார் மார்க்ரெட் கசின்ஸ் ஆகிய இருவராலும் ஆரம்பிக்கப்பட்ட இந்திய மாதர் அமைப்பில் பெரும் பங்கேற்றார். அதனால் இந்தியப் பெண்கள் அமைப்பு சார்பில் விஜிலென்ஸ் அசோஷியேசன் என்ற விழிப்புணர்வு அமைப்பு ஒன்றினை உருவாக்கினார். 1920ல் இந்தியப் பெண்கள் அமைப்பு சார்பில் 'குழந்தைகள் உதவிச் சங்கம்' என்ற அமைப்பினை உருவாக்கினர். குற்றம் செய்த குழந்தைகளுக்கு காவல் துறையின் உதவியுடன் அடைக்கலமளித்தார். அந்த சங்கமானது ஆதரவற்ற அனாதைக் குழந்தைகள், மனநலம் குன்றிய சிறுவர்கள், வீட்டைவிட்டு வெளியேறிய அனாதைப் பெண்களுக்குப் புகலிடம் அளித்தது. 'சாரதா சதன்', 'இந்திய பெண்கள் சமாஜம்' ஆகியன முத்துலெட்சுமி அம்மையாரின் அரும்பணிகளாகும். 'இந்தியப் பெண்கள் சங்கம்' என்ற மாதர் அமைப்பு காரணமாக உருவாக்கப்பட்ட பல்வேறு அமைப்புகளுள் அவ்வை இல்லம் என்பது முக்கியமானதொன்றாகும். அதேபோல் முஸ்லீம் பெண்கள் நிறுவனம் என்னும் அமைப்பும் அவரால் உருவாக்கப்பட்டதேயாகும். 1930ல் முத்துலெட்சுமி ரெட்டியால் உருவாக்கப்பட்ட அவ்வை இல்லம் ஆற்றி வரும் அரும்பணிகள் போற்றற்பாலனவாகும். வறுமை மற்றும் ஏழ்மை காரணமாக குப்பைத்தொட்டிகளில் வீசப்படும் குழந்தைகள், சமூகக் கொடுமைகளுக்கு அஞ்சி, வஞ்சிக்கப்பட்ட பெண்கள் தாம் பெற்ற குழந்தைகளை கொன்றுவிடுவது போன்றவற்றைத் தவிர்க்க அவ்வமைப்புதனை உருவாக்கினார். அது சாந்தோமில் உருவாக்கப்பட்டது. பின்னர்



அடையாறுக்கு மாற்றப்பட்டது. அந்த இல்லம் எண்ணற்ற பெண்களுக்கு ஆதரவளித்தது. பள்ளியொன்றும் உருவாக்கப்பட்டது. அவ்வை இல்லப் பெண்களுக்கு மணமகனைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்யும் பொறுப்பினையும் அது மேற்கொண்டுள்ளது.

சகோதரி சுப்புலட்சுமியால் இளம். விதவைப் பெண்களுக்கு கல்வியளித்து வாழ வகைசெய்ய எழும்பூரில் ஏற்படுத்தப்பட்ட மருத்துவ நிலையத்தில் முத்துலெட்சுமி ரெட்டி கௌரவ டாக்டராக பணியாற்றினார். திருவான்மியூருக்கு அருகில் இருந்த மக்களுக்கு நல்வாழ்வுப் பணிகளைப் பற்றிய செய்திகளை எடுத்தியம்பும் வழியையும் மேற்கொண்டார். இந்தியா மட்டுமில்லாமல் இலங்கையிலும் பெண்கள் துயர்துடைக்க முயற்சி மேற்கொண்டார். இலங்கை இளம் பெண்கள் கிறித்துவ அமைப்பு (Young Women Christian Association) மூலம் இலங்கைவாழ் இந்தியப் பெண்களின் இழிநிலைப் பற்றி விளக்கினார். ஆனால் அங்கு அவருக்கு கடும் எதிர்ப்பு காணப்பட்டது. அமெரிக்காவில் நடைபெற்ற உலகமகளிர் மாநாட்டில்("World Women's Conference) இந்தியா சார்பில் பங்கேற்று பெண்கள் நிலையைச் சுட்டிக் காட்டினர்.

1927 செப்டம்பர் மாதத்தில் முதன்முறையாக காந்தியடிகளைச் சந்தித்தார். குழந்தை திருமண ஒழிப்பு, திருமண வயதை உயர்த்துதல், பெண்களுக்குத் தமது கணவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றுத்தருதல், பலதார மணமுறை ஒழிப்பு, பெண் கல்வி ஆகியவற்றிற்கு அண்ணலின் ஒத்துழைப்பை வேண்டினர். இவ்வாறு பெண்களின் மேம்பாட்டிற்கு பலவழிகளிலும் செயல்பட்ட டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் கீழ்கண்ட பல நூல்களையும் வெளியிட்டார். Care of preganant women, Infant feeding, Infant Mortality in India , Women's work in Madras, My experience as Leguilator, Mrs. Margrat Coussion's work in India, Indian women's Franchise, Evils of Child Marriage, Why should Devadasi system in Hindu Temples by abolished? , மற்றும் Cancer and its prevention ஆகிய நூற்கள் எழுதப்பட்டன.

இந்தியர்களுக்கு நகராட்சிகளிலும் மற்றும் சட்டமன்றங்களுக்கும் பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டுமென்றார். சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள கஸ்தூரிபா மருத்துவமனை அவருடைய நினைவுச் சின்னமாகும். அவருடைய அரும் முயற்சி காரணமாக மகப்பேறு மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கெனத் தனிப்பட்ட பிரிவுகள் உருவாக்கப்பட்டன. தல அமைப்புகளாலும், நகராட்சிகளாலும் நடத்தப்பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு முறையான மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கூறுகின்றார். அவருடைய பெருமுயற்சிகளில் முக்கியமானது சட்டம் மூலம் தேவதாசி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்ததேயாகும். அவருடைய தனித்த ஆற்றல் காரணமாகவே பலதாரமண எதிர்ப்பு சட்டவரைவு சட்டமாக்கப்பட்டது. பல பணிகளிலும் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும் அவருடைய அறிவாற்றல் கணினியின் தன்மைகளைக் கொண்டதாயிருந்தது. 1930ல் அவரது முயற்சி

காரணமாகவே விபச்சார ஒழிப்புக்கான சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அவருடைய பெருமுயற்சியால்தான் முஸ்லிம் பெண்களுக்கான விடுதியும், ஹரிஜனப் பெண்களுக்கான உபகாரத் தொகைகளும் தரப்பட்டன. ஆண் பெண்களுக்கான திருமண வயது முறையே 21 மற்றும் 16 ஆக அமைதல் வேண்டுமென்பதற்கான சட்டம் 1928ல் இயற்றப்பட்டது. அவரால் புற்றுநோய் ஒழிப்புக்கான நிதி திரட்டப்பட்டது. 1952ல் இலட்சக்கணக்கில் பணம் சேகரிக்கப்பட்டுப் பயன்படுத்துப்பட்டது.

1919—ல் வெளியான மாண்டேகு—செம்ஸ்போர்டு அறிக்கை காரணமாக உருவாக்கப்பட்ட ஹார்டாக் குழு (Hartog Committee)வில் இடம்பெற்ற ஒரேபெண்மணியான அவர் பெண்கல்வியைப் பரப்ப வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தினார். குழந்தைகள் உதவிச் சங்கத்தின் அமைப்பாளரான அவர் அவ்வமைப்பின் கௌரவச் செயலராகவும் திகழ்ந்தார். லாகூரில் 1930ல் நடைபெற்ற ஐந்தாவது அகில இந்திய பெண்கள் மாநாட்டின் தலைமைப் பொறுப்பினையும் ஏற்றிருந்தார். 1935ஆம் ஆண்டுவரை அகில ஆசிய குழுவின் தலைவராகவும் செயல்பட்டார். 1931 முதல் 1940 வரை 'ஸ்த்ரிதர்மம்' என்றும் இதழின் ஆசிரியராகச் செயல்பட்டார்.

பலவழிகளில் பெண்கள் முன்னேற்றம் பற்றிய சீர்திருத்தவாதியாகிய முத்துலட்சுமி ரெட்டி பலருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். அவர் ஆற்றிய அருஞ்செயல்களுக்காக 1956ல் பத்மபூஷண் என்ற பட்டத்தைப் பெற்றார். பலரிடமும் பணம் வசூல் செய்து இல்லங்கள் பலவற்றை அமைத்தார். எளிமை, நேர்மை, கட்டுப்பாடு, திறமை போன்றவை அவருடைய குணநலப்பண்புகளாகும். உழைப்பின் மேன்மை, அச்சமின்மை, விடாமுயற்சி ஆகியன அவருடைய சொத்துக்களாயிருந்தன. அவருடைய பணிகள் அனைத்தும் காந்தியக் கோட்பாடுகளைப் பிரதிபலித்தன. டாக்டரம்மா என்று அழைக்கப்பட்ட முத்துலெட்சுமி ரெட்டி தனது எண்பத்தி இரண்டாம் வயதில் 22, ஜூலை 1968ல் இவ்வுலக வாழ்வினை நீத்தார்.

## சாவித்திரிபாய் பூலே (1831-1897)

3, ஜனவரி 1831 ல் மராத்திய மாநில சதாரா மாவட்டம், பெல்காம் என்ற இடத்தில் பிறந்த சாவித்திரிபாய் பூலேதான் 1848ல் பெண்களுக்கான தனிப்பட்டதொரு பள்ளியை முதன்முதலில் புனாவில் நிறுவியவர். தன்னுடைய ஒன்பதாவது வயதில் ஜ்யோதிபா பூலேயைத் திருமணம் செய்து கொண்டார். அப்போது ஏற்பட்ட உயர்மட்டப்பிரிவினர் எதிர்ப்பு விழிப்புணர்வு உருவாக்கியது. ஜ்யோதிபாபூலே நாட்டில் காணப்பட்ட வேறுபாடுகள் களையப்பட வேண்டுமென்பதில் பேரார்வங் காட்டினார். விதவைகள் வாழ்வில் மறுமலர்ச்சி, பெண்கள் மற்றும் தீண்டத்தகாதோர் மீதான கட்டுப்பாடுகள் ஆகியன நீக்கப்பட வேண்டுமென்பதில் பேரார்வங்காட்டினார். விதவைகள் வாழ்வில் மறுமலர்ச்சி, பெண்கள் மற்றும் தீண்டத்தகாதோர் மீதான கட்டுப்பாடுகள் ஆகியன நீக்கப்பட வேண்டுமெனப் பாடுபட்ட ஜ்யோதிபா பூலே தனது மனைவி சாவித்திரிபாய் பூலேவுக்கும் மக்கள் நடப்பு பற்றித் தெரிவித்தார். அவருடைய முயற்சி மற்றும் போராதரவினால் கல்வியை முடித்த சாவித்திரி 1848ல் பெண்கள் பள்ளியைத் துவக்கியபோது எவ்விதமான வேறுபாடுகளும் காட்டாமல்



சேர்த்துக்கொள்ளப்பட்டனர். அதனால் அவர்களும் எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியவராயிருந்தார். பலவழிகளிலும், பள்ளிக்குச் செல்லுகையில் அவர் துன்புறுத்தப்பட்டார். இறுதியில் அவற்றிலிருந்து விடுபட்டார். தனது கணவரின் முயற்சியால் சமூகக் குறைகளைக் களைவதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அவருடைய முயற்சி காரணமாகவே 'விடுதலை இல்லம்' (Delivery Home) உருவாக்கப்பட்டது. அது 'பாலஹத்ய பிரதிபந்தக் கிருஹம்' எனப்பட்டது. இளம் பெண்களை முதியோருக்குத் திருமணம் செய்விப்பதால் இளம் விதவைகள் உருவாகின்றனர் என்பது தெளிவானதாயிருந்தது. அத்தகைய இளம் விதவைகளின் நிலை சமுதாயத்தில் இரங்கத்தக்கதொன்றாயிருந்தது. மேலும் இளம் விதவைகளின் தலையை மொட்டையடித்தலென்பது ஒரு கொடுமையான செயலாயிருந்தது. எனவே அதனைத் தடுப்பதற்காக முடி திருத்துவோருக்கு எதிரான போராட்டம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. அப்பிரிவினரும் விதவைப் பெண்களுக்கு மொட்டையடிப்பதைத் தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். இப்புதுமையான புரட்சி இந்தியச் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்வை உருவாக்கியது.

குடிதண்ணீரைக் கூடப் பெறுவதினின்றும் தவிர்க்கப்பட்ட பிற்பட்டோருடைய குறைகளைத் தீர்க்கவும் அவர்கள் முயன்றனர். அனைவரையும் சமமாகப் பாவித்து நடத்த வேண்டுமென்பதில் அவர்கள் பேரார்வம் காட்டினர். 1890ல் ஜ்யோதிபா பூலேயின் மரணத்திற்குப் பின், சாவித்திரிபாய், தனது கணவரால் நிறுவப்பட்ட 'சத்ய சோதக் சமாஜ்' என்ற அமைப்பின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அப்போது அங்கு நிலவிய கடுங்கொள்ளை நோயான பிளேகின் போது தினமும் 2000 குழந்தைகளுக்கு சாவித்திரி உணவளித்தார். ஆனால் அவரே அந்நோய்க்கு ஆளாகி 10, மார்ச் 1897ல் காலமானார்.

மாலி இனத்தைச் சார்ந்தவரான சாவித்திரி, தனது கருத்துக்களை ஆணித்தரமாக எழுத்துக்கள் வாயிலாகவும் வெளிப்படுத்தினார். அவரது மரணத்திற்குபின் அவரால் எழுதப்பட்ட கவிதைத் தொகுப்புகள் 1934ல் 'பூலேயின் காவியங்கள்' (Kavya Phule) என்றும் 1982ல் பவன் காசி சுபோத் ரத்னாகர் (Bavan Kashri Subodh Ratwagar) என்றும் வெளியிடப்பட்டன. அவருடைய அருஞ்செயல்கள் மற்றும் நற்பணிகளால் இந்தியப் பெண்ணினம் மதிப்பு மிக்கதோர் இடத்தைப் பெறுகின்றனர் எனில் அது மிகையாகாது.

## மேரிகிளப் வாலா ஜாதவ் (1908 – 1975)

16, ஜூன் 1908ல் ருஷ்டம் படேல் என்பவரின் மகளாக ஊட்டிக்கு அருகிலுள்ள வெல்லிங்டனில் பிறந்தார். அவரது குடும்பம் செல்வத்திலும் வசதியிலும் செழித்தொன்றாகும். 1926ல் அவருடைய 18ஆவது வயதில் நோகி பிராஜ் கிளப்வாலா என்பவரைத் திருமணம் செய்து கொண்டிருந்தார். தனது 27ஆம் வயதில் ஐரோப்பியச் சுற்றுப் பயணத்தின்போது தன்னுடைய கணவரை இழந்து விதவையானார். அதனால் சென்னைக்கு குடிபெயர்ந்த மேரி கிளப்வாலா ஜாதவ் தமது துன்பங்களிலிருந்து விடுபடத் தன்னை சமூக

சேவகியாக மாற்றிக் கொண்டார். அப்போது சென்னையில் செயல்பட்ட 'பொது சேவைக்குழு' (Guild of service) என்ற அமைப்புடன் தன்னை இணைத்துக் கொண்டார். குஜராத்தி, இந்தி, ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளை அறிந்தவரான அவர் கல்வியறிவும் நிரம்பப் பெற்றிருந்தார். அவ்வமைப்பின் கௌரவச் செயலாளராகவும், துணைத்தலைவராகவும் செயல்பட்டார்.

அவ்வமைப்பு மூலம் அவரால் பல பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண் குழந்தைகளைத் தத்தெடுத்தல், உடல்நல அமைப்புகளை உருவாக்குதல், பாலபவன்கள், சிறுவர், சிறுமியர் இல்லங்கள், பாலவிகார்கள், குழந்தைகள் அமைப்புகள், பெண்கள் பயிற்சி நிறுவனங்கள், அங்கக்குறையுடையோர் அமைப்புகள், காதுகோளாதோருக்கான பள்ளிகள், குடும்பநலத்திட்ட அமைப்புகள், தொழுநோய் இல்லம், கிராமிய முன்னேற்றத் திட்டங்கள், சிறுவர்நலநிதி, ஸ்திரிஸயா, பணியாற்றும் பெண்களுக்கான விடுதிகள் ஆகிய அமைப்புகள் அவர்களால் உருவாக்கப்பட்டன. அவருடைய அரிய முயற்சிகள், அரும்பணிகள் காரணமாக அவரது அமைப்பின் கிளைகள் இந்திய மாநிலங்களும் பலவற்றிலும் உள்ளன. சென்னையின் சேரிப்பகுதிகளில் அவருடைய பெயர் பிரபலம் மிக்கதாயிருந்தது. இந்தியாவின் பல பகுதிகளிலும் உள்ள அரசியல்வாதிகளாலும் அறியப்பட்டிருந்தாலும் அவர் அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை.

1935ல் அவர் சென்னை நகரின் கௌரவ மாநில நீதிபதியாக நியமிக்கப்பட்டார். சிறியோர் குற்றவாளிகள் நீதிமன்றத்தின் நீதிபதியாக அவர் செயல்பட்டார். அப்பணியை ஏற்றுக் கொண்ட முதல் பெண்மணி கிளப்வாலாஜாதவ் தான். இரண்டாம் உலகப்போரின் போது படைவீரர்களுக்கான விருந்தோம்பல் குழுவினை நடத்தி அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்தார். அக்குழுவானது இரண்டாம் உலகப்போர் முடிவுற்றபின் சிறைக்கைதிகளுக்கு உதவும் அமைப்பாக மாறியது. 'அவர் குழந்தைகள் மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள் நலனில் நாட்டமுடையவராயிருந்தார். 1948ல் இந்திய சமூகப்பணிக்குழு அமைப்பு அவரால் சென்னையில் உருவாக்கப்பட்டது. 1952–ல் சென்னை சமூகப் பணிக் கல்விப் பள்ளி உருவாக்கப்பட்டது. அப்பள்ளியை நிறுவும்போது அதற்கு ஆகக்கூடிய செலவுகளை அவரே ஏற்றுக்கொண்டார். அவரால் உருவாக்கப்பட்ட அப்பள்ளியை தமிழக அரசு சிறப்புப் பயிற்சியளிக்கும் பள்ளியாக ஒப்புக் கொண்டது. அப்பள்ளி பலதரப்பட்ட பயிற்சிகளையும் அளிக்கின்றது. பல தொழுநோய்த் தடுப்பு அமைப்புகளிலும் அவர் பங்கு பெற்றிருந்தார். செங்கற்பட்டு 'கஸ்தூரிபா காந்தி தொழுநோய் இல்லம்' அவற்றுள் முக்கியமானதாகும்.

அவர் ஆற்றிய அருந்தொண்டுகள் காரணமாக இந்திய அரசு அவருக்கு 'பத்மஸ்ரீ' 'பத்மபூஷன்' 'பத்மவிபூஷன்' ஆகிய பட்டங்களை வழங்கியது. பன்னாட்டு அளவிலும் அவருக்குப் பல விருதுகள் தரப்பட்டன. அவர் 1948ல் சென்னையில் துணை ஷெரீப்பாக பட்டம் பெற்றார். பின்னர் ஷெரீப்பாகவும் செயல்பட்டார். 1946 முதல் 1954 வரை அவர் சென்னை மாநில மேலவை உறுப்பினராகச் செயல்பட்டார். தனது 67ஆவது வயதில் உடல்நலமின்மை காரணமாக காலமானார்.



## சௌந்திரம் இராமச்சந்திரன்(1905-1984)

இந்தியத் தாய்க்குப் பலவழிகளில் பணியாற்றி இந்திய வரலாற்றில் முக்கியமான இடத்தைப் பெற்றவர்களுள் டாக்டர். சௌந்திரம் இராமச்சந்திரனும் ஒருவராவார். டிவி. சுந்தரம் ஐயங்கார் மற்றும் லட்சுமி ஆகியோரின் மகளாக மதுரையில் பிறந்தார். அண்ணல் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் அவரது நிர்மாணத்திட்டங்களைச் செயல்படுத்தியதுடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனிலும் கவனம் செலுத்தினர். தனது பள்ளிப்படிப்பை முடிந்தபின் 1928ல் டில்லியிலிருந்த லேடி ஹார்டிஞ்ச் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவப்பட்டம் பெற்றார். சென்னையில் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டியால் அவ்வை இல்லம் தொடங்கப்படுவதற்கும் உதவியாக இருந்தார். சௌந்திரம் தமிழகத்தின் பிரதிநிதியாக கஸ்தூரிபா டிரஸ்டில் பணியாற்றினார்.

தன்னுடைய தந்தையாரால் ஏற்கப்படவில்லையாயினும் 1940ல் அவர் கேரளத்தைச் சேர்ந்த G. இராமச்சந்திரனைத் திருமணம் செய்து கொண்டார். அதனால் அவர் சௌந்திரம் இராமசந்திரன் எனப்பட்டார். அவருடைய திருமணம் கலப்பு மணம் மற்றும் மாற்று மொழித் திருமணமுமாகும். கேரளாவில் அவர் காந்திஜியின் புனர் நிர்மாணத்திட்டங்களைப் பறைசாற்றிய போது கடுமையாக எதிர்க்கப்பட்டார். எனவே 1942ல் மதுரைக்குத் திரும்பிய சௌந்திரம் 1942 ஆகஸ்டு 15ஆம் நாள் மதுரை– திண்டுக்கல் சாலையில் சின்னாளப்பட்டிக்கு அருகில் காந்திகிராமம் என்ற கிராமிய அமைப்புதனை உருவாக்கினார். அது ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய வளர்ச்சி பணிக்கும், கல்வி, மருத்துவம் போன்றவற்றுடன் நாட்டிற்கான நிர்மாணத்திட்டங்களை நிறைவேற்றும் பணியையும் மேற்கொண்டது. அனாதை விடுதி ஒன்றையும், வருந்தும் நிலையிலுள்ள பெண்களுக்கான நிலையம் ஒன்றையும் காந்திகிராமத்தில் தொடங்கினார். அங்கு சுகாதாரப்பணியில் ஈடுபடுவோருக்கான பயிற்சி நிலையம் ஒன்றுடன் குடும்பக்கட்டுப்பாட்டு மையம் ஒன்றும் உருவாக்கப்பட்டது. 1952 முதல் 1956வரை மதுரை மாவட்டத்தில் கௌரவ சமுதாயத்திட்ட அலுவலராகப் பணிபுரிந்தார். அதே ஆண்டில் (1952) தமிழ்நாடு சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய சீன நட்புறவுக் கழகத்தின் சார்பில் 1956ல் சீனாவுக்குச் சென்று, சீனவளர்ச்சிப் பணிகளையும், திட்டங்களையும் தெரிந்துகொண்டார். தம்முடைய சட்டசபை உறுப்பினர் காலத்தில் அவர் மேற்கொண்ட பணிகள் பாராட்டிற்குரியன.

அவருடைய அரிய முயற்சிகாரணமாக மதுரையும், இந்தியாவிலுள்ள நான்கு காந்திநினைவு அருங்காட்சியகங்களுள் ஒன்று நிறுவப்பட்டது. 1960ல் காதி மற்றும் கிராமத் கைத்தொழில் வாரியத்தின் துணைத்தலைவர் ஆனார். 1962ல் இந்திய மக்களவைக்குத் தேர்வு செய்யப்பட்ட அவர் 1967வரை கல்வித்துறை துணைஅமைச்சராகப் பணியாற்றினார். அவரால் பெண்களுக்கான கிராமிய அமைப்புகள் தொடங்கப்பட்டன. அவருடைய தலைமையின் கீழ் கிராம சேவிகா மற்றும் கிராம சேவகர்களின் பணிகள் சீரமைக்கப்பட்டன. அவரால் உருவாக்கப்பட்ட காந்திகிராமம் கஸ்தூரிபா மருத்துவ நிலையம் குடும்பநலத் திட்டப் பணிகளுக்காக அரும்பணியாற்றி

வருகின்றது. 1971–72, 1972–73 ஆகிய ஆண்டுக்களுக்கான தேசிய விருதினையும் அவ்வமைப்பு பெற்றது. அதற்கு சௌந்திரம் இராமச்சந்திரனின் உழைப்பும் முக்கியமானதெனலாம்.

1980 முதல் 1984 வரை காந்திகிராமம் நிறைநிலைப் பல்கலைகழகத்தின் வேந்தராகப் பணியாற்றிய சௌந்திரம் 1976ல் உருவாக்கப்பட்ட காந்திகிராமம் டிரஸ்டின் முதல் செயல்முறை தர்மகர்த்தாவாகச் செயல்பட்டார். அவருடைய பெருமுயற்சிகள் காரணமாக கதர்துணியின் மதிப்பு உயர்த்தப்பட்டது. அப்பணியில் சுமார் கிராமப் பெண்களுக்கு வேலை கிடைக்குமாறு செய்தார். அரும்பணிகள் பல ஆற்றிய சௌந்திரம் 1984 அக்டோபரில் காலமானார்.

## இலட்சுமி என். மேனன்(1899–1994)

சிறந்த கல்வியாளராகவும், பற்றுறுதியும், படைப்பாற்றலும், பணியாற்றக் கூடிய வலிமையும் கொண்டு விளங்கிய இலட்சுமி அவரது காலத்திய ஆற்றல் வாய்ந்த பெண்மணியாவார். புதுமையைப் புகுத்தி பெண்ணின் மேம்பாட்டிற்கு அருந்தொண்டாற்றினார். கேரளத்தில் பிறந்த அவர் திருவனந்தபுரம், சென்னை, இலண்டன் ஆகிய இடங்களில் கல்வி பயின்றார். சென்னை மற்றும் லக்னோ போன்ற இடங்களில் கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றினார். கல்கத்தா கோகலே பள்ளியிலும் பாட்னா பெண்கள் கல்லூரியிலும் முதல்வராகப் பணியாற்றினார். 1955 முதல் 1959 வரை அகில இந்திய பெண்கள் அமைப்பின் போஷகராகவும், தர்மகர்த்தாவாகவும் பணியாற்றினார். இந்திய வெளியுறவு துணை அமைச்சராக பண்டித நேருவின் கீழ் பணியாற்றினார். பன்னாட்டு அவைகளிலும் பல பணிகளை ஆற்றியுள்ளார். கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு அறக்கட்டளையின் தலைவராகவும் பணியாற்றினார். கதர் அணிவதைத் தமது கடமையாகக் கொண்ட இலட்சுமி பெண்ணினுள் புதைந்துகிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர்வதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். கஸ்தூரிபாவின் நினைவாகவே "தாயார் நாள்" (Mother's Day) ஏற்படக் காரணமாயிருந்தார். அதாவது ஆண்டுதோறும் மகா சிவராத்திரி நாளன்று அந்நாள் கொண்டாடப்படுகின்றது.

பெண்வழிச் சமுதாயத்திற்கு முக்கியத்துவமளித்த கேரள மண்ணில் தோன்றி வளர்ந்த அவர், தன்னம்பிக்கையுடன் பெண்களின் வறுமையையும் பின்தங்கிய நிலையையும் நீக்கப்பாடுபட்டார். பெண்களை நிர்மாணப் பணிகளில் ஈடுபடுமாறு செய்து அவர்களுடைய மேம்பாட்டிற்கு வழிகாட்டினார். அகில இந்தியப் பெண்கள் அறியாமை நீக்கக் குழு (ALL INDIA COMMITTEE FOR THE ERADICATION OF ILLITERACY AMONG WOMEN) வின் தலைமைப் பொறுப்பிலிருந்தார். தனது அரிய முயற்சி காரணமாகவே அதற்கான பணத்தையும் தேடினார். ஏழைக் குழந்தைகளுக்கான கட்டாய இலவசக் கல்வி அளிப்பதில் கவனம் செலுத்தினார். 1994ல் காலமானார்.



## சரளாதேவி சௌதுராணி(1872-1945)

நாட்டுப்பற்றுமிக்கவரான சரளாதேவி வங்கத்தில் 1903 முதல் 1911 வரை அந்நிய ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சுதேசி இயக்கத்தில் பங்கேற்றுச் செயல்பட்டவர். பாரதி என்ற இதழின் மூலமாகத் தன்னுடைய கருத்துக்களை வெளியிட்டார். பெண்கள் கைகளில், இந்தியா படத்தின் முன்னால் ரக்ஷா பந்தன் கயிற்றைக் கட்டி இந்தியாவுக்காக உடலாலும் மனத்தாலும் உழைப்பதாக உறுதிமொழி எடுக்கச் செய்தார். முர்தாசா என்ற முகமதியர் மூலம், தன்னுடைய வீட்டின் பின்புறத்தில் இளைஞர்களுக்கு வாள் பயிற்சி, குத்துச் சண்டை ஆகியவற்றைக் கற்றுத்தர ஏற்பாடு செய்தார். 1909 அக்டோபர் 9 ஆம்நாள் பிராஸ்டமி உற்சவம் (Festivel of Heroes) என்பதைத் தொடங்கினார். அதன்மூலம் வங்காள இளைஞரிடையே வீரமும் ஆற்றலும் உருவாக்கப்பட்டது. ஆங்கிலேயரை எதிர்க்கும் அனைவரும் போற்றப்பட்டவர்கள். மொகலாயரை எதிர்த்த வங்காள ஜமீன்தாரான பிரதாபாதித்யா என்பவரின் நினைவாக 1903ல் பிரதாபாதித்யா உற்சவத்தைத் தொடங்கினார். தன்னுடைய 19ஆவது வயதில் ஆங்கிலேயருடன் போரிட்டு தன்னுயிரை ஈந்த ஜெஸ்குர் இளவரசர் உதயாதித்யாவின் நினைவாக உதயாதித்யா உற்சவம் கொண்டாட வகை செய்தார். பங்கபாஷி, பெங்காலி போன்ற இதழ்கள் அவருடைய அரும்பணிகளுக்கு உறுதுணையாயிருந்தன. இவரது பணிகள் காரணமாக வங்காளத்தில் இந்திய சுதேசி இயக்கத்தில் பெண்களின் பங்கு பெருகி வரலாயிற்று. பெண் தெய்வங்களை வணங்குதல் வாயிலாக நாட்டுப்பற்றினை அதிகரிக்கலாமென வலியுறுத்தினார். எனவே அரசியல் பணிகளை சமயப் பணிகளுக்குச் சமமானதாகக் கருதிச் செயல்பட வேண்டுமென்ற நிலை அவரால் உருவாக்கப்பட்டது. 'அனுசிலான் சமிதி' மற்றும் 'சுருத் சமிதி' போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு நாட்டுக்குப் பாடுபட்டார். சுதேசிப் பொருட்களை விற்கும் அமைப்பான 'இலட்சுமி பந்தர்' அவரால் ஈர்க்கப்பட்டது.

காந்திஜியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார். பஞ்சாபில் அவரால் பாரத் ஸ்திரி மகாமண்டல் (Bharat Sree Mahamandal) என்ற அகில இந்திய பெண்கள் அமைப்பு 1910ல் உருவாக்கப்பட்டது. எவ்விதமான பாகுபாடுகளுமின்றி பெண்களின் பொதுவான முன்னேற்றத்திற்கு வகை செய்வதே அவ்வமைப்பின் நோக்கமாக இருந்தது. தொடர்ந்து 1, ஜுன் 1930ல் சிக்ஷா சதன் (Siksha sadan) என்ற பெண்கல்விக்கான அமைப்பு உருவாக்கப்பட்டது. 'நாரி நிர்வாகப் பந்தர்' (Nari Nirvaha Bhandar) என்றும் பெண்களால் நடத்தப்படும் விற்பனை நிலையம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

ஜிதேந்திரநாத் தாகூரால் துவங்கப்பட்ட ' பாரதி' என்ற வங்கமொழி இதழின் ஆசிரியராகவும் சரளா பணிபுரிந்துள்ளார். தாமே பலகட்டுரைகளை எழுதினார். சகோதரி நிவேதிதாவால் எழுதப்பட்ட 'நல்லதாயின் பொறுப்பும் கடமைகளும்' என்ற நூலை வங்காள மொழியில் மொழிபெயர்த்தார். ரானடேயின் இந்திய சமூக அமைப்பு, காந்திஜியினுடைய கட்டுரைகளும் அவரால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன.

இவ்வாறு சுதேசி இயக்கத்தில் ஈடுபட்ட முதல் வங்காளப் பெண்மணியான சரளாதேவி பெண்ணினத்தின் மேம்பாட்டிற்கான முன்னோடியாகத் திகழ்ந்தார். கல்வியாளராக, அரசியல் பணியாளராக பெண்கள் முன்னேற்றத்திற்கான சீர்திருத்தவாதியாக அவர் செயல்பட்டார்.

## மணிபென்படேல்(1903-1990)

இந்தியாவின் இரும்பு மனிதரான சர்தார் வல்லபாய் படேலின் மகள். தாயகப்பற்றில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். 3, ஏப்ரல், 1903ல் பிறந்த அவர் மும்பை ராணிமேரி உயர்நிலைப்பள்ளியிலும் பின்னர் காந்திஜியால் உருவாக்கப்பட்ட குஜராத் வித்யாபீடத்தில் பயின்றவர். 1923–24ல் வரிகொடா இயக்கத்தில் பங்கு கொண்டார். 1928ல் தமது தந்தையார் படேலுடன் பர்தோலி சத்தியாக்கிரஹத்தில் ஈடுபாடு காட்டினார். அவ்வியக்கத்தில் பெண்களை பங்கேற்கச் செய்தமைக்காக 1942முதல் 1945வரை எரவாடச் சிறையில் அடைக்கப்பட்டார். 1976ல் அவசர நிலைப்பிரகடனத்தின் போதும் அவர் சிறையிலடைக்கப்பட்டார். கதராடையையே அணிந்த அவர் எளிமையின் பிறப்பிடமாகத் திகழ்ந்தார். 1952 முதல் 1962 வரை இந்தியப் பாராளுமன்றத்தில் லோக்சபை உறுப்பினராகவும், 1964 முதல் 1970 வரை ராஜ்ய சபை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

குஜராத் வித்யாபீடம், பர்தோலி ஸ்வராஜ் ஆசிரமம், நவ்ஜீவன் தர்ம ஸ்தாபனம் அகில இந்திய காங்கிரஸ் ஆகியவற்றுடன் தன்னை இணைத்துக் கொண்டார். இந்தியப் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர்.

## அம்மு சுவாமிநாதன்

தளிச்சேரியில் நடைபெற்ற சாத்விக சட்டமறுப்பு இயக்கத்தின்போது டாட்வெல் என்ற ஆங்கில நீதிபதி, கமலாபாய் பிரபு என்பவரை விசாரித்தார். அவ்வமயம் அவர் கமலாபாய் பிரபுவின் தாலியையும் கழற்ற வேண்டுமென வலியுறுத்திய போது அக்கொடுமையை எதிர்த்தவருள் தமிழகத்தைச் சேர்ந்த சமூக சேவகியான அம்மு சுவாமிநாதனும் ஒருவராவார். சென்னையைச் சேர்ந்த விடுதலைப் போராட்ட வீராங்கனையான அம்மு சுவாமிநாதன் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக சிறைப்படுத்தப்பட்டார். 1944ல் உருவாக்கப்பட்ட காங்கிரஸ் சங்கம் நடத்திய கூட்டத்தில் தலைமைப் பொறுப்பேற்றார். 1946 ஜூலையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு மன்றத்திற்கு தமிழகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்ட 49 உறுப்பினர்களுள் ஒரே பெண்மணியாகத் திகழ்ந்தவர் அம்மு சுவாமிநாதன். அவருடைய மகள்தான் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தின் பிரிவான ஜான்சிராணி ரெஜிமெண்ட்டின் கேப்டனாக விளங்கிய இலட்சுமி. இவ்வாறு சுதந்திரப் போராட்டம், மக்கள் தொண்டு ஆகியவற்றில் முன்னணியில் செயல்பட்டார் அம்மு சுவாமிநாதன்.



## ருக்மணிதேவி இலட்சுமிபதி

1930 மார்ச்சில் நடைபெற்ற வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் அருந்தொண்டாற்றியவர்களுள் சென்னை இளைஞர் குழு (Madras League of youth)வின் தலைவராக விளங்கியவரும் இவர். உப்புச் சத்தியாகிரகத்தில் உப்புச் சட்டத்தையும் மீறியதற்காக வேதாரண்யத்தில் கைது செய்யப்பட்ட முதல் தமிழ்ப் பெண்மணி இவர். காந்தியடிகளால் அறிவிக்கப்பட்டவர்களுள் அப்போதைய மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளியின் துணை சபாநாயகராக விளங்கிய ருக்மணி இலட்சுமிபதியும் ஒருவராவார். காங்கிரஸ் பேரியக்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இவருடைய அரசியல் பணிகள் ஒரு முன்னோடியெனில் மிகையாகாது.

மேலே கூறப்பட்டுள்ளவற்றின் மூலம் இந்தியப் பெண்ணினத்தில் பல முன்னோடிகள் இருந்தனரென்பது தெளிவு. இவற்றின் மூலம் அவர்கள் அமைத்துத் தந்த அடித்தளமானது இன்று எழுச்சிமிக்க பெண்ணின மேம்பாட்டிற்குத் துணையாக அமைகின்றதெனக் கொண்டால் மிகையாகாது.

# 6. பெண்களுக்கான அமைப்புகள்

**முன்னுரை** பெண்கள் ஆன்மீக சபா - சக்தி சமிதி - ஆர்யா மஹிளா சமாஜம் - சாரதாசதன் - விதவைகள் மறுமண அமைப்பு - இந்து சமுதாய சீர்திருத்த இயக்கம் - பாரத மஹிளா பரிஷத் - இந்திய பெண்கள் கழகம் - இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு - ஔவை இல்லம் - இந்திய தேசிய பெண்கள் மாநாடு உலகப் பெண்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம்

பெண்ணினம், கல்வியறிவின்மை காரணமாக, இருளடர்ந்த ஒரு நிலையை எட்டியது. இந்தியாவில் 1997ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி பெண்களில் 45 விழுக்காடு பெண்களே கல்வியறிவுடையவர்களாயிருந்தனர். கல்வியறிவின்மையுடன் மூடநம்பிக்கைக்கும் அவர்கள் ஆளாக்கப் பட்டிருந்தனர். மண்மூடிப்போகவேண்டிய கண்மூடி வழக்கங்களைப் பின்பற்றுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். சமயம் மற்றும் சமூக நோக்குகளிலும் சாஸ்திரங்கள் காட்டும் மூடத்தன்மைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். சொத்துரிமையின்மை, உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள், வரதட்சணைக் கொடுமை போன்ற கருத்துக்களும் அவர்களது பின்னடைவுக்கு காரணமாயின. பெற்றோருக்கு பெரும் பளுவான பெண்குழந்தைகளை வெறுத்துக் கொலை செய்வதும் பெண்களின் வீழ்ச்சிக்கு வித்தாக அமைந்தது. 1997ஆம் ஆண்டு கணக்கெடுப்பு மூலம் சராசரியாக 105 பெண்குழந்தைகள் ஆண்டொன்றுக்கு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது தெரிய வருகின்றது. அதேபோல், தமிழக மனித உரிமைக்கழகத் தலைவர் நீதிபதி எஸ். நைனார் கூற்றுப்படி 1997ல் மட்டும் 1260 பெண் சிசுக் கொலைகள் நிகழ்ந்ததென்ற கணக்கெடுப்பு உள்ளது.

ஆனால் 19ஆம் நூற்றாண்டு முதல், பெண்ணியத்தின் முன்னேற்றத்திற்கான வழிவகைகள் படிப்படியாக ஏற்கப்பட்டனவென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பிரம்ம சமாஜம் கண்ட ராஜாராம் மோகன்ராய், ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்த தயானந்த சரஸ்வதி, பிரார்த்தனா சமாஜத்தை உருவாக்கிய மகா கோவிந்த ரானடே போன்றோர் பெண் இனத்தின் பெருமைகளை நிலைநாட்டுவதின் மூலம் அவர்களுடைய நிலைகளை மேம்பாடடையச் செய்யலாமென்றார். மகாராஷ்டிரத்தில் ஜோதிபா பூலே, ஆந்திராவில் வீரேசலிங்கம் பந்தலு, வங்காளத்தின் ஈஸ்வரசந்திர வித்தியாசாகர், கேரளாவில் நாராயண குரு, தமிழகத்தில் பாரதியார், ஈ.வெ இராமசாமி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றோரும் பெண்ணினத்தின் பெருமையை நிலைநாட்ட வகை செய்தனர். அவர்களுடைய பெருமுயற்சிகள் காரணமாக கீழ்க்காணும் பலசட்டங்களும் இயற்றப்பட்டன. 1795–ல்



பெண்சிசுக்கொலை தண்டனைக்குரியதாக உள்ளாக்கப்பட்டது. 1829ல் சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் சட்டப்படி தடுக்கப்பட்டது. 1856–ல் விதவைகள் மறுமணச்சட்டம் இயற்றப்பட்டது. 1929–ல் பெண்கள் சொத்துரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. 1927–ல் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. 1955ல் இந்து திருமணச்சட்டம் நிறைவேறியது. 1956ல் இந்து வாரிசுரிமை, தத்துரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1961ல் வரதட்சணை தடைச்சட்டம் நிறைவேறியது. அதேபோல் பெண்ணின் திருமணவயது 18 ஆக ஆக்கப்பட்டது.

பெண் கல்விக்கான வழிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஜான் எலியட் டிரிங்பாட்டர் பெத்தூன் என்பவரின் பெருமுயற்சி காரணமாக, 1849ல் கல்கத்தாவில் பெண்களுக்கென்று ஒரு பள்ளி உருவாக்கப்பட்டது. அப்பள்ளியின் ஆரம்பத்தில் 6 முதல் 9 வயதுடைய 21 பெண்குழந்தைகளுக்குக் கல்வி தரப்பட்டது. 1854ல் வெளியிடப்பட்ட வுட் அறிக்கை மூலமாக பெண்கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. 1885ல் காதம்பினி கங்குலி என்ற கல்கத்தா பெண்மணி கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற முதல் பட்டதாரியான அதே பெண்மணி 1890ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்று, இந்திய விடுதலைப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

மேலே கூறப்பட்ட பலவகையான செயல்கள் பெண்களிடம் ஓர் உத்வேகத்தை உருவாக்கின. தம்மை வெளிப்படுத்தி வலுப்படுத்திக் கொள்ள பலதரப்பட்ட பெண் இயக்கங்கள் தேவை எனப்பட்டது. அதற்கு ஒரு வடிகாலாக அமைந்தவர் தயானந்த சரசுவதி ஆவார். அவரால் உருவாக்கப்பட்ட ஆரிய சமாஜம் பெண்களுக்கெனத் தனிப்பட்ட நிறுவனங்கள் பலவற்றை உருவாக்கின. தயானந்தர் ஆங்கிலப் பள்ளி, ஆரிய கன்னியபாடசாலா, கன்னியர் ஆசிரமம் போன்றவை பெண்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தி போற்றக்கூடியனவாய் அமைந்தன. இவற்றையொட்டி பெண்களால் பெண்களுக்காக நடத்தப்பட்ட பல அமைப்புகள் உருவாக்கப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து காணலாம்.

## பெண்கள் ஆன்மீய சபா

1852ல் சுவர்ணகுமாரி தேவி என்பவரால் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்டவரான அவர் இந்திய பெண்களிடையே சமூகம் மற்றும் நீதிமனப்பான்மையை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தார். பெண்கள் பொதுச் சேவையில் ஈடுபடவேண்டுமென அது வலியுறுத்தியது. படித்த ஏழைப் பெண்கள் ஆசிரியைகளாக நியமிக்கப்பட்டார்கள். அது பெண்கல்வி மேம்பாட்டிற்கு வழிவகுத்தது. இவ்வமைப்பு மேற்கொண்ட பணிகள் காரணமாகவே பெண்களை ஆசிரியைகளாக நியமிக்கும் நிலை பெருகியது.

### சக்தி சமிதி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுவர்ணகுமாரி தேவி என்பவராலேயே 1886ஆம் ஆண்டில் சக்தி சமிதி என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பு பெண்களின் பொருளாதார வளத்தைப் பெருக்க முனைந்தது.

அதற்காக அனாதைகள், விதவைகள் ஆகியோரை நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபடச் செய்வது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய நோக்கத்தைச் செயல்படுத்தக்கூடிய வகையிலேயே தமிழகத்தில் இன்றும் பள்ளிகளில் சத்துணவுக் கூடங்களில் பணியாற்ற திக்கற்ற பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஆர்ய மஹிளா சமாஜம்

பண்டித ரமாபாய் என்பவரால் 1882ல் ஆரிய மஹிளா சமாஜம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. பால்ய விவாகம் காரணமாக, இளவயதிலேயே கணவனை இழந்து விதவையாகிவிட்ட பெண்களுக்கு கல்வியறிவு புகட்ட வகை செய்யப்பட்டது. இதன்மூலம் இளம் விதவைகள் இரங்கத்தக்க நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களிடம் தாமும் வாழ முடியுமென்ற தன்னம்பிக்கை ஊட்டப்பட்டது.

## சாரதா சதன்

பண்டிதராமாபாய் என்பவராலேயே மகாராஷ்டிரத்திலுள்ள புனாவில் 1889ஆம் ஆண்டு சாரதா சதன் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. பெண்களுக்குக் கல்வியளிப்பதையும், அவர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்கித் தருவதிலும் அவ்வமைப்பு செயல்பட்டது. ஆதரவற்ற அனாதைகளான விதவைகளுக்கான மறுவாழ்வைத்தர மறுவாழ்வு மையம் ஒன்றும் இணைக்கப்பட்டது. இயற்கைச் சீற்றங்களான புயல், நிலநடுக்கம், தொற்றுநோய், வெள்ளம், பஞ்சம் போன்ற இடர்ப்பாடுகளிலிருந்து மக்களை மீட்க இவ்வமைப்பு செயல்பட்டது.

## விதவைகள் மறுமண அமைப்பு

அன்றைய சென்னையுடன் இணைந்திருந்து ஆந்திரப்பகுதியான ராஜமுந்திரி என்ற ஊரில் பெண்சிசுக்கொலை தண்டனைக்குரியதாக உள்ளாக்கப்பட்டது. 'வீரேசலிங்கம் பந்துலு' என்பவரால் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. தென்னிந்தியாவில் பின்தங்கிய, தேக்க நிலையினை எய்திய விதவைகளின் வாழ்க்கையை புனரமைக்க இவ்வமைப்பு செயல்பட்டது.

## இந்து சமுதாய சீர்திருத்த இயக்கம்

1892ல் சென்னையைச் சேர்ந்த ஸ்ரீசுப்ரமண்யம் என்பவரால் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. பெண்களின் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய இன்னல்கள் மற்றும் சிக்கல்களைத் தீர்த்து வைத்தல், விதவைகள் மறுமணம், பெண்கல்விக்கு முக்கியத்துவமளித்தல் போன்ற பணிகளில் தன்னை இவ்வமைப்பு ஈடுபடுத்திக் கொண்டது. இதனால் திக்கற்ற, ஆதரவில்லாத பெண்களின் நிலை முன்னேற்றப்பட வகை செய்யப்பட்டது.

## பாரதமஹிளா பரிஷத்

பெண்களின் முன்னேற்றத்திற்காக பெண் மத்தியில் நாடு முழுவதும் ஒருங்கிணைந்து செயல்படக் கூடிய ஓர் அமைப்பின் அவசியம் உணரப்பட்டது.



அதனையே நோக்கமாகக் கொண்டு 1904ஆம் ஆண்டில் சரளாதேவி என்பவரால் 'பாரத மஹிளா பரிஷத்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் பெயர் பின்னர் 'பாரத் ஸ்தரீ மஹா மண்டல்' என்று மாற்றப்பட்டது. பெண்களுக்கான பரந்து விரிந்த அமைப்பின் தேவையை வலியுறுத்திய பாரத மஹிஷா பரிஷத் மிக முக்கியமானதொன்றாகும். இவ்வமைப்பானது காலப்போக்கில் இந்திய பெண்கள் சங்கம் என்ற அமைப்புடன் இணைந்து செயல்பட்டு தமது இலக்குகளை எட்ட முனைந்தது.

## இந்திய பெண்கள் கழகம் (Women's Indian Association)

கல்வி வளர்ச்சி காரணமாக பெண்கள் தமது உரிமைகளை உணரத் தொடங்கினர். அவர்கள் ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய வகையில் பல அமைப்புகளை உருவாக்கினார்கள். மார்க்ரெட் கஸின்ஸ், அன்னிபெசன்ட் மற்றும் முத்துலெட்சுமி ரெட்டி ஆகியோரின் பெருமுயற்சி காரணமான 1917ல் சென்னையிலுள்ள அடையாறில் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது, பெண்ணுரிமைக்காகப் போராடிய அமைப்புகளுள் இது தலையாயது என்றால் மிகையாகாது. இது பெண்களுக்காகப் பல வழிகளில் போராடியது. பெண்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுத் தருவதில் அதிக ஈடுபாடுகாட்டியது. பெண்களுக்கான சமுதாயம் மற்றும் கல்விவளர்ச்சிப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இக்குழு சரோஜினி நாயுடு தலைமையில் இங்கிலாந்துக்கு பெண்கள் தூதுக்குழு ஒன்றினை அனுப்பியது. பெண்களுக்கு அரசியல் மற்றும் வாக்குரிமை வேண்டுமென வலியுறுத்தியது. அதன் விளைவாக 1921ல் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. 1936ல் வாக்குரிமைத் தகுதியானது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமானதாக வழங்கப்பட வகை செய்யப்பட்டது. இந்நிலையில் 1918—ல்தான் இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்வாறு பெண்கள் தமது உரிமைகளைக் கேட்டு போராடிப் பெற வகை செய்யும் அமைப்பாக அது இயங்கியது.

இவ்வமைப்பு காரணமாக 1926ல் முத்து லெட்சுமி ரெட்டி சென்னை மாநில மேலவைத் தலைவராக ஆக்கப்பட்டார். 1927ல் அவ்வவையின் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். இவ்வாறு உலகிலேயே தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி முத்துலெட்சுமி ரெட்டியாவார். அவர் உறுப்பினராக இருந்தபோதுதான் சென்னை மேலவையில் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் இயற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பின்னர் சட்டமாயிற்று. 1926ல் பாரிசில் நடைபெற்ற அனைத்துலகப் பெண்கள் மாநாட்டில் பங்கேற்றார். 'ஸ்திரி தர்மா' என்ற இதழைத் தொடங்கி பெண் கல்விக்காகப் பாடுபட்டார். இந்தியாவிலேயே முதல் மருத்துவ பட்டதாரி என்ற பெயரினைப் பெற்ற முத்துலெட்சுமி ரெட்டி சென்னை எழும்பூரிலுள்ள மகப்பேறு மருத்துவ மனையில் முதல் பெண் மருத்துவராகவும் செயல்பட்டார்.

1917ல் உருவாக்கப்பட்ட அமைப்பின் கிளைகளான அகில இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு (All India Women's Conference), இந்திய பெண்கள் தேசிய அமைப்பு (National Council of Women in India) போன்ற அமைப்புகள் 1925ல் உருவாக்கப்பட்டன.

## இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு

1917ஆம் ஆண்டு மேத் திங்கள் எட்டாம் நாள் பெண்கள் அமைப்புகளின் முன்னோடி அமைப்பாக இவ்வமைப்பு சென்னையிலுள்ள அடையாற்றில் திருமதி டோரத்தி என்பவரால் உருவாக்கப்பட்டது. அவரே அவ்வமைப்பின் செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றினார். அன்னிபெசன்ட் இவ்வமைப்பின் தலைவராக சுமார் 17 ஆண்டுகள் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து அவருடைய பணிகளை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தொடர்ந்து மேற்கொண்டார். 1917க்கும் 1937க்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் இவ்வமைப்பின் 33 கிளைச் சங்கங்கள் இந்தியாவெங்கும் உருவாக்கப்பட்டன. பெண்கல்வி மூலம் அவர்களுடைய அரசியல் பணிகளை மேம்பாடுறச்செய்ய இவ்வமைப்புகள் பணியாற்றின. சட்ட மன்றத்திற்கு உள்ளும், வெளியிலும் பெண்ணுரிமைக்காகப் போராடிய இவ்வமைப்பு பெண்களின் சட்டமன்ற மற்றும் அரசியல் ஈடுபாடுகளுக்கு உறுதுணையாக நின்றது.

1927ல் இந்தியாவுக்கு வந்த சைமன் குழுவினரிடம் பெண்களின் வாக்குரிமை பற்றிய கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அதன் விளைவாக 1936–ல் பெண்களுக்கும் ஆண்களைப் போல் 21ஆவது வயதில் வாக்களிக்கும் உரிமை தரப்பட்டது. ஸ்திரி தர்மா எனப்பட்ட செய்தி இதழினை மூன்று மொழிகளில் வெளியிட்ட அதன்மூலம் பெண்ணியச் சிந்தனைகள் வெளியிடப்பட்டன.

## ஔவை இல்லம்

1930 ஆம் ஆண்டில் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் ஔவை இல்லம் என்ற அனாதை இல்லம் தொடங்கப்பட்டது. அவ்வில்லத்தில் ஆரம்பத்தில் 10 பெண்கள் மட்டுமே சேர்க்கப்பட்டார்கள். ஆனால் 1932ஆம் ஆண்டுக்குள் அவ்வமைப்பில் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பலனடைந்தோரின் எண்ணிக்கையும் சுமார் 1000த்தைத் தொட்டது. பின்னர் இவ்வமைப்பு அடையாற்றில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இவ்வில்லமானது வெறும் அனாதை இல்லம் மட்டுமல்ல. இது திக்கற்ற பெண்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய வகையில் பல தொழில்களிலும் பயிற்சி வழங்கியது. சமூக அவலங்கள், ஏழ்மை, திக்கற்ற நிலை ஆகியவற்றிலிருந்து பெண்களை விடுபடச் செய்ய இந்த அமைப்பு முயலுகின்றது. டாக்டர் அன்னிபெசன்ட், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்றோரின் அரும்பணிகளில் இவ்வமைப்பு சிறப்புப் பெற்றது. இதில் தற்சமயம் 400 உறுப்பினர்கள் உள்ளனர். 72 கிளைகளும் 23 மையங்களும் உள்ளன.

## இந்திய தேசிய பெண்கள் குழு

1925 ஆம் ஆண்டு லேடி அபர்தீன் என்பவரால் இவ்வமைப் உருவாக்கப்பட்டது. சமூகம் மற்றும் பொருளாதார நிலைகளில் பெண்களின் தேக்க நிலை மற்றும் இயலாமையைப் போக்கி அவர்களை முன்னேறச் செய்த அதன் நோக்கமாகும். அதற்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பினை நல்குத முக்கியப் பணியாயிருந்தது. இவ்வமைப்பு ஆற்றிய அரும்பணிகள் காரணமா பெண் உழைப்பாளிகள் பெண் தொழிலாளர்கள் ஆகியோரின் ஊதிய



உயர்வடைய வழிகள் ஏற்பட்டன. மகப்பேறு காலத்தில் பணஉதவியுடன் கூடிய விடுப்பும் தரப்பட்டது. தவறுகளுக்காகத் தண்டனைப் பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ள பெண்களுக்குக் காவலர்களாக பெண்களே நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்திற்கு இவ்வமைப்பு பல வழிகளில் காரணமாயிருந்தது.

இத்தகைய அமைப்புகளின் காரணமாகவே 1932ல் பெண்களுக்கெனத் தனிப்பட்ட இர்வின் சீமாட்டி கல்லூரி தொடங்கப்பட்டது. 1937ஆம் ஆண்டிலேயே இவ்வமைப்புகள் பெண்கள் உடல் நலத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் குடும்பநலத் திட்டம் பற்றிச் சிந்திக்கத் தூண்டியது.

## அகில இந்திய பெண்கள் மாநாடு

1926 டிசம்பரில் மார்க்ரெட் கஸின்ஸ் என்பவரால் இம்மாநாடு கூட்டப்பட்டது. இவை பெண்கள் முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் பல இடங்களில் இத்தகைய மாநாடுகள் கூட்டப்பட்டன. இம்மாநாடுகளில் 600 முதல் 800 வரையிலான பெண் பிரதிநிதிகள் பங்கு பெற்றனர். அவர்களை தமது முன்னேற்றம் பற்றி விவாதிக்கப்பட்டு முடிவுகள் டுக்கப்பட்டன. தனிப்பட்ட அறப்போராட்டங்கள் வாயிலாகத் தமது ரிமைகளைப் பெற பெண்களுக்கு இம்மாநாடுகள் வழிகாட்டின.

## லகப்பெண்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம்

1940ஆம் ஆண்டளவில் இந்தியாவின் பலபகுதிகளிலும் பண்களுக்கான அமைப்புகளும், சடங்குகளும் வளர்ச்சியடைந்திருந்தன. வ்வமைப்புகள் பெண்களின் சமூக, பொருளியல் முன்னேற்றம், குழந்தைகள் ருமணம், விதவைகளின் கொடுமை, தேவதாசி முறை போன்ற ழப்பங்களினின்றும் விடுபடச் செய்ய வகை செய்தன. பெண்கள் மைப்புகள் தம்மை உலகளாவிய அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, மாநாடுகளுடன் பங்கேற்றும் கருத்துப் பரிமாற்றங்களுக்கு வகை செய்து ள்ளுகின்றன. அயல்நாடுகளில் கூட்டப்பட்ட மாநாடுகளிலும் அவை கேற்றன. எடுத்துக்காட்டாக 1923ல் ரோம் நகரில் நடைபெற்ற சர்வதேச ண்கள் ஓட்டுரிமை உரிமைக் கூட்டத்தில் இந்தியாவிலிருந்து மீராபாய்தாரா, ன்தாரா போன்ற பெண்கள் பங்கேற்றனர். 1929ல் பெர்லினில் நடைபெற்ற கப் பெண்கள் கூட்டமைப்பிலும் இந்தியாவின் சார்பில் திருமதி சின்ன தாய், திருமதி மத்தாய் போன்றோர் பங்கேற்றார்கள். 1931ஆம் ஆண்டில் பெற்ற முதல் ஆசியப் பெண்கள் மாநாட்டில் இந்தியா சார்பில் சரோஜினி டு, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ஆகியோர் பங்குபெற்றனர். 1934ல் காவில் நடைபெற்ற உலகப் பெண்கள் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் யா சார்பில் டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி பங்கு பெற்றதுடன் ரையும் ஆற்றினார். இதன்மூலம் இந்தியப் பெண்கள் நிலைமேம்படவகை ப்பட்டது.

இந்தியாவில் சரோஜினி நாயுடு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, மாரி அமிர்தகௌர், கமலாதேவி சடோபாத்யாயா, விஜயலட்சுமி பண்டிட் ா அஸப் அலி, பேகம் சுபித்அலி, திருமதி எம்.என்.ராய், மசூமா பேகம், ஜானராஜா, அனுசுயா பாய்க் காலே, ஜெய் ஸ்ரீராய்ஜி போன்றோர் பல அமைப்புகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். இவ்வாறு பலதரப்பட்ட புகள் மூலம் பெண்கள் நிலை உயர வகை செய்யப்பட்டது.

# 7. ஆசியாவில் பெண்கள் நிலை

**சீனாவில் பெண்கள் நிலை :-**

பண்டைய காலத்தில் சீனாவில் பெண்கள் ஆண்களுக்கு இணையாக நடத்தப்படவில்லை. சீன சமுதாயத்தில் பெண்கள் அடிமையாக விற்கப்பட்டனர். மன்னர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் ஆசை நாயகிகளாக இருந்தனர். பெண்களின் குதிகாலைக் குறுக்கும் வழக்கம் இருந்தது. பெண்கள் பரத்தமை தொழில் ஈடுபட்டனர். இங்கும் பலதார மணம் முறை வழக்கத்திலிருந்தன.

19–ம் நூற்றாண்டில் தைபிங் அரசு பெண்களுக்கு சில சலுகைகளை கொடுத்தது. i) விபச்சாரம், பெண்களின் பாதங்களை இறுகக்கட்டும் படுபாதம், பெண் விற்பனையை, பல பெண்களை மணக்கும் வழக்கம் ஆகிய முறைகள் தடை செய்தன. ii) ஆசை நாயகிகளாக வைத்துக் கொள்ளும் முறை தடை செய்யப்பட்டது. iii)பெண்களுக்கும் ஆண்களைப்போல் சமத்துவ உரிமை வழங்கப்பட்டது. அரசுப்பதவிகளிலும், படைகளிலும் கூட சேர்த்து கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால் தைமிங் அரசு கொடுத்த சலுகைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. எடுத்துக்காட்டாக தெய்வீகப் பேரரசர் ஹங்கியூசுவானின் அந்தப்புரத்தில் 2,000 பணிப் பெண்கள் பணியாற்றினர். இவர்களுக்கு 62 சட்டபூர்வ மனைவியர் இருந்தனர்.

பாக்சர் கலவரத்தின் போது பெண்களின் குதிகாலை குறுக்கும் முறைகள் ஒழிக்கப்பட்டன. இக்கலவரத்திற்குப் பின் பெண்களுக்கு கல்வி அளிக்கப்பட்டது. தாவஜர் பேரரசி ஷிஷி தனது ஆடம்பர செலவுகளை குறைத்து பெண்களுக்கு கல்வி நிலையும் அமைத்தார். சீன புரட்சியின் போது பெண்கள் மகளிர் குதிகாலை குறுக்கும் முறையை முற்றிலுமா ஒழிக்கப்பட்டது.

20–ம் நூற்றாண்டில் சீனாவில் பெண்களுக்கு சம உரி கொடுத்திருந்தனர். அதற்கு சிறந்த உதாரணமாக உலக மகளிர் மாநா (1995) சீனாவிலுள்ள பீகிங்கில் நகரில் நடைப்பெற்றது.

**உலக மகளிர் மாநாடு :**

1995–செப்டம்பர் 4 முதல் 15 தேதி வரை பீகிங்கில் உலக மக மாநாடு நடைப்பெற்றது. இம்மாநாட்டில் உலகம் முழுவதிலிருந்தும் அ சாரா அமைப்புகளைச் சார்ந்த 36,000 பெண்கள் கலந்துக் கொண் பெண்ணின் மேம்பாட்டிற்கான வழிவகைகள் ஆராயப்பட்டன. பெண் சி கொலை, கருக்கலைப்பு, பாலியல் சுதந்திரம், திருமணம், குழந்தை வள போன்றவை விவாதத்திற்கு வந்தன. நீதி, மனித உரிமைகள், மனித மேம்பாடு ஆகியவை ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது என் வலியுறுத்தப்பட்டது.



**ஜப்பானிய பெண்கள் நிலை :**

நிலமானிய முறை பெண்களை தொட்டில் முதல், சுடுகாடு வரை தனித்து இயங்கவிடாமல் செய்திருந்தது. கிறித்துவ சமய பரப்புக் குழுவினால் பெண்கல்வி ஊக்கம் பெற்றது. 1870–ம் ஆண்டு பெண்களுக்கு முதல் பள்ளியை யோகாஹமாவில் பெர்ரிஸ் செமின்டி என்ற பெயரில் நிறுவினர். அயல்நாட்டுச் சமய பரப்பினர் 20 ஆண்டுகளில் 40 பள்ளிகளை நிறுவினர். இசை, பொறியியல், இதழியல், மனித உடல் அறிவியல் அனைத்தும் கற்றுக் கொடுத்தனர். 1880 ம் ஆண்டு டோக்கியோ இசைப்பள்ளி நிறுவினர்.

20ம் நூற்றாண்டில் 30 ஆண்டு காலத்தில் பெண் கல்விக்கு முதன்மை நிலை அளிக்கப் பெற்றது. நான்கு சுவர்களுக்குள் முடங்கிய வாழ்க்கை வாழ்ந்த பெண்கள் உயர்கல்வி பெற வெளிநாடுகளுக்கும் சென்றனர். 1901–ல் பெண்கள் பல்கலைக் கழகம் ஏற்பட்டது. புதிய ஜப்பானை உருவாக்குவதில் பெண்களும் பங்கு பெறலாயினர். மருத்துவம், கல்வி, இதழியல், தொழிற்சாலைகள் எங்கும் பெண்கள் பணிபுரிந்தனர்.

பெண்கள் வாழ்க்கையில் மறுபக்கமும் இல்லாமல் இல்லை. வறுமையில் ஆதரவற்றவர்களாக வாழும் நிலையும் நிலவியது. தொழிற்சாலைகளில் வேலை செய்தோர் போதிய வருவாய், பொழுதுபோக்கு ஓய்வு இன்றி இயந்திரம் போல் பணிபுரிய நேர்ந்தது. எனவே சமுதாயத் தீமைகளுக்கு ஆளாயினர். பரத்தமை அல்லது பொருள் வழிப் பெண்டிர் எண்ணிக்கை பெருகியது. 1920 ல் உரிமம் பெற்ற 50,000 பரத்தையர் இருந்தனர். கெய்ஷா எனப்பட்ட பரத்தமையை ஒத்துத் தொழிலைச் செய்த பெண்களும் இருந்தனர். பொருளாதாரப் பெருக்கம் மேலைக் கல்வி ஆகியவற்றினால் 1935–ல் பரத்தையர் எண்ணிக்கை 1920–ஐ–விட குறைந்தது.

**இஸ்லாத்தில் பெண்கள் நிலை**

மனித சமூக வரலாற்றில் ஆரம்பகாலம் முதல் ஆணாதிக்கம் தான் முதலிடத்தில் இருந்தது. ஆணாதிக்கச் சமூகச் சூழல் உருவாவதற்கு சமயங்களும் அவற்றை வகுத்து எடுத்துக்காட்டும் சமூகத்தின் உறவு நிலை தொடர்பான விதிமுறைகளும் கூட சில நேரங்களில் காரணமாக அமைந்துவிடுகின்றன. உண்மைப் பொருளைச் சமயங்கள் எடுத்துக்கூறும் போது அதை சரியாகப் புரிந்து கொள்ளாமல் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆணாதிக்க மனித மனம் விரும்புவரையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியுள்ளது.

மனித சமூகத்தினராகத் திகழ்பவர் ஆண்கள், பெண்கள் என்ற இருபாலருக்கும் தனித்தனியாக சட்டவிதிமுறைகளை சமயங்கள் வகுத்து கொடுக்கின்றன. இவ்விதிமுறைகள் எல்லாம் ஆண், பெண்பாலரின் இயற்கையான உடலமைப்பு மற்றும் உள்ள இயல்புகளுக்கு ஏற்ப பெற்றுள்ளது. இவ்வகையில் இஸ்லாம் சமயத்தில் பெண்கள் பற்றி செய்திகள் விரிவாக இடம்பெற்றுள்ளன. இந்தச் செய்திகளை எல்லாம் மேலோட்டமாகப் பார்ப்பவருக்கு பெண்களுக்குரிய உரிமைகளை இஸ்லாம் சமயம்

கொடுக்கவில்லை என்று தவறாக கருதுவார்கள். இக்கருத்தின் உண்மைத் தன்மைகள் சரிவர சொல்லவேண்டுமானால் பெண்கள் தொடர்பாக இஸ்லாம் பெற்றுள்ள கருத்துக்களின் உண்மைத் தன்மையை திருக்குர் ஆனில் அடிப்படை ஆதாரமாக ஆராயப்படும்போது அறியலாம்.

திருக்குர் ஆனில் இடம்பெற்றிருக்கும் பெண்கள் பற்றிய செய்திகளை ஆராயப் புகுவோர்க்கு உடனடியாக அவர்களது கவனத்தில் தெரிய வருவது நான்காவது அத்தியாயமான 'அன்னிஸா' ஆகும். காரணம் அன்னிஸா என்ற அரபு பதத்தின் பொருள் பெண்கள் என்பதாகும். இஸ்லாத்தில் பெண்கள் என்ற தலைப்பினை பெற்ற இப்பிரிவில் பல்வேறான செய்திகள் இடம்பெற்றிருப்பினும் பெண்கள் தொடர்பான பல முக்கிய இறைக்கட்டளைகள் இவ்வத்தியாயத்தில் இடம்பெற்றுள்ளன. எனவே முக்கியத்துவம் கருதி திருக்குர் ஆனில் நான்காவது அத்தியாயம் பெண்கள் என பெயரிடப்பட்டுள்ளது. அன்னிஸா அத்தியாயத்தின் இடம்பெற்றிருக்கும் பெண்கள் பற்றிய கருத்துக்களை முழுமையாக புரிந்துகொள்ள வேண்டுமானால் இவ்வத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள திருவசனங்கள் மட்டும் நமக்கு போதுமானதாக இல்லை. திருக்குர் ஆனில் ஏனைய பிற அத்தியாயங்களில் பெண்கள் தொடர்பான கருத்துக்களை ஒன்று திரட்டி பார்க்கும்போது திருமறையில் பெண்கள் குறித்த கருத்து முழுமைத்துவம் பெறும். இங்கு ஆய்விற்கு அன்னிஸா அத்தியாயத்தில் இடம்பெற்றுள்ள பெண்கள் தொடர்பான திருவசனங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வியல் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வியலில் இடம்பெற்றுள்ள செய்திகளை பின்வரும் துணை தலைப்புகளில் விவரிக்கலாம்.

1. திருக்குரானிற்கு முந்திய சமூக அமைப்பு.
2. திருக்குர் ஆன் அன்னிஸா அத்தியாயம் நோக்கில் பெண்கள்.

**திருக்குரானுக்கு முந்திய சமூக அமைப்பு**

அன்னிஸா அத்தியாயத்தில் பெண்கள் பற்றிய கருத்துக்களை விளக்குவதற்காக முன் அன்றைய சமூகத்திலும் அதற்கு முந்திய சமூகத்தில் பெண்களுக்கு தொடர்பான உரிமைகள், கடமைகள் தொடர்பான கருத்துக்களை இங்கு சுட்டிக்காட்டுவது இன்றியமையாத தேவையாகும். அப்போதுதான் இஸ்லாம் எந்த அளவிற்கு பெண்களின் உரிமை தொடர்பான மாற்றங்களை சமூக அமைப்பில் இடம்பெறச் செய்தது என்ற உண்மைத்தன்மையை உணர்ந்துக்கொள்ள முடியும்.

நபிபெருமானார் பிறந்தபோது அஞ்ஞானம் அரபுநாட்டில் எங்கும் நிறைந்து காணப்பட்டது. ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டி ஆதம்நபியும் இப்ராஹிம் நபியும் நிர்மாணித்த வழிபாட்டு உருவங்கள் கஃபா என்னும் இறை இல்லத்தின் சூழப்பட்டு காணப்பட்டது. நாளொன்றுக்கு ஒருவீதம் என 365 நாட்களுக்கு 365 உருவங்களுக்கு வழிபாடுகள் நிகழ்த்தினார்கள். கஃபாவின் முகப்பில் சிரியாவிலிருந்து கொண்டுவந்த் விலை உயர்ந்த செந்நிறக்கல்லில்



செதுக்கப்பட்ட 'ஹூபல்' என்னும் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்தன. குறைஷிகளுக்குள் சண்டை ஏற்படும்போது 'ஜெய்ஹூபல்' என்னும் ஒலி வானைப் பிளக்குகின்றது. இவற்றைத் தவிர லாத், மன், உஜ்ஜா என்னும் உருவச் சிலைகள் முறையே ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலை ஆற்றும் தெய்வங்களாக இருந்தன என அரேபிய வரலாற்று ஏடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தெய்வ விக்கிரங்களுக்கு எல்லாம் மிருகத்தையும், மனிதனையும் பலியிட்டு வழிபாடு நடத்தி வந்தார்கள். எந்த ஒரு வேலையைத் துவக்கும் முன்பும் நாள் வழிபட்டு உருவங்களுக்கு வணக்கம் செலுத்திய பிறகுதான் துவங்குவார்கள். தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப குறி ஏற்பட்டால் அவ்வுருவங்களை போற்றி மகிழ்வர். இதற்கு மாறாக ஏற்பட்டால் அதனைத் தூற்றுவார்கள்.

அரபு நாட்டில் மதக்கொள்கை இவ்வாறு காணப்படுகையில் சமுதாய வாழ்க்கையானது ரொம்பவும் மூடநம்பிக்கைகளை பெற்றிருந்தது. மனிதனுடைய ஆன்மா மிகச் சிறியதான பொருள் என்றும் மனிதன் வளர வளர ஆன்மாவும் சேர்ந்து வளர்கிறது என நம்பினர். மனிதன் இறந்தபிறகு அவனது ஆன்மா ஆந்தை போல உருவம் எடுத்து புதைகுழியைச் சுற்றிச்சுற்றி வரும் எனக் கருதினர். அநியாயமாக கொலை செய்யப்பட்டிருந்தால் அவர்களின் ஆன்மா ஆந்தை உருவம் எடுத்து புதைகுழியை சுற்றிச்சுற்றித் திரிந்து 'அஸ்கினி அஸ்கினி' என அலறிக் கொண்டேயிருக்கும் என நம்பினார்கள். மழையே பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டால் பசுவினுடைய வாலில் வைக்கோலைக் கட்டித் தீயை வைத்து மலைமேல் விரட்டிவிட்டால் தான் மழைவரும் என கருதினார். ஒருவன் இறந்துவிட்டால் அவன் புதைகுழியில் ஒரு ஒட்டகத்தைக் கட்டி அதற்கு தீனி போடாமல் பட்டினி போட்டு சாகுமாறு விட்டுவிட்டால் அந்த ஒட்டகம் அவனுக்கு நியாயத் தீர்ப்புநாளில் அவன் ஏறிச் செல்வதற்கு வாகனமாக உதவும் என நம்பிக்கை கொண்டனர்.

ஆரம்பகாலத்தில் அரபு சமூகத்தில் கல்வி அறிவு என்பது எவ்வித முறையான ஒழுங்குமின்றி மிகவும் குறைவாகவே இருந்து வந்தது. இதன் காரணமாக அரபு நாட்டவர்கள் தங்களது எண்ணத்தை எழுத்துப்படுத்திப் பேணுவதில் அதிக ஆர்வத்தை காட்டவில்லை. எனினும் கவிதைத்திறன், நாடோடிக் கதைகள் முதலானவற்றில் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இக்கவிதைகள் எல்லாம் மனித சமூக வாழ்வின் நெறிமுறைகளையோ ஒழுக்கக்கோட்பாடுகளையோ எடுத்துச் சொல்லவில்லை. செல்வந்தர்களின் சிற்றின்பம், அவர்களிடம் குடிகொண்டிருந்த சூதாட்டம், வெறி, மதுவின் மீதுள்ள போதை ஆகியவற்றைப் பற்றி எடுத்துரைத்தன. அன்றைய நிலையில் பெண்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. முகம்மது நபி (ஸல்) அவர்கள் வந்தபிறகுதான் பெண்களுக்கு பல உரிமைகள் கிடைத்தன.

**திருக்குர் ஆனின் அன்னிஸா அத்தியாயம் நோக்கில் பெண்கள்**

பெண்கள் என்றாலே கீழ்த்தனமாக பேசப்பட்டும், நடத்தப்பட்டும் வந்த நிலைமாறி பெண்ணுரிமை பேசப்படும் காலமாக இன்றைய காலம் மாறிவிட்டது. பெண்கள் வீட்டிலேயே முடங்கிக்கிடக்க வேண்டியவர்கள் என்ற நிலைமாறி,

இன்று அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முன்னேறத் துவங்கிவிட்டனர். இஸ்லாத்தை பொறுத்தவரை பெண்களுக்கு எனப் பல சலுகைகள் வழங்கியுள்ளது. பெண்களை பெண்களாக வாழ வழிவகுக்கிறது. பெண்களுக்குரிய கண்ணியத்தை சிறந்தமுறையில் வழங்குகிறது. இஸ்லாம் சமயத்தில் பெண்களுக்கு கிடைத்த உரிமையைப் பற்றி பின்வரும் தலைப்புகளில் விளக்கப்படுகின்றன.

1. குடும்ப அமைப்பில் பெண்கள்
2. சமூக அமைப்பில் பெண்கள்
3. சமய அமைப்பில் பெண்கள்

அன்னிஸா அத்தியாயத்தில் இடம்பெறும் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு இம்மூன்று தலைப்புகளையும் விளக்கும்போதுதான் இஸ்லாத்தில் பெண்ணின் உரிமைகள், தகுதிகள், வரையறைகள் ஆகியவற்றை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. எனவே, இஸ்லாம் பெண்ணிற்கு அதிக முக்கியத்துவத்தை வழங்குகிறது.

## குடும்ப அமைப்பில் பெண்கள்

குடும்பம் என்ற அமைப்பில் பிறப்பு முதல் இறப்புவரையிலும் பல்வேறான நிலைகளைப் பெண்கள் எதிர்கொள்வதை இஸ்லாம் விரிவாக உரைக்கிறது. பெண்ணுக்குரிய கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் ஒவ்வொரு நிலையிலும் விதிக்கும். இவை ஒவ்வொன்றையும் பெண்ணின் மேம்பாட்டிற்காகவும் தற்காப்பிற்காகவும் விதியாக பெற்றுள்ளது. குடும்ப அமைப்பில் எந்தவிதமான உரிமையையும் பெறாமல் இருந்த காலச் சூழலில், பெண்களுக்குப் பல உரிமைகளைக் கொடுத்து அவர்களும் குடும்ப அமைப்பில் முக்கியத்துவம் பெறுவார்கள் என்பதை இன்றைய உலகுக்கு உணர்த்தியது. இல்லறத்தை அடிப்படையாகக் கொண்டுதான் குடும்ப அமைப்பு பலப்படுகிறது. குடும்ப அமைப்பிற்குள்ளேயும் ஆண், பெண்ணிற்கு இணக்கமான உறவுநிலையை ஆதரிக்கிறது. இணக்கமற்ற குடும்ப அமைப்பு சமூகச் சிதைவுக்கு வழிவகை செய்துவிடும் என்று கருதுகிறது. எனவே, குடும்பம் என்பது அன்பு, மரியாதை, ஆகிய பண்புகளுடன் திகழும்போது அவ்வமைப்பு, முறையான சமூக அமைப்பிற்கு உதவி புரியும். குடும்ப அமைப்பிற்குள் பெண்ணின் பங்கு இன்றியமையாதது என்பதைச் சுட்டிக்காட்டும் இஸ்லாம், திருமணம் தொடர்பாக பெண்ணிற்கு உரிமைகளாக விவரித்துள்ள கருத்துக்கள் மேலோட்டமாகப் பார்ப்பவருக்கு மாறுபட்ட சிந்தனைக்கு இடம் தருகின்றன. ஆனால், இது உண்மை அல்ல. திருமணம் தொடர்பாக பெண்ணிற்கு முழு உரிமையையும் இஸ்லாம் வழங்கி உள்ளது.

பெண் என்பவள் இரக்க குணம்படைத்தவளாகவும், போலியை கூட நல்லது என நம்பும் அளவுக்கு ஏமாளியாகவும் இருப்பாள். ஆடைகளுக்கும், வெளிப்பகட்டான வார்த்தைகளுக்கும் முக்கியத்துவம் தருகின்றாள். ஆண்களிடம் காதல் என்ற பெயரில் சிக்கி, அவனது வார்த்தை ஜாலங்களிலும் பசப்பு மொழியிலும் மயங்கி, திருமணத்திற்கு முன்பே அவனிடம் தன்னை



இழந்துவிடுவாள் அல்லது அவளின் குடும்பத்தாருக்குத் தெரியாமல் அவனுடன் ஓடிப்போய் திருமணம் செய்துகொள்வாள். பிறகு அவனது நடவடிக்கைகளால் அவனிடம் கசந்து, இவனைப் போய் நாம் தேர்ந்தெடுத்தோமே என எண்ணி எண்ணி வருத்தப்படுவாள். சில பெண்கள் அதுபோன்ற நிலை வந்ததும் தயங்காமல் மனஉறுதியுடன் தற்கொலை செய்து கொள்வதும் உண்டு. இதுபோன்ற நிலை ஏற்பட்ட பெண்கள் ஏராளமான பேர்களுண்டு. மேலும், தானாக குடும்பத்திற்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டு, காலமெல்லாம் தனக்கு துணையாக இருப்பான் என்று யாரை நம்புகின்றாளோ, அவனோ இவளை திடீரென்று ஒருநாள் விட்டுவிட்டு ஓடிப்போய்விடுகின்றான். அப்போது நிர்கதியாய் நிற்கும் இவளுக்கு ஆறுதல் கூறவும் யாரும் முன்வரமாட்டார்கள். ஆனால் அவளுக்கு 'வலீ' எனும் ஒரு பொறுப்பாளர் இருந்தாலோ, அவனுக்குப் பயந்தாவது அவளின் கணவன் ஒழுங்காக நடப்பான். கணவனால் கைவிடப்படும் போதும், துன்புறுத்தப்படும் போதும் அவளுடைய வலீகாரன் தட்டிக் கேட்பான். மேலும், ஒரு பெண்ணை பலர் பெண் கேட்டுவருவார்கள். அவர்களில் யாரை தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் பெண்ணுக்கு வருகின்றது. அதற்கு அவளின் நாணம் ஒரு காரணமாக இருக்கும். அதே சமயம் ஒரு ஆண் அவளுக்கு வலியாக இருந்தால், அவளுக்கு எளிதான தெளிவு பிறக்கும். அடுத்து விபச்சாரக்குற்றமும் இந்த வலீயை நியமிப்பதன் மூலம் ஒழிகிறது. எனவே, திருமணத்தின்போது மணமகளுக்கு 'வலீ' அவசியமாகிறது. அவனால் பெண்ணுரிமை பாதுகாக்கப்படுகிறது. பல தீமைகளும் ஒழிய வழிவகுக்கிறது.

## திருமண உரிமை

திருமணமென்பது உள்ளத்தின் தன்மையையும் எண்ணத்தின் திண்ணத்தையும் ஒருங்கிணைத்த ஒன்றாகும். அதில் வெறுப்புக்கும் வேதனைக்கும் வற்புறுத்தலுக்கும் இடமில்லை. அன்பும் பண்பும் பாசமும் நேசமும் தான் அதன் அணிகலன்களாகும். ஒரு ஆண் தான் விரும்பிய பெண்ணை மணக்க உரிமை பெறுவதுபோல் ஒரு பெண்ணும் தான் விரும்பிய ஆடவரை மணக்க உரிமை பெற்றவளாவள். தான் விரும்பாத ஆடவரை மணக்கும்படி ஒரு பெண்ணை பெற்றவர்களோ, உற்றவர்களோ, மற்றவர்களோ வற்புறுத்தக்கூடாது. திருமணமென்பது வாழ்வில் ஒரு முறைதான் நடக்கும். எனவே, அது நறுமணமாகத்தான் நடக்க வேண்டும்.

எப்பொழுது ஒரு பெண் திருமண வயதை அடைந்துவிட்டாளோ அவளுடைய பெற்றோர் அவளது ஆலோசனையுடன் அவளுக்கு தகுந்த கணவனைத் தேர்ந்தெடுத்து திருமணம் முடித்து வைப்பது அவர்களுடைய கட்டாயக் கடமையாகும். ஒரு முறை பெருமகனார் (ஸல்) அவர்களிடம் ஒரு பெண் வந்து தன்னை ஆலோசனை செய்யாமல், பெற்றோர்கள் எனக்கு திருமணம் செய்துவிட்டார்கள் என்று கூறியதற்கு, நாயகம் (ஸல்) அவர்கள் அந்த மணபந்தத்தை நீ விரும்பினால் முறித்துக்கொள்ள உரிமை உண்டு என்று கூறினார். மேலும் ஒரு பெண் விதவையாகவோ அல்லது மணவிலக்குப் பெற்றவளாகவோ இருப்பின் அவளுக்கு தன் திருமணத்தைக் குறித்து முழுஉரிமை உண்டு.

இஸ்லாம் திருமண உரிமையில் ஆண், பெண்ணிற்கு வேறுபட்ட விதிகளை விதித்துள்ளது. ஒரு ஆண் நான்கு திருமணங்கள் செய்துகொள்ள குர்ஆன் அனுமதியளிக்கிறது. ஒரு பெண்ணிற்கு இத்தகைய அனுமதியளிக்கப்படாததன் காரணம் பெண்களின் கூடுதலாக எண்ணிக்கை இருந்த காலப்பின்னணி என்பதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை உடைய கணவன் அம்மனைவியர்களிடையே நீதமாக நடத்தல் வேண்டும் என இஸ்லாம் கட்டளை பிறப்பிக்கின்றது. இது பற்றி அல்லாஹ் திருமறையில் அனாதைப் பெண்களைத் திருமணம் செய்து அவர்களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்துகொள்ளுங்கள். இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ. ஆனால் நீங்கள் (இவர்களிடையே நியாயமாக நடக்கமுடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே மணந்து கொள்ளுங்கள் அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணை கொண்டு) போதுமானதாக்கிக் கொள்ளுங்கள்.) இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும். நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்த சாத்தியமாகாது. ஆனால், ஒரே மனைவியின் பக்கம் முற்றிலும் சாய்ந்துவிடக் கூடாது அல்லாவுக்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். ஓர் ஆடவன் தன்னுடைய மனைவியர் அனைவருக்கும் சரிசமமான முறையில் உணவு, உடை, உறைவிடம், செலவினம் ஆகிய அனைத்தையும் வழங்க முடியும் என்ற நம்பிக்கையாக இருப்பானாகில் அவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணப்பதில் தவறு கிடையாது. ஆனால், அது அவனுக்குக் கடினமாகத் தோன்றினால் ஒரேயொரு மனைவியை மட்டுமே மணந்துகொள்ளலாம். ஏனெனில் மனைவியரிடையே நடுநிலை வகிப்பது அவனுடைய கடமையும், முக்கியத்துவமும் ஆகும். அவ்வாறு நடந்துகொள்ள முடியாது என்ற நிலை ஏற்பட்டால் ஒரு பெண்ணை மணந்துகொள்வது முறையானது ஆகும்.

மேற்கண்ட திருவசனம் பல மனைவியரை உடைய கணவனை எச்சரிப்பதையும், ஒவ்வொரு மனைவியின் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட கட்டளை இடுவதை நன்கு உணர முடியும். கணவன் தனக்குப்பிடித்த அழகான மனைவியை உயர்த்தியும், மற்றவரைத் தாழ்த்தியும் பேசும் வழக்கம் அன்று முதல் இன்றுவரை உலகில் நடந்து வரும் வழக்கமாகும். ஆனால் இவ்வாறு பேசுவது பெரும்பாவமாகும். ஒருத்தியைப் புகழ்ந்து, மற்றவளை இகழ்தல், ஒருத்தியின் பிள்ளைகளுக்கு அதிக ஆதரவு காட்டுவது, மற்றவளின் பிள்ளைகளைத் திண்டாட விடுவது ஆகிய இச்செயல்கள் யாவும் இன்றும் கண்கூடாக நடக்கின்றன. ஆனால், இவ்வாறு செய்வது ஹராமாகும். இவ்வாறு செய்கின்ற கணவன் நீதிவானான அல்லாவின் முன் பெருங்குற்றவாளியாக கருதப்படுவான்.

திருமணம் செய்வதற்கு ஆணுக்கும் உரிமை உண்டு. ஆனால், யார் யாரை திருமணம் செய்யலாம், யாரைத் திருமணம் செய்யக்கூடாது என்பது திருமறையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் உங்களுடைய தந்தையர் மணமுடித்துக் கொண்ட பெண்களிலிருந்து எவரையும் விவாகம் செய்யக்கூடாது. உங்கள் புதல்விகளும், உங்கள் சகோதரிகளும், உங்கள் தந்தையின் சகோதரிகளும், உங்கள் தாயின் சகோதரிகளும், உங்கள் சகோதரனின் புதல்விகளும், உங்கள் சகோதரியின் புதல்விகளும், உங்களுக்குப் பாலூட்டிய செவிலித்தாய்மார்களும், உங்களுடன் பால்குடி சகோதரிகளும், உங்கள் மனைவிகளின் தாய்மார்களும், நீங்கள் உடலுறவு கொண்ட மனைவியரின் முந்திய கணவருக்குப் பிறந்த, இப்பொழுது உங்கள் பராமரிப்பில் இருந்துவரும் மனைவியின் மகளுக்கும், உங்களின் ஆண் மக்களின் மனைவிக்கும், உடன்பிறந்த இரு சகோதரிகளிலும், முஃமினான அடிமைப் பெண்ணை மணந்து கொள்ளலாம். ஆனால் அவர்கள் பரிசுத்தமானவர்களாகவும், விபச்சாரம் செய்யாதவர்களாகவும், கள்ள நட்புக் கொள்ளாதவர்களாகவும் இருக்க வேண்டும். இஸ்லாத்தின் சட்டப்படி இவர்களை எல்லாம் திருமணம் செய்யக்கூடாது என்று மேற்கூறப்பட்ட திருவசனங்கள் விளக்குகின்றன.



## மனைவியை நடத்துகின்ற முறை

இறைவன் திருக்குர் ஆனில் அனைவரும் நம்பிக்கை கொண்டவர்களே பெண்களை (அவர்கள் மனப்பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்கு விடாது பகிரங்கமான கெட்ட செயலை அவர்கள் செய்தாலொழிய, பெண்களுக்கு நீங்கள் கொடுத்திலிருந்து சிலவற்றை எடுத்துக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கு (துன்பம் கொடுத்து) தடுத்து வைக்காதீர்கள். இன்னும், அவர்களுடன் கனிவோடு நடந்துகொள்ளுங்கள். நீங்கள் அவர்களை வெறுத்தால் அது சரியில்லை. ஏனெனில் நீங்கள் ஒன்றை வெறுக்கக்கூடும் அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை ஏற்படுத்திவிடலாம். எனவே, மனைவியரையும் குடும்பத்தையும் அன்போடு நடத்துவது இஸ்லாமிய மரபாகும். மனித வாழ்வில் ஆண், பெண் என்பதுதான் மாறுபாடு இருக்குமே தவிர இன்ப துன்பங்களில் வேறுபாடு இல்லை. உணர்வும் உணர்ச்சியென்பவையும் இரு வர்க்கத்தினரிடமும் சமமாக உள்ளவைதான். இதனால்தான் திருமணத்திலும் கூட திருமண ஒப்பந்தம் ஆண், பெண் இருவரிடமே பெறவேண்டும். இந்த சமநீதிக் கொள்கைகளை உணராத சில ஆண்கள், தான் ஆண் என்பதால் ஏதோ அந்தஸ்து பெற்றுவிட்டோம் என்றும் பெண் என்பவள் அடிமைப்பட்டு இடிபட்டு பணிந்து செல்வதே அவள் வேலை என்றும் எண்ணுகின்றனர். கணவனுக்கு மனைவி கட்டுப்பட்டவள்தான் என்றாலும் பெண்களையும் மனிதப்பிறவிகளாக மதித்து நடக்கும் பண்பு ஆண்களிடம் இருக்கவேண்டியது அவசியமாகும். அதுதான் உண்மையான திருமணத்தின் அடிப்படையாகும். ஏனெனில் பெண் என்பவள் பிறந்த இடத்தையும் மறந்து, பெற்று வளர்த்த ஆளாக்கின தாய் தந்தையும், சகோதரர்களையும், உற்றார் உறவினர்களையும் துறந்துவிட்டு கணவனே கதியென்று காத்து இருக்கின்றாள். 'தாயின் காலடியில் சொர்க்கம்' என்ற நபிமொழியின் தத்துவத்தை தாங்கி நிற்பவர்கள் பெண்கள்தான். இத்தகைய தாய்மையில் மெய்மையை அறியாத சில ஆண்கள் பெண்களை அடித்துத் துன்புறுத்துகின்றனர். இவர்களின் கோபத்திற்கும் தாபத்திற்கும் அப்பாவிப் பெண்கள் பலியாகின்றனர். ஒரு பெண் தன் கணவனை தன்னை

வெறுத்துவிடுவாள் என்று பயந்தால் இருவரும் சேர்ந்து தனக்குள்ள குற்றங்களை எடுத்துக்கூறி சமாதானமாக போதல் நல்லது ஆகும். இத்திருமறையும் இதுகுறித்து வசனத்தில் இரு பெண் தன் கணவன் தன்னை வெறுத்துவிடுவாள் என்றோ அல்லது புறக்கணித்துவிடுவாள் என்றோ பயந்தால் அவர்கள் இருவரும் தங்களுக்குள் (சமாதானமாக) ஒரு முடிவைச் செய்து கொண்டால் அவ்விருவர் மீது குற்றமில்லை. ஒருவருக்கொருவர் உபகாரம் செய்து, (அல்லாவுக்குப்) பயந்து நடப்பீர்களானால் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். எனவே, கணவன் மனைவி அன்பில் ஒருவருக்கொருவர் சமமாக நடந்துகொண்டால்தான் வாழ்க்கை சுவைக்கும். திருமணம் சிறக்கும். நல்ல குலங்களும் தழைத்து நிற்கும்.

## விவாகரத்து உரிமை

குடும்ப அமைப்பிலிருந்து விலக்குப்பெற்று விவாகரத்துப் பெறும் உரிமை ஆணுக்கு இருப்பதைப் போலவே ஒரு பெண்ணுக்கும் இருக்கின்றது. திருமண முறிவுச் சட்டத்தைச் சில விதிமுறைகளுக்கு உட்பட்ட நிலையில் இஸ்லாம் தருகின்றது. அதாவது ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழவே முடியாது என்ற சூழலிலேயே திருமண முறிவுச் சட்டத்தை பயன்படுத்தலாம். "மனிதனுக்கு அனுமதிக்கப்பட்டவற்றில் எல்லாம் அல்லாஹ்வுக்கு கோபத்தை உண்டு பண்ணுவது தலாக்கைத் தவிர வேறொன்றும் கிடையாது" என்னும் பெருமானாரின் பொன்மொழிகள் மூலம் தலாக் (விவாகரத்து) என்பது தவிர்க்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே குர்ஆன் ஆண்கள் தலாக் கூறுவதை அனுமதித்தாலும் வன்மையாகக் கண்டனம் செய்கிறது என்பதே உண்மை ஆகும். தலாக் உரிமையை இஸ்லாம் நினைத்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் உபயோகித்துக்கொள்ள அவ்வளவு தளர்வாக விட்டுவிடவில்லை. மிக இறுக்கமாக சொல்லுகின்றது. தொடர்ந்து கணவனின் உரிமை புறக்கணிக்கப்படுவதாலும், ஒழுக்கக்கேட்டாலும் சோரம் போகும்போது தலாக் உரிமையை உபயோகிக்க கணவனுக்கு அனுமதி அளிக்கின்றது.

ஒரு மனைவியின் ஒழுக்கக்கேட்டையும் உடல்நலப் பாதிப்பையும் தொடர்ந்து அனுபவிக்கும் ஒரு கண்ணுக்குக்கூட உபதேசம் சொல்லி திருந்தச்செய்யவும், அப்படியும் திருந்தாத பட்சத்தில் படுக்கையை விட்டு விலக்கவும் அப்படியும் திருந்தாவிட்டால் அடித்து திருத்த வேண்டும் என்று குர்ஆன் கூறுகிறது. அவசரப்பட்டு தலாக் வழியை நீங்கள் தேடக்கூடாது என்று தடுக்கிறது. இந்த நிலையிலும் திருந்தாத மனைவியை அல்லாஹ்தாலா ஒரு வழி சொல்கின்றான். இன்னும் (கணவன்–மனைவி ஆகிய) அவ்விருவரிடையே (பிணக்குண்டாகி) பிரிவினை ஏற்பட்டுவிடும் என்று நீங்கள் அஞ்சினால் கணவனின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மனைவியின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக ஏற்படுத்துங்கள் அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால் அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும்படி செய்து விடுவான் அல்லாஹ் நன்கு அறிபவனாகவும் நன்குணர்கிறவனாகவும் இருக்கிறான். கணவன் மனைவிக்கு இடையில்



இனி கூடி வாழ முடியாது என்ற நிலையில் அந்த மணவாழ்க்கை ஒரு இடுகாடாகவே இருக்கும் என்ற காரணத்தினாலேயே இஸ்லாம் தலாக் விதிமுறையை அனுமதிக்கிறது. இந்த அனுமதியையும் எளிதில் பெற முடியாது. இருவர் சாட்சியங்களுடன் பெண் சார்பாக ஒருவரும் ஆண் சார்பாக ஒருவரும் இருந்து அவர்கள் மத்தியில் தலாக் கூறப்படவேண்டும். இவ்வாறு கூறப்படும் தலாக் ஒரு மாத இடைவெளியில் மூன்றுமுறை சொன்னபின்பே முழுமையான விவாகரத்துப் பெற்றதாக பொருளாகும். இதனை 'முத்தலாக்' என்று குறிப்பிட்டாலும் இச்சொல் குர்ஆனில் ஆளப்படவில்லை.

தலாக்கைப் பொறுத்தவரையில் பெண்களுக்கு இஸ்லாத்தின் விவாகரத்துப் பெறும் உரிமையில்லை என்று கூறப்படுவது தவறான கருத்தாகும். மணம்செய்த ஒரு பெண் தன் கணவனுடன் வாழ்வதற்கு விருப்பம் இல்லாத சூழலில்தான் அவனிடமிருந்து தலாக் பெறலாம் என்பதை வெளிப்படையாக திருமறை கூறவில்லையாயினும் அதற்கான அனுமதியைப் பிறிதொரு விதி மூலம் வழங்கியுள்ளது. இது 'குல்உ' ஆகும். விவாகரத்திற்கு ஆண் பெண்ணின் மீது காரணம் சொல்லத் தேவை கிடையாது. ஏனெனில் அவன் அவதூறாக ஏதேனும் சொல்லியிருந்தால் அப்பெண்ணின் வாழ்க்கை நாசமாக ஆகிவிடும். ஆனால், பெண் என்பவள் இளகிய, மாறக்கூடிய மனது படைத்தவளாகையால் அவள் வாயினால் மட்டும் தலாக் சொன்னால் அது செல்லாது. காரணத்தைச் சொல்லி அது அவையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பே விவாகரத்து செய்யமுடியும். விவாகரத்திலும் இஸ்லாம் பெண்ணின் பாதுகாப்பை முக்கியமாக உள்ளது. இல்வாழ்க்கையில் ஒரு ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் பாதுகாப்பாக இருக்க முடியாது என்ற நிலையில் அவர்கள இருவருமே இனி இணைந்து வாழ்வது நல்லதல்ல என்ற சூழலில் அவர்கள் இருவருமே பிரிந்துவிட்டால், அவ்விருவகையில் தன்னுடைய விசாலமான அருட்கொடையால் ஆக்கிவிடுவார் என்று திருமறையில் காட்டுகிறது. மனைவியின் கற்பில் பாதகம் உண்டானால் ஒழிய தலாக் சொல்லக்கூடாது என்று குர்ஆன் சொல்லுகிறது.

## மறுமணம் செய்யும் உரிமை

விவாகரத்து பெற்ற பெண் மீண்டும் மணம்புரிவதற்கும், கணவனை இழந்து விதவைப் பெண்கள் மீண்டும் திருமணம் செய்வதற்கும் இஸ்லாம் அனுமதி அளிக்கிறது. கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு மறுவாழ்வளிப்பதை மிக்க கண்ணியமானதாக கருதப்படுகிறது. இதற்கு முன்மாதிரியாக இருந்தவர் பெருமானார் நபிகள் நாயகம் ஆவார். கணவன் இறந்த பின்னால் அவனுடைய வீட்டார், விதவை மனைவியை இறந்தவனின் சொத்தாகக் கருதி அவள்மீது பலவந்தமாக உரிமையை பாராட்டக்கூடாது. அவளுடைய சுதந்திரத்திலும் உரிமைகளிலும் தலையிடக்கூடாது. கணவன் இறந்த பெண் தன்னுரிமை பெற்று சுதந்திரமானவளாய் இருக்கின்றாள். பால்ய விவாகத்தால் கணவனை இழந்தவர்களும் சரி அல்லது புதுமணத்திலோ கொஞ்ச காலத்திற்கோ நீண்ட காலத்திற்கோ வாழ்ந்துபின் கணவனைப்

பறிகொடுத்த விதவையை இந்த சமூகம் தரித்திரம் பிடித்த மூதேவிகளாக ஒதுக்கிவைத்து விடுகின்றது. இவர்கள் எல்லாம் நல்லது நடக்கும் வீட்டுக்கோ வியாபார தொடக்கத்திற்கோ, பிரயாண புறப்பாட்டுக்கோ ஆகாதவர்களாக கருதப்பட்டு தாங்களே ஒதுங்கிக்கொள்ளும் நிலைக்குத் - தள்ளப்பட்டு பரிதாபத்திற்குரியவர்கள் ஆவார்கள். கைம்பெண் நிலைமையானது மிகவும் கொடூரமானது ஆகும். எதிரே வந்தாலும்கூட அபசகுணம் என்று கருதப்படுகின்றனர். இதைவிடப் பெண்களை ஒதுக்கும் கொள்கை வேறு எதுவாகவும் இருக்கமுடியாது. இன்னும் சிலர் அவர்களுக்கு வாழ்வு கொடுக்காமல் வைப்பாட்டியாக வைக்கவும் செய்கின்றனர். இந்தியாவைப் போலுள்ள சடங்கு சம்பிரதாயங்களில் ஊறிப்போன, சகுனம் அபசகுனம் பார்த்து நடக்கும் நாட்டில், விதவையாவதைவிடச் செத்துப்போலாம் என்று தோன்றும் அவ்வளவு கொடுமை வாய்ந்தது. கன்னியரின் மீதே மோகங்கொண்டுள்ள ஆடவர் விதவையை எங்கே திருமணம் செய்யப்போகின்றனர். அவர்களை இரண்டாம் தாரமாகக் கூட வாழ்வு கொடுப்பதற்கு முன் வருபவர்கள் யாரும் இல்லை. விதவை வாழ்வைப் பற்றி சினிமா எடுத்தாலும் கூட புரட்சி என்னும் அளவுக்கு பெண்கள் விஷயத்தில் இறுக்கம் உள்ள சமூக அமைப்பை பெற்றுள்ள நாடு, இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்பு பெண்களின் எல்லாநிலைகளையும் உற்றுணர்ந்து சட்டரீதியில் இவர்களுக்கு நல்வாழ்வையும் பாதுகாப்பையும் அமைந்துள்ளது. அதுபோலவே திருக்குர்ஆன் விதவை மணத்தை ஆதரிப்பதோடு தூண்டுகிறது.

கணவனை இழந்து இத்தா காலமாகிய 4 மாதம் 10 நாட்களில் இருக்கும் விதவைப் பெண்களை இத்தாதவணைப் பூர்த்தியானதும் அவர்கள் தங்கள் விருப்பப்படி எதுவும் செய்துகொள்ளலாம் என இஸ்லாம் அனுமதி அளிக்கின்றது. இவ்வாறு கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்யும் உரிமையையும் பெண்களுக்கு இஸ்லாம் அனுமதிக்கின்றது.

## வாரிசுரிமையும் சொத்துரிமையும்

ஒவ்வொரு மனிதனும், அவரவரின் முயற்சி , திறமை, அறிவுக்கு ஏற்ப முறையான வழிகளில் பொருள்களைத் தேடிக் கொள்வதற்கு உரிமையளிக்கும் இஸ்லாம், தேடிக்கொண்ட பொருள்களைத் தம்முடையதாக்கிக்கொள்ளும் சொத்துரிமையையும் தம் சொத்தை தாம் விரும்பும் நபர்களுக்கு உரிமையுடையதாக மாற்றிக்கொள்ளும் வாரிசுரிமையையும் அளித்துள்ளது. பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச்சென்ற சொத்தில் ஆண்களுக்குப் பாகமுண்டு. அவ்வாறே பெற்றோரோ நெருங்கிய உறவினரோ விட்டுச்சென்ற சொத்தில் பெண்களுக்கும் பாகமுண்டு. அதிலிருந்து சொத்து குறைவாக இருந்தாலும் சரி. அதிகமாக இருந்தாலும் சரியே. இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும். பெண்கள் சொத்துரிமை பெறத் தகுதியுடையவர்கள் மட்டுமல்ல. அவர்களுக்கு இன்ன இன்ன வகையில் சொத்து வழங்கிட வேண்டும் என்பதையும், அவள் மகளாக, மனைவியாக, தாயாக, சகோதரியாக, பேத்தியாக அவளுடைய நிலைமாறும் போதெல்லாம் சொத்து எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதையும் இஸ்லாம் தெளிவாகக் கூறுகிறது. 'பெண்கள் சொத்துக்கள் பெறத் தகுதியற்றவர்கள்' என்று கூறி



பெண்களுக்கு சொத்து வழங்கக்கூடாது என்று சொன்னதை ஆட்சேபித்து, சில நல்ல அபிப்பிராயம் உள்ளோர் பெண்களுக்கும் சொத்து கொடுக்கவேண்டும் என்று தற்போதுதான் பெண்ணுரிமை பற்றிச் சொல்லுகின்றனர். ஆனால் இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியது. இது பின்வரும் இறை வசனங்கள் மூலம் அறியலாம். உங்கள் மக்களின் ஒரு ஆணுக்கு இரண்டு பெண்களுக்கு கிடைக்கும் பங்கு போன்றே கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசம் செய்கிறான். பெண்கள் மட்டுமே இருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டு இருந்தால், அவர்களுக்கு இறந்து போனார் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரு பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும். இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால் இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் (அவரது) பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால், இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மாத்திரமே வாரிசாக இருந்தால் அவர் தாய்க்கு ஆறில் ஒரு பாகம்தான் (மீதி தந்தைக்குச் சேரும்). இவ்வாறு பிரித்துக்கொடுப்பது அவர் செய்துள்ள மரண சாசனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான் உங்கள் பெற்றோர்களும், குழந்தைகளும் இவர்களில் யார் நன்மை பயப்பதில் உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறியமாட்டீர்கள். ஆகையினால் இந்தப் பாகப்பிரிவினை அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளையாகும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தனவாகவும், ஞானமுடையவனவாகவும் இருக்கிறான். "இன்னும் உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால் உங்களுக்குப் பாதி பாகம் உண்டு. அவர்களுக்குப் பிள்ளை இருந்தால் அவர்கள் விட்டுச் சென்றவற்றிலிருந்து உங்களுக்கு கால்பாகம்தான். (இதுவும்) அவர்கள் செய்திருக்கின்ற மரண சாசனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான். தவிர உங்களுக்குப் பிள்ளையில்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்கு கால்பாகம்தான். உங்களுக்கு பிள்ளை இருந்தால், அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம் உண்டு. இதுவும் நீங்கள் செய்திருக்கும் மரண சாஸனத்தை கடனையும் நிறைவேற்றிய பின்னரேதான். தந்தை, பாட்டன் போன்ற முன்வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின்வாரிசுகளோ இல்லாத ஒரு ஆணோ அல்லது பெண்ணோ இவர்களுக்கு ஒரு சகோதரனோ, அல்லது சகோதரியோ இருந்தால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு ஒரு பாகம் உண்டு. ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தை சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். இதுவும் அவர்களின் மரண சாஸனமும், கடனும் நிறைவேற்றிய பின்னர்தான். ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள் எவருக்கும் நஷ்டம் ஏற்படக்கூடாது. இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும்.

மேற்கண்ட இறைவசனங்கள் பெண்களுக்கு எவ்வளவு சொத்து தரப்பட வேண்டும் என்பதைத் தெளிவாக கூறுகிறது. பெண்களுக்கு சொத்துக்கள் தர மறுத்தபோதுதான் இந்த வசனங்கள் தேவையாகின்றன. எனவே, இஸ்லாம்

பெண்களுக்கு சொத்துரிமையையும் வழங்கி அவர்களது வாழ்வின் உயர்வுக்கு வழிகாட்டியாக இருந்து பெண்களைக் கவுரவுப்படுத்துகின்றது. பெண்களைச் சொத்து விஷயத்தில் ஆண்களைவிட மட்டப்படுத்தத்தானே செய்கிறது என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், அறிவுப்பூர்வமான நியாயமான காரணங்களுக்காவே இஸ்லாம் ஆண்களுக்கு இருமடங்கும் பெண்களுக்கு ஒரு மடங்கும் எனப் பாகப்பிரிவினைச் சட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பாகப்பிரிவினை செய்யும் இடத்தில் பாகத்திற்கு உரிமையில்லாத உறவினர்கள் அநாதைகள், ஏழைகள் வந்தால் அவர்களுக்கு தம் சொத்திலிருந்து கொஞ்சம் கொடுக்கவேண்டும். பிறகு ஒருவர் இறந்துவிட்டால் பின் சந்ததிகள் எல்லாம் கஷ்டப்படுவார்கள். அதனால் முன் ஜாக்கிரதையாக சில நடவடிக்கைகளை முன்கூட்டியே செய்துவிட வேண்டும் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாமியச் சொத்துரிமைச் சட்டத்தில் ஒருவனுக்கு உரிமையுள்ள முறையான சொத்தில் ஜக்காத் வரி செலுத்தியதுபோக எஞ்சியுள்ளவற்றைத் தாம் விரும்பும் வாரிசுதாரர்களுக்கு உரிமையுடையதாக செய்வதற்கு உரிமை நன்கு இருக்கின்றது. ஆண், பெண் இருந்தால் அவர்களுக்கு பெற்றோரின் சொத்தில் 2:1 என்ற விகிதத்தில் பங்கு உள்ளது. கணவனது சொத்தில் மனைவிக்கு 50 சதவீதம் பங்குண்டு. வாரிசுரிமை விஷயத்தில் சங்கமச் சொத்துக்கள், தாவரச் சொத்துக்கள் என்ற பாகுபாடு இருக்காது. உரிமையுடைய வாரிசுதாரர்களுக்கிடையே ஒவ்வொரு பொருளும் பங்கிடப்படவேண்டும் என்று இஸ்லாமியச் சட்டம் கூறுகிறது.

இஸ்லாமிய சமூக அமைப்பில் பெண்களைவிட கூடுதலான சுமைகளைத் தாங்குகின்றனர். ஒரு ஆண் தன் மனைவிக்கு உணவும், உடையும் கொடுப்பதற்கு கடமைப்பட்டவன். மேலும் தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்கா, தங்கை மற்றும் தூரத்து உறவினர்கள், நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் சிரமத்திலிருக்கும்போது அவர்களைக் கவனிக்கும் பொறுப்பு ஆண்களுக்கு இருக்கின்றது. பெண்களைப் பொறுத்தவரை இதுபோன்ற கடமை எதுவும் இல்லை. ஒவ்வொரு மனிதனும் தனது சொத்துக்களைத் தன் மரணத்திற்கு பிறகு தன் இரத்த சம்பந்தப்பட்டவர்களுக்கு கொடுக்க வேண்டும் என விரும்புவார்கள். தன் குடும்பத்துக்கு எல்லாச் சொத்தும் சேர வேண்டும் என விரும்புவார். இந்த விருப்பத்தில் நியாயமும் உள்ளது. எல்லா மனிதரும் விரும்பக் கூடிய இந்த விருப்பம் முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவாவது நிறைவேற்றப்படுவதற்கு வாரிசுரிமைச் சட்டத்தில் இந்த பாரபட்சம் காட்டுவதற்கு அவசியம் ஏற்படுகின்றது. திருமறையில் ஒரு மனிதனுக்கு ஒரு சகோதரி மட்டும் இருந்தால் அவன் விட்டுச் சென்ற சொத்தில் சரிபாதி பங்கு உண்டு. இதற்கு மாறாக பெண் இறந்துவிட்டால் அவளுக்கும் யாரும் இல்லாதிருந்தால் அவளுடைய சகோதரனாகிய அவன் அவள் சொத்து முழுமைக்கும் வாரிசு ஆவான். இரு சகோதரிகள் இருந்தால் அவள்விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை அடைவார்கள். அவளுக்கு உடன்பிறந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக இருந்தால், இரண்டு பெண்களுக்குரிய பாகம் ஓர் ஆணுக்கும் உண்டு. நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காகவே அல்லாஹ் இவ்விதிகளை விளக்கி வைக்கின்றான் இவ்வசனத்தின்படி சொத்துக்களை அவரவர்களுக்கு பங்கீட்டு கொடுக்கும்படி குரான் வலியுறுத்துகிறது.



உணவு, உடை போன்ற செலவினங்கள் 'ஆண்கள் பெண்கள் இருசாராருக்கும் சம அளவில் செய்தாலும், ஒரு குடும்பத்தில் பெண்களுக்கு ஆண்களைவிட அதிக செலவு செய்கின்றனர். ஒரு தந்தைக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தால் அந்த மகளுக்காக அந்தத் தந்தை ஆபரணங்கள் நகைகள் என்று எல்லாம் செய்து அழகு பார்க்கிறார். இவை அழகு சாதனம் அல்ல பெரும் சொத்துக்களாகவும் இருந்திருக்கின்றன. இதுபோன்ற திருமணத்தின் போது மகளுக்காக சீர் என்று பல சாதனங்களையும் தந்தை வழங்குகிறார். தந்தை இறந்தபிறகு எஞ்சியுள்ள சொத்துக்களை இரண்டுக்கு ஒன்று என்ற விகிதாச்சாரத்தில் பிரிக்கின்றனர். இதுபோன்ற நியாயமான காரணங்களால்தான் இஸ்லாம் ஆண்களைவிட பெண்களுக்கு குறைவாக சொத்து வழங்குகிறது. பெண்களை மிக உயர்வும், கண்ணியமும் படுத்திக்காட்டி அவர்களின் உரிமைகளை இதுதான் என அடையாளம் காட்டி, அவர்களது உரிமைகளை முழுமையாக இஸ்லாம் பேணுகிறது.

## சமூக அமைப்பில் பெண்கள்

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இயக்கம் அவளின் குடும்பத்திற்குள்ளேயே நின்றுபோவதில்லை. மாறாக அவள் சமூகத்திலும் ஓர் பொறுப்புமிக்க அங்கத்தினர் என்ற ரீதியிலும் பல சட்டதிட்டங்களை விரிவாக எடுத்துக்காட்டுகிறது. இஸ்லாம் காட்டும் சமூக அமைப்பில் பெண்கள் கண்ணியத்திற்குரியவளாகவே கருதப்படுகின்றனர். சமூகத்தில் பெண்ணின் பாதுகாப்பிற்கு அதி உன்னதநிலையை இஸ்லாம் வழங்கியுள்ளது. ஓர் இல்லத்தலைவி ஆற்றுகின்ற குடும்பக்கடமைகள் எல்லாம் விளைவிக்கின்ற பெரும்பயன் சமூக அளவிலும் நன்மைகளைத் தருகின்றபோது அத்தகு கடமைகளை சமுதாயக் கடமைகள் எனக் கொள்ளுகின்றோம். ஒரு மனைவி, உறவினர்களோடும், நட்புக் கொள்கின்றவர்களுடன் நல்ல உறவு, பக்கத்து வீட்டாருடனும், மற்றவர்களுக்கும் செய்கின்ற உதவிகள், மார்க்கம் சொல்லுகின்ற மாதிரி நல்லவற்றை ஏவித்தீமையைத் தருகின்ற முறைகள், குடும்பத் தலைவன் தெரு, ஊர்ச் செய்திகளிலும் மார்க்கத்தை பரப்புகின்ற நற்செயல்களில் பொதுத்தேவைகளை நிறைவுசெய்வதிலும் கவனம் செலுத்தும்போது கணவனுக்கு ஒத்துழைக்கின்ற கடமை ஆகியன சமுதாயக் கடமைகளேயாகும். முஸ்லீம் சமுதாயத்தின் ஒற்றுமையையும் ஒருமித்த செயல்பாட்டையும் இஸ்லாம் மிக முக்கியமாகக் கருதுவதால், அத்துறைகளில் எல்லாம் கணவனுக்கு ஒத்துழைப்பு செய்கின்ற பெண்களுக்குமிடையே அத்தகு பணிகளை ஆர்வத்தோடு ஆற்றவும் மனைவி மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் சமூகத்தின் கடமைகளாக கருதுகின்றனர். மேலும் குழந்தைப்பேறு, குழந்தை வளர்ப்பு, சிறுவர்களுக்கு மார்க்கத்தை ஊட்டி வளர்த்தல், இஸ்லாமிய ஒழுக்கங்கள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உருவாக்கி வளர்த்தல் ஆகியன பெண் மகளின் பெருமைக்குரிய மிக முக்கிய சமூக கடமையாகும். இக்கடமையை எல்லாம் பெண் இல்லத்தில் நான்கு சுவர்களுக்குள்ளேயே ஆற்றுகின்றாள். ஆனால், இக்கடமையின் அரிய பெரிய பயன்கள் அனைத்தும் குடும்ப எல்லையைத் தாண்டி சமூக அளவில் மிகச் சிறப்பாக மதிக்கப்படுகின்றன. பெண்ணின் இக்கடமையானது இஸ்லாத்தில் மிகப் பெரிய முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

சிறு வயதிலேயே தாய், தந்தையை இழந்துவிட்ட அனாதைகள், ஏழ்மைச் சூழ்நிலையும் கவனிக்காமல் விடப்பட்ட சிறுவர்கள் ஒரு வேளைச் சோற்றுக்கும், உடுத்துவதற்கும் பழைய துணிக்கும் இல்லங்களிலும் தோட்ட வேலைகளில் விடப்பட்டு கொத்தடிமை நிலையிலுள்ள சிறுவர்கள் இவர்கள் எல்லாம் வாழ்க்கையில் போக்கிடமில்லாமல் வாழத்துடித்தும் முடியாமையும், இல்லாமையும், நிலையானதாகி வெந்து துடிக்கிறார்கள். வருங்காலத்தில் உள்ள நிலையைக்கூட கற்பனை செய்து பார்க்க இயலாதவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு படிப்பறிவும் இல்லை. சுகாதாரமான மருத்துவ வசதியும் கிடையாது. நல்ல உணவுமில்லாமல், கழிவுகளையும், மிச்சங்களையும் வேலைக்கு கூலியாக பெறுகின்ற நிலை, உடுத்துவதற்கு கிழிந்த துணிதான் கிடைக்கும் என்ற அவலநிலையும், கடுமையான வேலைகளால் நொந்துபோன உடல்நிலையும், சேற்றில் புரண்டு எழும் இந்தச் சீர்கெட்டுப் போன வாழ்க்கையால் எத்தனை சிறுவர் சிறுமிகள் வாட்டப்படுகின்றனர். இவர்களுக்கு எல்லாம் ஆதரவு தந்து வாழ்வு அமைத்து கொடுக்கவேண்டிய பொறுப்பு ஒட்டுமொத்தமான சமூக அமைப்புகளுக்குத்தான் இருக்கின்றது.

நாம்நமது சின்னஞ்சிறு குழந்தைகளின்மேல் அளவிலா அன்பு கொண்டு, அவர்களின் மகிழ்ச்சிக்காக எவ்வளவு பெரிய துன்பங்களையும் தாங்குகின்றோம். அவர்களுக்கு அறுசுவை உணவு ஊட்டுவதிலேயிருந்து, அழகு ஆடை அணி பூட்டுவதிலேயிருந்து, சொத்து செல்வம் சேர்ப்பதிலே இருந்து, வீடு வாசல் கட்டுவதிலேயும் எல்லையில்லாத பரவசமடைகின்றோம். ஆனால், அதேநேரத்தில் எத்தனையோ குழந்தைகள் தாயின், தந்தையின் முகத்தைக்கூடப் பார்க்க முடியாமல் நிலையிலே, அரவணைக்க யாருமில்லாமல், தாய் தந்தை பாசம் என்னவென்றே அறியாத நிலையிலும், பிறக்கின்றபோதே பெற்றோர்களை தூக்கித் தின்றுவிட்ட தரித்திரம் என்ற எச்சுபேச்சுக்கு நடுவிலே அனாதைகளாக ஆதரவற்ற நிலையிலேயே இருக்கின்றார்கள்.

எம்பெருமாணார் (ஸல்) அவர்களே தந்தையின் முகத்தைக்கூட பார்க்காத நிலையில்தான் பிறந்தார்கள். ஆனால் பெற்றதாயையும், வளர்த்த பாட்டனாரையும் கூட சில வருடங்களில் இழந்து அனாதையாக ஆதரவற்றவராக வாழ்ந்தனர். எனவே, அல்லாஹ் தாலா தனது திருமறையில் அனாதைக் குழந்தைகளை சகோதரராகப் பாவித்து நடக்கவேண்டுமென்றும், அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் பக்குவமாக பராமரித்து அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் பக்குவமாக பராமரித்து

அவர்களுடைய சொத்துக்களை எல்லாம் பக்குவமாக பராமரித்து அவர்களது சொத்திலிருந்து வரவேண்டுமென்றும், பராமரிப்புக்காக அவர்களது சொத்திலிருந்து நியாயமான அளவுதான் எடுக்கவேண்டுமென்பதும், பருவமடைந்ததும் அவர்களுடைய உயர்ந்த பொருளுக்குப் பகரமாக தாழ்ந்த பொருளை மாற்றிவிடக் கூடாதென்றும், தன்னுடைய சொத்துக்களோடு சேர்த்துக்கொள்வதற்காக அவர்களுடைய சொத்துக்களை அபகரித்துக் கொள்ளக்கூடாது விவாகப் பருவமடையும் வரை அவர்களது தகுதியை சோதித்து அகலவேண்டுமென்றும், தகுதியை சோதித்து அகலவேண்டுமென்றும், தகுதியைக் கண்டால் அவர்களுடைய சொத்துக்களை அவர்களிடமே சேர்த்துவிட வேண்டுமென்றும் அவர்கள் பெரியவர்களாகி



விடுவார்களோ என்று அஞ்சி அவர்களுடைய சொத்துக்களை அளவுக்கதிகமாகவும் அவசர அவசரமாகவும் விழுங்கிவிடக் கூடாதென்றும், பாதுகாப்பாளர் பணக்காரராயிருந்தாலும் அவர்களது சொத்துக்களை அனுபவிக்க வேண்டாமென்றும், ஏழையாயிருந்தால் நியாயமான அளவுதான் அதிலிருந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சொத்துக்களை அவர்களிடம் ஒப்படைக்கும்போது அதற்கு சாட்சி வைக்க வேண்டும் என்றும், அவர்கள் விஷயத்தில் நியாயமாக நடக்கவேண்டுமென்றும் அப்படி அநியாயமாக விழுங்குபவர்கள் மறுமைநாளில் நரக நெருப்பிலே புகுவார்கள் என்று பல கருத்துக்களை திருமறையும் எடுத்துக்கூறுகின்றது.

தகுந்த பாதுகாப்பு இல்லாத காரணத்தால், குழந்தைகள் பண்பற்றவர்களாக நல்லது கெட்டது அறியாதவர்களாக கண்டிப்பதற்கு ஆள் இல்லாமல் அவர்கள் ஒழுக்கமற்றவராக வாழத்தலைப்படுகின்றனர். எனவே, அவர்கள் நன்முறையில் அறிவுரைகள் கூறி அரவணைத்து வளர்க்க வேண்டும் எனவேதான், பெருமானார்(ஸல்) அவர்கள் “அனாதைகள் ஆதரிக்கப்படும் இல்லாமே சிறந்து இல்லம்” என்கின்றனர். சிறு குழந்தையாக இருக்கும்போது நமது குழந்தைகளை எவ்வளவு கண்காணிப்புடன் பாதுகாத்து வளர்க்கின்றோமோ அதேபோல் அனாதை குழந்தைகளையும் பேணி பாதுகாத்து அவர்களுக்கு சேர வேண்டிய உரிமைகளை எல்லாம் சட்டத்தின் ஓட்டையைப் பார்த்து அபகரிக்காமல் ஒப்படைக்கவேண்டும் என குர்ஆன் கூறுகிறது. “(நபியே! மக்கள்) உம்மிடம் பெண்கள் பற்றி (மார்க்கக் கட்டளைக்) கேட்கிறார்கள். அதற்கு நீர் “அவர்களைப் பற்றி அல்லாஹ் உங்களுக்கு தீர்வு கூறுவான்” என்ன சொல்லும் தவிர வேதத்தில் உங்களுக்கு ஓதிக் காண்பிக்கப்படுவது அநாதைப் பெண்கள் சம்பந்தமாக அவர்களுக்கு விதிக்கப்பட்டதை (மஹரை) நீங்கள் அவர்களுக்கு கொடுக்காமல் அவர்களை நீங்கள் மணந்துகொள்ள விரும்பிக் கொண்டிருந்ததைப் பற்றியும் அநாதைகளுக்கு நீங்கள் நீதியை நிலைநிறுத்த வேண்டும் என்பது பற்றியுமாகும். ஆகவே, (அவர்களுக்கு) நன்மையாக நீங்கள் எதைச் செய்தாலும், அதை அல்லாஹ் நிச்சயமாக நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். எனவே, ஒரு சிறந்த சமுதாயத்தை தோற்றுவித்து பெண்குழந்தைக் கொடுமையிலிருந்து இவ்வுலகில் விடுவித்து, அனாதைகள், கைவிடப்பட்டவர்கள் மற்றும் சாலைகளில், தெருவோரங்களில் ஒதுங்கும் வழிப்போக்கர்களுக்கும், தன் குடும்பச்சூழ்நிலையால் குழந்தைகளை கவனிக்கமுடியாமல் போனவர்களுக்கும், ஆதர்வு கொடுத்து கல்வி கற்றுகொடுத்து இந்த உலகின் அழிவிற்குரிய கெட்டுப்போன சமூக ஒழுக்கக்கேடுகளிலிருந்து உலகைக் காப்பாற்ற வேண்டும். சமூகத்தின் செல்வமும் கூட்டுமுயற்சியும் பயன்பட வழிவகுக்க வேண்டும் எனத் திருமறையில் கூறுகின்றது.

**பெண்ணின் பாதுகாப்பு உரிமை**

சமூகத்தில் பெண்ணின் பாதுகாப்பு குறித்து ஏற்படுத்தப்பட்ட சட்டவிதியே ‘மஹர்’ என்னும் திருமண ஒப்பந்தப் பணம் ஆகும். திருமண ஒப்பந்தத்தை மதித்து ஓர் ஆண்மகன் அவன் மணம் முடிக்கபோகும்

பெண்ணிற்குக் கொடுக்கும் பணமோ அல்லது பொருளோ மஹர் பணம்
எனப்படும். வாழ்க்கையில் எழும் இன்பம், துன்பம், அன்பு, பாசம், பரிவு
அனைத்திலும் பிணைப்பை ஏற்படுத்தும் உரிமைப் பரிமாற்றமாகும்.
எனவேதான், திருமணம் சபையிலேயே மஹரை நிர்ணயிக்கின்றனர். 'மஹர்'
என்பது பெண்ணின் அடிப்படை உரிமை என்றும் அதனைக் கண்ணியமான
முறையில் நிறைவேற்றுவது இல்லறத்தை நடத்துகின்ற ஒவ்வொரு ஆணிற்கும்
கட்டாயக் கடமையாகும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. இதனைத்
திருக்குர் ஆன் "நீங்கள்(மணம் செய்துகொண்ட) பெண்களுக்கு
அவர்களுடைய மஹர் (திருமணக்கொடை)களை மகிழ்வோடு (கொடையாகக்)
கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள்
உங்களுக்கு கொடுத்தால் அதைத் தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள் எனச்
சுட்டிக் காட்டுகின்றது. பெண்களுக்குரிய மஹரைக் கொடுக்கவேண்டும்
என்றும் அதற்காக எந்த பிரதிபலனையும் எதிர்நோக்கக்கூடாது. அவர்களுக்கு
நிர்ணயிக்கப்பட்ட மஹரிலிருந்து சிலதைக் குறைத்து வாங்கிக்கொள்ள
அவர்கள் சம்மதித்தால்தான் நீங்கள் குறைவாகத் தரலாம் என்று மற்றொரு
திருவசனத்தில் இறைவன் திருமணம் முடித்த பெண்களை நீங்கள் சுகம்
அனுபவித்தால் அவர்களுக்குக் குறிப்பிட்ட மஹரை அவர்களிடம் குறைவின்றி
கொடுத்துவிடுங்கள். எனினும் மஹரைக் குறிப்பிட்ட பின்னர் அதனைக்
குறைக்கவோ கூட்டவோ முன்பின் வாங்கிக் கொள்ளவோ நீங்கள் இருவரும்
சம்மதித்துக் கொண்டால் அதனால் உங்கள்மீது யாதொரு குற்றமுமில்லை.
மெய்யாகவே அல்லாஹ் ஞானமுடையோனும் உங்கள் செயலை
நன்கறிந்தோனுமாக இருக்கின்றான். அன்றைய அராபிச் சமூகச் சூழலில்
திருமணத்தின் ஒப்பந்தம் பணம் பெண்ணின் தந்தைக்குரிய செயலாக
இருந்தது. நபிகள் நாயகம் அவர்கள் காலத்தில்தான் இறைவனது திருமறைக்
கட்டளைக்கு ஏற்ப மஹர்பணம் மணப்பெண்ணிற்கு உரியது என்ற
நடைமுறையை உருவாக்கினார்கள். மஹர் பணத்தைக் கணவனோ,
மற்றவர்களோ உரிமைகொள்ளக் கூடாது. இப்பணத்தை பெண் தன்
விருப்பம்போல பயன்படுத்திக்கொள்ள உரிமை இருந்தது. அனாதைப்
பெண்களாக இருந்தாலும் சரி அடிமைப் பெண்களாயிருந்தாலும் சரி
அவர்களுக்கு உரிய மஹர் பணத்தை முறையாக அவர்களிடம் ஒப்படைக்க
வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. மஹர் பணம் இல்லாமல்
நடத்துகின்ற திருமணத்தை ஹராம் (தவிர்க்கக்கூடியவை) என்றும்
அதுமட்டுமில்லாமல், மனைவி தலாக் என்று சொல்லிவிட்டால் கொடுத்த
மஹரில் இருந்து எதையும் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இஸ்லாம்
வலியுறுத்துகிறது. திருக்குர் ஆனில் நீங்கள் ஒரு மனைவி(யை)
விலக்கிவிட்டு அவளுக்கு பதிலாக மற்றொரு மனைவியை மணந்துகொள்ள
நாடினால், முந்தைய மனைவிக்கு ஒரு பொருள் குவியலையே கொடுத்திருந்த
போதிலும் அதிலிருந்து எதையும் திரும்ப எடுத்துக்கொள்ளாதீர்கள்.
அபாண்டமாகவும், பகிரங்கமாகவும், பாவகரமாகவும் அதனை நீங்கள் திரும்பி
எடுக்கிறீர்களா? அதனை நீங்கள் எப்படி எடுத்துக் கொள்வீர்கள்?
உங்களிடமிருந்து அவன் உறுதியான வாக்குறுதி பெற்று ஒருவர் மற்றவருடன்
கலந்துவிட்டீர்கள் மேலும் கணவன் கொடுக்கின்றதை வாங்கவேண்டும் என்று



இஸ்லாம் சொல்லவில்லை. மாறாக பெண் தன் கணவனாக வரும் ஆணிடம்
தனக்கு தேவையான அளவு வாங்கலாம் என்கிறது. ஒரு பெண், தன்பின்
வாழ்வை அமைத்துக்கொள்ள மஹர் என்னும் மணக்கொடை மூலம்
வாழ்க்கைக்கு பாதுகாப்பு உரிமையை வழங்குகிறது இஸ்லாம்.

இஸ்லாமிய சமயத்தில், சமூக அமைப்பில் பெண்ணிற்காக
கொடுக்கப்படும் மஹர் பணம் என்பது தவறான கண்ணோட்டத்தில் விமர்சனம்
செய்கின்றனர். மஹர் பணம் தருவதைப் பெண் விற்கப்படுவதாக
கருதப்படுகின்றனர். இது தவறான கருத்தாகும். அன்றைக்கும் சரி, இன்றைய
நிலையிலும் சரி ஆணாதிக்கச் சமுதாயத்தில் ஒரு பெண் எப்போதும்
பொருளாதார நிலையில் ஒரு ஆணைச் சார்ந்து வாழ வேண்டிய நிலை
இருக்கின்றது. இந்த நிர்ப்பந்தத்திலிருந்து பெண்ணிற்கு கிடைக்கும்
பொருளாதார பாதுகாப்பாகவே மஹர் பணத்தை இஸ்லாம் சட்டப்பூர்வமாக
வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்புமுறை திருமணத்தை ஏற்கும்
பெண்ணிற்குப் பொருளாதார ரீதியில் ஒரு தன்னம்பிக்கையை
உருவாக்குகிறது. இன்றைய சமூகத்தில் வரதட்சணை என்ற பெயரில்
பெண்கள் விலை பேசப்படுவதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு மேலான
முறையில் பெண்களை கண்ணியப்படுத்துகின்ற வகையில் ஆக்கப்பட்டதே
மஹர் பணம் என்பதாகும்.

**பெண்ணின் கற்புநிலை**

சமூகத்தில் கற்புக் கோட்பாடு மற்றும் பாலுறவுக் கருத்துக்களை
பொறுத்தமட்டில் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுமைப்படுத்தியே
சட்டவிதிகளை இஸ்லாம் அமைத்திருக்கின்றது. இவ்வகையில்
எந்தநிலையிலும் எந்தச் சூழலில் பெண்ணிலிருந்து ஆண் வேறுபட்ட
உரிமைகளைப் பெற்றிருக்கவில்லை. ஒரு பெண்ணில் கற்பில் ஒருவனுக்கு
சந்தேகம் ஏற்பட்டால் அதனைத் தகுந்த காட்சிகளுடன் உண்மையைக்
கண்டறியவேண்டும். திருமறையில் உங்கள் பெண்களில் எவளேனும்
மானக்கேடான செயல் செய்துவிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டால் அதை
நிரூபிக்க உங்களிலிருந்து நான்கு பேர்களை அழையுங்கள். அவர்கள் அதை
மெய்ப்படுத்தி சாட்சி கூறிவிட்டால் அப்பெண்களை மரணம் கைப்பற்றும்
வரையில் அல்லது அவர்களுக்கு அல்லாஹ் ஒரு வழியை உண்டாக்கும்
வரையில் அவர்களை வீடுகளில் தடுத்து வையுங்கள் என்று சுட்டுகிறது.
அதேபோல் ஓர் ஆண்மகனும் தன்னை விபச்சாரத்திலிருந்து பாதுகாத்துக்
கொள்வதற்கு கடமை உண்டு என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. ஆண்
பெண் இருவரும் விபச்சாரம் செய்தால் தண்டனை கொடுக்கவேண்டும்.
அவ்விருவரும் தம் குற்றத்தை ஒப்புக்கொண்டோம் என்று தவ்பா
செய்தார்களானால் அவர்களை மன்னித்துவிட வேண்டும் என்று சுட்டுகிறது.
ஒரு பெண் தன் அகமனதை கற்புநிலை தவறாமல் பாதுகாக்க வேண்டும்
என்றும், தவறினால் அதற்குரிய தண்டனையை இவ்வுலக வாழ்விலும் மனவுலக
வாழ்விலும் கொடுக்கப்படும் என்று இஸ்லாம் எச்சரிக்கின்றது. கற்புடைய
பெண்கள் எவ்வாறு தங்களது அக மனதைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
முக்கியத் தகவல் இருக்கிறதோ அதேபோல் தான் புறத்தோற்றத்திலும்

அக்கறை செலுத்தப்பட வேண்டும். தங்கள் ஆடைகளாலும், அணிகலன்களாலும் ஒரு பெண் பிறருக்குச் சலனம் ஏற்படுத்துவதை இஸ்லாம் விரும்பவில்லை.

### பெண்ணிற்குரிய பர்தா

இஸ்லாம் பெண்களது ஆடைகளைக் குறித்து சில கட்டுப்பாடுகளை
விதிக்கின்றது. பெண்களின் இயற்கையான உடலமைப்பு ஆண்களைக்
கவரக்கூடியதாகவும் இருப்பதால் பெண்கள் தங்களது அழகினால் மற்றவர்
சலனமடையும் அளவில் நடக்கக்கூடாது என்ற அடிப்படையில்தான் குர்ஆன்
சில கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இதேபோன்றுதான் ஆண்களும்
தங்களது மறையுறுப்புக்களை மற்றவர்களின் கண்களுக்குத் தெரிகின்றபடி
வெளிப்படுத்தக்கூடாது. எனவே, ஒழுக்கக்கோட்பாடு என்பது ஆண், பெண்
இருபாலருக்கும் பொதுமைப்படுத்திக் காட்டுகிறது இஸ்லாம்.
இயற்கையிலேயே மற்றவர்களின் மனதைக் கவரும் வகையில் பெற்றுள்ள
பெண்களுக்கு சற்றுக் கூடுதலாகவே விதிகளை அளிக்கின்றது. இந்த
விதிகளை அப்போதைய சமூகச் சூழலுடன் பொருத்திப்பார்ப்பது அவசியமாகும்.
அன்றைய சூழலில் இஸ்லாம் சமயம் தோன்றுவதற்கு முன்பு சமூகத்தில்
ஆண், பெண் ஒழுக்கக்கேடுகள் பரவலாக இருந்தது. இந்த முறையற்ற
இயக்கத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கொண்டு வருவதற்கு பெருமானார்
அவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். பெண்கள் சுதந்திரமாகச்
செல்ல முடியாத சூழலில்தான் கல்வி, நாகரிகமற்ற சமூக அமைப்பில் உள்ள
ஆண்களது பார்வையிலிருந்து பெண்களை பாதுகாத்துக் கொள்வதற்காக
பெண்களின் ஆடை தொடர்பான கட்டுப்பாடுகளைத்தான் பர்தா அமைப்புநிலை
ஆகும். பர்தா என்பது திரை அல்லது மறைத்தல் என்பதாகும். பர்தா
என்னும் பாதுகாப்பான முறையை பெண்களுக்கு அளித்த 1400
ஆண்டுகளாக அவர்களின் கற்புநிலையைப் பேணி பாதுகாத்து வருகின்றது.
இஸ்லாம் அந்நிய ஆடவர்களின் இழிந்த பார்வையை விட்டும் பாதுகாப்புத்
தருகிறது. பெண் தன் அந்தரங்க உறுப்புக்களையும், அலங்கார
அணிமணிகளை கணவனல்லாத இதர ஆடவர்கள் பார்க்காமல் இருக்கவும்
மூடிமறைக்கவும் பேருதவியாய் இருக்கின்றன. பெண்களின் ஒவ்வொரு
அங்கமும் ஆண்களை ஈர்க்கக்கூடியதாகவும், இச்சையை
உண்டாக்கக்கூடியதாகவும் இருக்கின்றது. எனவே, பெண்கள் தங்களுடைய
அழகை முழுமையாக அன்னியர்களிடம் வெளிப்படுத்த வேண்டாம் என்றுதான்
திருமறையில் கூறுகிறதே தவிர அவர்கள் உடல் முழுவதையும்
மறைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறவில்லை. உண்மையில் பெண்
வீதியில் நடந்துசென்றாலும் அவளை ஆண்கள் ஒரு நிமிடமாவது ஏறிட்டு
பார்ப்பார்கள். எனவே, பர்தா அணிந்தால் அவசியமில்லாமல் அங்கு இங்கு
செல்லமுடியாது. அவசியத்தை முன்னிட்டு எங்குச் சென்றாலும் பர்த
அணிந்து செல்லவேண்டும். கண்களுக்கு இமை எப்படிப் பாதுகாப்பா
இருக்கின்றதோ, அதேபோலதான் சமுதாயத்தின் கண்களாகி
பெண்களுக்கு பர்தா பாதுகாப்பாகும். இந்தப் பர்தா பெண்களின் பாதுகாப்
ஆயுதம் என்று கூறினால் மிகையாகாது.





சமூக வளர்ச்சியில் அக்கறை கொள்ளும் இஸ்லாம், அதற்குப் பெண் கல்வியை வலியுறுத்துகிறது. பெண், கல்வி கற்று என்ன செய்யப் போகிறாள்? அவள் அடிப்படை வேலை செய்கின்றவள் என்றெல்லாம் எண்ணி, பெண்களை, பெற்றோர்கள் கல்வி கற்பதற்கு அனுமதி கொடுப்பது கிடையாது. அப்படியே அனுமதிக் கொடுத்தாலும் கையெழுத்துப் போடும் தகுதிமட்டும் இருந்தாலே போதும் என்கின்றனர். குறைந்த அளவே படிப்பதற்கு அனுமதி கொடுக்கின்றனர். ஆனால், குழந்தை வளர்ப்பதில் பெரும்பணி பெண்களுக்கே அதிகமாக அளிக்கப்படுவதால், அவளுக்கும் பொது அறிவு அவசியம் என்பதாலே இஸ்லாம் கல்வி கற்பதில் பெண்களுக்கு உரிமை வழங்குகிறது. அதுமட்டுமல்ல கல்வி கற்பது பெண்களுக்கு கடமை என்று வலியுறுத்துகிறது. சமூகத்தில் ஆண், பெண் இருபாலருக்கும் கல்வியறிவு என்பது அடிப்படைத் தேவையாகும் என இஸ்லாம் எடுத்துக்காட்டுகிறது. எனவே, இஸ்லாம் பெண்களுக்குக் கல்வி தேவை இல்லை என்ற கருத்துப் புலப்படுமாறு எந்த ஒரு வசனத்திலும் இறைக்கட்டளையாக பெறவில்லை. சமூகத்தில் பெண்களுக்குரிய சொத்துத் தொடர்பாக பல்வேறான உரிமைகளை இஸ்லாம் வழங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் மேம்பாட்டிற்குப் பெண் அடிப்படையாகத் திகழ்கின்றாள்.

ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி கல்வி கற்பதற்கு நிலை ஏற்படும்போது ஒரு முஸ்லீம் கல்வியுரிமை பெற்றிருந்தாலும் முதலில் நிற்கவேண்டியது மார்க்கக் கல்வி கற்று ஓரளவு மார்க்க ஞானம் பெற்றபிறகுதான் பயன் தருகின்ற எல்லாவகைக் கல்வியையும், உலகியல், அறிவியல், அரசியல், இலக்கியம், இலக்கணம், மருத்துவம் என அனைத்தையும் கற்பதற்கு ஆண்களைப் போலவே பெண்களும் உரிமை பெற்றிருக்கின்றனர். ஒரு சமுதாயத்தின் உயர்வும் தாழ்வும் மதிப்பும் எல்லாம் பெண்களால்தான் என்றே நம்புகின்றனர். இஸ்லாமிய வரலாற்றின் நாயகம் (ஸல்) அவர்களின் அருமைத் துணைவியார் ஆயிஷா அவர்கள் அறிவு மேதையாய்த் திகழ்ந்தார்கள். ஹதீதுகளில் அறிவிப்பாளராகவும், மார்க்கச் சட்டதிட்டங்களை நன்கு தெரிந்தவராக பெருமானாரின் வாழ்வு நெறியைத் தாமும் நன்கறிந்து மற்றவர்களுக்கு எடுத்துக்கூற தெளிவுபெற்றவராகவும் ஆயிஷா நாயகி இருந்தார்கள் எனவே, ஆண்களைப்போலவே பெண்களும் கல்வி பயில்வதற்கு தகுதியுடையவர்கள் எனக்கூறுகிறது திருமறை.

### சமய அமைப்பில் பெண்கள்

இஸ்லாம் சமய அமைப்பில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. சமய அமைப்பினை பொறுத்தவரையில் ஆண், பெண் வேறுபாட்டை இஸ்லாம் ஏற்படுத்தவில்லை. ஆணுக்குரிய அனைத்து சமயக் கடமைகளும்-பெண்ணிற்கும் வலியுறுத்துவதாக இஸ்லாம் சமயம் கூறுகிறது. இஸ்லாமியச் சமய கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் ஆண் பெண் இருபாலருக்கும் ஒரேவிதமான பயனை பெறுவதற்காகவே திருமறை கூறுகிறது ஐந்து அடிப்படைக் கடமைகளும் பெண்களுக்கு பொதுவானதே. ஐந்து அடிப்படை கடமைகள் கலிமா, தொழுகை, நோன்பு, ஐக்காத், ஹஜ் ஆகும். இந்த ஐந்து

அடிப்படைக் கடமைகளை ஆணும், பெண்ணும் இணைந்தே நிறைவேற்ற கட்டளையிடுகிறது இஸ்லாம். ஆனால், பொது இடங்களில் தொழுகை நடத்தும்போது ஆண், பெண் இருபாலரும் இணைந்த நிலையில் தொழுகை நிறைவேற்றப்படுகிறது. இதன் காரணமாகவே பள்ளிவாசலில் நிறைவேற்றப்படும் தொழுகையில் ஆண்கள் மட்டுமே கலந்து கொள்கின்றார்கள். ஆனால், இதேப் போல் பொது இடங்களில் தனியாக பெண்கள் மட்டுமே தொழுகை நடத்துவதை இஸ்லாம் தடைசெய்யவில்லை. பெண்கள் மசூதிக்குச் சென்று தொழுவதை குர்ஆன் எங்கும் தவறாக சுட்டிக்காட்டவில்லை. ஆனால், அவர்கள் தனியாக ஒன்றுசேர்ந்து பொது இடங்களில் தொழுவதை ஏற்றுக்கொள்கிறது. இல்லத்தில் இருக்கும்போது ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து தொழுவதை இஸ்லாம் தடை செய்யவில்லை. அதனை ஏற்றுக்கொள்கிறது.

சமய வாழ்வினை பொறுத்தவரையில் துறவறத்தை இஸ்லாம் ஏற்கவில்லை. துறவறம் என்பது ஆண் பெண் உடல்கூறுகளுக்குப் புறம்பானது என்று சுட்டுகிறது. இஸ்லாம் சமயம் பரவுகின்ற சமயத்தில் மூடநம்பிக்கைகள் பரவலாக இருந்தது. மூடநம்பிக்கைகளை இஸ்லாம் ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்கள் மூடநம்பிக்கையின் மீது நம்பிக்கை செலுத்துவதை தண்டனைக்குரிய விஷயமாக இஸ்லாம் கூறுகிறது. இதனால், இஸ்லாத்தில் ஏகத்துவன் கொள்கைக்கு பங்கம் நேர்ந்துவிடக்கூடும் என்பதை இஸ்லாம் கருதுகிறது. மூடநம்பிக்கையினால் ஏற்படும் விளைவுகளை எடுத்துக்கூறி மூடநம்பிக்கைகளிலிருந்து பெண்கள் விடுதலைபெற வேண்டும என இஸ்லாம் வலியுறுத்துகிறது.

## அரேபியாவில் பெண்கள் நிலை

### வைதீக கலிபாக்கள் காலத்தில் பெண்களின் நிலை

பெண்களுக்கு சொத்துரிமை இருந்தது. பெண்கள் ஆண்களைப் போலவே பொது இடங்களுக்கு வருகை புரிந்தார். முகத் திரையிட்டு தனித்து ஒதுக்கப்படும் வழக்கம் இன்னமும் வேரூன்றவில்லை. பல பெண்களை மணம் புரியும் வழக்கம் இன்னமும் இருந்தது. அதனை அடியோடு ஒழிக்க முயலாது ஒரு வரையறை கொண்டு வர இஸ்லாம் முயன்றது.

### உமையாக்கள் காலத்தில் பெண்கள் நிலை

அரசு குடும்பத்துப் பெண்கள் சுற்று சுதந்திரமாய் இருந்தபோது சாதாரணப் பெண்கள் சமூகத்திலிருந்து சற்று ஒதுங்கியே வாழ்ந்தனர். பல பெண்களை திருமணம் செய்யும் முறை நடைமுறையிலிருந்தது. உயர் குடியினர் ஆசை நாயகிகள் பலரைக் கொண்ட அந்தப்புரத்தை பேணினர். பெண்கள் முகத்திரையிடல் வழக்கம் தோன்றியது.

பெண்கள் பலர் கலை இலக்கியத்தில் சிறந்து விளங்கினர். டமாஸ்கஸ் பெய்ருட் நகர்களில் வாழ்ந்த பெண்கள் ரோஜா மற்றும் சர்க்கரை கலந்த மது வகைகளை அருந்தினர். கலிஃபா ஹிஹாமின் மனைவி மது அருந்தினார். அவள் பயன்படுத்திய தங்க மதுக்கோப்பை இன்று பூக்தாத் அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாய் வைக்கப்பட்டுள்ளது.



அக்கால உயர்குடிப் பெண்கள் எத்தன்மையுடையவர்களாய் வாழ்ந்தார்கள் என்பதற்கு இரண்டு எடுத்துக் காட்டுகள் கூறலாம்

i). சுதேய்னா :– நான்காவது கலிஃபா அலியின் பேத்தியும் தியாகி அல் – ஹிசைனின் மகளுமான சுகேய்னா அறிவும், அழகும் ஆழ்ந்த புலமைத் திறமும் பெற்றிருந்தாள். அக்கால நடையுடை அழகு இலக்கியம் முதலிய துறைகளில் முடிவான கருத்தைத் தெரிவிக்கும் நடுவராய் அவளை விளங்கச் செய்தன. சுதந்திரமாய் செயல்படும் தன்னுரிமையை விட்டுக் கொடுக்காது ஒருவர் பின் ஒருவராய் பல ஆண்களை மணந்து கொண்டாள்.

ii). ஆயிஷா :– இரண்டாவது கலிஃபாவான அபுபக்கரின் பேத்தியான ஆயிஷா மெக்கா மெதினா நகரங்களின் கோடை கால இருப்பிடமான அல்தாயிஃப வட்டத்தில் குறிப்பிடத் தக்க பெண்மணி அரபு பெண்களிடம் பெரிதும் போற்றப்பட்ட கண்கவர் வனப்பும், வீற்றிரிந்த பெருமிதமும் ஒருங்கே பெற்றிருந்தாள். அவரும் அடுத்தடுத்து மூன்று ஆடவரை மணந்து கொண்டாள். அவள் வருகைக்காக மெக்காவின் பொது வழிபாட்டைக் கூட அந்நகர் ஆளுநர் ஒத்தி வைத்தார். அவளது இரண்டாவது கணவன் (ஒரு முறை சுதேய்னாவின் கணவராக இருந்தவரும் கூட) ஒரு மில்லியன் தீர்ஹாமை "சீதனமாக" அளித்தாராம். முகத்திரையிடல் வேண்டும் என்ற அந்த கணவனின் வேண்டுகோளை, ஆண்டவன் அளித்த அழகை முடி மறைக்க விரும்பவில்லை என்று கூறி புறக்கணித்தார். அரேபிய பெண்கள் நீண்ட பாவாடையும், சட்டையும் அணிந்தனர். தலையை ஒரு சின்னத் துணியால் மூடியதோடு முகத்தையும் துணியால் மறைத்தனர்.

### அப்பாஸ் காலத்தில் பெண்கள் நிலை

உமையாக்கள் காலத்தில் பெண்கள் அனுபவித்த உரிமைகள் அப்பாஸ்கள் காலத்திலும் நீடித்தது. உயர்குடிப் பெண்டிர் அரசியலில் செல்வாக்குடன் விளங்கினர். அக்கால நாகரீகப் பாணியின் சின்னமாக விளங்கினார். கலை, இலக்கிய கவிதைப் படைப்புகளில் ஆர்வம் காட்டினர். மாலை வேளை இலக்கிய உரையாடல் இசை நிகழ்ச்சிகளில் கலந்துக் கொண்டனர். அவர்களில் குறிப்பிட தகுந்தவர்கள் அல்ரஷிதின் தாயரான அல்கைஸிரன், அல்மஹ்தியின் மகளான உமையா அல் அமீனின் தாயான ஸிபைதா, அல் மனைவியான பூரான் கலிஃபாஅல்முதாசிம் காலத்தில் உபைதா அல் துன்பூரியா என்ற நங்கை அழகுக்கும், இசைக்கும் புகழ் பெற்று விளங்கினாள்.

நாளடைவில் பெண்கள் நிலை தாழ்வடைந்தது. அந்தபுரத்தில் ஆசைநாயகிகள் எண்ணிக்கை அதிகரிப்பு, பல மனைவியரை மணம் புரியும் வழக்கம் ஆகியவை காரணமாக ஒழுக்கக் கேடு அதிகரித்தது. சான்றாக, அரேபிய இரவுகள் என்ற கற்பனை இலக்கியத்தில் பெண்ணானவள் சூழ்ச்சி, கீழ்த்தர உணர்ச்சி, தகாத எண்ணங்கள் ஆகியவற்றின் உறைவிடம் என்று படம் பிடித்துக் காட்டப்படுகின்றாள். முகத்திரையிடல் (பர்தா) காரணமாக நாளடைவில் பெண்ணினம் தனித்து ஒதுக்கப்பட்டது. ஆனால் இஸ்லாமியக் கோட்பாட்டின் படி ஒரு பெண் மணம் புரிந்து குழந்தைப் பேறு கொண்டு

இல்லறம் நடத்தி, ஒய்வு நேரத்தில் நூல் நூற்றல், நெய்தல் ஆகிய தொழிலில் ஈடுபடுதல் ஆகியவை வற்புறுத்தப்பட்டன. சிலம்பு வளையலை போன்ற அணிகலன்களை பெண்கள் அணிந்தனர்.

**குவைத்தின் வாக்குரிமை மசோதா :**

வளைகுடா நாடுகளில் ஒன்று குவைத் ஆகும். அப்பாஸ் காலத்திலும் மன்னர்கள் ஆசைநாயகிகள் வைத்து இருந்தனர். சான்றாக, கலிஃபா அல்முதவக்கில் அந்தப்புரத்தில் 4,000 ஆசைநாயகிகள் வைத்து இருந்தனர். சான்றாக, கலிஃபா அல்முதவக்கில் அந்தப்புரத்தில் 4,000 ஆசையாகியர் இருந்தனர். இக்காலத்தில் பெண்களுக்கு ஆழ்ந்த கல்வி கற்றுக் கொடுக்கப்பட வில்லை நாற்பது ஆண்டுகளாகப் போராடியதன் விளைவாக குவைத் பெண்கள் வாக்குரிமையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையும் பெற்றுவிட்டனர். பெண்கள் அரசியலில் பங்கு கொள்ள அனுமதி அளிக்கும் மசோதா ஆண்கள் மட்டுமே இடம் பெற்ற பாராளுமன்றத்தின் May 2005 இல் நிறைவேறியது. ஒரு மாதத்திற்குப் பின் நாட்டின் முதல் பெண் காபினெட் அமைச்சர் டாக்டர். மஸ்ஸெளமா அல் – முபரெக் பதவி ஏற்றார்.

வளைகுடா நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் என்று முதன் முதலில் தீர்மானித்தது குவைத் நாடு தான். ஆனால் பழமை மனப்பான்மை கொண்ட மன்றம் அதைத் தடுத்தபடியே இருந்தது. ஓமான், கத்தார், பஹ்ரைன் போன்ற பிற வளைகுடாநாடுகள் தேர்தலில் பெண்களுக்கு வழங்குவதில் குவைத்தில் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் 2007–ல் நடைபெற வருகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக ஆசிய கண்டத்தில் பெண்கள் நிலையை தாழ்வாக உள்ளன. இந்திய, பாகிஸ்தான், சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் பெண்கள் முன்னேற்றப் பாதையில் செல்கின்றனர். ஆனால் இன்றும் ஈரான், ஈராக், குவைத் போன்ற நாடுகளின் பெண்களின் நிலை பின் தங்கியே உள்ளன.



# 8. இந்தியாவில் பெண் தொழில் முனைவோர்

**முன்னுரை** பெண் தொழில் முனைவோர் பற்றி கோட்பாடு - பெண் தொழில் முனைவோரின் பணிகள் - பெண்கள் ஈடுபடும் செயல்களின் வகைகள் - பெண்களுக்கு பலதரப்பட்ட அமைப்புகளின் ஆதரவு - பெண் தொழில் முனைவோருக்கான அமைப்புகள் - மாநில அமைப்புகள் - பெண் தொழில் முனைவோர்களின் வளர்ச்சி - குறைகளைக் களையும் வழிகள் இந்தியாவில் பெண்கள் தொழில் முனைவோர் இயக்கம்

மனித இனத்தில் 50 விழுக்காட்டினை கொண்டுள்ள பெண்கள் தம்மை ஆண்களுக்கு சமமாக, நாட்டின் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டால்தான் நாட்டின் பொருளாதார நிலையுடன் தன்னுடைய நிலையையும் மேம்படுத்திக் கொள்ளவியலும். இந்நிலையில் பெண்களுக்கான தொழில் அமைப்புகளை உருவாக்கி அவர்களைத் தொழில் முனைவோர்களாக ஆக்குதல் மூலம் அவர்களது பொருள் வளத்தை மேம்படச் செய்யலாம். இன்றைய பொருளியல் உலகில் (Materialistic World) இத்தகைய முயற்சியும் முக்கியமானதாகும். எனவே இந்தியாவில் பெண் தொழில் முனைவோர் அமைப்புகளைப் பற்றியும் தெரிந்துகொள்ளல் அவசியமாகின்றது. 'தொழில் முனைவோர்' என்ற கோட்பாடு விரிவாக்கம் பெற்றிருப்பினும், இன்றைய பொருளியல் வளர்ச்சியில் அது வலிமைமிக்கதோர் இடத்தைக் கொண்டிருந்தாலும், அத்தகைய முனைவோர்களாக ஆண்களுக்கு சமமாகப் பணிபுரிவதில் பெண்களும் சமமானவர்கள் என்பது ஏற்புடையதாகும்.

பெரும்பாலான வளர்ச்சியுற்ற நாடுகளில் கூட பெண்கள் திருமணம் செய்து கொண்டு குடும்பவாழ்வுடன் தன்னை இணைத்துக் கொள்வதற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றது. இருப்பினும் பெண்கள் ஆசிரியைகளாகவும், வக்கீல்களாகவும், மருத்துவர்களாகவும், செவிலியர்களாகவும், அலுவலகப் பணியாளர்களாகவும் செயல்படுகின்றனர். குறைவான அளவே தொழில் சாலைகள் வர்த்தகம், வாணிபம் ஆகியவற்றை நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள் வலிமையற்றவர்கள், ஆற்றலற்றவர்கள், திறமையில்லாதவர்கள் என்ற எதிர்மறை எண்ணங்களின் மீதான ஈடுபாடே பெண்களைக் குறைத்து மதிப்பிடும் போக்குகளாக உள்ளன. இந்திய சமயத் தத்துவங்களில் பெண்கள் சக்தி(இயக்கம்)யின் மறுவடிவமாக அதாவது துர்க்கையாகப் போற்றப்பட்டாலும் நடைமுறை வாழ்வில் அவர்கள் வலிமையற்ற, பிறர்சார்புடைய பண்பினராக சமுதாயத்தில் கொள்ளப்படுகின்றனர். பெண்களை குடும்பம் என்ற நான்கு சுவர்களுக்குள் கட்டுப்படுத்தி வீட்டுவேலைகளைச் செய்தல், குடும்பச் சடங்குகளை ஆற்றுதல்

போன்ற பணிகளுடன் மட்டுமே இணைக்கப்படுகின்றனர். இன்றும் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே பெண்கள் பொருளாதாரப் பணிகள் என்ற அமைப்புகளுக்குள் ஊடுருவியுள்ளனர். எனவே பெண்களுக்கும் தொழில்களுக்குமிடையிலான தொடர்புகளைத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

## பெண் தொழில் முனைவோர் பற்றிய கோட்பாடு

பெண் தொழில் முனைவோர் என்போரை ஒரு குறிப்பிட்ட வர்த்தக அமைப்பினை உருவாக்கி, அமைத்து அதனை நடைமுறைப்படுத்துவோர் எனக்கொள்ளலாம். இந்திய நடுவணரசின் கோட்பாட்டின்படி பெண் தொழில் முனைவோர் என்பவர்கள் ஒரு தொழில் அமைப்பின் உரிமையாளர்களாகி, அவற்றில் குறிப்பிட்ட முதலீடுகளைச் செலுத்தி, அவ்வமைப்பினைக் கட்டுப்படுத்தி நடத்திச் செல்லுபவர்கள். ஆவர். அவர்களுடைய மூலதனம் 51 விழுக்காடு ஆகவும் இருக்கும்.

## பெண்தொழில் முனைவோரின் பணிகள்

ஆண் தொழில் முனைவோர்களைப் போல் பெண்தொழில் முனைவோர்களும் குறிப்பிட்ட திட்டவட்டமான பணிகளை கீழ்க்கண்டவாறு ஆற்ற வேண்டியவர்களாயுள்ளனர்.

1. புதிய தொழில் அமைப்புகளைத் துவங்குவதற்கான வாய்ப்புகள் மற்றும் ஆதாரங்களைப் பற்றி ஆய்வு செய்தல்.
2. பொருளாதார அளிப்புகளைப் பற்றிய நிலைகளில் துணிந்து முடிவெடுத்தல்
3. கண்டுபிடிப்புகள், புதுமைத் தன்மைகளைப் புகுத்துதல்
4. உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துதல்
5. நிறுவனத்தை பொறுப்பேற்று நடத்திச் செல்லுதல்

இப்பணிகள் அனைத்தும் அனைத்துப் பிரிவினராலும் ஒரே சீராகக் கொண்டு செலுத்தக்கூடிய தன்மையுடையவல்ல. ஏனெனில் பெண்களின் திறமை, ஆற்றல் ஆகியவற்றிற்கு ஏற்பவே துணிந்து செயல்பட்டு, புதுமையைப் புகுத்தி விரிநிலை கொண்ட அமைப்பு ஒன்றினை உருவாக்க இயலும். ஒருங்கிணைப்பு, மேலாண்மை ஆகியவற்றில் செலுத்தும் கவனம் வாயிலாகவே சமநிலையுடைய பணிகளை உருவாக்கிச் செயல்படுத்த இயலும். இந்நிலையில் கீழ்க்கண்ட பெண்ணிய இயல்புகள் அவர்கள் சிறந்த தொழில் முனைவோர்களாகச் செயல்பட உதவுகின்றன என்பதைச் சிந்தித்தல் வேண்டும் அவர்கள்.

1. பொறுமையும், ஈடுபாட்டுத்தன்மையும் கொண்டவர்கள்.
2. பேரவா உடையவர்களாயினும் முன்யோசனையுடன் கவனமாகச் செயல்படக் கூடியவர்கள்
3. சுறுசுறுப்பும் திறமையும் உடையவர்கள்



4. விடாமுயற்சியுடன் உழைப்புக்கு தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுபவர்கள்.
5. ஊக்குவிப்பாளர்கள்
6. ஆர்வநோக்கு, தாங்கும் சக்தி ஆகியவற்றை உடையவர்கள்

இருப்பினும் இந்தியாவில் பெண்கள் கீழ்க்காணும் குறைபாடுகளைக் கொண்டுள்ளனர். அவற்றைத் தவிர்ப்பதன் வாயிலாக அவர்களைச் சிறந்த தொழில் முனைவோர்களாக ஆக்கலாம்.

1. அவர்களிடமுள்ள தன்னம்பிக்கையைத் தடை செய்யாமல் மென்மேலும் வளரச் செய்ய ஊக்குவித்தல் வேண்டும்.
2. பெண்கள், பிறர் எடுக்கும் முடிவுகளைச் சார்ந்திருக்கும் முறையிலிருந்து தவிர்க்கப்படவேண்டும்.
3. காலத்தின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட மாற்றங்களை ஏற்றுக் கொள்ளப் பெண்கள் ஆர்வமூட்டப் படல் அவசியம்
4. துணிந்து முடிவு எடுக்கக்கூடிய பண்பினை மேற்கொள்ளவும் தூண்டல்களுக்கு ஏற்பத் துலங்கவும் தயாராக இருக்கச் செய்தலும் தேவை.

எனவே பெண்களிடம் தன்னம்பிக்கை, முடிவெடுக்கும் பண்பினை வளர்த்துக் கொள்ளல், சந்தையியலில் ஈடுபாடு, தொழில் தேவைக்கான பொருட்களை பற்றிய அறிவினைப் பெறல், நிர்வாக இயலில் பங்கேற்பு போன்றவை வளர்க்கப்படவேண்டும். இவற்றை, சமூக அறிவியலார் கூறுவதுபோல் பலதரப்பட்ட பயிற்சிகளின் வாயிலாக ஊட்ட வேண்டும்.

பெண் தொழில்முனைவோரின் வளர்ச்சியானது சீரானதாக, தொடர்ச்சியானதாக அமைதல் வேண்டும். உடற்கூறு, மனவியல் போன்றவற்றில் அவர்கள் ஆண்களுக்குக் கீழானவர்கள் அல்ல என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே இந்தியாவில் பெண்தொழில் முனைவோருக்கு உள்ள தடைகளையும் தெரிந்துகொள்ளல் தேவையாகின்றது. அப்போதுதான் பெண்களும் ஆற்றலும், திறமையும் கொண்ட தொழில் முனைவோர்களாக இயங்கவியலும். இந்நிலையில் கீழ்க் காணும் தடைகள் தவிர்க்கப்படவேண்டும்.

### 1. பாகுபடுத்தும் செயல்கள்

ஆண்ாதிக்கச் சமுதாயத்தில், பெண் தாழ்ந்தவள், ஆண் மேம்பட்டவன் என்ற தவறான படிநிலை அமைப்பு செயலில் உள்ளது. அதன் விளைவாக பெண்கள் கட்டுப்படுத்தப்பட்ட கீழ்நிலைப்பிரிவினராக பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர். குழந்தைப் பருவம் தொட்டு இளமைக்காலம் வரை அவர்களுடைய திறமைகளும், தகுதிகளும் குறைத்து மதிப்பிடப்படுவதால் பெண்கள் மனதில் ஒரு மனவியல் அழுத்தம் ஏற்படுகின்றது. அது வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக அமைகின்றது. அவர்களிடம் உள்ள

திறமைகள், ஆற்றல்கள் போன்றவை திட்டவட்டமாகப் பயிற்சியளிக்கப்பட்டு வளர்ச் செய்யப்படவில்லை.

## 2. தன்னம்பிக்கையின்மை

பெண்களும் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாகக் கல்வி பயின்றாலும் அவர்கள் ஆண்களைப்போல் திறமைமிக்க தொழில் முனைவோராகத் திகழவில்லை. அ) அதற்கு பெண்களிடம் காணப்படும் தன்னம்பிக்கையின்மை, தன்னுடைய சுய ஆற்றலை உணராமை, தன்னிடமுள்ள திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தாமை போன்றவை காரணமாகும். ஆ) அத்தகைய குறைபாடுகள், பெண்களை புதிய வளர்ச்சி அல்லது மேம்பாட்டு முயற்சிகளில் ஈடுபடுதலைத் தடை செய்கின்றனவென்பதை மறந்துவிடுகின்றனர். இ) சமுதாயம் பெண்களின் ஆற்றல், திறமை, தகுதி மீது நம்பிக்கை வைக்காமையும் அவர்களுடைய தேக்க நிலைக்கும் வளர்ச்சிக்கான தடையாகவும் காணப்படுகின்றன என்பதை உணர்தல் வேண்டும். ஈ) குடும்பத்திலும் பெண்களை நம்பி பணத்தை முதலீடு செய்ய முன்வருவதில்லை உ) வங்கிகளும் பெண்கள் தரும் திட்டங்களில் முதலீடு செய்தல் அல்லது பணஉதவி வழங்குவதில் தயக்கம் காட்டுகின்றன. ஊ) பெண்களின் முயற்சிகளுக்கு சாட்சியாளர்களாகப் பணி செய்வதும் பெரிதும் விரும்பப்படுவதில்லை.

## 3. தவறான சுய சிந்தனை

சமுதாயத்தில் காணப்படும் கருத்தியல்கள், சமயக் கோட்பாடுகள் ஆகியன பெண்களின் சுயத்தன்மை மற்றும் சிந்தனைகள் மீது தாக்கங்களை உருவாக்குகின்றன. தற்காலக் கல்விமுறை, புத்தகங்கள், ஊடகங்கள், செய்தித்தாள்கள், திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் போன்றனவும் பெண்களை பலகீனமானவர்கள், பணிவுடையவர்கள், எதிர்ப்பாற்றல் அற்றவர்கள், கீழ்ப்படிபவர்கள், கடமையுணர்வு மிக்க மனைவி, தியாக மனப்பான்மை உடைய தாய் என்றே சித்தரிக்கின்றன. எனவே பாரம்பரியக் கட்டுக்கோப்புகளிலிருந்து விடுபட எண்ணும் எண்ணங்களைக் கொண்ட பெண்களும் பிறரால் குறைகூறப்படுகின்றனர். வெறுத்து ஒதுக்கப்படுகின்றனர். இத்தகைய முறைகேடுகளிலிருந்து தம்மை வெளிப்படுத்தி முன்னேறினால்தான் பெண்கள் சிறந்த தொழில் முனைவோர்களாகத் திகழவியலும்.

## 4. சமூகவியல் கூறுகள்

தொன்றுதொட்டு இன்று வரை பாலின வேறுபாடுகளுக்கு ஏற்பவே கல்விமுறை, நடவடிக்கைகள், திட்டங்கள் மாறுபடுத்தப்பட்டுள்ளன. எனவே பாலினவேறுபாடுகளும் இருவருக்கிடையில் இடைவெளிகளை ஏற்படுத்துகின்றன. பெண்களுக்குத் தனிப்பட்ட பரிசுகளும், ஆண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், குறைவாகவே உள்ளன. அவர்களை எதிர்மறை நோக்கிலேயே சமுதாயம் காணுகின்றது. மேலும் ஆணின் ஆதிக்கம் பெண்ணின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக உள்ளதென்பதை நாம் உணர்தல் வேண்டும்.



## 5. குடும்பச் சூழல்

இந்தியப்பண்பாடு, பாரம்பரியம் ஆ...
அடிப்படையாகக் கொண்டவையாகும். எனவே தனிமனி...
பண்புகளை வளர்ச்செய்வதில் குடும்பங்கள் முக்கியப் ப...
குறைவான கட்டுப்பாடுகள் இருந்தால்தான் குழந்தைகள் ...
அறிவாற்றலையும், கண்டறியும் திறமையையும் வளர்த்துக் கொள்...
பெண்களுக்கு உரிமையையும், விடுதலையும் தரப்பட்டால்தான் அ...
சிறப்பு மிக்க தொழில் முனைவோர்களாகப் பரிணமிக்க இயலும். பெ...
குழந்தைகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் தடுப்புச் சுவராகின்றன.
எனவே குழந்தைகள் வளர்ப்பின்போது மேற்கொள்ளப்படும் எதிர்மறை உணர்வுகள் பின்னர் பெண்களை தொழில் முனைவோராகச் செயல்படுவதின்றும் தடுக்கின்றன. குறிப்பாக குடும்பத்தின் பொருளியல் உதவி இல்லாமை, தேவைப்பட்ட ஆதரவுகளை நல்காமை போன்ற காரணங்களால் பெண்கள், தொழில் முனைவோர்களாகச் செயல்படுவதின்றும் தவிர்க்கப்படுகின்றனர்.

## 6. படைப்புச் சிக்கல்

குறிப்பிட்ட காலக்கட்டத்தில் குறிப்பிடப்பட்ட சூழல்களில் குறிப்பிட்டவாறு இயங்கிச் செயல்பட வேண்டுமென பெண்பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. ஆண்களின் அதிகார அமைப்புப்படியே பெண்பாத்திரங்கள் கணக்கிடப்படுகின்றனர். பொருட்கள், பாதுகாப்பு, சமூக அந்தஸ்து, மற்றும் பாளம் போன்ற அடிப்படைகளில் தான் ஆண்களும் பெண்களும் வாழ்க்கையில் தம்மை இணைத்துக் கொள்ளுகின்றனர். பாரம்பரிய பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் மற்றும் மாறிவரும் சமூகச் சூழல்கள் ஆகியவற்றிற்கேற்ப பெண்கள் இரட்டை வேடமிட வேண்டியவர்களாயுள்ளனர். எனவே வர்த்தகம் மற்றும் தொழில்களில் ஈடுபடுவதிலும் சிக்கல்கள் காணப்படுகின்றன.

## 7. வீடே உலகம் என்ற நிலை

பெண்கள் குடும்பப் பணிகளில் தம்மை இணைத்துக்கொண்டு வீடே உலகம் என எண்ணுகின்றனர். பெண்களை, குடும்பத்தின் அங்கம் என்ற நிலையில் அவர்களது தேவையை நிறைவு செய்யும் ஒரு நிலை காணப்படுகின்றது. மேலும் பெண்கள் குடும்பத்தின் கட்டுப்பாடுகளுக்கும் செயல்களுக்கும் உட்பட்டவர்கள். அவ்வமயம் அவர்களுக்கு செயலாக்கப் பயிற்சி தரப்படுவதில்லை. அதனால் முடிவு எடுப்பதிலும் அவர்களுடைய பங்கு சரிவர நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. அதனால் முடிவு எடுப்பதிலும் அவர்களுடைய பங்கு சரிவர நடைமுறைபடுத்தப்படுவதில்லை. அது பெண்களின் வளர்ச்சியைத்தடை செய்கின்றது.

## 8. பாரம்பரியக் கோட்பாடுகள்

பாரம்பரியங்கள் சமுதாயத்தை திடத்தன்மை கொண்டவையாக்குகின்றன. அதன்மூலம் அவர்கள் என்ன பணிகளை எவ்வாறு

செயல்படுத்த வேண்டுமென்பது தெளிவாகின்றது. பெண்கள் பாரம்பரிய நோக்கிலேயே கவனிக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக 18 வயது நிரம்பிய பெண்கள் தனது சொந்த வளர்ச்சி, மேம்பாடு பற்றி எண்ணாமல் குடும்பம் மற்றும் கணவர் பற்றியே எண்ணுபவர்களாக உள்ளனர். இந்தியப் பாரம்பரியமானது பெண்ணுரிமைக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. எனவே அவர்களுடைய வளர்ச்சியானது இருள் சூழ்ந்ததொன்றாகவே உள்ளது.

## 9. பண்பாட்டு மதிப்பீடுகள்

இந்தியப் பெண்கள் பண்பாட்டு மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப் பட்டவர்களாகவே உள்ளனர். பெண்பணியாளர்களின் செயல் திறமைகள் ஆண் பணியாளர்களைவிடக் குறைவானதாகவே மதிப்பிடப்படுகின்றன. பெண்கள் பலவழிகளிலும் பலதரப்பட்ட சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நிலமானிய முறையிலான பொருளாதார அடிப்படை நேர்மையற்ற பொருளியல் அமைப்புக்குக் காரணமாகின்றன. தமது உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லாமையால் பெண்கள் பொருளாதாரப் பணிகளில் ஈடுபடத் தயங்குகின்றனர். திருமணமாகாத பெண்கள் இத்தகைய காரணங்களால் பணிகளுக்குச் செல்லுதல் குறைவாகவே உள்ளது.

## பெண்கள் ஈடுபடும் செயல்களின் வகைகள்

இந்தியப் பெண் தொழில் முனைவோர்கள் விரிவான அளவில் மின்சார மற்றும் மின்னணுப் பொருட்கள் உற்பத்தி செய்வதில் தம்மை இன்று ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இன்று படித்த மேல்மட்ட நிலையில் உள்ள பெண்கள் முறைசாராப் பணிகளான அறிவுரை வழங்குவோர்(Consultant) களாகவும், உள்வீட்டு அலங்காரம் செய்யும் பணியாளர்களாகவும், ஒப்பனைக் கலைஞர்களாகவும், துணிகளில் அச்சிடுபவர்களாகவும், டூடீஃஸ் என்றும் செய்தி அனுப்பு ஊடகத்தொழில் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனர். அதேநேரம் 70 விழுக்காடு பெண் தொழில் முனைவோர்கள் பாரம்பரியமான, உடைகள் தயாரிப்பு, தையல்வேலை, உணவுப்பொருட்கள், தோல் பொருட்கள் தயாரித்தல், கைத்திறன் பொருட்களைச் செய்தல் போன்றவற்றிலேயே ஈடுபடுகின்றனர். குறிப்பாக இந்தியாவில் பெண் தொழில்முனைவோர்கள் கீழ்க்காணும் பணிகளில் ஈடுபடுகின்றார்கள்.

1. மின்சார மற்றும் மின்னணு சாதனங்கள் சீரமைத்தல்
2. ஆடைகள் தயாரித்தல்
3. அழகுக்கலை நிறுவனங்கள் நடத்துதல் .
4. மின் அச்சு நகல் எடுத்தல் (Xerox), தட்டச்சு(Type writing) கணினிப் பணிகளில் ஈடுபடல்
5. தொலைபேசி மற்றும் தகவல் தொடர்புப் பணிகளை ஆற்றுதல்.
6. புத்தகங்களை அச்சிடல், கட்டமைப்பு செய்தல்(Binding)
7. நாட்குறிப்பு வைத்தல்.



8. பலதரப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி விதவிதமான பொம்மைகள் செய்தல்
9. உணவகங்களில் உணவு வழங்குவோராகச் செயல்படல்
10. உணவுப் பொருட்கள் தயாரித்தல்
11. விளம்பரப்பணிகளில் ஈடுபடல்
12. சந்தையிடல் பணிகளில் பங்கேற்றல்
13. வீட்டுக்குள் அலங்காரம் மற்றும் அலங்கரித்தல்
14. நோய் அறிகுறிகளைக் கண்டறியும் சோதனைச் சாலைகள் நடத்துதல்.
15. பொருட்களைப் பாதுகாக்கும் கிடங்குகளை வாடகை முறையில் நடத்துதல்.

## பெண்களுக்கு பலதரப்பட்ட அமைப்புகளின் ஆதரவு

இந்தியாவில் பெண் தொழில் முனைவோர்களுக்கு உதவும் வகையில் பயிற்சியளித்தல், பொருளாதார உதவியளித்தல் போன்ற பணிகளை பல அமைப்புகள் செயல்படுத்துகின்றன. இந்தியாவில் கீழ்க்காணும் அத்தகைய அமைப்புகள் உள்ளன.

### 1. மாவட்ட தொழிற்சாலைகள் மையங்கள் : (DIC) District Industries Centre

இவ்வமைப்பு மூலம் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்களுக்கான செயல் திட்டங்கள் தரப்பட்டு புதிய செயல்திட்டங்களைத் தேர்வு செய்ய வழிவகுக்கப்படுகின்றது. பெண்தொழில் முனைவோர்களுக்கான பொருளாதார கடன் வசதிகளைப் பெற்றுத்தர வகை செய்கின்றது. பெண்களுக்கு அரசாங்கம் மூலம் கழிவுத்தொகை மற்றும் சலுகைகளைப் பெற்றுத் தருகின்றது.

### 2. தேசிய சிறு தொழில்கள் இணையம் : (NSIC) National Small Industries Corporation

இவ்வமைப்பு பெண் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கான கடன்களைத் தருகின்றது. பெண்களின் பணிகளுக்கான மூலப்பொருட்களைப் பெறவும் முன்னுரிமை அடிப்படையில் இது ஏற்பாடு செய்கின்றது.

### 3. சிறுதொழில் சேவை அமைப்பு : SISI Small Industries Service Institute

இவ்வமைப்பு மூலம் பலதரப்பட்ட பயிற்சிகள் பெண்களுக்காகத் தரப்படுகின்றன. மேலும் செயல்திட்டங்களைத் தேர்வு செய்வதிலும் உதவுகின்றது.

**4. இளம் தொழில் முனைவோர் தேசிய கூட்டமைப்பு**

1975ல் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு பெண் தொழில் முனைவோருக்கான பயிற்சிகளை நல்குகின்றது. அவர்களால் செய்யப்பட்ட பொருட்களின் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்கின்றது. சிறப்பான பொருட்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

**5. சிறுதொழில் வளர்ச்சிக்கான இந்திய வங்கி : SIDBI**
**Small Induastries Development Bank of India**

1990ஆம் ஆண்டில் இது நிறுவப்பட்டது. இது தொழில் வளர்ச்சிக்கான இந்திய வங்கியின் இணைப்பிரிவாகச் செயல்படுகின்றது. பெண்களுக்கு பயிற்சிக்கும் விரிவாக்கப்பணிகளுக்கும் ஏற்பாடு செய்கின்றது. பெண் தொழில் முனைவோருக்கு பொருளாதார உதவியையும் நல்குகின்றது.

**6. பெண்தொழில் முனைவோர் மற்றும் நிர்வாகத்தினருக்கான தேசிய அமைப்பு (NAWEE)**

பெண்கள் மேம்பாட்டிற்கு குரல்கொடுக்கும் இவ்வமைப்பு பெண்களுக்கு அரசாங்கம், பிற அமைப்புகள் தொழில் மையங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகொள்ள வகை செய்கின்றது.

**7. கிராமியப் பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி : DWCRA**
**Development of Women and Children in Rural Areas**

ஒருங்கிணைந்த கிராமத்திட்டத்தின் (Integreated Rural Development Programme) ஒரு துணைத்திட்டமாக இது உருவாக்கப்பட்டது. இது பெண்களுக்கு பணவரவு தரக்கூடிய பணிகளை ஏற்படுத்தித் தருகின்றது. அவர்களுடைய பணிகளுக்குத் தேவைப்படும் பல உதவிகளையும் இது நல்குகின்றது. அதன் மூலம் பெண்களின் பணிகள் சிறப்புற வகை செய்யப்படுகின்றது. இவ்வமைப்பு மூலம் தரப்படும் பொருளுதவி பெண்களுக்கு மட்டுமே தரப்படுகின்றது. இதன்மூலம் பெண்கள் சுயஉதவி நோக்கில் குழுக்கள் அமைத்துச் செயல்படவும் வகை செய்யப்படுகின்றது. கிராமிய இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம் (TRYSEM: Training of Rural Youth for Self Employment) மூலமாகவும் இது உதவி பெறுகின்றது.

**8. பாரத ஸ்டேட் வங்கி State Bank of India**

இந்திய சமுதாயத்திலுள்ள பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்துதருகின்றது. அதேபோல் அவர்களுக்கு கடன் உதவிகளும் தரப்படுகின்றன.

**9. ராஷ்டிரீய மஹிளா கோஷ். (RMK)**

சுமார் 32கோடி ரூபாய் மூலதனத்துடன் 1992ல் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. பணவசதியற்ற ஏழ்மை நிலையிலுள்ள பெண் தொழில்



முனைவோர்களுக்கு பண உதவி செய்வது இதன் முக்கிய பணியாகும். அவர்களுக்கான பயிற்சிகளுக்கும் இது ஏற்பாடு செய்கின்றது.

**10. தொழில் முனைவோர் வளர்ச்சி மையம் : EDI**
**Entrepreneur Development Institute**

அஹமதாபாத்திலிருந்து செயல்படும் இவ்வமைப்பு ஒரு பயிற்சி மையமாக அமைகின்றது. மேலும் பெண் தொழில் முனைவோர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் அது நல்குகின்றது.

**11. தொழில் முனைவோர் மற்றும் சிறுவாணிப வளர்ச்சிக்கான தேசிய அமைப்பு : NIESBD**
**National Institute for Entrepreneurship and small Business Development**

இந்த அமைப்பு இந்தியத் தலைநகர் டில்லியிலிருந்து இயங்குகின்றது. இது தொழில் முனைவோர் வளர்ச்சிக்கான பல திட்டங்களைத் தருகின்றது. பெண்கள் மற்றும் பிற தொழில் முனைவோருக்கான செயல் திட்டங்களையும் தருகின்றது

**12. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி : IDBI**
**Industrial Development Bank of India**

பெண்தொழில் முனைவோருக்கு தொழிற்சாலைத் திட்டங்களில் ஈடுபாடு உருவாக்கப்பட வேண்டுமென்பதற்காக இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. ஆண்டுக்கு 9 விழுக்காடு வட்டிவிகிதத்தில் தேவையான பணஉதவி செய்ய இது ஏற்பாடு செய்கின்றது. இது முழுமையான கடன்உதவி தரும் அமைப்பாக உள்ளது. தன்னிச்சையான மறுபொருளுதவித் திட்டத்தை இந்தவங்கி மேற்கொள்ளுகின்றது. மேலும் பயிற்சி மற்றும் ஆலோசனைப் பணிகளையும் மேற்கொள்ளுகின்றது. இத்திட்டம் ரூ 10,000 வரையுள்ள திட்டங்களை மேற்கொள்ளும் பெண்தொழில் முனைவோருக்கு உதவுகின்றது. இதனால் பெண்கள் தொழில் துறையில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளது.

**13. வணிக வங்கிகள் (Commercial Banks)**

வணிக வங்கிகளும் பெண்தொழில் முனைவோருக்கான பணஉதவிகளையும், கடனுதவிகளையும் செய்து தருகின்றன. தொழில் நுட்ப ஆலோசனைகளுடன், சந்தைகள் பற்றிய செய்திகளையும் அவை எடுத்தியம்புகின்றன. மாறுபட்ட வட்டிவிகித அமைப்புமுறை மூலம் கடனுதவித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது. இவ்வங்கிகள் நலிவுற்ற நிலையிலுள்ள, தேக்கம் மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள பெண் தொழில் முனைவோருக்கும் உதவுகின்றன.

**பெண் தொழில் முனைவோருக்கான அமைப்புகள்**

பெண்கள் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் பெண்தொழில்

முனைவோர்களை ஊக்குவிக்கக்கூடிய வகையில் பலதரப்பட்ட அமைப்புகள் இன்று இந்தியாவில் இயங்கி வருகின்றன. அவை நகர்ப்புற மற்றும் கிராமியப் பகுதிகளில் பணியாற்றுகின்றன. அவை கீழ்காணும் நோக்கங்களுக்காகச் செயல்படுகின்றன.

1. தொழில் முனைவோர் முன்னேற்றத் திட்டங்களை உருவாக்குதல்.
2. பெண் தொழில் முனைவோருக்கான அடித்தளம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தல்
3. மேலாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவளித்தல்.
4. நிதி உதவி, விதிவிலக்களித்தல், ஈட்டுத்தொகை பெற்றுத்தருதல் போன்ற பணிகளை ஆற்றுதல்
5. குறிப்பிட்ட பிரிவினரிடம் தொழில் முனைவோர்களின் இடர்ப்பாடுகளை எடுத்தியம்பி அவற்றிற்கு நிவாரணம் காணவகை செய்தல்.

பன்னாட்டளவில் இத்தகைய அமைப்புகள் இரண்டு உள்ளன. அவை கீழ்காண்பனவாகும்.

1. உலகியல் தொடர்புடைய நாடுகளின் பெண்கள் அமைப்பு (ACWW: Associated Country Women of the World)

இந்த அமைப்பில் சுமார் 40 மில்லியன் பெண் தொழில் முனைவோர்கள் உள்ளனர்.

2. பெண் தொழில் முனைவோருக்கான உலக அமைப்பு(WAWE: World Association of Women Enterpreneurs)

## மாநில அமைப்புகள்

இந்திய மாநிலங்கள் பலவற்றில் பலதரப்பட்ட தொழில் முனைவோர் அமைப்புகள் செயல்படுகின்றன. அவையும் பெண்கள் முன்னேற்றத்திற்கோர் அடித்தளமாக அமைகின்றன. ஏற்கனவே நாம் முன்னரே கண்டுள்ளதைப்போல் அகமதாபாத்தில் செயல்படும் சுயபணியில் ஈடுபட்டுள்ள பெண்கள் அமைப்பு (Self Employed Women's Association: SEWA) என்பதும் முக்கியமானதாகும். சமுதாயத்தில் பின்தங்கிய பொருளாதார நிலையில் உள்ள பெண்கள் எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்பட்டு தமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளுகின்றனரென்பதற்கு அது ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. அந்த அமைப்பு கீழ்க்காணும் பணிகளை ஆற்றுகின்றது.

1. தன்னுடைய உறுப்பினர்களுக்கு பணத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்பதையும் வாணிப மேலாண்மையை எவ்வாறு கொண்டு செலுத்த வேண்டுமென்பதையும் கற்றுத்தருகின்றது.

2. தமது உறுப்பினர்களுக்கு சேமிப்பு மற்றும் சேகரிக்கும் பழக்கம் பற்றிய செய்திகளை ஊக்குவிக்கின்றது.



3. தனது அமைப்பில் செயல்படக் கூடியவர்கள் உருவாக்கிய பொருட்களை எவ்வாறு விற்பனை செய்ய வேண்டுமென்பதையும், சந்தை முறைகளையும் அறிவித்து வழிகாட்டுகின்றது.

4. குறைவான விலையில் தேவையான மூலப்பொருட்களைத் தன்னுடைய உறுப்பினர்களுக்குத் தருகின்றது.

5. உற்பத்தியில் பொருட்களைப் பாதுகாக்கவும், உணவுப் பொருட்களைத் தரப்படுத்தவும் தேவையான தொழில் நுட்ப உதவிகளைத் தருகின்றது.

இவ்வாறு மாநில அளவில் பெண்கள் நடத்தும் தொழில் முனைவோருக்குப் பல அமைப்புகள் உதவுகின்றன. இந்நிலையில் இந்தியாவில் பெண் தொழில் முனைவோரின் முன்னேற்றம், வளர்ச்சி, அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஆகியவற்றையும் தொடர்ந்து தெரிந்துகொள்ள வேண்டும். அதற்குமுன் ஏற்கனவே நாம் கண்டுள்ள இளம் தொழில் முனைவோர் கூட்டமைப்பின் பெண் தொழில் முனைவோர் அமைப்பு பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும். பெண்கள் அமைப்பும் 1935லேயே உருவாக்கப்பட்டது. அது கீழ்க்காணும் பணிகளைச் செய்தது.

1. தொழிலுக்குத் தேவையான பொருளாதாரம் மற்றும் மூலப்பொருட்களை எளிதில் பெற வகை செய்தல்.
2. உற்பத்தி செய்த பொருட்களுக்கான சந்தைகளைப் பெறல்.
3. எந்தெந்தத் தொழில்களில் முதலீடு செய்யலாம் என்பதை உணர்த்துதல்.
4. வாணிபக் கண்காட்சிகள், வர்த்தக அமைப்புகள் ஆகியவற்றில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
5. மேலாண்மை அமைப்பையும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க வகை செய்தல்.

இவ்வாறு மாநில அளவில் பலதரப்பட்ட பெண் தொழில் முனைவோர் அமைப்புகள் பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான வழிகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

## பெண்தொழில் முனைவோர்களின் வளர்ச்சி

வர்த்தகம் மற்றும் தொழில் சார்ந்த குடும்பங்களிலிருந்து வரக்கூடிய பெண்கள் தமது வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெற இயலும். மேலும் சிறிய அளவினதான தொழில் அமைப்புகளில் மேலாளர்களாகச் செயல்படும் பெண்கள், தம்முடைய பொறுமை, மென்மைத்தன்மை, அழகுணர்வு நீதிப்பண்பு போன்றவற்றின் மூலம் தனிப்பட்ட ஆளுமைப் பண்புடையவர்களாக மலர்கின்றனர். திருமணமான 30 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள பெண்கள் தொழில் முனைவர்களாகச் செயல்படத் தகுதியுள்ளவர்களாவர். வேலைகளில் ஈடுபட்டுள்ள பெண் பணியாளர்களுள்

பத்துப்பேருக்கு எட்டுபேர் குடும்ப நோக்கு காரணமாக பணிகளை விட்டுவிடுகின்றனர் அல்லது பணியை ஏற்க மறுத்து விடுகின்றனர். மேலும் ஆண்களைவிட பெண் தொழில் முனைவோர்கள் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர். வாணிபத்தில் தாம் பெறும் அனுபவங்கள் வாயிலாக பெண்தொழில் முனைவோர் பொருள் நோக்குடையவர்களாயுள்ளனர். எனவே பெண் தொழில் முனைவோர்களுடைய வளர்ச்சி வியக்கதக்கதாயும், போற்றதக்கதாயும் உள்ளது.

## பெண்தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்

தமக்கு இருக்கக்கூடிய சமூக, மனவியல், உடலியல் தடைகளைத் தவிர பெண் தொழில்முனைவோர் பலதரப்பட்ட சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியவர்களாயுள்ளனர். அதனால் அவை பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். அவை கீழ்க்கண்டனவாகும்.

### 1. தேவையான பணவசதியின்மை

அ. நிரந்தர, நடைமுறை முதலீடு இன்மையால் பெண்தொழில் முனைவோர் சிறப்பாகச் செயல்பட முடிவதில்லை. ஆ. தேவையான அளவு பாதுகாப்பும் உத்தரவாதமும் தரமுடியாமை காரணமாக அவர்களுக்குத் தேவையான மூலதனத்தைக் கடனாகப் பெற இயலவில்லை. இ. மேலும் அவர்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் தரும் கடன்கள் அவர்களுடைய சேமிப்புகளைச் சார்ந்தே பெண்கள் வாழுகின்றனர். ஈ. வங்கிகள் மற்றும் பிறதொழில் அமைப்புகள் பெண் தொழில் முனைவோருக்குப் பொருளுதவி செய்வதில் எதிர்மறைக் கோட்பாட்டினைப் பின்பற்றுவதுடன் தயக்கமும் காட்டுகின்றனர்.

### 2. தேவையான அளவு சந்தையிலும் உதவியின்மை

பெண்தொழில் முனைவோர் தாம் உற்பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்யப் பெருமளவு கஷ்டப்படுகின்றனர். தரகர்கள் என்னும் இடையீட்டாளர்களைச் சேர்ந்தே அவர்கள் செயல்படுகின்றனர். அதனால் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இலாபம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின்றது.

### 3. வேண்டுமளவு மூலப் பொருட்களின்மை

பெண்தொழில் முனைவோர் தமக்குத் தேவையான அளவு மூலப்பொருட்களைப் பெறுவதிலும் துன்புறுகின்றனர். 1971–ல் கூடைகள் செய்யும் தொழிலிலுல் ஈடுபட்ட புகுத்த ஏராளமான பெண் அமைப்புகள் மூலப்பொருட்கள் இன்மையால் நலிவுறத் தொடங்கினார்கள்.

### 4. வலிமையான போட்டிகள்

பெண்களால் நடத்தப்படும் பல அமைப்புகளின் அமைப்பு முறையானது குறைபாடுடையதாகவே உள்ளது. அவர்கள் சமதொழில் குறிப்பாக ஏற்படக்கூடிய கடும் போட்டிகளை சமாளிக்க இயலுவதில்லை. குறிப்பாக ஆண்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகளின் போட்டியை அவர்களால் சந்திக்க முடிவதில்லை.



### 5. உற்பத்தி செலவின் அதிகரிப்பு

பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய செலவு அதிகமாக இருப்பதும் பெண் தொழில் முனைவோருக்குச் சிக்கலைத் தருகின்றது. அரசுதரும் உதவிகள் இச்சிக்கலைத் தவிர்க்க ஓரளவுக்கு உதவுகின்றன. இதனால் உற்பத்தியைப் பெருக்குவதும், தரமான பொருட்களை உற்பத்தி செய்வதும் இயலாததாகின்றது.

### 6. நடமாட்டச் சிக்கல்

பெண்கள் அதிக அளவில் ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு பயணம் செய்தல் என்பது கடினமானதொன்றாகும். எனவே தமது தொழில்சார்ந்த பணிகளுக்காக பல இடங்களுக்கும் செல்லுதல் தடைபடுகின்றது. மேலும் செல்லுமிடங்களில் தங்குதல் என்பதும் கடினமானதாகும். அத்துடன் பல இடங்களுக்கும் அவர்கள் செல்லும்போது தனிப்பட்ட வர்த்தகர்களின் எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டியவர் களாகியுள்ளனர்.

### 7. குடும்ப பொறுப்புகள்

இந்தியாவில் பெண்கள் அதிக அளவில் பல்தரப்பட்ட பொறுப்புக்களைச் சுமக்க வேண்டியவர்களாயுள்ளனர். குடும்ப பாரத்தைச் சுமக்க பெருமளவு சக்தியைச் செலவிடும் பெண்கள் தொழிலகத்தில் செலவிட சக்தியற்றவர்களாகவே உள்ளனர். தற்சமயம் பால்வாடிகள், குழந்தைகள் காப்பகங்கள் செயல்படுவதால் இத்தகைய குறைகள் ஓரளவுக்கு களையப்படுகின்றன.

### 8. சமூக நடவடிக்கைகள்

பெண்தொழில் முனைவோருக்கு சமூகப்பண்புகளும் நடவடிக்கைகளும் தடைக்கற்களாக உள்ளன. பல்தரப்பட்ட எதிர்ப்புகளுக்கு ஈடுபட்டே அவர்கள் வாழவேண்டியவர்களாயுள்ளனர். பெரியவர்கள், பெற்றோர், சமூகக்கட்டுப்பாடு ஆகியவற்றுக்கு உட்பட்டு பெண்கள் செயல்பட வேண்டியவர்களாக உள்ளனர். கிராமியப் பெண்கள் ஆற்றலுடையவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு படிப்பறிவும், பயிற்சியும் தரப்படவில்லை. திருமணமான பெண்கள் தாம் கற்ற கல்வியினைப் பயன்படுத்த முடியாமல் கட்டுப்படுத்தப்படுகின்றனர். ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் உரிமைகள் கட்டுப்படுத்தப்படுவதும் ஒரு குறையாக அமைகின்றது.

### 9. துணிவுடன் முயற்சி எடுப்பதில்லை

தன்னம்பிக்கை இன்மை காரணமாக பெண் தொழில் முனைவோர் துணிவுடன் உடனடி முயற்சிகளில் ஈடுபடுவதில்லை. பொருள்களைத் தெளிவுசெய்தல், முன்னேற்றப்பயிற்சிகளில் பங்கேற்றல் போன்றவற்றிலும்

இச்சிக்கல் காணப்படுகின்றது. தேவையான முறையமைவுகளைக் கொள்ளாமை, காலம் தாழ்ந்து செயல்படல் போன்றவையும் உள்ளன.

### 10. கல்வி மற்றும் அனுபவமின்மை

கிராமியப் பெண்களிடையே கல்வியறிவு மிகக் குறைவாகவே உள்ளது. அவர்களால் தொழில்நுட்ப மேம்பாடு, சந்தையிடல் போன்றவற்றைத் தெரிந்து கொள்ள இயலுவதில்லை. தொழில் பற்றிய செய்திகளையும் அவர்கள் முழுமையாக அறிந்திருப்பதில்லை.

### 11. சாதனையில் ஆர்வமின்மை

தமது பெற்றோர், சகோதரர், கணவர் ஆகியோர் மீது பாசமும், பற்றுதலும் கொண்டுள்ள சுதந்திரமாகச் செயல்படும் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அதனால் அவர்கள் திறமைமிக்க தொழில் முனைவோராகச் செயல்பட முடிவதில்லை.

மேலும் கூறப்பட்டுள்ளவாறு இந்தியாவில் பெண்தொழில் முனைவோர் பலதரப்பட்ட சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அதனால் அத்தகைய சிக்கல்களைத் தீர்க்கும் வழிகளைத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். அவற்றையும் தொடர்ந்து காணுதல் வேண்டும்.

## குறைகளைக் களையும் வழிகள்:

### 1. மூலப் பொருட்கள்

பெண்தொழில் முனைவோருக்குத் தேவையான மூலப்பொருட்கள், முன்னுரிமை அடிப்படையில் தரப்படவேண்டும். அதற்குத் தேவையான பணஉதவியும் தரப்படவேண்டும். குறைந்த செலவில் பொருட்களை உற்பத்தி செய்ய வாய்ப்பளிக்கப்பட்டால் அவர்களால் அதிக அளவில் இலாபம் பெற இயலும்.

### 2. கல்வியறிவூட்டல்

எதிர்மறை சமூகப் பண்புகள் தவிர்க்கப்பட்டு பெண்கள் மிக்க மதிப்பினைப் பெறவேண்டும். தாயார், மாமியார் மற்றும் குடும்பத்திலுள்ள பிற பெண்களும் கல்விபெற்றவர்களாயிருக்க வேண்டும். அதனால் பெண் தொழில் முனைவோர் அதிக அளவில் பயன்பெறுவர். பெண்தொழில் முனைவோரும் நேர்முகப் பண்புகளுக்கு உட்பட்ட நிலையில் நோக்கப்பட வேண்டும்.

### 3. பயிற்சிகள்

தொழில் முனைவோரின் வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல பயிற்சிகள் அவசியமாகின்றன. பெண் தொழில் முனைவோருக்கும் இது பொருந்தக்கூடியதாகும். எனவே பயிற்சி முகாம்களுக்கு செல்லக்கூடிய பெண்தொழில் முனைவோர் எவ்வகையிலும் தடுக்கப்படக்கூடாது. மேலும் நடமாடும் பயிற்சியகங்கள் மூலம் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படலாம்.



### 4. பண உதவி

பெண்தொழில் முனைவோருக்குத் தேவையான பொருளாதார உதவியை எளிதில் பெறச் செய்ய வேண்டும். அவர்களுடைய பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அமைப்புகளில் பெண்களையே அலுவலர்களாகவும், அதிகாரிகளாகவும், கணக்கர்களாகவும் பணியாற்றச் செய்யவேண்டும். மேலும் அந்தந்த ஊர்களிலேயே பணஉதவி பெறப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படவேண்டும். அத்துடன் வட்டிவிகிதம் குறைவானதாக, கடனை எளிதில் திரும்பச் செலுத்தக்கூடியதாக அமைப்புகள் காணப்படவேண்டும்.

### 5. கூட்டுறவு விற்பனை

பெண்தொழில் முனைவோருக்குத் துணை நிற்கக் கூடிய வகையில் அவர்களாலேயே கூட்டுறவு அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும். இதனால் இடைத்தரகர் முறைதவிர்க்கப்படும். மைய, மாநில அரசுகளும் இத்தகைய முயற்சிகளில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

### 6. கூட்டு தொழில் அமைப்புகள்

பெண்களுக்கு கூட்டுத்தொழில் அமைப்புகள் பெரிதும் பயன்தரத்தக்கதாய் அமையும். அதனால் சுயவேலைவாய்ப்பு பெருகும். எலாபட் என்பவரால் அகமதாபாத்தில் உருவாக்கப்பட்ட சுயபணியில் ஈடுபடும் பெண்கள் அமைப்பு, டாக்டர் வி. குரியன் என்பவரால் குஜராத்தில் உருவாக்கப்பட்ட 'ஆனந்த்' என்னும் கூட்டுறவு பால் சங்கம் போன்றவற்றை இதற்குச் சான்றுகளாகக் கூறலாம்.

மேலே கண்ட வழிகளைப் பின்பற்றுதல் வாயிலாக பெண் தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குத் தீர்வு காணலாம். இந்நிலையில் இந்தியாவில் பெண் தொழில் முனைவோரைப் பற்றிய புள்ளி விபரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

## இந்தியாவில் பெண்கள் தொழில்முனைவோர் இயக்கம்

இந்தியாவில் பெண்கள் தொழில் முனைவர்களாகச் செயல்படுதல் என்பது புதிதாக எழுந்த ஒரு இயக்கமாகும். இந்தியாவில் சுய தொழிலில் ஈடுபட்டுள்ள மொத்த பிரிவினருள் பெண்கள் 11.2 விழுக்காடே உள்ளனர். அவர்களுள்ளும் பெரும்பான்மையினர் விவசாயம், குடிசைத் தொழில்கள், கைத்தறிநெசவு, கைவினைப்பொருட்களைச் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தியாவில் அரசாங்கத்துடன் அரசு சாரா அமைப்புகளும் பெண் தொழில் முனைவோர் அமைப்புகளுக்கு ஊக்கமளிக்கின்றனர். ஒருங்கிணைந்த பெண்கள் வளர்ச்சிக்குச் செயல்படுவதில் அவர்கள் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். 1991ல் வெளியிடப்பட்ட புதிய தொழில் கொள்கையானது பெண்களின் ஆளுமைப் பண்புகளை வளர்க்கக் கூடியவகையில் புதிய பயிற்சிகள் தரப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியது. கீழ்க்காணும் அட்டவணை மூலம் இந்தியாவில் பெண் தொழில் முனைவோரின் வளர்ச்சியைக் காணலாம்.

| ஆண்டு | பெண்தொழில் முனைவோர் எண்ணிக்கை (இலட்சக்கணக்கில்) | மொத்ததொழில் முனைவோர் (இலட்சக்கணக்கில்) | விழுக்காடு % |
|---|---|---|---|
| 1981–82 | 1.5 | 17.0 | 5.2 |
| 1991–92 | 1.859 | 20.519 | 9.06 |
| 1995–96 | 2.957 | 26.4 | 11.2 |

மேலே காணப்படும் அட்டவணை மூலம் இந்தியாவில் காலந்தோறும் பெண்தொழில் முனைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருதலைக் காணலாம். அதன்மூலம் பெண்களின் மேம்பாடு, வளர்ச்சி ஆகியவற்றுடன் நாம் நாட்டின் பொருளியல் வளர்ச்சியில் பெண்களின் பங்கினையும் நாம் நன்குணரலாம். இவையனைத்துமே இந்திய விடுதலைக்குப்பின் எழுந்த மாற்றங்கள் என்பதை நாம்நினைவிற் கொள்ளவேண்டும். தொழில் முனைவோர்களால் நாட்டின் மூலதனப் பெருக்கம், தொழில் மற்றும் உற்பத்திப் பெருக்கம் ஆகியன ஏற்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.



# 9. இந்தியாவில் பெண்களுக்கான அரசுத் திட்டங்கள்

முன்னுரை - காரணங்கள் - மைய அரசுத் திட்டங்கள் - மாநில அரசுத் திட்டங்கள் - 1947 தமிழக அரசின் பெண்ணிய மேம்பாட்டிற்கான திட்டங்கள் - மகளிர் சுய உதவிக்குழுக்கள்

வளர்ந்து வரும் ஒரு சமுதாயத்தில் பலநிலைகளிலும் பெண்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். பாலியல் பாகுபாடுகளைத் தவிர்த்து ஆண்களும் பெண்களும் சமத்துவநிலையை எய்த பிற்பட்ட நிலையிலுள்ள பெண்ணினத்தை முன்னேறச் செய்வது முக்கியமானதாகும். சமூகம், தொழில்நுட்பம், மனித உரிமைகள், பாலின வேறுபாடுகள், பெண்கள் பற்றிய சமூக மனப்பான்மை போன்றவற்றின் அடிப்படையில் பின்தங்கிய நிலையில் உள்ள பெண்களை முன்னேறச் செய்வது முன்னேறிவரும் சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு கடமையாகும். இது அனைத்து நாடுகளைப்போல் இந்தியாவுக்கும் பொருந்தக்கூடியதாகும். பெண்களின் சக்தி, ஆற்றல் ஆகியவற்றைப் பெருக்கி பெண்களை சமூக மேம்பாட்டிற்கான பல பணிகளிலும் பங்கேற்கச் செய்வது ஒரு நாட்டின் அரசின் கடமையாகவும் இன்று உள்ளது. மாறுபட்ட பல கருத்துக்கோவைகள், அணுமுறைகள், வழிவகைகள், செயல்திட்டங்கள் ஆகியவற்றை இந்தியா போன்ற பெரிய நாடுகளில் மைய, மாநில அரசுகளால் மட்டுமே மேற்கொள்ள முடியும். அப்போதுதான் ஆண்,பெண் என்ற பாகுப்பாடுகள் களையப்பட்டு சீரான, திட்டவட்டமான பொருளாதார வளர்ச்சியை எட்டமுடியும். எனவே ஒழுங்குபடுத்தப்பட்ட (Organised) மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத (Unorganised) தொழில் சார்ந்த துறைகளில் பெண்களின் நிலையைத் தெரிந்து கொள்ளல் அவசியம். அதன்மூலம் அரசுகள் பெண்களுக்காக உருவாக்கியுள்ள திட்டங்களைத் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டும்.

1988 முதல் 2000 வரையிலான இந்திய நடுவணரசின் தேசிய தொலைநோக்குத் திட்டம் பெண்கள் மேற்கொண்டுள்ள செயல்களைப் பற்றிய செய்திகளைத் தந்துள்ளது. அதனைத் தெரிந்து கொள்வதன் மூலம் பணிபுரியும் பெண்கள் பற்றி அறிந்துகொள்ளவியலும் 1. இந்தியாவில் 14 விழுக்காடு பெண்கள்மட்டுமே முழுநேரப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். 2. 90 விழுக்காடு பெண்கள் மேலே கூறப்பட்ட ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் செயல்படுகின்றனர். 3. அவர்களுள்ளும் 83 விழுக்காடு பெண்கள் உடலுழைப்பு சார்ந்த விவசாயம் மற்றும் கட்டிடம் கட்டும் பணிகளிலும் நிரந்தரமற்ற தொழிலாளர்களாகப் பணியாற்றுகின்றனர். 4. தாம் பெற்ற கல்வியறிவு, அரசு விதித்திருக்கும் விதிமுறைகள் ஆகியவற்றிற்கேற்ப 10 விழுக்காடு பெண்கள் மட்டுமே ஒழுங்கமைவுடன் கூடிய துறைகளில் பணியாற்றுகின்றனர். இந்நிலையில் ஒழுங்குபடுத்தப்படாத துறைகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட துறைகள் எனக்கொள்ளப்படுபவை எவை என்பதையும்

தெரிந்து கொள்ளல் வேண்டும் அப்போதுதான் அரசு மேற்கொண்ட திட்டங்கள் பற்றிய தன்மைகளை நன்குணரலாம்.

ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் பெண்கள் விவசாயக் கூலிகளாக, கட்டிடத் தொழிலாளர்களாக, பீடி சுற்றுதல், தீக்குச்சி அடுக்குதல், தீப்பெட்டி செய்தல், கால்நடைகளைக் கவனித்துக் கொள்ளுபவர்கள், தையல் பணி, துப்புரவுத் தொழில், கல் உடைத்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். ஒழுங்குபடுத்தப்பட்ட துறைகளாக விளங்குபவை அரசுத் துறைகள், வர்த்தகம், வாணிபம், தொழில்நுட்பம், தகவல் மற்றும் செய்தி தொடர்பு ஆகியன அடங்கும். இவற்றிலும் பெண்கள் ஊதியம் பெறும் பணியாளர்களாகவே செயல்படுகின்றனரேயொழிய தொழில் முனைவோராகச் செயல்படுவதில்லை. பெண்களில் மிகக் குறைந்த அளவினரே தொழில் முனைவோராகச் செயல்படுவதில்லை. பெண்களில் மிகக் குறைந்த அளவினரே சுயதொழில் செய்பவர்களாக உள்ளனர். இவற்றை மனதில் கொண்டும், பெண்கள் தொழில் காட்டும் கீழ்க்காணும் ஈடுபாடு காரணமாகவும் அரசு பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகின்றது. எனவே பெண்கள் பணிக்கான காரணங்களையும் அரசுத் திட்டங்களையும் தொடர்ந்து காணவேண்டும்.

### காரணங்கள்

1. அரசாங்கமே குறிப்பிட்ட துறைகளில், ஆண், பெண் என்ற பாலியல் வேறுபாடு இல்லாமல், இருசாராரையும் பணியில் அமர்த்த வகை செய்துள்ளது. அரசியலமைப்புச் சட்டம் அதற்குத் துணை செய்கின்றது. 2. பெண்கல்வி, தொழிற்கல்வி மேலாண்மைக் கல்வி, அறிவியல் கல்வி போன்றவற்றை பெண்களுக்கு வழங்குதல் மூலமாக ஆண்களுக்குச் சமமாகப் பல பணிகளிலும் ஈடுபட வழிவகுத்தல். 3. நடுத்தரப் பொருளாதார வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் பணிக்குச் செல்வதற்குத் தடையாக இருந்த பழமைப்பண்புகளைத் தகர்த்து அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கு பணிகளில் ஈடுபடச் செய்தல். 4. பால்பாகுபாடின்றி அனைத்து பணிகளிலும் தகுதி அடிப்படையில் பணியாற்ற வாய்ப்பளித்தல் 5. பெண்களுக்கான துறைகள் எனப்பட்ட மருத்துவம், கல்விப்பணி தவிர பிறபணிகளிலும் அவர்களுக்குப் பணிபுரிய உதவுதல். 6. அத்துடன் பழமைப்பற்று, கண்மூடித்தனமான பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் களைந்து பெண்களின் திறமைக்கேற்ப பல பணிகளிலும் ஈடுபட அவர்களுக்கு வழிவகுத்துத் தரல்.

மேலே கூறப்பட்ட காரணிகளைப் பின்னணிகளாகவும் நோக்கங்களாகவும் கொண்டு இந்தியாவில் செயல்பட்டுவரும் பெண்களுக்கான அரசுத்திட்டங்களை நாம் உணர்தல் அவசியம். இந்திய விடுதலைக்கு முன்னர் குறிப்பிட்ட பெண்கள் இந்திய விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டிருந்தனர். மிகக்குறைந்த பிரிவினரே கல்விபெற்று மருத்துவர், ஆசிரியர் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் 1947ல் இந்தியா விடுதலை பெற்றபின் திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி மூலம் பொது நல அரசினைப் பெறவேண்டியது இந்திய அரசின் முழுபொறுப்பாயிற்று. பாலினப்பாகுபாடு இல்லாமல் ஆண், பெண்



ஆகிய இருபாலரின் செயல்பாடுகள் மற்றும் உதவிகள் வாயிலாக நாட்டின் முன்னேற்றத்தை அடைவதும் இந்திய அரசின் கடமைகளுள் ஒன்றாயிற்று. இந்தியாவின் பொருளாதாரம் அதன் கிராமங்களில் கல்வியறிவின்மை, பழமைப்பற்று, மூடப்பழக்கவழக்கங்கள் நிரம்பிக்கிடந்தன. அவற்றிற்கு பெண்களும் முழுமையாக அடிமைப்பட்டிருந்தரெனக் கூறினால் மிகையாகாது. எனவே கிராமிய மேம்பாட்டுத்திட்டங்களுடன், கிராமப்புறப் பெண்களின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியது இந்திய அரசின் முக்கியப் பணியாயிற்று. அதன்மூலம் கிராமப்புறங்களில் வாழும் 70 விழுக்காடு மக்களிடையே மாற்றத்தைத் தோற்றுவிக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே திட்டங்களைத் தோற்றுவிப்பதற்குமுன் அவற்றின் தன்மைகளை புரிந்து கொள்ளல் வேண்டும்.

1. கிராமப்புற முன்னேற்றங்களால் மட்டுமே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கலாம். 2. கிராமங்கள் முன்னேறினால்தான் மக்களின் உணவு மற்றும் பிற பல தேவைகளை நிறைவு செய்யலாம். 3. கிராமியப் பெண்கள் சந்தித்த இன்னல்கள் மற்றும் இடையூறுகளிலிருந்து அவர்கள் காக்கப்பட வேண்டும். 4. கிராமப்புற பெண்கள் காலத்தை வீணாகக் கழிப்பதைத் தவிர்ப்பதற்கு அவர்களைப் பயனுள்ள வருவாயுள்ள பிற தொழில்களில் ஈடுபடச் செய்து பலநோக்கு வெற்றிகளை எட்டவேண்டும். 5. மேலும் திட்டங்கள் எளிதில் நடைமுறைபடுத்தக்கூடியனவாய் அதே நேரத்தில் பெருமளவு நற்பலன்களைத் தருவனவாய் அமைதல் வேண்டும். இத்தகைய தன்மைகளுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைக் காணலாம்.

## மைய அரசுத் திட்டங்கள்

### 1. சமுதாய வளர்ச்சித் திட்டம்

சுதந்திர இந்தியாவில் கொண்டுவரப்பட்ட பெண்களுக்கான திட்டங்கள் பெரும்பாலும் கிராமியப் பெண்களுக்கானவையாகவே இருந்தன. கிராமங்கள் வளர்ந்தால், காந்தியடிகள் கண்ட கிராம ராஜ்ஜியம் மலர்ந்தால் இந்தியா எளிதில் பொருளியல் முன்னேற்றத்தை எட்டும். அதன் விளைவாக 1952ல் சமுதாய வளர்ச்சிதிட்டம் (Community Development Project) கொண்டுவரப்பட்டது. கிராம முன்னேற்றம் பற்றிய சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் கிராமப்புற பெண்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. கிராம சேவிகாக்கள், முக்கிய சேவிகாக்கள், பாலசேவிகாக்கள் போன்றோர் கிராமப்புற வளர்ச்சிக்காக கிராமியப் பெண்களுடன் தொடர்பு கொண்டு வளர்ச்சிக்கு வகை செய்யவேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் பஞ்சாயத்து ஒன்றியங்களின் பணியாளர்களாகச் செயல்பட்டனர். ஒவ்வொரு வீட்டையும் முன்னேறச் செய்து நாட்டின் முன்னேற்றத்திற்கான படிநிலை அமைப்பாகச் செய்யும் நோக்குடன் இத்திட்டம் செயலாக்கப்பட்டது. பெண்ணின் திறமை மற்றும் பொருளியல் மேம்பாட்டுத் தன்மைக்காக இத்திட்டம் செயலாக்கப்பட்டது. பெண்ணின் திறமை மற்றும் பொருளியல் மேம்பாட்டுத் தன்மைக்காக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பெண்களிடம் சுயமுயற்சி, தன்னம்பிக்கை ஆகியவற்றை ஊட்டவேண்டுமென்பதற்காகவும் இத்திட்டம் செயல்பட்டது போர்டுபவுண்டேசன் என்ற நிறுவனத்திடமிருந்து இது நிதி உதவியைப் பெற்றது.

## 2. மஹிளா மண்டல் திட்டம்

இத்திட்டமானது ஒரு ஒருங்கிணைப்புத் திட்டம். இந்தியாவில் செயல்பட்ட அனைத்து சமுதாயத் திட்டங்களையும் இணைத்துச் செயல்படச் செய்யும் அமைப்பாக இது காணப்பட்டது. ஒவ்வொரு கிராமமும் இத்திட்டத்தில் பங்கேற்குமாறு வகை செய்யப்பட்டது. இத்திட்டத்தில் இருப்பவர்களில் இரண்டுபேராவது தாழ்த்தப்பட்ட பழங்குடி இனத்தைச் சார்ந்த பெண்களாக இருக்கவேண்டுமெனப்பட்டது. இத்திட்டம் மூலம் கிராமப்புறப் பெண்களிடமுள்ள திறமைகளைக் கண்டறிந்து அத்திறமைக்கு ஏற்றவாறு அவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு அதன் மூலம் தொழில்களில் ஈடுபட வாய்ப்புகள் தரப்பட்டன. இத்திட்டமானது சேவை மனப்பான்மை கொண்ட மக்களின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாக அருந்தொண்டாற்ற பல தொண்டு நிறுவனங்கள் முன்வந்தன. இத்திட்டம் மூலம் சேவை செய்ய விரும்பும் பெண்கள் முதலில் ஊட்டச் சத்து மையத்திலும் பிரசவ மையங்களிலும் பணியாளர்களாகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டார்கள். இத்திட்ட மையங்களில் கிராம சேவிகா என்ற பெண் பணியாளர் செயல்பட்டார். அவர்களைத் தவிர முக்கிய சேவிகாக்கள் என்ற கிராமக் கைத்தொழில் பயிற்றுவிப்பாளர்களும் இருந்தார்கள். கிராமப்புற வீடுகளில் வாழும் குடும்பத்தினரின் நலனுக்காகச் செயல்பட்ட இத்திட்டம் குடும்பங்களின் வருவாயைப் பெருக்கி பொருளாதார முன்னேற்றத்தை முக்கியமானதாகக் கொண்டிருந்தது. சிறுதொழில்களான குறைவான மூலதனத்துடன் கூடிய, அதேநேரம் நிரந்தர வருவாயைத் தரக்கூடிய கோழிவளர்ப்பு, கால்நடை வளர்த்து பராமரித்தல், பாய் மற்றும் கூடை பின்னுதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

1994–95 ஆம் ஆண்டுகளில் மஹிளா மண்டல்களின் நிதிநிலையைப் பெருக்குவதற்கான வழிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசு உதவி, மானியம் ஆகியவற்றுடன் நிதி நிறுவனங்கள் பலவும் உதவிடுமாறு வேண்டப்பட்டன. சுயதொழில் வளர்ச்சி நோக்கில் தொழில்களின் எண்ணிக்கையும் பெருக்கப்பட்டது. நிதிநிலைப் பெருக்கம் காரணமாக, சோப்பு செய்தல், தோல் பொருட்கள் தயாரித்தல், பின்னல் வேலைகளில் ஆடைகள் கைப்பொருட்கள் தயாரித்தல் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. இத்திட்டம் எதிர்பார்த்த அளவு பெண்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் உதவி செய்தது.

## 3. சத்துணவு நல்கும் திட்டம்

மஹிளா மண்டல் திட்டத்தின் மூலம் குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கு சத்துணவு அளிக்கப்பட வகை செய்யப்பட்டது. இத்திட்டம் வாயிலாக தரமான சத்துணவைத் தயாரிக்கும் முறையில் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். ஊட்டச் சத்துள்ள, மலிவான விலையினதான காய்கறிகளை விளைவிக்கும் செயல்முறைகள் விளக்கிக் கூறப்பட்டன. சத்துணவைத் தயாரிப்பதுடன் அவற்றைப் பாதுகாக்கும் முறைகளும் பெண்களுக்கு விளக்கப்பட்டன. இதற்கான பண உதவியானது பன்னாட்டு குழந்தைகள் நல அவரசநிதி



(UNICEF) மூலம் பெறபட்டது. இத்திட்டம் மூலம் இலவச காய்கறிகளும், கோழிக்குஞ்சுகளும் தரப்பட்டன. இதன் மூலம் கிராமியப் பெண்களின் உடல்நலம் காக்கப்பட்டதுடன் சுயதேவைப் பூர்த்தி என்ற நிலையினை எட்டவும் வாய்ப்பளிக்கப்பட்டது.

## 4. பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை

1967 ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டவையின் பொதுச்சபையில் பெண்களுக்கெதிரான பாலியல் மற்றும் பொருளியல் கொடுமைகளைக் களைய ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்த நோக்கங்களைச் செயல்படுத்த இந்திய அரசும் முன் வந்தது. பெண்களின் முன்னேற்றத்தை மேம்படச் செய்வதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. இந்திராகாந்தி இந்தியப் பிரதமராக இருந்தபோதும் 1971ல் சமூக நலத்துறை மற்றும் பெண்கள் மேம்பாடு என்ற கேபினட் அந்தஸ்த்திற்கு உயர்வாகப் போற்றினர். 1970–ஆம் ஆண்டிலேயே இந்திராகாந்தியால் பெண்களுக்கான தேசியக்குழு தோற்றுவிக்கப்பட்டது. பெண்கள் முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் இவ்வமைப்பில் தீட்டப்பட்ட தீர்மானங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து குழந்தைகள் மற்றும் பெண்கள் நலனுக்காக திட்டங்கள் தீட்டப்பட்டுவருகின்றன. தற்போது தேசிய பெண்கள் மேம்பாடு என்ற அமைச்சகத்தின் கேபினட் அமைச்சராக திருமதி. மீராகுமார் இணை அமைச்சராக சுப்புலட்சுமி ஜெகதீசன் தற்போது பணியாற்றுகிறார்.

## 5. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

குழந்தைகளின் உடல்நலத்தைப் பேணிப் பாதுகாத்து மேம்படச் செய்தல் குழந்தைகளின் ஆரம்ப கால அறிவு வளர்ச்சியை பெருக்க வகை செய்தல் ஆகியன இவ்வமைப்பின் நோக்கங்களாகும். இத்திட்டம் மூலம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கல், தடுப்பு ஊசிகள், போடுதல் போன்ற வழிகளில் உடல்நலம் பேணப்பட்டது. தொடர்ந்த இடைவெளிகளில் குழந்தைகளின் உடல்நலப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிக்குச் செல்வதற்கு முன்பாகவே முறைசாரா வகையில் முன்பள்ளிப் படிப்புத் தரப்பட்டது. உடல் நலத்தைப் பேணுவதற்கான சுகாதார அறிவும் ஊட்டப்பட்டது. இது ஒரு சிறப்புமிக்க ஒருங்கிணைப்புத் திட்டமாகும். இத்திட்டமானது அங்கன்வாடி என்ற பெண் பணியாளர்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும் இத்திட்டம் மூலமாக ஆறு வயது வரையுள்ள கிராமிய மற்றும் நகர்ப்புற குழந்தைகளுக்கும், கருவுற்ற தாய்மார்களுக்கும் உதவிகள் தரப்படுகின்றன.

## 6. கிராமப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் கிராமப்புறப் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது இதன் நோக்கமாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியான இத்திட்டம் மூலம் பெண்களுக்கு சுயவேலைவாய்ப்பு தரப்பட்டது. இன்று செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவித்

திட்டத்திற்கு முன்னோடியாக இது அமைந்திருந்தது. கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குழுவிற்கும் ரூ 25,000 வரை நிதியுதவி தரப்படுகின்றது. இதனால் கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சி பேணிப் பாதுகாக்கப்படுகின்றது.

**7. மஹிளா சம்ருதி யோஜனா**

இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் கிராமப் புறப் பெண்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதாகும். இத்திட்டத்தில் 15 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் செயல்பட வகை செய்யப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள தபால் நிலையம் மூலம் வருடத்திற்கு 300 ரூபாய் பணம் போட்டு சேமிக்க வேண்டும். இதில் மத்திய அரசாங்கம் 25 விழுக்காடு தொகையை சேமிப்புக்காக அவர்களுக்கு வழங்கும். சேமிப்பில் உள்ள பணத்தை 30 நாட்கள் தொடர்ச்சியாகக் எடுக்காமலிருந்தால் 12 ஊக்கத்தொகையும் வழங்கப்படும். இத்தகைய வருடந்தோறும் தொடர்ச்சியாகக் கொண்டு செல்லலாம்.

**8. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்**

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 1989ல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் பெண்களுக்கு சுயவேலை வாய்ப்பு வசதிகளைச் செய்துதர இவ்வமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.

**9. இந்திரா ஆவாஸ் சி யோஜனா**

ஒரு வீட்டிலுள்ள பெண்கள் பெயரில் வீட்டு வசதியைச் செய்து தருவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பெண்கள் மற்றவர்களின் துணையுடன் வீடுகட்ட முயற்சிப்பது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

**10. கஸ்தூரிபாய் காந்தி சிக்ஷா யோஜனா**

1997 ஆகஸ்டு 15 ஆம் நாள் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. தேசப்பிதா காந்தியடிகளின் மனைவி கஸ்தூரிபாய் காந்தியின் பெயரில் அறிமுகமாக்கப்பட்டது. இந்த திட்டம் மகளிரின் கல்வியறிவு குறைந்துள்ள மாவட்டங்களில் பெண்குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக செயல்படுகிறது இந்தத்திட்டம். இத்திட்டம் மூலம் பெண்குழந்தைகள் கல்வி மேம்பாட்டிற்காக சிறப்புப் பள்ளிகள் இத்திட்டம் மூலம் நிறுவப்பட்டன

**11. மத்திய மாநில அரசுகள் நியமித்த பெண்களுக்கான வாரியங்கள் மற்றும் கமிஷன்கள்**

(i) தேசிய பெண்கள் கமிஷன் (ஆணையம்)

(ii) இந்திய மகளிரியல் கல்விக் கழகம்

(iii) மத்திய சமூக நலவாரியம்–1953

(iv) இந்திய ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகம்

(v) தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம்



**(i) தேசிய பெண்கள் ஆணையம்**

இவ்வாணயம் மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வரும் ஓர் அமைப்பாகும். இவ்வமைப்பு பெண்ணுரிமையின் காவல் அமைப்பு எனலாம். இந்திய அரசியலமைப்பு மற்றும் இந்தியச் சட்டங்கள் இந்தியப் பெண்களுக்கு நல்கிய உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா? என்பதைக் கண்காணிக்கிறது. இதனை ஒரு முன்னோடி அமைப்பாகக் கொண்டு இந்திய மாநிலங்கள் பலவற்றிலும் பெண்ணுரிமைப் பாதுகாப்புக்கான ஆணையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தமிழகத்தில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முனைவர் வசந்திதேவி அவர்கள் தலைமையில் மாநில பெண்கள் ஆணையம் செயல்பட்டு வருகின்றது. மோகினி கிரி, கிரிஜாவியாஸ், பூர்ணிமா அத்வானி போன்றோர் இவ்வமைப்பின் தலைவர்களாகப் பணியாற்றியுள்ளனர். அவர்களுடைய முயற்சியால் பெண்கள் மேம்பாட்டுக்கான பல திட்டங்கள் உருவாக்கபட்டுச் செயலாக்கப்பட்டன.

**(ii) இந்திய மகளிரியல் கல்விக் கழகம்**

இக்கழகம் 1981ல் உருவாக்கப்பட்டது. இந்தியப் பெண்ணிய மேம்பாட்டுக்கான ஆய்வுகளை ஒருங்கிணைந்துச் செயல்படச் செய்து பயன்பட வகை செய்கின்றது. சமூக அறிவியல் வல்லுநர்கள், கல்வியாளர்கள் போன்றோரின் துணையுடன் மாநாடுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. பெண்ணிய இயக்கங்கள் அல்லது அமைப்புகளின் கூட்டங்கள் மூலமாகவும் மாறிவரும் சூழல்களுக்கேற்ப பெண்ணிய மேம்பாட்டிற்காக இக்கல்விக் கழகம் செயல்படுகின்றது. கல்விக் கழகம் என்ற அளவில் இந்தியப் பெண்களின் மேன்மைக்காக இக்கழகம் ஆற்றும் பணிகள் போற்றற்பாலனவாகும்.

**(iii) மத்திய சமூகநல வாரியம்**

1953ஆம் ஆண்டில் இவ்வமைப்பு நிறுவப்பட்டது. கிராமியப் பகுதியிலுள்ள பெண்கள் மேம்பாட்டிற்கு இது செயல்படுகின்றது. நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள கிராமங்களில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மஹிளா மண்டல்கள் என்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் இவ்வாரியமானது பெண்கள் நலப்பணிகளை ஆற்றுகின்றது.

**(iv) இந்திய ஆராய்ச்சி வளர்ச்சிக் கழகம்**

இக்கழகம் பெண்களுக்கான பலதொழில் நுட்ப பயிற்சி மையங்களை இந்தியாவிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படுத்தி பெண்களுக்கு உகந்த தொழில்நுட்ப விவரங்களை விளம்பரப்படுத்துவது இக்கழகத்தின் முக்கிய செயல்பாடாகக் காணப்பட்டது.

**(v) தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம்**

இவ்வாரியமானது இந்திய நாட்டில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பால் உற்பத்தியை பன்மடங்காக்குவது. இதன் செயல்பாடு பெரும்பாலும்

கிராமங்களை மையமாக வைத்திருப்பதனால் கால்நடை வளர்ப்பிலும், பால் உற்பத்தி பெருக்கத்திலும் அதிகமாக கிராமப் பெண்களை ஊக்கப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட வாரியப் பணியாக உள்ளது. தற்போது தமிழ்நாட்டிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### தேசிய பெண்குழந்தைகளுக்கான ஆணையம்

பாரதப் பிரதமரின் தலைமையின் கீழ் இந்த ஆணையம் செயல்பட்டு வருகின்றது. பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்கான திட்டங்கள் திட்டப்பட்டு, செயல் முறைகள் தீர்மானிக்கப்பட்டு செயல்பட வகை செய்யப்படுகின்றது. இது ஒரு ஒருங்கிணைப்பு அமைப்பாகச் செயல்படுகின்றதெனலாம்.

இவ்வாறு நடுவணரசினால் பலதரப்பட்ட அமைப்புகள் வெவ்வேறுபட்ட நோக்கங்களுக்காகச் செயல்படுகின்றன. மேலும் பெரும்பாலான அவ்வமைப்புகள் கிராமியச் சூழலின் அடிப்படையிலுள்ள பெண்கள் நலனுக்காகச் செயல்படுகின்றன. அவை திட்டங்கள் திட்டல், ஆலோசனை வழங்கல், நிதி உதவுதல் போன்ற பல பணிகளை ஆற்றுகின்றன. வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, பெண்குழந்தைகள் மேம்பாடு ஆகியவற்றிற்காக அவை இயங்குகின்றன. இந்நிலையில் மாநில அமைப்புகளைப் பற்றியும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

## மாநில அரசுத் திட்டங்கள்

### மாநில மகளிர் ஆணையம்

நடுவணரசில் உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வரும் தேசிய மகளிர் ஆணையத்தைப்போல் இந்திய மாநிலங்களில் அந்தந்த அரசுகளால் மாநில மகளிர் ஆணையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாநில அரசுகள் மேற்கொள்ளும் பெண்கள் நலத்திட்டங்களைச் செயல் படுத்துகின்றது. சமூகத்தில் பலதரப்பட்ட கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளாகும் பெண்களின் நிவாரணப் பணிகளின் அடிப்படையில் அவற்றைக் காண்பதற்கான சட்டங்களை உருவாக்க மாநில அரசுக்குத் துணை செய்கின்றன. பெண்கள் மேம்பாட்டில் மாநில அரசுகளுக்கு பேருதவி செய்யக்கூடிய அமைப்பாக இது திகழுகின்றது. தமிழ்நாட்டின் மகளிர் ஆணையத்தின் தலைவராக, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் வசந்திதேவி செயல்பட்டுள்ளார்.

### அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

பெண்களுக்கான உயர்நிலைக் கல்வியை வளர்ச்சியடையச் செய்யவும், பல துறைகளிலும் பெண்களை வளர்ச்சியுறச் செய்யவும் தனியொரு பெண்கள் பல்கலைக்கழகம் தமிழகத்திலுள்ள கொடைக்கானலில் இயங்கி வருகின்றது. முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரனின் முயற்சி காரணமாக இப்பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது. பெண்ணறிவை மேம்படுத்தவும், உயர்கல்வி, ஆய்வு ஆகியவற்றை பெண்கள் மேற்கொள்ளவும் இப்பெண்கள் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகின்றது.



### மகளிர் காவல் நிலையங்கள்

மாநிலத்தில் பெண் குற்றவாளிகளுக்கெனவும், பெண்களுக்கு சமுதாயத்தில் இழைக்கப்படும் அநீதியைத் தடுத்து நிறுத்தவும், அவர்களை விசாரிக்கவும், பெண்களுக்குத் துணை நிற்கவும் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பணி புரியத் தனிப்பட்ட காவல் நிலையங்களும் உண்டு. ஆரம்பத்தில் பெண் காவலர்கள் காவலுக்கென நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கான தனிப்பட்ட காவல் நிலையங்கள் இன்றைய மாண்புமிகு முதல்வர் ஜெ. ஜெயலலிதாவின் முயற்சியால் உருவாக்கப்பட்டன. இத்தகைய காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படக்கூடிய வழக்குகளிலிருந்து எளிதில் விடுபட முடியாது. ஆண் காவலர்கள் விசாரிக்க இயலாத வழக்குகளை பெண் காவலர்கள் எளிதில் விசாரிக்க இயலும். சிறு சிறு குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதும் அவர்களுடைய பணியாக உள்ளது.

### பெண்கள் கமான்டோ அல்லது அதிரடிப்படை

பெண்கள், தம்முடைய பாரம்பரியப் பணிகளை மட்டும் ஆற்றாமல், நாட்டினைப் பாதுகாக்கும் பணிகளில் ஈடுபடச் செய்ய கமாண்டோ அல்லது அதிரடிப்படையில் பணியாற்றும் பொறுப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டினைப் பாதுகாக்கவும், நிர்மாணப் பணிகளில் ஈடுபடவும் அப்பெண்களுக்கு பயிற்சிகள் தரப்படுகின்றன. தமிழகத்தில் இத்திட்டம் மாண்புமிகு முதல்வர் ஜெயலலிதாவால் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய மாநிலங்கள் பலவற்றுக்குமான முன்னோடித் திட்டமாக இத்திட்டம் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றது. இதுவும் ஒரு பாதுகாப்புக் காவல் அமைப்பாகும். இவ்வாறு பெண்கள் மேம்பாட்டிற்கான இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளால் பல அமைப்புகள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

### 1947 தமிழக அரசின் பெண்ணிய மேம்பாட்டிற்கான திட்டங்கள்

i. பெண்களுக்கான தனியான பல்கலைக்கழகம்
ii. விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்
iii. தொட்டில் குழந்தை திட்டம்
iv. மகப்பேறு உதவித் திட்டம்
v. மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டம்
vi. மகளிர் காவல் நிலையங்கள்
vii. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊரக ஊட்டசத்துத் திட்டம்
viii. தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண உதவித்திட்டம்
ix. விதவை பெண்களின் குழந்தைகளுக்கான இலவச நோட்டு புத்தகம் வழங்கும் திட்டம்
x. இலவச தையல்-மிஷன் பயிற்சித் திட்டம்

### i) பெண்களுக்கென தனியான பல்கலைக்கழகம்

முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ராமச்சந்திரனால் கொடைக்கானலில் தொடங்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது அன்னை தெரஸா பல்கலைக்கழகம் ஆகும்.

### ii) டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சமூகத்தில் நிராகரிக்கப்பட்ட பெண்களின் திருமணத்திற்காக தமிழக அரசாங்கமே ஒரு குறிப்பிட்ட தொகை அளவு பணம் கொடுத்தது. அவர்களது திருமணத்தை ஊக்குவிப்பதற்கான ஒரு திட்டமாகும்

### iii) தொட்டில் குழந்தைத் திட்டம்

இத்திட்டம் தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் குறிப்பாக கிராமப்புறங்களில் வறுமையின் காரணமாக பிறக்கக்கூடிய பெண் குழந்தைகள் அனைவரும் கொல்லப்படுவதைத் தடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட திட்டம். இத்தகைய இளம் சிறார்களைக் காணப்பட்டது. இதை முடிவுக்கு கொண்டுவர தமிழக அரசாங்கமே கிராமங்களில் உள்ள பஞ்சாயத்து அலுவலகங்களில் தொட்டிலை அமைத்தனர். இத்தொட்டியில் போடப்படும் குழந்தைகள் தமிழக அரசின் சமூக நல வாரியத் துறையினரால் வளர்க்கப்பட்டு, கல்வி அறிவு புகட்டப்பட்டு ஆளாக்கப்படுகின்றனர்.

### iv) டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம்

இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் கருவுற்ற தாய்மார்களுக்கு சுகமான முறையில் குழந்தையை பெற்றெடுப்பதற்காக அரசாங்கம் உதவியளிக்கும் திட்டமாகும். இத்திட்டம் பெரும்பாலும் அந்தந்த கிராமங்களை ஒட்டியிருக்க கூடிய ஆரம்ப சுகாதார மையங்களே வந்து நடத்துகின்றன. ஒரு வேளை மருத்துவமனையில் குழந்தை பிறக்காமல் வீட்டிலேயே சுகப்பிரசவம் அடைந்த தாய்மார்களுக்கு இவ்வுதவித் தொகை கிராம நிர்வாகத்தின் மூலம் அவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

### v) மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் படித்த பெண்களுக்கு திருமணத்தின் போது அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட தொகையை அளித்து அவர்களது திருமண கிராமப்புறப் பெண்கள் திருமண வயதில் பெற்றோர்களை சிரமப்படுத்தாமல் திருமண நிகழ்ச்சியை சந்தோஷமாக நடைபெறுவதற்கு அரசாங்கம் கொண்டு வந்துள்ள திட்டம்.

### vi) மகளிர் காவல் நிலையங்கள்

இக்காவல் நிலையங்கள் தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவால் கொண்டுவரப்பட்ட திட்டம். இக்காவல் நிலையங்கள்



பெண்களின் மீது சுமத்தப்படக் கூடிய குற்றங்களை மிகவும் பரிவுடன் விசாரித்து பெண் காவல் உயர் அதிகாரிகளால் இவ்வழக்குகள் தீர்வு பெற வழிவகை செய்கிறது. படிக்கும் காலம் முதல் முதன்மைகாலம் வரையிலும் அவர்கள் எதிர்நோக்கக்கூடிய பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணக் கூடியதாக இக்காவல் நிலையங்கள் தற்போது மாநிலத்திலுள்ள எல்லா தாலுகா மையங்களிலும் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### vii) தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊரக ஊட்டச்சத்து திட்டம்

இத்திட்டத்தின் மூலக் கருவுற்ற பெண்கள் பிறந்த குழந்தைகள் முதல் 5வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மிக அதிக சத்தான உணவு பொருட்களை தயார் செய்து வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினால் நகர்புறம் இல்லாமல் இருப்பதற்கு வழிவகை செய்வதற்காகவும், ஆரோக்கியமான குழந்தைகள் கிராமங்களில் வளர்வதற்காக இத்திட்டம் ஐ.நா சபையில் UNICEF என்ற நிறுவனம் இயங்குகிறது.

### viii) தமிழ்நாடு அரசு கலப்பு திருமண உதவித்திட்டம்

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் ஜாதி, சமய, மத பேதமற்ற ஓர் நிலையை உருவாக்குவதற்காக திராவிட முன்னேற்ற கழக அரசாங்கத்தால் இத்திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் கலப்புதிருமணம் செய்து கொள்ள விரும்புவோர் அரசாங்கத்திற்கு முறையாக விண்ணப்பித்தால் அவர்களுக்கு தகுந்த உதவியை அரசு செய்து கொடுக்கும். மேலும் தற்போது இத்திட்டம் முதலமைச்சரின் தலைமையில் அவருடைய பிறந்த நாளிலோ அல்லது அரசுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நாளிலிலோ நூற்றுக்கணக்கான திருமண ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து அவர்களுக்கு அத்தியாவசியமாக கொடுக்க வேண்டிய ஒரு சில சீர்களையும் அரசு செய்கிறது.

### ix) விதவை பெண்களின் குழந்தைகளுக்காக இலவசமாக நோட்டுபுத்தகம் வழங்கும் திட்டம்

இத்திட்டம் ஆரம்பத்தில் விதவைப் பெண்களின் குழந்தைகளுக்கு மட்டுமே கல்வியறிவை பெறுவதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம், ஆனால் தற்போது மாநிலத்தில் மிகவும் பின்தங்கிய வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கிராமப்புறங்களில் இத்திட்டம் செயல்படுகின்றது.

### சுய உதவிக்குழுக்கள்

தமிழக மகளிருக்கு அதிகாரம் அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், தங்களது சொந்தக்காலில் நிற்கும் வகையில், பொருளாதார வலிமை அளித்து சமூக, பொருளாதார மேம்பாடு காணவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களால் 1992–ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் இயக்கம் தொடங்கப்பட்டது.

- தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 2 இலட்சத்து 11 ஆயிரத்து 152 ஆக உயர்ந்துள்ளது.
- இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களில் 35 இலட்சத்து 41 ஆயிரத்து 846 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்
- மகளிர் சுய உதவிக் குழுக்களின் மொத்த சேமிப்பு ரூ.754.39 கோடி
- ரூ.1,295.08 கோடியை வங்கிக் கடனாகப் பெற்றுள்ளன. 98 சதவீதம் வரை திருப்பிச் செலுத்தியுள்ளன.
- 2001–ஆம் வருடம் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு சுய தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்து தற்பொழுது 5 இலட்சம் பெண்களுக்கு சுய தொழில் முனைவோர் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுப் பெண்களை உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக விற்பனை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.
- வீட்டு உபயோக உபகரணங்கள் பராமரிப்பு
- மோட்டார் மின்கம்பி சுற்றுதல்

**மகளிர் உதவிக்குழுக்கள் செய்யும் சில முக்கிய தொழில்கள்**

- நியாயவிலைக் கடைகள் நடத்துதல்
- கல்குவாரிகள் நடத்துதல்
- மலைவாழ் மக்களின் சுய உதவிக் குழுக்களுக்கு சிறு வனப்பொருட்களைச் சேகரித்து விற்கும் உரிமை
- ஊரகப் பகுதிகளில் சிறிய பேருந்துகளை இயக்குதல்
- ஆட்டோ ஓட்டுதல்

**விவசாயத் துறையில் மகளிர் சுய உதவிக்குழுக்கள்**

- ரோஜா, மல்லிகை போன்ற மலர்களைச் சாகுபடி செய்தல்
- பட்டு உற்பத்தி, பழவகைகள் உற்பத்தி
- வான் கோழி, முயல், காடை, கோழி, பன்றி வளர்த்தல்
- பால் பண்ணை மற்றும் காப்பித் தோட்டங்களைக் குத்தகைக்கு எடுத்தல்.
- கடல் பாசி உற்பத்தி
- நெசவுத்தொழில்
- கைத்தறி மற்றும் பட்டுத்துணி உற்பத்தி செய்தல்
- ஆயத்த ஆடைகள் உற்பத்தி



**இதர முன்னோடித் திட்டங்கள்**

- ஊரகப் பகுதிகளில் ரூ.13.98 இலட்சம் செலவில் 300 மகளிர் மனமகிழ் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஊரகப் பகுதிகளில் வசிக்கும் 11,120 குடும்பங்களுக்கு ரூ.87,08 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மகளிர் சுய உதவிக் குழுக்களின் சுய சார்புத் தன்மைக்காக 11,893 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- இக்கூட்டமைப்புகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாகப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**மிகவும் நலிவடைந்தோருக்கான சிறப்பு சுய உதவிக் குழுக்கள்**

- 12,436 ஊனமுற்றோரை உறுப்பினர்களாகக் கொண்ட 1503 சுய உதவிக்குழுக்கள்
- 14.365 நலிவுற்ற கைவினைஞர்கள் மற்றும் கிராமியக் கலை வல்லுநர்களுக்கான 998 சுய உதவிக் குழுக்கள்.
- 16,351 துப்புரவுத் தொழிலாளர்களைக் கொண்ட 1118 சுய உதவிக் குழுக்கள்

**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான புதிய திட்டங்கள்**

- ரூ.577.50 இலட்சம் மதிப்பீட்டில், 1.5 இலட்சம் மகளிருக்கான தொழில் முனைவோருக்கான புதிய பயிற்சித் திட்டம்.
- ரூ.56.70 இலட்சம் மதிப்பீட்டில், சுய உதவிக்குழுக்களுக்கு, மத்திய காலணி பயிற்சி நிறுவனம் (CFTI) மூலம் தோல் பொருட்கள் உற்பத்தி தொடர்பான சிறப்புத் திறன் பயிற்சித் திட்டம்
- ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில், சுய உதவிக் குழுக்கள் மூலம் பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மற்றும் மறு சுழற்சிக்கான பயிற்சித் திட்டம்
- ரூ.21.36 இலட்சம் மதிப்பீட்டில், சுய உதவிக்குழு மகளிருக்கு மேம்படுத்தப்பட்ட நவீன ஆடை வடிவமைப்பு பயிற்சி அளிக்கும் திட்டம்
- ரூ.10.20 இலட்சம் மதிப்பீட்டில், கைவினைஞர்களுக்கு மரபு சார்ந்த நார்த் தொழில்களின் சிறப்புத் திறன் பயிற்சி அளிக்கும் திட்டம்
- ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில், சுய உதவிக்குழு மகளிர்க்கு அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தகவல் தொழில் நுட்பத் துறையில் பயிற்சித் திட்டம்
- தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் உதவியுடன், 1000 மகளிர்க்கு கோயம்புத்தூர் மாவட்டத்தில் பட்டறைப் (Lathe) பயிற்சி அளிக்கும் திட்டம்.

- ரூ.103 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதியைச் சார்ந்த 1925 மகளிர்க்கு குடும்ப சுகாதார தன்னார்வ சேவை பயிற்சித் திட்டம்
- ரூ. 2.53 கோடி மதிப்பீட்டில் சுனாமி பாதித்த மாவட்டங்களில் கட்டப்பணிகளுக்கு மகளிர் சுய தடஉதவிக் குழுக்கள் மூலம் நுண் கான்கிரீட் கூரை ஓடுகள் தயாரிக்கும் திட்டம்
- ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் 10 மாவட்டங்களின் ஊரகப் பகுதிகளைச் சார்ந்த 5000 இளையோர்களுக்கு வாழவாதாரத் திறன் பயிற்சித் திட்டம்
- ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் இருளர் பழங்குடியின சுய உதவிக் குழுக்களுக்கு மூலிகைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை பயிற்சித் திட்டம்
- 2005–06ம் ஆண்டில், சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்ய, அனைத்து மாவட்டங்களிலும் உட்கட்டமைப்பு வசதி ரூ.3கோடி செலவில் உருவாக்கும் திட்டம்.
- ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில், உருவாக்கப்பட்ட, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி மற்றும் விற்பனைக் கூடங்கள் திறப்பு
- ரூ.345 இலட்சம் செலவில் உருவாக்கப்பட உள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பல்நோக்கு மைய கட்டங்களுக்கான அடிக்கல் நாட்டுதல்



# 10. பெண்கள் மேம்பாட்டில் ஐக்கிய நாட்டவையின் பங்கு

முன்னுரை

இரண்டாம் உலகப்போருக்குப்பின் போரற்ற அமைதி, பாதுகாப்பு மற்றும் மனிதநலனுக்கு முக்கியத்துவமளிக்கக்கூடிய நோக்கில் 1945ல் ஐக்கிய நாட்டவை (United Nations Organisation) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. அரசியல், பொருளாதாரத் துறைகளில் கவனம் செலுத்தும் அவ்வமைப்பு குழந்தைகள் நலம், தொற்று நோய் ஒழிப்பு, உலகப் பெண்கள் மேம்பாடு, பின்தங்கிய பிரிவினர் நலன் ஆகியவற்றில் கவனம் செலுத்தி பண்பாட்டு மேம்பாட்டிற்கும் மனித குலத்தின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றது. அரிய பல சாதனைகள் தமது உறுப்புநாடுகளின் ஆதரவுடன் மேற்கொள்ளும் ஐக்கிய நாட்டவையானது 1945க்கும் 1995க்கும் இடைப்பட்ட ஐம்பதாண்டுகள் காலத்தில் உலகளாவிய நிலையில் 27 திட்டங்களைத் தனிப்பட்ட முறையில் பெண்களுக்காகத் தீட்டி நடைமுறைப்படுத்தி வந்துள்ளன. அவற்றையும் தெரிந்து கொள்ளுதல் மூலம் பன்னாட்டளவில் பெண்கள் எவ்வாறு முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லப்படுகின்றனரென்பதை நாம் நன்கறியலாம்.

இதனைத் தெரிந்து கொள்ளுவதற்கான காரணங்களாகக் கூறலாம். உலகின் பல பாகங்களிலும் பெண்கள் எவ்விதமான வளர்ச்சியுமின்றி பலதரப்பட்ட கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இந்தியாவில் 1978ல் நாகாப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட பாலியல் பலாத்கார கொடுமைகள் ஜனநாயக உரிமைக்கான மக்கள் ஒற்றுமை அமைப்புமூலம் வெளிப்படுத்தப்பட்டது. பீஹார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பெண்கள், நிலவுடமையாளர்களின் உடற்பசிக்கு பலாத்காரமாகப் பயன்படுத்தப்படுகின்றனரென்ற செய்தி வெளிவந்தது. வரதட்சணைக் கொடுமை காரணமாகவே பல இனங்களைச் சேர்ந்த பெண்களில் 51% குடும்பத்தினர் பெண்குழந்தைகளைக் கொன்று விடுகின்றனரென்ற செய்தியை சென்னை சமூக சேவை அமைப்பு வெளிப்படுத்தியது. வரதட்சணைச் சட்டம் திருத்தப்பட்டாலும் அது எதிர்பார்க்கும் நல்விளைவுகளை உருவாக்க முடியவில்லை. கொல்கத்தா நகரில் பெருமளவு பெண்கள் காவல் துறையின் கொடுமைகளுக்கு இலக்காகின்றனர் என்ற செய்தியை பன்னாட்டு பொது மன்னிப்பு நிறுவனம் (Amnesty International) வெளிப்படுத்தியது. இதேபோன்ற செயல்களால் உலகின் பிறநாடுகளிலும் பெண்கள் பலவிதத் துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். அமெரிக்காவில் வாழும் இந்தியக் குடும்பங்களில் சுமார் 30 விழுக்காடு பெண்கள் கணவரின் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். செயற்பாட்டு உலகம் (World in Action) என்ற அமைப்பானது இலண்டனில் 1985–95ஆகிய ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் 28% திருமணமான பெண்கள் கணவர்களின் கொடுமைக்கு இலக்காயின என்று தெரிவித்தது. அதே போல வங்காளத்தில் கணவனுடன்

வாழாத பெண்கள், விவகாரத்து பெற்ற பெண்கள் சமூக அந்தஸ்தை இழந்தவர்களாகின்றனர். 1970–90க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் பெண் தொழிலாளர்களின் நிலையைக் கவனித்த பன்னாட்டமைப்பு, ஆப்பிரிக்காவில் பெண்கள் ஆண்களைவிட அதிகநேரம் பணியாற்ற வற்புறுத்தப் படுகின்றனரென்ற செய்தியைத் தந்தது. பெண்கள் ஆண்களுக்குச் சமமான ஊதியம் பெறவில்லை என்ற குற்றச் சாட்டும் உள்ளது. உலக நாடுகளில் நிலவும் குறிப்பிடப்பட்ட சமூகச்கூறுகளும் பண்பாட்டு அமைவுகளும் பெண்களை பெருமளவில் ஆண்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றன. அதனால் ஏற்படக்கூடிய மனவியல் ரீதியான வெறுப்புணர்வுகளே பெண் குழந்தைகளை வெறுக்கச் செய்கின்றன என்ற கருத்து உருவாக்கப் பட்டுள்ளது. ஆகவே உலக அளவில் பெண்கள் மேம்பாட்டிற்காக ஐக்கிய நாட்டவை மேற்கொண்ட செயல்களைக் காணுதல் வேண்டும்.

## ஐக்கிய நாட்டவையின் செயல்பாடுகள்

1. சீனா, தென்அமெரிக்கா, பிரேசில், டொமினிக்கன் குடியரசு அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற நான்கு நாடுகளைச் சேர்ந்த பெண்ணிய அமைப்புகள் பெண்களுக்கு சம அந்தஸ்து தரப்பட வேண்டுமெனக் கூறின. ஐக்கிய நாட்டவையின் பலதரப்பட்ட அமைப்புகளிலும், பெண்களுக்கிடையில் எவ்விதமான பாரபட்சமும் காட்டாமல், சமமான பங்களிக்கும் வாய்ப்புத் தரவேண்டுமெனப்பட்டது. இது ஐக்கிய நாட்டளவில் உலகப் பெண்மணிகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆரம்பப் பணியாகும். ஏனெனில் இது 1945ல் மேற்கொள்ளப்பட்டது.

2. 1946ல் ஐக்கிய நாட்டவையானது பெண்கள் மேம்பாட்டுக்கென ஒரு குழுவை அமைத்தது. பெண்களுக்கான சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளைப் பெறச் செய்தல் அவற்றைத் தக்கவைத்துக் கொள்ளல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அக்குழு முயன்றது.

3. 1949ல் பெண்கள் மீது ஏவப்படும் பாலியல் சுரண்டல்களை எதிர்த்தது. அவற்றை ஒடுக்கக்கூடிய முயற்சிகளில் கடுமையாக ஐக்கிய நாட்டவை செயல்பட்டது.

4. 1951ஆம் ஆண்டு ஐக்கிய நாட்டவையின் ஓர் அங்கமான பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு முக்கியத்துவம் பெற்றது. அவ்வமைப்பில் தொழிலாளர் அமைப்பின் எல்லாமட்டங்களிலும் ஆண்களைப் போல் பெண்களுக்கும் சமஉரிமை, சமஊதியம், சமமதிப்புத் தரப்படல் வேண்டுமெனப்பட்டது. அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

5. 1952ல் பெண்களுக்கு வாக்குரிமை தரப்படவேண்டுமென்பதற்காக வேண்டுகோளை ஐக்கிய நாட்டவை உறுப்பு நாடுகளுக்கு விடுத்தது. அதன்படி பெண்களுக்கு சட்டப்படி சம அரசியல் உரிமைகளும், தரப்படவேண்டுமென்ற வேண்டுதலாக விடுக்கப்பட்டது.

6. 1957ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டவையில் பெண்களுக்கான உரிமை பற்றிய தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டு அனைத்து உறுப்பினர்களாலும் ஏகமனதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்மூலம் பெண்கள் உரிமைகள் விரிவாக்கம் பெற்றன. இத்தீர்மானம் மூலம் ஒரு பெண் தன்னுடைய கணவருடைய ஆதரவு மற்றும் அனுமதியில்லாமல் தனது தேச உரிமையை மாற்றவோ அல்லது மறுக்கவோ உரிமை பெற்றார். இதன்மூலம் பெண்ணின் சார்புத்தன்மை மீதான இறுக்கம் குறைக்கப்பட்டது.

7. 1960 ஆம் ஆண்டில் சர்வதேசத் தொழிலாளர் நிறுவமானது தொழில் பற்றிய முக்கிய தீர்மானத்தைக் கொண்டு வந்து உறுப்பு நாடுகளை ஏற்றுக்கொள்ளச் செய்தது. தொழில் மற்றும் வேலை வாய்ப்புகளில் பால் அடிப்படையில் பெண்கள் புறக்கணிக்கப்படுவதையும் அத்தீர்மானம் தடுத்து நிறுத்தியது.

8. 1962 ல் பெண்களின் திருமண உறவு முறை பற்றிய தீர்மானங்களை நிறைவேற்றியது. குறைந்தபட்ச திருமண வயதுதனை நிர்ணயித்தல், திருமண முறைகள் போன்றவற்றை அனைத்து உறுப்பு நாடுகளும் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தியது. இத்தீர்மானத்தை அனைத்து உறுப்பு நாடுகளும் ஏற்றுக்கொண்டன. இதனால் திருமணம் என்ற உறவின் மேம்பட்ட தன்மை காக்கப்பட்டு மணமுறிவு, திருமணவிலக்கு போன்றவை கட்டுப்படுத்தப்பட்டன.

9. 1967 ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டவை மற்றொரு தீர்மானத்தை பெண்களைப் பொறுத்தவரை நிறைவேற்றியது. பெண்களுக்கு எதிராக எவ்விதமான ஏற்றத்தாழ்வுகளும் இருக்ககூடாதென அது குறிப்பிட்டது. அத்தகைய ஏற்றத்தாழ்வுகள் அனைத்தையும் களைய உலக நாடுகள் முயற்சி எடுக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது. இவ்வுறுதி மொழியால் பெண்களின் நிலை உயரமேலும் வகை செய்யப்பட்டது. இது ஒரு உலகளாவிய முயற்சியாகும். இதன்மூலம் பெண்களிடையே விழிப்புணர்வும் உறுதிப்பாடும் உருவாக்கப்பட்டன.

10. 1972ல் ஆம் ஆண்டிலும் உலக நாடுகளின் பெண்களின் நிலைபற்றி எண்ணப்பட்டது. உலகமக்களனைவரும் உலக்நாடுகளில் உள்ள பெண்களின் நிலைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென ஐக்கிய நாட்டவை எண்ணியது. அதன்மூலம் பெண்களின் பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு அவற்றைக் களைய முடிவெடுக்கலாம் எனப்பட்டது. அதற்கான பெண்களின் முயற்சியாக 1975ஆம் ஆண்டினை பன்னாட்டு பெண்கள் ஆண்டாக கொண்டாடப்பட வேண்டுமென அறிவித்தது. அது பலநாடுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்டது.

11. 1974ல் சமூகப் பொருளாதார குழுவானது உலகப் பெண்கள் பற்றி செய்திகளைப் பற்றி விவாதித்தது. மேலும் பன்னாட்டு கவுன்சில் அல்லது குழுவில் பெண்கள் பங்கேற்க வகை செய்தது.

12. 1975 ஆம் ஆண்டு சர்வதேசப் பெண்கள் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. ஒரு நாட்டில் பெண்களுக்கும் ஆடவர்களுக்கு இடையிலும் நல்லுறவை வளர்ப்பது முக்கிய நோக்கம். பெண்களின் நிலைகளை

வலுப்படுத்துதல், ஆண், பெண் என்ற இருபாலரிடையேயும் காணப்படும் வேற்றுமைகளைக் களைந்து இருசாராரிடையேயும் சமத்துவ நிலையை மேற்கொள்ளவும் வலியுறுத்தப்பட்டது. சர்வதேசப் பெண்கள் ஆண்டின்போது மேலே கூறப்பட்ட நிலைகள் வெளிப்படுத்தப்பட்டன. அதேபோல் பெண்கள் உலகநாடுகளிடையிலே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டுணர்வையும் உருவாக்க வகை செய்யவேண்டுமெனக் கூறப்பட்டன. தொடர்ந்து 1976க்கும் 1985க்கும் இடைப்பட்ட பத்தாண்டுகள் சர்வதேச பெண்கள் பத்தாண்டாகக் கருதப்படவேண்டுமெனக் கூறப்பட்டது. இதன் மூலம் பெண்சமத்துவம் நிலை நாட்டப்பட வகை செய்யப்பட்டது. நட்பு ஒற்றுமை ஆகியவை நிலைநாட்டப்பட்டன. குறிப்பாக உலக அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காக சர்வதேச பெண்கள் ஆண்டு கொண்டாடப்பட்டது.

13. 1976ல் ஐக்கிய நாட்டவையானது பெண்கள் பற்றிய தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்தது. பெண்களுக்கான பத்தாண்டுகளுக்கான தன்னார்வ நிதியமைப்பு உருவாக்கப்பட்டு பொருளாதாரத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டன. அதே நேரத்தில் பெண்கள் தற்சார்புடன் சுயமுயற்சியில் மேம்பாடுவதற்கான வகைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான சர்வதேச ஆய்வு மன்றம் மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவை உருவாக்கப்பட்டன. பெண்கள் மேம்பாட்டில் இது ஒரு மைல்கல்லாகத் திகழ்ந்ததெனலாம்.

14. 1979–ஆம் ஆண்டு உள்நாட்டு பெண்களைப் பொறுத்தவரை முக்கியமானதாகும். ஏனெனில் அவ்வாண்டில்தான் பெண்களுக்கு எதிரான அனைத்துவகை ஏற்றத்தாழ்வுகளையும் ஒழிப்பதற்கென தனிப்பட்ட அமைப்புதனை ஐக்கிய நாட்டவை நிறுவியது. இதனால் பல உறுப்பு நாடுகளும் தமது நாட்டின் பெண்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படலாயின.

15. 1980ல் ஐக்கிய நாட்டவையானது ஏற்கனவே உருவாக்கியிருந்த பன்னாட்டு ஆய்வு மற்றும் பயிற்சி அமைப்புகளின் நிர்வாகத்தில் மாற்றங்களை உருவாக்கியது. அவை தன்னாட்சியுடன் இயங்கும் அமைப்பாக மாற்றப்பட்டன. 1980ல்தான் டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன் ஹேகனில் இரண்டாவது உலகப்பெண்கள் மாநாட்டைக் கூட்டியது. பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்குவதற்கான வழிமுறைகள் பற்றி எண்ணப்பட்டது.

16. 1981ல் பாலியல் வேறுபாடுகளைக் களைந்து சமத்துவநிலையை உருவாக்க ஐக்கிய நாட்டவை முயற்சித்தது. பெண்களுக்கு எதிரான பலதரப்பட்ட ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கெனத் தனிப்பட்ட அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. பெண்கள் மேம்பாட்டிற்கான நடைமுறை அமைப்பாக அது செயல்படலாயிற்று.

17. 1985ல் ஐக்கிய நாட்டவையானது பெண்கள் அமைப்புக்கான நிதித்துறையில் புதிய மாற்றத்தை உருவாக்கியது. பெண்களுக்கான பத்தாண்டுகளுக்கான தன்னார்வநிதி என்ற பெயரானது. பெண்கள் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் சபைநிதி என்று பெயர் மாற்றம் பெற்றது. சுயஆட்சி நோக்குடன் ஐக்கிய நாட்டவையின் வளர்ச்சித் திட்டத்துடன்



இணைந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டது. 1985ல் நைரோபி என்ற இடத்தில் ஐக்கிய நாட்டவை மூன்றாவது உலகப் பெண்கள் மாநாட்டை நடத்தியது. அதே ஆண்டில்தான் அம்மாநாட்டில் பெண்கள் மேம்பாட்டினைத் துரிதப்படுத்துவதற்காக 2000ஆம் ஆண்டிற்குள்ளாக முன்னேற்றப்போக்கு என்ற செயல் திட்டம் வகுக்கப்பட்டது.

18. 1986ல் ஐக்கிய நாட்டவையானது பெண்களின் நிலையைத் தெளிவாக வெளிப்படுத்தக்கூடிய வகையில் முதல் சர்வே அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் மூலம் பெண்கள் வளர்ச்சி பற்றிய பல செய்திகள் வெளியாயின. இது பெண்கள் வளர்ச்சிக்கான மற்றொரு படியாகும்.

19. 1990 ஆம் ஆண்டில் பெண்கள் மேம்பாட்டிற்காக பெண்கள் மேம்பாட்டு கமிஷன் என்ற ஒரு அமைப்பைத் தோற்றுவித்தது. இவ்வமைப்பானது 1985ல் நைரோபியில் நடைபெற்ற மாநாட்டில் 2000 ஆண்டிற்குள்ளான முன்னேற்றப்போக்கு என்ற செயல்திட்டம் பற்றியதொரு மதிப்பீடு செய்தது. அத்துடன் நான்காவது உலகப் பெண்கள் மாநாட்டை நடத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

20. 1991ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டவையானது பெண்களின் போக்கு மற்றும் புள்ளி விபரங்கள் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையானது உலகப் பெண்களின் நிலையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

21. 1992 ஆம் ஆண்டுதான் ஐக்கிய நாட்டவை சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான மாநாட்டை ஏற்படுத்தியது. இதன்மூலம் சுற்றுச்சூழலைப் பராமரிப்பது, பாதுகாப்பது மற்றும் நிர்வகிப்பது போன்ற விஷயங்களில் பெண்களின் முக்கிய பங்களிப்பினை அங்கீகரித்தது.

22. 1993ல் ஐக்கிய நாட்டவை அதே ஆண்டில் பெண்களுக்கு எதிரான வன்முறையை எவ்வாறு ஒழிப்பது என்பதற்கான பிரகடனத்தை வெளியிட்டது. அதனைத் திட்டவட்டமாகச் செயல்படுத்தும் வழிவகையையும் தெரிவித்தது.

23. 1995ல் சமூக வளர்ச்சிக்கான உலக மாநாட்டினை ஐக்கிய நாட்டவையானது கோபன் கேகன் என்ற நகரில் நடத்தியது. இதில் ஒரு தனிப்பட்ட பிரகடனம் கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் பெண்ணியத்திற்கு முழுமையான சமத்துவம் தரப்படவேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. அதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. பெண்களின் மேம்பாட்டு வரலாற்றில் அது ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது.

1995ஆம் ஆண்டிலேயே சீனத் தலைநகரான பெய்ஜிங்கில் ஐக்கிய நாட்டவை உலகப் பெண்களுக்கான நான்காவது மாநாட்டைக் கூட்டியது. அம்மாநாட்டிலும் பெண்கள் மேம்பாட்டிற்கென ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது. அதன்படி பல செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அம்மாநகரில் செப்டம்பர் 4 முதல் 15 ஆம் நாள்வரை நடைபெற்றது. 185 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்த மகாநாட்டில் 21 ஆம்

நூற்றாண்டில் மகளிர் மேம்பாட்டுக்கான வடிவமைப்பையும் பலநோக்குச் செயல் திட்டங்களையும் வெளியிட்டனர்.

**பெய்ஜிங் பிரகடனத்தின் முக்கிய கூறுகள்**

1. மனித உரிமைகள் அனைத்தும் பெண்ணுரிமை எனக் கருதப்படவேண்டும்
2. மனிதர்கள் பயன்படுத்தும் அனைத்து மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் பெண்களும், பெண்குழந்தைகளும் எவ்வாறு முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டுமென்பது உறுதிசெய்யப்பட்டது.
3. பெண்களுக்கும் ஆண்களுக்குச் சமமான அளவில் சுகாதார மற்றும் கல்வி வசதிகள் ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும்.
4. மனிதப் பண்புகளுடைய சட்டங்களைக் கொண்டுவரவும் அவற்றின் மூலம் பெண்களையும், பெண்குழந்தைகளையும் பாதுகாக்கவும் உறுதியளிக்கப்பட வேண்டும்.
5. வயது வித்தியாசமின்றி பெண்களையும், பெண்குழந்தைகளையும் பாதுகாக்கவும் தம்முடைய முழுத்திறனை வளர்த்துக் கொள்ளவும் வகை செய்தல் வேண்டும்.
6. நிலம், கடன் வசதிகள், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தொழிற் பயிற்சிகள், தகவல் தொடர்பு அமைப்புகள் போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் பெண்களை மேம்பாடடையச் செய்ய வழிவகுக்கப்பட வேண்டும். அத்துறைகளில் பெண்களின் ஆற்றல் பெருக்கப்பட முயற்சிகள் செய்யப்படல் தேவை. மேலே கூறப்பட்டுள்ள துறைகளில் பெண்களையும் ஆண்களுக்குச் சமமானவர்களாக நடத்தப்பட்டு அவர்களது உரிமைகள் தரப்படல் வேண்டும்.
7. பெண்கள் தம்முடைய இனம், வயது, மொழி, மதம், ஊனத்தன்மை, பழங்குடியினர் போன்ற காரணிகளால் மேம்பாடடைவதனின்றும் தடுக்கப்படுகின்றனர். அத்தகைய தடைகள் தவிர்க்கப்பட்டு பெண்கள் போன்ற சமத்துவ நோக்கில் சுதந்திரமாக உலகில் மேம்படுவதற்கான வழிகள் எடுக்கப்படவேண்டும். அதனால் உலக சமுதாயத்தில் பெண்கள் தன்னிகரற்றவர்களாய் உலாவர இயலும்.
8. உலக அமைதி, சமாதானம், பாதுகாப்பு, பன்னாட்டு உறவுகளில் வல்லமைச் சமன்பாட்டை நிலவச் செய்தல் போன்ற பணிகளில் பெண்களின் பங்கு உணரப்பட்டு அதற்கேற்பச் செயல்பட வேண்டும்.
9. பெண்கள் மற்றும் பெண்குழந்தைகளுக்கு ஆரம்ப சுகாதார வசதிகள் எழுத்தறிவு, சமூகப்பயிற்சிகள், வாழ்நாள் முழுவதுக்குமான கல்வி ஆரம்பம், அடிப்படை மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றை நல்கி பெண்களை மேம்படச் செய்யவேண்டும்.
10. கிராமப்புறப் பெண்களை, கிராமங்களின் வளர்ச்சியுடன் இணைந்து செயல்படச் செய்து கிராமங்களுடன் தன்மையும் மேம்படுத்திக்கொள்ள



மேலே கூறப்பட்டுள்ள பெண்கள் முன்னேற்றத்திற்கான அடிப்படை செயல்களை உணர்ந்து கொள்ளுவதுடன் ஐக்கிய நாட்டவையானது எவ்வாறு பெண்களுக்கு எதிரான பல்வேறு வகையான வேறுபாடுகளைக் களைய வகை செய்துள்ளதென்பதையும் முக்கியமாகப் புரிந்து கொள்ளவேண்டும். இதற்கான சிறப்புக்கூட்டம் மூலம் தனிப்பட்ட வழிகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

**பெண்களுக்கு எதிரான பலதரப்பட்ட பாகுபாடுகள் பற்றிய சிறப்புக் கூட்டமும் திட்டமும்(Convention on the Elimination of All forms of Discrinination Against Women)**

**நோக்கங்கள்**

ஒருநாட்டின் முற்றிலுமான முழுமையான வளர்ச்சி, உலகநலன் மற்றும் அமைதி ஆகியவற்றைப் பெற ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக அதிகமாக அளவில் பெண்களும் பங்கேற்கச் செய்யவேண்டும் என்ற நோக்கிற்காக சிறப்புக் கூட்டம் ஒன்றினை ஐக்கியநாட்டவையின் பொதுச்சபையானது 18, செப்டம்பர் 1979–ல் கூட்டியது. 20 நாடுகள் அதனை ஏற்றுக் கொண்டன. 3, செப்டம்பர் 1981–ல் அத்தகைய குறிப்புகளடங்கிய சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது. 1989–ல் பத்து ஆண்டுகளுக்கு உள்ளாக 100 நாடுகள் அச்சிறப்புத் திட்டத்தை ஏற்றுக் கொண்டன. பெண்கள் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக 1946ல் உருவாக்கப்பட்ட மகளிரியல் பற்றிய குழுக்களின் செயல்களின் ஒருங்கிணைந்த தன்மையைக் காண முயன்றது. இந்த ஆவணமானது பெண்கள் முன்னேற்றத்தில் ஒரு மைல்கல்லாகும்.

பெண்ணுரிமை வளர்ச்சியை ஆணுரிமைகளுக்குச் சமமானதாய் செயல்பட இந்த ஆவணம் துணை நிற்கின்றது. ஐக்கிய நாட்டவையின் நோக்கங்களை இது பிரதிபலிக்கின்றது. இதனை ஒரு பன்னாட்டுப் பெண்களுக்கான உரிமைச் சாசனம் எனலாம். இதன்மூலம் பெண்கள் பெருமளவிற்கு பாகுபடுத்தப்பட்டனரென்பது புலப்படுத்தப்பட்டது. அத்தகைய பாகுபாடுகள் மனித குலத்தின் அடிப்படைத் தேவையான சமத்துவ உரிமைகளை மீறுகின்றனவெனப்பட்டது. அரசியல், பொருளியல், சமூக, பண்பாட்டு மானிட உரிமைகளுடன் பிற பாகுபாடுகளையும் அது சுட்டிக்காட்டப்படுகிறது. சட்டப்பூர்வமான மற்றும் பிற வழிகளிலும் நேர்மறைப்போக்குடன் பெண்கள் வளர்ச்சியும் முன்னேற்றமும் செயல்படுத்தப்படவேண்டுமெனக் கூறியது. பாலியல் தொடர்பில் பண்பாட்டுத் தொடர்பின் தாக்கம் வெளிப்படுத்தப்படுகின்றது.

1952ல் ஐக்கிய நாட்டவை மேற்கொண்ட அரசியல் உரிமை பற்றிய திட்டம், 1957ல் திருமணமான பெண்களின் தேசீயம் பற்றிய கோட்பாடு, ஆகியவற்றின் அடிப்படையில் பெண்களின் சட்டப்படியான உரிமைகள் அவர்களுடைய திருமணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. பாலியல் நோக்கிலும் பிள்ளைப்பேறு அடிப்படையிலும் பெண்களைப் பாகுபடுத்திப் பார்ப்பது தவறு என்பதை அது வலியுறுத்தியது. கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் அவர்கள் எவ்விதமான பாகுபாடுகளுக்கும்

உட்படுத்தப்படக்கூடாது. குறிப்பாக கிராமப்புறங்களில் வாழும் பெண்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். வர்த்தக நோக்கிலும் சமத்துவம் பேணப்படவேண்டும். தாய்மையடைதலென்பது ஒரு சமூகப்பணி மற்றும் கடமையென்பதைப் புரிந்து கொண்டால் அத்தகைய பால்பாகுபாடுகள் எழுவதில்லை. எனவே தாய்மை பேறடைந்தவர்களுக்கான பாதுகாப்பு குழந்தை நலம் பேணுதல் குடும்பச் சட்டம் மற்றும் சுகாதாரக்கல்வி மூலம் மேற்கொள்ளப்படல் அவசியம். அதேபோல் குடும்பக்கட்டுப்பாடு என்பதும் மனித உரிமைகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும். பெண் உரிமைகளுக்கு உத்திரவாதமளிக்கப்படக்கூடிய வகையில் செய்தித் தொடர்புகள், தகவல் பரிமாற்றம் மற்றும் கல்வி முதலியன தரப்படவேண்டும். இத்தகைய நோக்கங்களுடன் வேறுபல நோக்குகளிலும் அது உருவாக்கப்பட்டது.

பாரம்பரியம் மற்றும் பண்பாட்டுத் தாக்கம் என்ற அடிப்படைகளில் மனித உரிமைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அதன் விளைவாக அடிப்படை உரிமைகள் பெண்களுக்கும் பொருத்தமானவை. சமுதாயத்தில் மற்றும் குடும்பத்தில் ஆண், பெண்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் மூலமாகவே ஆண், பெண் சமத்துவத்தை உருவாக்கவியலும். அதேபோல் ஆண், பெண் ஆகியோருக்கிடையிலான கீழ்நிலை அல்லது மேல்நிலை ஆகியன பழக்கவழக்கங்கள் வாயிலாக எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதையும் காணுதல் அவசியம். கல்வித்துறையில் பாடப் புத்தகங்கள், பள்ளித்திட்டங்கள் மற்றும் பாடம் நடத்தும் முறை ஆகியவற்றை ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். எனவே குடும்பவாழ்க்கை, கல்வி மற்றும் வேலைக்கமர்தல் போன்றவற்றில் ஆண், பெண் இருபாலரிடையே சமமான பொறுப்புகளும், சமமான உரிமைகளும் நிலவ வேண்டும் என்பது இச்சிறப்புத் திட்டத்தின் முக்கியக் கூறாக உள்ளது.

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கென பெண்களுக்கெதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கான குழு(CEDAW: Committee on the Elimination of Discrimination against Women) உருவாக்கப்பட்டது. அது அத்திட்டத்தினைச் சீராக நடைமுறைப்படுத்தும் பொறுப்பினையும் கொண்டிருந்தது. அதில் 23 திறமையாளர்கள் உறுப்பினர்களாயிருந்தனர். அவர்கள் குழுவிற்குத் தம்முடைய அறிக்கைகளைத் தந்தனர். அவ்வடிப்படையில் குழுவானது தன்னுடைய பரிந்துரைகளை நல்கியது.

### திட்டங்கள்

மேலே கூறப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் நோக்கில் சிறப்புத் திட்டங்களும் கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டன.

1. பன்னாட்டமைப்பின் சாசனத்திற்கு உட்பட்டதாய் ஆண் பெண்களுக்கு அடிப்படை உரிமைகளைச் சார்ந்ததாய், சமஉரிமைகள் வழங்கப்படவேண்டும்.

2. பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனத்தின்படி பாகுபாடுகள் தவிர்க்கப்படுகின்றன. அதன்மூலம் அனைத்து உயிர்களும் சமமான



பிறப்புடையவை அவை அனைத்திற்கும் விடுதலை மற்றும் சமஉரிமைகள் சொந்தமானவை.

3. நாடுகளில் குழுக்களும் பொருளியல், சமூகம், பண்பாடு, குடியுரிமை மற்றும் அரசியல் உரிமைகளில் சமஉரிமை உண்டு என்ற நோக்கில் மனித உரிமைகளை தீர்மானிக்கவேண்டும்.

4. நாட்டவையின் தீர்மானங்கள், அறிக்கைகள், பரிந்துரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆண், பெண் உரிமைகளில் ஐக்கிய நாட்டவையின் சிறப்பு உறுப்புகள் மேற்கொண்டுள்ள செயல்களுக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும்.

5. பெண்களின் உரிமைகளைப் பாதிக்கக்கூடிய பாகுபாடுகளைத் திரும்ப பெற்றுக்கொள்ளுதல் மூலமாக சமத்துவ உரிமைக் கோட்பாடுகள் நிலை நாட்டப்பட வேண்டும்.

6. பெண்களிடம் உள்ள முக்கியமான சிறப்புப் பண்புகள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும்.

7. வறுமைமிக்க நேரங்களிலும் பெண்களுக்குத் தேவையான அளவு உணவு, சுகாதாரம், கல்வி, பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான வசதிகள் ஆகியவற்றை எட்ட வகை செய்தல் வேண்டும்.

8. ஆண், பெண் பாகுபாடுகள் காணப்பட்டு, சமத்துவ நோக்கில் புதிய சர்வதேச பொருளாதார தத்துவம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

9. இனவெறி, குடியேற்றக் கோட்பாடு, புதிய குடியேற்றத்தத்துவம், அயலவர் பிறரது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுதல் ஆகியவற்றைத் தவிர்த்தல் மூலமாகப் பலநாடுகளிலும் பாலியல் வேறுபாடுகள் களையப்பட்டு சமத்துவம் உருவாக்கப்படலாம்.

10. சர்வதேச அளவில் அமைதி, பாதுகாப்பு, பன்னாட்டுக் கூட்டுறவை உருவாக்கல் உலகநாடுகளுக்குப் பொதுவான சமூகம் மற்றும் பொருளாதாரத் திட்டங்களை உருவாக்குதல், முழுமையான படைக் குறைப்புதனை நடைமுறைப்படுத்துதல், அணு ஆயுதங்களை உலகளாவிய அளவில் தடைசெய்தல், குடியேற்றக்கோட்பாடுகளில் இல்லாதவாறு விடுதலை மற்றும் சுயநிர்ணய உரிமைகளை மக்களுக்கு வழங்குதல் போன்றவற்றின் மூலம் பெண்களின் வலிமையை நிலைநாட்டுதல்

11. பெண்கள் எந்த அளவிற்கு குடும்பம் மற்றும் சமுதாயம் போன்றவற்றிற்கு அளித்துள்ள கொடைகள் சார்பில் பெண்களை சமுதாயம் முழுமைக்கும் பொறுப்புடையவர்களாக ஆக்குதல்.

12. சமுதாயத்தில் ஆண் மற்றும் பெண்களிடையே காணப்படும் பாரம்பரியப் பணிகள் பற்றிய மாற்றங்களை உணர்ந்து செயல்படல்.

இவ்வாறு பலதரப்பட்ட கருத்தியல்களின் சார்பாகவே கீழ்க்காணும் சிறப்புத் திட்டங்கள் ஐந்து பாகங்களாக மொத்தம் 30 பிரிவுகளாக விளக்கப்பட்டுள்ளன.

பாகம் I

பிரிவுI: 'பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள்' என்ற பதங்கள், பெண்களுடைய தகுதி மற்றும் ஆண், பெண் சமத்துவம் போன்ற காரணிகளால் மேற்கொள்ளப்பட்ட வேறுபாடுகள் மற்றும் கட்டுப்பாடுகளை நீக்குதல் என்பதாகும். அது அவர்களுடைய அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு, குடியுரிமை மற்றும் பிற பண்புகள் அடிப்படையிலும் அமையும்.

பிரிவு2: பெண்களின் பலதரப்பட்ட பாகுபாடுகளையும் எதிர்ப்பதற்காக சீரான வழிமுறைகளைப் பின்பற்றுவதையும், எவ்விதமான தாமதமுமின்றி அத்தகைய பாகுபாடுகளை தீர்க்கவும் கீழ்க்காணும் வழிகளைப் பின்பற்ற அரசுகள் ஒப்புக் கொள்ளவேண்டும்.

அ. ஆண், பெண் சமத்துவத்தை தமது தேசிய அரசியலமைப்புகள் மற்றும் தேவையான சட்டங்கள் மூலம், இத்திட்டத்தின் உண்மைத் தன்மையை உணர்ந்து, நடைமுறைப்படுத்த முயலுதல்.

ஆ. பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைத் தடை செய்யத் தேவையான சட்டங்கள் மற்றும் பிறவழிகளைப் பின்பற்றுதல்.

இ. பெண்களுக்கும் ஆண்களைப்போல் உரிமைகளின் சட்டப்படியான பாதுகாப்பினை ஏற்படுத்தித் தருதல். தேவைப்பட்ட தேசிய தீர்ப்பாயங்கள், பொதுநல அமைப்புகள் மூலம் பாகுபாடுகளுக்கான எதிர்ப்பினை உருவாக்குதல்.

ஈ. பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளைத் தவிர்த்தல். பொது அமைப்புகளும், பொதுப் பணியாளர்களும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபடல்.

உ. தனிநபர், அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் மூலமாகவும் மேலே கூறப்பட்ட பாகுபாடுகளைத் தவிர்த்தல்

ஊ. தேவைப்பட்ட சட்டங்கள் மூலமாகவும், இருக்கக்கூடிய சட்டங்கள், வழக்காறுகள், விதிமுறைகள், நடைமுறைகள் ஆகியவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்தல் வாயிலாகவும் அத்தகைய செயல்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

எ. பெண்ணியப் பாகுபாடு பற்றியுள்ள சட்டங்களையும் விலக்கிக் கொள்ள வேண்டும்.

பிரிவு 3. இப்பகுதியானது அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரிவுகளில் பெண்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காரணமாக அரசுகளை முடிவெடுக்கச் செய்து அவற்றை நீக்குவதற்கான உத்திரவாதங்களை நல்குதல், மற்றும் ஆண்களுக்குச் சமமான மனித உரிமைகள் மற்றும் அடிப்படை விடுதலைகளைக் கவனித்தல் என்பனவற்றைக் கூறுகின்றது.



பிரிவு 4 அ) தற்காலிக சிறப்புப்பணிகளின் மூலமாக நடைமுறையிலுள்ள செயல்களை முடுக்கிவிடச் செய்தல். ஆனால் அவை தேவையற்றதாய் சமமானதாக இல்லாமல் இருக்கக்கூடாது. அப்போதுதான் சமத்துவத்திற்கான சந்தர்ப்பங்கள் தரப்படும் என்பதைப் புரிந்து கொள்ளச்செய்யவேண்டும்.

ஆ. மகப்பேறு அடிப்படையிலான பாகுபாடுகள் பற்றிய இத்தகைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பிரிவு 5 அரசுகள் கீழ்க்காணும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

அ. ஆண்கள், பெண்களுக்கிடையிலான சமூக, பண்பாட்டு மாற்றங்களைத் திருத்தியமைத்தல். அதன்மூலம் குறைபாடுகள், வழக்காறுகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை பாலியல் அடிப்படையில் கீழான அல்லது மேலான முறைகளில் நடைமுறைப் படுத்துதல்.

ஆ. மகப்பேறு என்பது ஒரு சமூகப்பணி என்ற நோக்கில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அத்துடன் ஆண், பெண்களின் பொதுப்பொறுப்புகளுடன் குழந்தைகளின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும். குழந்தைகளைப் பொறுத்தவரை இதனை ஒரு அனுபவமாக அறிந்து கொள்ளப்பட வேண்டும்.

பிரிவு 6: சட்டங்கள் மூலம் பெண்களுக்கான குறைகளைக் களைதல், மேலும் பெண்களைச் சுரண்டலைத் தவிர்த்தல் ஆகியவற்றை அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

பாகம்II

பிரிவு 7: ஆண்களுக்குச் சமமான வகையில் பெண்களுக்கும் உரிமைகள் தரப்படவேண்டும்

அ. பொதுத்தேர்தல் மற்றும் பொதுத்துறை அமைப்புகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்தல்

ஆ. அரசுக் கோட்பாடுகளைத் தீர்மானித்து அவற்றை நடைமுறைப் படுத்தக் கூடியவகைகளில் ஈடுபடல்; அனைத்து அரசாங்கங்களிலும் பணியாற்றிட வாய்ப்பளித்தல்; பொது அலுவலகங்களில் பணிசெய்ய வகை செய்தல்.

இ. அரசு சுகாதார அமைப்புகள், பொதுக்குழுக்கள் மற்றும் தேசத்தின் அரசியல் வாழ்வில் பங்குபெறும் வாய்ப்பளித்தல்.

பிரிவு 8: ஆண்களுக்குச் சமமாகப் பெண்களுக்கும் எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் செயல்படச் சந்தர்ப்பமளித்தல், அதன்மூலம் தமது அரசாங்கத்திற்கு சர்வதேச அளவில் பங்குபெறும் வாய்ப்பினைப் பெற்றுத்தரல். அவற்றுடன் பன்னாட்டு அமைப்புகளில் பெண்களும் பங்கேற்க வகை செய்தல்.

பிரிவு 9: அ. தமது தேசிய இனத்தைப் பொறுத்தவரை அவற்றைப் பெற்று வைத்துக் கொண்டு அதற்கேற்பச் செயல்பட பெண்களுக்கு உரிமை வழங்கப்படல். அந்நிய நாட்டவர் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளுகையில் ஏற்படக்கூடிய தேசிய இனம் பற்றிய சிக்கல்களுக்கு ஒரே சீரான முடிவினை எட்டச் செய்தல். அதாவது பெண்ணை அனைவரின் தேசிய இனத்தவராக இணைத்துக் கொள்ளச் செய்தல்.→

ஆ. பெண்குழந்தைகள் பற்றிய தேசிய இனம் பற்றிய கருத்துக்களில் பெண்களுக்கு சமஉரிமை வழங்குதல்.

பாகம்III

பிரிவு 10: கல்வித்துறையில் பெண்கள் பாகுபடுத்தப்படும் நிலையைத் தவிர்த்து, ஆண்களுக்கு சமமான உரிமையை சமத்துவ நோக்குடன் செயல்படுத்துதல்.

அ. அனைத்து வகையான கல்விநிலையங்கள் மூலமாகப் பெறப்படும் கிராமிய அல்லது நகர்ப்புறக் கல்வியைப் பெற்று தொழில் அமைப்புகளில் சமமான வாய்ப்பும் பெற வழிகாட்டல். இத்தகைய கல்வி பற்றிய கொள்கையானது முதன்மைக் கல்வி, பொதுக்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழில் கல்வி மற்றும் உயர்நிலை தொழில்நுட்பக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆ. சமமான பாடத்திட்டம், சமமான தேர்வு முறை, ஒரே சீரான கல்வித்தகுதியை உடைய ஆசிரியர்கள், பலதரப்பட்ட அமைப்பு சார்ந்த கட்டிடங்கள், தரம் மற்றும் கருவிகள் ஆகியவை சீரான தரம் மிக்கவையாய் அமைதல் வேண்டும்.

இ. கல்வி மற்றும் பிற நிலைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே கொள்கை அடிப்படையில் எழுந்த கல்வியை உருவாக்குதல். அதற்கு ஆண், பெண் இருவரும் பயிலும் கூட்டுக்கல்வி பொறுத்தமானதாகும். அவற்றுடன் பாடப்புத்தகங்கள், பள்ளித் திட்டங்கள், பயிற்சி முறைகள் போன்றவற்றில் மாற்றங்கள் உருவாக்கப்பட்டு ஏற்கப்படவேண்டும்.

ஈ. உபகாரத்தொகை, கல்விக்கான பணஉதவி ஆகியவற்றில் சமமான சந்தர்ப்பங்களை நல்குதல்.

உ. தொடர்கல்விக்கான சந்தர்ப்பங்களையும் செயல்திட்டங்களையும், முதியோர் மற்றும் செயல் நிலைக்கல்வி நோக்கில் தருதல். ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் இடையே கல்வியில் காணப்படும் இடைவெளியை நீக்குதல்.

ஊ. மாணவியர் பாதிநிலையில் படிப்பை நிறுத்திவிடும் போக்கினைத் தவிர்த்தல். சிறுமியர் மற்றும் பெண்களுக்கு பருவமடைதல் காரணமாக ஏற்படக்கூடிய அமைப்புத் திட்டங்களை உருவாக்கித் தருதல்.

எ. உடற்கல்வி மற்றும் விளையாட்டுக் கல்வியில் பங்கேற்கக் கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துதல்.



ஏ. சுகாதாரம், குடும்ப நலன், குடும்பக் கட்டுப்பாடு போன்றவற்றில் தகவல்களைத் தருதல் மற்றும் ஆலோசனை வழங்கல்.

பிரிவு 11: 1. அ) பெண்களுக்கு வேலைவாய்ப்புக்கான நிலைகளில் காணப்படும் பாகுபாடுகளைக் களைதல். அது ஆண் மற்றும் பெண்களுக்குச் சமஉரிமை வழங்குதல் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஆ) பெண்களுக்கும் மாற்ற முடியாத வகையில் பணியாற்றும் வாய்ப்புத் தரப்படவேண்டும். இ) வேலைக்குத் தேர்வு செய்யும் முறையிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே பாகுபாடு காட்டப்படக்கூடாது. இருபிரிவினருக்கும் சமமான வேலை வாய்ப்புத் தரப்படவேண்டும். ஈ) தம்முடைய தொழில் மற்றும் பணிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெண்களுக்குத் தரப்படவேண்டும். அதேபோல் பதவி உயர்வு, பணிப்பாதுகாப்பு, சீரான பணிமுறையமைவுகள், பணிப்பயிற்சிகள் போன்றவற்றிலும் சமத்துவம் தேவையெனப்படுகின்றது. உ) ஊதியம், பணிகளின் போது தரப்படும் சலுகைகள், ஒரே சீரான மதிப்புடைய பணிகள், செய்து முடித்த பணிகளை ஒரே தன்மையுடன் மதிப்பீடு செய்தல். ஊ) ஓய்வுக்குப் பின்னால், வேலையில்லாமல் இருக்கையில், பிணியுற்றிருக்கும் போது, முதுமைகாரணமாக முடியாமலிருக்கும் போது, ஊதியத்துடன் கூடிய விடுப்பினைப் பெறல் போன்றவற்றில் சமூக பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தரப்படல் வேண்டும். எ) பணிகளில் ஈடுபட்டிருக்கும் போது பாதுகாப்புடன் செயல்பட வகை செய்தல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

2. திருமணம் மற்றும் குழந்தைப்பேறு போன்ற நிலைகளில் பெண்கள் பாகுபடுத்தப்படுவதைத் தடை செய்யக் கூடியவகையில் கீழ்க்காணும் பரிந்துரைகள் தரப்பட்டுள்ளன. அ) பிள்ளைப்பேறு அல்லது குழந்தை பெறுதலைக் காரணமாகக் காட்டி அவர்களை பணிகளினின்றும் தடுத்தல், விடுப்பு தர மறுத்தல் மற்றும் மண உறவு காரணமாக பதவி நீக்கம் செய்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் ஆ) பிற சமூக உதவிகளுடன் ஊதியத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பு தரப்படவேண்டும். அவர்களுடைய பணிமூப்பு தன்மையும் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இ) பெற்றோர்களுக்கு குடும்பப் பற்றுடன் கூடிய சமூகத் தொண்டுதனை பொது வாழ்வில் மேற்கொள்ளுதல் குழந்தை நல வசதிகளைத் தோற்றுவித்து வளர்ச்சிக்கு வகை செய்தல் ஈ) கருவுற்ற பெண்களுக்குத் தேவையான அளவு பணிமாற்றங்கள் செய்து தந்து அவர்களுக்கு மனிதாபிமான நோக்கில் உதவியளித்தல்.

3. மேலே கூறப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகள் எவ்வாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நோக்கில் ஆய்வு செய்தல். தேவைக்கேற்ப மாற்றங்கள் செய்தல், விரிவாக்கம் செய்தல் அல்லது நிறுத்தி வைத்தல் போன்றவற்றை மேற்கொள்ளல்.

பிரிவு 12

1. சுகாதார அடிப்படைகளில் பெண்களுக்குக் காட்டப்படும் பாகுபாடுகளைக் களைதல் வேண்டுமென்றது. ஆண், பெண்

இருபாலருக்கும் சமமான சுகாதார உதவிகளுடன் குடும்பநலத்திட்டம் பற்றிய முடிவுகளும் எட்டப்பட வேண்டும்.

2. பிள்ளைப்பேற்றின் போது அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

**பிரிவு 13**

1. பொருளாதார சமூகப் பண்புகளில் பெண்களுக்கு குடும்ப உதவிகள் செய்யப்பட வேண்டும்.
2. வங்கிக் கடன்கள், அடமானம் வைத்தல் மற்றும் பொருளாதார வசதிகளைச் செய்துதரல் வேண்டும்.
3. விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் மனமகிழ்ச்சிக்கான பணிகளில் ஈடுபட வசதி செய்யவேண்டும்.

**பிரிவு 14**

1. கிராமியப் பெண்களின் பொருளியல் மற்றும் குடும்பம் சார்ந்த, பணிகள் அடிப்படையிலான சிக்கல்கள் பற்றி எண்ணப்பட வேண்டும்.

2. அ) கிராமியப் பெண்களிடையேயுள்ள பாகுபாடுகளை நீக்கி ஆண்–பெண் சமத்துவத்தை உருவாக்கி கிராம முன்னேற்றம் போன்ற வழிகளில் உரிமைகள் தரப்பட வேண்டும். ஆ) வளர்ந்து வரும் திட்டங்களுக்கான மேம்பாட்டுக்காக போதுமான சுகாதார உதவிகளைத்தரல், தகவல்தரல், ஆலோசனை வழங்கல் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய செய்திகளைத்தரல். இ) சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல். ஈ) முறையுடன் கூடிய, முறைசாராக் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குதல். செயல்முறைக் கல்வி, சமூக கால மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் பெண்களுடைய தொழில் நுட்ப மேம்பாட்டினை வளர்ச்செய்தல். உ) கூட்டுறவு நோக்கில் தொழில் மற்றும் சுயதொழில் நோக்கில் சுய உதவிக்குழுக்களை நிறுவுதல். ஊ) அனைத்துவிதமான சமுதாயப் பணிகளிலும் பங்கேற்க வாய்ப்பளித்தல். எ) தேவையான அளவு கிராமிய மற்றும் விவசாயக் கடன் வசதிகள், சந்தை வசதிகள், தொழில் நுட்ப உதவிகள் கிராம மற்றும் நகர்புறச் சீர்திருத்தங்களில் செயல்படுவதற்கான திட்டங்களை தீட்டுதல். ஏ) வீடு, சுகாதாரம், மின்சாரம், நீர்வசதி போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றுடன் கூடிய வசதிகளைத் தேவையான அளவு ஏற்படுத்தித் தருதல்.

**பாகம் IV**

பிரிவு 15: 1. சட்டத்தின் முன் ஆண், பெண் இருவரும் சமம் என்ற நிலையை உருவாக்குதல்.

2. ஒப்பந்தங்கள் செய்து கொள்ளல், சொத்துக்களைப் பராமரித்தல், நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயங்கள் முன் சமமாகச் செயல்படல்.
3. பெண்களின் சட்டபூர்வமான, வலிமையான செயல்கள் தவிர்க்கப்படுதலைத் தடுத்து நிறுத்துதல்.



4. நடமாட்டம் மற்றும் தமக்கு விருப்பமான உறைவிடம் மற்றும் இருப்பிடத்தைத் தேர்வு செய்யும் உரிமையைப் பெண்களுக்குத் தருதல்.

**பிரிவு 16:**

1. அ) பெண்கள் பாகுபடுத்தப்படுதலைத் தவிர்க்க கூடிய வகையில் திருமணம் மற்றும் குடும்பத் தொடர்பு ஆகியவற்றில் மாற்றங்களை உருவாக்குதல். ஆ) திருமணம் செய்துகொள்ளும் உரிமையை வழங்கல். இ) தம்பதிகளாகப் போகின்றவர்கள் இருவருடைய ஒப்புதலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திருமணத்தை ஏற்றல். ஈ) திருமணம் மற்றும் மணமுறிவின் போது இருசாராருக்கும் சம உரிமைகளை நல்குதல். உ) திருமண அந்தஸ்து இல்லாமல் குழந்தைகளுக்கு பெற்றோர் தமது கடமைகளை ஆற்ற வகை செய்தல். குறிப்பாகக் குழந்தைகளின் நலனை முக்கியமாகக் கொண்டு செயல்பட பெற்றோருக்கு வாய்ப்பளித்தல். ஊ) குழந்தைகளுக்கான இடைவெளி, கல்வி போன்றவற்றில் தாய் மற்றும் தந்தைக்குச் சமமான உரிமைகள் தரப்படவேண்டும் எ) குழந்தைகள் பாதுகாப்பு, வளர்ப்பு, தர்மகர்த்தாவாகச் செயல்படல், தத்து எடுத்தல் போன்றவற்றிலும் கணவன் மனைவிகளுக்கு சம வாய்ப்பளித்தல் ஏ) தொழில், பணி, குடும்பப் பெயர் ஆகியவற்றை மேற்கொள்ளுவதில் கணவன் மற்றும் மனைவிக்கு உரிமையளித்தல். ஐ) சொத்தினைப் பெறல், உடைமையாக்கல், நிர்வகித்தல், மேலாண்மை செய்தல், அனுபவித்தல், விற்றல் போன்றவற்றில் இருபிரிவினருக்கும் சம உரிமை தரப்பட வேண்டும்.

2. திருமண நிச்சயதார்த்தம், குழந்தைகளின் திருமணம் ஆகியவற்றில் பெற்றோர் இருவரும் சமமான உரிமையுடையவர்கள். திருமணத்தைப் பதிவு செய்தல் இருவருக்கும் பொதுவானதாக ஆக்குதல்.

**பிரிவு 17:**

உறுப்பினர்கள் தேர்வு பற்றிக் குறிப்பிட்டுள்ளது. அதனையொட்டியே 18 முதல் 25 வரையுள்ள பிரிவுகள் விதிமுறைகள், பணிகள் போன்ற பலவற்றைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு ஐக்கிய நாட்டவை என்ற பன்னாட்டு அமைப்பானது பல்தரப்பட்ட வழிவகைகளைப் பெண்கள் மேம்பாட்டிற்காகப் பல வழிகளைப் பின்பற்றி வருகின்றது. அவை படிப்படியான பல துறைகள் சார்ந்த கருத்தமைவுகளாக, வழிகாட்டிகளாக, செயல்திட்டங்களாக உள்ளன. உலகளாவிய நிலையில் பெண்கள் பற்றிய பொது வளர்ச்சிக்கு ஐக்கிய நாட்டவை செயல்படுகின்றதெனில் மிகையன்று. மேலும் ஒருங்கிணைப்பு என்ற நிலையிலும் பெண்கள் முன்னேற்றம் எட்டப்பட ஐக்கிய நாட்டவை செயல்படுகின்றது. எனவே மகளிர் அல்லது பெண்கள் வளர்ச்சிக்கு உலகளவில் முக்கியத்துவம் உள்ளதென்பது கண்கூடு.

# 11. பெண்கள் மதிப்பு நிலை

## (Status Role of Women

### முன்னுரை

வரலாற்று ஏடுகளில் எண்ணில்லா ஆட்சியாளர்கள், அறிவியல் மேதைகள், சமூகவாதிகள், புரட்சியாளர்கள், பொருளியல் கோட்பாட்டாளர்கள், சிந்தனைவாதிகள், ஆய்வாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், சமயச்சான்றோர் எனப் பலதரப்பட்ட பிரிவினரைக் காணலாம். அவர்களுள் பெண்களைப் பற்றிய செய்திகள் பாலைவனப் பசுஞ்சோலையென ஆங்காங்கே ஓரளவிற்கே தென்படுகின்றன. அதற்குக் காரணம் பெண்ணினத்திற்கு அதற்கான வாய்ப்புகள் நல்கப்படவில்லை என்பதே. அதன் விளைவே அவர்களது பின்தங்கிய ஒடுக்கப்பட்ட தேக்கநிலை. "இறைவனின் படைப்பிலே மிக மதிப்பும், பெருமையும் மிக்க படைப்பு பெண். அவர்கள் தமது இயல்புகளுக்கு உட்பட்ட பணிகளை நிறைவேற்றுவதில் மேம்பட்ட நிலையில் உள்ளனர்" (காந்திஜி) ஆனால் அதே நேரத்தில் "பெண் இளமையில் தனது தந்தைக்கும், திருமணத்திற்குப்பின் கணவனுக்கும், கணவனது மறைவுக்குப்பின் தன்னுடைய பிள்ளைகளின் பாதுகாப்பிலும் இருக்கவேண்டும்; பெண்ணானவள் எப்போதும் அடிமை நிலையினின்றும் விடுபட்டவள் அல்ல" என மனுதர்மம் பகர்கின்றது. கிறித்துவ வேதாகமத்தில் பால்முனிவர் "பெண்கள் இறைவனுக்குக் கட்டுப்படுவதைப் போல் தனது கணவருக்கும் அடங்கியிருத்தல் வேண்டும்" எனப் பகர்ந்துள்ளார். 1872 –ல் அமெரிக்கா உச்ச நீதிமன்றம் " பெண்களின் குறிக்கோளும் உயர்நிலையிலுள்ள தன்மையும் அவர்கள் மனைவி மற்றும் தாய் என்ற அலுவல்களை செவ்வனே செய்து முடிப்பதாகும்" எனக்கூறியது. "தையல் சொல்கேளேல்" என்பது தமிழ் மூதாட்டியின் கருத்து. பாலின ரீதியிலான பகுப்பும் வேலைப் பாகுபாடுகளும் அவர்களை அடிமைகளாக ஆகச்செய்தன. "பெண் புத்தி பின் புத்தி" "ஆவதும் பெண்ணாலே; அழிவதும் பெண்ணாலே" என்பனவற்றுடன் "ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே" என்றும் மற்றும் தந்தை, மன்னர், மகன், ஆகியோரது கடமைகளையும் புறநானூற்றுத் தாய் கூறும்போதும் பெண்ணின் இரண்டாந்தரத்தன்மை புலனாகின்றது. இவற்றின் மூலம் பெண்கள் உரிமைகளேதுமின்றி, எவ்விதமான போற்றுதல்களுக்கும் ஆளாகாமல் கீழான நிலையில் தமது பொறுப்புகளையும், இல்லறக்கடமைகளையும் நிறைவேற்றும் இயந்திரப்பொறிகளென செயல்படச் செய்யப்பட்டனர். ஆண்களைவிட பெண்களுக்கு திருமணமும், குடும்பமும் முக்கியமானவை என்ற கருத்து மேலோங்கிக் காணப்பட்டது. ஆனால் காலஓட்டம் ஒரே சீரானதாக இருப்பதில்லை. ஏற்றத்தாழ்வுகள், மாற்றங்கள் ஆகியன இயற்கையின் நியதி. அதனால் "ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம்" என்ற நோக்கில் 'பெண்ணியல்'(Women Studies) மாற்றங்களைச் சந்திக்க வேண்டியதாயிற்று

ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடல்ரீதியான வேற்றுமைதவி பிற வேறுபாடுகள் இல்லையென்பது உணரப்பட்டு இருபாலரும் சமமாக கருதப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. பெண்களின் வாழ்க்கையில் மரபிய



அடிப்படையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றது. உலகளவில் பெண் அடிமைத்தனமானது திட்டமிடப்பட்ட கருத்தியல்களாக மாற்றப்பட்டமையால் பெண்களைப் பேதைகளாகவே காட்டும் நிலை நீடித்த பண்பாகவே இருந்தது. இருபதாம் நூற்றாண்டில் இந்நிலை மாறுபடலாயிற்று. பெண்ணியம் முக்கியத்துவம் பெறலாயிற்று. பெண்ணியல் விளக்கமாக விரிவடையலாயிற்று. ஆணினத்தின் ஆதிக்கம் என்ற அறியாமை இருள் விலகி விடியல் ஏற்படலாயிற்று.

### பாரதி கண்ட புதுமைப் பெண்கள்

"தையலை உயர்வு செய்"-என்ற சிந்துக்குத் தந்தையான பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியின் வேண்டுகோளுக்கேற்ப நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் உடையவர்களாய் பெண்கள் இன்று பலதுறைகளில் படைப்பாளிகளாக மாறியுள்ளனர். சாத்திரங்கள் பலகற்று, சவுகரியங்கள் பலசெய்து, மூத்த பொய்மையாவற்றையும் அழித்து, மூடக்கட்டுகளைத் தகர்த்து ஏற்றங்கள் பலபெற்று ஆண்மக்கள் போற்றிட வாழும் நிலை வந்துள்ளது. சுயாதீனம், சுதந்திரம், அஞ்சாமை, நாட்டுப்பற்று, பண்பாட்டுச் சிறப்பு போன்றவற்றை பெண்கள் உணர்ந்து தமது நடைமுறை வாழ்க்கையினை மாற்றிக் கொண்டு வளமுடன் வாழ வகை ஏற்படுத்த விழைகின்றனர். அவர்களது அறிவுதனை ஒடுக்கி மூடத்தனமான கண்மூடி வழக்கங்களுக்கு உட்படுத்தி அடிமையுறச் செய்வது தீமை என்பது உணரப்பட்டுள்ளது. வையகத்தை மாற்றி புதுமையுறச் செய்து பொலிவூட்டவும், மனிதர்தம்மை அமரராக்கவும் ஆற்றல் கொண்ட பெண்ணினம் உண்மையை, நடைமுறையை, யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றது. அது ஏற்றத்திற்கோர் திறவுகோலாகத் திகழ்கின்றது. சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும், பாரினில் பெண்களாலும் இயலுமென்பதை இன்று செயலால் "எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை" என மெய்ப்பித்து வருகின்றனர். "கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்" என்ற கருத்து அவர்களுள் ஆழமாக வேரூன்றியுள்ளமையால் பெண்களை இரண்டாம்தரக் குடிமக்களாகக் கருதப்படுவது அவர்களுக்கு ஏற்புடையதல்ல. அதனால்

"மனை மாட்சி நன்குடையரேனும் மகளிர்க்கு
வினைமாட்சி வென்றி தரும்" என்ற முப்பால் மொழிக்கேற்பத்

தம்மைப் பல துறைகளுடனும் பின்னிப்பிணைத்துக் கொள்கின்றனர். அதற்கேற்பத் தம்மைத் தயார் செய்து கொள்ளுகின்றனர்.

### 21-ம் நூற்றாண்டில் பெண்கள் நிலை

வெறும் குழந்தை பெறும் இயந்திரமெனக் கருதப்பட்ட பெண்ணினம் இன்றைய 21ஆம் நூற்றாண்டில் வியக்கத்தக்க மாற்றங்களுக்குத் தன்னை உட்படுத்திக் கொண்டுள்ளது. ஆணுக்குப் பெண் சரிநிகர் சமமாக வாழவேண்டுமென்ற கோட்பாட்டால், உந்துதலால், கண்மூடி வழக்கங்களை மண்மூடிப்போகச் செய்துள்ளனர். மாறுபட்ட பல்வேறு துறைகளிலும் தம்முடைய அறிவாற்றல் பெருக்கம் மற்றும் சமூக அங்கீகாரம் காரணமாகவும்

தமது திறமை, வலிமை மற்றும் படைப்பாற்றல்களை வெளிப்படுத்தி உச்சநிலையை எய்தியுள்ளனர். அத்தகைய செயல் ஊக்கத்திற்கு ஆளானோர் ஒரு சிறிய பிரிவினரேயாயினும் அவர்கள் பெண்ணின வளர்ச்சி, மேம்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கோர் வலிமைமிக்க அடித்தளத்தை அமைத்துள்ளனர். தமது முன்னணிப் பணிகள் காரணமாகப் பலரையும் தம்மைப் பின்தொடரச்செய்யும் முன்னோடி வழிகாட்டிகளாகவும் திகழ்கின்றனர். பெண் எழுத்தாளர்கள், மருத்துவர்கள், வக்கீல்கள், பொறியாளர்கள், ஆட்சியாளர்கள் எனப் பலநிலைகளிலும் ஏற்றம் பெற்றுள்ளனர். வாலன்டினா டெரெஸ்கோவாவைத் தொடர்ந்து விண்வெளி ஆய்வில் தன் உயிரையும் தந்தவர் இந்திய வீராங்கனை கல்பனா சாவ்லா. பி.டி. உஷா, அஞ்சு ஜார்ஜ், வலசம்மா, சானியா மிர்சா போன்ற விளையாட்டு வீராங்கனைகள் மார்ட்டினா நவரோதிலோவா போன்றவர்களுக்குச் சமமானவர்களாக வளர்ச்சியும் ஏற்றமும் கண்டுள்ளனர். அன்றைய அரசியலில் அன்னை கஸ்தூரிபாய், கமலா நேரு, விஜயலட்சுமி பண்டிட், இந்திராகாந்தி, கவிக்குயில் சரோஜினி, அன்னிபெசன்ட், அருணா அசப்அலி, மீரா பென், பிகாஜிகாமா, மிருதுளா சாராபாய், சகோதரி நிவேதிதா ஆகியோர் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்ந்தமையால் இன்றும் பெண்கள் அரசியலில் ஈடுபாடுகாட்டுகின்றனர். செல்வி ஜெயலலிதா போன்ற மாநில முதலமைச்சர்களும் தமது ஆற்றலால் மேம்பட்ட நிலையை எய்தியுள்ளனர்.

### பெண்ணியத்தின் காந்தியச் சிந்தனை

காந்திய சிந்தனையில் எழுந்த மாற்றங்களுக்குத் தென்னாப்பிரிக்க மண்ணில் உருவங்கொடுத்தவர் தில்லையாடி வள்ளியம்மாள். சாத்விகச் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டமைக்காக சென்னையில் முதன் முதலில் கைது செய்யப்பட்டவர் ருக்மணி இலட்சுமிபதி ஆவார். "என்னுடைய பேரவா இந்திய விடுதலையே" என முழங்கிய சத்யவதி மேடைப் பிரச்சாரம் அயல்நாட்டுத் துணிக்கு எதிர்ப்பு, கதர்ப்பிரச்சாரம் போன்றவற்றின் மூலம் தன்னுயிரை நாட்டுக்காக ஈந்தவர். நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் உருவாக்கிய பெண்கள் படைப்பிரிவான ஜான்ஸிராணி பிரிவில் லெப்டினன்ட் கர்னலாக பணியாற்றி தன்னுடைய விடுதலை வேட்கையை வெளிப்படுத்தியவர் கேப்டன் இலட்சுமி. இவற்றுக்கெல்லாம் காரணம் பெண்குலத்திலகங்களின் பேராற்றலும், பொதுநலநோக்கும், சுயநலமின்மையும், தொண்டுமனப்பான்மையும் தான் எனக் கூறினால் மிகையாகாது. இவற்றினால் பெண்ணினத்தின் மதிப்பும் நிலையும் உயர்ந்தனவெனில் அது வெறும் புகழ்ச்சியில்லை; உண்மையேயாம்.

பெண்ணினத்தின் பெருமைக்கும், உயர்நிலைக்கும் காரணமாக வேறு சிலரையும் காணலாம். அவற்றினை உணர்தல் வாயிலாக பெண்களின் நிலை மற்றும் மதிப்பு ஆகியவற்றை உணரவியலும். கண்மூடி வழக்கங்களை மண்மூடிப் போகச்செய்யும் வழியில், புரையோடிக்கிடந்த சமூக மற்றும் சமுதாய மரபுகள் மற்றும் வழக்காறுகளைத் தகர்த்தெறிந்து ஆணுக்கும் பெண்ணுக்கும் செயல்பாடுகளில் வேறுபாடில்லை என்பதை நிரூபித்தவர் 13, ஜுன் 2005–ல் தாய்க்குக் கொள்ளி போட்ட ரேகா. இது சமுதாய மறுமலர்ச்சியின் விளைவு. அதேபோல் ஆற்றலிலும் வீரத்திலும் ஆண்களுக்கு பெண்கள்



சளைத்தவர்களல்ல என்பதை நிரூபித்தவர் 2004–ஆம் ஆண்டுக்கான கல்பனா சாவ்லா விருது பெற்ற கடலூர் சாமியார் பேட்டை மீரா. 26, டிசம்பர் 2004–ல் ஏற்பட்ட சுனாமியின்போது எண்ணற்ற உயிர்களைக் காத்தவர் என்ற பெருமைக்கு உரிமையாளர் அவர்.

### இந்தியப் பெண்கள் சந்தித்த சவால்கள்

இந்தியாவில் முதல்முதலாக பெண்களுக்காகவே "இந்தியன் லேடீஸ்" என்ற இதழைத் தொடங்கி, பத்திரிக்கைத் துறையில் பெண்களின் பங்கினை நிலைபெறச் செய்தவர் பெண். கமலா சுவாமிநாதன், வை.மு.கோதைநாயகி போன்றோர் அவ்வரிசையில் இடம் பெற்றனர். இருபதாம் நூற்றாண்டுதனை பெண்களின் மதிப்பையும் நிலையையும் உயரச் செய்த ஒரு உன்னத நூற்றாண்டு. அக்காலகட்டத்தில் தொடங்கிவைக்கப்பட்ட இயக்கங்கள் இன்னும் பல பெயர்களில் பல்கிப் பெருகி பெண்ணின பெருமையைப் பறைசாற்றுகின்றன. பெண்கள் இந்திய அமைப்பு, அனைத்து இந்தியப் பெண்கள் கூட்டமைப்பு, இந்தியப் பெண்கள் தேசியக் குழு போன்றவை பெண்ணின் பெருமையை நிலைநாட்ட மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் ஆகும். அதேபோல் 1927–ல் மார்க்கரெட் கஸின்ஸ் துவங்கிய இந்தியப் பெண்கள் அமைப்பு சமூக, அரசியல் உரிமைகளைப் பெண்களுக்குப் பெற்றுத்தர போராடியது. 1972ல் அகமதாபாத்தில் உருவாக்கப்பட்ட சுயவேலையில் ஈடுபடும் பெண்கள் அமைப்பு (Self-Employed Women's Association-SEWA) இன்றுள்ள பெண்கள் அமைப்புகளுக்கு முன்னோடியாகத் திகழ்வதுடன் பெண்களுக்கு உற்பத்தி மற்றும் சந்தையிடல் போன்ற வர்த்தக உத்திகளில் வழிகாட்டியாகத் திகழ்கின்றது.

தமிழகத்தில் நாமக்கல் வட்டாரத்தில் செயல்படும் செல்வி நினைவு எய்ட்ஸ் நோயாளிகள் நிறுவனம், பெண்கள் அமைப்பான அன்புக்கரங்கள் ஆகியன பெண்களின், எச்.ஐ.வி. கிருமிகளால் பாதிக்கப்பட்ட அதிலும் நோயுற்ற பெண்களின் வளர்ச்சியில் காட்டும் ஈடுபாடு காரணமாக பெண்கள் நிலையும், மதிப்பும் உயருகின்றன. 1988–ல் அதிதி என்ற அமைப்பு பெண் குழந்தைகளைக் கொல்வதைத் தடை செய்வதற்காக விஜயலட்சுமி என்பவரால் உருவாக்கப்பட்டது. 1997–ல் சென்னையில் ஏழைப் பெண்களின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் சென்னை தொண்டுநிறுவனம் உருவாக்கப்பட்டது. ஏழைப் பெண்களுக்கு வீட்டு மருத்துவம், கணினியைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களுடைய நிலையை உயர்த்த அந்நிறுவனம் பணிபுரிகின்றது.

1978–ல் ஜெயா அருணாச்சலம் என்பவரால் துவக்கப்பட்ட உழைக்கும் மகளிர்க்கான அமைப்பு தமிழகம், கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள வறுமையில் வாடக்கூடிய சுமார் ஏழு இலட்சம் பெண்களுக்கு பொருளியல் மேம்பாட்டிற்கு உதவுகின்றது. அவர்களது நிலையை உயர்வடையச் செய்ய இந்திய கூட்டுறவுவள மையம், முறைசாரா கங்கித்திட்டம் ஆகியன நாடப்படுகின்றன. உழைக்கும் மகளிர் சமூகச்செயலரும், சமூக சேவகியுமான ஜெயா அருணாச்சலத்திற்கு அமெரிக்க வைட்டல் வாய்சஸ் (Vital Voices) கழகம் 2005 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதார வளர்ச்சிக்கான விருதினை நல்கியுள்ளது. இது பெண்களின்

மதிப்பு இன்று எவ்வளவு உயர்ந்துள்ளதென்பதை எடை போடத் துணையாகிறது.

பெண்கள் கட்டுப்பெட்டிகளாய் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தலை விடுத்து கல்வி கற்று சுயச்சார்பு நிலையை எட்ட முடியுமென்பதற்கு ஏராளமான சான்றுகளைக் கூறலாம். அவற்றின்மூலம் பெண்கள் தம்முடைய நிலைதனில் உயர்வுற்று மதிப்புறு தன்மையை அடைந்துள்ளனரென்பதைக் காணலாம். இன்றைய மாறிவரும் சமூகச்சூழல் காரணமாக மகளிர் பல வழிகளிலும் தமது பண்டைய முன்னோர்களின் நிலையினின்றும் மாறுபட்டு பல பணிகளில் ஈடுபடுகின்றனர். ஒருசாரார் கல்வியகங்கள், அலுவலகங்கள், பணியிடங்கள் போன்றவற்றில் பணியாற்றி ஊதியம் பெற்று தமது உழைப்பின் மேன்மையால் உயர்நிலையை எட்டுகின்றனர். மற்றொரு சாரார் தமது உழைப்புடன் பணத்தையும் முதலீடு செய்து தொழில்முனைவோராகப் பணியாற்றுகின்றனர். இருசாரருமே பொருளியல் உலகில் தமது தனித்த ஆற்றல்கள் வாயிலாக வலுவும் மதிப்பும் பெற்ற நிலையில் உள்ளனர். மகளிர் தொழில் முனைவோர்களைப் பெருக்கக்கூடிய வகையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் அரசினால் 1991–92 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் மூலம் "பரிசோதனைச் சாலையிலிருந்து நிலத்திற்கு" பெண்களை வழிநடத்த வகை செய்யப்படுகின்றது. தொழில் முனைப்பு வளர்ச்சி திட்டங்கள் (Enter preneurship Developement Programme- EDP) ஆமதாபாத்திலுள்ள தொழில் முனைப்பு வளர்ச்சி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு பெண்களின் சமூகப் பொருளாதார நிலைகள் வளர வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் மாவட்டங்களில் ஆட்சியாளர்களாகத் திகழ்ந்த பெண்களும் பல வழிகளில் பெண்கள் நிலையை உயர்த்த முறையான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தினர். எடுத்துக்காட்டாக புதுக்கோட்டை மாவட்டத்தில் ஷீலா சுங்கத் என்ற மாவட்ட ஆட்சியாளர் பெண்களுக்கு செயற்கையாக வைரத்திற்கு பட்டை தீட்டும் தொழிலில் பயிற்சி அளித்து அவர்களது நிலைமை உயர வழிகோலினார். பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் ஆட்சியாளராகச் செயல்பட்ட குத்சியா காந்தி என்பவர் பாசிமணி, ஊறுகாய் செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபடச் செய்து பெண்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார். இதே நிலையில் பெண்கள் எந்த அளவிற்கு சொந்த முயற்சியாலும் பிறர் உதவியாலும் சமூகத்தில் மேம்பட்ட நிலையை எய்தி மதிப்பும், மாண்பும் பெற்றுள்ளனரென்பதையும் தொடர்ந்து காணுதல் வேண்டும்.

தன்னம்பிக்கை, தானே வளர்த்துக்கொண்ட ஆற்றல் காரணமாக 63 வயது நிரம்பிய மீரா கைலாசம் 1991 முதல் ஜி.கே. சிண்டிகேட் என்ற மின்சாரப்பொருட்கள் செய்யும் நிறுவனத்தை நடத்தி வருகிறாள். அவருடைய அயரா உழைப்பு அவருக்கு சமூகத்தில் நிலையான அந்தஸ்தை நிலையாகப் பெற்றுத் தந்துள்ளது.

லக்னோவில் வாழும் ஷீலா என்பவர் தமது நான்காவது வயதில் இரயில் விபத்தொன்றில் இரு கைகளையும் இழந்தவர். இருப்பினும் தளரா விடா முயற்சியுடன் லக்னோ ஓவியக் கல்லூரியில் ஓவியம் தீட்டப் பயிற்சி



பெற்றார். கால்களே அவரது கைகள். கால்களால் ஓவியம் தீட்டி கால்ஓவியர் (Foot Artist) எனப்படுகின்றார். மவுத் அண்ட்புட் பெயின்டிங் அசோஷியேஷன் (Mouth and Foot Association) உறுப்பினரான அவர் குவித்துள்ள பரிசுகள், விருதுகள் பாராட்டுகள் ஏராளம். இது சுயமேம்பாடு என்ற அடிப்படையில் முயன்று பெற்று உயர்நிலை எய்திப் பெற்ற மதிப்பு என்பது காணத்தக்கது. அமெரிக்காவில் பிறந்த ஒரு பெண் பனிச்சறுக்கு விளையாட்டில் தனது சொந்த முயற்சியால் 1973–ல் பனிச்சறுக்கு விளையாட்டில் உலக அளவில் நான்காம் இடத்தைப் பெற்று 1974–ல் அமெரிக்க சாம்பியனானார். அடுத்து ஆஸ்திரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றார். "எந்த ஒரு பனிச்சறுக்கு வீராங்கனைக்கும் கிடைக்காத ஒரு அங்கீகாரமும் பிரபலமும் இவருக்கு கிடைத்தன" இத்துறையில் ஈடுபடுவோர்க்கு பயிற்சியும் தருகின்றார்.

1991–ல் நோபல் பரிசு பெற்ற ஆங்ஷான் சுயீ கீ மியான்மரில் 1989–ல் இராணுவத்துப்பாக்கிகளுக்கு அஞ்சாமல் அந்நாட்டு சர்வாதிகாரத்தை அஹிம்சை முறையில் எதிர்த்துப் போராடினார். 1945–ல் பிறந்த இவர் 1964–67–ல் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார். 1972–ல் ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசனைக் குழுவின் உதவிச் செயலராகப் பொறுப்பேற்று திறம்படச் செயல்பட்டார். 1988 முதல் அரசியல் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 1988 செப்டம்பரில் "விடுதலைக்கான தேசியக் குழு"(National Leagure for Democracy) என்ற அமைப்பின் பொதுச்செயலாளர் ஆனார். 1995 ஜூலை 10 வரை அந்நாட்டு அரசு அவரை வீட்டுக் காவலில் வைத்திருந்தது. இன்று உலகின் மிகப் பெரிய விடுதலைப் பெண் எனத்தனது 60ஆம் வயதில் வர்ணிக்கப்படுகின்றனர்.

இந்தியாவின் பணக்காரப் பெண்மணி எனப் போற்றப்படும். கிரண்மஜீம்தார் ஷா இந்தியாவின் மிகப் பெரிய பெண் தொழிலதிபர். 'பயோகான் கெமிக்கல்ஸ்' என்ற அயர்லாந்து நாட்டு நிறுவனத்தில் பங்குதாரர். கி.பி.2004 ஆம் ஆண்டு அந்நிறுவனம் ரூ 549 கோடிக்கு உற்பத்தி செய்து 137.25 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியது. அதில் கிரணின் பங்கு இரண்டு ஆயிரத்து 160 கோடி ரூபாய். 2001ல் அமெரிக்காவில் தமது மருந்துப்பொருட்களை விற்பனை செய்ய வகை செய்தவரும் கிரண்தான். திறமையும், முயற்சியும் இருந்தால் யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம் என்பதை நினைவு படுத்தி நிற்பவர் அரை நூற்றாண்டு வாழ்க்கையைக் கழித்துவிட்ட அந்த ஆற்றல் மிகு பெண்மணி.

## பெண்ணியத்தின் சமுதாய நோக்கு

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைப் பொதுக்குழுவின் முதல் பெண் உறுப்பினரான பிருந்தாகரட் பெண்கள் முன்னேற்றத்திற்கோர் படிக்கட்டாகத் திகழ்பவர். "தலித்கள், ஆதிவாசிகள் மற்றும் சிறுபான்மையினருடன் இணைந்த பெண்கள் தான் எங்கள் கட்சியின் அடித்தளமே. கணவரை முன்நிறுத்திவிட்டு தாங்கள் ஒதுங்கிக் கொள்ளும் பழக்கத்தை பெண்கள் கைவிடவேண்டும்" என்ற கொள்கையுடைய அவரது மதிப்பு அக்கட்சியில் இணைந்து செயல்பட்டு புகழ்பெற்ற கோதாவரி பார்லேக்கர், சுசிலா கோபாலன், விமல் ரானடே போன்ற பெண்மணிகளை

விட உயர்ந்த ஒன்று எனில் மிகையாகாது.

"பெண்கள் எத்தனை சிகரங்களை எட்டினாலும் அவர்களுக்கு குடும்பத்தில் உள்ள சிக்கல்கள் மட்டும் தீர்ந்தபாடில்லை" என அங்கலாய்க்கும் வேலூர் பெண் டாக்டர் மருத்துவக் கண்டுபிடிப்புகள் மூலம் வைட்டமின் C, நைட்ரோ ஆர்ஜினின் மெத்தில் எஸ்டர் போன்றவற்றின் சிறப்புகளை வெளிப்படுத்தியவர். அவரது பணிகளுக்காக தமிழக அரசின் அறிவியல் விருதினை 2004–ஆம் ஆண்டில் பெற்றவர்.

"நாம் கற்ற கல்வி நம் நாட்டுக்கே பயன்பட வேண்டும் என்பதற்காகவே நான் வெளிநாடு போவதற்கான எந்த முயற்சியையும் எடுக்கவில்லை" எனக் கூறும் இளம்பெண் விஞ்ஞானி புதுக்கோட்டை வேந்தன் பட்டியைச் சேர்ந்த சித்ரா. எம்.ஈ., முனைவர் பட்டம் பெற்று கோவை பி.எஸ்.சி பொறியியல் கல்லூரி பேராசிரியை, இவரும் தமிழக அரசின் அறிவியல் விருதை இவ்வாண்டு பெற்றவரே.

"சுற்றுலாப் பயணிகளால் பழநி நகரம் பிளாஸ்டிக் மலையாக மாறுவதைத் தடுக்கவியலவில்லையென" வருந்தும் பழநியாண்டவர் மகளிர் கல்லூரிப் பேராசிரியை புவனேஸ்வரி சுற்றுப்புறச் சூழல் பற்றிய ஆய்வுமூலம் தமிழக அரசின் அறிவியல் விருது பெற்றவர். சுற்றுச்சூழல் மாசு பற்றிப் பேசும் இந்நாளில் அதனை நீக்கக் குரல் கொடுக்கும் இவரைப்போல் பல பெண்களும் முயலுதல் வேண்டும். தனது அறிவாற்றலால் மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகப் பணிபுரிந்தவர் முனைவர் வசந்திதேவி.

மேலே கூறப்பட்டுள்ள செய்திகள் வாயிலாக இன்றைய பெண்களின் நிலைமையும் மதிப்பினையும் வளரச்செய்ய மேலெழுந்தவாரியாக பலதுறைப் பெண்கள் ஆற்றியுள்ள பணிகளைக் கண்டோம். பெண்களைப் பேதைகளாக்கும் அறியாமையானது பொய்யாய் பழங்கதையாய் ஆகிவருகின்றதென்பதை அவர்கள் உணர்த்தி வருகின்றனர். இன்னும் சிலவற்றைத் தொடர்ந்து காண்போம்.

அமெரிக்க நடிகை ஆஃப்ரா 21 ஆம் நூற்றாண்டின் முதல் 100 பேர்களுள் ஒருவர் என டைம்ஸ் பத்திரிக்கையால் போற்றப்பட்டவர். அமெரிக்க கோடீஸ்வரப் பெண்களுள் முதன்மையானவர் என பார்பெஸ் (Forbes) பத்திரிக்கையால் வர்ணிக்கப்பட்டவர். இவரே அமெரிக்க காங்கிரஸ் என்ற பாராளுமன்றத்தில் 1993–ல் ஆஃப்ரா சட்டத்தை உருவாக்கி குழந்தைகளைப் பாதுகாக்க வகை செய்தவர். தொண்டு என்பது பலவகையானது என்பதற்கு ஒரு விளக்கமாகத் திகழ்பவர் இவர்.

விருதுநகர் மாவட்டத்தில் ஸ்பீச் என்ற தொண்டு நிறுவனம் உருவாக்கியுள்ள "பெண் குழந்தைகள் பஞ்சாயத்து" 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளை உறுப்பினர்களாகக் கொண்டது. சிறுமிகளுக்கு எதிர்காலத்தில் கிராமராஜ்ஜியம் எவ்வாறு ராமராஜ்யமாக மலரவேண்டுமென்பதற்கான பயிற்சியாக இது அமைகின்றது. மேலும் பெண்கள் மீது கொண்டுள்ள மதிப்பும் இதனால் வெளிப்படுத்தப்படுகின்றது. அத்துடன் அவர்களுக்குக் கடமையுணர்வு நேரடிப்பயிற்சி மூலம்



தரப்படுகின்றது.

"உலகின் அனைத்துப் பணிகளிலும் பெண்மையைப் புகுத்தி இந்த உலகை மனிதத்தன்மையுடையதாக மாற்றுவதுதான் பெண்ணின் முக்கிய கடமை" எனக் கருதி 11 ஆண்டுகள் ஆங்கிலப் பிரதமராகச் செயல்பட்டவர்தான் பிரிட்டனின் இரும்புப் பெண்மணியான மார்க்ரெட் தாட்சர். 1925–ல் பிறந்த அவர் "அரசியலிலும் ஏதேனும் சொல்லப்படவேண்டுமானால் ஒரு ஆணைக் கேளுங்கள். ஏதேனும் செய்யப்பட வேண்டுமெனில் பெண்ணைக் கேளுங்கள்" என முழங்கி பெண்ணின் பெருமையை உலக அரசியலரங்கில் உயர்த்திக் காட்டியவர். 1979 முதல் 1990 வரை ஆங்கில பிரதமரான அவர் சவால்கள், அறை கூவல்கள் பலவற்றைச் சந்தித்து வெற்றி கண்டவர். 34ஆம் வயதில் ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குள் நுழைந்த அவர் 1961–ல் ஆங்கிலப் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார். 1969–ல் ஆங்கிலக் கல்வி அமைச்சரானார். பின்னர் பிரதமரானார். ஒரு மளிகைக் கடைக்காரரின் மகளாகப் பிறந்து தன்னுடைய சொந்த முயற்சியில் ஆங்கிலநாட்டின் உயர்பதவியை எட்டியவர். 2003–ல் காலமான அவர் இன்றைய காலகட்டத்தில் தெளிவான, எளிமையான, நடைமுறை சாத்தியமுள்ள எண்ணங்களை வலிமையான மனஉறுதியோடு செயல்படுத்துவதைக் காட்டிலும் சிறப்பானது எதுவுமில்லை என்பதை நிரூபித்தவர். இந்தியப் பிரதமராக விளங்கிய இந்திராகாந்தி, இஸ்ரேல் பிரதமரான கோல்டாமேயர் போன்றோரையும் இவருடைய இடத்தில் வைத்து எண்ணிப்பார்க்கலாம்.

"பார்வையற்ற பெண்களுக்கு கல்விவசதி வேலைவாய்ப்பு, விழிப்புணர்ச்சி ஆகியவற்றை ஏற்படுத்தித் தருவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு விழியிழந்தோரின் பெற்றோருக்கும் மற்றோருக்கும் மனப்பயிற்சி தரப்படவேண்டுமென்பது" அதே நிலையிலுள்ள பேராசிரியரான லாவண்யாவின் கருத்து. பெண்கள் முன்னேற்றத்தில் அதிலும் குறிப்பாக விழிஇழந்த பெண்களின் முன்னேற்றத்தில் குறிக்கோளாயிருக்கும் பேராசிரியையின் பண்பு பெண்கள் இருக்க வேண்டிய நிலையையும் பெறவேண்டிய மதிப்பினையும் சுட்டிக்காட்ட வல்லதாக உள்ளது.

1983–ஆம் ஆண்டில் பூமா பார்த்தசாரதியால் உருவாக்கப்பட்ட அமைப்பு வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டையைச் சுற்றியுள்ள ஏழு கிராமங்களில் கிராமப் பெண்களின் முன்னேற்றத்திற்கானதோர் மௌனப் புரட்சியை நடத்தி வருகின்றது. திருமலை அறக்கட்டளை என்ற நிறுவனத்தின் துணையுடன் அவர்கள் மேற்கொண்டுள்ள பணிகள் அவர்களுக்கு சமுதாயத்தில் தனித்ததோர் இடத்தையும் மதிப்பையும் பெற்றுத் தந்துள்ளன. அவ்வமைப்பு உறுப்பினர்களின் தன்னம்பிக்கை, சாதாரண தெளிவான சிந்தனை, பேச்சு, நடத்தும் தொழில் ஆகியன பிற பெண்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்கின்றன. கிராம சுகாதாரம், கால்நடைகளைப் பேணுதல், பெண்கள் சிறு சேமிப்பு கடன் திட்டம், சுயவேலைத் திட்டங்கள், குழந்தைகள் படிப்பு மையங்கள், குடிநோயாளிகளின் மறுவாழ்வு, ஊனமுற்றோர் நலன் எனப் பலதரப்பட்ட நற்பணிகளில் கிராமியப் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். "பெண் தன்னார்வலர்கள், தலைவிகள், ஊக்கம் மற்றும் செயல்பாடுதான் இத்தகைய திட்டங்களுக்கு உயிர் மற்றும் வெற்றிக்குக் காரணம்" என்று பெண்களே கூறும்போது பெண்ணின் முன்னேற்றம் எந்நிலையில்

உள்ளதென்பது கண்கூடாக வெளிப்படுகின்றது. வெளி உலக அனுபவங்களால் அவர்கள் பெற்றுள்ள விழிப்புணர்வு அனைத்துப் பெண்களுக்கும் தேவையானதொன்று. பஞ்சாயத்துத்தலைவர், அரசுப்பணியாளர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய பலருடனும் திறம்படப்பேசி தமது சங்கத்திற்குத் தேவையானவற்றைப் பெற்று கிராம முன்னேற்றத்தின் அச்சாணியாகத் திகழ்கின்றனர். இத்தகைய பெண் விழிப்புணர்வு இந்தியத் திருநாடு முழுவதும் பரவ அவர்கள் முன்னோடிகளாக உள்ளனர்.

இதேபோல் மதுரையிலுள்ள பாரதிமகளிர் சுயஉதவிக்குழு மூலம் நடத்தும் சிற்றுண்டியகம் பெண்களின், மெய்யான முயற்சியுடைய மகளிரின் செயல்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகத் திகழுகின்றது. தமது எதிர்காலத்தைத் தாமே தீர்மானித்துக் கொண்டு செயல்படும் அம்மகளிரின் பங்கு பெண் விடுதலைக்கோர் சான்றாகும்.

## பத்மஸ்ரீ நர்கீஸ்தத்

இந்தியத்திரைப்பட வானில் ஒளிமிகுந்த ஒப்பற்ற தாரகையாகச் சுடர்விட்டு பிரகாசித்த பத்மஸ்ரீ நர்கீஸ்தத் 1958–ல் செக்கோஸ்லோவாக்கியா நாட்டில் நடைபெற்ற திரைப்பட விழாவில் சிறந்த அனைத்துலக விருது பெற்ற முதல் இந்தியப் பெண்மணியாவார். 1968–ல் அகில இந்திய அளவில் வழங்கப்படும் ஊர்வசி விருதைப் பெற்ற முதல் இந்தியப் பெண்மணியும் அவரே. இந்தியதிரைப்படத்தயாரிப்பாளர் கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்ற முதல் பெண்மணி பத்மஸ்ரீ நர்கீஸ் 1972–ல் தமது கலைச்சேவைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு சமூக சேவகியாக மாறினார். 1980–ல் இந்தியப் பாராளுமன்றத்தின் மாநிலங்கள் அவையில் கலைத்துறை சார்பில் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட முதல் நடிகையும் அவரே. 1972–ல் வலிப்பு, இழுவை நோய், முடக்குவாதம் ஆகியவற்றால் துயருற்று வேதனையால் வாடிக் கொண்டிருந்த சிறுவர் சிறுமியரின் மறு வாழ்விற்குத்தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதற்காக இந்தியாவில் அவர் தொடங்கிய "ஸ்பாஸ்டிக் சொசைட்டி ஸ்கூல்" என்றும் தொண்டு நிறுவனம் அவ்வகையிலான முதல் இல்லமாகும். இன்று இவ்வமைப்பின் கிளைகள் சென்னை, பெங்களூர், டெல்லி, கொல்கத்தா, மும்பை ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன. சமுதாயத்தில் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறி பாழ்பட்டு நலிவடைந்த பிற்பட்ட இனமக்களுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகள் அளவிடற்கரியன. அதற்காக மாநில அரசு 'தலித் மித்ர' (நலிவுற்றோர் நண்பர்) என்ற சிறப்பு விருதினை நல்கிக் கௌரவித்தது. இவரது தியாகம், சேவைகளை நினைவு கூறும்வகையில் 1982 முதல் மராட்டிய மாநில பர்ஸி மாவட்டத்தில் "நர்கீஸ் நினைவு புற்றுநோய் மருத்துவமனை" ஒன்று செயல்பட்டு வருகின்றது. தூய தொண்டுள்ளம் கொண்டு செயல்பட்ட அவ்வெள்ளாடைப் பெருமகளின் பெருமைகளை நிலைநிறுத்த இந்திய அரசின் அஞ்சல் துறையினர் 1993 டிசம்பர் 30–ஆம் நாள் ஒரு சிறப்பு அஞ்சல் தலையை வெளியிட்டனர். சேவையின் சிகரமெனத் திகழ்ந்து புகழின் உச்ச கட்டத்தை எட்டிய பத்மஸ்ரீ நர்கீஸ் பெண்ணினம் போற்றிப் பெருமைப்பட்டு பின்பற்றப்பட வேண்டிய மலர்.



## அனுராதா தேசாய்

உழைப்பின் மேன்மையை உணர்த்தி சுயசார்புடன் தொழில் செய்து பொருள் வளத்தையும் உயர் சமூக நிலையை எட்ட இந்தியாவின் முதல் நிலையிலுள்ள வெங்கடேஷ்வரா ஹேட்ச்சரீஸ் நிறுவனத்தின் நிர்வாகிகளுள் ஒருவரான அனுராதா தேசாய் என்னும் பெருமை மிகு பெண்ணை ஒரு முன் மாதிரியாகக் கொள்ளலாம். உலக பண்ணைக் கழகத்தின் (World Poultry Congress) தலைவராகப் பணியாற்றும் அவர் தமது வெங்கடேஸ்வரா நிறுவனத்தின் மதிப்பு ரூபாய் 1300 கோடியென்றும் உலக மொத்த முட்டை உற்பத்தியில் இரண்டாவது இடம் தமக்குத்தான் என்றும், உயர்ரக கோழித்தீவனங்களை மலிவு விலையில் விற்கும் முதல் நிறுவனமும் அவர்களுடையதே. "பெண்ணிற்குத் தனியிடம் உண்டு" என்பதை செயல் மூலம் வெளிப்படுத்தும் அனுராதா "நமக்கு கீழே வேலைப்பார்ப்பவர் மீது சர்வாதிகாரம் செலுத்தக்கூடாது. அவர்களை சுதந்திரமாக வேலைசெய்ய அனுமதிக்க வேண்டும். நாம் எடுக்கும் முடிவுகளைவிட அவர்கள் எடுக்கும் முடிவு சிறந்ததாக இருக்கலாம். இதுபோன்ற இறுக்கமற்ற சூழ்நிலைகளின் போதுதான் தாங்கள் பணிபுரியும் நிறுவனத்தின் மீது தொழிலாளர்களுக்கு ஈடுபாடும் அக்கறையும் அதிகரிக்கும்" என்று நடைமுறைச் சித்தாந்தங்களைப் பின்பற்றி "என்னையும் சேர்த்து எங்கள் நிறுவனத்தில் ஒவ்வொருவருக்கும் ஒருவேலை இருக்கிறது" என்று செயல்படுகின்றார். இது பணியின் முக்கியத்துவத்தையும், பாங்கினையும் பெண்ணினத்திற்கு உணர்த்தும் ஒரு தூண்டுகோலெனில் ஏற்புடையதேயாகும்.

## மகளிரின் சுய உதவி குழுக்கள் சாதனைகள்

சர்வதேச அரிசி ஆண்டு என்று அறிவிக்கப்பட்ட 2004–ஆம் ஆண்டில் மும்பை ஆஸ்பி எம்.பி. படேல் விருதினைப் பெற்றவர் தஞ்சை மாவட்டம் கள்ளர் பசுபதி கோயிலைச் சேர்ந்த 44 வயதான கலைவாணி இராசேந்திரன் என்பவராவார். 23, மார்ச் 2005–ல் அப்பரிசையும் ஒரு இலட்சம் ரொக்கப் பணத்தையும் பெற்றவர். தனது விவசாயக் குடும்பப் பின்னணியால் சாக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 'டான்வா பண்ணை மகளிர் பயிற்சி' வாயிலாக நெல் உற்பத்தியின் பலதரப்பட்ட தொழில் நுட்பங்களைக் கற்றறிந்தார். தொடர்ந்து உழவர் விவாதக்குழு, பண்ணை சார்ந்த தொழில்பயிற்சி, தஞ்சாவூர் சூழலியல் ஆய்வுமையம், வயல்வெளிப்பள்ளி ஆகியவற்றின் மூலம் தமது பட்டறிவை வளர்த்துக்கொண்டார். எனவே விவசாயத்தில் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த அவருக்கு வாய்ப்புக்கிட்டியது. அவர் கூறும் ஒற்றை நாற்று நடவுமுறை, சுருட்டுப்பாய் நாற்றாங்காலில் குறைந்த அளவு விதைவிதைப்பு, களைகளை சேற்றுக்குள்ளேயே அமுக்கி இயற்கை உரமாகச் செய்தமை போன்றவற்றால் மகசூலைப் பெருக்கி அகில இந்திய அளவில் பரிசு பெற்ற கலைவாணி "தொழில் ஆர்வம், ஊக்கம், ஈடுபாடு ஆகியவற்றுடன் ஒவ்வொருவரும் தத்தம் தொழிலில் இயங்கினால் உண்மையில் உயர்நிலையை எட்டலா மென்பதற்கோர் ஆதாரமாகத் திகழ்பவர். பெண்ணினப் பெருமையை நிலைநாட்டியவர்.

மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா என விளங்கும் தமிழகத்தில் "மங்கையர் சக்தி மகா சக்தி" என்பதை எண்ணற்ற பெண்கள் நிரூபித்து வருகின்றனர். பூதலூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட தோகூர் கிராம மகளிர்சுய உதவிக்குழு மாதர்கள், நடுகரை, அரசங்குடி, தோகூர் பேருந்து நிலையங்களின் வசூல் குத்தகையை ஏலத்தில் எடுத்து செயல்படுத்தி வருகின்றனர். தஞ்சை ஜனசேவா சங்கம், தஞ்சை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் திட்ட வளர்ச்சி அலுவலகம் ஆகியவற்றின் துணையும் அவர்களுக்கு உண்டு. இவ்வாறு பேருந்து நிலைய வாடகை வசூல் குத்தகையை ஏற்று நடத்தும் பெண்கள் நிறுவனம் இது ஒன்றே. அதுவும் பிற அமைப்புகளுக்கு வழிகாட்டும் முதல் அமைப்பாகும்.

இன்று பெண்ணினம் இரு பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை வேலைக்குப்போகும் பெண்கள், வீட்டிலிருக்கும் பெண்கள் என்ற பகுப்புகளாகும். வீட்டிலிருக்கும் பெண்களும் தமது பொழுதை வீணேகழிக்காமல் பயனுள்ள வழிகளில் செலவிட்டு பயன்பெற பல வாய்ப்புகள் இன்றுள்ளன. அவற்றை உணர்ந்தால் பெண்களின் நிலை உயரும். அப்பெண்கள் பலருக்கும் வழிகாட்டிகளாவர். அத்தகைய வீட்டிலிருந்தே பணிசெய்யும் முறையினால் அவர்களுடைய திறமை, ஆற்றல், வெற்றி, நேர்மை ஆகியன வளர்ச்சியுறும். பொழுதுபோக்கு, குடும்பச்செலவுதனைச் சரிகட்ட உதவும் பணம்பெறல் போன்ற நற்பலன்கள் ஏற்படும். எடுத்துக்காட்டாக சென்னை தேனாம்பேட்டையில் உஷா ஸ்ரீதர் நடத்தும் டிசைன் அமைப்பு யூனிட் அவருக்கு மட்டுமன்றி வேறுபல பத்துக் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. அதேபோல் மாடலிங்கின் போது பயன்படும் ஆடைகளை உருவாக்கித்தரும் உமா ஒரு சுயதொழில் அதிபர். அவருடைய தனித்துவம் பெண்களும் சமுதாயத்தில் சுயமாக வாழ முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

**எஸ்.பி. பாமா**

அதேபோல் அண்மை நாடான மலேசியாவில் தமிழ்ப் பெண்களும் மேற்கொண்டுள்ள மதிப்புமிக்க நிலைதனை உணர்ந்தால், அவர்களைப் பெண்கள் வழிகாட்டிகளாகக் கொள்ளலாம். மலேசியா தொலைக்காட்சியில் தமிழ்ச்செய்தி வாசிப்பவர் எஸ்.பி. பாமா. ஆற்றல் மிக்க புரட்சி எழுத்தாளரான அவர் பெண்களின் பிரச்சனைகள் பலவற்றிற்கும் எழுத்து வடிவம் கொடுத்து தீர்க்கும் வழிகளையும் தந்துள்ளார். "மலேசியாவின் இளங்குயில்" என அழைக்கப்படும் மீனாட்சி சுந்தரி TV2 தொலைக்காட்சியில் மலேசியாவில் ஒலிபரப்பு செய்தியாளராகச் செயல்படுகின்றார். ஜப்பான், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் மொழிபெயர்ப்பாளராகத் திகழும் அவர் தனித்தன்மை கொண்டவர். மலேசிய நாடகத்துறையின் முதல் பெண்மணி என்ற பேற்றினைப் பெற்றவரான கண்மணி கிருஷ்ணன் நாடகப் படைப்பாளியாவார். இராம.சரஸ்வதி என்பவர் மலேசியப் பெண் கவிஞர். இவ்வாறு தம்முடைய படைப்பாற்றல்களால் பெண்கள் அயல்நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். அவர்களைப் பின்பற்றி பெண்கள் சுயமாகச் சிந்தித்து தமக்கான துறையைச் சீராக தேர்ந்தெடுப்பின் சமூகத்தில் அவர்களுக்கான இடமும் மதிப்பும் தானே தேடிவரும் என்பது



## பெண்மையின் பெருமை

பெண்ணியம் ஆழ்ந்தகன்று நீண்டு நெடிதுயர்ந்து வளர்ந்து வரும் இன்றைய நாளில் பெண்கள், சுதந்திரமாக, சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் மேம்பட வேண்டுமெனில் அவர்களுடைய நிலையினை உயர்த்திக்கொள்ள வேண்டும். இதுவரை மேலே கண்ட பலவகை எடுத்துக்காட்டுகள் வாயிலாக பெண்கள் தம்மைப்பற்றிய கருத்துக்கள், மதிப்பீடுகள், எதிர்ப்பார்ப்புகள், அவர்களுக்கு உள்ள வாய்ப்புகள், அவர்களது அணுகுமுறை ஆகியவற்றைப் புரிந்துகொண்டால் மண்ணில் நல்லவண்ணம் வாழ அவர்கள் அனைவருக்கும் வாய்ப்புகள் உண்டு. சோம்பியிராமல், சோர்வுக்கு அடிமையாகாமல் தனக்கெனத் தன்னுடைய தகுதிக்கேற்ற வாழ்க்கை வழியை, யாருக்கும் பாதிப்பில்லாவண்ணம், அனைவருக்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில் மேற்கொண்டால் எவ்விதமான எதிர்ப்பு அலைகளும் அவர்களைத் தாக்குவதின்றும் காத்துக் கொள்ளலாம். தனக்கெனத் தனிப்பட்ட பெருமைமிக்க இடத்தையும் பெற்றுச் சிறக்கலாம். கடந்தகாலச் சிந்தனைகள் வாயிலாக அவர்கள் பெற்றிருந்த தேக்கநிலையை எண்ணி அவற்றை மாற்ற வேண்டியது பெண்ணினத்தின் தலையாய கடமையாக உள்ளது.

பெண்மை வாழ்கவென்றும், பெண்மை வெல்கவென்றும் போற்றிட வேண்டுமெனில் பெண்களின் தேக்க நிலைக்கான, பின்தங்கிய நிலைக்கான காரணிகளை உணர்தல்வேண்டும். அப்போதுதான் அவற்றைக் களைந்து காலத்தின் அடிச்சுவட்டில் கடுகளவும் எதிர்ப்பின்றி முன்னேறலாம். எனவே அத்தகைய காரணங்களையும் தெரிந்து கொள்ளுவோம்.

ஒத்த உடலமைப்பு இன்மையால் உடற்கூறு வேறுபாடுகளால் ஆண்களிலிருந்து அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள். அதேபோல் பெண்ணுக்கு சிந்திக்கும் ஆற்றல், செயலாக்கத்திறன் போன்றவை உண்டு என்பதை ஏற்க மறுப்பது ஒரு காரணம். பெண்களுக்குத் தேவையான, அவர்களது மனத்திற்கேற்ற கல்வியைத்தராமல் மாதரை இழிவு செய்யும் மடமைத்தனம் மற்றொரு காரணம். அவர்களுக்குப் பல வித்தைகளைக் கற்கும் வாய்ப்புகள் தவிர்க்கப்பட்டன; அல்லது அவர்கள் அதனின்றும் தடுக்கப்பட்டனர். மாட்டையடக்கி தொழுவில் மாட்டும் வழக்கம் பெண்ணினத்திற்கும் பொருத்தமானதாகக் கொள்ளப்பட்டது. கற்புநிலையில் பெண்களை மட்டும் முடக்கி ஆண், பெண் என்ற இருபாலருக்கும் அது பொது என்ற கருத்தை ஏற்க மறுத்தமையால் அவர்கள் ஒதுக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டார்கள். பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் அவர்களுக்கும் அறிவாற்றல் உண்டு என்பது ஏற்கப்படாமையால் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள். பெண்களுக்குத் தேவையான மேலைநாட்டுக் கல்வி தரப்படாமல் புனைந்துறையும், பொய்மையும் கொண்ட கற்பனைப் படைப்புகளையும், புராணங்களையும் மட்டும் படிக்கச் செய்து அவர்களது அறிவு வட்டம் குறுக்கப்பட்டது. உயிர்களனைத்தும் தாய்ச் சக்தியின் பாற்பட்டனவென்பதை ஏறெடுத்தும் பாராது ஆணினம். அது ஒரு

பெண்மேம்பாட்டின் முட்டுக்கட்டை. மேலும் பெண்களின் சுயசிந்தனை, சுய விருப்பம் ஆகியன மறுக்கப்பட்டன. சொத்துக்கோர் வாரிசாக ஆண்பிள்ளையைப் பெற்றுத்தரும் பெண்ணுக்கு எவ்வித உரிமையும் அதாவது பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை போன்றவை தரப்படாமையால் குடும்பம் என்னும் கொழுக்கம்பைச் சுற்றிப்படரும் கொடியெனவே அவர்கள் வளரவேண்டியவரானார். உளவியல் நோக்கில் அவர்களது உடலை பெருமைபட வர்ணிப்பதன் மூலம் அவர்கள் தமது உண்மை ஆற்றல் மற்றும் பண்புகளை அறிவதனின்றும் தவிர்த்துவிடும் சுரண்டல் நிலை மற்றொரு தடைக்கல்லாகும். "ஆணாதிக்கச் சமூகத்திற்கேற்ப பெண்களைக் கட்டமைக்கும் கருத்தியல்கள் மிகத்திட்டமிட்டு இலக்கியம், கலை, சமயம் போன்ற பல நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன." எனவே பெண் அடிமைத்தனம் முறையோடு வெகுவாக பாதுகாக்கப்பட்டதால் பெண்ணினத்திற்கான பின்னடைவு ஏற்பட்டது. பெண்களின் வாழ்வியலில் மரபுசார்ந்த தாக்கங்கள் தேக்க நிலைக்கு வித்தாக உள்ளன. மேலும் பெண்களது அச்சம், பேடிமை, அடிமைத்தனம் ஆகியவற்றிற்கான காரணம் அவர்களுக்கு கல்வியறிவின்மையே. வேலைக்குச் சென்றால் பாதுகாப்பின்மை காரணமாக அவர்கள் அல்லலுக்கும் அவதிக்கும் ஆளாவார்கள் என்று அச்சுறுத்தி அவர்களிடையே சுயசார்புத்தன்மை, அச்சம் ஆகியவற்றை வளர்த்து அவர்களது ஆற்றலை குறைத்து மதிப்பிடு செய்து, அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டார்கள். ஆண்களுடன் வீட்டிலுள்ள பெண் பெரியோரும் இத்தகைய கருத்தினையே கொண்டிருந்தனர். அவர்கள் தாழ்வுற்ற நிலையில் தவிக்கவிடப்பட்டனர். இவையனைத்தும் மூடத்தனத்தாலும், வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைச் செயல்களாலும் ஆனவை. பால்யவிவாகம், பெண்சிசுக் கொலை, பலதாரமணம், வரதட்சணைக் கொடுமை, விதவைகளின் இரங்கத்தக்கநிலை, பாலியல் தொழிலில் பெண்களை ஈடுபடச்செய்யக் கட்டாயப்படுத்துதல், பெண்களின் நடத்தை மீதான ஐயப்பாடுகள், பெண் தொழிலாளர்கள் சிக்கல்கள், பணியிடச் சிக்கல்கள் எனப் பலதரப்பட்ட முரண்பாடுகளும் பெண்களுக்கு எதிரானவையேயாகும். எனவே பெண்ணினத்தை சுதந்திரமாக இயங்கச்செய்யும் வழிகளையும் காணுதல் வேண்டும். அப்போதுதான் அவர்களை சமூகத்தில் மதிப்புமிக்க நிலையை எட்டச்செய்யவியலும்.

பெண்கள் பற்றிய மூடத்தனமான எண்ணங்கள் கைவிடப்பட வேண்டும். பெண்ணடிமை முறையை நீக்குவதற்கான வழிகள் மேற்கொள்ளப்படல் அவசியம். பெண்களிடையே விழிப்புணர்வு ஊட்டப்பட்டு பெண் விடுதலைக்கான முயற்சி பெண்களாலேயே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். பெண்களும் வீடே கதியெனக் கிடக்காமல் புத்தகங்கள், செய்தித்தாள்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சிச் செய்திகளை வாசித்தும், கேட்டும் தமது பொது அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். சாத்திரங்கள் பலகற்று, சவுகரியங்கள் பல செய்து மூடக் கட்டுகளைத் தகர்க்க முனைதல் வேண்டும். இதற்கு எதிர்மறையான எதிர்ப்புணர்வுகளை வெளிக்காட்டாமல் நேர்மறைச் செயல்திட்டங்களை படிப்படியாக மேற்கொண்டு தமது நிலையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆண்களுக்குச் சமமான



கல்வி, அனைத்துப் பணிகளிலும் ஈடுபாடு, உரிமைகளைப் பெறல் போன்றவற்றின் மூலம் ஆண்–பெண் சமத்துவத்தை நிலைநாட்டவேண்டும். படிப்படியாக பலதுறைகளிலும் பயிற்சிகள் பெற்று குறிப்பிட்ட இலக்குகளுக்குத் தம்மைத் தகுதி படைத்தவர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும். "பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமை அகற்றிடும்" என்ற உண்மையை மெய்யாகச் செயல்படுத்த வேண்டும். பெண்களுக்கும் உயர் கல்வி, தொழிற்கல்வி, மருத்துவம் மற்றும் சட்டக்கல்வி ஆகியன தரப்பட வேண்டும். வங்காளப் பெண் கவிஞர்களான காமினிராய், மனக்குமாரிதேவி போன்றோரைப்போல் தம்முடைய படைப்பிலக்கியங்களால் சாதாரண ஆண்களால் எட்டமுடியாத நிலையினை எய்த வேண்டும். அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில், கல்விக்கூடங்களில், உலகப்பொது மேடைகளில் அவர்களது குரலை எதிரொலிக்கச் செய்யுமளவிற்குத் தம்மை தாமே தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் காணப்படும் பல மூடப்பழக்க வழக்கங்களை வழக்கற்றுப் போகச் செய்யவேண்டும். பல்தாரமணம், பால்யவிவாகம் ஆகியன தவிர்க்கப்பட வேண்டும். விதவைகள் மறுமணம், கலப்புத்திருமணம் ஆகியன ஆதரிக்கப்பட வேண்டும். கட்டாயத் திருமணங்கள் நீக்கப்பட்டு, வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கம் தள்ளி மிதிக்கப்படவேண்டும். தனக்குப் பாதகம் செய்வோரைக் கண்டால் பயங்கொள்ளாது மோதி மிதித்துத் தள்ளி முன்னேறுதல் தேவை.

பெண்களுக்கு கைத்தொழில் செய்தோ, குடிசைத்தொழில்களில் ஈடுபட்டோ, கூட்டாகப் பணிபுரிந்து வாணிபம் செய்து பொருளியல் மேம்பாட்டை எட்டிட வகை செய்யவேண்டும். அரசும், சமூகநல அமைப்புகளும், மகளிர் குழுக்களும் அவர்களது பொருளாதாரத் திடத்தன்மைக்கு வகை செய்யவேண்டும். அப்போது பால்பாகுபாடு, பெண்ணடிமை போன்ற இருள் தானே கரைந்துவிடும். பலதரப்பட்ட கல்வி முறைகளிலும் பங்கேற்றுப் பயன்பெறும் உரிமை கொண்ட பெண்கள் அரசியலிலும் ஈடுபட வாய்ப்பும் பயிற்சியும் நல்கப்படவேண்டும். பெண்ணுக்கு கல்வி, தொழில், அரசியல், சமூக உரிமைகள் வழங்கப்பட்டு அவர்களுடைய நிலையை உயரச்செய்தல் வேண்டும். குறைகளைக் களைந்து நேர்மறை நோக்கில் நிறைகளை நெறிப்படுத்துதல் வேண்டும். கையிலிருந்து திடீரென வெளிப்படுத்தப்படும் பந்துபோல் அதிக விசையுடன் சென்று அதே வேகத்தில் மோதித் திரும்பும் நிலையைப் பெண்கள் தவிர்த்து, அன்புவழி, அறவழி என்ற நோக்குகளில் அமைதியாக தமது எண்ணங்களுக்கு உருக் கொடுக்கவேண்டும். புரட்சி என்ற அடிப்படையில் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினால் பலரது வெறுப்புகளையும், எதிர்ப்புகளையும் சந்திக்க வேண்டிய நிலைவரும்.

பண்டைய இலக்கியங்களில் காட்டப்படும் பெண்கள் அன்றைய காலகட்டத்தின் கட்டாயத்திற்காக உருவாக்கப்பட்ட படைப்புகள். அவர்களை எடுத்துக்காட்டாகக் கொண்டால் இன்றைய இளந்தலைமுறைப் பெண்கள் ஏற்றம்பெற இயலாது. அவர்களது குணவியல்புகளை முன்மாதிரியாக எடுத்து சிந்தனையில் வைத்துக் கொண்டு இன்றைய கால ஓட்டத்துடன் தம்மைப் பெண்கள் பின்னிப் பிணைத்துக் கொள்ள வேண்டும். கண்கள்

இரண்டிருந்தும் பெண்கள் காணுந்திறமையற்றவர்களாக மாறிவிடக்கூடாது. பெண்ணிடமுள்ள ஞானத்தை பேணிப் போற்றிக்காக்க வேண்டும். அம்மேம்பட்ட மாதறிவைக் கெடுத்துவிடக்கூடாது. பெண்மரபுச் சார்புகளுக்கு அப்பாற்பட்டுச் செயல்பட வேண்டும். நேர்மை, திடச்சித்தம், பொறுமை ஆகிய குணங்களை அடிப்படையாகக் கொண்ட அவர்கள் அறியாமை என்னும் காரிருளில் கரைந்து போதல் கூடாது. பெண் என்பவள் நேர்முகப் பெண் படிமமாகத்(Polity Image) திகழ்தல் வேண்டும். செல்வம் எட்டும் எய்தி செம்மையான வாழ்வு வாழ்தலும், இல்லை என்னும் கொடுமைப் இல்லாமல் போகச்செய்தலும் பெண்களுடைய இலக்குகளாகத் திகழ வேண்டும். "பெண்ணுக்குச் சமத்துவமென்பது ஒரு தேவையென்பதோ அல்லது அரசாங்கத்தின் உறுதிமொழியோ அல்ல; அது ஓர் உரிமை" என்பதை நினைவிற் கொண்டு அனைவரும் செயல்படவேண்டும்.

## பெண்களுக்கான அமைப்பு

பெண்களுக்குச் சட்ட விழிப்புணர்வும் தேவை. இந்திய தேசிய பெண்கள் நலக் குழு (National Council of Women in India) மனுசி(Manushi) கார்மிகா (Karmika) இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு(Federation of Indian Women) சென்னையிலுள்ள வேலைக்குச் செல்லும் பெண்களின் அமைப்பு (Working Women's Association in Madras) போன்றவற்றின் செயற்பாடுகளைப் பெண்கள் அறிந்துகொண்டால் அவர்களுக்கு சட்ட உரிமைகள் புலப்படும். 1950–ல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய ஒப்பந்தம் (Europen Convention), 1969–ல் உருவான அமெரிக்க ஒப்பந்தம் (American Convention) 1987–ல் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் பற்றிய ஆப்பிரிக்கப் பட்டயம் (The African Charter of Human Rights) போன்றவற்றைப் பெண்கள் உணர்ந்தால் உரிமைகள் பற்றிய உணர்வுகளை அவர்கள் பெற இயலும். 1984–ல் உருவாக்கப்பட்ட குடும்ப நீதிமன்றத்தின் (Family Court) பணிகள், 1956–ல் ஏற்கப்பட்ட இந்துவாரிசுரிமைச் சட்டம், 1929–ல் ஆண்டின் குழந்தை திருமண ஒழிப்புச் சட்டம்,1856ஆம் ஆண்டின் இந்து மறுமணச் சட்டம், 1954–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டம், 1961–ஆம் ஆண்டின் வரதட்சணை ஒழிப்புச் சட்டம், 1979–ல் உருவான பெண்களுக்கு இழைக்கப்படும் அனைத்துலகப் பாகுபாடுகளைக் களையும் சட்டம், 1989–ல் தமிழக அரசு உருவாக்கிய சொத்து பற்றிய சட்டம் போன்றவற்றையெல்லாம் பெண்கள் அறிந்திருத்தல் அவசியம்.

1975–ஆம் ஆண்டினை சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்த ஐக்கிய நாட்டவை பெண்களின் நலனுக்காக உருவாக்கியுள்ள செயல்திட்டங்களையும் பெண்கள் புரிந்து கொண்டால் தமது நிலையைத் தாமே உயர்த்திக்கொள்ளவியலும். ஐக்கிய நாட்டவையின் தேசிய பெண்கள் அமைப்பு (National Organisation for Women- NOW) தவிர இந்தியாவில் இயங்கும் தேசிய பெண்கள் கூட்டமைப்பு (National Alliance of Women Organisation - NAWO), ஆகியன்வும் பெண்களுக்காகப் பாடுபடும் அமைப்புகளாகும். அவைபற்றிய செய்திகளையும் தெரிந்து கொண்டு பெண் முன்னேற்றம் பற்றி உணர்தல் வேண்டும்.



# 12. பெண்ணினச் சிக்கல்கள் மற்றும் நீக்கும் வழிகள்

**முன்னுரை** ஊடகங்கள் - தேக்கநிலை வரதட்சணை - குழந்தை மணம் - பலதாரமணம் - விதவைகள் - பாலியல் தொழிலாளர்கள் - பெண் குற்றவாளிகள் - பெண்ணடிமைத்தனம் - பெண் பணியாளர்கள் - பெண்ணுரிமைச் சட்டங்கள் - இந்திய அரசியலமைப்பு பெண்ணுரிமைகளும் மனித உரிமைகளும் பெண்களும் பெண்ணுரிமையும் - சட்டங்களும்

'தாய்க்குலம்' என மதிப்புடன் போற்றப்படும் மாண்புடைய மகளிரினம் இன்று வளர்ச்சிப் பாதையில் வேகமாக முன்னேறி வருகின்றது. எனவே மிகவும் பிற்பட்ட, பின்தங்கிய நிலையினின்றும் மகளிர், இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் பலவீனமான பிரிவினர் என்ற நிலையிலேயே உள்ளனர். 'பெண்கள் சமுதாயத்தின் கண்கள்' என்று பாராட்டப்படுகின்றனர். அறிவியலில் மேம்பட்டு தொழில் நுட்பத்துறையில் முன்னிலைப் பெற்று உலகம் உயர்வான நிலையில் உள்ள போது பெண்கள் நிலை அந்த அளவிற்கு வளர்ந்துள்ளதாவெனில் பதில் எதிர்மறையானதொன்றாகவே அமையும். மேலும் அவர்கள் பாலியல் நோக்கு உடற்கூறு அமைப்பு போன்ற வழிகளில் ஆண்களுக்குப் பிற்பட்டவர்கள் என்ற நிலையே நிலவுகின்றது.

மகளிரியல் பற்றிக் காணும் போது பெண்ணியச் சிக்கல்கள் பற்றியும் அறிந்து கொள்ளலும் அவசியமானதாகின்றது. செய்திதாட்கள், வாராந்திர, மாதாந்திர இதழ்கள், வானொலி, தொலைக் காட்சி, திரைப்படம் போன்ற பலதரப்பட்ட ஊடகங்கள் முதலியவற்றின் மூலம் பெண்ணினம் பற்றிய பண்பாட்டுப் பரிமாற்றங்கள், பாலியல் வேறுபாடுகள் காரணமாக எழும் இன்னல்கள், வன்முறைகள் உரிமையின்மை, அடிமைத்தனம் போன்ற காரணிகளால் பின்னடைவு பெற்றுள்ள பெண்ணினம் இன்னும் சிக்கல்கள் பலவற்றிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் தொடர்பு ஊடகங்களில் மரபுகள் சார்ந்த தன்மையுடன் பெண்கள் சித்தரிக்கப்படுகின்றனர். சில நேரங்களில் அவர்கள் மிகைப்படுத்தப்பட்டே காட்டப்படுகின்றனர். அவற்றில் பெண்கள் பாரம்பரியப் பண்பாட்டு நோக்கிலேயே சித்தரிக்கப்படுகின்றனர். அவர்கள் அலங்காரப் பதுமைகளாக, செயற்கைப் புன்னகையுடன் காட்டப்படும்போது பெண்களின் உண்மைநிலை பிரதிபலிக்கப்படுவதில்லை. விரும்பத்தகாத முறையற்ற ஆடைகளை அணிந்து கொண்டவர்களாக் காட்டப்படும்போது சமூகச் சிக்கல்களும், சீர்குலைவுகளும் ஏற்படுகின்றன. இதற்கு பெண்கள் காரணமல்ல. வர்த்தகம் மற்றும் பொருளியல் நோக்கில் திரைப்படங்கள் எடுக்கப்படுவதே காரணம். எனவே பெண்ணியத் தன்மைகளை உணரவேண்டுமேயாயின் அவர்கள் பற்றிய உண்மைத்

தன்மைகளை உணரவேண்டும். அந்த நோக்கில் அவர்களுடைய சிக்கல்களைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். அப்போது சமுதாயக் குறைபாடுகள் களையப்பட்டு அவர்களுடைய உண்மையான வளர்ச்சிக்கு வகை செய்யலாம்.

**ஊடகங்கள்**

1972ஆம் ஆண்டில் பன்னாட்டவையானது பெண்களைப் பற்றிய ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதன்படி உலக நாடுகளில் பொதுமக்கள் ஊடகங்களில் பெண்களின் பங்கேற்பு 30 விழுக்காட்டிற்குக் குறைவாகவே உள்ளது. அதிலும் அவர்கள் 10 விழுக்காட்டிற்கும் குறைவான அளவிலேயே முடிவெடுக்கும் தன்மையினராகச் சித்தரிக்கப்படுகின்றனர். பெண்கள் மரபுகளுக்கு உட்பட்ட நிலையில் குறைவுடைய நிலையிலேயே வெளிப்படுத்தப் படுகின்றனர். பெண்கள் யதார்த்த நிலையினின்றும் மாறுபட்டவர்களாகக் காட்டப்படும்போது உண்மை மறைக்கப்பட்டதொன்றாகவே உள்ளது. பத்திரிக்கைகளில் அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் வெளிப்படுத்தப்படும்போது அவை எதிர்மறையான உணர்வைத் தூண்டுகின்றன. ஊடகங்களில் ஓரளவிற்கே பெண்களுக்கென இடம் ஒதுக்கப்படுகின்றது. அதனால் பெண்ணுயர்வு பின்னடைவு பெறுகின்றதெனக் கருதலாம். கல்வித்துறையில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்றாலும், அவர்கள் முன்னேற்றம் பெற்றாலும் அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காகவே அவை பயன்படுத்தப்படுகின்றன. எனவே ஊடகச்சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கான வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**தேக்கநிலை**

பெண்கள் முன்னேற்றத்திற்கான சட்டங்கள் பல 20 ஆம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டபோது அவை பெண்களின் சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன. இந்திய வரலாற்றில் சதி அல்லது உடன்கட்டை ஏறுதல், குழந்தைமணம், தேவதாசி முறை போன்றவை பெண்களின் பிற்பட்ட நிலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்ந்தன. அதேபோல் பலதாரமணமும் பெண்கள் உரிமைகளற்ற போகப்பொருட்களாகக் கருதப்பட்டனரென்பதையே உணர்த்தின. பாலின வேறுபாடுகாரணமாக ஆண்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்புடையவர்கள் என்பதும், பெண்கள் குடும்பத்திற்காகத் தம்மை அர்ப்பணித்துப் பலகடமைகளை ஆற்றவேண்டியவர்களாகவும் விளங்கினர். சமுதாயமானது தந்தைவழிச் சமுதாயமாகவே காணப்பட்டது. அவை தவிர தாய்வழிச் சமுதாயம் காணப்படவில்லை. கடவுள்களிடத்தும் ஆண்கடவுள்களே ஆதிக்கம் பெற்றிருந்தனர். மலைமகளை சிவனின் துணைவியாகவும், பூமகளையும், திருமகளையும் விஷ்ணுவின் துணைவியாகவுமே காட்டினர். அதேபோல் விதவைப் பெண்களின் அவலநிலையானது தொன்றுதொட்டு இன்றுவரை தொடர்ந்து வரும் ஒன்று என்பது மறுக்கப்படமுடியாதாகும். பெண்களுக்குச் சொத்துரிமையும் வழங்கப்படவில்லை. இத்தகைய பெண்ணினக் குறைபாடுகளைக் களைய சட்ட பூர்வமான முயற்சிகள் 20ஆம் நூற்றாண்டில்



எடுக்கப்பட்டாலும் பின்தங்கிய நிலையிலிருந்து பெண்கள் விடுபடவில்லை. 1929ல் மேற்கொள்ளப்பட்ட சதி மற்றும் குழந்தைமணத் தடுப்புச் சட்டம், 1955ல் பெண்களுக்கு விவாகரத்து உரிமையாக விளங்கிய இந்து திருமணச்சட்டம்,1956ல் கொண்டு வரப்பட்ட விதவைகள் மறுமணச்சட்டம், 1961ல் இயற்றப்பட்ட வரதட்சணை ஒழிப்புச் சட்டம், 1929, 1937, 1956ஆகிய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட பெண்கள் சொத்துரிமைச் சட்டம் போன்றவை பலவியக்கத்தக்க மாற்றங்களை உருவாக்கி பெண்களுக்கு உரிமையையும் மேம்பட்டதன்மையையும் தரமுற்பட்டாலும் நடைமுறையில் பெண்கள் மேலே கூறப்பட்ட சிக்கல்களிலிருந்து விடுபடவில்லை என்பதே கண்கூடு.

**வரதட்சணை**

பெண்கள் சந்திக்கக் கூடிய மற்றொரு சிக்கல் வரதட்சணைக் கொடுமையாகும். ஒரு ஆண் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளும்போது பெண்ணின் பெற்றோரிடமிருந்து பெருந்தொகையை வரதட்சணையாகப் பெறுகின்றனர். வரதட்சணை இன்றி பெண்களைத் திருமணம் செய்து கொள்வது இல்லை என்ற நிலை எழுந்துள்ளது. இதனால் திருமணமாக வேண்டிய பெண்ணும், அவளுடைய பெற்றோரும் தாங்கவொண்ணாத பொருளாதாரச் சுமைக்கு ஆளாகின்றனர். திருமணத்திற்குப் பின்னரும் ஒப்புக் கொள்ளப்பட்ட அளவு வரதட்சணை தரப்படவில்லையெனில் புதிதாகத் திருமணமான பெண் புகுந்த வீட்டில் கடுந்துயரங்களுக்கு ஆளாக்கப்படுகிறாள். அதனால் அவளுடைய உயிருக்கே பாதுகாப்பில்லாத நிலை காணப்படுகின்றது. இத்தகைய வரதட்சணை முறையானது சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வு காரணமாக எழுந்த ஒன்று என்று கூறப்படும்போது இது பெண்ணின் உரிமைகளைத் தடுக்கக்கூடிய ஒரு சமூகப்பிணி எனத் திகழ்கின்றது. வரதட்சணை என்னும் கொடிய தொற்று நோயானது எந்தவிதமான பாகுபாடுமின்றி கிராம மற்றும் நகர்ப்புறங்களிலும், படித்தவர்களிடையிலும் பாமரமக்களிடையேயும், ஏழைகள் மற்றும் பணக்காரர், நடுத்தரப் பிரிவினர் ஆகிய அனைவரையும் பிடித்து முறையற்ற விளைவுகளை உருவாக்குகின்றது. பெண்கள் அதிகமாகக் கல்வி கற்றால் திருமணமாகாது என்பதற்காக அதிக விலையாக வரதட்சணை தரப்படுகின்றது. வரதட்சணை பெற முடியாத காரணத்தால் பெண்ணை உயிரோடு எரிக்கும் நிலையும் எழுந்தது. அதேபோல் கணவர் இருந்தும் வரதட்சணை தராத காரணத்திற்காக அவருடன் வாழமுடியாத வாழாவெட்டிநிலை காணப்படுகின்றது. இக் கொடுமையை நீக்க வேண்டுமென்பதற்காக 1961–ல் வரதட்சணை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்மூலம் வரதட்சணை கேட்பவர், வரதட்சணை வாங்குவோர் ஆகியோர் சட்டப்படி குற்றவாளிகள் எனப்பட்டனர். அவர்களது குற்றங்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கப்படுகின்றது. ஆனால் இந்நிலையை மாற்ற வேண்டுமேயாயின் ஆண், பெண் ஆகிய பிரிவினரும் இப்பாவச் செயலை நீக்க வேண்டும். அவ்வாறு பெறக்கூடிய பணமானது பெண்ணைப் பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சிப்பெறப்படுவதால் அப்பாவப்பணம் உண்மையான மகிழ்ச்சியைத் தருவதில்லை. மேலும்

கொண்டால் வரதட்சணைக்காக, பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அம்மணவாழ்வும் மகிழ்ச்சியுடையதாக அமைவதில்லை. வரதட்சணைக்காகத் தொடுக்கப்பட்ட வழக்குகளின் பின்விளைவுகளும் நிலையான முடிவை எட்டவில்லை. ஆகவே வரதட்சணையை ஒழிப்பதில் திருமணம் செய்துகொள்ள விழையும் ஆணின் பங்குதான் முக்கியமானதென்பதை உணரவேண்டும். மேலும் பெண்களைப் பெற்றவர்களும் இனி வரதட்சணை தருவதில்லை என்றும் உறுதியாக இருக்கவேண்டும். பெண்ணின அமைப்புகளும் வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து உரக்கக் குரல் எழுப்ப வேண்டும். வரதட்சணைச் சட்டம் திட்டவட்டமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். திருமணமாகாத பெண்களும் வரதட்சணை கொடுத்து வாழ்க்கையைப் பெறும் முறையற்ற வாழ்வை ஏற்கத் தேவையில்லை என்று உறுதிபடச் செயல்பட வேண்டும். வரதட்சணை தருவதைப் பெண்ணைப் பெற்றோரும் தவிர்த்தல் வேண்டும். எனவே மன்வியல் நோக்கில் இத்தவறு தவிர்க்கப்பட வேண்டியது, அவசியமானதாகின்றது.

## குழந்தைமணம்

குழந்தைமணம் என்பது பண்டைக்காலம் தொட்டு வழக்கிலிருந்து வந்துள்ளது. வறுமை, குடும்பத்தின் பொருளாதாரச் சூழல், குடும்பநலத் திட்டம் செயல்படாமை, வீட்டுச் செலவுக்குறைப்பு போன்ற காரணிகளுக்காக குழந்தைமணம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது அக்குழந்தையைப் பாதிக்கும் என்பது உணரப்படவில்லை. பெற்றோரும் பெண்ணைத் திருமணம் செய்துகொடுத்துவிட்டால் சுமையும், பொறுப்பும் குறைந்ததென எண்ணியிருக்கலாம். உடலியல் பெண்ணியல் போன்ற இயல்கள் இல்லாமையால் அக்காலத்தில் குழந்தைமணம் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். சமூகச் சூழல்களும் பெண்ணியத்திற்கு எதிரானதாகக் அமைந்திருத்தல் வேண்டும். பணத்தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள பெற்றோர் தமது பெண்களை இளவயதிலேயே திருமணச் சந்தை மூலம் மறைமுகமாக விற்பனை செய்யும் ஒரு வேலையாக குழந்தைமணத்தைக் கருதலாம். இத்தகைய திருமணங்கள் வாயிலாக நட்புறவு, சொந்தபந்தம் ஆகியவற்றைக் காத்துக் கொள்ளவும் செய்திருக்கலாம். பெண்கள் திருமண வயதுச்சட்டம் மற்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட சாரதா சட்டம் மூலம் பெண்களின் திருமண வயது உயர்த்தப்பட்டது. ஆனால் இன்றும் இந்தியாவில் கர்நாடகம், ராஜஸ்தான் போன்ற பகுதிகளில் குழந்தைமணம் அல்லது பால்ய விவாகம் செயலில் உள்ளது. இக்குழந்தைமணமானது பெண்களின் உரிமையைக் கட்டுப்படுத்துகின்றது. பெண், ஒன்றும் புரியாத வயதில் திருமணம் செய்து கொள்வதால் மனவியல் அல்லது உளவியல் சிக்கல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இளவயதில் திருமணமான பெண்கள் குடும்பபாரம் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்ள முடியாதநிலை ஏற்படுகின்றது. தூண்டல்களுக்கேற்ப துலங்கவியலாத நிலை காரணமாக வாழ்க்கையே இருண்டு போனதாக அல்லது வறண்ட பாலைவனமாக ஆக்கக்கூடியவாய்ப்புகள் மேலோங்கிக் காணப்படுகின்றன.



## பலதாரமணம்

இந்தியச் சமுதாயத்தில் அன்று தொட்டு இன்றுவரை பலதாரமணம் என்பது ஒரு சாபக்கேடாக உள்ளது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையிலிருந்து மாறுபட்டு ஒருவருக்குப் பல மனைவியர் என்பது செல்வந்தர்களுக்கும், மன்னர்களுக்கும் பொருந்தக்கூடியதாயிற்று. அக்பர், ராஜராஜ சோழன் போன்ற மன்னர்கள் பல பெண்களை மணந்துகொண்டு தமது அந்தப்புரத்தில் எந்தப்புறத்தையும் பெண்களால் நிறைத்தபோது அதனை அன்றைய நாளில் நிலவிய இராஜதந்திரக் கோட்பாடாகக் கொள்ளலாம். பல இனத்தைச் சேர்ந்த பெண்களை மன்னர் மணந்துகொள்வதால் மன்னரின் பெருந்தன்மையைப் பலரும் பாராட்ட வாய்ப்பு கிடைக்கின்றது. அத்துடன் இன மற்றும் சமய ஒருமைப்பாட்டிற்கும் அது உறுதுணையாகுமென்ற நோக்கம் பின்பற்றப்பட்டிருக்கலாம். ஆனால் ஆண்கள் குறைவாக உள்ள அல்லது பெண்கள் அதிக அளவிலுள்ள சமுதாயத்திற்குப் பலதாரமணம் பொருந்துமெனக் கொண்டாலும் அது ஏற்புடையதல்ல. மேலும் பலதாரமணம் மூலம் ஆடவரின் மேலாண்மை வெளிப்படுத்தப்படுமென்பதாலும் பலதாரமணம் பின்பற்றப்படுகிறது. அதேபோல் குழந்தைப்பேற்றினைத் தர இயலாத மனைவி இருந்தாலும் மறுதாரம் கட்டிக்கொள்ளும் வழக்கம் உள்ளது அல்லது முதல் மனைவி இறந்துவிட்டால் கணவர் இளவயதுடையவராக இருந்தால் இரண்டாம் தாரத்தைக் கட்டிக் கொள்ளும் வழக்கம் உள்ளது. அதேபோல் மனைவி இருக்கும்போதே 'அறுத்துக் கட்டும் முறை' என்ற முறை சில பிரிவினரிடையேயும், மலைவாழ் மக்களிடையேயும் காணப்படுகின்றது. இதே நிலையில் முதல் மனைவி நோய்வாய்ப்பட்டாலும் உலகியல் இன்பத்தைப் பெறுதலின் பொருட்டு மறுமணம் செய்துகொள்ளுகின்றனர். ஒரு குடும்பத்தின் தேவைகள் அதிகரித்துவிட்டதால், சுகமான வாழ்க்கையை வாழவேண்டுமென விரும்புவதாலும் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் பலதாரமணம் மேற்கொள்ளப்படுகின்றது.

சமயம் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகள் பலதார மணத்தைக் கடுமையாகச் சாடி அதனை ஒடுக்க முற்பட்டாலும் இந்தியத் துணைக் கண்டத்தில் பலதாரமணம் முழுமையாக ஒழிக்கப்படவில்லை. அஸ்ஸாம், மணிப்பூர் போன்ற மாநிலங்களில் பழங்குடி மக்கள், மலைவாழ் பிரிவினர், தாழ்த்தப்பட்ட இனப்பிரிவினரிடையேயும் பலதாரமணம் செயலில் உள்ளது. பெண்களுக்குக் கல்வியறிவு ஊட்டுதல் வாயிலாக பலதாரமணத்தைப் பெண்கள் ஏற்பது தடைசெய்யப்படலாம் எனப்பட்டது. ஆனால் பெண்களிடையே காணப்படும் மூடப்பழக்க வழக்கம், கல்விக்கு முக்கியத்துவம் தராமை, வளர்ச்சிப் பதுமைகளாகச் செயல்படல் போன்ற காரணங்களால் பலதார மணத்தை ஒழித்தல் என்பது இயலாததொன்றாக உள்ளது. ஆணாதிக்கத்தின் பலாத்காரமும் இக்கொடுமைக்குக் காரணம் அதனால் அதனைத் தவிர்த்தல் இயலவில்லை.

1954ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துத் திருமணச்சட்டம் மூலம் இந்துக்களிடையே பலதாரமணத்தை தடுக்கவகை செய்யப்பட்டது. 1961ஆம் ஆண்டுக் கணிப்பின்படி இந்துக்கள், முகமதியர் போன்றோர் ஏறத்தாழ

ஆறுவிழுக்காடு அளவிற்கு பலதாரமணத்தை மேற்கொண்டனர். ஆனால் தாழ்த்தப்பட்ட இனப்பிரிவினர் 1991ஆம் ஆண்டு, 2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படியும் மாறவில்லை என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

சட்டம் பற்றியவற்றிற்கு முக்கியத்துவம் தராமை, சமுதாயத்தில் ஒருவர் பெற்றுள்ள அசைக்கவொண்ணா அந்தஸ்து போன்றனவும் பலதாரமணத்தை அசைக்க முடியாத ஒரு பாவச்செயலாக ஆக்கியுள்ளன.

## விதவைகள்

இந்தியாவில் பெண்கள் கணவனை இழந்து விதவைகளாக ஆகிவிட்டால் பலதரப்பட்ட சமூக நிந்தனைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். கணவனை இழந்த கைம்பெண் சதி அல்லது உடன்கட்டை ஏறல் என்ற மிருகத்தனமான கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். அவர்கள் பூ, பொட்டு, வைத்துக்கொள்ளல், நல்லாடைகள் அணிதல், வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொள்ளல், சமூக விழாக்களில் பங்கேற்றல் போன்றவற்றினின்றும் தடுக்கப்பட்டனர். கணவனை இழந்த பெண்களை மொட்டையடித்து முக்காடிட்டு மூலையில் முடங்கிக் கிடக்கச் செய்த காலமும் உண்டு. விதவைகள் திருமணம் அக்காலச் சமுதாயத்தால் ஏற்கப்படவில்லை. வேதகாலத்தில் வாரிசில்லாமல் ஒருபெண் கணவனை இழந்துவிட்டால் 'நியோகா' என்ற திருமண உறவு மூலம் தன்னுடைய கணவரின் சகோதரன் வழியாகக் குழந்தை பெற்றுக்கொள்ளலாம் எனப்பட்டது. ஆனால் பெண்ணுக்குச் சொத்துரிமை இன்மையால் அம்முறையானது காலப்போக்கில் மண்ணோடுமக்கி மறைந்துவிட்டது. கணவனை இழந்த கைம்பெண் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட ஒரு புழுவாகக் கொள்ளப்படும்போது மனைவியை இழந்த ஒரு கணவன் அவள் இறந்ததுயரமும் உருவம் மாறுவதற்கு முன்பாகவே அத்தகைய மறுமணம் செய்து கொள்ளுகிறான். இது இந்து சமுதாயத்தில் காணப்படும் ஒரு அநீதியாகும். மேலும் உரிமை, ஆண், பெண் பாகுபாடு பால்வினை காரணமாக, பாகுபாடுகள் காரணமாக விதவைகள் சமுதாயத்தில் ஒதுக்கப்படுவதைத் தவிர்த்தலின் பொருட்டு இந்திய நடுவணரசு "விதவை" என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கு மாறாக 'காலஞ்சென்ற அல்லது மறைந்துவிட்ட இன்னாருடைய மனைவி' என்று கூறுமாறு அறிவுறுத்தியுள்ளது. ஆனால் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்தலின் பொருட்டும், கல்வி கற்றவர்களின் பயன் பலருக்கும் கிட்டவேண்டுமென்பதற்காகவும் விதவைகள் பெருமளவு துன்புறுத்தப் படுவதில்லை. ஆயினும் பொது வாழ்வில் அல்லது பொதுப்பணிகளில் ஈடுபடும்போது அவர்கள் பிற பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இரண்டாம்தர நிலையினராகவே கருதப்படுகின்றனர். பணியிலிருக்கும் போது கணவர் இறந்துவிட்டால் அவருக்குரிய ஓய்வூதியத் தொகையானது அவருடைய விதவை மனைவிக்கு வழங்கப்படுகிறது. சமூக அந்தஸ்து, அங்கீகாரம் போன்றவை அவர்களுக்குத் தரப்படுவதில்லை. உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றத்தார்கள் போன்ற நெருக்கமானவர்களாலேயே கணவனை இழந்த பெண்கள் ஒதுக்கப்படுகின்றனர். அவர்களும் பெண்கள்தான் அவர்களுக்கும் சாதாரண பெண்களைப்போல் உரிமைகள் தரப்படவேண்டுமென்பதை இன்றைய இந்தியச் சமுதாயம் ஏற்பதில்லை.



## பாலியல் தொழிலாளர்கள்

பெண்கள் தாமே விரும்பி பாலியல் தொழிலில் ஈடுபடவேண்டிய அளவுக்கு சமூகச் சூழல்களும், பெண்களின் உடலியலும், பொருளியல் சூழல்களும் உள்ளன. அதனால் அவர்கள் குடும்பப் பெண்களின்றும் மாறுபட்டவர்தளாகக் கருதப்படுகின்றனர். பண்டைய காலத்திலேயே அத்தகைய பெண்டிர் பரத்தையர், கணிகையர், கூத்தியர், விலைமாதர் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டனர். அவர்கள் இசை, நடனம் போன்றவற்றில் மேம்பட்டிருந்தமையால் சபலபுத்தியுள்ள ஆடவரை அதிக அளவில் கவரக்கூடியவர்களாயிருந்தார்கள். சில அறிஞர்கள் கூறுவதைப்போல் பால்யவிவாகம், பலதாரமணம், வரதட்சணைக் கொடுக்க இயலாமை, காலாகாலத்தில் திருமணம் நிகழாமை, ஆணின் ஆற்றலின்மை, ஆண்கள் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் நீண்ட காலத்தை வெளியிடங்களில் செலவிடல், வளர்ந்து வரும் மேல்நாட்டு நாகரீக முறை, வறுமை, வேலையின்மை, உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்மை, நகர்மயமாதல், ஆண், பெண் பால் பாகுபாடுகளுக்கு மதிப்பளிக்காமை, ஆணினத்தின் ஆணவமிக்க ஆதிக்கப்போக்கு, உடலை விற்றும் பணம் சம்பாதித்தல் என்பதும் ஒரு தொழிலெனக் கருதுதல், கூட்டுக் குடும்பங்களில் ஒதுக்கமாக வாழ இயலாமை, அல்லது கூட்டுக் குடும்பங்களில் வாழும் இளம் பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமை, பாலினக் கல்வியைத் தவறாகப் புரிந்துகொள்ளுதல், ஊடகங்களின் தாக்கங்கள் மற்றும் பிரதிபலிப்புகள் போன்ற காரணிகள் பாலியல் தொழில் இலைமறை காயென விரிவாக்கம் பெற்று வருகின்றது. வறுமையில் வாடுவோர், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமுள்ளோர், அதிக அளவு குழந்தைகளைக் கொண்டோர், பொருளியல், வாழ்க்கை வசதி காரணமாக இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். பிறருடைய அதாவது செல்வந்தர், வலியவர்களின் வற்புறுத்துதல்கள், கட்டாயம், மிரட்டல், சுரண்டல் போன்ற காரணங்களாலும் இத்தகைய இழி நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என்பது உண்மையே. 1956ஆம் ஆண்டில் இளம்பெண்டிர் பாலியல் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டாலும், அது யாரையும் தண்டிக்காமையால் முழுப்பயனையும் தரவில்லை. வெளியூர் பயணிகள் தங்குமிடங்களில் நடைபெறும் இத்தொழிலைத் தடுத்து நிறுத்த காவல் துறை மேற்கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளும் முற்றிலும் இச்சமூகத் தீமையை பெண்களுக்கு அளிக்கப்படும் அநீதியை தடுக்க இயலவில்லை என்பது கண்கூடு. சமூக சீர்திருத்தம், கல்விச் சீர்திருத்தம், எய்ட்ஸ் நோய் மற்றும் பால்வினை நோய்கள் பற்றிய விழிப்புணர்வு, இத்தகைய உறவு முறைகளால் மனிதனுக்கும் விலங்குகளுக்குமிடையில் வேறுபாடற்ற தன்மை உருவாதல் போன்ற பல செய்திகள் சுட்டிக் காட்டப்பட்டும் நடைமுறைப்படுத்தவும் பட்டால், இத்தொழில் ஈடுபடுவோரை சட்டம் மூலம் தடுத்து நிறுத்தினால் விமோசனம் கிட்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இத்தொழிலில் ஈடுபடுவோர் தாமே திருத்திக் கொள்வதுவே மேலான வழியாகும்.

**பெண் குற்றவாளிகள்**

வறுமை, வசதியின்மை, கல்வியறிவின்மை போன்ற பல காரணங்களால் பெண்கள் குற்றங்கள் புரிகின்றனர். சமூகச் சூழல்களும் அவர்களைக் குற்றம் செய்யத் தூண்டுவனவாக உள்ளன. தண்டனை பெற்று சிறையிலுள்ள பெண்களுள் 20 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் 72 விழுக்காடு பேர்களென்றும், அதற்குக் குறைந்த வயதுடையவர்கள் 10 விழுக்காட்டினர் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. குற்றம் செய்தமைக்காகச் சிறையிலடைக்கப் பட்டுள்ள பெண்களின் நிலை வருந்தத்தக்கதாய் இரங்கத்தக்கதாய் உள்ளது. ஏற்கனவே குற்றம் செய்து தண்டனை பெற்ற அவர்களது சிறை வாழ்க்கை அவர்களைத் திருத்தக்கூடியதாகவோ, ஆரோக்கியமானதாகவோ காணப்படவில்லை. அவர்கள் மனதளவில் கடுமையானவர்களாக ஆகின்றனர். பலவகைக் குற்றவாளிகளும் ஒரே இடத்தில் அடைத்து வைக்கப்படும்போது அவர்களிடையே மனமாற்றம் நிகழ வாய்ப்பில்லை. சிறையிலடைக்கப்பட்டுள்ள பெண்கள், பலவழிகளில் துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். சித்திரவதை, பாலியல் கொடுமை ஆகியவற்றிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதனால் அவர்களுடைய மென்மைத்தன்மை படிப்படியாக மங்கி மறைந்து குற்ற உணர்வுடனேயே இயங்குகின்றனர். குறிப்பிட்ட எண்ணிக்கையினர் மட்டுமே திருந்தி வாழத்தலைப்படுகின்றனர். அவர்களுடைய உரிமைகள் மதிக்கப்படல் அவசியம். முறைசாரா வாழ்க்கைக் கல்வி, கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்ள வகை செய்தல் போன்றவற்றின் மூலம் மனமாற்றத்திற்கு வகை செய்தல் வேண்டும். அவர்களுக்கும் கேளிக்கை பொழுது போக்கு, மகிழ்ச்சியாக இருக்கச் செய்தல் போன்றவற்றிற்கான வாய்ப்புகள் தரப்படல் தேவை. அவர்களுடைய குற்றங்களுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவற்றிலிருந்து அவர்களை விடுபடச் செய்ய மனவியல், உளவியல் மருத்துவர்களின் துணை நாடப்பட வேண்டும். பெண் காவலர்கள், சமூகசேவகிகள் மூலம் அவர்களைத் திருத்த முற்படலாம். தன்னம்பிக்கை, வாழ்க்கையில் பிடிப்பு, பற்றுதல் ஆகியவற்றை உருவாக்குதல் மூலம் அவர்களிடையே விழிப்புணர்வை ஊட்டலாம். தன்னார்வக் குழுக்கள், சமூக சேவை மற்றும் சீர்திருத்த மன்றங்கள், மனித உரிமைக் கழகங்கள், தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் உதவியும் நாடப்படலாம். நாட்டின் சட்டங்களும் அவர்களுக்கு சீர்திருத்த உணர்வுகளை உருவாக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக கல்விப்பணி குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள் போன்றவர்களின் தன்மைகளுக்கேற்ப அதிகாரிகளும், பிறரும் அவர்களை முறையாக நடத்த வேண்டும். சமூகச் சூழல்களில் காணப்படும் முறைகளும் பெண்கள் குற்றம் செய்வதற்கான காரணங்களும் ஆய்வுகள் செய்யப்பட்டு, கண்டறியப்பட்டு களையப்பட வேண்டும். வரலாற்றுப் பக்கங்கள், சமூக இயல்கள் போன்றனவும் பழக்கப்பட்டு சமமான குறைகள் வளரப்பட்டு அவற்றை நீக்கலாம்.

**பெண்ணடிமைத்தனம்**

'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்ற முதுமொழி மூலம் பெண்களின் பெண்மைத் தன்மை எவ்வாறு திரித்துப் பயன்படுத்தப்பட்டுள்ள



தென்பதை உணரலாம். பெண்கள் அடிமைகளாக ஆணுக்கும், பிறருக்கும், சமுதாயத்திற்கும் கட்டுப்பட்டவர்கள் என்ற நிலை மேலோங்கிக் காணப்படுகின்றது. அவர்கள் அடிமைகளாக, கொத்தடிமைகளாக, ஒடுக்கப்பட்ட பிரிவினராக, நலிவுற்ற பிரிவனராகக் கொள்ளப்படுகின்றனர். பெண்கள் சந்தைகளில் அடிமைகளாக ஒரு காலத்தில் விற்கப்பட்டனர். அவர்கள் பண்டமாற்றாகக் கொள்ளப்பட்டனர். திருமணம் என்பது ஒரு விலங்காகப் பூட்டப்பட்டு உரிமைகளற்ற அடிமைகளாக அவர்கள் நடத்தப்படுகின்றனர். பொருளாதார சுதந்திரமற்றவர்களாய் அல்லது இன்றுபோல் பணம் சம்பாதித்து குடும்பத்திற்குக் கொடுத்துவிடக் கூடியவர்களாய் வாழும்போதும் பெண்களின் அடிமைத்தனம் வெளிப்படுகின்றது. பெண்கள் ஆடம்பரநோக்கில் தன்னுடைய நிலையை அழித்துக்கொள்ளும் போதும் அடிமையாக வேண்டிய கட்டாயச் சூழல் உருவாகின்றது. கொத்தடிமை முறையை ஒழிக்க இந்திய அரசு சட்டம் கொண்டு வந்தபோதிலும் 1950–ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்திய அரசியலமைப்பின் 23ஆவது ஷரத்து கொத்தடிமை தடுக்கப்பட வேண்டுமெனக் கூறினாலும், 35வது ஷரத்து கொத்தடிமையை ஆதரிப்பவர்களைத் தண்டிக்கலாம் எனக் கூறினாலும் கொத்தடிமை முறை ஒழிந்தபாடில்லை. ஐரோப்பிய நிலைமானியமுறைச் சமுதாயத்தில் அடிமையொருவனின் குடும்பமும் மேலாளருக்கு அடிமை என்ற நிலை காணப்பட்டது. இந்தியாவில் உள்ள கிராமியக் கடன் சூழல்கள் தந்தை, மகன், மனைவி, குழந்தைகள் எனப் பலரையும் அடிமைகளாக ஆக்கிவிடுகின்றன. வறுமை, ஏழ்மை, பொருளாதாரச் சூழல்கள் முதலான காரணிகளால் பெண் குழந்தைகள் பட்டாசுத்தொழில், தீப்பெட்டித்தொழில், பீடித்தொழில், கல்குவாரிகளில் பணிபுரிதல், வீட்டு வேலையாட்களாகச் செயல்படல், விவசாயப் பணிகளில் ஈடுபடல் போன்றவற்றின் மூலம் பெண்கள் அடிமைகளாக்கப்படுகின்றனர். பலதாரமணம், மாற்றாந்தாய்கொடுமை, பாலினச் சிக்கல் போன்றவற்றாலும் கல்வியறிவின்மை மற்றும் மூடபழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல் ஆகியனவும் பெண்களை அடிமைகளாக்குகின்றன. 1976–ல் கொத்தடிமையை அறவே அகற்ற இந்திய அரசு மேற்கொண்ட முயற்சியும் முழுப்பலனையும் தரவில்லை. சேவை அமைப்புகள், மனித உரிமைக் கழகங்கள் சமூக சேவகர், சேவகிகள், சட்டம், காவல்துறை போன்ற பலதரப்பட்ட படிநிலைகள் மூலம் அடிமையாவது தவிர்க்கப்பட வேண்டும். ஜூன் 14,15 ஆகிய தேதிகளில் 1996ஆம் ஆண்டு சென்னையில் கொத்தடிமை மறுவாழ்வு மற்றும் ஒழிப்பு இயக்கம் (Campaign for the Abolition and Rehabilitation of douded labour : CARBOLA) மற்றும் பன்னாட்டு அலுவலர் கல்வி நிதிநிறுவனம் மூலம் ஒரு முகாம் நடைபெற்றது. அதன்மூலம் கொத்தடிமை பற்றி விரிவாக ஆராயப்பட்டு அதனைத் தவிர்க்கும் வழிகளும் ஆய்வு செய்யப்பட்டன. அதன்மூலம் பெண்கள், பெண் குழந்தைகள் ஆகியோர் கொத்தடிமை முறைகளிலிருந்து காக்கப்பட வகை செய்யப்பட்டது.

**பெண் பணியாளர்கள்**

'ஆண்டவரின் படைப்பில் அனைவரும் சமம்' ஆனால் ஆண், பெண் பாகுபாடு இறைவனால் படைக்கப்பட்டதாக மனிதனால் இன்றும்

கொள்ளப்பட்டு வருகின்றது. அதனால் பெண்கள் பலகாரணங்களால் தம்மைத் தொழிலாளர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்ற கோட்பாடு காரணமாக வளர்ந்துவரும் தேவைகள் காரணமாகப் பெண்கள் வேலைக்குப் போக வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. பெண்கள் கல்வி கற்பதில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாகவும் அவர்கள் பல பணிகளில் ஈடுபட்டுத் தமது பொருளாதாரத் தன்மைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர். பொருளாதாரத்துறையில் முன்னணியில் உள்ள மொத்த நாடுகளிலும் சுமார் 20 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். உலகிலுள்ள குழந்தைத் தொழிலாளர்களுள் 45 விழுக்காடு பேர் பெண்குழந்தைகள் என்ற புள்ளி விபரத்தைக் காண்கையில் போதான வளையம் விரிவடைகின்றது. விவசாயம், குடிசைத்தொழில், நெசவுத்தொழில், தீப்பெட்டி அடுக்குதல், பீடி சுற்றுதல் கால்நடை பராமரிப்பு, கட்டிடப்பணி போன்ற பல தொழில்களில் பெண்கள் ஈடுபடுகின்றனர். அதில் அவர்களுக்கு ஆண்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்படுவதில்லை. அத்துடன் அவர்கள் அதிக நேரம் வேலை வாங்கப்படுகின்றனர். அவர்களுக்குத் தேவையான ஓய்வும் தரப்படுவதில்லை. தேவைக்காலங்களுக்காக அதிக அளவில் வட்டிக்குக் கடன் வாங்கி அவற்றைத் திருப்பித் தர இயலாத நிலை ஏற்படுகின்றது. அப்போது அவர்கள் சுரண்டல்களுக்கு ஆளாக்கப்பட்டுத் தொழிலாளர்கள் ஆக்கப்படுகின்றனர். இவற்றைப் போன்றவற்றை கிராமப்புறங்களில் அதிக அளவில் சர்வ சாதாரணமாகக் காணலாம். சமூகப்பண்பாடு, பொருளாதாரச்சீர்குலைவு, குறைவுகாரணமாக பெண்குழந்தைத் தொழிலாளர்கள் முறையற்ற பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்ற செய்தியை குழந்தைகள் சுரண்டல் மற்றும் கடத்தல்காரர்க்குக் காரணமானவற்றிற்கு எதிரான உலக அமைப்பு குறிப்பிடுகின்றது. 1966ல் ஸ்பிக் ஹோம் நகரில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்ற 122 நாடுகள் பெண் குழந்தைத் தொழிலாளர் நலனுக்கான செயல்களை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டன. ஆனால் முழுமையான பலன் ஏற்படவில்லை. மேலும் பெண் தொழிலாளர்களுக்கான சேமநலநிதி, ஊதியத்துடன் கூடிய விடுப்பு, இலவச அல்லது குறைந்த செலவினால் ஆன மருத்துவ வசதி போன்றவை மேற்கொள்ளப்படுவதில்லை. அதே நேரம் சக ஆண்தொழிலாளர்களின் முறையற்ற செயல்களும் பெண்களைத் துயரத்திற்கு உள்ளாக்குகின்றன. இந்திய அரசியலமைப்பின் 32ஆம் ஷரத்து மேலே குறிப்பிட்டுள்ள குறைபாடுகளைக் களையத்தக்க அடிப்படை உரிமைகளை வலியுறுத்தினாலும் அவை ஏட்டளவிலேயே உள்ளன. தேசிய பெண்கள் கூட்டமைப்பு (National Alliance of Women) பலதரப்பட்ட முயற்சிகளை எடுத்தாலும் அவை பெண் தொழிலாளர்களுக்கு ஆதரவாகச் செயல்படவில்லை. உழைப்புக்கேற்ற ஆண்களுக்குச் சமமான ஊதியம் வழங்கல், அவர்களுடைய உரிமைகளைத் தரல், அவர்களுடைய பொருளாதாரத்தைச் சுரண்டாதிருத்தல் அவர்களுக்கு கல்வி வழங்கல்; குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தித்தரல், போன்ற வழிகள் மூலம் பெண் தொழிலாளர்கள் பாதுகாக்கப்படலாம். அவர்களுக்கு சமூக விழிப்புணர்வு, கட்டாயக் கல்வி போன்றவை தரப்பட வேண்டும்.



மேலே கூறப்பட்டுள்ள நிலைகளில் கணவன் மற்றும் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள், பாலியல் உணர்வு காரணமாக ஆண்களிடம் ஏமாந்துவிட்ட அப்பாவிப் பெண்கள் பேரன்றோர் தமது வாழ்க்கைத் தேவைக்காகவும், வயிற்றைக் கழுவவும் ஏதாவது பணியில் தம்மை இணைத்துக் கொள்ளுகின்றனர். அவை ஒழுங்கின்மை, முறையற்ற தன்மை ஆகியவற்றிற்குக் காரணமாகின்றன. இத்தகைய இடர்ப்பாடுகள் நீக்கப்பட வேண்டும். விவாகரத்து, மணவிலக்கு பெற்ற பெண்கள், ஆதரவற்ற விதவைகள் ஆகியோரும் இத்தகைய செயல்களுக்குத் தம்மை ஆளாக்கிக் கொள்ளுகின்றனர். கல்வி கற்றுவிட்ட தொழில்மூலம் பெரும் வருவாய் காரணமாகவும் சில பெண்கள் தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளுகின்றனர். அதனால் அவர்களுடைய வாழ்க்கை இயல்புக்கு மாறானதாய் அமையும். அதன் விளைவுகளும் துயரத்திற்கு வழிகோலும்.

ஏற்கனவே ஊடகங்கள் பலவும் பெண்களாக முறையற்ற வழிகளில் சித்தரிக்கும் போதும், ஆபாச உணர்வுடன் படங்களையும், கதைகளையும் வெளியிடும்போதும் அவை சமுதாயச்சிக்கல்களை உள்ளாக்குகின்றன என்பதை உணர்தல் வேண்டும். பெண் கல்வியானது ஆண்கள் பெறும் கல்விக்குச் சமமானதாக மட்டுமில்லாமல் அவர்களிடம் உள்ளதனிப்பட்ட பண்புகளைச் சுட்டிக்காட்டி அவற்றினால் ஏற்படும் தவறான விளைவுகளைத் தவிர்ப்பதற்கான படிப்பினையையும் உணர்த்த வேண்டும். சமூகக்கல்வி, கட்டாயக்கல்வி, தொழிற்கல்வி, முறைசாராக்கல்வி, அரசியல் கல்வி போன்ற பலநிலைகளிலும் அவர்கள் பங்களிப்புக்கு வகை செய்தல் வேண்டும். ஆண் பெண் சமத்துவம், சமஉரிமை ஆகியவற்றை ஊட்டுதல் வாயிலாக பெண்கள் சிக்கல்களுக்குத் தீர்வு காணலாம்.

பெண்ணினத்தின் மேம்பாட்டிற்காக பெண்கள் நலனுக்காகவும் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டங்கள் (1954,1955) இந்து வாரிசுரிமைச் சட்டம் (1956), மகப்பேறு கால உதவிச் சட்டம் (1961), சமஊதியச் சட்டம் (1976), வரதட்சணை ஒழிப்புச் சட்டங்கள் (1961,84), பெண்கள் முறையற்ற செயல்களில் ஈடுபடுதலைத் தடை செய்யும் சட்டம் (1986) போன்றவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வப்போது பலதரப்பட்ட சமூக அமைப்புகள் மற்றும் அரசுகளால் கருத்துக் கணிப்புகள், ஆய்வுகள் மூலம் முறைகேடுகள் கண்காணிக்கப்பட்டு அவற்றைக் களைய வகை செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக பெண் முன்னேற்றம், பெண் விடுதலை போன்றவற்றை எட்டுதல் என்பது கட்டுப்பாடுகள் நிறைந்த இந்து சமுதாயத்தில் எளிதானதில்லை. எனவே பெண்கள் பொறுமையுடன் தமது நிலைதனை உயர்த்த படிப்படியாக முயலுதல் வேண்டும். அத்துடன் ஓரிடத்தில் பிறந்து பிரிதொரு இடத்தில் கல்விப்பணி, அரசுப்பணி மற்றும் பிற பணிகளில் ஈடுபடும் திருமணமாகாத பெண்களுக்கும் பல சிக்கல்கள் உள்ளன என்பதை நினைவிற் கொள்ளல் வேண்டும். அவர்களுக்கான தங்குமிடம், உணவு வசதி போன்றவற்றிற்கும் அரசாங்கமே பெண்கள் விடுதிகளை ஏற்படுத்தி குறைந்த செலவில் வசதிகளைப் பெருக்கித் தந்தால் அவர்களுடைய பணி ஈடுபாடுகளைச் சிக்கலற்றதாக ஆக்கலாம். சமுதாயச் சிக்கல்களையும் அப்போது கட்டுப்படுத்தலாம்.

## பெண்ணுரிமைச் சட்டங்கள்

பெண்ணியம் கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் உரியதாகக் கொள்ளப்பட வேண்டும். தொன்றுதொட்டு இந்தியப் பெண்கள் ஒதுக்கப்பட்டவர்களாய் தனிமைப்படுத்தப்பட்டவர்களாய் உரிமைகள் அற்றவர்களாய் பின்னடைவு பெற்றவர்களாயிருந்தனர். கலப்புப் பண்பாட்டைக் கொண்டுள்ள இந்திய துணைக் கண்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக பெண்ணுரிமையிலும் மாறுதல்கள் காணப்படுகின்றன. அதேநேரம் பெண்களும் வாய்மூடிமௌனிகளாக உரிமைகளேதுமின்றி ஒதுக்கப்பட்டனர். எனவே பெண்ணுரிமை பற்றிக் காணும்போது பெண்களைப் பற்றித் தெரிந்துகொள்ளல் வேண்டும். அதில் பெண்ணுரிமையும் அடங்கும்.

கல்வியறிவில்லாமல் சமூகக்கட்டுப்பாடுகளால் பின்னடைவு பெற்றிருந்த பெண்ணினத்திற்குத் தமது உரிமைகள் பற்றிய சிந்தனையும் எழவில்லை. இருப்பினும் பெண்களுக்குச் சில உரிமைகள் தரப்பட்டிருந்தன. ஆனால் அவை முழுமை பெற்றதாகவோ, நிரந்தரமாகவோ அமையவில்லை. 19ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஆங்கில ஆதிக்கமானது, இந்தியப் பெண்களின் நிலை உயர்த்தப்படவில்லையெனில் இந்தியச் சமுதாயத்தை திருத்தவியலாது எனக்கண்டது. எனவே இந்தியச் சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளை உணர்ந்து கொள்ள சமுதாயத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடம் பற்றிக் காண வேண்டும். அந்நிலையில் அவர்களுக்கு அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைக் கழகம் போன்றவை நல்கியுள்ள தன்மைகளும் அறிந்துகொள்ளப்பட வேண்டும். பெண்களுக்கும் சொத்துரிமை கல்வி உரிமை, சமத்துவ உரிமை போன்றவை தேவை. அப்போதுதான் அவர்களது உரிமைகள் நிலைநாட்டப்பட்டு சமூக அந்தஸ்து சீரமைக்கப்படும்.

இந்தியாவைப் பொறுத்தவரை பாலினப்பாகுபாடு காரணமாக உருவாக்கப்பட்ட சமூக வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றால் பெண்ணுரிமையானது பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அப்பாகுபாடு ஆண், பெண் பிரிவினரிடையே சமத்துவமின்மை என்ற நிலையையும் உருவாக்கியுள்ளது. அத்தகைய பாகுபாடுகளைக் களைவதன் மூலமாகவே பெண்களின் நிலையை உயரச் செய்யலாம். சமூகநீதியை நிலைநாட்டலாம். சட்டங்களும் அரசியலமைப்பும் அவர்களுக்கென உரிமைகளை வரையறுத்து பாதுகாப்பு, நல்கியபோதிலும் நடைமுறையில் அவை செயல்படுத்தப்படவில்லை. சமூக பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் பாரம்பரியப் பண்புகள் போன்றவை பெண்களுக்கு இரண்டாம்தர நிலையை நல்கியுள்ளன. எனவே அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டு உரிமைகளையே கொண்டுள்ளனர். சமூகச் சட்டம் சார்ந்த பண்பாட்டு முறையமைவும் பெண்களைக் கட்டுப்படுத்தவல்லதாகவே உள்ளது. எந்தச் சமயமும், பெண்ணுரிமை, பெண்கள் மேம்பாடு பற்றிய தனிப்பட்ட பண்புகளைப் பற்றி விளக்கவில்லை. மனித நலமாண்புக்கு வழிகாட்டும் சமயங்கள், சமுதாயச் சீரழிவு, சீர்குலைவுபற்றிக் கூறவில்லை. பெற்றோருக்குக் கட்டுப்படுத்தப்பட்ட பெண்ணானவள் மணமான்பின் புதியசூழல் கணவன், மாமனார், மாமியார், நாத்தனார் போன்றோருக்குக் கட்டுப்பட்டு



உரிமைகளற்றவளாகின்றாள். செயல்கள் அல்லது பணிகள் நோக்கில் பெண்கள் ஆடவர்களின் உதவியாளர்களாகவே கருதப்படுகின்றனர். அவர்கள் கொத்தடிமையெனவே கட்டுப்படுத்தப்படுவதுடன் உரிமைகளற்றவர்களாய் செயல்படவேண்டியவர்களாக உள்ளனர். பெண்கள் தாமே ஆணாதிக்கத்தையும், சமுதாயத்தையும் கணவனை உள்ளிட்ட குடும்பத்தினரையும் எதிர்த்துப் போராடுதல் இயலாதொன்று. பழமைபற்றுதல், ஆதிக்க மனப்பாங்கு ஆகிய சிலந்திவகைகளை அறுத்தெடுத்தல் என்பது முடியாது. எனவே பெண்ணுரிமையைத் திட்டவட்டமானதாகச் சுட்டிக்காட்டி அவற்றை செயலாக்கச் செய்வதன் மூலமாகவே பெண்களின் நிலையை உயர்த்தவியலும்.

பண்பாடும் நாகரிகமும் வளர்ந்து வரக்கூடிய சமுதாயத்தில் பெண்ணுரிமை என்பது ஒரு வளர்ச்சிப் படிநிலையாகும். இயல்பாகவே கடவுள் தமது படைப்பின்போது எவ்விதமான பாகுபாடும் காட்டாமல் சமுதாயப் பிரிவினரை ஒத்ததன்மையுடையவர்களாகவே படைத்தார். ஆனால் காலப்போக்கில் ஆண்கள், பெண்களை பிற்பட்டவர்களாக உடற்கூறு காரணமாக அடிமைகளாக ஆக்கிவிட்டனர். அதற்கேற்பவே சமூகச் சட்டதிட்டங்களும், விதிமுறைகளும், கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டன. ஆண்கள் சுயநலநோக்குடன், தமது மேம்பட்ட நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவேண்டுமென்பதற்காகவும் பெண்ணுரிமையைப் பறித்து அவர்களுடைய வாழ்க்கைக்கு பங்கம் விளைவித்தார்கள். பெண்களிடம் காணப்படும் பொறுமை, சகிப்புத்தன்மை, ஈடுபாடு போன்ற காரணிகளால் தமக்குள்ள பொறுப்புகளை அவர்கள் எளிதில் தவறுகளின்றி ஈடுபாட்டுடன் செயல்படுவர். மக்களாட்சி, குடியுரிமை போன்றவை சிறப்பாகச் செயல்படவும் பெண்களின் உரிமைகள் வலியுறுத்தப்படுகின்றன. பெண் விடுதலையே பெண்ணுரிமையின் பிறப்பிடம் எனப்படுகின்றது. எனவே பலதரப்பட்ட பெண்ணுரிமைகளைப் பற்றி அறிதல் வேண்டிய அவசியமும் எழுகின்றது.

## இந்திய அரசியலமைப்பும் பெண்ணுரிமைகளும்

இந்திய அரசியலமைப்பானது இந்தியரனைவருக்கும் எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவானது. அது பாலினப் பாகுபாடுகள் சமத்துவமின்மை போன்றவற்றைக் களைந்து மாநில அரசுகளும் பெண்களுக்கு எதிரான சுரண்டல்களையும் ஒழிக்கவேண்டுமெனக் குறிப்பிட்டது. இவற்றின் மூலம் பெண்ணுரிமை பற்றி இந்திய அரசியலமைப்பு காட்டும் வழி நெறிகளுடன், பண்புகளையும் உணர்ந்துகொள்ளல் அவசியம்.

இந்திய அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவு பெண்களைப்பற்றிய இரண்டு முக்கிய பண்புகளைக் கூறுகின்றது. 15(1) மற்றும் 15 (3) ஆகிய ஷரத்துக்கள், 1948ஆம் ஆண்டின் தொழிற்சாலைச் சட்டம், 1952ஆம் ஆண்டின் சுரங்கச் சட்டம், 1951ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் சட்டம் மூலமாகப் பெண்களுக்கு பணியாற்ற பெண்களைப் பணியிலமர்த்த உரிமையுண்டெனக் கூறுகின்றது. 16(1) மற்றும் 16(2) ஆகிய ஷரத்துக்கள் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நோக்கில் ஆண், பெண் ஆகியோருக்கு சமமான

வேலை வாய்ப்பு உண்டு என்பதை நிலைநாட்டுகின்றன. 38வது ஷரத்து மூலம் பெண்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியல், சமத்துவம் தரப்பட வகை செய்யப்பட்டுள்ளது. ஷரத்து 51 A(c) யின்படி பெண்களின் மதிப்புக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய எந்தச்செயலையும் எடுத்தெறிவது ஒவ்வொரு இந்தியனின் கடமை எனப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் IV வது பிரிவானது பெண்கள் நலன் பற்றிய சிறப்புத்தன்மைகளைக் குறிப்பிட்டுள்ளது. அதன்மூலம் அவர்களுடைய சமூக, பொருளாதார நிலைகளை உயரச்செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. வழிகாட்டும் நெறிகளில் காணப்படும் ஷரத்து 39 (a) ஆனது ஆண், பெண் இருபாலருக்கும் தேவையான வாழ்க்கை வசதிகளைப்பெற வாய்ப்பு உண்டு எனப்பகர்கின்றது. சமவேலைக்கு சமமான ஊதியம் ஆண் பெண் பாகுபாடு இல்லாமல் தரப்பட வேண்டும் என்பதும் அரசியலமைப்பு நல்கியுள்ள உரிமையாகும். 1978ஆம் ஆண்டின் சமஊதியச் சட்டம் இந்த அரசியலமைப்பு ஷரத்தினை ஒட்டியே உருவாக்கப்பட்டது. ஷரத்து 39(c) மற்றும் ஷரத்து 42 ஆகியன பெண்களின் உடல்நலன், புணிகளின்போது பெண்களின் நிலை, பேறுகால விடுப்பு போன்றவற்றைப் பற்றிக் கூறுகின்றது. இந்த ஷரத்தினை ஒட்டியே 1961ஆம் ஆண்டில் பேறுகால உதவிச்சட்டம் இயற்றப்பட்டது. இவ்வாறு இந்திய அரசியலமைப்பு மூலமாகவே இந்தியப் பெண்களின் உரிமைகளுக்கு உத்திரவாதம் தரப்பட்டுள்ளது.

### மனித உரிமைகளும் பெண்களும்

மனித உரிமைகள் என்பன அடிப்படை உரிமைகளென இந்திய அரசியல் அமைப்பின் மூலமாக உத்திரவாதம் தரப்பட்டவையாகும். அவை அரசியல் மற்றும் சமூக உரிமைகளுக்குச் சமமானவை, அவை பெண்களின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளைப் பற்றி விளக்குகின்றன. பெண்களின் உணவு, இருப்பிடம் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களில் நிறைவுடன் தேவையான வாழ்க்கைத் தரத்தை தக்க வைத்துக்கொள்ள பெண்களுக்குத் தரப்பட்ட அடிப்படை உரிமை மற்றும் கடமை பற்றியதாக இது அமைகின்றது. தமது தேவை நிறைவுகளுக்காக பிறரைச் சார்ந்திருந்தாலும் மேலே கூறப்பட்டுள்ள உரிமைகளை அனுபவிப்பதனின்றும் தவிர்க்கப்படக் கூடாதெனக் கூறப்பட்டுள்ளது. உடல், மனம் ஆகியவற்றை நலமாக வைத்துக்-கொள்வதுடன், சுயநிர்ணய உரிமை, சுற்றுச் சூழலைத் திறம்பட வைத்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு உண்டு. அவற்றைப் பெறுவதில் அவர்கட்கு எவ்விதமான பாகுபாடும் காட்டப்படக் கூடாதெனப்பட்டது. குறிப்பாக பாலின் அடிப்படையிலான பாகுபாடுகள் தவிர்க்கப்படவேண்டும். பெண்களுக்கு சுயமுன்னேற்ற உரிமைகள் தரப்பட்டால்தான் ஒரு சமுதாயம் வளர்வதற்கான ஒரு படி அமைக்கப்படும். அது சமுதாய மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான ஒரு தேவை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பன்னாட்டு அமைப்பு மனித உரிமைபற்றி வெளியிட்ட சர்வதேச அறிக்கையே, மனிதர்களை பன்னாட்டு மக்கள் என்ற நிலையிலும், பெண்களுக்கு அவ்வுரிமை உண்டு என்ற நோக்கிலும் வெளியிடப்பட்டதொன்றாகும். அவை தொகுப்புடைய சட்டங்களல்ல. ஆனால் அவை அனைத்து மனித உயிர்களுக்கும் சுதந்திரமான, சமத்துவமான வாழ்க்கையைப் பெற்றுத்தர உருவாக்கப்பட்ட கோட்பாடுகளாகும். இதன்படி ஒருவர் மற்றொருவரது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் செயல்களில் தலையிடுவது தவிர்க்கப்படுகின்றது. மேலும் ஒவ்வொருவருக்கும் தனது நாட்டின் எல்லைக்குள் சுதந்திரமாக நடமாடிவர உரிமை உண்டு என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல ஒவ்வொருவருக்கும் தனது தேசியத்தை நிலைநாட்ட உரிமையுண்டு எனப்பட்டது. அத்துடன் தன்னுடைய நாட்டிற்குள் திருமணம் செய்து கொள்ளவும், அமைதியான முறையில் கூட்டம் கூடவும், எவ்விதமான இடர்ப்பாடுகள், இடையூறுகள் ஆகியவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமையும் பெண்களுக்கு நல்கப்பட்டது.



மேலே கூறப்பட்டுள்ளவற்றின் மூலம் ஆண் பெண் ஆகிய இருவருக்குமிடையில் எவ்விதமான பாகுபாடுமில்லாத சமஉரிமைகள் உண்டு என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அடிப்படை உரிமைகளைவிட மனித உரிமைகள் விரிவானவை என்பதும் புலனாகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரை இந்திய அரசியலமைப்புச் சட்டப்படியும், பாராளுமன்றம் இயற்றிய சட்டங்கள் வாயிலாகவும் ஆண் பெண் என்ற இருபாலருக்கும் எவ்வித பாகுபாடுமில்லாத அளவுக்குச் சம உரிமைகள் தரப்பட்டுள்ளன.

### பன்னாட்டு அறிக்கைகள்

ஐக்கிய நாட்டவை வெளியிட்ட பன்னாட்டு அறிக்கையானது (Universal- Declaration) பல தரப்பட்ட சட்டங்களுக்கும் அடிப்படைகளாய் அமைகின்றன. எனவே அவ்வறிக்கையின் முக்கிய கூறுகளையும் ஷரத்துக்களையும் தெரிந்து கொள்ளல் அவசியமாகின்றது.

ஷரத்து 1: அனைத்து உயிர்களும் சமமாகவும் விடுதலையுடனும் எவ்விதமான எதிர்ப்புகளற்ற சம உரிமையுடனும், எத்தகைய பாகுபாடுகளின்றும் பிறந்துள்ளமையால் பாலியல் நோக்கில் எவ்விதமான பாகுபாட்டையும் உருவாக்கக்கூடாது

ஷரத்து 3 & 4: அனைவருக்கும் வாழ, சுதந்திரமாக இயங்க மற்றும் பாதுகாப்புக்காக உரிமை உண்டாகையால் யாரொருவரும் அடிமைத்தனம் மற்றும் முறைகேடான செயல்கள் மூலம் கட்டுப்படுத்தக்கூடாது.

ஷரத்து 6: அனைவருக்கும் சம அந்தஸ்தும், உரிமைகளும் உண்டாகையால் யாரொருவரும் எவ்விதமான மனிதாபிமானமில்லாத தாக்குதல்கள், கொடுஞ்செயல்கள் மற்றும் கீழ்த்தரப்பட்ட நடத்தைக்கு உள்ளாக்கப்படக்கூடாது. பாகுபாடுகளுடைய நோக்கில் யாருக்கும் எவ்விதமான தண்டனையும் தரப்படக்கூடாது.

ஷரத்து 7: சட்டத்தின் முன் அனைவரும் சமம். சட்டப்படி அனைவரும் எவ்விதமான பாகுபாடுமில்லாமல் பாதுகாக்கப்படவேண்டும்.

ஷரத்து 8: உரிமைகள் மீறப்பட்டால் அனைவருக்கும் சட்டப்படியான தீர்ப்பாயங்கள் மூலம் கொடுமைகளிலிருந்து விடுவித்துக்கொள்ள உரிமையுண்டு.

1949 – இந்து திருமண செல்லுபடியாக்கும் சட்டம்(Hindu Marriage Validity Act)

1947 – பம்பாய் விவாகரத்துச் சட்டம் (Bombay Divorce Act)

1949 – சென்னை இந்து இருதாரத் தடை மற்றும் விவாகரத்துச் சட்டம் (Madras Hindu Prevention and Divorce Act)

1955, 1956, 1960, 1964, 1976, 1978 ஆகிய ஆண்டுகளின் இந்துத் திருமணத் திருத்தச் சட்டங்கள் போன்றவை திருமணங்கள் வாயிலாக பெண்களின் நிலையும் மதிப்பும் எவ்வாறு உயர்ந்துள்ளதென்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. 1955ஆம் ஆண்டு திருமணச் சட்டம் பலதாரமணம் மற்றும் ஒரு பெண் பல ஆடவரைத் திருமணம் செய்துகொள்ளல் ஆகியவற்றிற்குத் தடை விதித்தது. 1954ல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டமானது இந்துக்களின் பல பிரிவினருக்கிடையிலான கலப்பு மணத்திற்கு அங்கீகாரம் அளித்தது. அதனால் தேசிய ஒருமைப்பாடு, சமயச் சார்பின்மை போன்ற அகில இந்திய பண்புகள் வலுப்பெற்றன. 1956ஆம் ஆண்டின் இந்து தத்து எடுத்தல் மற்றும் வளர்த்தல் (Hindu Adoption and Maintanance Act) சட்டம் கணவருக்கு மனைவியின் ஒப்புதலுடன்தத்து எடுத்தக்கொள்ளும் உரிமையை வழங்கிற்று. 15 வயதுக்கு மேற்பட்டுள்ளவர்களை தத்து எடுத்துக்கொள்ளும் உரிமையானது திருமணமான பெண்கள் தவிர, திருமணமாகாத பெண்கள், விதவைகள், உலகியல் வாழ்வைத் துறந்து சந்நியாச வாழ்க்கையை மேற்கொள்ளுபவர்களுக்குத் தரப்பட்டுள்ளது. கணவனைப் பிரிந்து தனித்து வாழும் பெண்கள் ஜீவனாம்சம் கோரிப்பெறவும் சட்டத்தில் இடமுள்ளது. 1961ல் உருவாக்கப்பட்ட வரதட்சணை ஒழிப்புச் சட்டமானது பெண்களை சமூகக் கொடுமைகளிலிருந்து விடுடச் செய்து ஆண்களைப்போல் பெண்களுக்கும் சம உரிமையை நல்கியது.

இராஜராம் மோகன்ராய், ஈஸ்வர் சந்திர வித்தியாசாகர், பண்டித ரமாபாய், டாக்டர் அன்னிபெசன்ட் போன்றோரின் முயற்சிகளால் ஆண், பெண் பேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. பெண்கல்வி வளர்ச்சி, வறுமை, அறியாமை ஆகியவற்றின் நீக்கம், பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளமை போன்றவை சட்டப்படி பெண்களின் நிலை உயர்ந்துள்ளமையைச் சுட்டிக்காட்டுகின்றன. மக்களாட்சியை நிலைநாட்ட 18 வயதை எட்டிய பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளமையும் பெண்களின் உரிமையைநிலை நாட்டுவனவாக உள்ளன. பெண்கள் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடுதலும் அவர்களுக்கானதோர் வளர்ச்சிப்படியாகும். 1948 ஆம் ஆண்டின் இந்து விதிமுறைச் சட்டம் (Hindu Code Bill) பெண்ணுரிமையைப் பேணும் மற்றொரு சட்டம். இவ்வாறு சமூகம் சார்ந்த சட்டங்கள் பெண்ணுரிமையைப் பேணிகாக்கும் வழிவகைகளாகத் திகழ்கின்றன.



# 13. சொத்துரிமைச் சட்டமும் வாரிசுரிமைச் சட்டமும்

## (PROPERTY LAW AND LAW OF INTERITANCE)

முன்னுரை — *இந்துச்சட்டம் - முகமதியச் சட்டம் - கிறித்துவச் சட்டம் - வரதட்சணை ஒழிப்புச் சட்டமும் பெண்கள் மீதான தாக்கமும் - திருமண உறவும் - விவாகரத்து - இந்துச் சட்டம் - முகமதியச்சட்டம் - கிறித்துவச் சட்டம்*

சொத்துரிமைச் சட்டம் பெண்களுக்கு ஒரு சமூக அந்தஸ்தைப் பெற்றுத் தந்தது. பெண்களுக்கென வாழ்க்கை முறை ஒன்றையும் வழங்கியது. பெண்கள் தம்முடைய முன்னோர் அல்லது கணவரிடமிருந்து சொத்துக்களை தீர்மானிப்பு முறையிலோ, தானமாகவோ, பரிசாகவோ, வைப்புக்காப்பு நிதியாகவோ(endurment) பெற்றுக்கொள்ளலாம். சீதனம், திருமணம், விதவைத்தன்மை, குழந்தைகள் போன்றவற்றுடன் வழக்காறுகள் அடிப்படையிலும் பெண்களின் சொத்துக்களைப்பற்றிய செய்திகளை விணாக்கலாம். திருமணத்திற்குப்பின் ஏற்பட்ட பிரிவு, விவாகரத்து அல்லது விதவையாதல் போன்ற காரணிகளால் சட்டங்கள், சமூககட்டுப்பாடுகள் போன்றவற்றால் பெண்கள் கட்டுப்படுத்தப்படுகையில் சொத்துரிமைச் சிக்கல்களும் ஏற்படுகின்றன. மேலும் சொத்துரிமையானது இந்து, முகமதிய மற்றும் கிறித்துவச் சட்டங்கள் அடிப்படையில் மாறுபாடுடையனவாகவும் உள்ளன.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது சொத்துரிமையானது தொகுக்கப்படும் நிலையில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் மிட்டாசாரா, தயாபாக( வங்காளம்) மருமக்கள் தாயம்(நாஞ்சில் நாடு) அலிய சந்தானா போன்ற அடிப்படைகளில் சொத்துரிமை செயல்படுத்தப்பட்டது. மிட்டாசாரா முறைப்படி ஆண்களுக்கும் ஆண் வர்க்கத்தினருக்குமே சொத்துரிமை உண்டு என்று கூறப்பட்டது. பெண்களுக்குச் சொத்துரிமை இன்மையால் அவர்களுக்கான செலவுகள் பொதுப்பணம் வாயிலாகவே ஏற்கப்படவேண்டியவையாயிருந்தன. மகள் மற்றும் அவள் வழியினர் அல்லது மகன் வழிமகள் போன்றோருக்கு சொத்துரிமையில்லை. தயாபாக முறைப்படி தந்தையின் மரணத்திற்குப் பின் மகள் சொத்தினை செயல்படுத்த உரிமை பெற்றாள். ஆனால் அதனை உடமையாக்கிக் கொள்ளல் போன்ற பிற உரிமைகள் தரப்படவில்லை. மருமக்கள் தாயம் முறையில் பெண் வழியில் மகளும் அவள் வழிப்பெண்களும் சொத்தில் உரிமை கொண்டவர்களாயிருந்தனர். இருப்பினும் இந்தியாவில் தனிநபர்களின் தனிப்பட்ட சட்டமாகவே வாரிசு அடிப்படையில் சொத்துக்கள் பிரிக்கப்பட்டன.

| ஆண்டு | சட்டத்தின் பெயர் |
|---|---|
| 1954 – | சிறப்பு திருமணச்சட்டம்(Special Marriages Act) |
| 1955 – | இந்து திருமணச்சட்டம்(Hindu Marriages Act) |
| 1956 – | இந்து வாரிசுச் சட்டம்(Hindu Succession Act) |
| 1956 – | பெண்கள் மற்றும் சிறுமியரின் ஒழுக்கமற்ற செயல்களை ஒடுக்கும் சட்டம் (Suppression of Immoral Traffic in Women and Girls Act) |
| 1961 – | வரதட்சணை தடைச்சட்டம் (Dowry Prohibition Act) |
| 1971 – | மருத்துவ நீக்கமான குழந்தையுண்டாகும் சட்டம் (Medical Termination of Preganancy Act) |

இவ்வாறு சுதந்திர இந்தியாவில் பல சட்டங்கள் மூலமாகப் பெண்கள் உரிமைகளும் நலன்களும் காக்கப்பட வகை செய்யப்பட்டன. இவற்றால் திருமணம் என்ற புனிதக்கூட்டமைவின் மேம்பட்ட தன்மை பேணிக் காக்கப்பட்டது. மேலும் மணமுறிவு அல்லது விவாகரத்து என்பது இருவராலும் ஏற்கப்பட்டால் மட்டுமே நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொண்டு விலகிச் செல்ல வாய்ப்பளிக்குமென்பதை 1983ல் உருவாக்கப்பட்ட சட்டக்குழு (Law of Commission) தீர்மானித்தது. சம்பிரதாயம் மற்றும் சாஸ்திர முறைகளின்படி மேற்கொள்ளப்படும் திருமணங்கள், பதிவுத் திருமணம் போன்றவை. உண்மையான நடைமுறைத் திருமணங்களாகக் கொள்ளப்பட்டு அவற்றுக்கு சட்டப்படியான விவாகரத்து தரப்பட்டது. 1984ல் உருவாக்கப்பட்ட குடும்ப நீதிமன்றம் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களில் செயலாக்கப்பட்டது. இதில் இருநீதிபதிகள் இருக்க வகை செய்யப்பட்டது. அதன்மூலம், திருமணம், கணவன் மனைவி உறவுகளில் எழும் சிக்கல்கள், மறுமணம், சொத்து போன்ற செயல்கள் பற்றிய வழக்குகள் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டன.

சொத்துரிமை பற்றிய அடிப்படைகளிலும் பெண்களின் சொத்துரிமை பாதுகாப்புக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டன. 1874ல் திருமணமான பெண்கள் சொத்துரிமைச் சட்டம் (The Married Women 's Property Act) மூலம் திருமணமான பெண்கள் தாம் சுயமாகச் சம்பாதித்த பணத்தை கணவன்மார் ஒரு தர்மகர்த்தா அமைப்பு சார்பில் கணவரின் கடனாளிகளுக்கு எதிராகப் பாதுகாக்க உருவாக்கப்பட்டது. அதேபோன்றதாகவே 1865ல் இயற்றப்பட்ட இந்திய வாரிசுரிமை சட்டம் மூலம் பெண்ணின் சொத்தில் கணவர் உரிமை கொண்டாட இயலாத நிலை உருவாக்கப்பட்டது. இதன் மூலம் ஆண் பெண்களுக்கிடையிலான பொருளாதார இடைவெளி காணப்பட்டது. இதன் விளைவாகவே பெண்கள் திருமணமாவதற்கு முன்பே சொத்துக்களை வைத்துக்கொண்டு அதன் மீது முழுஇறைமை கொண்டவர்களாகவும் உருவாக்கப்பட்டார்கள். இதன்மூலமாக திருமணமான பெண்கள் பெறும் ஊதியம், சம்பாதிக்கும் பணம் ஆகியன அவர்களுடைய



உரிமையெனத் தீர்மானிக்கப்பட்டது. இச்சட்டம் ஏற்கனவே 1925ல் உருவாக்கப்பட்டிருந்த இந்திய வாரிசுரிமைச் சட்டத்தை விரிவாக்கம் செய்ததெனலாம். திருமணத்திற்கு முன்னர் சேர்க்கப்பட்ட பெண்ணின் சொத்தினை பற்றிய மாற்றம் ஒன்று 1929ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம் மூலம் ஏற்கப்பட்டது. அதன்படி திருமணத்திற்குப் பெண்ணிற்குரிய அந்த சொத்தினை இருசாராரும் சேர்ந்து விருப்பப்படி செயல்படுத்தும் உரிமையைப் பெற்றார்கள். அச்சட்டத்தின் 33ஆம் விதியின்படி அனைவரின் மரணத்திற்குப்பின் விதவை மனைவிக்கு அச்சொத்தில் 1/3 பங்கிற்கு உரிமையாளர் எனவும் 2/3 பங்கு வாரிசுதாரர்களைச் சென்றடைய வேண்டுமென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அவ்வாரிசுகளிலும் ஆண், பெண் என்ற பாகுபாடு பாராட்டாமல் மகன் மற்றும் மகள்களுக்கு அச்சொத்தில் பங்கு உள்ளதென்பது ஏற்கப்பட்டது. அச்சட்டத்தின் 44 ஆம் விதியின்படி ஒரு ஆண் வாரிசில்லாமல் இறந்துவிட்டால் அச்சொத்து மனைவிக்கும் சகோதரிகளுக்கும் சென்றடைய வகை செய்யப்பட்டது.

ஆங்கில ஆட்சிக் காலத்தில் இந்துப் பெண்களின் உரிமைகள் 'மிட்டாக்சார முறை' மற்றும் 'தயாபாக முறை'கள் மூலம் கொண்டு செலுத்தப்பட்டன. மிட்டாக் சார முறைப்படி கூட்டுக்குடும்பச்சொத்து மற்றும் தனிப்பட்ட சொத்துக்களை குறிப்பிட்டபோது பின்னதான தாயாபாக முறை என்பது பரம்பரைச் சொத்துடன் சுய சம்பாத்தியச் சொத்தையும் விளக்கியது. பெண்ணின் உரிமைகள் இவ்விருமுறைகளாலும் தடுக்கப்பட்டன. அசையும் சொத்துக்கள் சீதனமாகத் தரப்பட்டால் அவற்றைப் பயன்படுத்த அப்பெண்ணுக்கு முழுஉரிமை தரப்பட்டது. மிட்டாக்சார முறைப்படி ஒரு பெண் மனைவியாயிருந்தாலும், விதவையாக இருந்தாலும் அல்லது திருமணமாகாத மகளாக இருந்தாலும் சொத்தினைப் பராமரிக்கும் உரிமையைக் கொண்டிருந்தனர். வாரிசுகள் இல்லையென்றாலும் ஒரு விதவையானவள் அத்தியாவசியத் தேவை காலங்களிலன்றி அந்தச் சொத்தினை விட்டுப்பிரியக்கூடாது. இதன் வாயிலாகப் பெண்களின் கட்டுப்படுத்தப்பட்ட சொத்துரிமை ஆங்கில ஆட்சிக்காலத்திலேயே நிலவியதென்பதை நாம் நான்கறியலாம். 1937ல் இயற்றப்பட்ட இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம்(Hindu Women's Right to Property Act) மூலமாகவும் பெண்களுக்குச் சமமான ஒரே சீரான சட்டம் உருவாக்கப்பட்டது. 1941ல் உருவாக்கப்பட்ட ராவ் குழு, 1944ல் உருவாக்கப்பட்ட இந்துச்சட்டக்குழு (Hindu Law Committee) போன்றவை பெண்ணுரிமைகளில் மாற்றங்கள் உருவாக்கப்பட்ட அடித்தளங்கள் அமைத்துத் தந்தன. மேலும் பெண்களின் அந்தஸ்தை உயர்த்தவும், பாலின அடிப்படையில் பாகுபடுத்தப் படுவதைத் தவிர்க்கவும், பெண்களைச் சுரண்டல்களுக்கு ஆளாக்குவதைத் தவிர்க்கவும் கீழ்க்காணும் வேறுபல சட்டங்கள் இயற்றப்பட்டு அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட்டன.

பெண்களின் திருமணத்தைப் பற்றிய கீழ்க்கண்ட சட்டங்களும் இயற்றப்பட்டன.

ஷரத்து 10: சுதந்திரமான, நடுநிலைமையுடன் கூடிய தீர்ப்பாயங்கள் வாயிலாக அனைவரும் பொதுவாக வெளிப்படையாக விசாரிக்கப்படும் உரிமையுடையவர்கள்.

ஷரத்து 14: ஒருவர் தம்மைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நெருக்குதல்கள் காரணமாக பிற நாடுகளில் உள்ள பாதுகாப்பு அமைப்புகளிலும் சரணடைந்து பாதுகாப்புப் பெற உரிமைகள் உண்டு.

ஷரத்து 16: ஆண் பெண் இருபாலருக்கும் திருமணம் செய்து கொண்டு குடும்பத்தை ஏற்படுத்திக் கொள்ள உரிமை உண்டு.

ஷரத்து 22: ஒரு சமுதாயத்தின் உறுப்பினர் என்ற நோக்கில் எவ்விதமான பாரபட்சம் மற்றும் பாகுபாடுகளுக்கு ஆளாகாமல் இருக்க அனைவருக்கும் சமூகப் பாதுகாப்புத் தரப்படவேண்டும். எனவே ஒவ்வொருவருக்கும் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் உண்டு.

மேலே கூறப்பட்டுள்ள கூற்றுகளின் மூலம் பெண்களுக்கும், ஆண்களைப்போல், எவ்விதமான பாகுபாடும் பாராட்டாமல், பல்தரப்பட்ட உரிமைகள் உண்டு என்பது புலனாகின்றது. மனித உரிமைகள் அனைத்து நாடுகளைச் சேர்ந்த மனித இனப்பிரிவினரான ஆண்கள் மற்றும் பெண்களுக்காக வெளியிடப்பட்டதென்றும் நடைமுறையில் அது சமமாகப் பின்பற்றப்படவில்லை எனக் கொள்ளலாம். பெரும்பாலான நாடுகளில் ஆண், பெண் பாகுபாடுகள் மிகுந்தும், மலிந்தும் காணப்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை சமய அடிப்படையிலான கோட்பாடுகள் காரணமாகவும், பாரம்பரிய மதிப்பீடுகள் காரணமாகவும், ஒழுக்க நெறிப் பண்புகள் காரணமாகவும், சமூக மற்றும் சாதி வேறுபாடுகள் காரணமாகவும் எழுதப்படாத நெறிமுறைப் பண்பு என்ற அடிப்படையில் ஆண்களும் பெண்களும் சமமாக நடத்தப்படுவதில்லை. அவர்களுடைய உரிமைகள் பலவும் தடைசெய்யப்பட்டவையாயுள்ளன. மேலும் பெண்ணுரிமை பற்றிய தனிப்பட்ட சட்டங்கள் உள்ளமையால் பெண்களின் உரிமைகளில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. ஆயினும் இருபதாம் நூற்றாண்டிலிருந்தே பெண் உரிமைகளுக்கு பன்னாட்டு அங்கீகாரம் தரப்பட்டுள்ளதென்பதை மறந்துவிடக்கூடாது. எனவேதான் பலநாடுகளும் சட்டங்கள் மற்றும் நீதிமன்றங்கள் வாயிலாகத் தமது உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

## பெண்ணுரிமையும் சட்டங்களும்

இந்தியா போன்ற விடுதலையுற்ற நாடுகளில் பலவகையான சட்டங்கள் இயற்றப்பட்டு அவற்றின் மூலம் சமூகநலன் மற்றும் மேம்பாடுகளை அரசியல், சமூக, பொருளாதார நிலைகளில் மேம்பாடுறச்செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய நடைமுறை மற்றும் சாதாரணமான சட்டங்கள் படைத்துறைச் சட்டங்கள், படைத்துறை ஆட்சியுள்ள நாடுகளுக்கே பொருந்தும். இந்தியாவில் தனிநபர் அல்லது நடைமுறைச் சட்டங்கள் சமயசார்புடையனவாகவே உள்ளன. இதன் விளைவாகவே இந்தியாவில்



இந்து, முகமதிய மற்றும் கிறித்துவச் சட்டங்கள் நடைமுறையிலுள்ளன. காலம், இடம் மற்றும் சமுதாயத் தேவைகளின் அடிப்படையில் சட்ட மன்றங்கள் பொது நலனுக்காக பல சட்டங்களை இயற்றுகின்றன. அத்தகைய சட்டங்களும் இந்திய அரசியலமைப்பில் உள்ள பரிந்துரைகள் மற்றும் ஷரத்துக்களுக்கு உட்பட்டதாகவே அமையும். அவ்வாறு இயற்றப்படும் சட்டங்கள் மனித உரிமைகளையும், அரசியலமைப்பையும் மீறுவதாகச் செயல்படுமேயாயின் பாதிப்புக்கு உள்ளானவர்கள் நீதிமன்றங்களில் முறையீடுகள், ஆணைகள் மூலமாகத் தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளலாம். நீதிமன்றக்கேட்புப் பேராணை, ஆட்கொணர் நீதிப் பேராணை போன்றவற்றை அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

அந்நிய ஆங்கில குடியேற்ற அரசு எவ்விதமான எதிர்ப்புகளுமின்றி இந்தியாவில் சமய உரிமைகளில் தலையிட்டு கண்மூடித்தனமான, சமூகக் கொடுமையான, தீய வழக்கங்கள் பலவற்றை ஒழித்தது. 1829–ல் சதி அல்லது உடன்கட்டை ஏறல் என்ற சமூகக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சட்டம் இயற்றப்பட்டது. 1869ல் திருமணச்சட்டம், திருமண முறிவுச்சட்டம், சொத்துரிமைச் சட்டம், வாரிசுச் சட்டம் போன்றவை இயற்றப்பட்டு பெண் உரிமைகள் காக்கப்பட்டன.1850 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சாதிகள் இயலாமைச்சட்டம், 1856ல் மேற்கொள்ளப்பட்ட விதவைகள் மறுமணச்சட்டம், காரணமாகவும் பெண்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவகை செய்யப்பட்டது. பெண்ணுரிமையைப் போல் குடும்பநலனுக்கான சட்டங்கள் இயற்றுவதனின்றும் ஆங்கில குடியேற்ற அரசு தயக்கம் காட்டவில்லை. 1872ல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணங்கள் சட்டம் மூலமாக கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்டதுடன் பெண்களின் திருமண வயதை14 ஆகவும் ஆண்களின் திருமண வயதை 18 ஆகவும் உயர்த்தியது. இத்தகைய முறைகள் வாயிலாக விடுதலைபெற்ற இந்தியாவில் பலதரப்பட்ட பெண்ணுரிமைச் சார்ந்த சட்டங்கள் இயற்றப்பட்டன. 1925ல் உருவாக்கப்பட்ட தேசிய பெண்கள் நலக்குழு (The National Council of Women in India), 1954ல் உருவான இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு (The National Federation of Indian Women) போன்றவையும் இந்தியப் பெண்களிடையே விழிப்புணர்வை உருவாக்கின. இதே நிலையில் 1869ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்ட இந்திய மணவிலக்குச் சட்டம்(Indian Diverce Act) பெண்களை பாகுபடுத்தக்கூடிய ஒன்றாக அமைந்திருந்தது. தவறான திருமணங்களைச் சீராக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பெண்களுக்குப் பாதகமானவையாகவே அமைந்திருந்தன. இருப்பினும் 1936ல் இயற்றப்பட்ட மலபார் திருமணச் சட்டம் ஒருதாரமணத்தினை நிலைநாட்டி பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடியதாய் அமைந்தது. எனவேதான் சுதந்திர இந்தியாவில் பெண்கள் நலனுக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டன.

குறிப்பாக விவசாய விளை நிலங்களில் பெண்களுக்குச் சமஉரிமை தரப்படவில்லை. ஏனெனில் நிலங்கள் பாகப்பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டால் நிலம் துண்டாடப்பட்டு நிலத்தின் அளவு குறையும். அதனால் நிலத்தின் வாயிலாகக் கிடைக்கும் வருவாயும் பாதிக்கும். இக்கூற்று ஏற்கப்படக்கூடியதல்ல. ஏனெனில் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக நிலங்கள் பிரிக்கப்பட்டு, துண்டாடப்பட்டு, பங்கிடப்பட்டுவிடுகின்றன. பெண்களுக்கு நிலத்தில் உரிமை தரப்படவில்லை. அது அவர்களை மேலும் வலிமையற்ற பிரிவினர்களாக ஆக்கியது. மேலும் திருமணமாகி கணவன் வீட்டுக்குச் செல்லும் பெண் தனக்கு முழுஉரிமையும் இல்லாத தந்தைவழிச் சொத்தினை பராமரிப்பதென்பதும் இயலாதகாரியமாகவே ஆக்கப்பட்டது.

## இந்துச் சட்டம்(Hindu Law)

1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம்(Hindu Succession Act) இயற்றப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்னரே பாரம்பரிய அடிப்படையிலான இந்துச்சட்டம் வழக்கிலிருந்து தனிப்பட்ட விதிமுறைகள் மற்றும் ஒழுங்கமைவுகளுக்கு உட்பட்டு பெண் வாரிசுகளுக்கும் வாரிசு அடிப்படையில் சொத்துக்கள் தரப்பட்டன. அவ்வாறு முற்றுரிமை அல்லது முழு இறைமையுடன் கூடிய அனுபவிப்பு உரிமையுடைய சொத்தானது ஸ்திரீதனம் அல்லது சீதனம் எனப்பட்டது. 1937ஆம் ஆண்டின் வாரிசுரிமைச் சட்டப்படி பெண்களும் ஆண் வாரிசுகளுக்குச் சமமாக சொத்துக்கு வாரிசுகளாக நியமிக்கப்பட்டார்கள். அது ஏற்கனவே பெண்களால் பெறப்பட்ட சொத்துக்களாக இருப்பின், விதவையான கைம்பெண் அல்லது மகனை இழந்துவிட்ட தாய் என்ற நோக்கில் சொத்துக்கு உரிமையாளர் அல்லது உடமையாளர் ஆக ஆக்கப்பட்டார். ஆனால் அந்த விதவையின் சொத்துரிமையானது அவளுடைய மகனின் சொத்துரிமை நிலையைவிடத் தாழ்ந்ததொன்றாகவே விளங்கிற்று.

1939ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்துச் சட்ட திருத்தச் சட்டம்(Hindu law Amendment Act of 1939) சொத்துரிமை உடைய நபர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. மகனின் மகள், மகளின் மகள் மற்றும் சகோதரி ஆகியோர் சொத்துரிமையாளர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பெண்கள் சொத்துரிமை பெற்றாலும் தமக்கு வழங்கப்பட்ட அச்சொத்தினை விற்கவோ, மாற்றவோ, தானமளிக்கவோ உரிமை கொண்டிருக்கவில்லை. இதன் மூலம் பெண்களுக்குச் சொத்துரிமை என்பது அனுபவபாத்தியதை என்ற அடிப்படையிலேயே இயங்கியதென்பதை நினைவிற்கொள்ள வேண்டும். அது ஒரு தர்ம ஸ்தாபன நிர்வாகம் போன்றதாகவே அமையப்பெற்றிருந்தது. ஆனால் சீதனத்தைப் பெண்கள் பயன்படுத்துவதில் எவ்விதமான கட்டுப்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. தம்முடைய சமூக அந்தஸ்துக்கு ஏற்ப சீதனச் சொத்தினைத் தம் விருப்பம் போல் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இத்தகைய கட்டுப்பாடுகள், 1956, ஜூன் 17–ஆம் நாள் இந்து வாரிசுரிமைச் சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்ற காலம் வரை செயல்பட்டது.



1956–ல் உருவாக்கப்பட்ட இந்திய வாரிசுரிமைச் சட்டம் இந்தியப் பெண்களின் உரிமைகளைப் பெருக்கித் தந்தபோதிலும் அவர்களுடைய சமூக அந்தஸ்தைப் பெருக்கித் தந்தாலும் பெண்களால் அது முழுமையாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. கணவனின் மரணத்திற்குப்பின் இச்சட்டமானது பெண்களின் சிக்கல்களை அதிகரித்தது. தன்னுடைய சொத்துக்களைத் தனது விருப்பம்போல் விற்கக்கூடிய உரிமை இன்மையால் சமூகத்தில் அவர்களுக்கான தடைக்கல்லாக இச்சட்டம் காணப்பட்டது. ஆனால் உண்மையில் இச்சட்டம் விரிவாக்க நோக்கில் பல உரிமைகளைப் பெண்களுக்கு பெற்றுத் தந்ததென்பதை மறக்க முடியாது. இச்சட்டம் முதன்முறையாக பெண்களும் சொத்தில் பங்குபெறும் உடமையாளர்களாக ஆக்கப்பட்டார்கள். பெண் குழந்தைகளும் ஆண்களுக்குச் சமமாக சொத்தில் சமபங்கு உரிமைபெற வாய்ப்புப் பெற்றனர். இச்சட்டத்தின் 14–ஆவது பிரிவு பெண்களையும் முழுச் சொத்துடமையாளர்களாக ஆக்கின. குறிப்பாக பால்பாகுபாடின்றி சட்டத்திற்கு ஆண் பெண் இருவரும் சமமானவர்கள் என்ற நிலை உருவாக்கப்பட்டது. திருமணமாகாத பெண்களுக்கு வீட்டில் மட்டும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் அந்தச் சொத்துக்கான பங்கினை, பிரிவினையின்போது மட்டுமே அவர்கள் உரிமைகோர முடியுமெனப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் தவிர இந்தியப் பகுதிகளுக்கு இச்சட்டம் பொருந்துமென அறிவிக்கப்பட்டது. உயிரோடிருப்பவர் என்ற நிலையில் இந்துக்கள், பௌத்தர், சீக்கியர், சமணர் ஆகிய பல சமயத்தினருக்கும் பொருந்தக்கூடியதாக ஆக்கப்பட்டாலும் பழங்குடியினருக்கு இது செல்லாது எனப்பட்டது. ஆனால் மதம் மாறியவர்கள் மீண்டும் மாறியவர்கள் போன்றோருக்கு இச்சட்டம் பயன்தரத்தக்கதாயிருந்தது. சொத்தினைப் பெறல் என்ற கோட்பாட்டில் நிலவிய பால்வினை வேறுபாடுகள் களையப்பட்டன. 1954–ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச்சட்டம் மூலம் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் இச்சட்டம் செல்லுபடியாக்கப்பட்டது. பெண்கள் பெற்ற சொத்துக்கள் அவருக்குப்பின்னால் அவளது பையன்களுக்கும் பெண்களுக்கும் பொருந்தும் எனப்பட்டது. இச்சட்டத்தின் ஷரத்து 15(2) (a) யின் படி இறந்துவிட்ட நபர் ஒருவருக்கு ஆண் அல்லது பெண் வாரிசு இல்லையெனில் அவருடைய சொத்து அவருடைய விதவை மனைவியின் தந்தையாரின் வாரிசுகளுக்கு செல்லுபடியாகும். இச்சட்டத்தின் 16 ஆவது ஷரத்து(2) விதவைக்கு முன்னரே இறந்துவிட்ட மகன் அல்லது மகளின் சொத்துப்பகுதியை உயிரோடிருக்கக் கூடிய மகன் அல்லது மகளைச் சென்றடையும் எனப்பட்டது. இச்சட்டத்தின்படி இறந்தவரின் சொத்துக்கள் அவருடைய வழித்தோன்றல்கள், மனைவியின் வழித்தோன்றல்கள் பெற்றோரின் வாரிசுகள் அல்லது அடுத்த சந்ததியாரின் வாரிசுகளைச் சென்றடையும். பெண்களின் சொத்துரிமை பற்றியதாக இச்சட்டம் உள்ளமையால் இது பற்றி விளக்கமாகக் காணவேண்டும்.

வீணாவதைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒரு பெண் எந்தஒரு அசையும் சொத்தையும், அது சீதனமாக இல்லையெனில் ஒதுக்கிவைக்கலாம். ஆனால் பணம் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஆகியவை அரசாங்க காப்புத்

திட்டங்களில் செலுத்தப்பட்டு அவை சீதனமாக இல்லையென்றால் கீழே தரப்பட்டுள்ள காரணங்களுக்காக அவற்றைத் தள்ளுபடி செய்யலாம். அ) சில அச்சுறுத்தல்கள், கட்டுப்பாடுகள், காரணமாக குறிப்பிட்ட அளவு சொத்தினைப் பாதுகாக்கும் நோக்குடன் அவற்றினை நீக்க முற்படலாம். அரசுவிதிகள், நிலவுடமையாளர்கள் அல்லது கடன்காரர்தரும் தொல்லைகள் காரணமாக அத்தகைய முறைகள் மேற்கொள்ளப்படலாம். ஆ) தன்னை உள்ளிட்ட ஒரு சில சமயக் கடமைகளை ஆற்றுதலின் பொருட்டு அச்செயலில் ஈடுபடலாம். இ) ஒரு சொத்தினை காப்பாற்றும் பொறுப்பையுடைய ஒருவர் அதற்கான பணத்தேவையைப் பெற முடியாமலிருந்தால் சொத்தினை நீக்க முற்படலாம். ஆனால் பெண்களிடமிருந்து சொத்துக்களை வாங்குவோர் தயக்கத்துடனேயே அதனை வாங்குகின்றனர். ஒய்வுக் காலத்தில் அவற்றை வைத்துக்கொண்டு வாழவேண்டுமென்ற கட்டாயத்துக்கு மாறாக ஒவ்வொரு பெண்ணுக்கும் தனது சொத்தினைச் செலவிட வேண்டுமென்ற கட்டாயம் எழுகின்றது. சொத்துரிமையானது சட்டபூர்வமாகப் பெண்களுக்கு பலதரப்பட்ட பாதுகாப்புகளைத் தருகின்றன எனலாம். அதன் விளைவாக அவர்கள் உயர்வான சமூக அந்தஸ்தைப் பெற இயலும். பொருளியல் முக்கியத்துவம் சார்ந்த இவ்வுலகில் சொத்துரிமையானது பெண்களுக்கு பொருளாதார அந்தஸ்தையும் தருகின்றதெனலாம்.

## முகமதியச் சட்டம்

முகமதியச் சட்டப்படி தனிப்பட்ட சொத்துரிமை முறை பின்பற்றப்படுகின்றது. இறந்தவருடைய சொத்தில் 2/3 பங்கு வாரிசுதாரரைச் சென்றடையும். எஞ்சியுள்ள 1/3 பங்கு இறந்தவரின் கடன்களை அடைக்கப் பயன்படுத்தப்படும். சன்னி பிரிவைச் சேர்ந்த பெண்களுக்கு சொத்துரிமை உண்டு. அச்சொத்தின் உடமையாளர் என்ற நிலையில் அதனை அவருடைய விருப்பம்போல் பயன்படுத்த அப்பெண்ணுக்கு உரிமையுண்டு. எனவே சன்னி பிரிவைச் சேர்ந்த பெண்கள் அதிக மதிப்புடையவர்களாக உள்ளனர். 1937 –ஆம் ஆண்டின் முகமதியர் தனிச்சட்ட நடைமுறைச் சட்டம் (Muslim Personnal Law (Shariat) Act) இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் பகுதி தவிர பிற பகுதிகளில் நடைமுறையில் இருந்தது. 1876–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டம்(Indian Contuact Act) மூலம் இஸ்லாமியர் தமது சொத்து பற்றிய ஒப்பந்தத்தை மேற்கொள்ளலாம். மனைவி, தாய் மற்றும் சகோதரி என்ற உறவு தவிர பிற பெண்களுக்கும் அத்தகைய ஒப்பந்த முறையை பெண்களும் மேற்கொள்ளலாம். அப்போது அதில் பாதிஉரிமை கணக்கிடப்படும். மகளிரின் குழந்தைகளும் தமது தாயார் பெறும் சொத்தில் பங்குபெற உரிமையுடையவர்கள். அது பங்காளிகள் முறையில் அமையும். பங்கீட்டிலும் தனிப்பட்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன. முதலில் மனைவிக்கான பங்கீடு மேற்கொள்ளப்பட்ட பின்னர் அடுத்தவருக்கு அப்பங்குத் தரப்படும். மகள் மற்றும் சகோதரிக்கு அடுத்த நிலையே வழங்கப்படும். சன்னி, ஷியா, பிரிவினைச் சேர்ந்த பெண்களும் சொத்தினைப் பெற்றாலும் அவர்களுடைய பங்கு குறைவானதாகவே அமையும். சன்னி பிரிவினரால் ஹனாபிச் சட்டம் பின்பற்றப்படுகிறது. அவர்களுடைய சட்டப்படி கீழே கண்டுள்ளவாறு சொத்துக்கள் பகிர்வு செய்யப்படுகின்றன.



| | | |
|---|---|---|
| தந்தை | – | 1/6 |
| பாட்டனார் | – | 1/6 |
| தந்தை | – | 1/4 ஆனால் ஆண் வாரிசுகள் இல்லையெனில் அது 1/2 பங்காகும். |
| மனைவி | – | 1/8 ஆனால் மகன்கள் இல்லையெனில் அது 1/4 பங்காகும். |
| தாய் | – | 1/6 ஆனால் மகன்கள் இல்லையென்றால் அது 1/2 பங்காகும். |
| பாட்டி | – | 1/6 |
| மகள் | – | 1/2 |
| மகன்வழிப்பேத்தி | – | 1/2 |
| மகளின் மகள் | – | 1/2 |
| சகோதரி | – | 1/2 |

இஸ்லாமிய சமயம் நான்கு மனைவியரை மணந்து கொள்வதை ஏற்பதால் மேற்கண்டவாறு சொத்துப் பிரிவினையில் சமபங்கு உண்டு. இருப்பினும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களுக்கெனத் தனிப்பட்ட சொத்துரிமை உண்டு. குழந்தை மற்றும் மகனின் குழந்தை என்ற நோக்கிலும் தாய், தந்தை என்ற நிலையிலும் பாகுபாடுகள் இல்லை. சொத்துரிமையைப் பற்றிய செய்திகள் நிலையில் இஸ்லாமியச் சட்டம் தெளிவுமிக்கதாக உள்ளது. நபிகள் நாயகத்தின் கருத்துப்படி பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு. திருக்குரானைப் பயிலுவோருக்கு பெண் சொத்துரிமை தெளிவாக விளங்கும். ஷியா சட்டத்தின்படி ஆண் வாரிசில்லாத ஒருவரின் சொத்துக்கள் அவருடைய பெண்மக்கள் அனுபவிக்கின்றனர். மகர் என்னும் பணமானது கணவனால் மனைவிக்குத் தரப்படுகின்றது. இது அவளுக்குத் தரப்படும் மரியாதையாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இன்று மஹர் பணம் வழங்குதல் என்பது வெறும் நடைமுறைப் பணியாக உள்ளது. மேலும் தொகையின் அளவும் மிகக் குறைவாகவே உள்ளது. ஆனால் அதன் அளவை கணவர் எப்போது வேண்டுமென்றாலும் அதிகரித்துக் கொள்ளலாம். இது விதவைக்காக மேற்கொள்ளப்படுவதாகும்.

## கிறித்துவச் சட்டம்

இந்தியாவில் கிறித்துவ சமயப் பிரிவினரின் வாரிசுரிமைச் சட்டமானது சீரான வளர்ச்சியை எட்டவில்லை. 1865–ஆம் ஆண்டின் வாரிசுச் சட்டம், 1925–ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டம் ஆகிய இரண்டும் குறித்து சமய அடிப்படையில் முக்கியச் சட்டமாகும். 1865–ம் ஆண்டுக்குமுன் மதம் மாறிய கிறித்துவர்கள் மேலைநாட்டுச் சட்டம் மூலமாகவே தீர்மானிக்கப்பட்டனர். 1865–ல் 1865–ஆம் ஆண்டின் X-ஆம் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி கிறித்துவர்களுக்கென தனிப்பட்ட முறைகள்

மேற்கொள்ளப்பட்டன. கிறித்துவராக மதம் மாறிய ஒருவர் இந்துப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றினாலும் இந்துச் சட்டம் அவர்களுக்கு பொருந்தாது எனப்பட்டது. எனவே உயில் ஒன்று எழுதுவதன் மூலமாகவே சொத்துப் பகிர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 1916–ல் இயற்றப்பட்ட திருவிதாங்கூர் கிறித்துவ திருமணச்சட்டம் முக்கியமானதாகும். 1929ஆம் ஆண்டுச் சட்டம் மூலமாகவும் கிறித்துவ வாரிசுரிமை பற்றித் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாண்டிற்குப் பின் இந்திய மாநிலங்கள் பலவற்றிலும் பலதரப்பட்ட வாரிசுச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

கணவரின் மரணத்திற்குப்பின் தாய் தனது கணவரின் தீர்மானங்களை ஒப்புக்கொள்ள வேண்டியவரானார். திருமணத்திற்கு முன்னரே சொத்துக்கள் தீர்மானிக்கப்பட்டுவிட்டால் அதில் குறிப்பிட்ட தொகைக்கு மேலாக பெண்கள் உரிமை கொண்டாட இயலாது. இச்சட்டத்தின் 33–ஆம் பிரிவு கணவரின் மரணத்திற்குப்பின் அவருடைய சொத்துக்கள் எவ்வாறு தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதைக் குறிப்பிட்டது. சொத்தில் மூன்றிலொரு பங்கு விதவை மனைவியைச் சென்றடையும் எனப்பட்டது. இது அவருக்கு முறையான வாரிசுகள் இல்லையென்றால் மட்டும் ஏற்கப்படுவதாகும். ஆனால் வாரிசுகள் இருந்தால் சொத்தில் பாதிப்பங்கிற்கு விதவை மனைவி உடமையாளராக ஆக்கப்பட்டார். வாரிசு இல்லாமல் ஒருவர் மரணமடைந்தால், விதவை மனைவி, தாத்தா, பாட்டி, மாமன் போன்றோர் இருந்தாலும் விதவை மனைவிக்கு பாதிப் பங்கும் பிறருக்கு பாதிப்பங்கும் சென்றடைகின்றது.

1925–ஆம் ஆண்டின் வாரிசுரிமைச் சட்டமானது கிறித்துவர்களுக்கும், பிற சட்டங்கள் இல்லாத பிற பிரிவினருக்கும் செல்லுபடியாகும் எனப்பட்டது. இச்சட்டம் உண்மையில் சிறப்பானதல்ல. ஏனெனில் இச்சட்டம் மூலம் விதவைப் பெண்ணுக்கு 1/2 பரகம் மட்டுமே தரப்படுகின்றது. முழுமையான உரிமையுடைய மனைவியை விடுத்து 41–முதல் 47 வரையிலான விதிகள் உறவினருக்கான சொத்துரிமை பற்றிக் கூறுகின்றது. ஷரத்து 33(c) என்பது பல நிலைகளில் விரிவாக்கம் செய்யப்பட வேண்டியதாயிருந்தது. அவ்விதியானது விதவையின் சொத்து சார்பான பாதுகாப்பு பற்றி விவரிக்கின்றது. இச்சட்டத்தின் 33 (5/a i)மற்றும் ii) விதிகள் 33(c) என்ற விதியானது சாகும்போது இந்திய கிறித்துவராக உள்ளவருக்கு பொருந்தாது எனக் கூறுகின்றது. அளிக்கப்படும் தொகை அதற்கான வட்டியின் அளவு ஆகியன அதிகரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் பெண்கள் பயனடையவியலும். இந்நிலையில் கணவனை இழந்த மனைவியின் சொத்துரிமையைப் பாதிப்புக்கு உள்ளாக்கக் கூடாதென்ற நிலை உள்ளது.

மேலே கண்டவாறு சொத்துரிமை மற்றும் வாரிசுரிமைச் சட்டங்கள் சமுதாய மாற்றங்களுக்கு வழிவகுக்கின்றன. சட்டங்களின் பின்னணிகளும் அடிப்படைகளும் சமயம், பழக்க வழக்கம், வழக்காறு மற்றும் பாரம்பரிய நோக்கிலேயே உருவாக்கப்படுகின்றன. அவை பெண்களின் நிலையினைத் தாழ்வுறச் செய்வனவாகவே அமைந்துள்ளன. பெண்களுக்கு உரிமை வழங்குவதில் அவை தாராளத்தன்மையுடன் நடந்து கொள்ளவில்லை. பெண்களுக்குச் சம உரிமை தந்தாலொழிய, அதற்கான நடைமுறைச் சட்டங்கள் இயற்றப்பட்டாலொழிய பெண்களின் உரிமைகள் மேம்படுத்தப்பட முடியாது. கிறித்துவ சொத்துரிமை மற்றும் வாரிசுரிமைச் சட்டப்படி மாற்றங்கள் உருவாக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் பலதரப்பட்ட சட்டங்களைப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக கோவா, பாண்டிச்சேரி போன்ற இடங்களில் இத்தகைய மாற்றங்கள் உள்ளன. இந்து வாரிசுரிமைச் சட்டம் கிறித்துவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை. இவற்றால் பெண்களின் உரிமைகளும், சொத்துரிமைகளும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இந்திய அரசியல் அமைப்பின் ஷரத்து 19 (1) மற்றும் 31 ஆகியவை சொத்துரிமைக்கு உத்திரவாதம் நல்கியுள்ளன. இருப்பினும் 1955–ல் மேற்கொள்ளப்பட்ட நான்காவது திருத்தத்திற்குப் பின்னரே பெண்களின் வாரிசு மற்றும் சொத்து பற்றிய செய்திகள் விரிவாகப் பேசப்படுகின்றன.



### வரதட்சணை ஒழிப்புச் சட்டமும் பெண்கள் மீதான தாக்கமும்

இந்தியப் பெண்கள் அனுபவித்து வரும் எண்ணற்ற கொடுமைகளுள் வரதட்சணைக் கொடுமை முன்னணியிலுள்ளதெனில் மிகையாகாது. திருமணத்தையும், திருமணம் ஆகவேண்டிய மற்றும் திருமணமான பெண்களை வரதட்சணை பலதரப்பட்ட துன்பங்களுக்கும், துயரத்திற்கும் ஆளாக்குகின்றது. பொருளாக பணமாக, வரதட்சணையானது திருமணப் பெண்ணுக்கு மணப்பெண்ணின் பெற்றோரால் வழங்கப்படுகின்றது. அவை திருமணத்திற்கு முன்போ அல்லது பின்னரோ அது தரப்படுகின்றது. இச்சாபக்கேடானது பொருளியல் பாகுபடுகின்ற ஏழை, பணக்காரர் ஆகிய பலரையும் பாதிக்கின்றது. ஏனெனில் இருசாராரிடையேயும் வரதட்சணைப் பழக்கம் நடைமுறையில் உள்ளது. எனவே வரதட்சணை பற்றியும் மகளிரியல் நோக்கில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமானதாகின்றது.

### வரதட்சணை என்பதென்ன?

1961–ல் உருவாக்கப்பட்ட வரதட்சணை ஒழிப்புச் சட்டம்(Dowri Prohibition Act) வரதட்சணையைக் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றது. மதிப்புமிக்க பாதுகாப்புக்காக கொடுக்கப்படும் அல்லது கொடுப்பதாக ஒப்புக்கொள்ளப்படும் சொத்து வரதட்சணை. அது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டாருக்காகத் தரப்படுவதாகும். 'அது திருமணத்திற்காகவே திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ தரப்படுகின்றது. ஆனால் அது மஹர் பணம் அல்ல. இது வலுக்கட்டாயமாக வாங்கப்படும் ஒரு தொகை. பெண்களுக்கு துன்பமளிக்கக்கூடிய ஒரு சமூகச் சிக்கலாக உள்ளதே வரதட்சணை.

### தன்மைகளும் வளர்ச்சியும்

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பெண்களின் வளர்ச்சிக்குரிய அமைப்புகளின் முயற்சி காரணமாகவே வரதட்சணை 1984–ல் ஒழிப்புச் சட்டத்திருத்தச் சட்டம் (Dowri Prohibition Amendment Act) உருவாக்கப்பட்டு, அது 2, அக்டோபர் 1985 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. வரதட்சணையின் தோற்றமானது தற்காலத்தியது அல்ல. பண்டைக்காலம் முதலாகவே நடைமுறையில் காணப்படும் வரதட்சணையானது காலப்போக்கில் பல

மாற்றங்களுடன் பலகால கட்டங்களிலும் வழக்கத்திலிருந்தது. வரதட்சணை என்பது கட்டாயமானதாக ஆக்கப்படுவதற்கு முன்பாக திருமணப் பெண்ணுக்கு உற்றார், உறவினர் ஆகியோரால் வழங்கப்படும் திருமணப் பரிசாகக் கொள்ளப்பட்டது. ஆனால் காலப்போக்கில் பெண்ணினத்தைத் துன்புறுத்தும் ஒரு தொற்றுநோயாக அல்லது புற்று நோயாகப் படர்ந்து சமுதாய சீர்குலைவுக்குக் காரணமாயிற்று. பெற்றோர் மற்றும் குடும்பத்தின் பெருமையையும் செல்வாக்கையும் கட்டிக் காக்கவேண்டுமென்பதற்காகவும் வரதட்சணை கொடுக்கப்பட்டது. வரதட்சணையானது திருமணப் பெண்ணுக்குத் தரவேண்டிய கட்டாய விலையாகக் காலப்போக்கில் கொள்ளப்படலாயிற்று. வரதட்சணையானது கட்டாயமாக ஆக்கப்பட்டபோது அது பலதரப்பட்ட சமூக சிக்கல்களை உருவாக்கியது. 1) அ. பெண்கள் திருமணம் பாதிக்கப்பட்டது. ஆ. பெண்ணால் பெற்றவர்களுக்கும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டது. 2) பெண்கள் நலனுக்காக வரதட்சணை தரவேண்டிய நிலையிலுள்ள பெண்களின் பெற்றோர் கடன் சுமைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். 3. வரதட்சணையைக் கொடுக்க முடியாவிட்டால் சமுதாயத்தில் பெற்றோரின் மதிப்பும் அந்தஸ்தும் மங்கி மறைகின்றது. 4. திருமணமாகி வரதட்சணை தராமல் கணவன் வீட்டுக்குச் செல்லும்போது அப்பெண் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகின்றாள். 5. அத்தகைய பெற்றோர்களும் மாப்பிள்ளை வீட்டாரின் ஏச்சு, பேச்சுகளுக்கும் ஏளனத்திற்கும் கோபத்திற்கும் ஆளாகின்றனர். 6. தமது பெண்களின் நல்வாழ்வு, மகிழ்ச்சி ஆகியவற்றிற்காக பெற்றோர்கள் தமது உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். 7. வரதட்சணைக் கொடுமையால், அதனைப் பெறாத குடும்பங்களும் தரும் துன்பங்கள் காரணமாகத் தன் உயிரை மாய்த்துக் கொள்ளுகின்றனர். 8. இக்கொடுமை காரணமாக எண்ணற்ற பெண்கள் திருமணத்தை அறியாதவர்களாக உள்ளனர். 9. சமூகப் பின்னணியில் வரதட்சணை பலதரப்பட்ட பாகுபாடுகளுக்கும் வழிகோலுகின்றது. எனவே இச்சமுதாயச் சாபக்கேடு அழிக்கப்படவில்லையெனில் அது பெண்ணினத்தின் பெருமையையே அழித்து ஒழித்துவிடும். எனவே சட்டத்தின் மூலமாகவும், சமூகக் கோட்பாடுகள் வாயிலாகவும், முறைசாராக்கல்வி மூலமாகவும், இதனை அறவே நீக்குதல் அவசியமாகின்றது.

**வளர்ச்சி**

இந்தியப் பண்பாடு மற்றும் பாரம்பரியங்களின் நிலைக்களன்களாக விளங்கும் சாஸ்திரங்களின் வரதட்சணைப் பற்றி ஏராளமான கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. ரிக்வேதம், அதர்வணவேதம் போன்ற வேதங்களில் வரதட்சணை பற்றிய செய்திகள் உள்ளன. ஸ்பிருதிகள் காட்டும் எண்வகைத் திருமணங்களுள் பிரம்ம திருமணம் என்பது, தந்தை தன்னுடைய மகளை பரிசுப் பொருட்கள் பலவற்றைத் தந்து திருமணம் செய்து கொடுத்தாக வந்தது. இது காலப்போக்கில் வரதட்சணை என்னும் பண்பாக உருவெடுத்தது.

இடைக்காலத்தில் இந்தியாவில் வயதுக்கு வராத பெண்களுக்கு மணம் செய்யும் வழக்கம் காணப்பட்டது. ஒவ்வொரு தந்தையும் பெண்களுக்கு



இருந்த தேக்க நிலை மற்றும் பின்தங்கிய நிலை காரணமாகவும், குழந்தைமணம் ஏற்புடையதாக விளங்கியதாலும் குறுகிய காலத்தில் வயதுக்கு வராத பெண்ணுக்கு, அவருடைய வருங்காலக் கணவர் மற்றும் மாமனார் விரும்பிய தொகையைக் கொடுத்து திருமணம் செய்யும் முறையை மேற்கொண்டார்கள். அதே நேரத்தில் இந்தியாவில் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்கொள்ளப்படும் 16 வாழ்க்கைச் சடங்குகளுள் ஒன்றான கன்னிகாதானம் என்னும் சடங்கின்போது தரப்படும் பணம் வரதட்சணையாக வளர்ந்தது.

இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட குடியேற்ற காலத்திற்கு முன்னர் செயல்பட்ட நிலமானியச் சமூக அமைப்பில் திருமணம் என்பது சமயத்தொடர்புடைய புனிதச் சடங்கு என்ற நிலையிலிருந்து வழுவலாயிற்று. அதன் விளைவாக, சம அந்தஸ்துடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான ஒரு உடன்பாடாகத் திருமணம் செயல்படலாயிற்று. செலவினம், ஆடம்பரம், பகட்டாரவாரம் காரணமாகவும் பணத்தேவை அதிகரித்தது. அதனை ஈடுகட்டக் கூடிய தொகையாக விளங்கியது வரதட்சணை.

ஆங்கில ஆதிக்கம் இந்தியாவில் வேரூன்றியபோது இந்தியச் சமுதாயத்தில் மாறுபட்ட பலவித மாற்றங்களுள் திருமணமும் பணம் ஈட்டும் ஒரு வழியாக ஒரு சாரால் கொள்ளப்பட்டது. திருமண உறவு என்பது சமூக அந்தஸ்து, பணம், செல்வாக்கு, ஆடம்பரம் ஆகியவற்றின் வழிவகை எனப்பட்டது. திருமணம் என்பது அதிக அளவு பெண் விலையென வரதட்சணை தரும் ஒரு வர்த்தகமாகச் செயல்படலாயிற்று. வரதட்சணை என்பது அனைத்து இனம் மற்றும் சாதி பிரிவினருக்கு பொதுவான ஒன்றாக ஏற்கப்பட்டது. தலித்துகள், கொங்கணி மராத்தியர் போன்றோர் தாம் ஏற்கனவே மேற்கொண்டிருந்த பெண் விலைக்கு மாறாக வரதட்சணை முறையைப் பின்பற்றலாயினர். வரதட்சணையானது பொருளாதாரப் பின்னணியில் அமைந்துள்ளதால் அது பெண்களைக் கொடுமைப்படுத்தும் ஒரு கருவியாகச் செயல்படலாயிற்று. பெண்ணினத்தை பின்னடையச் செய்ய, ஆணாதிக்க மற்றும் தந்தைவழிச் சமுதாயத்தில், வரதட்சணை என்பது அவளுடைய சொத்துரிமைச் சிக்கலுக்கு காரணமாக ஆயிற்று. உரிமைகளற்ற, ஒதுக்கப்பட்ட பெண்கள் ஊமைகளாக ஆக்கப்பட்டமையும் வரதட்சணைக் கொடுமையின் ஒரு விளைவேயாகும்.

**சட்டங்கள்**

வரதட்சணை என்னும் சமூக சாபக்கேட்டை நீக்க, அச்சிக்கலுக்குத் தீர்வு காண சுதந்திர இந்திய அரசு பல செயல்களில் ஈடுபட வேண்டியதாயிற்று. 20, மே,1961–ல் அவ்வாண்டின் சட்ட எண் 28 ஆக வரதட்சணை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது. கெஜட் அறிவிப்பாக உருவாக்கப்பட்ட இச்சட்டம் ஜம்மு–காஷ்மீரைத் தவிர பிற மாநிலங்களுக்குச் செல்லுபடியாக்கப்பட்டது. இச்சட்டம் மூலமாக வரதட்சணை தருபவர், வாங்குவோர் ஆகிய இருசாரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டார்கள். ஆறுமாதம் முதல் இரண்டு ஆண்டுகள் சிறைவாசம், ரூபாய் 10,000/– வரை அபராதம் ஆகியன விதிக்கப்படும். அல்லது அத்தகைய வரதட்சணைக்குச் சமமான தொகையும்

அபராதமாகப் பெறப்படும். நீதி மன்றங்கள் இவ்வழக்குகளின் தன்மையை ஒட்டி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும். அதன் நடைமுறைகள் குறித்து வைக்கப்படும். திருமணத்தின்போது உறவினர், நண்பர்கள் ஆகியோர் திருமணத்தம்பதியருக்கு வழங்கும் பரிசுகள் வரதட்சணையாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. வரதட்சணை ஒழிப்புச் சட்டத்தில் உள்ள விதிகள் விளக்கும் பொருட்கள், பரிசுப் பொருட்களாகக் கருதப்படும். அப்பரிசுகள் மணப் பெண்ணுக்கும் தரப்படலாம். அப்போது அப்பரிசின் மதிப்பும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

மணப் பெண்ணிடமிருந்து அல்லது அவளது பெற்றோர், உறவினர் அல்லது பாதுகாவலரிடமிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரதட்சணை பெறப்பட்டால் அது சட்டப்படி குற்றமாகும். விரும்பியோ அல்லது விரும்பாமலோ வரதட்சணை தருவதற்கு அல்லது கொடுப்பதற்கு ஒப்புக் கொள்ளல், ஒப்பந்தம் செய்துகொள்ளல் தவிர்க்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளது. மனைவியல்லாமல் பிறரிடமிருந்து பெறப்படும் வரதட்சணையானது பெண்ணிடமே திரும்பத் தரப்பட்டுவிட வேண்டும். திருமணத்திற்கு முன்பாகவோ, திருமணத்தின்போதோ அல்லது திருமணமாகிய மூன்று மாதங்களுக்கு உள்ளாகவோ வழங்கப்பட்ட வரதட்சணையானது திரும்பத் தரப்பட்டுவிடவேண்டும். 18 வயதுக்குக் குறைவான சிறுமியர் சார்பாக வாங்கப்பட்ட வரதட்சணை ஓராண்டு காலத்திற்குள்ளாகவோ அல்லது 18 வயதை எட்டும் நாளிலோ திரும்பத் தரப்பட்டுவிட வேண்டும். மேலே கூறப்பட்டுள்ளவற்றிற்கு மாறாக நிகழுமேயாயின் அப்பணமானது ஒரு தர்மச் சொத்தாக நிர்வகிக்கப்பட்டு பெண்ணுக்குப் பயன்படச் செய்ய வேண்டும். இத்தகைய நிலைகளுக்குக் காரணமானவர்களும் தண்டனைகளுக்கு உள்ளாக்க் கூடியவர்களே. அத்தகைய தண்டனைகள் பல குற்றங்களுக்கும் சமமானதாக அமையும். வரதட்சணைப் பணத்தைத் திரும்பப் பெற வேண்டிய பெண் அதனைப் பெறுவதற்கு முன் காலமாகிவிட்டால் அவருடைய வாரிசுகள் அப்பணத்தைப் பெறத் தகுதியுடையவர்கள் எனப்படுகின்றனர். இவையனைத்தும் 1973–ஆம் ஆண்டின் குற்றத் தண்டனைச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளன. 1984–ஆம் ஆண்டின் 63–ஆம் சட்டமும் அதனை வலியுறுத்துகின்றது.

இத்தகைய வழக்குகளை தலைநகர மாஜிஸ்டிரேட் அல்லது முதல்நிலை கீழவியல் மாஜிஸ்டிரேட் ஆகியோர் நீதிமன்றங்களுக்குக் குறையாத நீதிமன்றங்களால் விசாரிக்கப்படும். ரிட் மனுக்கள் மூலமாகவோ அல்லது காவல்துறை நடவடிக்கைகள் காரணமாக நீதிமன்றங்கள் இத்தகைய வழக்குகளின் தன்மையை மேற்கொள்ளலாம். பாதிக்கப்பட்ட நபர், அவருடைய பெற்றோர், உறவினர் அல்லது ஏதாவதொரு நலத்துறை அமைப்பு மூலம் தரப்படும் எழுத்து மூலமான விண்ணப்பங்கள் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும். இச்சட்டத்தின் பலதரப்பட்ட கூறுகளும் நடைமுறை வழிகளும் பாராளுமன்றச் சட்டம் மூலமாக உருவாக்கப்பட்டவை. இச்சட்டம் மூலம் வரதட்சணைக் கொடுமைகள் தவிர்க்கப்படுவதுடன் பெண்களின் துன்பங்களும், துயரங்களும் தவிர்க்கப்படுகின்றன.



பலதரப்பட்ட சாதி மற்றும் துணை சாதியினர் பற்றிய பெண்களும் வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகும்போது இச்சட்டம் அவற்றைக் களைய முற்படுகின்றது. இருப்பினும் வரதட்சணையைச் சட்டாயமாகத் தரப்படுவதற்கு முன்பாக பெற்றோர்களே விரும்பித் தரும் பணம் பற்றிய செய்திகளைப் பற்றி இச்சட்டம் எதுவும் கூறவில்லை. அது தன்னுடைய பெண்ணின் நல்ல மகிழ்ச்சியான வாழ்வுக்காக அது தரப்படுகின்றது. துணிகள், நகைகள், வீட்டுப்பாத்திரங்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியனவும் வரதட்சணையாகக் கொள்ளப்படும். சில பெண்கள் வரதட்சணையென்பது பெற்றோர் காலமாவதற்குமுன், தமது திருமணத்தின்போது தரப்படும் சொத்து மீதான பங்கு எனக் கூறுகின்றனர். தாய் மற்றும் மாமியார் வரதட்சணை பற்றிய சிக்கல்களுக்கு காரணமாகின்றனர். திருமணத்திற்கு முன்னரே வேலை பார்க்கும் பெண்களின் வருவாய் பெருக்கம் காரணமாக வரதட்சணையானது அதிகரிக்கின்றது. திருமணத்திற்குப் பின்னர் அவளுடைய வருவாய் கணவருடைய குடும்பத்திற்குச் சேருமென்பதற்கு மாறாக அவர்களுடைய பொருளாதார வசதிப்பெருக்கம் காரணமாக அவர்களால் அதிகமான அளவு வரதட்சணை தரப்படுமெனக் கணக்கிடப்படுகின்றது. இது ஒரு எதிர்மறைப் பணியாகும். இதனால் இதனைச் செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாதெனத் தீர்மானிக்கும் வரதட்சணை ஒழிப்புச் சட்டம் முழுமையான வெற்றியை எட்டவில்லை. வெளிப்படையாக வரதட்சணை ஒழிப்புச் சட்டம் முழுமையான வெற்றியை எட்டவில்லை. வெளிப்படையாக வரதட்சணைப் பற்றித் தெரிந்தாலொழிய அரசினால் நடவடிக்கை எடுக்கவியலாது. அரசோ அல்லது காவல் துறையோ ஒரு குடும்பத்தின் அன்றாடச் செயல்களில் கவனம் செலுத்துதல் என்பது இயலாததொன்றாகும்.

1961–ஆம் ஆண்டின் வரதட்சணை ஒழிப்புச் சட்டமானது1984–ஆம் ஆண்டு திருத்தப்பட்டு 2, அக்டோபர், 1985–ல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அவ்வமயம் வரதட்சணை ஒழிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது. (அ). இச்சட்டத்தின் கூறுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் அவர்களுடைய முக்கியப் பணியாகும். (ஆ). வரதட்சணைப் பெறல், அதற்கு உதவி செய்தல் அல்லது வற்புறுத்துதல் ஆகியவற்றைத் தவிர்ப்பதும் அவர்களுடைய பணியே (இ). சாட்சிகள் மூலமாகவே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுத் தீர்மானிக்கப்பட வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள திருத்தங்கள் பீகார், மேற்கு வங்காளம், ஒரிஷா, இமாச்சலப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் தேவை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

1984–ல் உருவாக்கப்பட்ட திருத்தச் சட்டமானது மாநில அரசிடமிருந்து அனுமதி பெற்று வரதட்சணை வாங்குவோர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற விதியை நீக்கியது. இதன்மூலம் வரதட்சணைக் கொடுமை பெருகி வளர்வதற்கான மறைமுக வழிகள் அதிகரித்துள்ளன. அதேநேரம் வரதட்சணை வாங்கிய குற்றம் பற்றி குற்றம் சுமத்த தீர்மானிக்கப்பட்டிருந்த ஒரு ஆண்டு என்ற காலவரையானது நீக்கப்பட்டது. அதனால் காலங்கடத்துதல், உண்மையை மறைத்தல் போன்றவற்றிற்கான ஏதுக்கள் அதிகரித்தன.

**தவிர்க்கும் வழிமுறைகள்**

1. சட்டம் மூலம் கட்டாய மாற்றங்கள் ஏற்படுமென எதிர்பார்ப்பது முற்றிலும் சரியானதல்ல. சமுதாயத்தில் மாற்றங்களும், சட்டங்களிலிருந்து மாறுபட்டுச் செயல்படுதலும் இயல்பாகும். 2. பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய புதுமணத் தம்பதியர் தமது பெற்றோருக்கும் முறையாகத் தமது எதிர்ப்புகளை தெரிவித்தல் மூலமாக வரதட்சணை பெறுதலைத் தவிர்க்கலாம். 3. நடைமுறையில் காணப்படும் சட்டங்கள் கடுமையான வழிகளில் முறைப்படுத்தப்பட வேண்டும். 4. முறைசாராக் கல்வி மூலம் பெரியவர்களின் இத்தீமை பற்றிய கருத்துக்களை எடுத்தியம்ப வேண்டும். 5. தன்னார்வ அமைப்புகள், பெண்கள் நல அமைப்புகள், பொதுநலத் தொண்டு நிறுவனங்கள் இத்தகைய முறைகேடுகளைக் களைய வகை செய்தல் வேண்டும். 6. நாட்டுப்பற்றினை ஊட்டுதல், சமூகக் கேடுகள் பற்றி விளக்குதல் போன்றவற்றினைப் பயன்படுத்தலாம். 7. ஆண்கள் வரதட்சணை வாங்கமாட்டோமென்றும், பெண்கள் வரதட்சணை தரமாட்டோமென்றும் உறுதிமொழி எடுத்து நடைமுறைப்படுத்தலாம். 8. அரசாங்க அலுவலர்களின் நடைமுறை விதிகளில் வரதட்சணை வாங்குதல் தவறு என்ற விதியையும் இணைத்து அதனை மேற்கொள்ளுபவர்களுக்குத் தண்டனை வழங்கலாம். அதன் மூலம் ஊதிய உயர்வை நிறுத்தி வைக்கலாம் அல்லது பணி உயர்வுத் தருவதைத் தடுக்கலாம். 9. சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளும் களையப்படல் வேண்டும். 10. வரதட்சணை என்பது சமூகக் கொடுமை என்பதையும் அதனால் பெண்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் பலரும் அறிந்து கொள்ளச் செய்தல் அவசியம். 11. சமுதாய மாற்றம், மேம்பாடு ஆகியவற்றிற்கேற்ப சட்டங்கள் உருவாக்கப்படுவதுடன் ஏற்கனவே உள்ள சட்டங்களிலும் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். 12. பெண்களின் பொருளாதார வளர்ச்சி, பலதுறைகளில் அவர்கள் அமைந்துள்ள மேம்பட்டதன்மை போன்றவை கணக்கிடப்பட்டு அதன் விளைவுகள் வரதட்சணைத் தாக்கங்களுடன் தொடர்பு படுத்திக் காணப்பட வேண்டும். 13. இன்றைய ஊடகங்களான வானொலி, தொலைக்காட்சி, அச்சகம் போன்றவை சீராகப் பயன்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் வரதட்சணை எதிர்ப்பு வழிகள் கூறப்படலாம். சமூக விழிப்புணர்வை எட்டச் செய்யலாம். 14. திருமணம், வரதட்சணை போன்ற வார்த்தைகளுக்கான விளக்கங்கள் சீரானவையாக அமைக்கப்பட்டு மக்கள் நலனுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். 15. சட்டத்தை உருவாக்குவோர், நிலைநாட்டுவோர், பாதுகாப்போர், பயன்படுத்துவோர் போன்ற பலரும் வரதட்சணையின் பல நிலைகளைப் பற்றி முழுமையாக உணர்ந்தவர்களாக இருக்கவேண்டும். 16. கல்லூரி மாணவ மாணவியரிடையே வரதட்சணை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக நாட்டுத் தொண்டுத் திட்டம், சமூகப்பணிக் குழு, தேசிய மாணவர்படை போன்றவை பயன்படுத்தப்படலாம். அவற்றின் மூலம் விழிப்புணர்வுகளைஏற்படச்செய்தல் மூலம் மக்களிடமும் அவர்களிடமும் ஒரு மனமாற்றம், ஈடுபாடு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை ஊட்டலாம். 17. ஒரு தவறானது உணர்ந்து திருத்திக் கொள்ளப்பட வேண்டுமேயன்றி தண்டனைக்கு உட்படுத்தப்பட்டு திருத்தப்பட வேண்டுமெனில் உண்மையான விளைவுகளை எட்டவியலாது. 18. முறைகேடுகளைத் தவிர்க்க பாதிக்கப்பட்ட பிரிவினரும் எவ்விதமான தயக்கமும் காட்டாமல் முறைப்படி அவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். 19. வரதட்சணைக் கொடுமை காரணமாக மேற்கொள்ளப்பட சாவுகளைத் திரித்து தற்கொலை எனக் கூறி உண்மையை மறைக்கும் தன்மை நீக்கப்பட வேண்டும். 20. வரதட்சணை என்பது ஒருவகையான இலஞ்சம் என்பது உணரப்படல் தேவை. அத்துடன் வரதட்சணை வாங்குதல் என்பது ஒரு அருவருக்கத்தக்க, அவகாரமான செயல் என்பதைப் பெரியவர்கள் உணருதல் அவசியம்.

வரதட்சணை என்பது பெண்ணைப் பெற்றோர் தரவேண்டிய கட்டுப்பாடில்லாத ஒரு பரிசு என்பதை உணர்தல் வேண்டும். வரதட்சணை வாங்குவோர் தன்னை, சமுதாயத்தை, சட்டத்தை, அரசினை ஏமாற்றுவோர் எனப்படுதல் வேண்டும். எனவே வரதட்சணை ஒழிப்பு என்பது ஒரு சமுதாய மேம்பாட்டுச் செயல் என்பதை உணர்தல் அவசியம்.

**திருமண உறவு மற்றும் விவகாரத்து**

இந்து சமயப்படி திருமணம் என்பது சடங்குகள், சம்ஸ்காரங்கள் ஆகியவற்றிற்கு உட்பட்ட ஒரு புனித அமைப்பாகத் திகழ்கின்றது. அவை சமயத்தொடர்புடையனவாகவும் ஆக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் சங்ககாலத்தில் திருமணமானது ஆரியர் முறைக்கு மாறுபட்டதொன்றாய் இருந்தது. தீயை வணங்குதல், வலம் வரல் போன்ற சடங்குகள் காணப்படவில்லை. அகநானூற்றுப் பாடல் 82 தமிழகத் திருமணங்களைப் பற்றிக் கூறுகின்றது. சிலப்பதிகாரத்தில் தமிழ்த் திருமணங்களில் ஆரியர் தாக்கம் ஊடுருவியிருத்தலை உணரமுடிகின்றது. ஒருதார மணம், பலதாரமணம் ஆகியன காணப்பட்டன. பின்னது பரவலாக குறிப்பிட்ட நிலைகளில் மட்டுமே காணப்பட்டது. திருமணம் என்பது, ஒரு இந்துவைப் பொறுத்தவரை, ஒரு புனிதமான உறவு மற்றும் கடமையாகக் கருதப்படுகின்றது. அது வெறும் மகிழ்ச்சிக்கு மட்டும் உரியதல்ல. மாறுபட்ட பலதரப்பட்ட சடங்குகள், வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டபோது, இந்திய விடுதலைக்குப் பின்னர் திருமணத்தை மாற்றுவதற்கான பலவிதச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றை உணர்தல் வாயிலாக பெண்ணுரிமை பற்றிய செய்திகளை உணரவியலும். திருமணச் சட்டங்கள் குடும்பநலம், உறவு ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை. எனவே அவற்றின் தாக்கத்தை உணர்தல் வேண்டும்.

**இந்துச் சட்டம்**

குடும்பவாழ்க்கை, திருமணம், மனஉறவு மற்றும் விவாகரத்து மூலம் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டுமெனப் படுகின்றது. 1872–ல் ஆங்கிலேயரால் சிறப்புத் திருமணச் சட்டம் (Special Marriages Act) உருவாக்கப்பட்டது. 1925–ல் அச்சட்டம் திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டது. இந்நிலையில் இந்துக்கள் மறுமணச்சட்டம் மூலம் விதவைகள் மறுமணம் செய்துகொள்ளல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக விதவைகளின் வாழ்க்கை புத்துயிர்க்கப்பட வகை கிடைத்தது. 1929ல்

இயற்றப்பட்ட சதி ஒழிப்புச் சட்டமும் பெண்களின் உரிமையை மேம்படச் செய்தது. சதி அல்லது உடன்கட்டை ஏறுதல் தடுக்கப்பட்டமையால் பெண் சிசுக்கொலையும் கட்டுப்படுத்தப்பட்டது. தமது குடும்பச் சுமை, பொருளாதாரச் சிக்கல், வரதட்சனை போன்றவற்றை தடை செய்யக் கூடிய வகையில் செய்யப்பட்ட மற்றொரு காரியம் குழந்தைமணமாகும். அது சமூகச் சிக்கல்களை உருவாக்கியதுடன் பெண்களையும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கியது. 1929–ல் உருவாக்கப்பட்ட சாரதாச் சட்டம் என்ற குழந்தை மணத் தடைச்சட்டம் இவ்வகையில் முக்கியமானதாயிருந்தது. 1946–ல் இந்து திருமண குறைகள் நீக்கச் சட்டம் (Hindu Marriages Dirabilities Act) இயற்றப்பட்டது. ஒரே கோத்திரத்தைச் சார்ந்த ஆனால் பிற பிரிவினர்களது திருமணம் செல்லுபடியாகுமென்றும், கலப்புத் திருமணத்தை ஆதரித்ததுமான இச்சட்டம் முக்கியமானதாகும். திருமணமானது மனிதர்களை மனிதாபிமானம் உடையவர்களாக கட்டுப்பாடுடையவர்களாக, உண்மையான வாழ்க்கை வாழ வகை செய்வதாலும், திருமணம் செய்தவர்களிடையே அன்பு புரிந்துகொள்ளும் ஆற்றல் ஆகியன பெருகி வருவதாலும் அரசாங்கம் திருமணத்திற்கு முக்கியத்துவம் தரலாயிற்று. சமூகத்தின் ஒப்புதலுடன் தமது பாலினத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள ஆண், பெண் இருவருக்கும் உரிமையளிக்கப்பட்டதால் தர்மம் என்ற அடிப்படையிலும் அது ஏற்கப்பட்டது. திருமணம் என்பது பலதரப்பட்ட சடங்குகள், பாரம்பரிய பழக்க வழக்கங்கள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1954–ல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டம் (Special Marriages Act)திருமணத்தை திருமணம் செய்து கொள்வோரின் விருப்பத்திற்கேற்ப செய்து கொள்ளலாம் எனப்பட்டது. சமய அடிப்படைகளை மீறி திருமணமானது பதிவு செய்யப்பட வேண்டுமெனப்பட்டது. எனவே அது பெண்களுக்கோர் பாதுகாப்பாக அமைந்தது. மேலும் ஆண், பெண் திருமண வயதுகளை 21 மற்றும் 18 என தீர்மானித்தபோது அது விவாகரத்து மற்றும் பெண்களின் சொத்துரிமை பற்றியும் குறிப்பிட்டது. 1872 ஆம் ஆண்டுச் சட்டமானது 1923–ல் திருத்தப்பட்டும் சில மாற்றங்களை உருவாக்கியது. திருமணப்பதிவு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு திருமணப் பதிவேடுகளும் மேற்கொள்ளப்பட்டது. 1850–ன் XXI-ஆம் சட்டம், 1925–ன் XXXIX-ஆம் சட்டம் போன்றவற்றையும் கருத்தில் கொண்டு இச்சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி மணமக்களில் யாராவது ஒருவர் புத்திசுவாதீனமற்றவராக இருந்தால் திருமணம் செல்லாதெனப்பட்டது. ஆனால் 1955–ஆம் ஆண்டுச் சட்டம் மூலம் ஒருவர் புத்தி சுவாதீனமாக இருக்கும்போது அத்திருமணம் செல்லாது எனப்பட்டதிற்கு மாறாக, அது மற்றொருவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் திருமணம் செல்லுபடியற்றதாகும் என்றது. 1976–ல் இயற்றப்பட்ட குழந்தை மணத்தடைத் திருத்தச் சட்டம் (The Child Marriage Restraint Amendment Act) முந்திய சட்டங்களின் ஷரத்துகளை ஏற்றுக்கொண்டது. 1969–ல் (இந்திய) அயல்நாட்டுத் திருமணச்சட்டம்(Indian Foreign Marriage Act) உருவாக்கப்பட்டது. இவற்றின் மூலமாகப் பெண்களின் நிலையானது திருமணமானபின் பாதுகாக்கப்பட வகை செய்யப்பட்டது.



1955–ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டமானது ஒருதார மணத்தை வலியுறுத்தினமையால் அது பெண்களுக்குச் சாதகமான தாயிருந்தது. மேலும் நீதிமன்றம் மூலமாகவே விவாகரத்து மற்றும் பிரிவினையை மேற்கொள்ளலாமென்றது. பெண்களுக்கு ஜீவனாம்சம் வழங்கவும் வகை செய்யப்பட்டது. முறையற்ற உறவுடைய திருமணங்களையும் இது தடுத்தது. ஆணைப்போல் பெண்ணுக்கும் விவாகரத்து கோரி மனுசமர்ப்பிக்க உரிமை தரப்பட்டது. இந்திய தண்டனைச் சட்டத்தின்படி பெண்ணுரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சட்டத்தின்முன் ஆணும், பெண்ணும் சமம் என்பது நிறுவப்பட்டது.

1873–ஆம் ஆண்டின் மூன்றாவது சட்டமான திருமணமான பெண்களின் சொத்துரிமைச் சட்டம் (Married Women's Property Act), 1929–ஆம் ஆண்டின் இந்துவாரிசுரிமை திருத்தச் சட்டம் (Hindu Law rahiritance Amendment Act) ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு 1956–ல் இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டது. அது பெண்களின் பொருளாதார உரிமைகளை நிலைநாட்ட முன்வந்தது. 1937–ஆம் ஆண்டின் இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம் (The Hindu Women's Right to Property Act) பெண்களின் சொத்துரிமைக்கு வழிகோலியது. இச்சட்டங்கள் வாயிலாக இந்தியாவில் நிலவிய தந்தைவழிச் சமுதாய முறையிலும், சில பகுதிகளில் நிலவிய தாய்வழிச் சமுதாயங்களிலும் மாற்றங்கள் நிலவியது. பெண்ணுரிமைச் சொத்துக்கு பெண்களே உடமையாளர்கள் என்பது தெளிவுபடத் தீர்மானிக்கப்பட்டது. அதனால் பெண்களின் சொத்துரிமை நிரந்தரத் தன்மையுடையதாக ஆக்கப்பட்டது.

1981–ஆம் ஆண்டின் திருமணச்சட்ட திருத்த மசோதா (Marriage Law Amendment Act) மூலம் விவாகரத்துக் பெறும் உரிமை ஆண், பெண் இருபாலருக்கும் சமமானதாக ஆக்கப்பட்டது. அது இருவரும் மூன்றாண்டுகள் காலம் பிரிந்திருந்தால்தான் மேற்கொள்ளப்படும் எனப்பட்டது. அவ்விருவரும் ஒரே வீட்டில் வாழாதிருப்பினும் அது பிரிவு என்றே கொள்ளப்பட்டது. இது பெண்கள் தமது கொடுமைகளிலிருந்து விடுபட ஏதுவானதொன்றாகக் கருதப்பட்டது. மேலும் கணவர் விவாகரத்து கோரினால் பொருளாதாரச் சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்ற நிலையில் பெண்கள் அதனை எதிர்க்கலாம். எனவே ஒரு பெண்ணின் பொருளாதாரச் சிக்கல்களைத் தவிர்க்கும்வரை விவாகரத்துப்பெற விழையும் கணவரின் வேண்டுதலை நீதிமன்றம் தாமதப்படுத்தலாம். 13D பிரிவு பெண்களின் பொருளாதாரச் சிக்கல்கள் பற்றிக் கூறுகின்றது. எனவே மனைவியின் வாழ்க்கைக்கான வசதிகளைச் செய்து தரவில்லையெனில் ஆண்கள் விவாகரத்துப் பெற்றியலாது என்பதற்குச் சட்டம் துணையாக உள்ளது. பெண்ணுரிமை அமைப்புகளும் திருமணமான பெண்களின் பொருளியல் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தின. குழந்தைகளின் நலன், பாதுகாப்பு ஆகிய அடிப்படைகளும் அப்போது கவனிக்கப்பட வேண்டியவையாயிருந்தன.

1984–ஆம் ஆண்டில் சிறப்புத் திருமண திருத்தச் சட்டம் (Special Marriage Amendment Act) மூலம் மேலே கூறப்பட்டுள்ள பல செயல்களும் முழுமையாக செயல்படுத்தப்பட வகை செய்யப்பட்டது. விவாகரத்து என்பது இந்தியச் சமுதாயத்தில் பெண்களைப் பெரிதும் பாதிக்கக்கூடிய ஒன்றாகும். மேலும் விவாகரத்து என்பது பெருமளவில் ஆணினத்தின் சுயநலப் போக்கு காரணமாக ஏற்கப்படுகின்றதெனலாம். பெண்களின் சொத்துரிமை பற்றி இச்சட்டம் முழுமையாகக் கூறவில்லையெனினும் பெண்களுக்கு சொத்தில் உரிமையும் பங்கும் உண்டு. சுய பராமரிப்பு, குழந்தைகளின் பராமரிப்பு, பொருளியல் நிர்ப்பந்தங்களிலிருந்து விடுபடல் போன்ற காரணங்களுக்காக திருமணமான பெண்களும் சட்டத்தின் பாதுகாப்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

1984–ல் உருவாக்கப்பட்ட குடும்ப நீதிமன்றச் சட்டம்(Family court act) மூலம் குடும்பத்தில் பாதிக்கப்பட்டு விவாகரத்து பெற விழைவோரிடையே சமாதானத்திற்கு முக்கியத்துவம் தருகின்றது. குடும்ப மானம், தன்மானம் ஆகியவற்றிற்கு பங்கமேற்படாமல் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக தமக்கேற்படும் தலைகுனிவுகள், கடுஞ்செயல்கள் போன்றவற்றை வெளியில் கூறுவதில்லை. மேலும் இவையெல்லாம் இரகசியக் கொடுமைகளாகக் கருதப்படுகின்றன. எனவே இவற்றின் மூலம் விவகாரத்துப் பெறுதல் என்பது பெண்களுக்கு இயலாத ஒன்றாகவே உள்ளது. மேலும் ஆதிக்க வெறி கொண்ட ஆண்கள் தாம் கொண்டிருக்கும் வெறுப்பை பெண்கள் மீது காட்டுவதென்பது தடுக்க இயலாத ஒன்றாகவே உள்ளது. மேலும் விவாகரத்து என்பது மேலைநாட்டுமுறை. எனவே விவாகரத்து என்பது இந்தியாவைப் பொறுத்தவரை வெறுப்புமிக்க செயலாகவே கொள்ளப்படுகின்றது.

## விவாகரத்துக்கான காரணங்கள்

1. விவாகரத்து என்பதற்கு முறை கெட்ட ஒழுக்கம் தவறிய வாழ்க்கை வாழுதல், பிற சமயத்திற்கு மாறுதல், குணப்படுத்த முடியாத தொழுநோய், மறைமுக பால்வினை நோய்கள், துறவறம் மேற்கொள்ளப் பாலியல் பண்புகளில் ஒருவர் மற்றொருவருக்கு ஈடுகொடுக்க இயலாமல் ஏமாற்றத்திற்குள்ளாதல் போன்றவை காரணங்களாகக் கருதப்படுகின்றன. 2. புகுந்த வீட்டிலிருப்பவர்கள் வீட்டிற்கு புதிதாக வந்த பெண்களை நடத்தும் முறை, கட்டுப்படுத்துதல், கடினமாக வேலைவாங்குதல், முறையின்றிப் பேசுதல், அனைவருக்கும் கீழ்ப்படிய வற்புறுத்துதல் போன்ற காரணங்களால் பெண்கள் வெறுப்புற்று விவாகரத்துப் பெற விழைகின்றனர். 3. திருமணவயது, கல்வி போன்ற காரணிகளும் உண்டு. சில நேரங்களில் விவாகரத்துகள் தேவையாகின்றன. 4. படித்து, வேலை மூலம் பணம் பெறும் பெண்கள் சிலரிடம் காணப்படும் குணவியல்புகளும் திருமணத்திற்குப் பின் மேலாண்மை உணர்வை உருவாக்கும்போது மணஉறவு பாதிக்கப்பட்டு அவர்கள் விவாகரத்தினை விரும்புகின்றனர். 5. அளவு கடந்த உரிமைகளைப் பெற்ற பெண்களின் கர்வம், அகந்தை, தானென்ற மனோபாவம் போன்றவையும் விவாகரத்துக்கு வழிவகுக்கின்றன. 6. ஆண்களின் அளவுகடந்த குடிப்பழக்கம், பிற பெண்களுடன் உறவு கொள்ளல் முதலியன விவாகரத்துக்குக் காரணமாகின்றன. 7. பழமைப் பற்றுதல் காரணமாக மண்மூடிப் போகவேண்டிய கண்மூடிப் பழக்கவழக்கங்கள் வலுக்கட்டாயமாக சுமத்தப்படும் போது மாறுபட்ட விளைவுகளுக்குக் காரணமாகின்றன. 8. பெண்கள் படிக்காமல் கட்டுப்பெட்டிகளாக, பழமை விரும்பும் பத்தாம்பசலிகளாகச் செயல்படும் நிலையும் தற்காலத்தில் ஆண்களிடம் எதிர்மறை உணர்வைத் தூண்டிவிடுகின்றன. 9. சமூகக் கடமைகளைச் செய்ய முடியாமல் போதல், ஆடம்பரம் மிக்க வாழ்க்கையை வாழ இயலாமை, வரதட்சணை தராமை, தேவைப் பெருக்கம் என்னும் தூண்டலுக்கேற்பத் துலங்க இயலாமை போன்ற காரணங்களும் உண்டு. 10. சட்டப்பாதுகாப்பு உண்டு என்பதால் மனச்சாட்சிக்கு மாறாக பிரிவினை நோக்கில் விவாகரத்துகள் ஏற்கப்படுகின்றன.



## இஸ்லாமியச் சட்டம்

இஸ்லாமியச் சமய முறையிலும் மணஉறவு அன்பு நோக்கினாலானது. கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் கூட்டாளிகள் என்ற எண்ணம் நிலவுகிறது. அச்சட்டப்படி மனைவியானவள் தன்னை இன்னல்களுக்கு உட்படுத்தாத கணவருடன் இணைந்து வாழவேண்டியவள். கணவன், மனைவி இருவருக்கும் உள்ள பாசஉணர்வைப்போல் இருவருக்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள உரிமையுண்டு. இஸ்லாமியத் திருமணமானது சமயச் சடங்குகளுக்குக் கட்டுப்பட்டதல்ல. அது ஒரு ஒப்பந்தமாகக் கருதப்படுகின்றது. இஸ்லாமியச் சட்டமும் குழந்தை மணத்தைத் தடை செய்யவில்லை. இவ்வொப்பந்தமானது சாட்சி அடிப்படையிலானதாகும். 15 என்பது திருமணவயதாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஹனாபி சட்டப்படி இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் சாட்சிகள் தேவை. பலதாரமணத்தை ஏற்கும் இஸ்லாமியச் சட்டம் ஒருவர் நான்கு பெண்களை மணந்து கொள்ள வகை செய்கின்றது. பர்தா முறையும் இஸ்லாமியரிடையே பெண்களைப் பொறுத்தவரை காணப்படுகின்றது. இஸ்லாமியச் சட்டப்படி மணவொப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட மனைவிக்கு சொத்துரிமைக்கும் முக்கியத்துவம் தரப்படுகின்றது. பெண்களின் உடல்நலனுக்கு கேடுவிளைவிக்கும் செயல்களைச் செய்தல், வாழ்க்கைக்கு ஆபத்தினை விளைவிக்கக்கூடிய செயல்கள், தவறான நடத்தை, சோரம்போதல் போன்றவை மணஉறவுக்குப் பங்கம் விளைவிப்பனவாகக் கருதப்படுகின்றது. ஹோல், தலாக் என்ற வழிகள் வாயிலாக விவாகரத்து கோரப்படுகின்றது. கணவருக்கு திருமணத்தை ரத்து செய்ய அதிக உரிமைகள் உள்ளன. பெண்கள் ஆண்களை அதிக அளவில் சார்ந்திருத்தல் இதற்கான காரணமாகும். ஹனாபி சட்டம் பெண்கள் திருமண உறவைத் துண்டிப்பதை ஏற்கவில்லை. ஆனால் ஷபி (Shafi) மற்றும் மாலிகி(Maliki) சட்டங்களின்படி பெண் மணவிலக்கு பெற இயலும். நான்கு ஆண்டுகள் கணவரைப் பற்றிய செய்திகள் கிடைக்காமை, கணவர் இரண்டு ஆண்டுகளுக்கு குடும்பத் தேவைகளை நிறைவு செய்யாமை, ஏழாண்டுகள் கணவர் சிறையிலடைக்கப்பட்டிருத்தல், கணவரின் வியாதிகள், உடலுறவு கொள்ள இயலாமை போன்ற காரணங்களுக்காக விவாகரத்து பெறப்படலாம். இஸ்லாமியப் பெண்களுக்கு விவாகரத்து கேட்கும் உரிமையுண்டு. பெண்

பூப்படையாத சிறுமியாக தகப்பனாரின் பாதுகாப்பில் இருக்கும்போது மற்றொரு பாதுகாவலரால் திருமணம் செய்துகொள்ள இயலாது. முகமதியப் பெண்களை எளிதில் விவாகரத்து செய்து கொள்ள முடியுமாகையால் அவர்களுடைய உரிமைகள் கட்டுப்பட்டவையாகவே உள்ளன எனலாம். எனவே அவர்கள் தமது உரிமைகளுக்கு போராட வேண்டியவர்களாகவே உள்ளனர். இஸ்லாமியப் பெண்களும் தம்முடைய குடும்பத்தைக் கொண்டுசெலுத்தும் பெரும் பொறுப்பினை உடையவராகவே உள்ளனர். அதன்மூலம் அவர்கள் குடும்ப அந்தஸ்தை மேலும் உயர்த்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

கிறித்துவச் சட்டம்

இந்து மற்றும் இஸ்லாமியச் சட்டங்களுடன் ஒப்பிடுகையில் கிறித்துவ தனிநபர் சட்டங்கள் பெருமளவு வித்தியாசமானவை. ஆனால் பெண்களைப் பொறுத்தவரை சமத்துவமின்மை காணப்படவில்லை. கிறித்துவத்தைப் பொறுத்தவரை திருமணமென்பது ஒரு நிரந்தர இணைப்பாகும். அது கடவுளால் நிரந்தரமானதாக்கப்பட்டது. சென்ற நூற்றாண்டில் கிறித்துவப் பெண்கள் பலதரப்பட்ட பணிகளில் ஈடுபட்டார்கள். அவர்களுக்கு கல்வி, பொருளாதார, விடுதலை மற்றும் தொழில் முறைப் பயிற்சி ஆகியன தரப்பட்டன. அவர்கள் பெருமளவு தந்தைவழிச் சமுதாயக் கோட்பாட்டை பின்பற்றினார்கள். கிறித்துவத் திருமணங்கள் பற்றியச் சட்டம் 1872–ல் இயற்றப்பட்டது. அது கிறித்துவத் திருமணச்சட்டம்(Christian Marriage Act) எனப்பட்டது. இச்சட்டம் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கிறித்துவர்களுக்கும் பொருந்தக்கூடியதாக ஆக்கப்பட்டது.

கிறித்துவத் திருமணத்தை புனிதமானதொன்கிறதெனலாம். திருமணங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. திருமணங்கள் பற்றி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பதிவாளர்ாய் தலைமைப் பதிவாளருக்கு அறிக்கை அனுப்பப்பட வேண்டுமெனப்பட்டது. 1869–ஆம் ஆண்டின் இந்திய விவாகரத்துச் சட்டம் கிறித்துவர்களுக்கும் பொருந்தும் எனப்பட்டது. கணவன், மனைவி இருவருக்குமே விவாகரத்து கேட்டுப்பெறும் உரிமையுண்டு. விவகாரத்து பெற்ற பெண்கள் மறுமணம் செய்துகொள்ள உரிமையுடையவர்கள். தேவாலயமே விவாகரத்துபற்றிய இறுதி முடிவினை எட்டுகின்றது.

இவ்வாறு திருமணம் மற்றும் விவாகரத்து போன்றவற்றில் பெண்களின் நிலை சமயத்திற்குச் சமயம் இந்தியாவில் மாறுபடுகின்றது. இதன் விளைவாகப் பெண்களின் சமூக அந்தஸ்திலும் உரிமைகளிலும் மாற்றங்களும் வேறுபாடுகளும் ஏற்படுகின்றன.



# 14. பழங்குடிப் பெண்கள் மற்றும் தலித் பெண்கள்

முன்னுரை பழங்குடிப் பெண்கள் தலித் பெண்கள் அரசியலமைப்பு கூறும் வழி முறைகள் - தலித் பெண்களின் மேம்பாட்டிற்கான வழிகள்

பழங்குடிப் பெண்கள்

எல்லாச் சமுதாயங்களிலும் பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியன பாரம்பரிய நோக்கில் முக்கிய பங்காற்றுகின்றன. சமய நோக்கில் பல பிரிவினருக்கெனத் தனிப்பட்ட சட்டங்கள் உள்ளபோது பழங்குடி இன மக்கள், தொகுக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மூலம் செயல்பட வேண்டியவர்களாயுள்ளனர். பழங்குடிஇன மக்களின் பெண்களின் நிலை ஆண்களுக்குக் கட்டுப்பட்டதாகவே உள்ளது. அவர்களுடைய நிலையானது குடும்பத்தின் மேம்பட்ட தன்மையைச் சார்ந்து செயல்படுகின்றது. பிற இனம் மற்றும் பகுதிவாழ் மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் பழங்குடிப் பிரிவினரின் வாழ்க்கை கடினமானது. தமது குடும்பத்தின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்தல், பொருளாதாரச் சூழல்களை சரிக்கட்டுதல் போன்ற பல பணிகளில் ஈடுபட வேண்டியவர்களாயுள்ளனர். அவர்களுடைய தினப்பணிகள் மிகவும் அதிகமாக உள்ளன. இன்றைய சமுதாயத்தில் அவர்களுடைய நிலை என்னவென்பதைத் தொடர்ந்து தெரிந்துகொள்ளல் வேண்டும்.

பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் மற்றும் பாரம்பரிய நோக்குகளில் பழங்குடிச் சமுதாயமானது பிற சமூகப்பிரிவுகளிலிருந்து மாறுபாடுடைய ஒன்று. இந்திய அரசானது பழங்குடியினரின் மேம்பாட்டிற்கான பலவழிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் பழங்குடிஇனப் பெண்களுக்கெனத் தனிப்பட்ட சிறப்புப் பணிகள் செயல்படுத்தப்படவில்லை. பழங்குடி இனத்தவர்கள் தம்முடைய பெண்ணினத்திற்கு பெருமதிப்பளிக்கின்றது. அவர்கள் பல நிலைகளிலும் சொந்தமான முடிவுகளை எடுக்க உரிமை கொண்டவர்களாக உள்ளனர். குடும்பத்தில் நடைபெறும் அனைத்துவிதமான நிகழ்ச்சியிலும் பங்கேற்க அவர்கள் உரிமை பெற்றுள்ளனர். அவர்களுக்கு மணஉரிமையிலும் தமது வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தம்மிடத்துக்கு வரக்கூடிய புதியவர்களுடனும் பழங்குடிமக்களும், பெண்களும் சகஜமாக பழகும் நிலை இன்று உள்ளது.

இந்திய அரசியலமைப்பானது பழங்குடி மக்களின் பரம்பரைச் சட்டங்கள், பழக்கவழக்கங்களைப் பாதுகாக்க வகை செய்துள்ளது. ஆனால் வாரிசுரிமை, சொத்துரிமை, திருமணம், விவாகரத்து போன்ற நிலைகளில் குறிப்பிடத்தக்க சட்டங்கள் இல்லை. எனவே அவர்கள் இடத்துக்குஇடம், இனத்துக்கு இனம் தனிப்பட்ட வழிமுறைகளைக் கொண்டுள்ளனர். ஆனால்

பொதுவாக அனைத்து பழங்குடிப் பிரிவினரும் தம்முடைய இனப்பெண்களும் பையன்களும் தம் விருப்பப்படியான பெண்களைத் திருமணம் செய்து கொள்ள உரிமைகள் நல்கியுள்ளனர். எனவே பழங்குடி பெண்கள் பலதரப்பட்ட உரிமைகளுடன் சலுகைகளையும் அனுபவித்து விடுகின்றனர். அவற்றை நடைமுறைப் படுத்துவதில் அவர்களுக்கு எவ்விதமான தயக்கமும் கிடையாது.

பழங்குடியினர் பின்பற்றும் மற்றும் பயன்படுத்தும் வழிவழியாக வரும் சட்டங்கள் நிலையாகத் தொகுக்கப்பட்டவையல்ல. எனவே அவற்றுக்கிடையில் மாறுபாடுகள் ஏற்படுவது இயல்பாக உள்ளது. பொருளியல் மற்றும் விவசாய முறைகள் உள்ளன. இயற்கை தரும் மூலப்பொருட்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர். நிலவுடமை, சொத்துரிமை, ஆகியவற்றில் வழக்காறு அடிப்படையில் தனித்தன்மை கொண்டவர்களாயிருந்தனர்.

சொத்துரிமை ஆண்மக்களுக்கு மட்டுமே உண்டு. தந்தையின் மரணத்திற்குப்பின் ஆண்மக்கள் சொத்தினைப் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். பெண்களுக்குத் தமது தந்தையரின் சொத்தில் உரிமை கிடையாது. இன்று நிலமானது முக்கியமான சொத்தாகக் கருதப்படுகின்றது. எனவே தமது நிலம் உள்ள இடங்களில் அவர்கள் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர். தந்தையின் மரணத்திற்குப்பின் சொத்து நேரடியாக ஆண்மக்களைச் சார்ந்திருக்கும். எனவே பழங்குடிச் சமுதாயமானது தந்தைவழிச் சமுதாயமாகவே இயங்குகின்றதென்லாம். ஆனால் வடகிழக்குப் பகுதியில் வாழும் பழங்குடிப் பிரிவினர் தாய்வழிச் சமுதாய நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். ஆனால் அவர்களுக்கிடையிலும் சொத்துரிமை பற்றிய சிக்கல்கள் உள்ளது. பெண்கள் சொத்துரிமையைப் பெறுவதின்றும் தடை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் திருமணமாகாத பெண்கள் தமது வாழ்க்கையை தன்னுடைய தகப்பனாரின் சொத்து மூலம் நடைமுறைப்படுத்தலாம். ஆனால் திருமணமான பெண்ணுக்கு இத்தகைய உரிமைத் தரப்படவில்லை. அவள் விதவையானாலும் அல்லது விவாகரத்து பெற்றாலும் அத்தகைய உரிமைகள் திரும்பத்தரப்படுவதில்லை. விதவையானவள் இறந்துவிட்ட கணவரின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளைப் பயன்படுத்துவதற்கு உரிமையுடையவள். அவளுக்கு ஆண்குழந்தை இல்லையெனில் அவளது நிலை இரங்கத்தக்கதாக அமையும் ஏனெனில் ஆண்வாரிசு இல்லாத சொத்தினை இறந்தவரின் சகோதரர் மற்றும் உறவினர்கள் தமது விருப்பத்திற்கேற்பப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். அதனால் விதவைப் பெண்ணின் நிலை வருத்தப்படக்கூடியதாக உள்ளது. தம்முடைய சொத்தில் பங்குபெற இயலாத நிலையில் அவள் துயரங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அவளுக்கு ஆண் வாரிசு இருந்தால் அவளுடைய வாழ்க்கை சிறப்புடையதாகக் காணப்பட்டது.

விதவையும், விவகாரத்து பெற்ற பெண்களும் எவ்விதமான உரிமைகள் இல்லாதவர்களாக இருந்த போதிலும் அவர்களுடைய வாழ்க்கை துன்பமானதாகவே இருந்தது. ஆனால் பழங்குடி இனப் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளுவதற்கும், விவகாரத்து செய்து கொள்ளுவதற்கும் உரிமையுடைவர்கள். எனவே மற்ற இனப்பெண்களுடன் ஒப்பிட்டு



நோக்குகையில் பழங்குடி மக்களின் உரிமைகள் அதிகமானவையாகவே உள்ளன. மற்றொரு முக்கியமான விஷயம் என்னவெனில் பழங்குடி இனப் பெண்கள் வரதட்சணை என்ற சிக்கலுக்கு உள்ளாவதில்லை. ஆனால் தற்பொழுது வரதட்சணைக் கொடுமையானது படிப்படியாக அந்த சமுதாயத்திற்குள்ளும் ஊடுருவ ஆரம்பித்துள்ளது. இதற்கு பழங்குடியினர் பிற பிரிவினருடன் கொண்டுள்ள தொடர்பும், மற்றவர்கள் பழங்குடியினர் மீது ஏற்படுத்திய தாக்கங்களும் முக்கியமான காரணிகளாகும். பெண் விலையானது பெண்ணை பொருளாதாரச் சொத்து என்ற அடிப்படையில் எழுந்தது. அது வரதட்சணையாக விரிவடைந்தது. வரதட்சணை ஏற்பட்டதன் விளைவாக பெண்களின் அந்தஸ்தும் மாற்றத்திற்கு உள்ளாயிற்று. பழங்குடியினர் பல்வேறு காரணங்களுக்காக தமது இருப்பிடத்தை விட்டு நகர்ப்புறப் பகுதிகளுக்குக் குடி பெயர்ந்த போது அவர்களது வாழ்க்கையில் மாற்றங்கள் பல எழுந்தன. மேலும் கல்விவளர்ச்சி காரணமாகவும் பழங்குடியினர் வாழ்வில் உருவான மாற்றங்கள் அப்பெண்களையும் பாதிப்புக்கு உள்ளாக்கின.

வளர்ந்து வரும் சமூகத் தன்மை, மாறிவரும் பொருளியல் நோக்கு விரிவாக்கமும் தேவைகளும், வசதிகளும் அதிகரித்து விட்ட வாழ்க்கை போன்றவற்றின் பிரதிபலிப்பு பழங்குடிப் பெண்கள் வாயிலாக உள்ளன. அதே நேரத்தில் பழங்குடியின மக்களுக்குக் கிடைக்காத சொத்துரிமை, அசையும் மற்றும் அசையா சொத்துக்களில் உள்ள உரிமையின்மை காரணமாக முறைகேடுகள் ,வற்புறுத்தல்கள், பலாத்காரங்கள் போன்றவற்றிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். பழங்குடி இன ஆண்கள் தமது இனப் பெண்களையும், விதவைகளையும் தவிர்க்கின்றனர். அதற்குக் காரணம் அவர்களுக்கு நிலத்தின் மீது உரிமையின்மையும் ஆகும். அத்துடன் பெண்கள் நகர்ப்புற வாழ்க்கையில் தொடர்பின்றியும், வழக்காறுகளில் ஈடுபாடு இன்றியும் தேக்க நிலையுடைய வாழ்க்கையினை மேற்கொண்டபோது ஆண்களால் அதனை ஏற்க முடியவில்லை. மேலும் அப்பெண்கள் கல்வியின்மையால் பழைய பாரம்பரிய வாழ்வு முறைகளைப் பின்பற்றுகையில் அவர்களுடைய வாழ்க்கை பின் பட்டதாகவே உள்ளது. பழங்குடிச் சமுதாயத்திற்கு அரசுகள் பலவசதிகள் செய்து முன்னேற வகை செய்துள்ளது. ஆனால் சமூகக் கட்டுப்பாடுகள் பெண்களை அவற்றின் பயனை அறிய முடியாமல் செய்கின்றன. அதனால் அவர்களுடைய பழமைப் பற்றுதலிலிருந்து அவர்களை விடுபடச் செய்தும், கல்விபெற வசதியளித்தும், கலப்பு மணங்களை ஆதரித்தும் அவர்களை இருண்ட நிலையிலிருந்து வெளிச்சத்துக்குக் கொண்டு வரலாம். நகர்ப்புறப்பகுதியில் வாழும் பெண்களின் நிலையை உணர்ந்து கொள்ளும் வாய்ப்புகள் அவர்களுக்குத் தரப்பட வேண்டும். சட்டங்கள் வாயிலாகவும் அவர்களுடைய குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். பழங்குடிப் பெண்களின் சிக்கல்கள உணரப்பட்டு அவற்றை நீக்கவதற்குரிய வழிமுறைகள் ஆய்வுமூலம் கண்டறியப்பட்டு செயல் படுத்தப்பட வேண்டும். அவர்களிடமும் தன்னம்பிக்கை, தன்னார்வம், விழிப்புணர்வு ஆகியன உருவாக்கப்படல் மற்றொரு முன்னேற்றத்திற்கானபடி. பெண்கள் விவசாயம், தோட்டக்கலை போன்றவற்றில் ஈடுபடுவதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டு

நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் உறைவிடம், வாழ்விடம் ஆகியன பிறருடையனவற்றைப்போலின்றி ஒதுக்க நிலையுடையதாகையால் அம்முறையிலிருந்து அவர்களை விடுடச்செய்தல் அவசியம்.

**தலித் பெண்கள்:**

இரவீந்திரநாத் தாகூர் "பெண்கள் இறைவனது படைப்பில் சிறப்பானவர்கள்" என்று கூறியுள்ளார். அதேபோல் பாரதரத்னா பண்டித ஜவஹர்லால் நேருவும் இந்தியப் பெண்கள் ஆண்களை விட இந்தியாவின் உணர்வுகளை மிகத் தெளிவாக உணர்த்த முடியுமெனக் குறிப்பிட்டார். பெண்களின் வாழ்க்கை மீதான தொடர்புகள் நீண்டகாலப் பாரம்பரியத்தை உடையவை. இந்நிலையில் பெரிதும் பின்னிட்ட நிலையில் பெண்கள் உள்ளபோது தலித் இனப் பெண்களின் நிலை பெருமளவு பின்னடைவு பெற்ற ஒன்று என்பது தெளிவான உண்மை.

தலித்துகள் என்போர் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, உரிமைகளற்ற பிரிவினர். அவர்களுடைய வாழ்க்கை முறைகள் காரணமாக அவர்களுக்கு சமூக அந்தஸ்து தரப்படவில்லை. பிற்பட்டவர்களாகக்கருதப்படுகின்றனர். அவர்களுக்கு பிற சமூகத்தவருடன் பழகும் உரிமையும் குறைவாக உள்ளது. சமய அடிப்படையில் அவர்களுடைய உரிமைகள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளன. அதாவது அவர்கள் பிரம்மா, சிவன், விஷ்ணு போன்ற இந்துக் கடவுள்களைத் தொழுவதில்லை. அவர்கள் கிராம தேவதைகளையும், சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர். அவர்கள் மாட்டிறைச்சியை உண்ணக் கூடியவர்கள். இந்தியாவில் காணப்படும் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவினருள் ஹரிஜனங்கள் என்றும் அழைக்கப்பட்ட அப்பிரிவினர்கள் கடைநிலைப் பணிகளை ஆற்ற வேண்டியவர்களாயிருந்தனர். இந்தியா விடுதலைப் பெற்று ஏறத்தாழ 59 ஆண்டுகள் ஆகிவிட்டாலும் இந்தியாவின் பலபகுதிகளிலும் புலையர், பனியர், மகர், பள்ளர், பறையர், பங்கிகள் என்ற பல பிரிவினர் உள்ளனர். அவர்களுடைய நிலையே இந்திய சமுதாயத்தில் இரங்கத் தக்கதாகக் காணப்பட்ட போது அப்பிரிவினரின் பெண்களின் நிலை எவ்வாறு இருக்குமென்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

**பண்புகள்:**

1. அவர்கள் வளர்ச்சியும் உரிமைகளும் இல்லாத, கல்வியறிவற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். 2. அவர்களுடைய சமுதாயமானது பலதாரமணம், குழந்தைமணம், தள்ளிவைத்து மறுமணம் செய்துகொள்ளல் போன்ற தவறான வழிமுறைகளைக் கொண்டுள்ளது. 3.தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ளல் என்பது அவர்களுக்குப் பெரிதும் இயலாதது. 4. குறைந்த அளவு ஊதியத்திற்காக காலை முதல் மாலை வரை அவர்கள் கடுமையாக உழைக்கின்றனர். 5. பாலினப்பாகுபாடு என்பது அவர்களுடைய இந்நிலைக்குக் காரணமாகின்றது 6. சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட நிலையை அவர்கள் பெற்றிருந்தாலும் அவர்களுடைய இனப் பிரிவினராலும், குடும்பத்தினராலும் பெரிதும் போற்றப்படுகின்றனர். 7. அவர்கள் பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு தங்கள் பொருளாதாரத்தை



வளப்படுத்திக்கொள்ள முயலுகின்றனர். மருத்துவப் பெண்களாக, ஆயாக்களாக, கட்டிடத் தொழிலாளர்களாக, கூலி வேலை செய்வோர்களாக, கொத்தடிமைகளாக, அடிமைப்பணியாளர்களாக அவர்கள் பணியாற்றுகின்றனர். ஆனால் அவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியமில்லாமல் சுரண்டப்படுகின்றனர். 8. தமது மற்றும் தன்னுடைய குடும்பத்தினரின் சுகாதாரம், உடல்நலம் போன்றவற்றைப் பேணிக்காப்பதற்கான வாய்ப்புகள் அவர்களுக்குக் குறைவாகவே உள்ளன. 9.கிராமங்கள் மற்றும் நகரங்களின் ஒதுக்குப்புறங்களில், சேரிகளில் அவர்களுடைய வாழ்க்கை வசதியற்றதாகவே உள்ளது. 10. அரசு தரும் திட்டங்களை அவர்கள் உணர்வதில்லை.

**அரசியலமைப்பு கூறும் வழிமுறைகள்:**

1. இந்திய அரசியலமைப்பின் 14–ஆம் ஷரத்தானது சமத்துவ உரிமையினை வழங்கியுள்ளது. 2. பகுதி III –ன் 15 –ஆவது ஷரத்து இந்தியர்களை மதம், இனம், பால், சாதி, இடம், மொழி ஆகியவற்றால் வேறுபடுத்தி பாகுபாடு செய்வதைத் தடை செய்துள்ளது. 3. 17–ஆவது ஷரத்து தீண்டாமைமையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. 4. 23–ஆவது ஷரத்து கட்டாயவேலை, பாலியல் தொழில் ஆகியவற்றைத் தடை செய்கின்றது. 5. 29– ஆவது ஷரத்து சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாக்கின்றது. 6. 46–ஆம் ஷரத்தானது சமூக அநீதி மற்றும் சுரண்டல்களிலிருந்து பாதுகாப்புத்தருகின்றது. அதுவே கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான கூறுகளையும் தந்துள்ளது. 7. 275– ஆம் ஷரத்து மாநில அரசு மூலம் பழங்குடியினர் நலனுக்கான உதவியை நல்குகின்றது. 8. 164–ஆம் ஷரத்து மூலம் பழங்குடியின் நலனுக்கெனத் தனிப்பட்ட அமைச்சர் நியமிக்கப்பட்டார். 9. 320–ஷரத்து பொது வேலைகளில் நலிந்த பிரிவினருக்கு பாராளுமன்றம், சட்டமன்றங்களில் இட ஒதுக்கீட்டிற்கு வழிவகுத்துள்ளது. 11. 335, 338 ஆகிய ஷரத்துகள் தலித் மற்றும் பழங்குடிப் பிரிவினருக்கு அரசு பணிகளில் இட ஒதுக்கீடு தந்துள்ளது.

மேலே கூறப்பட்டுள்ளவற்றின் மூலம் பழங்குடியினர் மற்றும் தலித்துகள் நலனுக்காக தரப்பட்டுள்ள செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். இது பெண்களுக்கும் பொருந்தக்கூடியதே.

**தலித் பெண்களின் மேம்பாட்டிற்கான வழிகள்:**

1. தலித் பெண்களுடைய மேம்பாட்டிற்காக அவர்களுடைய கல்விவசதிகளும், தரமும் உயர்த்தப்பட வேண்டும். 2. அவர்களுக்கு சிறு தொழில், கல்வித்தகுதி போன்றவற்றில் தக்க பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். 3. அரசு தரும் சலுகைகள், தன்னார்வ அமைப்புகள், அரசு சாரா நிறுவனங்கள், பெண்களின் தொண்டு நிறவனங்கள் போன்றவை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். 4. கைத்தொழில் பயிற்சி, தையல் தொழில், கைவினைப் பொருட்கள் செய்தல் போன்றவற்றின் மூலம் அவர்களுடைய தனிப்பட்ட வருவாயைப் பெருக்கிக்கொள்ள வசதிகள் செய்யப்படல் தேவை. 5. அவர்கள் வறுமைக் கோட்டிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்படல் அவசியம். 6. மும்பை

நகரில் தலித் பெண்களுக்காக செயல்பட்டு வரும் சுதர் மற்றும் கிராமக் கைத்தொழில் அமைப்பு, புவனேஷ்வர், புனா, டில்லி, அகமதாபாத் போன்ற நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட தலித் பெண்களுக்கான பயிற்சி மையங்கள், போன்றவை அதிக அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். 7. வங்கிகளும் வர்த்தக நிறுவனங்களும் தரும் பெண்களுக்கான வளர்ச்சித் திட்டங்களை தலித் மற்றும் பழங்குடிப் பெண்களும் பெற்றுக் கொள்ள வகை செய்ய வேண்டும். 8. கழிவு நீர்ச் சாக்கடைகளைச் சுத்தம் செய்தல், கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் தலித் பிரிவினர், பெண்கள் நிலையை மாற்ற அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். 9. தலித் பெண்களிடைய நிலவியுள்ள கீழ் நிலைப் பணிகளிலிருந்து அவர்களுக்கு மாற்று வேலைகளுக்கு ஏற்பாடு செய்யப்படலாம். 10. செருப்புத் தைப்பவர்கள், மீன்பிடிப்போர், கூடைமுடைவோர், சிறு தொழில் முனைவோர் போன்ற பெண்கள் தனிமைப்படுத்தப்படும் நிலையிலிருந்து மாற்றப்படவேண்டும். 11. சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட சமத்துவம் உண்மையாகவே நடைமுறைப் படுத்தப்படுவதற்கான வழிகளை மேற்கொள்ளல் அவசியம். 12. சாதி, மதம், இனம், மூடப்பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றால் உருவாக்கப்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகள் களையப்பட வேண்டும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற நிலை உண்மையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். 13. கல்வியறிவின்மை நீக்கப்பட அடிப்படைக் கல்வி, முதியோர் கல்வி ,பெண்கல்வி, முறை சாராக் கல்வி போன்ற வழிகள்நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். 14. பழங்குடியினர், தலித்துகள் ஆகியோர் வாழ்க்கைத் தேவை நிறைவுக்காகப் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்லும் போது ஏற்படக்கூடிய இன்னல்களுக்குத் தீர்வுகாண அரசுகளும், பிற அமைப்புகளும் செயல்பட வேண்டும். 15. தலித்துகள், தனிப்பட்டவர்கள் ஆகியோருக்காக உருவாக்கப்படும் திட்டங்கள் முழுமையாக அவர்களைச் சென்றடைய வகை செய்ய வேண்டும். முயற்சிகள் எடுக்கப்படுவதுடன் செயலாக்கமும் அவசியம். 16. சமுதாயத்தில் காணப்படும் சமத்துவமற்ற நிலையை அகற்ற மேற்கொள்ளப் பட்டுள்ள பல முயற்சிகளையும் பழங்குடி மற்றும் தலித் பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

# 15. பாலியல் வன்முறையும், சட்டங்களும்

**முன்னுரை** காரணங்கள் - சட்டங்கள் - பொருள் விளக்கம் - வன்முறைகள் பணியிடங்களில் பாலியல் தொல்லைகள் - உச்சநீதிமன்றம் வகுத்துள்ள வழிமுறைகள்

## காரணங்கள்

பாலியல் வன்முறை என்பது பெண்கள் பற்றிய தாழ்வான்குறைவான மதிப்பீடு காரணமாகவும், ஆதிக்கம் படைத்த ஆண் வர்க்கத்தின் அடாத செயல்களாலும், உருவாகும் ஒன்று. விதவைகள், வாழா வெட்டியாக வாழும் பெண்கள், படித்துவிட்டு தனியிடங்களில் செயல்படும் தனிப்பட்ட பெண்கள், சமூகப்பணியில் ஈடுபட்டக்கூடிய பெண்கள் போன்றோர் மிருகத்தனமான பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பாலியல் வன்முறையானது சமுதாய சமத்துவமின்மை காரணமாக வலுப்பெறுகின்றது. கொத்தடிமைகளாகத் திகழக் கூடியவர்கள், வீட்டுவேலைகளில் ஈடுபடுபவர்கள் போன்றோர் பொருளாதாரப் பின்னடைவுதனை அடித்தளமாகக் கொண்டு பாலியல் கொடுமைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். பெண் தொழிலாளர்கள், பெண் விவசாயத்தொழிலாளர்கள் போன்ற பலரும் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாகின்றனர். ஆதரவற்ற அனாதைப் பெண்கள், வேலைவாய்ப்பு இல்லாமை, குடும்பச் சூழல்கள் போன்ற காரணங்களால் பெண்கள் துயரத்திற்கு உள்ளாகும் போது அப்பிரிவினர் பாலியல் தொழிலில் ஈடுபட்டு தனது வருவாயைப் பெருக்கிக் கொள்ள முனைகின்றனர். பெண்களை போதைப் பொருட்களாகக் கருதப்படுவதாலும், வரதட்சனை தராததற்காக ஒதுக்கிவிடப்பட்ட பெண்களும், காதல் வாழ்க்கையில் தோல்வியுற்ற பெண்கள் போன்றோர் பாலியல் கொடுமைகளுக்கு ஆண்களால் அடிமைப் படுத்தப்படுகின்றனர். உடலுணர்வு காரணமாக முறையற்ற உடலுறவுக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதும் பாலியல் சார்ந்த தவறாகவே உள்ளது. பலதாரமணம் நிலவும் சமுதாயத்திலும் பாலியல் கொடுமைகள் மறைமுகமாக அரங்கேற்றப்படுகின்றன. இன்று ஆண்களும் பெண்களும் சமமாகப் பழகக்கூடிய வாய்ப்புகள் தரப்பட்டுள்ளமையும் மறைமுகமாக பாலியல் சிக்கல்களை உருவாக்குகின்றன. பெண்களிடம் கல்வியறிவு, விழிப்புணர்வு இல்லாமை போன்ற காரணங்களாலும் பாலியல் துன்பங்கள் காணப்படுகின்றன. வங்கதேசம் போன்ற நாடுகளில் தனித்து வாழும் பெண்களுக்குக் காணப்படும் மதிப்பின்மை, ஆப்பிரிக்காவில் பெண்களுக்கு பாலியல் உணர்வை இழக்கச் செய்துவிட்டமை போன்றவையும் பாலியல் கொடுமைகளை வெளிப்படுத்துகின்றன்.

**சட்டங்கள்:**

பாலியல் கொடுமைகளையும் வன்முறையையும் தடுப்பதற்கான முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுஇடங்களில் பெண்களைப் பரிகாசம் செய்தல், கொச்சையாக சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லுதல், வெறுப்பூட்டக்கூடிய செயல்களில் ஈடுபடல் போன்றவை பாலுணர்வு அடிப்படையில் எழக்கூடியவையாகும். எனவே இவற்றைத் தடுப்பதற்கென பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பொது இடங்களில் இத்தகைய குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்க வழிகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் பாலியல் குற்றங்கள் தவிர்க்கப்படலாம். இந்த நோக்கத்துடன் பலவிதமான சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. இம்முறையில் 1999–ல் தமிழ்நாட்டில் பெண்களை பரிகாசம் செய்து வெறுப்பூட்டும் செயலைத் தடுக்கும் தமிழ்நாட்டுச் சட்டம் இயற்றப்பட்டது. பொது இடங்களில் பெண்கள் நிற்கும் அல்லது இருக்கும் இடங்களில் ஆண்கள், மாணவர் குடிபோதையிலுள்ளோர் பெண்களைக் கேலி செய்தல், வெறுப்பூட்டும் செயல்களில் ஈடுபடல் போன்ற செயல்களில் ஈடுபடல் முதலியவை சட்டப்படி குற்றங்களாகக் கருதப்படுகின்றன. இக்குற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது ரூ. 10,000/– அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து விதிக்கப்படலாம்.

1972 –ல் மதுராவில் நடந்த பாலியல் வன்முறை விவகாரம், அதனால் ஏற்பட்ட போராட்டங்கள், 1977 –ல் ரமிசாமி வழக்கு, 1979 –ல் நடைபெற்ற சகிலாபாய் வழக்கு போன்றவை பாலியல் தொடர்புடையவை. இவற்றால் 1983 –ல் திருத்தப்பட்ட பாலியல் வன்முறைச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்மூலம் பாலியல் குற்றங்களுக்கான தண்டனையும், அபராதத் தொகையும் அதிகரிக்கப்பட்டன. இச்சட்டத்தின் வாயிலாக கீழ்க்காணும் மாற்றங்கள் உருவாக்கப்பட்டன.

1. குற்றவாளிக்கு அளிக்கப்பட்ட குறைந்தபட்ச சிறைத்தண்டனை என்பது ஏழாண்டுகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. பெண் குற்றவாளிகள் சட்டப்படி காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது பாலியல் வன்முறை நிகழ வாய்ப்புகள் உண்டு. அவ்வாறு நிகழும் போது அதாவது பாதுகாவலில் இருக்கும் காவலர், அல்லது சிறைத்துறை அலுவலர்கள், அல்லது 15 நாட்கள் ரிமாண்ட் அல்லது விசாரணைக்காக காவலில் வைக்கப் பட்டிருக்கும்போது பாலியல் கொடுமைகள் நடத்தப்பட்டால், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 12 வயதுக்கு உட்பட்ட சிறுமியரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினால் அதற்காக 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட இச்சட்டம் வகை செய்துள்ளது.

3. வற்புறுத்தியோ அல்லது அச்சுறுத்தியோ பெறப்பட்ட ஒப்புதலானது இனியும் ஒப்புதலாகக் கருதப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

4. சாட்சிச் சட்டம்(Evidence Act) குறைந்த தேவைகள் கொண்டதாகக் கருதப்பட்டது. இதன்படி பாதுகாவலில் இருக்கையில் பாலியல் வன்முறை நடந்ததெனில் அல்லது நடந்ததாகக் கூறப்பட்டால் தான் நிரபராதி என்று நிரூபிக்கக் கூடிய பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவையாகும்.



**பொருள் விளக்கம்:**

மேலே கூறப்பட்டுள்ள சட்டங்கள் வாயிலாக பாலியல் வன்முறை, பாலியல் உறவு ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவருடைய விருப்பம் மற்றும் ஒப்புதலின்றி தகாத உறவினை 16வயதுக்குள் மேற்கொண்டால் அது தகாத உறவு, திருமணமான பெண்ணின் ஒப்புதலுடன் அவருடைய கணவன் அல்லாத மற்றொருவர் கொள்ளும் மோசமான உறவு பாலியல் வன்முறை என்றே கொள்ளப்படும். கணவனைப் பிரிந்தாலும் 15 வயதுக்கு உட்பட்ட பெண்ணுடன் மேற்கொள்ளும் உடலுறவு பாலியல் வன்முறை சார்ந்ததாகும். கணவனுக்கு மனைவி மீது உள்ள வரைமுறையற்ற கேள்விகேட்கும் உரிமை என்பதும் பாலியல் உரிமை சார்ந்ததாகும்.

**வன்முறைகள்:**

பாலியல் வன்முறை, பாலியல் உறவு ஆகியன நிகழ்ந்தமையை மருத்துவ சோதனை மூலமாகவே நிரூபிக்கப்பட வேண்டும். சாட்சிகள், அவ்வன்முறையை நேரில் கண்டவர்கள் போன்றவர்கள் வெளிப்படையாக விவரித்துச் சொல்லுதலென்பது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. எனவே காவல் துறையானது முன் உதாரணங்களின் அடிப்படையில் வழக்குகளைத் தீர்மானித்து, முடிவெடுத்து குற்றப்பத்திரிக்கையைத் தயாரித்து முறைப்படியான சட்டப்பணிகளைச் செயல்படுத்தத் தொடங்கும். மோசமான உறவுகள் நிரூபிக்கப் படுவதுடன், பாதிக்கப்பட்டவர் தமது ஒப்புதலைத் தரவில்லை என்பதும் நிரூபிக்கப்பட வேண்டும். பெண் சொல்லாது என்ற நிலையில் இது ஒரு கடினமான பணியாகும். கட்டாயப்படுத்திச் சம்மதிக்க வைப்பதும் இயலாததென்று, தனது ஒப்புதல் இல்லையென்பதை நிரூபிப்பதும் மிகக் கடினமான ஒரு பணியே. அச்சுறுத்தி அல்லது வற்புறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்தல் என்பது சட்டத்தினால் ஒப்புக்கொள்ளப்படக் கூடியதல்ல. ஏனெனில் சில வேளைகளில் சிறு அளவினதான தாமதம் கூட, எந்த அளவிற்கு நியாயமானதாக இருந்தாலும், பாதிக்கப்பட்டவருக்கு எதிரானதொன்றாக அமையும். உண்மை மறைக்கப்பட்டுவிடும்.

மேலே கூறப்பட்டுள்ள செய்திகளை சுமன்ராஸி வழக்கு மூலம் நன்கு அறியலாம். இவ்வழக்கு 1989 –ல் நடைபெற்றது. நீதிபதிகள் பி. சி. ரே, எஸ். ஆர். பாண்டியன் ஆகியோரடங்கிய உச்சநீதி மன்ற அமர்வு மன்றம் 1989 –ல் ஜனவரி மாதம் ஒரு தீர்ப்பினை வழங்கியது. சுமன்ராஸி வழக்கு என்ற அவ்வழக்கில் பாலியல் வன்முறையைக் கையாண்டவரின் தண்டனைக் காலமானது பத்து ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளாக மேல் முறையீட்டில் குறைக்கப்பட்டது. இத்தீர்ப்புக்கு இந்திய தண்டனைச் சட்டம் 376–ஆம் பிரிவு அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் காணப்பட்ட விசித்திரமான உரிமைகள், சந்தர்ப்பசூழல்கள், ஆகியன பெண்ணின் நடத்தையுடன் இணைந்து பார்க்கப்பட்டு குற்றவாளிக்கான தண்டனை குறைக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளின் கருத்துப்படி சுமன்ராஸி சந்தேகத்துக்குரிய நடத்தையுடைய பெண் எனக் கொள்ளப்பட்டதுடன் கீழ்நிலை நீதிமன்றத்தில் சுமன்ராஸி வழக்கு பற்றிய தாமதத்தை ஒரு சாட்சியாகக் கொள்ளவில்லை என்றும் கூறப்பட்டது.

பாலியல் வன்முறைகள் அதிகரிக்கின்றன. அதிலும் சிறுவர்,சிறுமியர் பாலியல் வன்முறைக்கு ஆளாவது, பலர் ஒன்று சேர்ந்து பாலியல் வன்முறையை நிகழ்த்துதல் போன்றவை பெருமளவு பெருகி வருகிறது. சமய, இனக் கலவரங்கள், தீவிரவாதம், அரசியல் குழப்பங்கள் போன்றே பாலியல் வன்முறையும் வலுப்பெற்றுள்ளது. இவை அனைத்துமே பெண்களுக்குப் பலவகையிலும் துன்பத்தை விளைவிப்பனவாயிருந்தனவென்பதை உணர்தல் வேண்டும்.

**பணியிடங்களில் பாலியல் தொல்லைகள்:**

பாலியல் தொல்லைகள் பல இடங்களிலும் நிகழ்த்தப்படுகின்றன. வளர்ந்து வரும் இன்றைய சமூகத்தில், சமூகத்தடைகளைக் கடந்து, கல்வியறிவு பெற்று, பொருளியல் நோக்கில் பெண்கள் பலதரப்பட்ட பணிகளுக்குச் செல்லுகின்றனர். பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் வளர்கின்றனர். அப்போது அவர்கள் பலதரப்பட்ட இன்னல்களைச் சந்திக்கின்றனர். கடின உழைப்பு, குறைந்த ஊதியம், ஆணுக்குச் சமமான ஊதியமின்மை போன்றவை சில கேடுகளாகும். ஆனால் அவற்றையெல்லாம் விட அவர்கள் வேலைக்குச் செல்லும் போதும் வேலை முடித்து திரும்பும் போதும் ஏற்படக்கூடிய போக்குவரத்துச் சிக்கல்களுடன் பாலியல் தொல்லைகளுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர். அவற்றைவிடத் தாம் பணிபுரியும் இடங்களில் சக ஆண்ஊழியர்கள், பணியாளர்கள், மேலாளர்கள் ஆகியோரால் பெருந்தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். ஆனால், விதவைகள், திருமணமான பெண்கள், திருமணமாகதவர்கள், ஆகிய பலதரப்பட்ட பெண்களும் இத்தகைய தொல்லைகளையும், அத்துமீறல்களையும் சகித்துக்கொள்ள வேண்டியவர்களாகி உள்ளனர். உடல்வலுவற்றவர்கள் என்ற நிலையில் அவர்களால் எதிர்ப்புகளைக் காட்ட இயலுவதில்லை. அத்துடன் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டால் தனது வேலைக்குப் பங்கம் வரும். வேலைகளில் தொடர்வதும் முன்னேறுவதும் தடைப்படும். அச்சம் காரணமாகவும் தமக்கு நேர்ந்த பாலியல் அவமானத்தை வெளியில் சொன்னால் தன்னுடைய கௌரவம், அந்தஸ்து மதிப்பு ஆகியவற்றுடன் குடும்பத்திற்கும் அவமானம் என்பதற்காக அதனை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. போட்டி, பொறாமை, பகைமையுணர்வு போன்ற பணிச் சூழல்களிலும் அவர்கள் செயல் பட வேண்டியவர்களாக உள்ளனர். மேலும் தமக்கு ஏற்பட்ட பேரிழப்பை வெளிக்காட்டினால் தவறு. அத்தகைய பாலியல் பலாத்காரங்களுக்கு ஒப்புதளிக்காவிட்டாலும், அல்லது கடுமையாக எதிர்ப்புகள்தெரிவித்தாலும் அதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் பணிபுரியும் பெண்களுக்கு பாதகத்தையே ஏற்படுத்தும். அதேநேரம் பாலியல் கொடுமைகளை மனத்திற்குள் வைத்துக் கொண்டு சஞ்சலப்படுவதும் மனவியல் மற்றும் உடல் நலக்கேடுகளுக்கு வழிகோலும். பெண்களின் திடச் சித்தம், ஆண்கள் தமது சபலத்தினை பணிமேன்மை காரணமாகப் பயன்படுத்தி பெண்களைச் சுரண்டாதிருத்தல் முக்கியமாக அத்தகைய குறைகளைத் தவிர்க்கலாம். பாதுகாப்பு ஏற்ற நோக்கில் பாலியல் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக இந்திய உச்சநீதி மன்றம் சில வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நடைமுறைப் படுத்தலாமெனக் கோடிட்டுக் காட்டியுள்ளது.



**உச்சநீதிமன்றம் வகுத்துள்ள வழிமுறைகள்:**

பாலியல் கொடுமைகள் மற்றும் அத்துமீறல்களைத் தவிர்த்தல் என்பது அதற்குக் காரணமாகும் ஆண், கருவியாகும் பெண் என்னும் இருசாராரும் மேற்கொள்ள வேண்டியதொன்று. இருப்பினும் இந்தியத் தலைமை நீதிமன்றமானது அக்கொடுமைகளிலிருந்து விடுபடுவதற்கான பாதுகாப்பு வழிகளைக் கீழ்க்கண்டவாறு நல்கியுள்ளது.

1. பாலியல் தொல்லைகள் மற்றும் அத்து மீறல்களைத் தடுப்பதற்கும் அத்தகைய முறையற்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அச்சமூட்டி அச்செயலைச் செய்யத் தயக்கம் ஏற்படுத்தலாம்.
2. பாலியல் அத்துமீறல் தொல்லைகளைத் தவிர்க்க அல்லது தீர்வுகாண குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளலாம். அத்தகைய தீர்வு நடவடிக்கைகளை உருவாக்குவது, செயலாக்க நடவடிக்கைகளைத் தீர்மானித்தல் அவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவை பணி இடத்தின் முக்கியப் பணியாகும். பணியாளர்களை வேலைகளுக்கு அமர்த்துபவர், பணியிடங்களில் உள்ள பிற பொறுப்பான பணியாளர்கள், அல்லது நிறுவனத்தின் பொறுப்பாளர்கள் ஆகியோரின் முக்கிய கடமை அத்தகைய குறைபாடுகளைக் களைவதாகும்.
3. பாலியல் தொல்லைகள் என்பது என்ன என்பதை அவர்கள் தீர்மானிக்க வேண்டும். அவை மறைமுகமானவையாகவோ அல்லது நேரடியானதாகவோ இருக்கலாம் கீழ்க்காண்பவையாக அவற்றை மதிப்பிடலாம்.

அ. உடலின் தொடத்தகாத பாகங்களைத் தொட முற்படுதல் அல்லது தொடுதல்.

ஆ. பாலியல் நோக்கில் சலுகைகளைக் கேட்டல் அல்லது வேண்டுதல் அல்லது வற்புறுத்துதல்.

இ. பாலியல் சாயம் பூசப்பட்ட சொற்கள் அல்லது குறிப்புகளைச் சொல்லுதல்.

ஈ. பாலியல் உணர்வைத் தூண்டக்கூடிய கொச்சையான கருத்துக்கள் அல்லது சம்பவங்களை விவரித்தல்.

உ. ஆபாசமாக உள்ள படங்கள், நிழற்படங்களைக் காட்டுதல்.

ஊ. ஆபாசமான படங்கள், கதைகள் உள்ள புத்தகங்களைப் படிக்கக் கட்டாயப்படுத்துதல்.

எ. பாலியல் தன்மையுடைய செயல்களை உடலால் நடத்திக் காட்டுதல் குறிப்புகள் மூலம் அவற்றை உணர்த்துதல்.

மேலே கூறப்பட்ட முறைகேடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

4. தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணி இடத்தில் உள்ளவர்களும், பொறுப்பிலுள்ளவர்களும், வேலையளிப்பவர்களும் பெண்களுக்கு பாலியல் தொல்லைகள் ஏற்படாமலிருக்க வகை செய்வதுடன் அவர்களும் முறையுடன் பணியாற்ற உத்திரவாதம் அளிக்க வேண்டும்.

அ. பாலியல் தொல்லைகள் மற்றும் அத்துமீறல்கள் பணியிடத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதைப் பணியாளர்கள் அறிந்து கொள்ளத் தக்க வகையில் உரிய முறையில் சுற்றறிக்கைகள் விடப்பட வேண்டும்.

ஆ. முறைகேடுகளுக்கான தண்டனைகளும் பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். அதே நேரம் ஒழுங்குவிதிகளிலும் அவை சேர்க்கப்பட வேண்டும்.

இ. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் நடத்தை மற்றும் ஒழுங்குமுறை பற்றிய விதிகளில் பாலியல் தொந்தரவுகள் பற்றிய எச்சரிக்கை தரப்பட வேண்டும். அத்துடன் பாலியல்தொல்லை களின் அத்து மீறல்களுக்கான முறையான தண்டனைகளை வழங்கும் விதிமுறைகளும் தெளிவாக இணைக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஈ. அனைத்துப் பணியிடங்களிலும் நிலையான ஆணைகள் மூலம் பாலியல் முறை கேடுகளைத் தடை செய்ய வேண்டும்.

உ. பெண் பணியாளர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும். குறிப்பாக பெண்கள் ஓய்வெடுக்கும் அறை, தனிஅறைகள் ஆகியன பாதுகாப்பானவையாக அமைய வேண்டும். பெண்களுக்கு ஆதரவான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஊ. பணியிடத்தின் அமைப்பு முறையும் எவ்விதமான அசம்பாவிதங் களுக்கும் இடம் தராத வகையில் அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களையும் காணக்கூடிய வகையில் கண்ணாடிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

எ. வேலை முறையமைவுகளும் பாதகமான சூழ்நிலைகள் இல்லாத நிலையில் அமைக்கப்பட வேண்டும்.

பாலியல் நடத்தைகள் இந்திய தண்டனைச் சட்டம் அல்லது பிற சட்டங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட குற்றமாகக் கருதப்படுமானால் வேலை வாங்குபவர்கள் சட்டப்படி உரிய அதிகாரிகளிடம் தகுந்த முறையில் குற்றம் பற்றிமுறையீடு செய்து தகுந்த நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அ. பாதிக்கப்பட்டவர்களும், சாட்சிகளும் எந்நிலையிலும் பழிவாங்கப்பட்டு விடாமல் தடுக்கப்பட வேண்டும். அதற்கான உறுதிகள் தரப்பட வேண்டும். ஆ. பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு பாதிப்பிற்கு



உள்ளாக்கப்பட்டவர் தனக்கு அல்லது தனக்கு துன்பம் விளைவித்தவருக்கு இடமாற்றம் வேண்டுமெனக் கூறுவதற்கு உரிமையுடைவர். இ. அவ்வாறு ஒருவர் மேற்கொண்ட பாலியல் நடத்தையானது விதிப்படி பணிவிதிகளுக்குப் புறம்பான நடத்தையாக இருக்குமேயாயின் விதிகளுக்கேற்ப அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். ஈ. பாலியல் நடத்தையானது சட்டப்படி குற்றமானதாக, பணிவிதிமீறல் ஆகவும், இருந்தால் பாதிக்கப்பட்டவரின் குறையை நிவர்த்திக்கக் கூடிய வகையில் அதனைப் பற்றி வெளியிடக்கூடிய குறைதீர்க்கும் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அவ்வமைப்பானது குறிப்பிட்ட குற்றத்தை பரிசீலிக்கக்கூடிய காலக்கெடு விதிக்கப்பட்டு அறிவிக்கப்பட வேண்டும். அவ்வமைப்பில் குறைமுறையீட்டுக் குழு, சிறப்பு ஆலோசனையாளர், பிற பணிகளையும், இரகசியக்காப்பையும் உருவாக்க வேண்டும், குறைதீர்க்கும் குழுவுக்கு ஒரு பெண் தலைமை ஏற்க வேண்டும். மேல் நிலையிலிருந்து வரும் செல்வாக்கு, வற்புறுத்துதல்கள் ஆகியவற்றைத் தவிர்க்கக் கூடியதாய் குறை முறையீட்டுக் குழுவில் அரசு சாராத மூன்றாம் நபர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். பாலியல் துன்புறுத்துதல்களைப் பற்றிய விளக்கங்களைத் தர பரிச்சயமான ஒரு அமைப்பும் உருவாக்கப்பட வேண்டும். இவ்வமைப்பானது தான் பெற்ற முறையீடுகளையும் அது சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளையும் பற்றியும் அரசுத்துறைக்கு ஆண்டுதோறும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உ. தொழிலாளர் சட்டங்களிலும், இதர பிற தேவையான அவைகளிலும் பாலியல் தொல்லைகள் சம்பந்தமான பிரச்சனைகளை எழுப்ப தொழிலாளர்கள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். தொழில் நடத்துபவர் மற்றும் தொழிலாளர் சட்டங்களில் பாலியல் தொல்லைகள் பற்றி விவாதங்கள் நடத்தப்பட வேண்டும்.

ஊ பாலியல் தொல்லைகள் பற்றிய விதிமுறைகள், சட்டதிட்டங்கள், கட்டமைப்புகள் போன்றவை பற்றிய விழிப்புணர்வை பெண் பணியாளர்களிடம் உருவாக்க வேண்டும்.

எ. வெளியார் ஒருவரால் பெண் பணியாளர் ஒருவருக்கு பாலியல் தொல்லைகள் ஏற்பட்டால் அதற்கும் தொழில் நடத்துபவரே பொறுப்பாளியாவார்.

இவ்வாறு பாலியல் வன்முறையானது முறையற்ற பல விளைவுகளை உருவாக்குவதால் முறையான நடவடிக்கைகள் உரியவர்களால் எடுக்கப்பட வேண்டும். தமிழக அரசும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# 16. பெண்களும் சுற்றுப்புறச் சூழலும்

முன்னுரை — மக்கள் தொகை பெருக்கம் பெண்கள் நலன் - ஆற்றல் மேம்பாடு - வழிமுறைகள் குழந்தைகள் நலன் - சிப்கோ இயக்கம் - அப்பிக்கோ இயக்கம் - வன சுரஜ்கா சமதி - மஹிளாமங்கல்

இயற்கையின் படைப்பில் அதி உன்னதமான நிலையை உடையது மனித இனத்தைப் படைத்ததாகும். அத்துடன் மனித இனத்தின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கென பல இயற்கை மூலாதாரங்களையும் வழங்கியுள்ளது. முறையான சுற்றுச்சூழலில் மட்டுமே மனிதன் தூய்மையான, ஆரோக்கியமான, நோயற்ற வாழ்க்கையை வாழ இயலும், சுற்றுச்சூழலில் பாதுகாப்பின்மை காணப்பட்டால் அது சீர்கேட்டையும், அவ்வாறு சுற்றுச்சூழல் மாசுபட மனித இனமும் அதன் செயல்களும் காரணமாக உள்ளன. எனவே சுற்றுச்சூழலுக்கு உட்பட்ட பெண்கள் சுற்றுச்சூழலுடன் கொண்டுள்ள தொடர்பினையும் அறிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய பொறுப்புகளை நாம் தெரிந்து கொள்ளவியலும். மனிதனின் தேவைப்பெருக்கம், வசதிமிக்க வாழ்க்கையின் மீதான ஈடுபாடு போன்ற காரணங்களினாலும், மனித இனத்தின் முன்னேற்றம் என்ற நிலையிலும் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது. இந்நிலையில் சுற்றுச்சூழலுக்கும் பெண்களுக்குமிடையிலான தொடர்பு பற்றி உணர்தல் வேண்டும்.

**மக்கள் தொகைப் பெருக்கம்:**

மக்கள் தொகைப் பெருக்கம் சுற்றுச்சூழலைக் கேடுறச் செய்கின்றது. மக்கள் தொகைப்பெருக்கம் என்ற நோக்கில் தாய்மையின் சின்னமான பெண்ணும் பொருளாதார,சமூகச் சிக்கல்களுக்கு ஆளாகிறாள். பெருகிவரும் மக்கள் தொகை இயற்கை வளத்தையும், இயற்கைச்சூழலையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. ஒரு தாயானவள் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்ற அடிப்படையில் சமூகப் பிரச்சினையான மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உதவவேண்டும். பெருகிவரும் மக்கள் தொகை காரணமாக எழும் வசதியின்மை, அம்மை, காலரா போன்ற கொடிய நோய்களின் தாக்கம் ஆகியன இல்லாமல் தேவைகளைக் குறைத்து கொண்டு ஆடம்பரமின்றி வாழ்தல் என்றதாகும். மக்கள் தொகைப்பெருக்கமானது பஞ்சம், பசி, பட்டினி, பற்றாக்குறை ஆகிய சமுதாயக்கேடுகளுடன் வேலையில்லாத திண்டாட்டம், இடப்பெயர்ச்சி போன்றவற்றிற்காக வழிவகுப்பதால் குடும்ப நலத் திட்டங்கள் செயல் பட முடியாத நிலை ஏற்பட்டு பெண்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

**பெண்கள் நலன்:**

மாசுபடாத சூழலில் மனிதன், பெண்கள் ஆகியோரின் உள்ளமும், உடலும் பாதிக்கப்படாமலிருக்கும். நீர், நிலம், காற்று ஆகியன மாசுபடாமலிருந்தால் நோய்கள் பரவுவது தடுக்கப்படலாம். அது பெண்கள் நலனுக்குப் பயன்படும் வீட்டிலுள்ள கழிவுகளை நீக்குதல், வீட்டைச் சுத்தமாக வைத்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல் போன்றவற்றின் மூலம் வீட்டின் சுற்றுச்சூழலை அவர்கள் நன்கு பராமரிப்பார்கள். பெண்கள் குடிநீரைக் காய்ச்சிப் பயன்படுத்த வகை செய்வதால் பலதரப்பட்ட (காலரா, டைபாய்ட், மஞ்சள்காமாலை, சீதபேதி போன்றவை) நோய்கள் தவிர்ப்பதில் அவர்கள் பங்கு முக்கியமானதாகிறது. கரி, தூள், புகை போன்றவற்றைத் தவிர்ப்பதில் பெண்கள் கவனம் செலுத்துவதால் சுற்றுச்சூழல்காக்கப்படும். அது பெண்கள் நலனுக்கு வழிவகுக்கும். எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய்களுக்கு பெண்களும் காரணமாவதால் அவர்களும் பாதிக்கப் படுகின்றனர். அப்பெண்ணின் உடலில் உள்ள எய்ட்ஸ் நோய்க்கிருமிகள் உடலுறவு காரணமாக பிறருக்கும், தாய்ப்பால் மூலமாக குழந்தைகளுக்கும் சென்றடையும். எனவே அதனைத் தடுப்பதில் பெண்களுக்கும் பங்கு உண்டு. சுற்றுச்சூழலைத் தூய்மையாக வைத்துக் கொள்ள எய்ட்ஸ் நோயாளிகளை ஒதுக்கி வைக்கலாம். மேலும் ஆண், பெண் இருசாராரும் வெறும் உடல் சுகத்திற்காகத் திருமணத்திற்கு முன்பாகவே தேவையற்ற உடலுறவு கொண்டால் பாலியல் நோய்களுக்கு இலக்காக நேரிடும். எனவே அதனைத் தவிர்த்தல் வேண்டும்.

**ஆற்றல் மேம்பாடு:**

மனித ஆற்றல் வளத்தினை மேம்படச் செய்வதில் பெண்களுக்கும் பங்கு உண்டு. 1985–ல் இந்தியாவில் உருவாக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத்துறையானது மனிதவள மேம்பாட்டுத்துறையின் அங்கமென்ச் செயல்பட்டு வருகின்றது. இதனால் பெண்களின் நலன், முன்னேற்றம் ஆகியனவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட்டு அவர்களுடைய ஆற்றல் வளர வகைச் செய்யப்படுகின்றது. பொதுக் கூட்டுறவு மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கான தேசிய அமைப்பு (National Institute of Public Co-operation and child Development - NIPCCD)தேசிய அமைப்பு ராஷ்ரிய மஹிளா கோஷ் (Rashtriya Mahila Kosh - RMK), மத்திய சமூக நல வாரியம் (Central Social Welfare Board - CSWB), பெண்களுக்கான தேசியக்குழு (National Commission for Women - NCW) போன்றவை நடுவணரசின் உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

2001–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 1,027.01 மில்லியன் மக்களைக் கொண்டுள்ள இந்தியத்துணைக்கண்டத்தில் 48.2 விழுக்காடு பெண்கள் உள்ளனர். இன்று உலகளாவிய நிலையில் பெண்கள் ஆற்றலைப் பெருக்கிக்கொள்வது முக்கியத்துவம் அடைந்துள்ளது. அதனால் சுற்றுச்சூழலுடன் அவர்கள் நெருங்கிய தொடர்புடையவர்களாகின்றனர். சுற்றுச்சூழல் மேம்பாட்டால் சமூகப்பொருளாதார நிலை உயர்வடைகின்றது. அது பெண்கள். குழந்தைகளின் உடல்நலம், கல்வி வளர்ச்சி ஆகியவற்றை எட்டவழிவகுக்கின்றது. இதன் விளைவாக பெண்களின் ஆற்றல் மேம்படும். பெண்கள் மேம்பாட்டால் சமுதாயம் வளர்ச்சியுறும். அதன்மூலம் சமூகச் சிக்கல்கள் குறையும்.

**வழிமுறைகள்:**

1. 1987 – ஆம் ஆண்டில் பெண்களின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்கான திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் மூலம் பெண்களுக்குப்பயிற்சிதர பல நிறுவனங்கள் தெளிவு செய்யப்பட்டுள்ளன. அவை பயிற்சியுடன் உற்பத்திக்கும் வழிகோலின. இதனால் பெண்களின் ஆற்றலும், பணிகளும் சீராக்கச் செயல்பட்டு சமூக நலனுக்குப் பாடுபட வகை ஏற்படுகின்றது.

2. மத்திய சமூக நலவாரியம் மூலம் பெண்களுக்குக் கல்வியும் மேம்பாடும் தருவதற்கு குறுகிய காலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவ்வகையில் 2001 – 2002 ஆகிய ஆண்டுகளில் சுமார் 450 திட்டங்களுக்கு 250 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டன.

3. 1975 – ல் பெண்களுக்கு வேலையுடன் கூடிய பயிற்சித்திட்டம் (Vocational Training Programme)அமுலாக்கப்பட்டது.

4. ஆதரவற்ற பெண்கள், விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்ற பெண்கள் போன்றோருக்கென சமூகப் பொருளாதாரத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அதன் விளைவாக பால்பண்ணைகள், கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்றவற்றின் மூலம் கிராமக் கைத்தொழில், குடிசைத் தொழில், தையல் வேலை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அதனால் பெண்களின் சூழ்நிலைகள் அவர்களுடைய வளர்ச்சிக்குச் சாதமாயின.

5. மார்ச் 2001 – ஆம் ஆண்டு முதல் செயல்படும் ஸ்வயம்ஸிதா (SWAYAMSIDHA) என்னும் திட்டம் வாயிலாக பெண்கள் சுயசார்புடையவர்களாக இயங்க வகை செய்யப்பட்டது.

6. 1998 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் ஸ்வா சக்தித் திட்டம் (SWA - SAKTHI PROJECT) அமுலாக்கப்பட்டது. அதன்படி 15 முதல் 20 பெண் உறுப்பினர்கள் அடங்கிய 7000 முதல் 20,000 வரையுள்ள சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. பெண்களது வாழ்க்கை ஆகிய இலக்குகளுக்காகச் செயல்படும் அக்குழுக்கள் பெண்களின் சீரான வாழ்க்கைக்கும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கும் வகை செய்தது.

7. 2, அக்டோபர் 1997 –ல் பாலிகாசமிரிதியோஜனா உருவாக்கப்பட்டது. அது 1993 முதல் செயல்படும் பெண்களுக்கான தேசிய கடன் உதவித்தொகை ( Rashtriya Mahila Kosh) திட்டத்தின் விரிவாக்கமாகச் செயல்பட்டன. அதனால் பெண்கள் மேம்பட வகைசெய்யப்பட்டது அவர்கள் சுற்றுச்சூழல் மாசுபடாத வகையில் தமது பணிகளை ஆற்றினர். அதனால் கேடுகள் தவிர்க்கப்பட்டன.

இவ்வாறு அரசு மேற்கொண்ட வழிமுறைகளைச் செயல்படுத்த விதிகள் வகுக்கப்பட்டபோது அவை சுற்றுச்சூழலுக்குத் தொடர்புடையனவாக ஆக்கப்பட்டன.



**குழந்தைகள் நலன்:**

இந்தியாவில் ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 15.37 விழுக்காடாக உள்ளது. 1975 முதல் அரசு ஒருங்கிணைந்த குழந்தை முன்னேற்றப் பணிகள் (Integrated Child Development Services)என்னும் திட்டம் உருவாக்கப்பட்டது. சத்துணவு மூலம் ஊட்டச்சத்துள்ள உணவை உண்ணச் செய்தல், தொற்று நோய்களினின்றும் பாதுகாப்பு, சுகாதார மேம்பாடு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் குழந்தைகள் வலிமைமிக்கவர்களாய் சுற்றுச்சூழல்களுக்கு காவலர்களாய் இயங்கலாயினர். குழந்தைகளின் நலன் பெரும்பாலும் குடும்பச்சூழல், தாயாரின் கண்காணிப்பு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. 2000, 2001 – ஆகிய ஆண்டுகளில் இந்திய நடுவணரசு குழந்தைகளின் சத்துணவுக்காக சுமார் 1045 கோடி ரூபாய்களை உருவாக்கியது. இந்திய அரசு உலக வங்கியுடன் இணைந்து பல தேசிய அளவிலான நலத்திட்டங்களை உருவாக்கியுள்ளது. இவ்வாறு குழந்தைநலன் மற்றும் மேம்பாட்டுத்திட்டங்கள் சுற்றுச்சூழலுடன் இணைந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**சிப்கோ இயக்கம்:**

சிப்கோ இயக்கம் என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பு அடிப்படையில் எழுந்த ஓர் இயக்கமாகும். இதனை மரம் காக்கும் இயக்கம் என்றும் கூறப்படலாம். சுற்றுச்சூழல் அமைப்பின் முக்கிய அமைப்பாக வனங்களைப் பாதுகாத்து மக்களுக்குத் துணை நிற்பது சிப்கோ இயக்கமாகும். இதில் பெண்களின் பங்கும் ஈடுபாடும் பெருமளவில் உள்ளன. ஆலமரம், அரசமரம், வேப்பமரம், பவளமரம் போன்றவை தெய்வீகத்தன்மையுடன் தொடர்புடையதாய் இந்தியக் கடவுள்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. அவை உயிருள்ளவை. ஆகவே அவற்றை அழித்தல் பாவம். அவற்றை பாதுகாக்க வேண்டும். சிப்கோ இயக்கமானது மரங்களை இறுகக் கட்டித்தழுவி அம்மரங்களுக்கான ஊறுகளைத் தடை செய்யும் நோக்குடையது. காற்றைத் தூய்மையாக்கி ...த்தப்படுத்துதல், குளிரூட்டல், நிழல்தரல், வெப்பச் சமநிலையை ...ருவாக்குதல், ஓசோன் பகுதியைப்பாதுகாத்தல் போன்றவை மரங்களின் ...ணிகளாகையால் பெண்கள் அவற்றைப்பாதுகாத்தல் மூலம் சுற்றுச்சூழலுடன் ...தொடர்புடையவர்களாகின்றனரென்பதைப் புலப்படுத்தும்.

**...தாற்றமும் வளர்ச்சியும்:**

சிப்கோ என்றால் "இருக கட்டித் தழுவுதல்" என்று பொருள். 18– ...ம் நூற்றாண்டில் குறிப்பாக 1737–ல் ராஜஸ்தானில் ஜோத்பூர் மாவட்டத்தில் ...ஜாரிலி கிராமத்தில் கெஜ்ரி என்ற மரங்களை வெட்ட அப்பகுதி மன்னர் ...னித்தார். ஆனால் மரங்களின் புனிதத்தன்மையை உயர்ந்த பிஷ்னாய் ...னமக்களுள் ஒருவரான அம்ரிதாதேவி அவர்களுடைய செயல்களைத் ...த்தார். மரங்களைக் கட்டித் தழுவி வெட்டவிடாது செய்தார். ஆனால் ...னில்லை. சுமார் 363 பெண்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அது மன்னரின் ...த்தைத் தொட்டது. எனவே மன்னர் பிஷ்னாய் இனப்பிரிவினரிடம்

மன்னிப்புக் கோரியதுடன் அவர்களது கோரிக்கைகளுக்கும் செவி சாய்த்தார். அது மட்டுமல்லாமல் 363 பேருக்கும் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்பட்டது. இனி படுகொலை செய்யப்பட்ட இடத்தில் ஒரு ஆலயமும் வைக்கப்பட்டது. இனி அந்தப் பகுதியில் மரம் வெட்டுவதில்லையென உறுதியளித்தார். இதுதான் சிப்கோ இயக்கத்திற்குத் தூண்டுகோலாய் நின்ற நிகழ்ச்சி.

சிப்கோ இயக்கமானது பிஷ்னோய் இனத் தோன்றலான ஜாம்பாஜி என்னும் இராஜபுத்திர செல்வந்தரும் பிரம்மசாரியுமானவரால் உருவாக்கப்பட்டதென்று கூறுகின்றனர். பிஷ்னோய் என்பது 29 கோட்பாடுகளை பின்பற்றுபவர்கள் என்று பொருள். தமது பகுதியில் மழையின்றி வறட்சி ஏற்பட்டபோது உயிரியபன்மயப் போற்றிக்காத்து சுற்றுச்சூழலை மேம்படுத்த உறுதி கொண்டார். அவருடைய முயற்சியே மேற்கூறப்பட்டுள்ள பிஷ்னாய் பிரிவினர் மற்றும் அம்ரிதாதேவி அவரது கணவர் ராமோஜி ஆகியோர் செய்த தியாகங்களுடன் சிப்கோ இயக்கத்திற்கு வித்தாயின.

1972–ல் உத்தராஞ்சல் மாநிலத்தில் கார்வால் மாவட்டத்தில் அத்வானி கிராமத்தில் ஆதிவாசிப் பெண்கள் இவ்வியக்கத்திற்கான வடிகாலாய் அமைந்தனர். அக்கிராமத்தைச் சேர்ந்த மரத்தொழிலில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்கள் தமது தொழிலுக்காக மரம் வெட்ட முனைந்தனர். அவர்களை ஆதிவாசிப் பெண்கள் தடுத்து நிறுத்தினர். மீராபென், சரளாபென், விமலாபென் போன்ற எண்ணற்ற பெண்கள் இவ்வியக்கத்தில் பங்கேற்றனர். அவர்களுடன் சுந்தர்லால் பகுகுணா போன்றோரும் இவ்வியக்கத்தில் பங்கு பெற்றனர். 1972 முதல் 1980 வரை இவ்வியக்கம் வளர்ந்தது. மண்வளம், நீர்வளம் ஆகியவற்றைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினர். 1979–ல் கார்வாலில் உருவாக்கப்பட்ட நவஜீவன் ஆசிரமம் சிப்கோ இயக்கத்தினைச் செயல்படுத்துகின்றது. அதே ஆண்டில் அந்த ஆசிரமத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் காஷ்மீர்–கொஹிமா சிப்கோ பாதயாத்திரையில் பங்கேற்றனர். 1982–ஜூன் மாதம் இலண்டனில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சுற்றுச் சூழல் திட்டம் (United Nations Environmental Programme) பற்றிய மாநாட்டில் பங்கேற்றனர். அப்போது சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்கான திட்டம் ஒன்று வழங்கப்பட்டது. மேலும் ஸ்ரீநகர்– சிலிகுரி பாதயாத்திரையும் மேற்கொள்ளப்பட்டது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் மூலமாகவே திட்டவட்டமான நிரந்தர பொருளாதாரத்தைப் பாதுகாக்கலாம் என்பது அவர்களது கோட்பாடு. இமயமலையின் அடிவாரத்திலுள்ள பச்சைமரத்தை வெட்டுவதைத் தடுக்கும் பொருட்டு சுந்தரலால் பகுகுணா உண்ணாவிரதம் மேற்கொண்டார். உண்ணாவிரதம் கண்டு அஞ்சிய பிரதமர் இந்திரா காந்தி பேச்சு வார்த்தை நடத்தி இமயமலை பச்சை மரங்களை வெட்டுவதை தடுக்கும் பொருட்டு 15 தடை உத்தரவு பிறப்பித்தார். இவ்வாறு சிப்கோ இயக்கம் ஒரு வனப்பாதுகாப்பு இயக்கமாகச் செயல்படுவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கமாகவும் திகழ்கின்றது.

#### அப்பிக்கோ இயக்கம்

சிப்கோ இயக்கத்திற்கு இணையானதாக கர்நாடக மாநிலத்தி அப்பிக்கோ இயக்கம் வலுப்பெற்றது. சிப்கோ இயக்கம் போன்(



இவ்வியக்கமும் வனப் பாதுகாப்பில் கவனம் செலுத்தியது. இவ்வியக்கமானது கர்நாடகாவில் சிர்சி தாலுகாவில் கல்ஹானி கிராமத்தில் உருவாயிற்று. இவர்களும் பாதயாத்திரை மூலம் ஒப்பந்தக்காரர்களால் மரங்கள் வெட்டப்படுவதைத் தடை செய்தனர். இதனை சிப்கோ இயக்கத்தின் பிரதிபலிப்பு மற்றும் விளைவு எனக் கொள்ளலாம். பாண்டுரெங்ஹெக்டே என்பவர் உருவாக்கிய அப்பிக்கோ இயக்கம் காடுவளம் பற்றிய மற்றொரு அத்தியாயம் எனலாம். இவ்வியக்கம் நாளடைவில் கர்நாடகத்தின் பிற மாவட்டங்களுக்கும் பரவியது. 1983–செப்டம்பருக்குபின் மரம் வெட்டுதலைத் தடுக்கும் இயக்கம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பரவலாயிற்று.

#### வனசுரக்ஜா சமிதி

காடுகளைப் பாதுகாக்கும் குழு எனப்பட்ட இவ்வமைப்பு விஜய் ஜர்தாரி என்பவரால் ஜார்கான் கிராமத்தில் உருவாக்கப்பட்டது. வனத்திலுள்ள மரங்களை வெட்டுவதை இது எதிர்த்தது. காடுகளை நிர்வகிப்பதிலும் இது கவனம் செலுத்துகின்றது.

#### மஹிளா மங்கல்தல்

இமய மலைப் பகுதியில் காடுகளுக்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்த்து பசுமையை உருவாக்க ஏற்பட்டது இந்த மகளிர் அமைப்பாகும். இது மேய்ச்சல் நிலம் பற்றிய செய்திகளிலும் மரம் நடுவதிலும் கவனம் செலுத்துகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள பல இயக்கங்கள் காடுகளைப் பாதுகாத்தல், மரங்கள் வெட்டப்பட்ட இடங்களில் மீண்டும் பசுமையை நிலைநாட்டுதல், வனப் பொருட்களைத் திட்டமிட்டுத் தேவையான அளவு மட்டும் பயன்படுத்துதல் போன்றவற்றை வலியுறுத்துகின்றன. இவ்வியக்கங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் செயல்பட்டாலும் இந்தியப் பகுதிகள் அனைத்திலும் தன்னுடைய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. உணவு மரம், தீவனமரம், எரிபொருள் மரம், நார் மரம் மற்றும் உரமரம் போன்ற பல வகையான மரங்கள் உருவாக்கப்பட்டு காடு வளர்ப்புத் திட்டங்கள் செயலாக்கம் பெற வேண்டும்.

# 17. பெண்ணின் கடமையும் வள்ளுவமும்

பொறுப்பினை உணர்ந்து கடமை உணர்வுடன் பேசுபவர்கள் பெண்கள். வள்ளுவர் காலத்தில் பெண்கள் பலதரப்பட்ட கடமைகளைக் கொண்டிருந்தனர்.

காலச் சூழ்நிலைகளையும் வாழ்க்கை நலனையும் பொறுத்தே நூல்களும் காப்பியங்களும், கதைகளும் எழுதப்பெற்றன. அத்தன்மையில் நோக்குங்கால் வள்ளுவரின் திருக்குறள் என்ற முப்பாலை ஆராய்ந்த பொழுது அவரது காலத்தில் பெண்ணின் கடமைகள் மற்றும் அவர்கள் பெற்றிருந்த மதிப்பீடு ஆகியன பற்றிய கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

## இல்லற மாந்தரின் கடமை

இல்லறத்தில் முழுமையுறும் ஓர் இல்லத்தில் இல்லாளுக்குக் கடமைகள் அதிகம். அவளே வீட்டில் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டியுள்ளது. எனவேதான் அவளுக்கு 'மனையாள்' 'இல்லாள்' என்றும் இல்லினை ஆளுகை செய்பவள் என்றும் பொருளுடைய சொற்கள் பொருத்தமாயின. இருப்பினும் வள்ளுவர் வாழ்க்கைத் துணைவி என்றே குறிப்பிடுகின்றார்.

இல்லற வாழ்வின் நோக்கமே விருந்தினரை வரவேற்று உபசரிப்பது ஆகும் என்ற கருத்தினை

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு" குறள் 51

என்ற குறளில், திருவள்ளுவர் விளக்கியுள்ளார். அது சமூகச் சூழலைச் சுட்டிக் காட்டுகின்றது.

வள்ளுவத்தின் சமகால இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் இல்லறக் கடமை உடைய இல்லத் தலைவியான கண்ணகி, கோவலன் மாதவியிடம் பிரிந்து சென்றபின் விருந்தறம் பேண இயலாது போனதைக் கூறி வருந்துகிறாள்.

ஆண் கடமை தவறினால் தவறல்ல. பெண் தனக்கென்று சுகமின்றி மன உளைச்சலோடு இருந்தாலும் விருந்தகம் பேணாதது பெருங்குற்றமே எனக் கண்ணகியையே நொந்து பேச வைத்துள்ளார். கோவலனுக்கு எக்கடமையும் இல்லை.

வள்ளுவர் இலக்கணம் என்றால், சிலம்பு அதற்கு விளக்கமான இலக்கியம் எனலாம்.

சங்ககால மக்களும் அவ்வாறே வாழ்ந்தனர் என்பதை உணரலாம்.



"இருங்கழிச் சேயிற........

..................................

வைகறை மலரு நெய்தல் போலத் தகை

பெரிதுடைய காதலி கண்ணே"

என்ற "ஐங்குறுநூறு" கூறும் பாடலானது, தலைவரின் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்ட தலைவி தலைவனோடு கூடியிருந்தபோதும் விருந்தினரோடு தலைவன் இல்லம் புகுந்தபோது அவ்விருந்தினரைக் கண்ட அளவில் தலைவன்பால் உள்ள வெறுப்பைக் காட்டாமல் முகமலர்ந்து தக்கவாறு விருந்தோம்பலைச் செய்தாள் என்ற கருத்தை இயம்புகிறது. தலைவியின் ஏமாளித்தனம் சமூக அந்தஸ்த்திற்காக ஆண்களால் போற்றப்பட்டிருக்கிறது. பெண்கள் தங்கள் கடமைகளில் தலைசிறந்த கடமையாக விருந்தோம்பலைக் கருதினார்.

மறப் பெருங் கேண்மையோடு..................

..................................

சிலம்பு – மனையறம்படுத்த காதை.

சங்ககால மகளிர் தம் இல்லம் வரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவைகளைக் கொடுத்து மிக்க அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது இல்வாழ்க்கைக்குரிய தலைசிறந்த பண்பு எனத் தமிழகம் போற்றியமையை அறிந்து கொள்ள முடிகிறது. தொல்காப்பியரும்

"விருந்து புறந்தருதல்" என்பது மனைவியின் மாண்புகளுள் ஒன்றாகக் கூறுகின்றார்.

## வாழ்க்கைத் துணைவி

வள்ளுவர் பெண்களை "வாழ்க்கைத் துணைநலம்" என்று குறிப்பிடுகின்றார். பெண் என்பவள் ஆணின் வாழ்க்கைக்கு ஒரு துணையாக இருக்கிறாளே தவிர ஆணுக்கு இணையாக இல்லை என்பதைத் தெளிவுபெற வள்ளுவம் கூறுகிறது. மேலும் அக்கால கட்டத்தில் பெண்கள் ஆண்களின் அடக்குதலுக்குட்பட்டுத் தன்னை மணந்து கொள்பவனது செல்வ வளத்திற்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்தித் தன் கணவனுக்குச் சிறந்த துணையாளாக இருந்துள்ளாள் என்பதை,

"மனைத்தக்க மாண்புடையவள் ஆகித்தற்

கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்ற குறள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

'பெண்ணியம்' என்ற நூலில் டாக்டர் மீனாட்சி முருகரத்தினம் என்ற பெண்ணியச் சிந்தனையாளர் இணை என்பது அல்ல துணைக்குப் பொருள். பெண்ணானவள் இரண்டாம்தரக் குடிமகளாகவே வைத்துச் சொல்லப்பட்டுள்ளாள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

தொல் மரபியல் 'துளக்கலாகாத் துணை' என்னும் சொல்லைத் தொல்காப்பியர் இரண்டாம் நிலையிலேயே குறிப்பிடுகிறார். துணைமை துணைநலம் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய சிந்தனையைத் தள்ளினும் அன்றைய நோக்கில் இரண்டாம் நிலையிலேயே துணை எனும் சொல் இருந்துள்ளது என்பதைபறிய முடிகிறது. இணை எனும் சொல்லிருக்க அதனைப் பயன்படுத்தாது ஏன்? என்ற வினா எழுப்பின் அதன் விடை உள்ளங்கை நெல்லிக்கனி எனப் புலப்படும். எனவே குழப்பமின்றி ஆண் தனித்து நின்று வாழவும் முடியும், பெண் துணையாளால் மட்டுமே வாழவும் முடியும் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது மன்னர்கள் காலப் போர்ச்சூழலில் பாதுகாக்கப்பட வேண்டிய காலத்தின் கட்டாயமாகவும் இருந்திருக்கக் கூடும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்னும் குறளிலும் தன் மகனுடைய பெருமைகளை அறிந்த அத்தாய் அவனைப் பெற்ற பொழுதிலும் பெரிதும் மகிழ்ச்சி அடைவாள் என்று தாயின் நிலைப்பற்றிக் கூறியுள்ளமையைக் காணமுடிகிறது. யாரேனும் சொல்லிக் கேட்கின்ற பொழுதே மகிழ்கிறாள். தான் உணர்ந்து அறிந்து மகிழத் திறனற்றவளே என்று எண்ணத் தோன்றுகிறது.

விலங்கினின்றும் மனிதனிடத்துத் தோன்றிய முதற்படியே தாய்மை எனலாம். அந்த 'மனிதம்' போன்ற குணங்களே ஆணுக்கில்லையானால் சமூகம் மன்னித்து ஏற்றுக் கொள்ளும். ஆனால் பெண் தன் கடமையாகிய தாய்மையில் சிறப்புடையவளாகச் செயல்புரிய வேண்டும் என்பதே பெண்ணிற்குரிய இலக்கணமாக எழுதப்பட்டது.

"மனையாளை அஞ்சும் மறுமை யிலாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று" குறள் –904

என்று கூறுவதன் வாயிலாகப் பெண்களுக்குள்ளே சிலர் மாறுபட்ட நிலையிலுள்ளனர் என்பதை வள்ளுவர் உணர்த்துகின்றார். மனைவிக்கு அஞ்சி நடக்கின்ற ஒருவன் மறுமைப் பயன் இல்லாததும் செயல் ஆற்றும் தன்மையும் பெருமையும் பெற்று விளங்க முடிவதில்லை என்றும் வள்ளுவர் கூறுகின்றார்.

வள்ளுவம் பெண்ணை வாழ்க்கைத் துணைநலம் என்று குறிப்பிடுகையில் தன்ஆணியப் பார்வையைச் செலுத்தியுள்ளார். அவர் வழியிலே வள்ளுவத்தை ஆய்வு செய்த புலவர் இளங்குமரனார், 'துணை' என்பது சிறுமைப்படுத்துவது அன்று, ஒப்புப் பொருளில் ஆணுக்குப் பெண் ஒப்பானவர் என்றே கூறியுள்ளார். தாழ்வுப் பொருளாகப் பார்க்கும் பார்வையால் பெண்ணைத் தாழ்த்தினார் எனப் பெண் பிறவியரும் பேசும் நிலைமை காலக் கேட்டாலும் கருத்துக் கேட்டாலும் உண்டாகிறது.

கடவுள் துணை
அன்பே துணை



பெரியாரைத் துணைக்கோடல்
திணைத்துணை
பனைத்துணை

என்னுமிடத்தில் எல்லாம் தாழ்வுப் பொருளிலா வந்துள்ளது?

"துணையோடல்லது நெடுவழி போகேல்"

"தொண்டனாய் துணையும் இல்லை"

"இல்வாழ்வான் என்பான் இயல்புடையமூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

"துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்றெல்லாம் எடுத்துக்காட்டிக் கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனும் துணைதானே என்பர். இருவரையும் குறிக்கப் பயன்படுத்தும் சொல்லல்லவா என்று குறிப்பிட்டுள்ளார். முப்பால்களிலும் பெண்ணின் பெருமை பேசியவர் திருவள்ளுவர்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

"பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின்
நாணுடைப் பெண்ணே பெருமை உடைத்து"

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்"

தந்தையை ஓரிடத்தில் கூறித் தாயை நான்கு இடங்களில் தனிச் சிறப்புடன் நவின்றவர் வள்ளுவர். பெருங்கனிவால் பெண்மையைப் பேணிக் காக்கும் காப்பது அவசியம்.

பிறனில் விழையாமை
பெண்வழிச் சேரல்

வரைவில் மகளிர் என்பவை பிறன்கடை நின்றான். அறன்கடை நின்றான் என்பன பெண்மையைப் பழிப்பதல்ல.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
- தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு"

என்னுமிடத்தில் உயர்ந்த பொருளாகக் காட்டி அவள் வழி நட என ஆணுக்குச் சொல்லுகின்றார்.

கற்பை இருவருக்கும் பொது என வைத்தார் வள்ளுவர். ஈருயிரும் ஒருயிர் ஆன உயர்நிலையிலேயே துணை பேசப்பட்டுள்ளது எனத் தம் நூலில் தெளிவாகக் கூறியுள்ளார். புதுமைப் பெண் என்னும் பாரதியமும் குறளோவியமும், குடும்ப விளக்கு என்னும் பாவேந்தரியமும், பெண்ணின்

பெருமை என்ற திரு.வி.க. இயக்கமும், பெண் மதிமாலை முதலாம் வேத நாகரிகமும் கோதைத் தீவு முதலாம் பெண்ணியப் படைப்புகளும் தந்தை பெரியார் முதலாம் பெருமக்கள் பெண்ணிய உழைப்புகளும் வள்ளுவ ஞாயிற்றின் ஒளிக்கதிர்களாகத் திகழ்ந்தவைகள் என்பர். அடங்கி ஒடுங்கி வாய்பேசாது உரிமையின்றி வாழும் பெண்ணுக்கே இவர்கள் பாராட்டி பரிசாகத் தெய்வமாக்கினார் என்பன ஒப்புக் கொள்ளக்கூடியனவேயாகும்.

**பரத்தையர் நிலை**

"தந்நலம் பாரிப்பார் தோயார் தகை செருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்"

ஆடல், பாடல், அழகு இனிய பேச்சு என்னும் பொய்த் தலைமையில் சிறப்புற்று விலைமகளிர் பரப்பக்கூடிய அற்ப இன்பத்தைத் தன் நற்பெயரையும், புகழையும் பரப்ப விரும்புவோர் வெறுப்பர்.

இவ்விதம் விலை மாதர்களின் இழிநிலையை வள்ளுவர் கூறுகிறார். இக்காலப் புதினங்கள் விலைமாதர்கள் உருவாவதற்குப் பல்வேறு காரணங்கள் கற்பிக்கின்றன. பரத்தமை உருவாக்கப்படுகிறது. இயற்கையாக உருவாவதில்லை.

அனுராதா ரமணின் "முத்தமிட நேரமில்லை" அம்சா தனகோபாலின் "எண்ணத் தேரில் அவள்" வாசந்தியின் "நிஜங்கள் நிழலாகும்" போது முதலிய மூன்று புதினங்களும் பொதுமகளிர் ஆகிவிடும் பெண்களைச் சுற்றி சுழலும் கதைகளாகும்.

திரைப்பட நடிகையாக வேண்டும் என்ற வேட்கையில் தன் ஊருக்கு வந்த நாடகக் குழுவினருடன் கணவனுக்குத் தெரியாமல் சென்னைக்குச் சென்றுவிடும் குடும்பப்பெண் ஒருத்தி நடிகை ஆவதற்காகவும், வயிற்றுப் பாட்டிற்காகவும் விலைமகளாக மாறிவிடுவதை வெளிப்படுத்தும் கதை "முத்தமிட நேரமில்லை".

தன் அன்னை இறந்த நேரத்திலும் தன்னை உறவுக்குக் கட்டாயப்படுத்தும் கணவனின் கொடுமையைப் பொறுக்காதும். பின்னர் அவன் மேற்கொள்ளும் ஈனச்செயலை பொறுக்காதும் வீட்டைவிட்டு வெளியேறிவிடும் பெண்ணொருத்தி பின்னர் வாழவழி தெரியாது விலைமகளாக மாறிவிடுகிறாள் என்பதையும் சுட்டிச் சொல்லுகிறது. "எண்ணத்தேரில் அவள்" என்னும் புதினம்.

சிறுவயதில் காணாமல் போகும் சிறுமியரும் ஏமாற்றப்படும் பெண்களும் எவ்வாறு விலைமாதர்கள் ஆக்கப்படுகின்றனர். எவ்வாறு அத்தொழிலை மேற்கொள்கின்றனர் என்பதை விளக்குவது "நிஜங்கள் நிழலாகும் போது" என்னும் புதினம்.

இப்பரத்தமை நிலையை வள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கின்றார்.

"அன்பின விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இனிசொல் இழுக்குத் தரும்."



என்ற குறளில் அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொதுமகளிர் பேசுகின்ற இனியசொல் ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் என்கின்றார். மேலும் அப்பரத்தையை நாடிச் செல்வது மனைவிக்குச் செய்யும் துரோகம் என்று இடித்துரைக்கின்றனர்.

"விரிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்"

தம்மை நல்லவர் என்று நம்பும் இல்லாளிடம் நம்பிக்கைத் துரோகமாகிய தீமை செய்து நடப்பவர் செத்தவருக்குச் சமம் என்கிறார் வள்ளுவர்.

கணவனைத் தெய்வமாகக் கருதும் பெண்களுக்குச் செய்யப்படும் கொடுமையே இவ்வாறு கூறுகிறார் வள்ளுவர்.

"அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு"

அவனது உடலுடன் இயைந்து வாழ வேண்டுமாயின் இறைவனின் அன்பு அவனுடன் அவன் வாழ்வுடன் இணைந்து செயல்பட வேண்டும். பொதுப்பட்ட முறையில் மனிதனைப் பற்றி மட்டுமே ஆசிரியர் இங்குக் குறிப்பிட்டதாகத் தோன்றவில்லை. இல்வாழ்க்கையைக் குறித்தே இல்லறவியலில் கூறுகையில் ஆண் பெண் ஆகிய மனிதரைக் குறித்தும் இக்குறள் குறிப்பிடுகிறது எனக் கூறஇடமுண்டு.

"என்போடு இயைந்த" எனும்போது ஆண் பெண் இருவரின் இல்வாழ்க்கையையும் ஆசிரியர் குறிப்பிடுகின்றனர். நாம் விவிலியத்தை நோக்குங்கால் பின்வரும் செய்தி கிடைக்கிறது. ஆதி மனிதனுடைய விலாவினின்று எலும்பொன்றை எடுத்து அதை ஒரு பெண்ணாகச் செய்து அவளை ஆதாமின் முன் நிறுத்தவே அவன் இவள் 'என் எலும்பினின்று எலும்பாகவும், தசையினின்று தசையாகவும் இருக்கின்றாள்'. ஆணிடமிருந்து தோற்றுவிக்கப்பட்டதால் பெண் எனப்படுவாள்.

இதன் பொருட்டே ஒருவன் தன் தந்தையையும் தாயையும் விடுத்துத் தன் மனைவியோடு சேர்ந்து கொள்வான். இருவரும் ஒரே உடலாயிருப்பர் என்றான் கடவுள். ஆதி மனிதனின் விலா எலும்பினின்று பெண்ணை உருவாக்கினார் என்பது நகைப்புக்கிடமாயினும் இதில் உருவமாகச் சொல்லப்படும் கருத்தை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். ஆணும் பெண்ணும் எந்த அளவுக்கு ஒன்றாகின்றனர். அவர்களுடைய வாழ்க்கை இதயத் தொடர்புடையதாய் அன்போடு இயைந்ததாய் இருத்தல் வேண்டும் என்ற கருத்தை உணர்த்தவே இவ்வுருவகம் கையாளப்படுகிறது.

எலும்பினின்று எலும்பு தசையினின்று தசை என்று விவிலியம் கூறுவதன் பொருள் இதுவே. "இயேசு கிறிஸ்துவிடம் அவரது எதிரிகளான பரிசேயர் வந்து எக்காரணத்திற்காகவாவது ஒருவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா? என்று கேட்டனர். அதற்கு இயேசு படைத்தவர் தொடக்கத்திலேயே ஆணும் பெண்ணுமாய்ப் படைத்தார் என்று நீங்கள் படித்ததில்லையா? என்றார். அப்படியானால் முறிவுச் சீட்டு கொடுத்து

மனைவியை விலக்கிவிடும்படி மோசே கட்டளையிட்டது ஏன்? என்று வினவ அதற்கு இயேசு உங்கள் முரட்டுத் தனத்தின் பொருட்டே உங்கள் மனைவியரை விலக்கிவிட மோசே அனுமதி அளித்தார்" என்றார்.

இதன்மூலம் பெண் ஆணுக்கு அடிமை அல்ல என்பதையும் ஆண்களால் அடிமைப்படுத்தப்படுகிறாள். அடக்குமுறைக்கு ஆட்படுத்தப்படுகிறாள் என்றும் தெரிகிறது.

வள்ளுவரது பார்வையில் பரத்தையர் பிணத்திற்குச் சமமாகவே காணப்பட்டனர்.

எனவேதான்

"பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று"

என்ற குறள் மூலம் பொருளையே விரும்பும்போது மகளிரின் பொய்யான தழுவுதல் இருட்டறையில் தொடர்பு இல்லாத ஒரு பிணத்தைத் தழுவியது போன்றது என்ற கருத்தினைத் தெளிவுபடுத்தி உள்ளது. மேலும்,

"பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்"

என்ற குறள் மூலம் கிடைக்கக்கூடிய பயனை அளந்து பார்த்து நற்பண்பு இல்லாவிடின் பண்புள்ளவர்போல் தங்களைக் காட்டிக் கொள்ளும் மகளிரால் தமக்கு மெய்யான நன்மை வராது என்றுணர்ந்து அவர்களோடு சேராது விடுக என்று ஆண்மகனுக்கு ஆணை இடுகின்றனர்.

வள்ளுவர் தன் குறள்களில் பரத்தையரைப் பொது மகளிர் என்று குறிப்பிட்டுள்ளது திண்ணம். இவ்வாறு பெண்கள் பரத்தமை நிலையை மேற்கொள்ளாமல் கற்புடைய பெண்ணாகவும் இருத்தல் வேண்டும் என்றும் அதனாலேயே பெண்களின் கடமையாகவும் தன் குறட்பாக்கள் மூலம் கூறியுள்ளார்.

"ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்பதால் பெண் நல்ல துணையானால் குடும்பமும், வீடும், நாடும் சிறக்கும் என்ற கருத்திலும் பெண்களை வலியுறுத்தினாரோ?" என எண்ணத் தோன்றுகிறது.

மக்கட்பேறு

மகளிர் தங்கள் வாழ்வில் புதல்வரைப் பெற்று வாழ்வதே மிகச் சிறப்பாகவும் வாழ்வின் நோக்கமாகவும் கொண்டிருந்தனர். இல்வாழ்க்கைக்கு பொலிவினைத் தருவது நன்மக்கட் பேறாகும் மனைவியின் மாண்பு வீட்டிற்கு மங்கலமாகும். அம்மாண்புக்கு அணிகலமாகத் திகழ்வது நன்மக்கட் பேறாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"



சங்ககால மக்கள் திருமணப் பிணைப்பாவது மக்களை ஈன்று அவர்களை நன்முறையில் வளர்க்கும் நோக்கத்தோடும் நடைமுறை விதிப்படியும் பொதுமக்கள் கருத்துக்கிணங்கவும் சமயக் கொள்கைப் படியும் ஒருவனையும் ஒருத்தியையும் அவர்தம் வாழ்நாள் முழுவதும் ஒன்றுபடுத்துவதாகும் என்று நம்பினர். இவ்வுண்மை மக்கட்பேற்றினையும் அதன் இன்றியமையாமையையும் உணர்த்துகின்றது. இதனால்தான் சங்ககாலத்தில் மக்கட்பேறு பெறமுடியாத பெண் தன் கணவனுக்கு மறுமணம் செய்து வைக்கின்றாள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. பெண்ணொருத்தி புதல்வரைப் பெறாதபோது தலைவன் தனது தகுதிக்கு ஏற்ற குலப்பிராட்டியை திருமணம் செய்துகொண்டு வந்தான். தலைவியானவள் அந்தப் பெண்ணை விளக்கு முதலிய மங்கலப் பொருட்களோடு எதிர்சென்று வரவேற்றாள். தனது தங்கையாகக் கொண்டு மகிழ்ந்தாள்.

1. பழைய தமிழ்ச் சான்றோர் மக்கட்பேறு கருதித் தலைவன் இரண்டாவது முறையாகத் திருமணம் செய்து கொள்ளல் முறையே என்றனர்.

2. அத்திருமணத்தைச் சிறந்த குலமுடைய புதல்வனைப் பெறும் பொருட்டு இரண்டாம் முறையாகக் கணவன் திருமணம் செய்து கொள்வதைக் குலப்பிராட்டியாகிய தொன்முறைக் கிழத்தியர் உவந்து ஏற்றுக்கொள்வர் என்பர்.

3. செவிலி ஈன்ற தாயிடம் தலைவியின் குடும்ப வாழ்வைப் பெருமைப்படக் கூறுகிறாள். அவளது வாழ்வில் எல்லையில்லாப் பெருமகிழ்ச்சியை தரும் புதல்வனைப் பெற்று வாழ்வதைக் குடத்திலிட்ட விளக்குபோல நாற்றிசையும் நல்லொளி பரப்பித் திகழ்வதற்கு ஏதுவான மகப்பேறு பெற்றாள் என்றனர். இல்லற ஒழுக்கத்தின் இன்பம் மகளிர் புதல்வனைப் பெறுவதே என்று செவிலி கூறுகின்றாள்.

"மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்கு தகைசால் புதல்வர்"

கடவுட் கற்பொடு விளங்கும் குடும்பத்திற்கு விளக்காகிய மகளிர் மகனைப் பெற்றெடுப்பவள். புகழ் மிகுந்த சிறப்பினை உடைய நல்ல மனைவி என்று தாய்மையைப் பாராட்டுகிறார் இளநாகனார். கற்போடு பொருந்திய பிள்ளைகளைப் பெறும் தாயாரை வாழ்த்துகிறார் ஆலங்குடி வங்கனார்.

இங்கு புதல்வரைப் பெற்ற மகளிரே போற்றத்தக்கவர்கள் என்றனர். மக்கட் பேற்றினைப் பெறுவது பெண்களின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது.

சங்ககாலச் சமூகத்தை ஒட்டிய சூழலில் எழுந்த வள்ளுவமும் பெண்மை, தாய்மை, இறைமையுள் பூரணத்துவம் பெறுகிறது என்பதையே வலியுறுத்தியுள்ளது. ஆணுக்கு அத்தகைய இலக்கணம் உரைத்தாரில்லை.

வால்காவிலிருந்து கங்கை வரை என்னும் நாகுல சாங்கிருத்தியாயன், மனிதன் தாய்வழிச் சமூகத்தில் பெற்ற கட்டுப்பாடும், கட்டுப்பாடு இல்லாது

சுதந்திரமாகக் காலம் கடத்த உரிமை பெற்றுக் கொண்டிருக்கிறான். அதற்கு அவனுடைய உடல்வலிமை இடம் தந்திருக்கிறது என்று கூறுகின்றார். அதைப் போலவே இந்தியச் சமூக மரபியல் ஆண்களின் வாழ்க்கை அமைய, வள்ளுவர் காலச் சமூகத்திலும் அதன் தாக்கமாகத் தாய்வழிச் சமூக மரபே பின் தொடர்ந்து வருகிறது.

எனவே பெண்ணே அனைத்துப் பழிபாவங்களுக்கும் ஆட்பட்டுக் கடமையாற்றி இருக்கிறாள்.

நல்ல குடும்பத்தை சமூகத்தை உருவாக்கும் பொறுப்பும் பெண்ணிடமே இருந்திருக்கிறது. அந்தப் பொறுப்புள்ள மெல்லியாளுக்கு ஆபத்துச் சூழாத வகையிலே வெறும் பாதுகாப்புத் தரும் காவலனாக ஆண் நிற்கிறான். பெண் சீரான குடும்பத்தை, மக்களை, சமூகத்தை அமைக்கின்ற கட்டுப்பாடுடையவளாகத் திகழ்கிறாள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னுமிடத்துக் கொழு கொம்பான கணவனைக் காதலனாக மட்டுமின்றிக் காவலனாகவும் கொண்டு தொழுது பாராட்டித் தொழுவி வாழ்பவளே சக்தி படைத்தவளாக முடியும் என்ற அனுமானம் இங்கு சிந்திக்கத்தக்கதாகிறது. கொழுதல் என்பது அமைதியாக சலனமற்ற பெண்ணின் வாழ்விற்கு அரணாகிறது. எனவே, கட்டுப்பாட்டை மறந்த ஆண் இருந்தாலும் தவறில்லை. பெண் இருந்துவிட்டால் நாகரிக நல்ல சமூகம் அழிவுறும் என்ற அறிவியல் வாழ்வே வள்ளுவத்தில் பாராட்டப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலை.

கணவனுக்கு அடங்கி நடக்கும் தன்மையும், அவன் ஏவலுக்கு பணிவிடை செய்யும் பக்குவமும் வள்ளுவரால் பெண்ணின் கடமையாகப் பேசப்பட்டன. ஆனால் அது இன்றைய சமூகத்திற்கும் ஏற்புடைமையாதலால் பெண்ணியல் பற்றிய செய்திகளில் அன்றைய மற்றும் இன்றைய தன்மையை வளர்த்துக் கொள்ளலாம்.

பரத்தமை (பொது மகளிர்) என்பது ஈடுபடும் பெண்களை மட்டும் பாவப் பொருளாக்குகிறது. அப்பெண்களை நாடாதீர் என ஆணுக்கு அறிவுறுத்துகின்றாரே அன்றி அத்தகு பரத்தமையை நாடும் ஆண்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படவில்லை. இன்று எய்ட்ஸ் பற்றிய கருத்தூட்டும் சமூக நலன் என்று தெரியவில்லை என்பதைவிட வணங்கா முடிவுகளாய் எப்படியேனும் இப்பிறப்பைத் தீர்ப்பதாய் விட்டேத்தியாய் வாழ்ந்த ஆண்களின் நிலை புரிகிறது. பெண்களுக்கு வலியுறுத்தப்பட்ட காரணம் பலதலைமுறைகளாக அத்தீமை தொடரும் என்பதாலும் இருக்கக்கூடும்.

வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தைப் போல வள்ளுவர் ஆண்களுக்குத் தனி அதிகாரம் வைக்கவில்லை. இருவர் செய்யும் குற்றத்திற்கு ஒருவர் மட்டும் தன்னுடைய மரியாதையை இழக்கும் நிலை இன்றும் நீடித்து வருகிறது.



மக்கட் செல்வத்தினைப் பெற்றெடுப்பது குல மகளிரின் தலையாய கடமையாகக் கருதப்பட்டது. அனைத்து நிலையிலும் பெண்கள் ஆணுக்கு அடங்கி வாழும் நிலையே முறைப்படுத்தப்பட்டுள்ளது. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதற்காகவும் இருக்கக் கூடும். எனவே பெண்ணியத்தின் பெருமையானது காலத்தில் மறைக்கக்கூடியதோ அல்லது தவிர்க்கப்படக்கூடியதோ அல்ல. இது ஒரு வரலாற்றுச் செய்தியாகும்.

# 18. சுவாமி விவேகானந்தர் கருத்தில் பெண்கள்

நமது பாரதத் தாய் பெற்றெடுத்த தவச் செல்வர்களுள் ஒருவர் சுவாமி விவேகானந்தர். அவர் அறிவும் ஆற்றலும் விவேகமும் ஒருங்கிணைந்தவர். பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அந்த நாடுகளின் அரிய கருத்துக்களைக் கொண்டு இந்தியாவை முன்னேற்ற எண்ணினார். பாரதியாரும் அவ்வண்ணமே உடையவர் என்பதை வலியுறுத்த வரும் கருத்தாவது,

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்பது பாரதியின் விருப்பம் அதேபோல், பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு, சுதந்திரத்துடன், கல்வி அறிவுடையவர்களாகவும் திகழவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் எண்ணினார். மேலைநாட்டுப் பெண்களைப் போல் இந்தியப் பெண்களை உயர்த்த சுவாமி விவேகானந்தர் பாடுபட்டார்.

## மேலைநாட்டுப் பெண்களும் இந்தியப் பெண்களும்

மேலைநாட்டுப் பெண்களின் பழக்கவழக்கங்கள் அனைத்தையும் இந்தியப் பெண்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அது நமது நாட்டுப் பண்பாட்டைப் பாதித்து மாற்றிவிடும். ஏனவே நம் நாட்டு பண்பாட்டிற்கு ஊறுவிளைவிக்காமல், நம்நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏற்ற நல்ல கருத்துக்களை மேலை நாட்டுப் பெண்களிடம் இருந்து இந்தியப் பெண்கள் பின்பற்ற வேண்டுமென்று விவேகானந்தர் கூறுகிறார். அப்போது இந்தியப் பண்பாடும் பாரம்பரியமும் காப்பாற்றப்படும்.

## பெண்களுக்குச் சுதந்திரம் வேண்டும்

மேலைநாட்டுப் பெண்களுடன் ஒப்பிடுகையில் இந்தியப் பெண்கள் மிகவும் அடிமைத்தனத்தால் பின்தங்கி உள்ளதைக் கண்டு சுவாமி விவேகானந்தர் மனம் நொந்தார்.

"அமெரிக்க நாட்டுப் பெண்கள் சுதந்திரமாகவும்,கற்றறிந்தவர்களாகவும், சுகமாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் உள்ளனர். அரசியல், சமுதாய, நகரப் பணிகளில் ஈடுபடுகின்றனர். பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெண்கள் நிறைந்துள்ளார்கள். ஆனால் நம் நாட்டிலோ பெண்களை வீதிகளில் கூடக் காணமுடியாதென்கிறார்."

வீட்டு வேலைகளை மட்டும்தான் பெண்களால் செய்யமுடியும் என்ற தவறான எண்ணத்தால் பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடவில்லை. மேலும் கற்பு ஒழுக்கத்திற்கு அதிக முக்கியத்துவம் சுதந்திரம் குறைந்தது.

மனுதர்மம் பெண்களைப் போற்றவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த,

எங்கே பூஜிக்கப்படுகிறார்களோ அங்கே தேவர்கள் மகிழ்கிறார்கள்
இதை அமெரிக்கர்கள் பின்பற்றுகிறார்கள். ஆனால் நாம் நம்
பெண்களை இழிவாகவும், தாழ்ந்தவர்களாகவும் கருதுகிறோம். இதன்
வாயிலாக நாம் மிருகங்களாகவும், அடிமைகளாகவும்,
பின்தங்கியவர்களாய் முயற்சியற்றவர்களாகவும், ஏழைகளாகவும்
இருக்கிறோம்.

என்று சுவாமி விவேகானந்தர் இந்தியப் பெண்களின் நிலை கண்டு வருந்துகிறார்.

பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்பதை திரு.வி.க. கூறுகையில், பெண்களுக்கு விடுதலை நீர் இல்லையென்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை என்றும் மேல்நாட்டுப் பெண்கள் உரிமைகளைப் பெற முயல்வதைப் போல் கீழ்நாட்டுப் பெண்களும் தங்கள் நாகரிகத்திற்கு ஏற்ற உரிமைகளைப் பெறவேண்டும் என்று கூறுகிறார்.

பாரதியார், பெண்களுக்குச் சுதந்திரம் இல்லையேல் ஏனைய விடுதலைகளில் முழுமையும் அர்த்தமும் இருக்காது என்று கூறுகிறார். மேலும் பெண்களுக்கு வேண்டிய குணங்களாக,

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்"

என்று பாடியுள்ளார். இதன் வாயிலாக நாடு முன்னேறப் பெண்களுக்குச் சுதந்திரம் அவசியம் என்பதை அறிகிறோம்.

## பெண்களுக்கு அறிவு வேண்டும்

இந்தியப் பெண்களின் அடிமைத்தனத்திற்கு முக்கியக் காரணம் அவர்கள் கல்வியறிவு பெறாமையே என்பதை அறிந்து சுவாமி விவேகானந்தர் மேலைநாட்டுப் பெண்களைப் போல் இந்தியப் பெண்களும் அறிவு பெறவேண்டும் என்கிறார். அறிவு பெறுவதற்குத் தூய வாழ்க்கையை இழக்க வேண்டுமென்றால் அதற்கு நம் பண்பாடு இடம் கொடுப்பதில்லை. அத்தகைய அறிவும் நமக்குத் தேவையில்லை என்று கூறுகையில்,

தீமையை ரோஜாப் பூக்களால் மறைத்து அதை நன்மை என்ற நீங்கள் வற்புறுத்துவதை வெறுக்கிறேன் என்று மேலைநாட்டு நிலையைக் கண்டிக்கிறார். இந்தியப் பெண்கள் படித்தவர்களில்லை என்றாலும் ஒழுக்கம், தூய்மை போன்றவற்றில் சிறந்தவர்கள் என்பதை சுவாமி விவேகானந்தர் ஒப்புக் கொள்கிறார்.

'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்று கருதிய சமுதாயத்தை பாரதியார் கண்டிக்கிறார். பெண்கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறுகையில் பெண்கள் வெளிநாட்டிற்குச் சென்று படித்து வரவேண்டுமென்று பாரதி அறிவுரை பகர்கின்றார். மேலைநாட்டுப் பெண்களின் வளர்ச்சி முறையில் ஆர்வமும், ருஷ்யப் புரட்சியில் ஈடுபாடும் கொண்டு பெண்கள்

கல்வியறிவு பெற்று பணிக்குச் செல்வதை பாரதியாரும் திரு.வி.க. வும் ஆதரிக்கின்றனர்.

நாடு முன்னேற இந்தியப் பெண்களும் மேலைநாட்டுப் பெண்களைப் போல கல்வியறிவு பெறவேண்டும் என்பது சுவாமி விவேகானந்தரின் சிந்தனையாகும்.

### இல்லறத்தில் பெண்கள்

நாட்டிற்கு நாடு பழக்க வழக்கங்கள் பண்பாடு, நாகரிகம் போன்றவை மாறுபடுகின்றன. இதை மற்ற நாடுகள் குறைகூறக் கூடாது. மேலை நாட்டிற்கும் இந்தியாவிற்கும் குடும்ப நிலையிலும் மாற்றம் உண்டு என்பதை சுவாமி விவேகானந்தர் சுட்டிக் காட்டுகிறார்.

> மேலைநாடு, பெண்மையின் இலட்சியத்தை மனைவியில் கண்டது கீழைநாடு பெண்மையின் லட்சியத்தைத் தாய்மையில் கண்டது. மேலை நாட்டு இல்லங்களில் மனைவி ஆட்சி செய்கிறாள். தாய் அவளுக்கு அடங்கி நடக்கவேண்டும். ஆனால் இந்தியாவில் தாய் ஆட்சி செய்கிறாள் மனைவி அவளுக்கு அடங்கி நடக்க வேண்டும்.

இதுபோல் மேலைநாட்டுக் கருத்துக்கள் நமக்கு மாறுபட்டு இருந்தாலும் அதில் உள்ள நல்ல பயனுடைய கருத்துக்களை எடுத்துக்கொண்டு வாழ்வில் பின்பற்ற வேண்டும் என்பது சுவாமி விவேகானந்தரின் அறிவுரையாகும். மேலும்,

இந்தியப் பெண்கள் தாய் என்ற சிறந்த ஸ்தானத்துடன் அவள் ஒரு மனைவி என்ற ஸ்தானத்தையும் சேர்த்து வளர்க்க வேண்டும். இதுபோல் மேலைநாட்டுப் பெண்களும் மனைவியின் பண்புடன் இந்தியப் பெண்களின் தாய்மைப் பண்பையும் சேர்த்துக் கொள்வது நல்லது.

இதனால் இல்லறம் சிறக்க வாய்ப்பு ஏற்படும் என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்தாகும்.

### நாட்டின் முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு

சுவாமி விவேகானந்தர், ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பதற்குரிய மிகச் சிறந்த கருவி. அந்த நாடு, பெண்களை எப்படி மதிக்கிறது என்பதை அறிவதாகும் என்று கூறுகிறார். இதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உயிர்நாடியாக இருப்பவர்கள் பெண்களே என்பதை அறிகிறோம்.

அமெரிக்கா முன்னேற்றம் அடைந்ததற்குக் காரணம் அந்த நாட்டுப் பெண்களே. அவர்கள் ஆண்களைவிட மிகச் சிறந்த பண்புடையவர்களாக இருக்கின்றனர். தங்களை உயர்த்திக்கொள்ள ஏற்படும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்கின்றனர். அமெரிக்கா, பெண்களையும் பாமர மக்களையும் முன்னேற்றுவதில் தனி கவனம் செலுத்துவதால் சுவர்க்க பூமியாகக் காட்சியளிக்கிறது.



அங்கு ஒவ்வொரு இயக்கத்திற்கும் உயிர்நாடியாகப் பெண்கள் திகழ்கின்றனர். தேசியக் கலாச்சாரத்தின் பிம்பங்களாக இருப்பவர்கள் பெண்களே ஆவர். அதைப்போல நமது நாட்டுப் பெண்களும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி முன்னேறினால் நாடு விரைவில் வளர்ச்சி அடையும் என்பது சுவாமி விவேகானந்தரின் சிந்தனையாகும்.

கணவன், தன் மனைவியிடம் வேறொரு பெண்ணைப் பற்றி புகழ்ந்து கூறினால் மனைவிக்கு பொறாமை ஏற்படும். இது உலக இயல்பு, இதை உணர்ந்த பாரதியார் சீனநாட்டுப் பெண்ணான சியுசின் பற்றியும் துருக்கி நாட்டுப் பெண்களைப் பற்றியும் எடுத்துக்கூறி அவர்களைப் போல நமது பெண்களும் வாழ்வில் முன்னேற அறிவுரை கூறுகிறார்.

### இந்தியப் பெண்களின் சிறப்புகள்

இந்தியப் பெண்கள் மற்ற நாட்டுப் பெண்களைவிட ஒழுக்கம் கட்டுப்பாடு போன்றவற்றில் சிறந்தவர்கள். இவை அவர்களின் இரத்தத்தில் ஊறிய பண்புகளாகும். இவற்றைச் சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு பாராட்டுகிறார்.

இந்தியப் பெண்களிடம் மட்டும்தான் ஒழுக்கம், சேவை மனப்பான்மை, அன்பு, கருணை, அகமலர்ச்சி, பக்தி போன்றவற்றைக் காணமுடியும். பிற நாட்டுப் பெண்களிடம் இத்தகைய சிறப்பு அம்சங்களைத் தான் காணவில்லை என்கிறார். மேலைநாட்டுப் பெண்களைப் பார்த்தால் பலவேளைகளில் பெண்களாகவே தெரிவதில்லை. அவர்கள் ஆண்களின் நகல் போலவே காட்சியளிக்கிறார்கள். இந்தியப் பெண்களிடம் மட்டும்தான் கண்களுக்கு இதம் தரும் நாணம், பணிவு போன்ற பெண்மைப் பண்புகளைக் காணமுடியும் என்று கூறுகிறார்.

பெண்களின் பண்புகளைத் தொல்காப்பியர் காட்டுமிடத்து,

> "அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
> நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"

என்ற நூற்பாவின் மூலம் விளக்குகிறார்.

இத்தகைய சிறப்புப் பண்புகளைக் கொண்ட நம்நாட்டுப் பெண்கள் இன்னும் உயரவில்லையே என்று சுவாமி விவேகானந்தர் வருந்துகிறார். அவர்களை முன்னேற்ற சமுதாயம் எந்த முயற்சியும் செய்யவில்லை என்று சமுதாயத்தை குறை கூறுகிறார். பெண்களுக்கு மட்டும் சரியான கல்வி கொடுக்கப்படுமானல் அவர்கள் லட்சியப் பெண்களாக உருவெடுப்பார்கள் என்று தனது நம்பிக்கையைத் தெரிவிக்கின்றார்.

'பொறுமை கடலினும் பெரிது' என்பதற்கேற்ப பெண்களுக்குப் பொறுமை மிகவும் அவசியம். பொறுமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவள் சீதை, சீதையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழவேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் பெண்களுக்கு அறிவுறுத்துகிறார். செயலால் உன் சக்தியைக் காட்டு என்கிறது மேலைநாடு. இந்தியாவோ பொறுமையின் மூலம் உன்சக்தியைக் காட்டு என்கிறது.

இந்தியா பொறுமையால் பலவற்றைச் சாதித்து உள்ளது என்பதை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன. பொறுமையை காந்தியடிகள் தனது வாழ்வில் கடைப்பிடித்தது மட்டுமல்லாமல், இந்திய மக்களையும் கடைப்பிடிக்கச் செய்து நாட்டிற்கு விடுதலைப் பெற்றுத்தந்தார். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் காட்டிய சாத்வீக எதிர்ப்பு முறையை நம் நாட்டுப் பெண்களும் கடைப்பிடித்தொழுக வேண்டும் என்று பாரதியார் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

எந்தச் செயலையும் சரிவரச் செய்ய பொறுமை மிகவும் அவசியம். பொறுமையால் எதையும் சாதிக்கமுடியும்.

**தாய்க்கும் தாரத்திற்கும் உள்ள வேறுபாடு**

தாய் தன் குழந்தை நல்லவனாக இருந்தாலும் தீயவனாக இருந்தாலும் அவன் மீது மாறாத அன்பு கொள்கிறாள். தன் குழந்தைக்காகத் தனது உயிரையும் விடக்கூடிய தன்மை கொண்டவள். ஆனால் மனைவியோ சின்ன பிரச்சனைக்கும் விவாகரத்தைத் தேடி நீதிமன்றம் செல்கிறாள். இதனால் மனைவியுடன் தாயை ஒப்பிட முடியாது என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

கணவனை வெறுக்கும் மனைவியைக் காணலாம். ஆனால் மகனை வெறுக்கும் தாயை காணமுடியாது. தாய் என்பவள் எதையும் சகித்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டவள்.

**இந்தியாவில் தாயன்பு**

இந்தியாவைப் போல் மேலை நாடுகளில் தாயன்பு அதிகம் இருப்பதில்லை என்பதற்கு சான்றாக சுவாமி விவேகானந்தர்,

> துறவிகள் அனைத்துப் பெண்களையும் 'அம்மா' என்றுதான் அழைக்கவேண்டும். இதே வழக்கத்தில் மேலைநாட்டுப் பெண்களை அழைத்தால் அவர்கள் அதைக் கேட்டுத் திடுக்கின்றனர். ஏன் என்றால் அங்கு தாய் என்ற சொல்லுக்கு முதியவள் என்று பொருள். அதனால் அப்படி அழைப்பதை அவர்கள் விரும்புவது இல்லை. மேலை நாடுகளில் ஒருவருக்கொருவர் பாச உணர்வு இல்லாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்று நிலைநாட்டுகிறார்

மேலை நாடுகளில் தாய்தான் சிறந்தவள் என்று நினைக்கும் மகனும் இல்லை. அதுபோல் மகனுக்காக உயிரைவிடும் தாயையும் தான் அங்கு காணவில்லை என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

**இந்தியப் பணியில் மேலைநாட்டுப் பெண்**

இந்தியப் பெண்களின் கல்விக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டவர்களில் மேலை நாட்டினரின் பங்கு சிறப்பு வாய்ந்ததாகும். அயல்நாட்டில் பிறந்து இந்தியப் பெண்களுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களில் நிவேதிதா, அன்னை தெரசா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அதில் சகோதரி நிவேதிதாவின் பணிகளைப் பற்றி இங்கு காண்போம்.



நிவேதிதா 1867–ஆம் ஆண்டு அக்டோபர் 28–ஆம் நாள் இங்கிலாந்தில் பிறந்தார். சுவாமி விவேகானந்தரின் சொற்பொழிவுகளை கேட்டு அவரை தனது குருவாக ஏற்றுக்கொண்டார். அவரது அழைப்பை ஏற்று இந்தியாவின் தலையான பிரச்சனை கல்வி என்பதை உணர்ந்து இந்திய மக்களுக்குக் கல்வியளிப்பதில் ஆர்வம் கொண்டார். கல்கத்தாவில் பெண்களுக்கான பள்ளியை நிறுவினார். தனது பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் இந்திய மக்களைக் கவர்ந்தார். இதனால் பல தேசத் தலைவர்களுக்கு அறிமுகமானார். இந்திய மக்களிடம் ஒற்றுமையை வலியுறுத்தி விடுதலை உணர்வைத் தூண்டினார். இளைஞர்களை ஒன்றுதிரட்டி சமூகப் பணிகள் செய்தார்.

நிவேதிதா, பாரதியாருக்குப் பெண்களின் பெருமையை எடுத்துக்காட்டி பெண்களுக்கு ஏற்றம் தரும் கவிதைகள் புனையத்தூண்டினார். மேலும் பாரதத்தாய் சங்கிலிகளால் கட்டப்பட்டுக் கண்முன் நிற்பதாய்க் காணும் அளவுக்கு உணர்ச்சி வேண்டும். அப்படிக் கண்டால் தான் சங்கிலியை எப்படியாவது நீக்க வேண்டும் என்ற உணர்ச்சி வரும் என்று விடுதலை உணர்வை பாரதியாருக்கு தூண்டினார். பாரதியாரின் ஞான குரு நிவேதிதா ஆவார்.

இந்திய மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டதால் நிவேதிதாவின் உடல் நலிவுற்றது. 1911–ஆம் ஆண்டு அக்டோபர் 13–ஆம் தேதி தன் இன்னுயிரை நீத்தார்.

**இந்தியப் பெண்களை உயர்த்த வழிகள்**

பெண்கள் முன்னேற்றத்தின் அவசியத்தை உணர்ந்த அறிஞர்கள் அதற்கான வழிகளை ஆராய்ந்து கூறினர். பல வகையான உரிமைகளைக் கொடுத்து பெண்களின் முன்னேற்றத்திற்குத் துணைபுரிந்தனர். பெண்களுக்குக் கல்வியையும் விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தி அவர்களின் அறியாமையைப் போக்கப் பாடுபட்டனர். பெண்கள் மன உறுதியும் தன்னம்பிக்கையும் அடைய அவர்களுக்கு பொருளாதாரச் சுதந்திரம் தேவை என்பதை வலியுறுத்தினர்.

**சொத்துரிமை வழங்குதல்**

தாய்வழிச் சமுதாயம் இருந்த காலத்தில் பெண்களுக்கு பெருமதிப்பு இருந்தது. பெண்களை உயர்வாக எண்ணினார். சொத்துக்கள் பெண்களுக்கே இருந்தது என்பதை,

> எகிப்திய ஆவணங்களின் மூலம் அறியலாம். அதில் கணவன் பெயர் காணப்படவில்லை. பில்லோ பீற்றர் என்னும் அரசன் முதலில் பெண்களின் சொத்துக்களில் கணவனின் உரிமையைப் புகுத்தினார். அவர் மனைவி எழுதும் ஆவணங்களில் கணவனும் கையெழுத்திடல் வேண்டும என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்.

ஆண்கள் கடுமையாக உழைத்தனர். ஆண்களின் பணியோடு ஒப்பிடுகின்ற போது பெண்கள் முக்கியத்துவத்தை இழந்தனர். கால்நடை வளர்ப்பு மற்றும் தொழில் மூலம் ஈட்டிய செல்வம் ஆணின் உடைமையானது.

தாய்வழி வாரிசு உரிமை தூக்கி எறியப்பட்டு தந்தைவழி வாரிசுரிமை சமூகத்தில் உருவானது.

இதனால் பெண்களுக்கு சொத்துக்களில் பங்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. அனைத்துத் தேவைகளுக்கும் பெண்கள் ஆண்களையே எதிர்நோக்க வேண்டிய நிலை உருவானது. இதனால் ஆண்களுக்குப் பெண்கள் ஆண்களையே எதிர்நோக்க வேண்டிய நிலை உருவானது. இதனால் ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளானார்கள்.

பெண்களின் போராட்டத்தின் விளைவாக 1956–ஆம் ஆண்டு பெண்களுக்கு சொத்துக்களில் சமபங்கு உண்டு என்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தியாவின் சொத்துரிமை பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகையில்,

> இந்தியாவில் ஆண்களைப்போலவே பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு. ஒரு பெண் தன் வீட்டிலிருந்து லட்சருபாய் கொண்டு வந்தாலும் அது அவளுக்கே சொந்தம். அதில் பிறருக்கு உரிமை இல்லை. கணவன் இறந்த பின்பு அவனுக்கு குழந்தைகள் இல்லை என்றால் அவனது அனைத்து சொத்துக்களும் மனைவிக்கே சொந்தம். இத்தகைய உரிமையை பெண்கள் பெற்றிருந்தனர் என்று கூறுகிறார்.

இந்தியாவில் கணவனை விட்டு பிரிந்த நெறிதவறிய பெண்களும் நீதிமன்றத்தின் மூலம் கணவனிடமிருந்து ஜீவனாம்சம் பெற்று வாழும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார்.

பெண்களுக்கு சொத்துக்களில் உரிமையுண்டு என்றாலும் பெரும்பான்மையான பெண்களுக்கு சொத்துக்கள் கிடைப்பதில்லை. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குவதன் மூலம் சம அந்தஸ்தும், தன்னம்பிக்கையும் பெறுவார்கள் என்பது உறுதியாகிறது.

**வரதட்சணையை அகற்றுதல்**

வரதட்சணைக் கொடுமையால் பெற்றோர்களே, பெண்களைப் பெறுதல் மகா பாவம் என்று கருதும் நிலைக்கு இன்று ஆளாகியுள்ளனர். ஆனால் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையோ,

> 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
> மாதவம் செய்திட வேண்டுமம்மா'

என்று பாடி பெண்ணின் பிறப்பில் மகிழ்ச்சி காணச் செய்கிறார்.

வரதட்சணை என்பது பெண் வீட்டார் ஆண் வீட்டாருக்குக் கொடுக்கும் சன்மானம் அல்லது கைம்மாறு ஆகும். இது பணமாகவோ அல்லது பொருளாகவோ இருக்கும். சமுதாயம் ஆண்பிள்ளைகளைப் பெற்றவர்களை உயர்வாகவும், பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களைத் தாழ்வாகவும் கருதுகிறது. இன்றைய திருமணம் ஆகாத பெண்களின் தீராத தலைவலிகளில் ஒன்று வரதட்சணையாகும்.



பெண்ணைப் பெற்றவன் இந்த மண்ணுக்குள் அடங்கும் வரை அவளை மணந்தவனுக்கு அடிமையாக இருக்க வேண்டும். இதை அறிந்த சுவாமி விவேகானந்தர். 'மகள் என்பவள் இந்தியக் குடும்பத்தில் ஒரு பெரிய பிரச்சனையாகவே உள்ளாள். மகளும், ஜாதியும் சேர்ந்து ஏழை இந்துவை அழித்தே விடுகின்றன. ஏனெனில் அவள் அதே ஜாதியில் மணம் செய்ய வேண்டும். அதிலும் அதே உட்பிரிவில் செய்யவேண்டும். ஆகவே சில வேளைகளில் மகளை மணம் பேசி கொடுப்பதற்குள் தந்தை ஒட்டாண்டியாகி விடுகிறான். ஆணின் தந்தை தன் பிள்ளைக்கு நிறைய வரதட்சணை கேட்கிறான். பெற்றவனோ தன் மகளுக்கு ஒருவனை மணமுடிக்க சில வேளைகளில் எல்லாவற்றையும் விற்கவேண்டியவனாகின்றான் என்று வரதட்சணைக் கொடுமையைப் பற்றி எடுத்துரைக்கிறார். இதிலிருந்து பெண்ணைப் பெற்றவன் வரதட்சணைக் கொடுத்தே ஆண்டியாகி விடுவது புலனாகிறது.

திரு.வி.க. வரதட்சணையைப் பற்றிக் கூறும்பொழுது, பிறந்த குழவி பெண்ணாயிருப்பின் ஐயோ! பெண்ணா! என்று பெற்றோர் மற்றும் சுற்றத்தினர் 'இடி கேட்ட நாகம்' போலக் கலக்க முறுகின்றனர். அறியாமை விலக வேண்டும். 'உலகோம்புந் தாய் நம்பால் பிறந்திருக்கிறாள் என்று அடங்காக் களிபேருவுகை எய்துவோம் என்ற நிலை உருவாக வேண்டும். அப்போதுதான் இந்த நாடு சிறக்கும் என்று கூறுகிறார்.

வரதட்சணைக் கொடுமையால் பல பெண்களுக்குத் திருமணம் என்பது கேள்விக்குறி ஆகிவிடுகிறது. மேலும் மணமான பெண்களும் வரதட்சணை கொடுமையால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இக்கொடுமையால் பல பெண்கள் இறக்கவும் திருமண வாழ்வை இழக்கவும் நேரிடுகிறது. பெண்சிசுக் கொலை உருவாவதற்கு வரதட்சணை முக்கிய காரணமாகும். இக்கொடுமையைத் தடுக்க அரசால் 1961ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

வரதட்சணை பெறாமல் பெண்களை மணமுடித்துக் கொள்ள இளைஞர்கள் முன்வந்தால் நாட்டின் இந்தப் பிரச்சனை அறவே ஒழியும்.

**மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல்**

நம் நாட்டைச் சீரழிக்கும் அழிவுச் சக்திகளில் ஒன்று மூடப்பழக்க வழக்கம் ஆகும். இது அறியாமையில் இருக்கும் பெண்களை அடிமைகளாக மாற்றியது. பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. இதனுடைய தாக்கத்தால் பெண்கள் தைரியம் அற்றவர்களாயினர். இதைப் பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகையில் 'மூடப் பழக்க வழக்கங்களால் இந்த நாட்டுப் பெண்கள் எவ்வளவு தூரம் உயிரற்றவர்களாக, உணர்ச்சியற்றவர்களாக மாறிவிட்டார்கள் என்பதை நீ மேலை நாடுகளில் சென்று அந்தப் பெண்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அறிந்துகொள்வாய்' என்று வெளிநாட்டு பயண அனுபவங்கள் வாயிலாகக் கூறுகிறார்.

இதற்கு ஒருவகையில் ஆண்களும் காரணம் ஆவார்கள். பெண்களை உயர்த்துவது ஆண்களின் கைகளிலேயே உள்ளது. மூடப்பழக்கம் ஒழிய பெண்களுக்குக் கல்வியறிவு வேண்டும். கல்வியறிவால்தான் எதையும் பகுத்தாராயும் திறன் வளரும் என்று கூறுகிறார். சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி கல்வியறிவு இல்லாத பாமர மக்களிடம்தான் இத்தகைய மூடப்பழக்க வழக்கங்கள் இன்றும் அதிகளவில் நிலவி வருகின்றன. இந்த நிலை மாற அவர்களுக்கு கல்வி அவசியம் என்பதை உணரலாம்.

### புதிய இந்தியாவைப் படைப்பதில் பெண்களின் பங்கு

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' உலக இயல்பு. பழமையை மட்டும் பேசிக் கொண்டிருப்பதால் எந்தவிதமான வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்படாது. காலத்திற்கேற்ப மாற்றம் வேண்டும். நாடு நமக்கென்ன செய்தது என்பதை விட நாட்டிற்கு நாம் என்ன செய்தோம்? என்ற வினாவை மனதில் கொண்டு தன்னலமற்ற முறையில் செயல்பட வேண்டும். அப்போதுதான் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டு புதிய இந்தியாவை உருவாக்க வாய்ப்புகள் ஏற்படும்.

புதிய இந்தியாவைப் படைப்பதில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் கருதினார். எதிர்கால இந்தியாவில் 'ரோமானியர்களின் நிர்வாகத் திறமை, அழகை அற்புதமாக ஆராதிக்கின்ற கிரேக்கர்களின் ஆற்றல் ஆன்மீகம் மற்றும் இறையன்பை அடிப்படையாகக் கொண்ட இந்துவின் ஆதார சக்தி இவை கலந்ததாக அந்த இனம் இருக்கும். இவர்களைக் கலந்து ஒரு புதிய நாகரிகத்தை உருவாக்குவோம். இதனைச் சாதிக்க வேண்டியது பெண்களே' என்று கூறுகிறார்.

இதன்மூலம் புதிய அறிவும் ஆற்றலும் பெற்ற சமுதாயத்தை பெண்களால்தான் உருவாக்க முடியும் என்று எண்ணிய சுவாமி விவேகானந்தர் பெண்களின் முன்னேற்றத்தைப் பெரிதும் வலியுறுத்தினார்.

### நாடு முன்னேற பெண்களின் பணி

பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். பெண்களால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை என்பதை அறிந்த சுவாமி விவேகானந்தர், ஆண்களுக்கு பெண்கள் சளைத்தவர்கள் இல்லை. 'அரசியல், நிர்வாகம், எல்லைப்பாதுகாப்பு, நாட்டை ஆளுதல் என்று மட்டுமல்ல, போர்த்திறத்தில் கூட ஆண்களைவிட உயர்ந்தவர்கள் இல்லை என்றாலும் ஆண்களுக்குச் சமமானவர்கள் என்பதைப் பெண்கள் இன்று நிரூபித்துவிட்டார்கள். இந்தியாவை பொறுத்தவரை எனக்கு இதில் சந்தேகம் இல்லை. தாங்கள் ஆண்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை அவர்கள் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நிரூபித்து வருகிறார்கள் என்று கூறுகிறார். சுவாமி விவேகானந்தரின் நம்பிக்கையை மெய்யாக்கும் வகையில் இன்று பெண்கள் நுழையாத துறையே இல்லை என்று கூறுமளவிற்கு அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு சமமாக முன்னேறிவிட்டனர்.

### நாட்டின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்

எந்தச் செயலையும் செய்வதற்கு முன் அந்தச் செயலில் முழுநம்பிக்கையுடன் ஈடுபட வேண்டும். அப்போதுதான் அந்தச் செயல் வெற்றி பெறும். நம்பிக்கையினால் மட்டும் தான் காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை வலியுறுத்த சுவாமி விவேகானந்தர் 'பாரத நாட்டை நம்புங்கள், பாரதத்தின் மதத்தை நம்புங்கள், வலிமையுடன் வாழுங்கள், நம்பிக்கை வையுங்கள்– இந்தியா ஏற்றுக் கொள்வதற்குச் சிறிதே உள்ளது. ஆனால் பிறருக்கு வழங்க உலக மக்களினங்கள் அனைவரிலும் அதிகம் அதனிடம் உள்ளது' என்று கூறுகிறார். ஆண்களும் பெண்களும் நாட்டின் மீது நம்பிக்கையோடு செயல்பட்டால்தான் சிறப்பான எதிர்காலத்தை காணமுடியும் என்பது அவரது நம்பிக்கையாகும்.

### அனைத்திற்கும் பெண்களே காரணம்

'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்ற கூற்றுப்படி ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் அழிவிற்கும் பெண்களே காரணமாக அமைகின்றனர். அதனால் பெண்களைச் சீரிய வழியில் வழிநடத்திச் செல்ல வேண்டும் என்பதை அறிந்த சுவாமி விவேகானந்தர் 'ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பதற்குரிய மிகச்சிறந்த கருவி அந்த நாடு பெண்களை எப்படி மதிக்கிறது என்பதை அறிவதாகும்' என்கிறார்.

பெண்கள் கற்பு நெறியில் தவறும்போது சமுதாயமே கொஞ்சம் அழிகிறது. இதனால்தான் எல்லா நாடுகளும் ஆண்களின் ஒழுக்கத்தைவிட பெண்களின் கற்பைக் காக்க அதிக அக்கறை எடுத்துக் கொள்கின்றன.

இந்தியாவின் சிறப்பை பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுகையில் இந்தியா நற்பண்புகளில் சிறந்த நாடு இந்திய நாட்டின் பழக்கவழக்கத்திற்கேற்ப பெண்களிடம் அன்பு, மென்மை, நேர்மை போன்றவை வெளிப்படுத்தப்பட வேண்டும். 'நற்பண்புகளைப் பொறுத்தவரையில் நமது இந்திய முறைகள்தான் மற்றவர்களின் முறைகளைவிடப் பல வழிகளில் மேம்பட்டவை' என்று தயக்கமின்றிக் கூறுகிறார். இதனால் இந்தியப் பெண்கள் பல்வேறு சிறப்பு அம்சங்களைப் பெற்றவர்கள் என்பதை அறியலாம்.

பெண்கள் கண்ணீர் விடும் நாடு வறுமை நாடாகும். அடிமை நாடாகும். பெண்களை இழிவாகக் கருதும் மதமும் நாடும் அழிவுநிலைக்குத் தள்ளப்படுகின்றன என்பதற்குச் சான்றாக, ஒரு பெண்ணின் பொருட்டே பாரதப்போர் நடந்தது. பல புராணங்களும் காப்பியங்களும் பெண்களை மையமாகக் கொண்டே தோன்றியுள்ளன. இதனால், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு தீங்கு நேராவண்ணம் காக்கவேண்டும் என்பதை அறிகிறோம்.

பெண்களின் துயரைத் தீர்க்க ஆண்கள் பாடுபட வேண்டும். பெண்ணில்லை என்றால் உலகம், உயிர், அன்பு, கடவுள் போன்ற எதுவும் இராது. இவை அனைத்தும் பெண்ணால்தான் கிடைக்கும். அத்தகைய பெண்ணிற்கு மதிப்புக் கொடுத்து போற்றுதல் வேண்டுமென்று திரு.வி.க. ஆண் சமுதாயத்தைக் கேட்டுக்கொள்கிறார்.

வீட்டிற்கும் நாட்டிற்கும் பெண்களின் பணி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து அவர்களை முன்னேற்றப் பல வழிகளில் பாடுபடவேண்டும். 'ஒரு வழி தோற்றுவிட்டால், இன்னொரு வழியைக் கடைப்பிடித்து நன்றாகச் செய்ய முயலவேண்டும்' வழிகளில் தவறு இருக்கிறது என்று கோட்பாட்டை விட்டுவிடுவது முறையல்ல என்று சுவாமி விவேகானந்தர் இந்திய மக்களுக்கு அறிவுரை கூறுகிறார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் அழிவிற்கும் பெண்களே காரணமாக இருப்பதால் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். கல்வியறிவினை வளர்த்து சிந்தித்துச் செயல்படும் திறனை உருவாக்க வேண்டும். இதனால் நாடும் வீடும் வளம் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு பலதரப்பட்ட நிலைகளில் விவேகானந்தர் காட்டும் பெண்ணைப் பின்கண்டவாறு தொகுக்கலாம்.

1. பெண்களை வெறும் அடிமைகள் என்று கருதாமல், மேலைநாட்டுப் பெண்களைப் போல் இந்தியப் பெண்களுக்கும் சுதந்திரம் வேண்டும். பெண்களுக்கு சுதந்திரம் அளித்தால், அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைவதோடு மட்டுமல்லாமல் நாடும் முன்னேற்றம் அடையும்.
2. இந்தியப் பெண்களின் அடிமைத்தனத்திற்கு முக்கியக் காரணம் அவர்கள் கல்வியறிவு பெறாமல் இருந்ததுதான். இந்தியப் பெண்களும் மேலை நாட்டுப் பெண்களைப் போல் கல்வியறிவு பெறவேண்டும். அத்தகைய கல்வி நம் பண்பாட்டிற்கு ஊறுவிளைவிக்காத வகையில் பெண்களுக்கு போதிக்கப்பட வேண்டும் என்று இந்தியப் பண்பாட்டிற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.
3. மேலைநாடு பெண்மையின் இலட்சியத்தை மனைவியிடம் கண்டது. கீழைநாடு பெண்மையின் இலட்சியத்தைத் தாய்மையில் கண்டது. இந்தியப் பெண்கள் தாய் என்ற சிறந்த ஸ்தானத்துடன் மேலைநாட்டுப் பெண்மையின் இலட்சியமான மனைவி என்ற ஸ்தானத்தையும் சேர்த்து வளர்த்தால் இல்லறம் நல்லறமாக அமையும்.
4. ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பதற்குரிய மிகச் சிறந்த கருவி அந்த நாடு. பெண்களை எவ்வாறு மதிக்கிறது என்பதைப் பொறுத்தது. இதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உயிர்நாடியாக இருப்பவர்கள் பெண்கள் என்பதை அறிகிறோம்.
5. மேலை நாட்டுப் பெண்களுடன் ஒப்பிடும்போது நம் நாட்டுப் பெண்கள் ஒழுக்கம், அன்பு, கருணை, அகமலர்ச்சி போன்ற பலவற்றில் சிறந்து காணப்படுகின்றனர். அவர்களைவிட இந்தியப் பெண்கள் சமூகமட்டத்தில் உயர்நிலைப் படியில் உள்ளவர்கள்.
6. செயலில் உன் சக்தியைக் காட்டு என்கிறது மேலைநாடு. இந்தியாவோ பொறுமையின் மூலம் உன் சக்தியைக் காட்டு என்கிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக காந்தியடிகளின் அகிம்சைவழியில் நம் நாடு சுதந்திரம் பெற்றது. அதைப்போல் பெண்கள் வாழ்வில் ஏற்படும் எதிர்ப்புகளை எதிர்கொள்வதற்கு பொறுமை மிகவும் அவசியமாகும்.



7. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அந்த நாட்டு மக்கள் பணி மட்டுமல்லாமல் வெளிநாட்டவரின் ஒத்துழைப்பும் தேவை என்பதற்குச் சகோதரி நிவேதிதாவின் பணி ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
8. பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவற்றை தகர்த்தெறிந்து அவர்கள் முன்னேற வழிவகைகளைச் செய்யவேண்டும். வழிகளில் தவறு இருக்கிறது என்று கோட்பாட்டை விட்டுவிடுவது முறையல்ல.
9. பெண்களுக்குச் சொத்துரிமை வழங்குவதன் மூலம் பெண்களும் சம அந்தஸ்தும் உரிமையையும் தன்னம்பிக்கையையும் பெறுகின்றனர்.
10. வரதட்சணை என்ற கொடிய நோய் இந்தியாவிலிருந்து ஒழிந்தால்தான் சமுதாயமும் பெற்றோர்களும் பெண்களைப் பாரமாகக் கருதமாட்டார்கள். பெண் குழந்தைகள் பிறப்பதை விரும்புவர். இதன் காரணமாக பெண் சிசுக் கொலை ஓரளவு குறைய வாய்ப்புண்டு.
11. மூடப்பழக்க வழக்கத்தால் பெண்கள் உயிரற்றவர்களாகவும், உணர்ச்சியற்றவர்களாகவும் மாறிவிட்டனர். இந்த நிலை மாற பெண்கள் கல்வியறிவு பெற்று பகுத்தறிவும் திறனை அடைய வேண்டும்.
12. மேலைநாட்டுச் சிறந்த கருத்துக்களைக் கொண்டு நோக்குகையில் புதிய இந்தியாவைப் படைப்பதில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.
13. நம்பிக்கையால் மட்டும்தான் காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை அறிந்த சுவாமி விவேகானந்தர் ஆணும் பெண்ணும் நம் நாட்டின் மீது நம்பிக்கைக் கொண்டு நாடு முன்னேற செயல்பட வேண்டுமென்று அறிவுரை கூறுகின்றார்.
14. 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்ற கூற்றுப்படி பெண்களிடையே, கற்பு நெறி பிறழ்தல் போன்ற ஒழுக்க கேடுகள் தொடங்கினால் நாடு அழிவுப்பாதைக்குச் சென்றுவிடும். இதைக் கருத்தில் கொண்டு பெண்களைச் சரியான பாதையில் வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் கூறுவது ஏற்புடையதே.
15. நாட்டின் முன்னேற்றத்தைப் பெண்களின் முன்னேற்றத்தால் மட்டுமே சாதிக்க முடியும் என்பதை அறிந்து, பெண்களுக்குரிய உரிமைகள், மதிப்புகள், கல்வியறிவு போன்றவற்றை அளித்துப் போற்றவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் ஆசைப்படுகிறார்.

எனவே விவேகானந்தர் அவர்தம் காலத்திய சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு தம்முடைய கருத்துக்களை வெளிப்படுத்திய போதிலும், அவை இன்றும் பெண்ணியலில் போற்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பொக்கிஷங்களாகும். இவை காலத்தின் தேவையை நிறைவு செய்கின்றனவென்பது வெளிப்படையாகக் காணலாம்.

# பெண் காவலர்

## இந்தியாவில் பெண் காவலர்களின் முக்கியத்துவம்

**முன்னுரை**

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

என்று பாரதியார் பெண்களின் ஆற்றலை உணர்த்தினார்.

இன்றைய சமுதாயத்தில் பெண் மற்றும் இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கைப் பெருக்கம், பெண்களுக்கென தனி "பெண் காவலர்" பிரிவு ஏற்படுவதன் அவசியத்தை உண்டாக்கியது.

**வெளிநாடுகளில் பெண்காவலர்**

1. சில குறிப்பிட்ட பணிகளில் மட்டுமே பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். பிறகு ஆண்காவலர்களுடன் சில காவல் பணிகளை மேற்கொண்டனர்.
2. பிரான்சு, பின்லாந்து போன்ற நாடுகளில் முதலில் தனி பெண் காவலர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.
3. பிரிட்டனில் ஆண் அதிகாரிக்கு அளிப்பது போன்ற பயிற்சியை பெண் காவலர்களுக்கும் அளிக்கப்பட்டது.
4. பிரேசில், பிரான்சு போன்ற நாடுகளில் பெண் காவலர்கள் ஒழுங்கை ஏற்படுத்தும் கடினமான பணிகளில் ஈடுபடுத்தப்படவில்லை.
5. பெண் கைதிகளைக் கவனிப்பதற்கென்று பெண்கள் சம்பந்தப்பட்ட பால் உணர்வுக் குற்றங்களைக் கையாள பெண் காவலர் பயன்படுத்தப்படுகின்றனர்.

**இந்தியாவில் பெண் காவலர்**

1. இந்தியாவில் பெண் காவலர் என்பது புதிய அமைப்பு. பழங்காலத்தில் சில பணிகளுக்குப் பெண்கள் உதவினர். ஆனால் அவர்கள் காவலர்கள் அல்ல.
2. கான்பூர், பாம்பே, திருவாங்கூர் போன்ற இடங்களில் பெண் காவலர்கள் குறைந்த எண்ணிக்கையில் அமர்த்தப்பட்டனர்.
3. சுதந்திரத்துக்குப் பிறகு ஏற்பட்ட மாற்றங்களினால் பல மாநிலங்களில் பெண்களுக்கென தனி காவலர் பிரிவு ஏற்படுத்துவது அவசியமாயிற்று.
4. 1972–ஆம் ஆண்டு இந்தியப் பெண்களின் பெருமைக்கு மைல் கல்லாக அமைந்தது. இந்த ஆண்டில்தான் பெண்கள் நேரடியாக இந்தியக் காவல் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
5. தமிழ்நாட்டில் தற்போது பல மாவட்டங்களில் தனி பெண் காவல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு பணியாற்றி வருகின்றனர்.
6. திரைப்படங்களில் பெண் காவல். அதிகாரிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இவை பெண் காவல்துறையின் சிறப்புக்கு, வளர்ச்சிக்கு, பெருமைக்குச் சான்றாக அமைகின்றன.



**பணிகள்**

பெண்கள் சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகளைக் கையாளுதல் முக்கியப் பணி, பெரும் சதிகளில் பெண்களை தற்போது பயன்படுத்துவதால் சந்தேகமான பெண்கள் நடமாட்டத்தைக் கவனித்தல், எய்ட்ஸ் போன்ற பயங்கரமான நோய்க்ளுக்குக் காரணமாக விளங்கும் விபச்சாரத்திலிருந்து பணிகளை மீட்டல், வரதட்சனை போன்ற சமூகக் கொடுமைகளில் இருந்து பெண்களைக் காப்பாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றனர்.

குறிப்பிட்ட குற்றவழக்குகளில், பெண் காவலர் நேரிடையாக புலனாய்வுப் பணிகளில் ஈடுபட வேண்டும் என மாநில காவல் துறை கழகங்கள் பரிந்துரைத்துள்ளன.

இளைஞர்களை விட பெண்கள் குறைவான குற்றம் புரிகின்றனர். என்னும் சமீப காலங்களில் பெண் குற்றவாளிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகிவிட்டது. கீழக்கண்ட புள்ளி விவரம் இதை உறுதிப்படுத்தும்.

1964 முதல் 1977 வரை பெண் குற்றவாளிகள் குற்றம் எண்ணிக்கைப் பெருக்கம் 286 சதவிதம். ஆனால் ஆண் குற்றவாளிகள் எண்ணிக்கைப் பெருக்கம் 110 சதவிகிதம் தான். பெண் காவலர் அவ்சியத்தை இது உணர்த்துகிறது.

இளம் பெண் குற்றவாளிகளின் எண்ணிக்கையும் இளம் ஆண் குற்றவாளிகளின் எண்ணிக்கையை விட அதிகரித்துக் கொண்டு வருகிறது. தாய்மார்களின் அணுகுமுறையும், குடும்ப பழக்கவழக்கங்களும் இதற்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகைப்பட்ட இளம் பெண் குற்றவாளிகளைப் பராமரிப்பதும் இவர்கள் பணியாக அமைகிறது. முறையில்லாத உறவுச் சட்டம் (1956) இளம் பெண்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.

பஸ் நிலையம் போன்ற பொது இடங்களில் பெண்களுக்கு உதவியாகவும் பணி புரிகின்றனர்.

போராட்டங்களில் பெண்களையும் குழந்தைகளையும் முன்னிலைப் படுத்தும்போது அதைத் திறமையாகச் சமாளிக்க பெண் காவலர் உதவுகின்றனர்.

காவல் நிலையம் சென்று புகார் செய்யவே பெண்கள் பயப்படுகின்றனர். போதிய பாதுகாப்பு இருக்காது என்ற அச்சம் தான் இதற்கு முக்கியக் காரணம். இதைப் போக்க பெண் காவலர் உதவுகின்றனர்.

இவைகள் எல்லாவற்றையும்விட, பெண்கள் குறைகளைப் பரிவுடன் கேட்பவர்கள் என்ற வேதாந்தம் உண்டு. எனவே பரிவுடன் கேட்க, நடவடிக்கை எடுக்க, நிவாரணம் வழங்க பெண் காவலர் அவசியமாகின்றனர்.

பயிற்சி

எவ்விதமான பயிற்சியையும் பெற முடியும் என நிரூபித்த பிடி. உஷா பிறந்த நாடு இது. எனவே ஆண்களுக்குப் பயிற்சி அளிக்கும் மையங்களில் பெண்களுக்கும் அதுபோன்ற பயிற்சி அளிக்கப்படுகிறது. "கராத்தே, ஜூடோ" போன்ற சண்டைப் பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது.

திறமையான பயிற்சி, பெண் காவலர்கள் புரியும் கீழக்கண்ட பணிகளைத் திறம்படச் செய்ய உதவும்.

1. போக்குவரத்து சீரமைப்பு
2. குற்றப் புலனாய்வு
3. ரோந்துக் காவல்
4. குழந்தை நலம், பெண்கள் பாதுகாப்பு,
5. இளம் குற்றவாளிகள் பராமரிப்பு
6. விமான நிலையம் போன்ற முக்கிய இடங்களில் பெண்களை சோதனையிடல்.
7. போதை மருந்து குறித்த வழக்குகள்
8. பெண் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.
9. பெண் ஒட்டுனர்களாகப் பணிபுரிதல்.
10. காவல் துறையின் சமூக நல நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்.
11. பயிற்சி பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணி புரிதல்.
12. பெண் கைதிகளைப் பராமரித்தல்.

முடிவுரை

இன்றைய பெண் காவல்பிரிவு, சர்வதேச பெண் காவல் துறைக்கு இணையாகச் செயல்படத் துவங்கியுள்ளது. பெண் மற்றும் ஏற்பட்டுள்ளது. பெண்கள் அதிகம் வாழும் இந்நாட்டில் அவர்களுக்கென அமைக்கப்பட்ட இந்த அமைப்பு பல வழிகளில் அவர்களுக்கு உதவுகிறது. இன்றைய சமுதாயத்தில் பெண் காவலர்கள் அன்பின் வடிவம், துணிவின் ஊற்று, தியாகத்தின் சிகரம், கடமையின் உறைவிடம், இவ்வளவு பெருமைகளையும் உணர்ந்தே கவிமணி அன்று கூறினார்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"



## 2005 இல் இந்தியப் பெண்களின் சாதனைகள்

சானியா மிர்ஸா

கிராண்ட் ஸலாம் ஒற்றையரில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதிபெற்ற முதல்இந்தியப் பெண்மணி சானியா மிர்ஸா. செரினாவில்லியம்ஸ் (அமெரிக்கா) சானியாவை மூன்றாவது சுற்றில் 6–1, 6–4 என்ற கணக்கில் தோற்கடித்தார். ஆஸ்திரேலியன் ஒப்பனில் சானியாவுக்கு வொய்ல்ட் கார்ட் கிடைத்தது.

18 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்க ஒப்பன் டென்னிஸில் காலிறுதிக்கு முன்வரை சென்றவர் இவர் ஒருவர்தான். இதற்கு முன் கடைசி 16 மற்றும் அதற்கு மேலும் சென்றவர் ரமேஷ் கிருஷ்ணன். அது நடந்தது பிரான்சை 1987 இல். காலிறுதியில் நேர் செட்டில் இவரைத் தோற்கடித்தவர் ஸ்டீஃபன் எட்பெர்க்.

முன்னாள் விம்பிள்டன் சாம்பியன் மரியாஷாரபோவா (ருஷ்யா) ஸமரினயாவை நேர் செட்டில் ஃப்ரி க்வார்ட்டரில் 6–2, 6–1 செட் கணக்கில் தோற்கடித்தார். பிரான்சைச் சேர்ந்த 20 வயது மேரியன் பார்டோலியை 7–6, 6–4 செட் கணக்கில் தோற்கடித்து சானியா நாலாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

இதற்கு முன் ஆஸ்திரேலியன் ஒப்பனில் சானியா மூன்றாவது சுற்றுக்குச் சென்றதும் முன்பு முதலிடம் வகித்த ஸெரினா வில்லியம்ஸிடம்தோற்றுப்போனார். ஒரு வருடத்தில் சானியா உலகத் தர வரிசையில் 326 ஆம் இடத்தில் இருந்து 42–க்கு முன்னேறினார். அப்போது அவருடன் போட்டியிட்ட மரியா ஷாரபோவா இரண்டாம் இடத்தில் இருந்தார்.

ஆஸ்திரேலியன் ஒப்பனிலும் சானியா சாதனை புரிந்தார். கிராண்ட் ஸ்லாம் ஒற்றையரில் மூன்றாம் சுற்றுவரை வந்த முதல் இந்தியப் பெண் இவர்தான். இதற்கு முன் நிருபமா வைத்தியநாதன் இரண்டாம் சுற்றுக்கு வந்தார். மகளிர் வரிசையில் 100 ஆவது இடத்துக்கு வந்த முதல் இந்தியர் சானியா.

ஹைதராபாத்தில் பிறந்த 18 வயது சானியாவின் இந்திய டென்னிஸ் சாதனை மகத்தானது. தர வரிசையில் இவர் முன்னேற்றம் அதிசயத்தக்கது. ஜப்பான் ஒப்பன் அரை இறுதியில் அவர் 31–ஆவது இடத்தில் இருக்கிறார். அக்டோபர் 2004இல் 300களில் இருந்த இவர் உலகத் தர வரிசையில் ஏறக்குறைய 250 படிகளைத் தாண்டிவிட்டார்.

சானியா இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனினும் இந்திய மகளிர் டென்னிஸில் சானியா புதிய வழியை நிர்ணயிப்பவராக இருக்கிறார்.

அத்வானி, அனுஜா : உலகச் சாம்பியன்கள்

ஐபிஎஸ்எஃப் உலக பில்லியர்ட்ஸில் பங்கஜ் அத்வானி, தேவேந்திர ஜோஷியை பதினோரு ஆட்டங்களில் 6–2 செட் கணக்கில் தோற்கடித்தார்.

அத்வானியின் இந்த வெற்றி மால்டாவைச் சேர்ந்த பால் மிஃப்ஸட் 2005 மார்ச் மாதம் ஐபிஎஸ்எஃப் உலக ஸ்னூக்கர் மற்றும் பில்லியர்ட்ஸில் பெற்ற வெற்றிக்கு இணையானது.

பின்னர் அத்வானி ஐபிஎஸ்எஃப் உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன் ஆனார் (இதுவும் மால்டாவில்தான்). இந்தியாவின் கீத் சேத்தியை 2242–1717 செட் கணக்கில் (six hour format) தோற்கடித்தார். அப்போது வெற்றிக்கு வயது 19 வருடம் 8 மாதம்.

ஏப்ரல் 2005 இல் கேம்பிரிட்ஜில் நடைபெற்ற WLBSA-Ladies World-Billiards Championship போட்டியில் அனுஜா தாக்கூர் வெற்றியடைந்தார். 22 வயதான இந்திய தேசிய சாம்பியன், ஸ்காட்லாந்தைச் சேர்ந்த லைனெட்டி ஹோர்ஸ்பர்க்கை 243–136 கணக்கில் தோற்கடித்தார். உலக பில்லியர்ட்ஸ் போட்டியில் வெற்றிப் பெற்ற முதல் இந்தியப் பெண் அனுஜா.

புவனாவில் பிப்ரவரி 2005 இல் நடைபெற்ற நாலாவது ஆசிய பில்லியர்ட்ஸ் போட்டியில் உலக அமெச்சூர் சாம்பியனான பங்கஜ் அத்வானி வெற்றி பெற்றார். தாய்லாந்தைச் சேர்ந்த ப்ரிப்புட் சைதன்ககலை 100–64, 100–32, 100–0, 101–5 செட் கணக்கில் இறுதி ஆட்டத்தில் தோற்கடித்தார். 2002 இல் அவர் அஷோக் ஷாண்டில்யேவிடம் இறுதிச் சுற்றில் தோற்றுப்போனார்.

**ஜோஷ்னாவின் சாதனை**

பிரிட்டிஷ் ஜூனியர் ஓப்பன் ஸ்குவாஷில் 19 வயதுக்குக் குறைந்தவர்களுக்கான ஆட்டத்தில் வெற்றி பெற்ற முதல் இந்தியப் பெண் என ஜோஷ்னா சின்னப்பா பெருமை பெற்றார். 2004 இல் எகிப்தின் ஓமன்யா அல்காவிக்கு அடுத்தபடியாக வந்த ஜோஷ்னா, ஜனவரி2005 இல் ஷெபில்டில் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவின் டெனிலிஸ்வார்ட்ஸை (Tennile Swartz) 3–9,9–3,9–6,9–3 செட் கணக்கில் தோற்கடித்து தன் வெற்றியை தக்க வைத்துக் கொண்டார்.

2003இல் ஜோஷ்னா 17 வயதுக்குட்பட்டவர் வரிசையில் சாம்பியன் ஆனார். சௌரவ் கோசல் பிரிட்டிஷ் ஓப்பன் ஜூனியர் ஆண்கள் ஸ்குவாஷ் ட்ரைஸ்டேல் கோப்பைப் போட்டியில் அனில் நாயரை பின்பற்றி வெற்றியடைந்தார்.

சென்னையில் மகளிர் பிரிவில் ஜோஷ்னா, ஹாங்காங்கைச் சேர்ந்த அன்னி அவ்வூவை 5–9,3–9,9–0,9–5,9–3 என்ற செட் கணக்கில் தோற்கடித்து 12 ஆவது ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் பெண்கள் பிரிவில் வெற்றி பெற்றார். ஆனால் ஆண்கள் கோசல் பாகிஸ்தானின் அனில் அட்லஸ் கானிடம் 1–9,4–9,3–9,3–9 செட் கணக்கில் தோற்றுப் போனார்.

பிரான்ஸின் மார்ஸெய்லிஸில் சென்னையைச் சேர்ந்த தீபிகா பள்ளிக்கல் பிரெஞ்சு ஜூனியர் ஸ்குவாஷ் ஓப்பனில் வெற்றி பெற்றார். இறுதி ஆட்டத்தில் அவர் பிரான்ஸைச் சேர்ந்த எமிலி லாமிலாங்கோவை 8–10, 5–9,9–6,9–5,9–5 செட் கணக்கில் தோற்கடித்தார். ஒரு சர்வதேசப் போட்டியின் 15 வயதுக்கு குறைந்தவர்களுக்கான ஆட்டத்தில் அவரது முதல் வெற்றி



இது. இதற்கு முன் அவர் பெல்ஜியம் ஒப்பன், ஜெர்மன் ஒப்பன் (இரு முறை) டச் ஒப்பன், ஆஸ்திரேலியன் ஒப்பன், ஸ்காட்டிஷ் ஒப்பன் வெற்றி பெற்றிருக்கிறார்.

**ஜோஷ்னாவுக்கு இரண்டாம் இடம்**

இந்தியாவின் ஸ்குவாஷ் ராணியான ஜோஷ்னா சின்னப்பா ஹெரெண்டல்ஸில் ஜூலை 2005இல் நடைபெற்ற உமக ஜூனியர் மகளிர் ஸகுவஷில் இரண்டாவது இடத்தைப் பெற்றார். எகிப்தைச் சேர்ந்த ரனீம் எல்வெலீலி 18 வயதான ஜோஷ்னாவிடம் 3–9,4–9,8–10 செட் கணக்கில் தோற்றுப்போனார். இறுதி ஆட்டம் வரை ஜோஷ்னா எல்லா ஆட்டத்திலும் வெற்றி பெற்றிருந்தார்.

**மூன்று வெற்றிகள்**

தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனில் ஜூலை 2005 இல் நடைபெற்ற காமன்வெல்த் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்திய அணி அனைத்து மூன்று டைட்டில்களையும் வென்றது. இந்திய மல்யுத்த வீரர்கள் க்ரீக்கோ–ரோமன் (Creco-Roman) பிரிவை 59 புள்ளி எடுத்து வெற்றி பெற்றனர். ஃப்ரீ ஸ்டைலில் இந்தியாவுக்கு மொத்தம் 70 புள்ளிகள் கிடைத்தன. மகளிர் பிரிவிலும் 60 புள்ளிகள் பெற்று இந்தியா வென்றது.

**விஜயலட்சுமிக்கு வெற்றி**

ஜெனிவாவில் ஆகஸ்ட் 2005 இல் நடைபெற்ற செயின்ட் ஜீன் இன்டர்நேஷனல் ஒப்பன் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் எஸ். விஜயலட்சுமி ஸ்விக்ஸ் இன்டர்நேஷனல் மாஸ்டர் ரிச்சர்ட் கெர்பரைத் தோற்கடித்தார். ஒன்பது சுற்றுகளில் அவருக்கு 8 புள்ளிகள் கிடைத்தன. அவரது சகோதரி எஸ். மீனாட்சி 5.5 புள்ளிகள் எடுத்து எட்டாவது இடத்தைப் பெற்றார். விஜயலட்சுமி தனது வெற்றிப் பாதையில் ருஷ்ய கிராண்ட் மாஸ்டர்களான ஆன்டிரியே ஷெக்சேவ், அலெக்சாண்டர் சிமியேவ் (Andrei Schekchaev, Alexandar Chemiaev) ஆகியோரை எதிர்த்து வெற்றி பெற்றார்.

## ஆசிய தடகளப் போட்டி :

**இந்தியா நான்காமிடத்தில்**

16–ஆவது ஆசிய தடகளப் போட்டிகள் தென்கொரியா இஞ்சியான் நகரில் செப்டம்பர் 2005 இல் நடைபெற்றது. இந்தியா நான்கு தங்கம் உட்பட 13 பதக்கங்களைக் கைப்பற்றி நான்காவது இடத்தைப் பெற்றது. 15 தங்கம் உட்பட 32 பதக்கங்களை வென்ற சீனாவுக்கு முதல் இடம்.

மகளிர் நீளம் தாண்டுதல் போட்டியில், உலகில் 9–ஆவது வரிசையில் இருந்த அஞ்சு போபி ஜார்ஜ் தனது நான்காவது முயற்சியில் 6.61 மீட்டர் தூரம் தாண்டி முதல் இடத்தைப் பெற்றார். பிலிப்பைன்ஸைச் சேர்ந்த மாரெஸ் டெல்லா டோரஸ் 6.63மீ. தாண்டி இரண்டாவதாக வந்தார். தர வரிசையில் அவருக்கு 36 ஆவது இடம் கிடைத்தது.

மஞ்சித் கௌர் 400 மீ. மகளிர் ஓட்டத்தில் 51.50 நொடியில் வந்து சதி கீதாவைத் தோற்கடித்தார். கீதா அந்த தூரத்தை 51.75 நொடியில் முடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

ஹெப்தலான் போட்டியில் 5377 புள்ளிகள் எடுத்து ஸோமா பிஸ்வாஸ் இந்தியாவுக்கு முதல் தங்கத்தைப் பெற்றுத் தந்தார். சீனியர் ஆசிய பகுதியில் இது அவருக்கு முதல் தங்கம். வெள்ளி பெற்றவர் இந்தியாவின் சுஷ்மிதா சிங்கா ராய் (5308 புள்ளிகள்).

பதக்கப்பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 15 | 7 | 10 | 32 |
| ஜப்பான் | 6 | 5 | 12 | 23 |
| கத்தார் | 6 | 3 | 3 | 12 |
| இந்தியா | 4 | 5 | 4 | 13 |
| சௌதி அரே | 4 | 1 | 1 | 6 |
| இலங்கை | 2 | 2 | 2 | 6 |
| தென்கொரியா | 1 | 7 | 1 | 9 |

**கோல்ஃப் ஆசிய வெற்றியாளர் இந்தியா**

கோல்ஃப் விளையாட்டில் ஆசியன் ஆர்டர் ஆஃப் மெரிட்டில் முதல் இடத்தைப் பெற்ற முதல் இந்தியர் ஜோதி ரன்தாவா. கோலாலம்பூரில் டிசம்பர் 2002–03இல் நடைபெற்ற வோல்வா மாஸ்டர்ஸ் ஆஃப் ஏஷியா கோல்ஃப் சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்று, ஆசியாவின் நம்பர் ஒன் ஆக வந்து தாய்லாந்தின் தோங்கிஹை ஜார்டினின் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

**பளு தூக்கும் மகளிர்**

துபாயில் செப்டம்பர் – அக்டோபர் 2005 இல் நடைபெற்ற 18 ஆவது மகளிர் பாரம் தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் மூவர் அணி ஒன்பது பதக்கங்களை வென்றது. அதில் வெள்ளி–2, வெண்கலம்–7.

75 கிலோ பிரிவில் ஷைலஜா புஜாரி இரண்டு வெள்ளியும் ஒரு வெண்கலமும் வென்றார். கீதா ராணிக்கு 3 வெண்கலமும் கிடைத்தது. முன்னதாக 69 கிலோ பிரிவில் எஸ். நன்சிதாதேவி மூன்று வெண்கலம் கிடைத்தது. கீதா, ஸ்னாட்சில் 101 கிலோவும், க்ளீன் அண்ட் ஜெர்க்கில் 131–உம் ஆக 232 கிலோ தூக்கி மொத்தத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றார். ஷைலஜாவுக்கு ஒவர்ஆல் உட்பட மூன்று வெள்ளிகள் கிடைத்தன. அவர் சீனாவின் சாங் ஷலோங் (244 கிலோ) க்கு ஸ்னாட்ஸ் 106, க்ளீன் அண்ட் ஜெர்க் 138 கிலோவில் அடுத்தபடியாக வந்தார்.



**இந்திய முதல் பெண்கள்**

| | |
|---|---|
| பிரதமர் | : இந்திரா காந்தி |
| முதலமைச்சர் | : சுசேதா கிருபாளானி (உ.பி.) |
| ஆளுனர் | : சரோஜினி நாயுடு (உ.பி.) |
| சபாநாயகர் | : ஷானா தேவி (கர்நாடகம்) |
| உச்சநீதி மன்ற நீதிபதி | : பாத்திமா பீவி |
| மாநில தலைமைச் செயலாளர் | : லட்சுமி பிரானேஷ் |
| வெளிநாட்டுத் தூதர் (ரஷ்யா 1947–1957 வரை) | : விஜயலெக்ஷ்மி பண்டிட் |
| வழக்கறிஞர் | : ரெஜினா குஹா (1922) |
| மருத்துவர் (அமெரிக்காவில் பட்டம் பெற்றார்) | : ஆனந்தபாய் ஜோஷி |
| பொறியியலாளர் | : லலிதா (சிவில் 1937) |
| ஐ.ஏ.எஸ். | : அன்னா ஜார்ஜ் மல்ஹோத்ரா (1950) |
| ஐ.பி.எஸ். | : கிரண் பேடி |
| நீதிபதி | : அன்னா சாண்டி |
| பத்திரிக்கையாளர் | : சுவர்ணகுமாரி தேவி (ராம பூதோதானி பத்திரிகை) |
| விமான ஓட்டி | : காப்டன் துர்கா பானர்ஜி |
| மேயர் | : தாரா செரியன் (மதராஸ்) |
| ஒலிம்பிக் வெண்கலப் பதக்கம் | : கர்ணம் மல்லீஸ்வரி (பளுதூக்கும் போட்டி–2000) |
| ஒலிம்பிக் வீராங்கனை | : மேரி டி சௌஸா மற்றும் நீலிமா கோஷ் |
| துணைவேந்தர் | : ஹன்ஸா மேத்தா (பரோடா பல்கலைக்கழகம்) |
| இந்திய விமானப்படை விமானத்தைத் தனியாக ஓட்டியவர் | : அரிதா கவுர் |
| பேருந்து ஓட்டுனர் | : வசந்த குமாரி (தமிழ் நாடு) |
| விண்வெளிப் பெண்மணி | : கல்பனா சாவ்லா |
| ரயில் எஞ்சின் ஓட்டுனர் | : சுரேகா யாதவ் |
| டி.ஜி.பி. | : கஞ்சன் சௌத்ரி பட்டாச்சார்யா |
| ராணுவ கமாண்டெண்ட் | : புனிதா அரோரா |
| ஏர்சீஃப் மார்ஷல் | : பத்மாவதி பந்தோபாத்யாயா |

## இந்தியப் பெண் ஆளுநர்கள் (1947 - 2002)

| எண் | பெயர் | வருடம் | மாநிலம் |
|---|---|---|---|
| 1. | சரோஜினி நாயுடு | 15.08.1947–02.03.1949 | உத்திரப்பிரதேசம் |
| 2. | பத்மாஜா நாயுடு | 03.11.1956–ஜூன்,1967 | மேற்கு வங்காளம் |
| 3. | விஜயலட்சுமி பண்டிட் | 27.11.1962–05.09.1963<br>18.12.1963–08.10.1964 | மகாராஷ்டிரம் |
| 4. | சாரதா முகர்ஜி | 05.05.1977–14.08.1978<br>14.08.78–ஜூலை,1983 | ஆந்திரப்பிரதேசம்<br>குஜராத் |
| 5. | ஜோதி வெங்கடாச்சலம் | 14.10.1977–27.10.1982 | கேரளம் |
| 6. | குமுத்பென் ஜோஷி | 26.11.1985–07.02.1990 | ஆந்திரப்பிரதேசம் |
| 7. | ராம் குவாரி சின்ஹா | 26.02.1988–12.02.1990 | கேரளம் |
| 8. | செர்லா கிரி வால் | 31.03.1989–06.02.1990 | மத்தியப்பிரதேசம் |
| 9. | சந்திராவதி | பிப்ரவரி 1990–டிசம்பர் | பாண்டிச்சேரி 1990 |
| 10. | ராஜேந்திரகுமாரி வாஜ்பாய் | 02.05.1995–ஏப்ரல்1998 | பாண்டிச்சேரி |
| 11. | ஷீலா கௌல் | 17.11.1995–23.04.1996 | ஹிமாச்சலப் பிரதேசம் |
| 12. | ஜஸ்டிஸ் எம். பாத்திமாவீவி | 25.01.1995–01.07.2001 | தமிழ்நாடு |
| 13. | வி.எஸ். ரமா தேவி | 26.07.1997–02.12.1999<br>02.12.1999 – 10.8.02 | ஹிமாச்சலப் பிரதேசம்<br>கர்நாடகம் |
| 14. | ரஜனி ராய் | ஏப்ரல் 1998–ஜூலை2002 | பாண்டிச்சேரி |

## இந்தியப் பெண் முதலமைச்சர்கள்

| பெயர் | மாநிலம் | வருடம் | கட்சி |
|---|---|---|---|
| 1. சுதேச கிரிபலானி | உத்திரபிரதேசம் | அக்டோபர்1963–<br>மார்ச் 1967 | காங்கிரஸ் |
| 2. நந்தினி சத்பதி | ஒரிசா | ஜூன் 1972–<br>மார்ச் 1974–<br>டிசம்பர்1976 | காங்கிரஸ் |
| 3. சசிகலா கடோத்கர் | கோவா | ஆகஸ்ட் 1973<br>ஜூன்1977–<br>ஏப்ரல் 1979 | மகாராஷ்ரா<br>கோமண்டக் |



| | | | |
|---|---|---|---|
| 4. சைதா அன்வாரா | அசாம் | டிசம்பர் 1980–<br>ஜூன் 1981 | காங்கிரஸ் |
| 5. ஜானகி ராமச்சந்திரன் | தமிழ்நாடு | ஜனவரி 7–30,1988 | அ.இ.அ.தி.மு.க. |
| 6. ஜெ.ஜெயலலிதா | தமிழ்நாடு | ஜூன்1991–மே1996<br>14.05.2001–21.09.2001,<br>02.03.2002 | அ.தி.மு.க. (ஜா)<br>அ.இ.அ.தி.மு.க |
| 7. மாயாவதி | உத்திரப்பிரதேசம் | ஜூன் 1995–<br>அக்டோபர் 1996<br>மார்ச் 1997–செப்டம்பர்<br>1997 03.05.2002 | பி.எஸ்.பி. |
| 8. ராஜிந்தர் கௌர் பட்டீல் | பஞ்சாப் | ஏப்ரல் 1996–<br>பிப்ரவரி 1997 | காங்கிரஸ் |
| 9. ராப்ரி தேவி | பீகார் | 25.07.1997–<br>12.02.1999<br>09.03.1999–<br>03.03.2000,11.03/2000 | ஆர்.ஜெ.டி. |
| 10. சுஷ்மா சுவராஜ் | தில்லி | 12.03.1998–03.12.1998 | பி.ஜே.பி. |
| 11. ஷீலா தீக்ஷித் | தில்லி | 03.12.1998 | காங்கிரஸ் |
| 12. உமா பாரதி | மத்தியப்பிரதேசம் | | பி.ஜே.பி. |

# பெண்களின் இன்றைய நிலை


### கோபி அனனுக்கு 50 நாட்டு பெண்கள் கண்டனம்

இன்று சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி 50 நாடுகளைச் சேர்ந்த பெண்கள் ஐ.நா.பொதுச்செயலாளர் கோபி அனனுக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள்.

அந்த கடிதத்தில் அவர்கள், ஐ.நா.பொதுச் செயலாளர் என்ற வகையில் கோபி அனன் பெண்கள் முன்னேற்றத்திற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்கு என்று நிதி ஒதுக்கீடும் செய்யவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டி இருக்கிறார்கள். இன்று பெண்கள் தினத்தையொட்டி கோபி அனன் உடனடியாக நல்ல திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் அந்த கடிதத்தில் வற்புறுத்தி இருக்கிறார்கள்.

### மகளிர் தினத்தையொட்டி பெண்கள் பேரணி

மதுரை மார்ச் 8 மகளிர் தினத்தை ஒட்டி பெண்கள் கலந்து கொண்ட பேரணியை மாநகராட்சி கமிஷனர் தொடங்கி வைத்தார்.



பேரணியில் கலந்து கொண்ட பெண்களை படத்தில் காணலாம்.

### உலக மகளிர் தினம்

உலக மகளிர் தினம் மார்ச் 8 கொண்டாடப்படுகிறது. உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மதுரையில் பேக்ட்சி என்ற அமைப்பு சார்பில் மகளிர்தின பேரணி நடந்தது.பேரணியை மதுரை மாநகராட்சி கமிஷனர் தினகரன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். மாப்பிள்ளை விநாயகர் தியேட்டர் அருகில் தொடங்கிய பேரணி கவுரி பிளாசா அரங்கில் முடிந்தது. பின்னர் அங்கு மகளிர் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. பேக்ட்சி இயக்குனர் பாண்டியம்மாள் கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினார். நிர்வாக இயக்குனர் சுப்ராம் முன்னிலை வகித்தார். துணை இயக்குனர் பிரபாகரன் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்.



### போலீஸ் சூப்பிரண்டு

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மதுரை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அப் குமார் சிங் கலந்து கொண்டு பேசினார். கூட்டத்தில் அரசு அதிகாரிகள், பாங்கி அதிகாரிகள் உள்பட பலர் கலந்துகொண்டு பேசினர். கருத்தரங்கில் மகளிர் சுயஉதவிக் குழுக்களை சேர்ந்த பெண்கள், உழைக்கும் பெண்கள், மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் பயிற்சியாளர் ஸ்டெல்லா நன்றி கூறினார்.

### இந்தியாவில் சேவைகள் துறையில் பெண்களின் பங்களிப்பு உயர்வு

சர்வதேச மகளிர் தினம், மார்ச் 8ல் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி பெண்கள் உபயோகப்படுத்தும் பொருள்களுக்கு விலைத் தள்ளுபடி, இலவசப் பரிசுகள், சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. அதே நேரத்தில் விரைந்து வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தில் பெண்களுக்கான முக்கியத்துவம் உயர்ந்து வருகிறது.

### வர்த்தக வாய்ப்பு

வங்கிகள், நிதி அமைப்புகள், ஹோட்டல்கள், மருத்துவமனைகள், இதர வணிக அமைப்புகள் சர்வதேச பெண்கள் தினத்தின்போது அவற்றின் திட்டங்கள் மற்றும் சேவைகள் மகளிரை சென்றடைய ஒரு வர்த்தக வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கின்றன.

இது குறித்து பீ.பி.ஓ. நிறுவனமான ஸ்கோப் இ–நாலேஜ் சென்டர்–ன் தலைமை செயல் அதிகாரி விஜயலட்சுமி ராவ் கூறும்போது "அமைப்பு ரீதியான துறையில் குறிப்பாக சேவைகள் துறையில் பெண்களுக்கான முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது" என்றார்.



சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி சீனாவின் குவான்க்சி மாநிலத்தில் பெண்களுக்கு பலவிதமான போட்டிகள் நடைபெற்றன. பலகையால் தயாரிக்கப்பட்ட காலணியை அணிந்து கொண்டு பெண்கள் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டதை படத்தில் காணலாம்.

பெண்கள் தினத்தையொட்டி, பல சிறப்பு திட்டங்களை நிறுவனங்கள் அறிவித்துள்ளன. உதாரணத்திற்கு ஐ.டி.சி. பார்க் ஷெராட்டன் ஹோட்டலை எடுத்துக் கொண்டால், அது சமூகத்தில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக 100 கார்டுகளை வழங்க உள்ளது. இந்த அட்டைகள் ஓராண்டு காலம் செல்லுபடியாகக் கூடியதாகும். இந்த அட்டையைக் கொண்டு பெண்கள், வாரந்தோறும் புதன் மற்றும் ஞாயிற்றுக் கிழமையில் ஜி2 லவுஞ்–ல் உணவு மற்றும் பானங்களை 59 சதவீத விலைத் தள்ளுபடியில் பெற்றுக் கொள்ளலாம்.

ஃபிட்னஸ் ஒன் நிறுவனம், அதன் சென்னை மற்றும் பெங்களூர் மையங்களில் இரண்டு மணிநேர நிகழ்ச்சியை நடத்த உள்ளது. இதில், பேஷன் அணி வகுப்பும் நடக்கிறது. சிறப்பாக ஆடை அணிந்த பெண்ணுக்கு பரிசு வழங்கப்படுகிறது. மேலும் ஐஸ் கட்டியை உடைக்கும், புது ரக ஆடையை உருவாக்குதல், புதிர்போட்டி, இசைக் கருவி வாசித்தல் உள்ளிட்ட போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

**பரிசுகள்**

டி.டி.கே. பிரிஸ்டிஜ், அதன் 82 ஸ்மார்ட் கிச்சன் கடைகளில், பொருள்களை வாங்கும் மகளிருக்கு ஆச்சரியம் அளிக்கும் பரிசுகளை வழங்க உள்ளது. இதர பிரிமியர் மற்றும் பட்டர் ஃபிளை பிராண்டுகளும், சமையல் பாத்திரங்களுக்கான விலையில் தள்ளுபடியை அறிவித்துள்ளன. பெண்களுக்கான ஆடைகளை சில்லரையில் விற்பனை செய்து வரும் நாயுடு ஹால் நிறுவனம், ஆடைகளுக்கு விலைத் தள்ளுபடி அறிவித்துள்ளது.

பணிபுரியும் பெண்களே அதிக எண்ணிக்கையில் பெண்கள் தினத்தை, கொண்டாடி வருகிறார்கள். அவர்கள் சேலைகள், இதர அலங்காரப் பொருட்களை வாங்கி வருகிறார்கள்.




இன்று ஆண்களுக்கு நிகராக பெண்கள் அனைத்து துறைகளிலும் பணிபுரிந்து வருகின்றனர். ஆண்களுக்கு எந்த விதத்திலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று அவர்கள் நிரூபித்து வருகின்றனர். முதல் படம் சிவகங்கை மாவட்டம் கருப்பூரைச் சேர்ந்த விஜயா சிவக்குமார் என்பவர் மொபைட்டில் சென்று பால்வியாபாரம் செய்வதை தொழிலாக செய்து வருகிறார். கடந்த 7 ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டு வரும் அவர் தனது தொழிலினை தெய்வமாகக் கருதி செய்து வருவதாக கூறுகிறார். அடுத்த படம் திருக்கோஷ்டியூரை சேர்ந்த சாந்தி அழகர்சாமி இவர். பெண்கள் டீக்கடை நடத்துவதில் தவறில்லை என்று கூறும் இவர், கடந்த 6 ஆண்டுகளாக டீக்கடை நடத்தி வருகிறார்.



இந்தியாவில், வங்கிகள் (அனைத்து மகளிர் கிளைகள்) காப்பீடு, தொலைத் தொடர்பு, செல்போன், கால் சென்டர்கள், ஹோட்டல்கள், சில்லரை விற்பனையகங்கள் மற்றும் சேவைகள் துறையில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் பணிபுரிந்து வருகிறார்கள். இது இந்தியாவின் தற்போதைய பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

இன்றைக்கு 150 அல்லது 100 ஆண்டுகளுக்கு முன் இருந்த பெண்களின் நிலையும், இன்றைய பெண்களின் நிலையும் சிறிது வேறுபட்டு உள்ளது. அன்று ஒரு மார்ச் 8–ந் தேதி அன்று நியூயார்க் நகரில் பணிபுரியும் பெண்கள், நல்ல சம்பளம் மற்றும் தரமான வாழ்க்கையை தூக்கோரி பேரணி நடத்தினர். இன்றைய இந்தியாவில் அந்நிலை தொடருகிறது. வேளாண்துறையில் பணிபுரியும் பெண்களில் 80 சதவீதம் பேர், ஆண்களை விட குறைவான சம்பளத்தையே பெறுகிறார்கள். அதே நேரத்தில், அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள், முக்கிய பொறுப்புகளில் இருப்பதோடு, தொழில் முனைவோர்களாகவும் உள்ளனர்.

**24 சதவீதம்**

தகவல் தொழில் நுட்பத் துறையில், பெண் பணியாளர்களின் பங்களிப்பு 24 சதவீதமாக உள்ளது. இது, அடுத்த இரண்டு ஆண்டு காலத்தில் 35 சதவீதமாக உயரும் என நாஸ்காம் அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது.

அதே நேரத்தில் பி.பி.ஓ. துறையில், பெண்களின் பங்களிப்பு 60 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. மெட்ராஸ் மேனேஜ்மென்ட் அசோசியேஷனின் செயல் இயக்குனர் மேஜர் எஸ். லட்சுமணன் கூறும்போது கற்றுச்சூழல், கல்வி, விழிப்புணர்வு வாய்ப்பு உள்ளிட்டவை பெண்களை அமைப்பு ரீதியான பணியில் ஈடுபட வைத்துள்ளதோடு, அவர்களை முடிவு எடுக்கும் பணிகளிலும் அமர்த்தி உள்ளது.

"டஃபே நிறுவனத்தின் மல்லிகா ஸ்ரீனிவாசன், கைனடிக் என்ஜினியரிங் நிறுவனத்தின் சுலஜ்ஜா ஃபிமோத்வானி ஆகியோர் உற்பத்தி துறை நிறுவனங்களில் சிறப்பாக செயல்படும் பெண் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்" என்றார்.

இந்தியாவில் படிப்பறிவு உள்ள ஆண்களின் சதவீதம் 65.5 சதவீதமாக உள்ளது. இது பெண்களில் 50 சதவீதமாக உள்ளது. மேலும், பணிபுரியும் பெண்களுக்கு ஆண்களைவிட குறைவான சம்பளமே வழங்கப்படுகிறது. மேலும், அவர்களின் பணியானது உரிய முறையில் அங்கீகரிக்கப்படாமல் உள்ளதோடு, குறைத்து மதிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் முக்கியத் தொழிலான வேளாண்மையில், எந்த ஒரு மாநிலத்திலும், ஆணுக்கும், பெண்ணுக்கும் சமகூலி வழங்கப்படாத நிலை தற்போது காணப்படுகிறது.

"தற்போது அரசு மற்றும் முக்கிய பொறுப்புகளில் பெண்களின் பங்களிப்பு . மிகவும் குறைவாக உள்ளது. தற்போது, பாராளுமன்ற உறுப்பினர்களில் 8 சதவிதத்திற்கும் குறைவாகவும், மந்திரி சபையில் 6 சதவிதத்திற்கும் குறைவாகவும், உயர்நீதி மன்றம் உச்ச நீதிமன்றங்களில் 4 சதவிதத்திற்கு குறைவாகவும் பெண்கள் உள்ளனர். மேலும் நிர்வாகிகளாக வெறும் 3 சதவிதத்திற்கும் குறைவான பெண்களே உள்ளனர்" என்றும் லட்சுமணன் தெரிவித்தார்.



# 20-இன்றைய பெண்களின் நிலை

பெண்களின் வாழ்வில் மூன்று கட்டங்கள்

பெண்களின் முன்னேற்றம் என்பது சந்தோஷமான விஷயம். அதே நேரம் அது அவர்களின் வளர்ச்சிக்கான முன்னேற்றமா என்பதைக் கவனிக்க வேண்டியது முக்கியம் என்கிறார், சுமதி நிவாஸ்.

இவர் 'விசர்க்கின்' என்ற அமைப்பு மூலம் பல்வேறு சமுகப் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார். "இன்றைய நிலையில் முன்னேற வேண்டிய நிலையில் பல பெண்கள் இருக்கிறார்கள். முன்னேறி விட்டோம் என்ற நிலையிலும் பல பெண்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு தரப்பாருக்குமே ஒரு சரியான வழிகாட்டல் தேவைப்படுகிறது. எங்கள் அமைப்பு இது விஷயமாக வழிகாட்டுவதில் முக்கிய பொறுப்பை மேற்கொண்டிருக்கிறது"



இப்படிச் சொல்லும் சுமதி நிவாஸ், விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் மூலமும் அதை சாதிக்க முடியும் என்கிறார்.

பெண்களுக்கு மட்டும்தான் இந்த அமைப்பா? கேட்டால் "இது ஒட்டுமொத்த சமூகத்தை சரி செய்யும் முயற்சி. இதில் பெண்களும் ஒரு அங்கம் என்ற முறையில் அவர்கள் மீதும் எங்கள் பார்வை உண்டு" என்கிறார்.

எப்படி சமூகம் மீது இப்படியொரு ஆர்வம்?

"நான் சர்ச்பார்க் மாணவி என்ற முறையில் 5 வருஷம் முன்பு பழைய மாணவர்களை ஒன்று திரட்டி ஒரு விழா எடுத்தேன். இதற்கென பழைய பள்ளி நண்பர்களை தேடிப்பிடித்து விழாவுக்கு வரவழைத்தோம். இந்த விழாவில் அறிவுக்கண்கள் என்ற தலைப்பில் மாணவர்களுக்கான தகவல்களை வழங்கினோம். இதற்கு நல்ல மரியாதை இருந்தது. இதற்குப் பிறகு தான் அறிவு பூர்வ விஷயங்களை இது மாதிரியான நிகழ்ச்சிகள் நடத்தி வழங்கலாம் என்ற எண்ணம் எனக்குள் வலுத்தது.

தொடர்ந்து எனது பள்ளி நண்பர் வட்டமும் என் ஊக்கத்துக்கு ஆக்கம் தந்தது. கடந்த ஆண்டு இந்த அமைப்பை தொடங்கும் அளவுக்கு இந்த ஊக்குவித்தல் அமைந்தது. பெரும்பாலும் பெண்களுக்கான விஷயங்களில் அதிக கவனம் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு இந்த ஊக்குவிப்பு எனக்கு உற்சாகம் தந்திருக்கிறது.

பெண்கள் விஷயத்தில், உங்கள் அணுகுமுறை எப்படியானது?

"பெண்களின் . மனநிலையை மூன்று கட்டங்களாக பிரிக்கலாம். கல்லூரிப் பருவம் வரை ஒரு கட்டம். திருமணமான பிறகு அடுத்த கட்டம். வயோதிகம் அடுத்த கட்டம். இந்த மூன்று கட்டங்களிலுமே பெண்களுக்கு

அதிக பொறுப்புகள் இருக்கின்றன. பக்குவமாகக் கையாள வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன.

பள்ளி, கல்லூரி நிலையைப் பொறுத்த வரையில் பெற்றோரின் பக்குவமான கையாளுதல் அவசியம். பிள்ளைகளுக்கு என்ன பிடிக்கும்— படிப்பைப் பொறுத்தவரையில் அவர்களின் விருப்பம் தெரிந்து கொண்டு அதற்கேற்ப பெற்றோர் செயல்பட வேண்டும். பிள்ளைகள் ஏதேனும் சிந்தனை வயப்பட்ட நிலையில் இருப்பார்களேயானால் அதற்கு என்ன பின்னணி என்பது வரை பக்குவமாக தெரிந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளின் மனதைப்படிக்கிற பெற்றோர் தான் அவர்களை சரியாக வழி நடத்த முடியும்.

சில பெற்றோர் இருக்கிறார்கள். தங்களுக்கு விருப்பமான துறையைத்தான் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று வற்புறுத்துவார்கள். இதனால் பிள்ளைகளின் எதிர்கால கல்விக்கனவு சிதைந்து போகிறது போகிறது. பிள்ளைகளின் கல்வியார்வம் அங்கீகரிக்கப் படுகிற குடும்பங்களில் இருக்கும் சந்தோஷமே தனி. இப்போதுள்ள இளைய தலைமுறைப் பெண்கள் பன்முகத் திறமை கொண்டவர்களாக இருக்கிறார்கள். மாதம் 30 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிற அளவுக்கு இன்றைய தொழில் உலகம் அவர்கள் கையில்.



பல குடும்பங்களில் பிள்ளைகளின் அதிக பட்ச வருமானமே பிரச்சனையாக இருக்கிறது. பணம் தாராளமாக கையில் புழங்குவதால் பெரும்பாலான பிள்ளைகள் தங்கள் விருப்பங்களைத் தாங்களே தீர்மானிக்கிறார்கள். இதனால் பெற்றோரின் குரல் முடங்கி விடுகிறது. இதனால் அந்த பெண்கள் தங்கள் வாழ்க்கை வரை எடுக்கிற முடிவுகள் பல நேரங்களில் தப்பாகி விடுகிறது. சம்பாதிக்கிற பெண் தவறை தட்டிக் கேட்டால் தவறாக எடுத்துக் கொள்வாள் என்கிற பெற்றோரின் தயக்கம் இவர்களை கொம்பு சிவி விட்டு விடுகிறது.

இப்படிப்பட்ட குடும்பத்துப் பெண்கள் – பெற்றோர் பிரச்சனையில் எந்த மாதிரியான அணுகுமுறை நல்லது என்பதை எங்கள் அமைப்பு மூலம் தெளிவுபடுத்துகிறோம். இளையவர்களை வழிநடத்துவதற்கென்றே ஒரு டாக்குமெண்டரி படம் தயாரிக்கும் திட்டத்தில் இருக்கிறோம்.

சில பெற்றோர் இருக்கிறார்கள். இவர்கள் பிள்ளைகளிடம் பேசக்கூட நேரம் இல்லாத பெற்றோர்கள். பிள்ளைகளுக்காக நேரம் காலம் பாராமல் ஓடி ஓடி உழைப்பார்கள். கேட்டால் பிள்ளைகளுக்காக இப்படி எங்களை வருத்திக்கொள்கிறோம் என்பார்கள். பிள்ளைகளின் பெற்றோராக அன்பு செலுத்திப் பாருங்கள். நண்பர்கள் ஸ்தானத்தில் நட்பு பாராட்டிப் பாருங்கள்



உங்களை கொண்டாடுவார்கள். எந்த விஷயமானாலும் அது எவ்வளவு பெரிய விஷயமாக இருந்தாலும் உங்களிடம் பகிர்ந்து கொண்டு உங்கள் ஆலோசனைகளை கேட்பார்கள். சந்திக்கவே முடியாத இடைவெளிகள் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே நிரந்தரமாகிவிட்டால் ஓடியாடிச் சேர்த்த பெற்றோரின் பொருளாதாரம் பிள்ளைகளுக்கு தேவைப்படாமலே போய்விடக்கூடும்.

எங்கே அன்பு இல்லையோ, அங்கே உறவுகள் தனிமைப்படுத்தப்பட்டு விடும். இன்றைக்கு முதியோர் இல்லங்களில் இருக்கிற பலரின் பின்னணியிலும் புரிந்து கொள்ளப்படாமல் இருந்துவிட்ட இடைவெளி தான் காரணமாக இருக்கிறது. வயதான காலத்தில் தாங்க வேண்டிய பிள்ளைகள் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவதற்கும் இதுதான் காரணமாகி விடுகிறது. இது விஷயத்தில் பெற்றோர்களுக்கும் நிகழ்ச்சிகளில் மெசேஜ் சொல்கிறோம்.

இப்படி நிகழ்ச்சியினூடே மெசேஜ் என்பது 30 நிமிட நிகழ்ச்சியில் 5 நிமிடமாவது இடம்பெற்று அதற்கான தாக்கத்தை ஏற்படுத்தி விடும். இதற்கென நாங்கள் தொடங்கியிருக்கிற அமைப்பு மூலம் வாராவாரம் டிவிக்கான நிகழ்ச்சிகள், விளம்பர படங்கள், மேடை நிகழ்ச்சிகள் என வழங்கி வருகிறோம்.

"பொதுவாக எல்லாப் பெண்களின் திறமையும் உரியவிதத்தில் வெளிப்படுவதில்லையே"

அதற்குக் களம் வேண்டும். படிக்காத சாதாரண நிலையில் உள்ள பெண்களுக்குக் கூட திறமைகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் அது கிணற்றிலே போட்டகல் போல் இடம் தெரியாமல் இருந்துவிடுவது தான் வேதனை. நாங்கள் நடத்திய இல்லத்தரசி நிகழ்ச்சியில் கண்கூடாக உணர்ந்தோம். நாங்கள் நடத்திய இந்த நிகழ்ச்சியில் அழகாக இருக்க வேண்டும்; படித்திருக்கவேண்டும்: இத்தனை வயதுக்குள் இருக்க வேண்டும் என்றெல்லாம் எந்த தகுதியும் அளவீடாக வைத்துக் கொள்ளவில்லை. அவர்களுக்கான திறமை மட்டுமே அளவீடாக கொள்ளப்பட்டது. எடுத்த எடுப்பில் இந்த நிகழ்ச்சிக்கு 300 பேர் விண்ணப்பித்ததில் எங்களுக்கே கொஞ்சம் ஷாக்.

திறமையுள்ள பல் பெண்களும் குடும்பம், குழந்தை என்று வரும்போது தங்கள் திறமைகளை தங்களுடன் புதைத்துக் கொண்டு விடுகிறார்கள். இப்படிப்பட்ட பெண்களின் திறமைகளை ஊரறியச் செய்ய வேண்டும். குடும்பத்திற்கு எல்லாமுமாக இருந்து கொண்டு தங்களை முன்னிலைப் படுத்திக் கொள்ளாத அவர்களின் நிலையை விளக்கவே நிகழ்ச்சிக்கு 'மவுனத்தூண்கள்' என்று பெயர் வைத்தோம். இதில் ஆரோக்கியத்திலான அக்கறை, சமையலில் அவர்கள் கைவண்ணம், கலைத்திறமை என சகலவற்றிலும் பவர்புல்லாக வெளிப்பட்டார்கள் பெண்கள்.

இதில் ஆச்சரியம், தங்கள் இல்லத்தரசிகளின் திறமை கண்ட அவர்களின் கணவர்களே வியந்து போனதுதான். இந்த போட்டி மூலம் பெண்களின் திறமைகளை இன்னும் அதிகஅளவில் வெளிக்கொண்டுவர

முடியும் என்பதை உணர்ந்து கொண்டால் ஆண்டுதோறும் இந்தப் போட்டிகளை தொடரும் எண்ணத்தில் இருக்கிறோம். இந்த ஆண்டு அக்டோபரில் இல்லத்தரசிகளின் திறமைகளை மறுபடியுமாக வெளிக்கொண்டு வரவிருக்கிறோம்.

விளையாட்டுத் துறையிலும் பெண்கள் சாதனை மகத்தானது. கடந்த 8–ம் தேதி மகளிர் தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அவர்கள் திறமைகளை வெளிப்படுத்தினோம்.

எங்கள் அமைப்பு மூலம் முதியோர் இல்லங்களுக்கும் சென்று வருவதுண்டு. -குடும்பம் புறக்கணித்த வேதனையை மறைத்துக்கொண்டு வாழும் அவர்களுக்கு நாங்கள் அன்பாக பேசியது பிடித்துவிட்டது என்று நினைக்கிறேன். ரொம்பவே நெகிழ்ச்சியாகிவிட்டார்கள். அவர்களுக்கும் அழகுப்போட்டி, நடனப்போட்டி, விளையாட்டுப்போட்டி என நடத்திபோது அவர்கள் முகங்களில் தெரிந்த சந்தோஷம் இருக்கிறதே அதை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

இந்த அமைப்பைத் தொடங்கி அதன் மூலம் வெளிப்பட்ட திறமையாளர்கள் இந்த சமுதாயத்தில் எங்காவது யாரையாவது திறமையாளராக மாற்றிக்கொண்டிருப்பார்கள். இந்த வகையில் இன்னும் பலர் வெளிப்பட வேண்டும். அப்படியானால் தான் எங்கள் நோக்கம் நிறைவேறியதாக அர்த்தம்



சுமதி நிவாஸ் பி.எஸ்.சி. பட்டபடிப்பை எத்திராஜ் கல்லூரிலும், எம்.ஏ. முதுகலைப்படிப்பை அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் முடித்தவர். கணவர் நிவாஸ் வர்த்தகத்துறையில் பிஸியாக இருக்கிறார். இந்த தம்பதிகளுக்கு கிரண்–கிஷன் என இரட்டை வாரிசுகள். பிளஸ்–2 படிக்கும் இந்த இரட்டையர்கள் தேசிய அளவிலான டென்னிஸ் வீரர்கள்.

### அமிர்தா ஷெர் கில்

புகழ்பெற்ற இந்திய பெண் ஓவியர் அம்ரிதா ஷெர் கில் வரைந்த ஒரு ஓவியம் டெல்லியில் நடந்த ஒரு ஏலத்தில் 6 கோடியே 90 இலட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்திய மண்ணில் அதிக விலைக்கு விற்கப்பட்ட ஓவியம் இதுதான். 'இந்திய கிராமத்து காட்சி' என்ற அந்த ஓவியம் சிம்லாவில் வரையப்பட்டது. கில்லின் ஓவியங்கள் தேசிய கலைச் சொத்துக்களாக அரசால் அறிவிக்கப்பட்டு இருப்பதால் வெளிநாட்டினர் இவற்றை வாங்க முடியாது. இல்லாவிட்டால் இதன் விலை எங்கோ போயிருக்கும்.

### நாகூரம்மாள்

ஆம்பளைங்க மட்டுமே செய்யற விஷயம்னு எந்த தொழிலும் இல்ல. ஏழைங்க எந்த தொழிலா இருந்தாக்கூட., முறையா கத்துகிட்டா



பொம்பளைங்களால நல்லா செய்யமுடியும் என்று உரக்கச் சொல்கிற நாகூரம்மாளை கண்டிப்பாக பார்த்திருப்பீர்கள். வாட்ச் பார்த்தப்படி ஒடுகிற சந்தர்ப்பத்தில் நடைபாதை ஓரத்தில் தெரிகிற முகம் அது

ஆமாம்.. எழும்பூர் ரயில் நிலையம் எதிரே நடைபாதையில் உட்கார்ந்தபடி



செருப்பு தைக்கிறார் நாகூரம்மாள். பிளாட்பாரவாசிகள் அவரைச் செல்லமாக 'நாகூர் ஆயா' என்கிறார்கள். தந்தை கித்தேரியிடம் கற்றாராம். செருப்புகளுக்கு பாலீஷ் போடுவது, ஷு ரிப்பேர், புது செருப்பு செய்வது என்று எல்லாமே நாகூரம்மாளுக்கு அத்துப்படி

"இப்போ 57 வயசாகுது. நாற்பது வருஷமா இதே தொழில் — இதே பிளாட்பாரம் வீட்டுக்காரர் தனபாலனுக்கும் இதே வேலை. 'என்கிட்டேதான் செருப்பு வாங்குவேன்' னு தேடி வர்ற நல்ல மனுஷங்களை தவிர பெரிசா சம்பாதிக்கல. அஞ்சு பசங்க. நாலு பேருக்கு கல்யாணம் பண்ணிட்டேன். வாய்க்கும், வயித்துக்குமே போராட்டமா இருந்ததால் யாரையும் படிக்க வச்சி முன்னுக்கு கொண்டு வர முடியல" எனக் கலங்கினாலும் நாகூரம்மாள் நம்பிக்கையோடு பேசுகிறார்.

'பொம்பளைங்க யார்கிட்டேயும் கையேந்தி நிக்கக்கூடாது. முடிஞ்ச அளவுக்கு பெட்டிக்கடை, இட்லிக்கடைன்னு எதையாவது வெச்சுப் பொழைச்சிக்கணும். எந்த வேலையிலும் வித்தியாசம் இல்ல. ராக்கெட்டையே பொம்பளை ஓட்டிட்டா' என்று பொளந்து கட்டுகிறார் நாகூரம்மாள்.

ஒருமுறை ஷு ரிப்பேர் செய்து கொள்ள வந்த வெளிநாட்டுக்காரர் தனது திருமண மோதிரத்தை நாகூரம்மாள் கடையில் தவறவிட்டு விட்டாராம். அதைப் பத்திரமாக எடுத்து வைத்த நாகூரம்மா. ஒரு வாரம் கழித்து அவர் அந்த வழியாக போகும் போது கூப்பிட்டு கொடுத்திருக்கிறார். நாகூரம்மாளின் பண்பை நினைத்துத் திறந்த வாயை மூடவே இல்லையாம் வெளிநாட்டுக்காரார்.

### ஆழ்கடல் ஆராய்ச்சியில் அனிதா

இன்னமும் மனித அறிவுக்கு எட்டாத மர்மங்கள் நிறைந்த பிரதேசம் ஆழ்கடல். துணிச்சலான ஆண்களே ஆராய்ச்சி செய்யத் தயங்கும் இடம். ஆனால் அனிதாவுக்கு கடல் மீது காதல். அனிதா ஆழ்கடல் ஆராய்ச்சித் துறையில் இந்தியாவின் முதல் மற்றும் ஒரே பெண் விஞ்ஞானி.

நாகர்கோவிலைச் சேர்ந்தவர் அனிதா. சுனாமிக்குப் பிறகு மீனவ மக்களே கடலைக் கண்டு அலறி நிற்க, அந்த கோரம் நிகழ்ந்த ஒரே வாரத்தில் மாலத்தீவு கடலுக்குள் ஆராய்ச்சிக்காக சென்றார் இவர்.

கடல்சார் உயிர் தொழில்நுட்பத்தில் டாக்டர் பட்டமும், கடல்வள உயிரினங்கள் பற்றிய ஆய்வில் எம்.ஃபில் படிப்பும் முடித்தவர்.

உடை, அறையில் இருக்கும் பொம்மைகள், தலையணை என அனிதாவின் விடெங்கும் மீன்தான். இதைப்பற்றிக் கேட்டதுமே சிரித்தப்படி பேச ஆரம்பித்தார்.

'சின்ன வயசிலிருந்தே கடல் உயிரினங்களும், தாவரங்களும் எனக்கு விருப்பமான விஷயங்களாக இருந்தது. இதைப்பற்றி படிக்கப் போறேன்னு சொன்னதும் வீட்டுல சரின்னு சொல்லிட்டாங்க. ஆனால் கடலுக்குள்ளே போகணும்னு சொன்னதும் பயந்துட்டாங்க. என்னோட பிடிவாதம் அவங்களை சம்மதிக்க வச்சது. நானும் மற்றவர்களை மாதிரி எதையோ படிச்சு, ஏதோ வேலைன்னு இருந்திருந்தா கடலுக்குள்ள இருக்கற அற்புதங்கள் தெரியாமலே போயிருக்கும்.' என்கிறார் அவர்.

உலகத்தின் பல பகுதிகளுக்கும் கடல் ஆராய்ச்சிக்காக சென்றிருக்கும் அனிதா, கடலின் மதிப்பு தெரியாமல் அதை மக்கள் சீரழிப்பது குறித்து ரொம்பவே வருத்தப்படுகிறார்.

"சுனாமி வந்தப்போது எல்லாரும் கடல் மேலே கோபப்பட்டாங்க. ஆனா இயற்கைப் பேரழிவுகள் அடிக்கடி நடக்கிறதுக்கு காரணமே நாம்தான். அரிய மீன்களை பிடிக்காதீங்கன்னு எவ்வளோ சொல்றோம். யாரும் கேட்கிறதேயில்லை. சில வகை உயிரினங்களை மொத்தமா அழிக்கும் போது பூமியோட அமைப்பே மாறிப்போயிடும். நம்மோட அலட்சியத்தால் இயற்கை மொத்தமா ஒருநாள் நமக்கு எதிரா திரும்பப் போகுது" என்று கோபப்படும் இவர், கடல் அனுபங்களைப் பற்றிக் கேட்டாலே சந்தோஷமாகிறார்.



"கடலுக்கு அடியில் போகப் போக தண்ணீர் தெளிவாக இருக்கும். நம்மைச் சுற்றி கலர் கலரான மீன்கள், பவளப்பாறைகள், கடல் பாசிகள் எல்லாத்தையும் பார்க்கிற போது, திரும்பி தரைக்கு போக வேணுமான்னு தோணும். ஆனா சிலிண்டர்ல ஆக்ஸிஜன் தீரப்போறதா இன்டிகேட்டர் சொன்னதும் போய்த்தானே ஆகணும்.

ஒரு தடவை இந்தோனேஷியக் கடல்ல ஆராய்ச்சியில இருக்கும்போது, பக்கத்தில் ஒரு சுறாமீன் வந்திடுச்சு. திகைச்சுப் போயிட்டேன். அசையாம இருக்கறேன். அந்த மீன் அப்படியே பத்து நிமிஷம் இருந்துட்டு, பேசாமா போயிடுச்சி. சில வேளையில் இப்படியும் ஆகிறதுண்டு" என்று சொல்லும் அனிதாவுக்கு ஒரே ஒரு வருத்தம், இந்தத் துறைக்கு பெண்கள் வருவதில்லை என்பதுதான்.

'பொதுவா நம்ம ஊர் பெண்களுக்கு சரியான வாய்ப்புகள் கிடைக்கிறதில்லைன்னு ஒரு நினைப்பு இருக்கு. நிஜம் அது இல்லை. இதை சரியா புரிஞ்சிகிட்டா நிச்சயம் சாதிக்கலாம்.

ஜெயிக்கிறதுக்கு திறமை மட்டுமே போதுமானது. ஆனா, பெண்ணாங்கிற வித்தியாசம் முக்கியமில்லை" என்று உறுதியாக சொல்கிறார் அனிதா.



## 1. இன்றைய நிலையில் பெண்ணியச் சிந்தனைகள்

### தெரிந்த பங்கு, தெரியாத முகங்கள் !

இந்தியப் பொருளாதார உலகில் பெண்கள் சாதனையாளர்களாகி வருகிறார்கள் என்பது கண்கூடு. ஊறறிந்த முகம் தெரிந்த பெண்மணிகளை விடுங்கள்; முகம் தெரியாத, அன்றாட வாழ்க்கையில் போராடும் பெண்களுக்கும் இந்தப் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான பங்கு உண்டு.


விவசாயம், சிறிய பெட்டிக்கடை, தெருவோர வியாபாரம், வீட்டிலிருந்துகொண்டு தொழிற்சாலைகளுக்கு உதிரி பாகங்கள் உற்பத்தி, வீடுகளில் வேலை என உழைக்கும், படிப்பறிவு அதிகம் இல்லாத பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மத்திய அரசின் கணக்கெடுப்புப்படி, 11 கோடி 30 லட்சம்!

இவர்களுடைய உழைப்பின் மதிப்பு? ரூ. 5 லட்சம் கோடிக்கு மேல்! நம் நாட்டின் மொத்த உற்பத்தியில் 20 சதவிகிதம்!

சத்தமின்றி, விளம்பரமின்றி உழைக்கும் இந்தப் பெண்களைப் பெருமையுடன் நினைத்து வாழ்த்துவோம்.

- சந்திரா நாராயணன்

### பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர்கள்



சூலமங்கலம் ராஜலட்சுமி, ஜெயலட்சுமி, சிக்கல் நீலா, குஞ்சுமணி, பெங்களூர் ரமணி அம்மாள், புலியூர் சரோஜா, தாம்பரம் லலிதா, கோவை சரளா, பரவை முனியம்மா, கொல்லங்குடி கருப்பாயி, பம்பாய் சரோஜா, லலிதா, குருவாயூர் பொன்னம்மாள்

.பா-சியாமளா பாலு

### எண்களில் பெண்கள்

- ஆண்டுக்கு 1.25 லட்சம் பேர் மருத்துவர் பட்டம் பெறுகின்றனர். அதில் 50 சதவிகிதம் பெண் பட்டதாரிகள்.
- ஆண்டுக்கு 50 சதவிகிதம் இளங்கலை பட்டம் பெறுபவர்கள் பெண்கள்.
- இந்தியாவில் கணினி துறையில் 21 சதவிகிதம் பெண்கள்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் 25 சதவிகிதம் பெண்கள்.
- 6.38 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ள பஞ்சாயத்தில் 77,210 பேர் கிராமப் பஞ்சாயத்து பெண் தலைவர்கள்.

- ஒழுங்குப்படுத்தப்பட்ட துறையில் வேலை செய்பவர்களில் 18 சதவிகிதம் பெண்கள்.
- விடுதலைக்குப் பிறகு 13 பெண்கள் மாநிலங்களில் முதல்வராகி யுள்ளனர்.
- இந்தியாவில் உள்ள 21 உயர்நீதிமன்றங்களில் உள்ள 647 நீதிபதிகளில் 19 பேர் பெண்கள்.
- இந்தியப் பெண்களின் சராசரி ஆயுள் 6.48 ஆண்டுகள்

—கு. கல்யாணி பாய்.

முதல் உலகப் பெண்மணிகள்

ரேடியோவில் இசை நிகழ்ச்சியை நடத்திய முதல் பெண்மணி – டேம்நெல்லி மெல்பா (ஆஸ்திரேலியா) 1920ல் இங்கிலாந்து ரேடியோவில் நடத்தினார்.

உலகின் முதல் பெண் பைலட் – மிஸ். யேல் பிங்கல்ஸடீன் (ஆஸ்திரேலியா)

ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் பெண்மணி – ஜெர்ட்ரூட் எடர்லி (1926)

உலகை தனியாகவே விமானத்தில் சுற்றிய முதல் பெண்மணி – ஷீலா ஸ்காட் (லண்டன்)

ஒலிம்பிக் முதல் பெண்கள் மாரத்தானில் தங்கப் பதக்கம் பெற்ற பெண் – ஜீன் பெனாயிட்

இலக்கிய நோபல் பரிசு பெற்ற முதல் பெண் – பெர்ததோவன் சட்னர் (1905)

சர்வதேச பெண்கள் கிரிக்கெட்டில் சதமடித்த முதல் பெண்மணி சாந்தா ரங்கசாமி (இந்தியா)

உலகின் முதல் கட்டடக் கலை பட்டதாரி – ஈதல் மேரிசார்லஸ் (பிரிட்டன் - 1898)

மருத்துவத்தில் எம்.டி. பட்டம் பெற்ற முதல் பெண்மணி – எலிஸபெத் பிளாக்வெல் (அமெரிக்கா)

உலகின் முதல் பெண் ஒளிப்படத்துறை நிபுணர் – நமரா ஸ்ரபோவா (ரஷ்யா)

உலகின் முதல் பெண் கண்டக்டர் – காதே பர்டன் (இங்கிலாந்து) 1909

—அ. சித்ரா அனந்தகுமார்.
—பத்மா திருமலை

## 2. களரி சேச்சி !

நம் தேசப் பிதா காந்தி கண்ட கனவை நனவாக்கி இருக்கிறார் சமீரா சேச்சி. ஆம்! கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மஞ்சேரி கிராமப் பெண்கள், நள்ளிரவில் கூட தைரியமாக, தனியாளாக வெளியில் வருகிறார்கள்.



இதற்குக் காரணமான சமீராவைப் பற்றி விசாரித்தால் " ஓ! களரி சேச்சியைத் தேடி வந்நோ? " என்று அவர் வீட்டை மரியாதையுடன் காட்டுகிறார்கள்.

சமீராவின் அப்பா மொய்தீன் குட்டி குருக்கள், பழைய எம்.ஜி.ஆர். படங்களில் அவருடன் சண்டையிட்ட ஸ்டண்ட் நடிகர். இவருடைய பத்து குழந்தைகளில் 7– வது பெண்தான் சமீரா. தான் களரி கற்க நேர்ந்த விதம் பற்றி விவரித்தார் சமீரா. "அப்பா! களரிக்குனு ஒரு சங்கம் தொடங்கி, கத்துக் கொடுத்தாலும் நான் அதுல பெரிய ஆர்வம் இல்லாமத்தான் இருந்தேன். ஆனா, என்னை களரி கத்துக்க வெச்ச அந்த சம்பவத்தை என்னால் வாழ்க்கையில் மறக்க முடியாது."

எங்களை மாதிரி மலைகளில் குடியிருப்பவர்கள் எல்லாருமே அடர்த்தியான காட்டைத் தாண்டித்தான் பள்ளிக்கோ, வேலைக்கோ போக முடியும். அப்படி ஒருநாள் நான் ஸ்கூல்லிருந்து வந்துக்கொண்டிருந்தப்போ, ஒருவன் திடீர் என என்னை துரத்த ஆரம்பித்தான். புத்தகத்தையெல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தேன். எப்படித்தான் வீட்டுக்கு வந்தேன் என தெரியவில்லை. அப்பாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு 'ஓ' என அழுதேன். அப்போது, எங்கப்பாதான் என்னை தைரியப்படுத்தி, களரி கற்றுக் கொள்ள சொன்னார்." என்கிற சமீரா, தினமும் பள்ளிக்குக் கிளம்பும் முன்பும் பள்ளி முடிந்து வந்த பிறகும் தீவிரப் பயிற்சி எடுத்திருக்கிறார்.

"வாள், பரிஜ, கத்தி, படி, மழு, குந்தம், உருமி, சூலம், கத—னு 18 ஆயுதங்களைக் கொண்டு, பல வருஷங்கள் தீவிரப் பயிற்சி எடுத்துக்கிட்டேன். பயிற்சி முடிந்தவுடன் மலப்புரம் மாவட்ட அளவில் நடந்த பெண்கள் களரி சண்டையில் முதல் பரிசு வாங்கினேன்" என்கிறவர், இந்தக் களரியை மற்ற பெண்களுக்குக் கற்றுத் தர நேர்ந்ததும் ஒரு சம்பவத்துக்குப் பிறகுதானாம்.

"எங்க மலைப்பகுதியில வருஷா வருஷம் நடக்கிற திருவிழாவுக்கு அந்த வருஷமும் என் தோழிகளோடு போயிருந்தேன். அப்போது, எங்களை ரெண்டு வாலிபப் பையன்கள் ரொம்ப மோசமா கேலி பண்ணினாங்க. பார்த்தேன் — நான் கத்துக்கிட்ட களரியை உபயோகிச்சு அவர்களை பிடிச்சு நல்லா நையப் புடைக்கவும், 'அய்யோ— அம்மா—'னு அலறியடித்து ஓடிவிட்டார்கள். இத்தனைக்கும் அவங்க ரெண்டு பேருமே நல்ல ஆஜானுபாகுவானவங்க. இதைப் பார்த்துக்கிட்டே இருந்த என்னோட தோழிகள் தங்களுக்கும் இதைக் கத்துத் தரச் சொல்லி வற்புறுத்தினாங்க. அப்பிடி ஆரம்பிச்சதுதான்" என்று சிரிக்கிறார்.



இன்று சுற்றுப்புற கிராமங்கள் பலவற்றிலிருந்தும் பெண்கள் இவரிடம் களரி கற்க வருகிறார்கள். திருமணத்துக்குப் பிறகும் தொடர்ந்து களரி கற்றுத் தருவது பற்றிச் சொன்னார் சமீரா.

"கல்யாணமாகும் போது நான் களரி டீச்சர்கின்ற விஷயம் என் கணவருக்குத் தெரியாது. அப்புறமா அவர் கிட்ட பதமா சொல்லி, அதைத் தொடர அனுமதி கேட்டேன். முதலில் மறுத்தவர், அப்புறமா சுற்றியிருக்கிற பெண்கள் 'சேச்சியை எங்களுக்குக் கத்துத் தரச் சொல்லுங்க' னு வற்புறுத்துனதால் சம்மதித்தார்''என்கிறார்.



களரியின் பெருமைகள் பற்றி மூச்சு விடாமல் பேசுகிறார் சமீரா.

"களரியில் கையில் இருக்கிற எந்தப் பொருளையும் ஆயுதமா உபயோகிக்க முடியும். இல்லாதபோது, வெறுமனே கைகளைக் கொண்டே பெண்கள் தங்களை ஆபத்துகளிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும். எதிரி நம்ம பக்கத்தில் வரும்போதே நிலைக்கேற்ப மாதிரியான பிடியைப் போட்டு அவர்களை தூக்கி வீசிடலாம். இந்த ஸ்டைல்ல, ஒரு பெண் மூன்று ஆண்களை ஒரே சமயத்தில் ரொம்ப ஈஸியா அடிச்சு வீழ்த்திடலாம். ஒருவனைப் பிடிக்கிற பிடியைப் பார்த்து மற்றவர்களுக்கு பயம் வரணும். அந்த மாதிரி முழு நம்பிக்கையோட, முழு கவனத்தோட பிடிக்க வேண்டும். சுடிதார், மிடி, புடவை, ஜீன்ஸ் போன்ற எந்த உடையும் களரிக்குத் தடையே இல்லை" என்று அவர் சொல்லச் சொல்ல, களரி தமிழகம் வரும் நாளை எதிர்பார்க்கத் தொடங்கி விட்டோம்.

—வீர கேரளம் சரவணன்
படங்கள்: சிவா

## ஆனி ஸ்டெ:ஃபி !



"ஐந்தறிவு படைத்த மிருகங்களுக்கு சுனாமி அதிர்வு அலைகளை முன்கூட்டியே கணிக்கும் நுண்ணறிவு இருப்பதால், கடற்கரை பகுதிகளில் மிருகக்காட்சி சாலைகள் அமைக்கலாம்! இது சுற்றுலாப் பயணிகளை கவரும் என்பதுடன் சுனாமி போன்ற பேரழிவுகளிலிருந்தும் எளிதாக தப்பித்துக் கொள்ளலாம்.!"

இப்படி ஒரு ஐடியாவை ஆய்வறிக்கையாக தாக்கல் செய்து விஞ்ஞானிகளையே அசத்துவது என்றால், அது இன்னொரு விஞ்ஞானியாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால், இதைச் செய்து அசத்தி இருப்பவர், நாகர்கோவில் செயிண்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளியில் பதினொன்றாம் வகுப்பு படிக்கிற மாணவி ஆனி ஸ்டெஃபி!

ஆய்வறிக்கையில் மட்டுமல்ல...கட்டுரை, பேச்சு, க்விஸ், நடனம், தனிநடிப்பு என்று எந்தப் போட்டியையும் விடாமல், ஒரு கை பார்க்கும் ஆனிக்கு, தோழிகள் வைத்திருக்கும் பெயர் 'ஆல் இன் ஆல்' ஆனி!



மூன்று வயதிலிருந்து முறைப்படி கற்றுக்கொண்ட பரதநாட்டியத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சியில், கர்நாடக சங்கீதத்தில் ஏகப்பட்ட மேடைகள், ஏரியாவில் பிரபலமான ஒரு ஆர்கெஸ்ட்ராவில் முக்கியமான பாடகி, கராத்தேயில் ப்ளாக் பெல்ட் என்று ஆனியின் தகுதிப் பட்டியலில் கூட்டல் குறிகள் நீண்டுகொண்டே போகின்றன.

"எதுக்குமே நான் காரணமில்லே . ரெண்டரை வயசிலிருந்து என்னை ஒரு சகலகலாவல்லி ஆக்க வேண்டும் ஆசைப்பட்டவர் எங்க அம்மாதான்" என்று ஆனி தன் அம்மா ஷீலாவை கைகாட்ட, மகளை பெருமிதத்தோடு பார்த்தபடி பேசினார் அவர். . .

"நான் எம்எஸ்சி, பிஎட் படிக்கின்றேன். படிப்பைத் தவிர பரதநாட்டியம், பாட்டெல்லாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எனக்கும் எவ்வளவோ ஆசைகள் இருந்தது. ஆனா, அந்தக் காலத்தில் இதெல்லாம் சாத்தியமில்ல.

கல்யாணத்துக்குப் பிறகு ஆனியோட அப்பா குவைத்தில் இருந்ததால், என்னோடு முழு நேரத்தையும் ஆனியை வளர்ப்பதற்கு செலவு பண்ண முடிந்தது. சின்ன வயசுல நான் ஆசைப்பட்டு, முடியாமல் போனதெல்லாம் அவளை செய்ய வேண்டும் என்று சின்ன வயசுலயே அவளை டான்ஸ் ஸ்கூலயும், மியூசிக் கிளாஸ்லயும் சேர்த்தேன். ஆனாலும் கொஞ்சம் தயக்கம் இருந்துச்சு.



'விவரம் புரியாத வயசுல இப்படி கொண்டு வந்து சேர்க்கறோமே....வளர்ந்து பெரியவளானதும் உன்னோட ஆசைக்காக என்னை ஏன் கஷ்டப்படுத்தினன்னு கேட்டுடுவாளோ'னு பயந்தேன். நண்பர்கள், சொந்தக் காரர்கள் ஒவ்வொருத்தரும் இவளைப் பத்தி என்கிட்ட பாராட்டி பேசறப்ப, மனசுக்கு அப்படியொரு ஆனந்தம். மனம் குளிர்ந்து பேசுகிறார் ஷீலா.

ஆனால், இவள் அதையெல்லாம் முடிச்சுட்டு, நான் சொல்லித் தராத பேச்சு, கட்டுரையிலும் ஒரு ரவுண்டு வந்து, 'வேறு என்ன இருக்கு?' னு கேக்கிற அளவுக்கு சுட்டியா இருக்கா..."-ஆனி வாங்கிய கேடயம் ஒன்றை புடவைத் தலைப்பால் துடைத்தபடியே ஷீலா பேச, இடையில் புகுந்தார் ஆனி.

"இப்பொழுது கொஞ்ச நாளாதான் படிப்புக்காக டான்ஸ், கரேத்தேவுக்கு எல்லாம் லீவ் விட்டிருக்கேன். கொஞ்ச நாள் முன்னாடி வரைக்கும் காலையில் எழுந்ததிலிருந்து கராத்தே கிளாஸ், ஸ்கூல், டான்ஸ் கிளாஸ், பாட்டு கிளாஸ், கீபோர்டு கிளாஸ் என நைட் வரைக்கும் பிஸியா ஓடிக்கிட்டிருக்கும். அடிக்கடி போட்டிகள், செமினார்னு கிளம்பிடறதால் கிளாஸ் என ஃபுல் அட்டண்டன்ஸ் இல்லாமல் போனதும் பலரும் 'கொஞ்சம் கண்டிச்சு படிக்க சொல்லுங்க!'னு சொன்னாங்க. ஆனா, அப்பவும் என்னால எல்லாத்தையும் சேர்த்து சமாளிக்க முடியும் என்று நம்பிக்கை வைத்து என்கரேஜ் பண்ணினவங்க எங்க அம்மாவும், எங்க ஸ்கூல் டீச்சர்ஸும்தான்!"

என்று சொல்லும் ஆனிக்கு ப்ளஸ் – டூவில் முதல் ரேங்க் வாங்கிக் காட்டுவதுதான் இப்போதைய லட்சியமாம். வாழ்க்கையில் லட்சியம்... சந்தேகமில்லாமல் ஐ.ஏ.எஸ்!

தமிழக அரசு தந்த 'கலை இளமணி'முதற்கொண்டு 'கலை சஞ்ஜீவி', 'பால்யஸ்ரீ', 'இளங்கலை வித்தகி'என்று இதுவரை வாங்கிய விருதுகளின் பட்டியல் மூச்சு வாங்க நீண்டாலும், இன்னும் எதையாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்கிற தாகத்தில் இருக்கும் ஆனியின் லேட்டஸ்ட் சாதனை கரகாட்டமும், தப்பாட்டமும் கற்றுக் கொண்டது.

–கு. மணிகண்டன்

படங்கள்: ராஜன்



# பெண்களுக்கான சட்ட ஆலோசனைகள்

ஒரு வீடு வாங்க வேண்டுமென்றால் என்னென்ன பத்திரங்கள் பார்க்க வேண்டும்?

–கலைவாணி, சிதம்பரம்




முதலில் அது ஃபிளாட்டா, தனி வீடா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். ஃபிளாட் என்றால் அதில் மொத்தம் எவ்வளவு வீடுகள் இருக்கின்றன. பிரிக்கப்படாத நில உரிமை எவ்வளவு என்பதைப் பார்த்து அதைத்தான் பத்திரத்தில் போட வேண்டும். மேலும் நமக்கு விற்கப் பட்டுள்ள வீட்டின் அளவு எத்தனை சதுர அடி என்பதும் இருக்க வேண்டும். குறைந்தது 30 வருடங் களுக்கு அந்தச் சொத்தைப் பற்றிய வரலாறு உள்ளவாறு தாய்ப்பத்திரம் இருக்க வேண்டும். அதாவது நீங்கள் யாரிடமிருந்து வாங்குகிறீர்களோ அவர்களுக்கு முன்னால் யார் விற்றார்களோ, அல்லது செட்டில்மெண்ட் மூலமாகவோ, பாகபிரிவினை மூலமாகவோ அல்லது உயில் மூலமாகவோ சொத்து வந்திருந்தாலோ, குறைந்தபட்சம் 30 வருடங்களுக்கு அந்த உரிமை உள்ளதா என்பதைக் கவனிக்க வேண்டும். பொதுவாக ஃபிளாட்டுகள் பில்டர் மூலமாகத்தான் விற்கப்படும். அப்படி விற்பதற்கு அவருக்கு அதிகாரம் உள்ளதா, அதாவது பவர் ஆஃப் அட்டார்னி (பொது அதிகாரப் பத்திரம்) உள்ளதா என்று பார்க்க வேண்டும். வில்லங்க சான்றிதழைப் பொறுத்தவரை 13 ஆண்டுகளுக்கு இருந்தால் போதுமானது என்றாலும், 30 வருடங்களுக்கு இருப்பது நல்லது. ஏனென்றால் சொத்தை விற்பவர்கள், நிதி நிறுவனங்களில் கடன் வாங்கிவிட்டு அதைத் திருப்பிச் செலுத்தியிருக்கிறார்களா என்பது வில்லங்க சான்றிதழில் தெரிந்து விடும். சேல் டீட் (கிரய பத்திரத்தில்) இரண்டாவது பக்கத்தைக் கவனமாகப் பார்க்க வேண்டும். நகல்களைக் கொடுத்து வங்கியிலோ அல்லது நிதி நிறுவனங்களிலோ கடன் வாங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம். முக்கியமாக எல்லா பத்திரங்களின் ஒரிஜினல்களையும் பார்க்க வேண்டும். ஒரு வழக்கறிஞரிடம் கொடுத்துப் பார்ப்பது மிகவும் நல்லது.

நான் வெளிநாட்டில் இருக்கிறேன். இங்கு இருந்துகொண்டே இந்தியாவில் சொத்து வாங்கவோ, விற்கவோ முடியுமா?

–உமா ராஜ், யு.எஸ்.ஏ

முடியும். சொத்து வாங்குவதாக இருந்தாலும், விற்பதாக இருந்தாலும் நீங்கள் உங்களுடைய சட்டப்பூர்வமான ஏஜெண்டாக ஒருவரை நியமிக்க வேண்டும். அதற்கு பவர் ஆஃப் அட்டர்னி பத்திரம், அதாவது பொது அதிகாரப் பத்திரம் எழுத வேண்டும். அந்தப் பத்திரத்தை நீங்களாக இருக்கும் இடத்திலேயேவும் எழுதலாம். அல்லது இந்தியாவிலிருந்து எழுதி உங்களுக்கு

அனுப்பலாம். நீங்கள் அந்தப் பத்திரத்தில் கையெழுத்துப் போடும்போது அந்த நாட்டில் உள்ள இந்திய தூதரக அதிகாரி முன்புதான் போட வேண்டும். உங்களுடைய கையெழுத்தை அவர் அட்டஸ்ட் செய்து தன் கையெழுத்திட்டு அலுவலக முத்திரை இட வேண்டும். அப்படி கையெழுத்துப் போட்ட பத்திரத்தை இந்தியாவுக்கு அனுப்பி, நீங்கள் யாரை ஏஜெண்டாக நியமித்துள்ளீர்களோ, அவர் வசிக்கும் பகுதியிலுள்ள சார் பதிவாளர் அலுவலகத்தில் (Sub-registrar office) அந்தப் பத்திரத்தை பணம் கட்டிப் பதிவு செய்ய வேண்டும். இந்தப் பத்திரம் மூலமாகச் சொத்து வாங்கவோ விற்கவோ முடியும். இந்தப் பத்திரம் எழுதும் போது முக்கியமாக ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள் எந்தக் காரியத்திற்காக பொது அதிகாரம் கொடுக்கிறீர்களோ, அந்தக் காரியத்திற்கு மட்டுமே அந்தப் பத்திரம் செல்லுபடியாகும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு விட வேண்டும். இல்லாவிட்டால் பின்னாளில் பல சிக்கல்களுக்கு இது வழிவகுக்கும்.

மகளிர் சுய உதவிக் குழு தொடங்கியுள்ளோம். இதைப் பதிவு செய்தல் நல்லது. என்கிறார்கள். பதிவு எப்படிச் செய்ய வேண்டும்?

—தங்கம், சின்னமன்னூர்

சங்கங்கள் பதிவு செய்யும் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அருகில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் (Sub-Registrar Office). விசாரித்தால் உங்கள் பகுதியில் உள்ளவர்கள் எங்கு பதிவு செய்ய வேண்டுமென்று சொல்வார்கள். சில இடங்களில் அந்த அலுவலகத்திலேயே பதிவு செய்து கொள்ளலாம். உங்கள் குழுவில் குறைந்த பட்சம் 7 நபர்கள் இருக்க வேண்டும். ஒருவர் தலைவி, ஒருவர் செயலாளர், ஒருவர் பொருளாளர் மற்றவர்கள் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள். சங்க பதிவுக்கான பத்திரங்கள், பதிவு அலுவலகத்தின் வெளியிலேயே கிடைக்கும். அந்தப் பத்திரங்களுடன், உங்கள் குழுவின் விதி முறைகள், செயல்பாடுகள், அலுவலக இடம், அலுவலக நேரம் ஆரம்பிக்கப்பட்ட நாள், தலைவி, செயலாளர் முதலியோரின் அதிகாரங்கள், குழுவின் பணிகள், குழுவின் வரவு செலவு, குழுவின் தேர்தல் விதிமுறைகள் அடங்கிய Bye-Laws என்று சொல்லக்கூடிய ஒரு படிவம் தயாரிக்க வேண்டும். இவற்றுடன் பதிவு கட்டணமாக ரூ.555/- செலுத்த வேண்டும். ஒரு வழக்கறிஞர் மூலமாக பதிவு செய்வது நல்லது. பதிவு பெற்ற குழுவாக இருந்தால் அது சங்கமாக அங்கீகரிக்கப்பட்டு, நீங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பதற்கும், வங்கிக் கடன் பெறுவதற்கும், அரசு ஏதாவது மானியம் அறிவித்தால் அதைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கும்.

நான் ஒரு கல்லூரியில் சேர்ந்தேன். வேறு ஒரு கல்லூரியில் எனக்குப் பிடித்த கோர்ஸில் இடம் கிடைத்துவிட்டது. முதலில் சேர்ந்த கல்லூரியில் சென்று என்னுடைய சான்றிதழ்களைக் கேட்டால், அந்தப் படிப்புக்கான 4 வருட பணமும் முழுவதுமாகக் கட்டினால்தான் கொடுப்பேன் என்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு ஒரு சீட் வீணாகிவிட்டதாம், சட்டப்பூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்கலாம்?

—ஸ்வேதா, பெங்களூர்



சான்றிதழ்களைத் தர மாட்டேன் என்று சொல்வது சட்டப்படி குற்றம். பொதுவாக யாராவது ஒருவர் கல்லூரியிலிருந்து விலகிவிட்டால் அந்த இடம் அடுத்த நபருக்குக் கொடுக்கப்பட்டு விடும். ஆனால் சில தனியார் கல்லூரிகளில் இடையில் விலகிவிட்டால் முழுப்பணத்தையும் செலுத்த வேண்டும் என்று எழுதி இருப்பார்கள். நாமும் அதை ஒரு பொருட்டாக மதிக்காமல் கையெழுத்துப் போட்டு விடுவோம். அதைக் காண்பித்து நாம் பணம் செலுத்தியே ஆக வேண்டும் என்பார்கள். இதுவும் சட்டப்படி குற்றம்தான். இது மிரட்டுவதற்கு ஒப்பானது என்று சட்டம் சொல்கிறது. அப்படி யாரையும் கட்டாயப் படுத்த முடியாது. இதற்கு முதலில் வழக்கறிஞர் மூலமாக ஒரு நோட்டீஸ் அனுப்ப வேண்டும். பதில் இல்லையென்றாலோ அல்லது சரியான பதில் கொடுக்காவிட்டாலோ நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யலாம். முழுப்பணமும் கட்டியதால், ஒருவர் நமக்குத் தர வேண்டிய பணத்தைத் திரும்பப் பெற எடுக்கப்படும் நடவடிக்கையைப் போல் நீதிமன்றம் மூலமாக எடுக்கலாம். இதற்கு recovery proceedings என்று பெயர்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வீடு வாங்கினோம். பணம் முழுவதுமாகக் கட்டி விட்டோம். சேல் பத்திரம் தராமல் அலைக்கழிக்கிறார்கள். இதற்கு நீதிமன்றம் மூலமாக நடவடிக்கை எடுக்க முடியுமா?

—சுந்தரிமணி, ராஜபாளையம்

கண்டிப்பாக முடியும். முதலில் இது தொடர்பாக வழக்கு ஏதாவது உள்ளதா என்று தெரிந்துக்கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் அக்ரிமென்டில் கேட்டிருந்த தொகையைவிட அதிகமான தொகை கேட்டிருந்தால் வாங்கியவர்களில் சிலர் வழக்குத் தொடர்ந்திருப்பார்கள். அப்படி இருந்தால் அந்த வழக்கு முடிந்த பிறகு தான் இதைப் பற்றி கேட்க முடியும். அப்படி இல்லையென்றால் நீங்கள் பணம் கட்டிய ரசீதுகள், அவர்கள் வழங்கிய நோ ட்யூ சர்ட்டிஃபிகேட், அதாவது நீங்கள் செலுத்த வேண்டிய தொகை எதுவும் இல்லை என்பதற்கான சான்றிதழ், உங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட கடிதத்தின் உண்மை நகல், நீங்கள் சேல் பத்திரம் வேண்டுமென்று கேட்ட கடித்தத்தின் நகல் இவற்றைக் கொண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு எதிராக ரிட் மனு சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யலாம். பலன் நிச்சயம் உண்டு.

**சட்டம் அறிவோம் :**

**வேலைக்கு போகும் பெண்களுக்கு உள்ள சட்ட சலுகைகள் பாதுகாப்பு**

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றாலும் சட்டம் பெண்களுக்குச் சில சலுகைகளை வழங்கியுள்ளது. அதுவும் தொழிலாளர் நலச் சட்டங்களில் வேலைக்குப் போகும் பெண்களுக்கு நிறைய சலுகைகள் இருக்கின்றன

இதில் முதலில் ஃபேக்ட்ரிகள் என்று சொல்லக்கூடிய இடங்களில் வேலை செய்பவர்களுக்கு உள்ள சலுகைகள் என்னவென்று பார்ப்போம். குறைந்த பட்சம் 30 பெண் தொழிலாளிகள் உள்ள தொழிற்கூடங்களில் கண்டிப்பாக குழந்தைகள் காப்பகங்கள் அமைக்க வேண்டும். அதில் 6 வயது வரை உள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்குத் தேவையான வசதிகள்

செய்யப்பட்டிருக்க வேண்டும். இவை ஒழுங்காக நடைபெறுகிறதாவென்று அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். தேவைப்பட்டால் அரசாங்கம் சில விதிமுறைகள் விதிக்கலாம். சில தொழிற்கூடங்களில் உள்ள காப்பகங்களில் இலவச பால் மற்றும் குழந்தை உணவு தரச் சொல்லி விதிமுறைகளை அமைக்கலாம்.

பொதுவாக பெண் தொழிலாளர்களின் வேலை நேரம் காலை 6 மணியிலிருந்து இரவு 7 மணிக்குள்தான் இருக்க வேண்டும். சில தொழிற்சாலைகளில் 7 மணிக்கு மேல் பெண்கள் வேலையில் ஈடுபட வேண்டுமாயிருந்தால் அரசாங்கத்திடம் அனுமதி பெற வேண்டும். ஆனால் கண்டிப்பாக இரவு 10 மணியிலிருந்து காலை 5 மணி வரை தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தக் கூடாது. டெலிஃபோன்ஸ், மருத்துவமனை போன்ற எஸென்ஷியல் சர்வீஸ் இண்டஸ்ட்ரிகள் தொழிற்சாலை வரையறைக்குள் வராது. அவற்றுக்கென்று வேறு விதிமுறைகள் உண்டு. தற்போதுள்ள கால்செண்டர், BPO போன்ற 24 மணி நேர வேலை உள்ள இடங்களில் பெண்கள் தாம் அதிகமாக வேலை செய்கிறார்கள். இவற்றை எஸென்ஷியல் சர்வீஸ் என்று சொல்ல முடியாது. இவற்றுக்கு சட்டத் திருத்தம் தற்போது அவசியமாகிறது.

ஆபத்து விளைவிக்கும் தொழிற்சாலைகளான வெடிமருந்து, சுரங்கம் போன்றவற்றில் பெண்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது. இது தொடர்பான உபதொழிற்சாலைகளாக இருந்தால் ஆபத்து விளைவிக்கக்கூடிய பகுதியில் பெண்கள் வேலை செய்யக் கூடாது. அதேபோல் விபத்து ஏதாவது ஏற்பட்டால் முதலுதவி போன்ற வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். தொழிலாளர்களின் பாதுகாப்புக்கும் உடல்நலனைக் காப்பதற்கும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் முன் ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்க வேண்டும்.

தாய்மையை எல்லோரும் மதிப்பது போல் சட்டமும் மதிக்கிறது. பெண்களுக்காக பேறுகால பயன்பாடு சட்டம் என்றே ஒன்று இருக்கிறது. இதில் நிறைய அம்சங்கள் இருந்தாலும் பெண்களுக்கு மூன்று மாத காலம் சம்பளத்துடன் பேறு கால விடுமுறை உண்டு என்பது முக்கியமான அம்சமாகும். இதைத் தவிர பெண்கள் தங்கள் பேறுகாலத்துக்கு முன்னால் கடினமாக வேலைகளைக் கொடுக்கக் கூடாது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் கருக்கலைப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு இரண்டு வார காலம் சம்பளத்துடன் விடுமுறை வழங்க வேண்டும் என்ற சட்டப் பிரிவும் இந்தச் சட்டத்தில் உண்டு. இவற்றையெல்லாம் கண்காணிக்க தொழிற்சாலைகளில் தொழிலாளர் நல அதிகாரி என்று ஒருவரை நியமிக்க வேண்டும். இது சட்டப்பூர்வமாக நிறைவேற்றப்பட வேண்டிய விதிமுறை.

மேலும் உச்சநீதிமன்ற ஆணையின்படி பெண்கள் வேலை செய்யும் எந்த அலுவலகமாக இருந்தாலும் (அரசாங்க அலுவலகங்கள் உட்பட) அங்கே பெண்கள் நலனுக்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும். இதில் குறிப்பாகப் பெண்களுக்கு, ஆண் மேலதிகாரிகளோலோ அல்லது சக ஆண் ஊழியர்களாலோ பாலியல் வன்முறை ஏற்பட்டால் அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க இந்தக் குழு செயல்பட வேண்டும். இந்தக் குழுவில் பெண் முக்கிய உறுப்பினராக இருக்க வேண்டும்.



## பெருமை சேர்க்கும் பெண்மணிகள்

அமெரிக்காவில் நீண்ட காலம் இருந்தபின் சென்ற மூன்றாண்டுகளாக சென்னையில் வசித்து வரும் இந்திரா நரசிம்மனுக்கு அண்மையில் ஓர் இன்ப அதிர்ச்சி; மகிழ்ச்சி! சில வாரங்களுக்கு முன். அமெரிக்க அரசாங்க வருமான வரி இலாகா தலைமையகத்திலிருந்து ஒரு மின் அஞ்சல் வந்தது. தொடர்ந்து தொலைபேசியில் செய்தி விவரம் தெரிவிக்கப் பட்டது. "நீங்கள் எங்கள் இலாகாவில் பணியாற்றியபோது வரிப்பண பட்டுவாடா வழிமுறையில் ஒரு சிக்கலான பிரச்சனையை இனங்கண்டு அதற்குத் தீர்வாக நீங்கள் சமர்ப்பித்த யோசனையை பல மட்டங்களில் பரிசீலித்தபின் முடிவில் 'மிகச் சிறந்த கருத்து' என உச்ச உயர்மட்டத்தில் ஏற்கப்பட்டு அவ்வழிமுறை நாடு பூராவும் அமலாக்கப்படவிருக்கிறது. உங்களது, மிகப்பயனுள்ள யோசனை முன்வைப்புக்கு வெகுமானமாகப் பத்தாயிரம் டாலர் பரிசளிக்கப்படுகிறது" என்பதுதான் அந்தத் திடீர்த் தகவல்.




இன்டர்னல் ரெவின்யூ சர்வீஸ் எனக் கூறப்படும் பொது வருவாய்த் துறை, அமெரிக்க அரசாங்கத்து பொக்கிஷ இலாகாவின் மிகப் பெரிய அங்கமாகும். கண்டிப்பான விதிமுறைகள், சட்டதிட்டங்கள், கவனமும் நேர்மையும் மிக்க நடவடிக்கைகள், துல்லிய ஆய்வுகள், கறாரான அமலாக்கம் ஆகியவற்றிற்குப் பேர்போன இலாகா அது. வரி செலுத்துவோர் அனைவர்க்கும் செவ்வனே சேவை புரிவது, நேர்மையுடன் பாரபட்சமின்றி விதிகளை அமல் செய்வது போன்றவை அத் துறையின் குறிக்கோள். வருமான வரி செலுத்துவோரின் கணக்கில் மிகையாக வரவு வைக்கப்பட்ட பணமும் இத்துறைக் கிளை அலுவலகங்கள் மூலம் உடனடியாகப் பட்டுவாடா செயல்படுகிறது. இவ்வகையில் வருடந்தோறும் நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்கள் திருப்பியனுப்பப்பட்டு வருகின்றன. இவ்வாறு திரும்பப் பெற வேண்டிய தொகை சில சமயம் கேட்பாரற்றுத் தங்கிவிடும். அவற்றைத் திரும்பவும் அனுப்பும் போது அதற்கு வட்டி கிடையாது.

இந்திரா நரசிம்மனின் கண்டுபிடிப்பு இதுதான் : வரி மீட்புத் தகவல் பிரிவில் டேக்ஸ் அனலிஸ்ட் பதவியில் இந்திரா பணியாற்றி வருகையில் அதன் செயற்பாட்டில் அடிப்படையான ஒரு பெருங்குறைபாட்டைக் கண்டார். அக் குறையை கடந்த ஆண்டுகளில் எவரும் கவனித்ததில்லை. திருப்பி அனுப்ப வேண்டிய தொகைக்கான காசோலை கேட்டுப் பெறாதவர்களுக்கு வழக்கம் போல ஓராண்டுக்குப் பிறகு புதிய காசோலை அனுப்புகையில் முந்தைய இடைக்காலத்திற்கு வட்டி சேர்க்கப்பட மாட்டாது என்பது விதிமுறை. இந்த

பட்டுவாடாக்களுக்கான கணினி அமைப்பு முறையில் ஒரு பெரிய தவறு இழைந்தோடி வருவதை இந்திரா கண்டறிந்து திகைத்தார். யாரும் கேட்டுப் பெறாத பாக்கித் தொகைக்கு வட்டியையும் சேர்த்துக் கணக்குக் காட்டியது கணினி! அதுவும் ஒரே மாதிரியாக அல்ல. சிலர் கணக்கில் வட்டி, வேறு சிலர் கணக்கில் வட்டி இல்லை! அதைவிட மோசமான நிலைமை என்னவென்றால், வரிப் பணத்தைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் கட்டத் தவறிய நபர்களுக்குங்கூட அடுத்தடுத்த ஆண்டுகளில் திரும்பப்பெற வேண்டிய தொகைக்கு வட்டியுடன் கணக்கிட்டுக் காசோலை அனுப்பப்பட்டு வருவதும் தெரியவந்தது. மேலும், ஒழுங்காக வரி செலுத்துவோர் பலருக்கோ, அவ்வாறு வட்டி சேர்க்காமல் காசோலை சென்றது! இது பெருத்த அநியாயம் என்றுணர்ந்த இந்திரா தன்னந்தனியாகக் களத்தில் இறங்கி ஆய்வு மேற்கொண்டார். பல பட்டுவாடா கணக்குகளைத் திரட்டி வகைப்படுத்தினார். ரெவின்யூ சார்ந்த சட்ட திட்டப் புத்தகங்களைப் புரட்டிக் குறிப்பெடுத்தார். விரைவில் ஒரு நீண்ட ஆய்வுக் குறிப்பேட்டைத் தயார் செய்தார். அம்மாதிரியான குறைபாடுகளைக் களைவதற்கான அவசியத்தை வரைந்தளித்தார். திட்டவட்டமான தனது ஆய்வுகளை மேலதிகாரிகளுக்குச் சமர்ப்பித்தார். இலாகாவின் பல மட்டங்களில் ஆய்வுத்தான் பரிசீலிக்கப்பட்டு, முடிவில் யு.எஸ். தலைநகரான வாஷிங்டன் டிசியில் உள்ள வருவாய்த்துறை உச்ச உயர் அதிகாரியிடம் போய்ச் சேர்ந்தது. "அடடா! மிகச் சிறந்த கண்டுபிடிப்பு அல்லவா இது! இத்தகைய குறைபாட்டை யாரும் இதுவரை கண்டு கொள்ளாமற் போயிற்றே" என வியந்தாராம். "இக் குறைபாட்டை அகற்றி மாற்று ஏற்பாடு வகுத்து அமெரிக்கா முழுவதும் உள்ள ரெவின்யூ மையங்களில் உடனடியாக அமலாக்கப்பட வேண்டும்" என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் மூலம் யு.எஸ். பொக்கிஷ இலாகாவுக்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கான டாலர் மிச்சப்படுத்த முடியும்; தவிர, வரி செலுத்துவோர்க்கு சமமாக நியாயம் வழங்கி அவர்களின் நன்மதிப்பைப் பெற வகை செய்துள்ளது இந்திராவின் கண்டுபிடிப்பு. அத்றகாகப் பத்தாயிரம் டாலர் பரிசும் சான்றிதழும் வழங்கப் பெறுகிறார் இந்திரா.

சென்னை ராணிமேரி கல்லூரியிலும் ராஜாதானிக் கல்லூரியிலும் படித்து முதுகலைப் பட்டம் பெற்ற இந்திரா, எதிராஜ் கல்லூரியில் பொருளாதார விரிவுரையாளராகவும் பின்னர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள பள்ளத்தூரில் சீதாலட்சுமி ஆச்சி கல்லூரியில் பேராசிரியராகவும் பணியாற்றினார். திருமணத்திற்குப் பிறகு 1970–ல் அமெரிக்கா சென்றார். அங்கே முப்பத்திரண்டு ஆண்டு காலம் இனிய, மனநிறைவான, சுமுகமான இல்வாழ்வு.

குடிபுகுந்த வெளிநாட்டினரை அன்புடன் அரவணைக்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் தனது கண்டுபிடிப்பு சிறிதளவேனும் நன்மை பயக்கிறது என்று எண்ணி இந்திரா நரசிம்மன் பெருமைப்படுவது நியாயம் தானே!

-ரேவதி ரமணி.





பாண்டிச்சேரியிலிருந்து 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் மேட்டுப் பாளையத்தில், 'ராஜீவ் காந்தி' ஊனமுற்றோர் அடுக்குக் கட்டிடம். வீல்சேரில் அமர்ந்தபடி அதை பார்த்துக் கொண்டு இருந்த கவிதா, அந்த இல்லத்தில் சேர வந்த யாரோ ஒரு பெண் அல்ல. அந்த ஊனமுற்றோர் இல்லத்தைத் துவங்கி, நடத்துவதே அவர்தான்!

பிரகாசமான முகமும் தெளிவான பேச்சும் உற்சாகக் குரலுமாக இருக்கிற கவிதாவைப் பார்த்து யாரும் ஆச்சர்யப்படாமல் இருக்க முடியாது. கவிதாவுக்கு கைவிரல்கள் பத்து தவிர, கழுத்துக்குக் கீழ் எந்த உறுப்புகளுமே வேலை செய்யாது. ஆயுதங்களை மட்டுமல்லாமல் கை, கால்களையும் சேர்த்தே பிடுங்கிக் கொண்டு, அவரை போருக்கு அழைத்து இருக்கிறது வாழ்க்கை. அதிலும் அவர் வென்றிருக்கிறார் என்பதுதான் பிரமிப்புக்குரியது.

இதோ... கவிதாவின் வாழ்க்கை, அவர் வார்த்தைகளில்...

"எங்க வீட்டில் நாங்க மொத்தம் ஆறு பிள்ளைகள். எனக்கு நினைவு தெரியறதுக்கு முன்னாடியே அப்பா காலமாயிட்டார். எங்களை வளர்த்ததெல்லாம் அம்மாதான்.

சின்ன வயசுல எல்லா குழந்தைகளையும் போலத்தான் நானும் இருந்தேன். 13 வயசு இருக்கும்போது, ஒருநாள் திடீர்னு மயக்கம் வந்து, கீழ விழுந்துட்டேன். எழுந்திருக்க முயற்சி பண்ணியும் முடியல. கூட வந்த ஃப்ரெண்ட்ஸ்தான் வீட்டுக்கு கைத்தாங்கலா கூட்டிக்கிட்டு வந்தாங்க. அதுக்கப்புறம் கொஞ்சம், கொஞ்சமா கை, கால், உடல் எல்லாத்துலயும் பலம் குறைய ஆரம்பிச்சு, கடைசியில் எதையுமே அசைக்க முடியாம போயிடுச்சு. அம்மாவும் எத்தனையோ டாக்டர்கள் கிட்ட காட்டினாங்க. ஆனா, 'இது மையோபதிங்கற மோசமான நோய். இதை குணப்படுத்தவே முடியாது'ங்கற தகவலை மட்டும்தான் அவர்களால் தர முடிந்தது.

அத்தனை நாள் ஓடியாடி விளையாடிட்டு இருந்த என்னால் சாப்பிடவும், துணி மாத்தவும் கூட யாரையாவது எதிர்பார்க்கணும்ங்கற அந்த நிலைமையை தாங்கிக்கவே முடியல. அப்போது நான் பெரிய மனுஷியாகியிருந்த நேரம் வேறு. எப்படியிருக்கும்னு நினைச்சுப் பாருங்க..." என்றவரின் குரலில் இறுக்கம்.

தொண்டையைக் கனைத்தபடி தொடர்ந்தார்...

தளர்ச்சி வந்தாலும் ஊக்கம் உள்ளவர்கள்279 நிலை தளர மாட்டார்கள்என்ற வள்ளுவரின் சொல்லுக்கு வாழும் உதாரணம், கவிதா!

'இப்படியே கவலைப்பட்டுக்கிட்டு இருந்தா எதுக்கும் உதவாம போய்டுவோமோ?'னு எனக்குள்ள ஒரு பயம் வந்துடுச்சு. எங்கம்மாகிட்ட,

'என்னை எங்கயாவது அனாதை இல்லத்தில் கொண்டுபோய் விட்டுடும்மா'னு கெஞ்சினேன். ஆனா, என்னைக் கட்டிக்கிட்டு 'ஓ'னு அழுதாங்களே தவிர, அப்படி ஒரு விஷயத்தை அவர்களால் யோசிச்சுக்கூடப் பார்க்க முடியல.

அப்புறம், நிறைய பேசி, கெஞ்சி எப்படியோ அம்மாவை சம்மதிக்க வச்சுதான் 'தீப ஒளி'ங்கற ஒரு அனாதை இல்லத்துல சேர்ந்தேன். அப்போ, எனக்கு 17 வயசு...'' என்றவர், "தாகமா இருக்கு" என்றதும், ஒரு பெண் வேகவேகமாக டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து, மெதுவாக அவர் வாயில் ஊற்றுகிறார்.

அவளைப் பார்த்து, நன்றியுடன் புன்னகைத்த கவிதா, "இவ எம் பொண்ணு சுகந்தி..."என்று அறிமுகப்படுத்த, புருவம் உயர்த்தினோம்.

"ஆமா, நான் வளர்க்கற பொண்ணு! நான் ஹோம்ல இருந்தப்போ இவ மனநிலை சரியில்லாம அங்க வந்தா. யார்கிட்டேயும் பேசாம, பழகாம இருந்தவகிட்ட நானே வலிய போய் பேசி, சிரிச்சு அவளை சந்தோஷப்படுத்தினேன். ஆறே மாசத்துல, உங்களை நான் அம்மானு கூப்பிடட்டுமா?னு கேட்டா பாருங்க....சந்தோஷத்துல எனக்கு பேச்சே வரல. அன்னிலிருந்து இவ என் பொண்ணுதான். என்னை விட்டுட்டு இம்மி கூட இவ நகர்ந்ததில்ல"என்று கவிதா சொல்ல சொல்ல, சுகந்தியின் முகத்தில் புன்னகை அரும்பியது.



தொடர்ந்தார் கவிதா—"இப்படி ஒரு அன்பான மகளை மட்டுமில்ல, டன் கணக்குல மன உறுதியையும், விடாமுயற்சியையும், தன்னம்பிக்கையும் எனக்குத் தந்தது இந்த இல்லம் தான். அங்க போன பிறகு தான், 'சே...நம்மளவிட பரிதாபமா எத்தனையோ பேர் இருக்காங்களே'ங்கற எண்ணம் வந்தாச்சு. 'இவங்களால சுயமா வாழ்ந்து காட்ட முடியும்னா என்னாலயும் முடியும்'ங்கிற நம்பிக்கை முளைச்சுது. விரல்கள்ல அசைவு இருந்ததால,தையலும் எம்பிராய்டரியும் கத்துக்கிட்டேன். சுயமா சம்பாதிக்க ஆரம்பிச்சேன். இப்படியே 10 வருஷம் ஓடிப் போச்சு.

அந்த இல்லத்தைப் பொறுத்தவரைக்கும் சொந்தக் கால்ல நிக்க முடியும்ங்கிறநிலை வந்தபிறகு அவங்களை வெளியில அனுப்பிடுறது வழக்கம். அப்படி நானும் ஒருநாள் வெளிய வந்தேன். நான் வெளியில வந்து, ஒரு எம்ராய்டரி யூனிட்ல சேர்ந்து வொர்க் பண்ண ஆரம்பிச்சேன்.

வெளிஉலகத்தில் நம்மாலும் நாலு காசு சம்பாதிச்சு, நல்லாயிருக்க முடியும் தைரியம் இருக்கே... எங்களை மாதிரியானவங்களுக்கு அதுக்கு மேல் சந்தோசம் வேறு எதுவும் இல்லை.இந்த உலகத்தில் இருக்கிற எல்லா ஊனமுற்றவங்களும் அப்படி ஒரு சந்தோஷத்தை அடையணும்ங்கறதுதான் என்னோட கனவு..."என்று உணர்ச்சிவசப்பட்டவர், தானே துவக்கிய இல்லம் பற்றி விவரித்தார்...



"அந்தச் சமயத்துல எங்க வீட்டுல சொத்தைப் பிரிச்சு, அதுல என்னோட பங்கா அஞ்சு லட்சம் ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்தாங்க. என்னோட தம்பிங்க. நான் ஒருத்தியா அதை வச்சுக்கிட்டு என்ன பண்ணப் போறேன்? உடனடியா, பாண்டிச்சேரி சக்தி நகர்ல சின்னதா ஒரு வீட்டைப் பிடிச்சு மூணு பேரோட ஆரம்பிச்சதுதான்(1977–ம் வருஷம்) இந்த 'ராஜீவ் காந்தி ஊனமுற்றோர் இல்லம்'. ஆரம்பத்துல அந்த அஞ்சு லட்ச ரூபாய்ல வந்த வட்டியை வைச்சுத்தான் மாச வாடகை சாப்பாடு எல்லாத்தையும் சமாளிச்சேன்."



இதுக்கிடையில், நான் ஏற்கனவே இல்லத்தில் கத்துக்கிட்டிருந்த அகர்பத்தி தொழிலை என் பிள்ளைகளோட சேர்ந்து செய்தேன்" என்று சொல்லும் கவிதா, தன் இல்லத்தில் இருப்பவர்களை வாய்க்கு வாய் பிள்ளைகள் என்றே குறிப்பிடுகிறார்.

இவரது தம்பிகள் அக்காவுக்கு ஏதேனும் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட, அதன்படி 2003–ல் மூன்று தம்பிகளும் சேர்ந்துதான் இப்போதிருக்கும் இடத்தை வாங்கித் தந்திருக்கிறார்கள்.

"என்னைப் பத்தி கேள்விப்பட்டு வெளிநாடுகளில் இருந்தும்கூட பண உதவி செய்வதாக சொன்னாங்க. ஆனா 'என்னோட அகர்பத்தியை உங்க நாட்டுல மார்க்கெட்டிங் செஞ்சு குடுங்க. அது போதும்'னு சொல்லிட்டேன். ஏன்னா, எப்பவுமே யாராவது பணம் கொடுத்தா, நமக்கு சோம்பேறித்தனம்தான் வளரும். நம்ம சாப்பாடு நம்ம கையிலங்கறதுதான் எப்பவும் நிரந்தரமானது". என்கிறார் ஆணித்தரமாக கவிதா கூறினார்.

சமீபத்தில், பிரான்ஸிலிருந்து வந்த ஆர்டர்களிலிருந்து 13 லட்ச ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. அதில்தான் வளர்ந்து கொண்டிருக்கிறது இந்தக் கூட்டம்.

"இங்க இப்போ 35 குழந்தைகள் இருக்காங்க. அவங்களுக்கு எந்தக் குறையும் தெரியக் கூடாதுங்கறதுல ரொம்ப கவனமா இருக்கிறேன். இது தவிர, ஆதரவற்ற குழந்தைகள் 10 பேரையும் படிக்க வைக்கிறேன். அடுத்த மாசம் பிரான்ஸ், ஜெர்மனின்னு ஒரு சின்ன பிசினஸ் டூர் போகணும். அப்போதுதான் இன்னும் ஆர்டர்ஸ் கிடைக்கும்! என்கிறவரின் ஆசை...

"ஊனமுற்ற ஒருத்தர்கூட கையேந்தக் கூடாது. சொந்தக் கால்ல நிக்கணும். என்னால முடிஞ்சிருக்கு. மத்தவங்களாலயும் கண்டிப்பா முடியும்" என்பதுதான். தன்னம்பிக்கையை வெறுமனே வார்த்தைகளில் காட்டாமல் வாழ்ந்தே காட்டுகிறார் கவிதா!

—ம. பிரியதர்ஷினி

படங்கள்: என். விவேக்

## இல்லத்தரசிகளுக்கு இனிய வாய்ப்பு!

பெண்கள் இல்லத்தில் இருந்து கொண்டே சம்பாதிக்க உதவுகிறது மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன்.

டிரான்ஸ்கிப்ஷன் என்றால் என்ன ? அதனைக் கற்பதற்கான தகுதிகள்

- ஒலி வடிவ பதிவுகளை
- வரி வடிவ பதிவுகளாக மாற்றும் முறைக்கு டிரான்ஸ்கிப்ஷன் என்று பெயர்.

**மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் கற்பதற்கான அடிப்படைத் தகுதிகள்**

பொதுவாக, பட்டதாரிப் பெண்கள், ஆங்கில இலக்கணம், கூர்மையான கேட்கும் திறன் இவையே மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் கற்பதற்கான அடிப்படைத் தகுதிகள்.

**மருத்துவத் துறையில் மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன்**



• கடந்த 150 ஆண்டுகளாக, மேலை நாடுகளில் மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் என்னும் துறை, மருத்துவத் துறைக்கு பேருதவியாக இருந்து வருகிறது.

• நோயாளி பற்றிய மருத்துவ அறிக்கையைத் தயாரிக்கும் மெடிக்கல் ரிப்போர்ட்டை கம்ப்யூட்டர் மூலம் டைப் செய்து வடிவமைப்பது மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் ஆகும்.

**மேலைநாடுகளில் மருத்துவ அறிக்கை:**

தலைவலி முதல் அறுவை சிகிச்சை வரை எந்த வகையான நோயினால் பாதிக்கப்பட்டிருந்தாலும், நோயாளி பற்றிய மருத்துவ அறிக்கை மிக் [illegible]

நோயாளி எந்தத் தேதியில், எந்தவித நோய் அறிகுறிக்காக, மருத்துவரைச் சந்தித்தபொழுது, நேரம், காலம், வழங்கிய மாத்திரைகள், இனி மறுபடியும் எப்பொழுது சந்திக்க வேண்டும் ஆகிய அனைத்து விவரங்களையும் மிகத் துல்லியமாகத் தெரிவிக்க, "மெடிக்கல் ரிபோர்ட்" தயாரிக்கப் படுகிறது.

மருத்துவர் கூறும் நோயாளி பற்றிய தகவல்களை ஒலிநாடாவில் பதிவு செய்து, கம்ப்யூட்டர் மூலம் டைப் செய்து, மருத்துவரிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

ஒலிநாடாவில் பதிவுசெய்யப்பட்ட அறிக்கையை நன்கு கூர்மையான கவனத்திறனுடன் கேட்டு, கம்ப்யூட்டரில் டைப் செய்வதற்கு, அதிக டாலர்கள் செலவு செய்வார்கள்.



## இந்தியாவில் மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன்

மேலைநாட்டு முகவருடன் தொடர்பு கொண்டு, மருத்துவர் கூறும் நோயாளி பற்றிய தகவல்களை ஒலிநாடாவில் பதிவுசெய்து, இன்டர்நெட் மூலமாக இந்தியாவில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவருக்குத் தகவல்கள் வந்து சேரும்.

நன்கு பயிற்சிபெற்ற மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஜாப்–வொர்க் என்ற முறையில் 24 மணி நேரத்திற்குள், கொடுக்கப்பட்ட மருத்துவ அறிக்கையை ஹெட்ஃபோன் மூலம் நன்கு கேட்கும் திறனுடன், கம்ப்யூட்டரில் டைப் செய்து அனுப்பப்படுகிறது.

**வீட்டிலிருந்தே டாலர்களை, இல்லதரசிகள் சம்பாதிக்க :**

- இல்லத்தரசிகள் ஆங்கில அறிவும், கூர்மையான கேட்கும்திறனும் இருந்தால், மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் கற்பது என்பது எளிது.
- அரசால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்களில் இரண்டு (அ) மூன்று மாதங்களில் வழங்கப்படும் பயிற்சிகள் போதுமானது.

சிறந்த டிரான்ஸ்கிப்ஷன் ஆவதற்கு மூன்று நிலைகள் :

1. முதல் நிலை டிரான்ஸ்கிப்ஷனர்
2. குவாலிட்டி அனலைசர்
3. எடிட்டர்

மருத்துவர் கூறும் நோயாளி பற்றிய அறிக்கையை நன்கு, கேட்கும் திறனைப் பொறுத்தே, சிறந்த டிரான்ஸ்கிப்ஷனிட் ஆக முடியும்.

நிறுவனங்களை நாடி, தாம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, ஜாப் வொர்க்கை வீட்டில் இருந்து கொண்டே குறித்த நேரத்தில் செய்து முடிப்பது, மெடிக்கல் டிரான்ஸ்கிப்ஷன் முகவர்களுக்கு நம்பகத்தன்மையைக் கொடுக்க முடியும்.

இரண்டு (அ) மூன்று கம்ப்யூட்டர்கள் கூடுதலாக வாங்கி, இல்லத்தில் இருந்துகொண்டே, படித்த பட்டதாரிப் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலம் "நிர்வாகவியலில் பெண்" என்பவர், பெருமை சேர்க்க முடியும்.

குறைந்தது ரூ. 5000/– முதல் 25,000 வரை வருமானத்தை அமெரிக்க டாலர்களின் கணக்கின்படி வீட்டிலிருந்தே சம்பாதிக்கலாம்.

–லக்ஷ்மிக்ருபா

மதுரைக்கு அருகே மலர்ந்து கிடக்கிறது பனங்காடி கிராமம். கண்ணுக்குக் குளிர்ச்சியாக நெற்கதிர்கள் ஈர்க்கும் வரப்பின் மேட்டில் நிற்கிறது ஒரு 'ஸ்கூட்டி பெப்', அதிலிருந்து இரண்டு சுடிதார் பெண்கள் கையில் 'செல்'லும் ஷோல்டர் பேக்குமாக இறங்கி, வயலுக்குள் செல்ல... அவர்களை நோக்கி ஆர்வத்துடன் ஓடி வருகிறது விவசாயிகள் கூட்டம் ஒன்று.



ராஜலக்ஷ்மி, பூங்கொடி என்கிற அந்த இருவரும் பயிர்களுக்கு வைத்தியம் பார்க்கும் வேளாண் மருத்துவர்கள். சுற்றுப்பட்டி கிராம விவசாயிகள் அத்தனை பேரும் இந்த 'வரப்பு தேவதை'களின் வரவை ஆவலுடன் காத்திருப்பதையும் இவர்களின் வரவால் சூரியப் பிரகாசம் அவர்கள் முகங்களில் உதிப்பதையும் கண்ணாரக் கண்டோம். வாடிய பயிருக்கு அவர்கள் சொல்கிற மருத்துவத்தை கவனத்துடன் கேட்டு, ''எல்லாம் சரியாகிவிடும்...'' என்று சொல்கிற அவர்களின் வார்த்தையில் அகமகிழ்ந்து, "உங்க வாக்குப் போலவே ஆயிரட்டுமத்தா!" என்று கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்.

மதுரை மாவட்டத்திலேயே முதன் முறையாக 'அக்ரி கிளினிக்' மற்றும் 'அக்ரி பிசினஸ்' ஆரம்பித்து, நடத்தி வரும் இந்த வெற்றிப் பெண்களிடம், 'இது என்ன புது பிசினஸ்' என்று விசாரித்தோம்.

முதலில் ஆரம்பித்தார் ராஜலக்ஷ்மி...

"நாங்க ரெண்டு பேரும் ஒண்ணா மதுரை விவசாயக் கல்லூரியில் பிஎஸ்.சி. (அக்ரி) முடிச்சிட்டு, எம்.எஸ்.சி. ஹார்ட்டிகல்ச்சர் (தோட்டக்கலை) படிச்சோம். பொதுவாக, 'அக்ரி' படிக்கிற எல்லோருமே படிப்பு முடிஞ்சதும் அரசாங்க வேலைக்கோ அல்லது சிவில் சர்வீஸ் எக்ஸாம்ஸ் எழுதவோ போயிடுவாங்க. ஆனால், எங்களுக்கு 'படிச்ச படிப்பை வச்சு, விவசாயிகளுக்கு ஏதாவது பயன்படுகிற மாதிரி செய்யணும்'னு தோணுச்சு. அப்போதுதான் வாப்ஸ் (Voluntary Association for People Service) என்கிற என்.ஜி.ஓ. அமைப்பைச் சேர்ந்த சிவசண்முகம் சாரை சந்தித்தோம். விவசாயிகளோடு முன்னேற்றத்துக்காக மத்திய வேளாண் அமைச்சகத்திலிருந்து செயல்படுத்தப்படுகின்ற இந்த 'அக்ரி கிளினிக்' பற்றி அவர்தான் எங்களுக்குச் சொன்னார். படிப்பை முடித்து கையோடு அந்த அமைப்பில் ரெண்டு மாசப் பயிற்சி எடுத்துட்டு, பேங்க்ல லோன் வாங்கிட்டு, களத்தில் இறங்கிட்டோம்!" என்று ராஜலக்ஷ்மி நிறுத்த, 'அக்ரி கிளினிக்'கின் செயல்பாடுகள் பற்றி விவரித்தார் பூங்கொடி.

**உலகின் தலையாய தொழிலான உழவுத் தொழிலுக்கு வந்தனம் சொல்லி, புது பிஸினஸில் ஜொலிக்கிறார்கள் இந்தப் பெண்கள்!**



"சுருக்கமா சொல்லணும்னா, இது விவசாயிகளுக்கான ஆலோசனை மையம்! பொதுவாக, விவசாயத்தைப் பொறுத்தவரைக்கும் பூச்சி, நோய், சத்துக் குறைபாடு— இது மூன்றில் ஏதாவது ஒன்றுதான் பயிர் தாக்குதலுக்கான முக்கிய காரணமா இருக்கும். அப்படி பிரச்சனை வர்றப்ப, அதைப் பகுத்து ஆராயத் தெரியாமல், விவசாயிகள் எதையாவது ஒரு மருந்தை வாங்கி, அடிச்சிட்டு, மொத்த விளைச்சலையும் இழந்திட்டு பரிதாபமா நிப்பாங்க. இந்த மாதிரியான பிரச்சனைகளுக்கு ஒரு நம்பிக்கையான தீர்வு தான் 'அக்ரி கிளினிக்'.

நாங்கள், நிலத்துக்கே போயி, பயிரைப் பார்த்து, பிரச்சனைக்கான சரியான காரணத்தைக் கண்டுபிடிச்சு அதுக்கான தீர்வையும் சொல்கிறோம். கூடவே, எங்கள் 'கிளினிக்' லிருந்து நம்பகமான உரங்களையும் பூச்சிக் கொல்லிகளையும் அவர்களுக்கு நியாயமான விலைக்கு விற்பனை செய்கிறோம். தொடர்ச்சியான 'ஃபாலோ–அப்'பும் பண்ணுகிறோம். இதுல, பயிர்களுக்கான ஆலோசனை, ஃபீல்ட் விசிட்'டுக்குலாம் நாங்க ஃபீஸ் வாங்கறதில்லை. எங்கமேல நம்பிக்கை வச்சு, அடுத்தடுத்து அவங்க வாங்குற விவசாயப் பொருட்கள்தான் எங்களோட வியாபாரம்! என்று தெளிவாக விளக்கியவரை, 'எளனித் தண்ணிய குடிச்சுட்டு பேசுங்கத்தா...'' என்று விவசாயிகள் அன்புக் கட்டளையிட ஒரு சிறு இடைவேளை.

தொடர்ந்து தெம்புடன் ஆரம்பித்த ராஜலக்ஷ்மி, "நாங்க கிளினிக் ஆரம்பிச்ச புதுசுல, 'உங்களுக்காகத்தான் நாங்க ...' னு விவசாயிகள் கிட்ட போய் நின்னப்போ, 'பரம்பர பரம்பரையா விவசாயம் பண்றவுக நாங்க. இதுல புதுசா வந்து, பொட்டப் புள்ளைக நீங்க எங்களுக்கு என்னத்த சொல்லித் தரப் போறிக ?!' னு எளக்காரமாத்தான் பேசுனாங்க!" என்றார். ஆனால், 'அனுபவமில்லை' என்கிற அந்தப் பேச்சையே சவாலாக எடுத்து, தன் அப்பாவிடம் அனுமதி பெற்று, தங்களுக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலத்தையும் 'சோதனை நிலமாக' எடுத்து, அதில் பயிரிட்டு, நல்லபடியாக விளைச்சல் காட்டினாராம் ராஜலக்ஷ்மி.

"அதைப் பார்த்துட்டு அடுத்த வரப்பு, அடுத்த வயல், அடுத்த கிராமம்னு வரிசையா வர ஆரம்பிச்சாங்க. தொடர்ந்து ஒவ்வொரு கிராமத்துலயும் விவசாயக் கூட்டம் போட்டு, 'அடுத்து வர்ற பருவத்துக்கு எந்த பயிர் போடலாம்... அதுல எப்படி லாபம் பார்க்கனும்'னு எடுத்துச் சொன்னோம். அவங்களுக்கு நாங்களே 'க்ராப் இன்ஷூரன்ஸ்' போட்டுத் தர்றதோட, இன்டர்நெட்ல பார்த்து எந்தெந்த விளைபொருட்களுக்கு எந்தெந்த ஊர்ல கூடுதல் விலை கிடைக்கும்ங்கிற விபரம் வரைக்கும் எடுத்துச் சொன்னோம்."

அதோட பலன்தான்— இப்போதெல்லாம், பயிருல லேசா ஏதாவது பூச்சி தெரிஞ்சாகூட, 'நீ வந்து ஒரு எட்டு பாருத்தா...'னு எங்ககிட்ட ஓடி வர்றாங்க. இப்போ, பெரிய பெரிய இன்டர்நேஷனல் கம்பெனிகள்லருந்து எங்களுக்கு விவசாயப் பொருட்கள் தொடர்ந்து சப்ளை பண்றதோட, எங்களோட உதவிக்கு ஃபீல்ட் அசிஸ்டென்ட்ஸ் அனுப்புற அளவுக்கு முன்னேறியிருக்கோம்!" என்று சந்தோஷமாகச் சொன்னார் ராஜலக்ஷ்மி.



பனங்காடியில் 'அன்னபூரணி அக்ரி கிளினிக்'கை ராஜலக்ஷ்மி நடத்த, சமயநல்லூரில் 'விடிவெள்ளி அக்ரி கிளினிக்'கை நடத்துகிறா பூங்கொடி. இருவரும் தங்கள் கிளினிக் அமைந்துள்ள பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த 16 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து செயலாற்றி வருகின்றனர்.

பூங்கொடி, தன் கிளினிக்கிலேயே ஒரு கம்ப்யூட்டரும் வைத்து எதிர்கால பயன்பாட்டுக்காக ஒவ்வொரு விவசாயின் நிலம் மற்றும் விளைச்சல் பற்றிய குறிப்புகளையும் பதிவு செய்து வைத்துள்ளார். கூடவே பூச்சித் தாக்குதல்கள் பற்றி 'வெப் கேமரா'வில் படம் பிடித்து, அதைப் பற்றி அடுத்ததாக வரும் விவசாயிகளுக்கு எளிமையாக விளக்குகிறார்.

தன்னம்பிக்கையுடன் தாங்கள் தொடங்கிய தொழிலில் வெற்றியை ருசித்துவிட்ட இந்த இரண்டு பெண்களும் நர்சரி அமைப்பது, மீன் பண்ணை அமைப்பது. என்று அடுத்த இலக்கை நோக்கிப் பயணப்படவும் ஆரம்பித்துவிட்டனர்.

"அப்புறம்— வீட்டுல என்ன சொல்றீங்க—" என்று நாம் கேட்க, "அப்பா விவசாயிங்கிறதால என்னைவிட அவரு இதுல அதிகமா ஆர்வம் காட்டினார். அம்மாவுக்குத்தான் கொஞ்சம் தயக்கம். நான் விடல. அப்புறம் நான் 'கிளினிக்' ஆரம்பிச்சு டிவியில என்னைப் பத்தி நியூஸ் வந்தப்போ, 'எம்புள்ள இங்கிலீஷ் சேனல்ல வருது'னு அவங்களுக்கு பெருமை தாங்கல! என்றார் ராஜலக்ஷ்மி.

"எங்க வீட்டுலயும் ஆரம்பத்துல தயங்கினாங்க. ஆனா, இப்போ நிலமை என்னன்னா, நான் சமயநல்லூர்ல 'கிளினிக்' வச்சதால, குடும்பமே எனக்காக மதுரையில இருந்து 'ஷிஃப்ட்' ஆகி அங்க வந்துடுச்சு"- சந்தோஷித்தார் பூங்கொடி.

சூரியன் நடுவானில் தகிக்கும் நண்பகல் நேரம்— நமக்கு விடை கொடுத்துவிட்டு, 'வாடிய பயிரை தேடி அவற்றின் வாட்டத்தைப் போக்குகிற' அந்தப் பயிர் மருத்துவர்கள் இன்னும் வேகமாகப் பயணப்பட்டனர்.

-ஜெ.எம்.ஜனனி

படங்கள் : என்.ஜி.மணிகண்டன்



# மீடியாவில் பெண்களின் பங்களிப்பு

## முன்னுரை

இன்றைய சினிமாவில் பெண்களின் பங்குமகத்தானது. அன்றைய காலத்தில் ஒரு குறிப்பிட்ட துறைகளில் மட்டுமே பெண்கள் பங்கு பெற்றன. ஆனால் இன்றைய சினிமாவிலுள்ள அனைத்து துறைகளிலும் பெண்கள் பங்கு பெற்றுக்கின்றன.

## அன்றைய காலத்தில் பெண்கள் நிலை

அன்றைய சினிமாவில் நடிப்பு, பாடல், நடனம் போன்ற துறைகளில் மட்டுமே பெண்கள் பங்கு மிக அதிகமாக உள்ளது. இதற்கு காரணம் அன்றைய சினிமாவில் பெண்கள் கதாபாத்திரங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கே.ஆர்.விஜயா, பத்மினி, சௌகார் ஜானகி, லதா, லட்சுமி, சரோஜாதேவி போன்றோர் சிறப்பு நடிகைக்கான விருதுகள் பெற்றுள்ளோர்கள். மனோரமா, பண்டரிபாய் போன்றவர்கள் தம் குணச்சித்திர நடிப்பின் மூலம் சிறந்த துணை நடிகை விருதுகள் பெற்றுள்ளார்கள். 1968ல் லட்சுமி கல்யாணம் படத்திற்காக் பி.சுசிலா அவர்கள் சிறந்த பின்னணி பாடகி விருதினை பெற்றுள்ளார். 1969ல் துணைவன் படத்திற்காக கே.பி.சுந்தராம்பாள் அவர்கள் சிறந்த பிண்ணனி பாடகி விருதினை பெற்றுள்ளார். மனோரமா அவர்கள் 1000க்கு மேல் படங்கள் நடித்துள்ளார். சாதனை புரிந்துள்ளார். இவர் தமிழக அரசு முதல்வர்களான அறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர், செல்வி. ஜெயலலிதா ஆகியோருடன் சேர்ந்து நடித்த பெருமையை உடையவர். ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை படத்தின் மூலம் ஜெயலலிதா அறிமுக ஆனார். இவர் சிறந்த நடிகை ஆன விருதுகள் பல பெற்றுள்ளார். தற்போது தமிழக முதலமைச்சர் ஆக உள்ளார்.

## இன்றைய சினிமாவில் பெண்களின் நிலை

இன்றைய சினிமா மற்றும் மீடியாவில் பெண்களின் பங்கு அதிகமாக உள்ளது. சரிதா, சுஹாசினி, ராதிகா, மீனா, சௌந்ரி, ஷாலினி, சிம்ரன் மற்றும் ஜோதிகா போன்றவர்கள் சிறந்த நடிகைக்கான விருதுகள் பெற்றுள்ளார்கள். ராதிகா சரத்குமார் அவர்கள் ராடன் கம்பெனியின் மூலம் மீடியாவில் தம் ஆதிக்கம் செலுத்துகின்றான். இவர் தயாரித்தும், நடித்தும் சித்தி சீரியல் மக்களிடையே பிரசித்தி பெற்றது. இந்த சீரியல் தென்னிந்திய மொழிகள் அனைத்திலும் ஒளிபரப்பப்பட்டது. அக்கம்பெனி மற்றொரு படியாக தங்க வேட்டை என்ற நிகழ்ச்சியை தொடங்குகிறது. இந்நிகழ்ச்சியை தொகுத்தவர் ரம்யா கிருஷ்ணன் ஆவார். இந்நிகழ்ச்சியை தென்னிந்திய மொழியை ஒளிபரப்பப்பட்டது.

## சின்னத்திரையில் கடந்து போன '2005'

கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்த ஆண்டில் சேனல்கள் அதிகம் நம்பியது அதிர்ஷ்டத்தை தான்.

தமிழக அரசு ஒழித்த 'லாட்டரியை' சேனல்க்ள் பிடித்துக் கொண்டன.

...ட், ஹவுஸ்புல், குரோர்பதி, வசூல் ராணி, தங்க வேட்டை என திருப்புகிற ...களில் எல்லாம் ரசிகர்களுக்கு அள்ளிக் கொட்டும் அதிர்ஷ்ட மழை தான்.

நூறு நாட்கள் ஓடினாலே ஒரு சினிமா வெற்றி பெற்றதாக கணக்கு. சீரியல்காரர்கள் 500 நாட்கள் கடந்தால் தான் கவுரவம் என்று எண்ணிவிட்டார்கள் போலும்.

சன்.டி.வி.யில் உஷா சரவணன் (ஏ.வி. எம். சரவணனின் மகள்) வழங்கிவரும் 'மங்கையர் சாய்ஸ்' நிகழ்ச்சி 1400 நாட்களைக் கடந்து தொடர்ந்து கொண்டிருக்கிறது.

ஆண்டின் தொடக்கத்தில் நடிகை ஜெயசித்ரா 'சிவரஞ்சனி' என்ற தொடர் மூலம் சின்னத்திரை இயக்குனர் என்ற முத்திரைக்கும் உரியவராகி விட்டார். சென்னைத் தொலைக் காட்சியில் தொடர்ந்துகொண்டிருக்கும் இந்தத் தொடரில் இவரது மகனையும் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

நடிகை குட்டி பத்மினியின் கணவர் பிரபு நேபால் சின்னத்திரை இயக்குனராக நடிகராக களம் புகுந்தது இந்த ஆண்டில்தான். அவர் முற்றிலும் புது முகங்களைக் கொண்டு இயக்கி வரும் 'கிருஷ்ணா காட்டேஜ்' தொடர், ஜெயா டிவி.யில். காமெடி கலக்கல் செய்து கொண்டிருக்கிறார்.

ஜெயா டிவியில் ஞாயிறு கிழமையில் இரவு 8மணிக்கு ஜாக்பாட் என்ற நிகழ்ச்சியை குஷ்பு தொகுத்து வழங்கினார். இது பெண்களுக்கான ஒரு நிகழ்ச்சியே ஆகும். இதில் பெண்களுக்கான திறமையை வெளிப்படுத்துகின்றது.

சின்னத்திரை மூலம் சினிமாவுக்கு போய் மறுபடியும் சின்னத்திரையில் உலாவிக் கொண்டிருக்கும் சொர்ணமால்யா ஆண்டின் தொடக்கம் தொடங்கி காஞ்சி மடம் தொடர்பான விஷயங்களில் அதிகம் அடிபட்டார்.

பெரும் பாலான சேனல்களில் சீரியல்களே இந்த ஆண்டும் பிரதானமாக இடம்பிடித்தன. ஆனால் ஒரு சில சீரியல்கள் தவிர, மற்றவை 'சீரியஸ்' என்ற நிலை தான்.

'சின்னபாப்பா பெரியபாப்பா' காமெடித் தொடர் முடிந்த இடத்திற்குத்தான் 'தங்க வேட்டை' யாட வந்திருக்கிறார். ரம்யாகிருஷ்ணன். குழந்தை பெற்ற பிறகு 'தகதக'வென நிஜமாகவே தங்கம் போல் ஜொலிக்கிறார் ரம்யா.

ரேவதி கே.டி.வி.யில் நடத்திவரும் புதுமைப் பெண்கள் நிகழ்ச்சி 150–வது வாரத்தை கடந்து தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நடிகை மீனா சின்னத்திரைக்கு வந்தது இந்த ஆண்டில் தான். 'ஹவுஸ் புல்'என்ற நிகழ்ச்சி மூலம் அவர் வர வழியமைத்துக் கொடுத்தது ஜெயா டி.வி.

'செல்வி' தொடர் மூலம் நடிகை சரிதா சின்னத்திரை பிரவேசம்



செய்தார். சின்னத் திரை வரலாற்றில் அதிக நாட்கள் 'கோமா' பேஷன்ட்டாக நடித்த பெருமையும் இவருக்கு உண்டு.

கடந்த ஆண்டு வந்த சுனாமிக்கு எல்லாத்துறையிலும் நிதி திரட்டினார்கள். நடிகை சிந்து சின்னத்திரை கலைஞர்களுடன் இணைந்து நிதி திரட்டினார். அதிக பிரஷருக்குள்ளாகி மரணத்தை தழுவிக் கொண்டு விட்டார்.

**கேபிள் கலாட்டா!**

"இந்தியத் தொலைக்காட்சி வரலாற்றிலேயே முதன்முறையாக, முழுக்க முழுக்க பெண்கள் மட்டுமே பங்குபெறும் 'வசூல் ராணி' கேம் ஷோவை, ஒரு ஆண் ஆங்கர் நடத்துகிறார். நீ அவரையும் அந்த ஷோவையும் கொஞ்சம் கூடக் கண்டு கொள்ளாது ஏனோ"னு மதுரை, திண்டுக்கல், திருச்சி, சேலம்னு பல ஊர்கள்லருந்தும் வாசிகள் கடிதக் கணைகள் தொடுக்க—

அந்த மகானுபாவான்—'ரேடியோ மிர்ச்சி' புகழ் பாலாஜியைப் பார்த்தே



பார்த்துடுறதுனு முடிவு பண்ணினேன். என், நல்ல நேரம்! 'வசூல் ராணி' ஷூட்டிங் ஏவி.எம்.ல இப்போ நடந்துட்டிருக்கு ரீட்டானு விஜய் டி.விலருந்து தகவல் கிடைக்க, மதியமே அங்கே ஆஜர்.

செல்போன்ல 'ஹலோ ட்யூனா' லேட்டஸ்ட் ஹிந்தி பாட்டு, துறுதுறு முகம், அருவி மாதிரி பேச்சு, நிமிஷத்துக்கொரு கடி ஜோக்னு பக்கா 'யூத் 2006' ஆக இருந்தார் பாலாஜி. ஷாட் இடைவேளையில, கிடைச்ச சைக்கிள் கேப்ல உள்ள புகுந்து, ஒரு ஹாய் சொன்னேன்.

"வாவ்! நீ இப்ப என்னை மாதிரி ஆம்பிளை ஆங்கர் பத்தில்லாம் கூட எழுதறியா ரீட்டா?"' னு தமாஷ் பண்ணிட்டு, "சீக்கிரம் சொல்லு— நான் இன்னும் பத்து நிமிஷத்துல டிரெஸ் மாத்தி ரெடி ஆகணும்"னு அவசரப்படுத்தினார்.

"அதெப்படி பாலாஜி, 'ஆர்.ஜே' யா (ரேடியோ ஜாக்கி) இருந்த நீங்க, திடீர்னு கேம் ஷோ ஆங்கரா ஆனிங்க? அதுவும் லேடீஸ் மட்டுமே கலந்துக்கற ஷோ வேற! கையை ஒரு சொழட்டு சொழட்டி, பிச்சு உதர்றீங்களே! எப்படி பாலாஜி, எப்படி....?" னு கேட்டேன் குரலை தழுதழுப்பாக்கி.

"திடீர்னு கனவு மாதிரிதான் நடந்தது அது (!). 'இண்டிபெண்டென்ட் டி.வி.–'ங்கிற டீம்தான் இந்த ஷோவை பண்றாங்க. என்கிட்ட இவ்ளோ பெரிய பொறுப்பை ஒப்படைக்கிறாங்களேனு பயத்தோடதான் சம்மதிச்சேன். ஏன்னா,



ரேடியோல பேசறது வேற— டி.வி.–ல நிகழ்ச்சி நடத்துறது வேற. அங்கே என்னோட குரலை மட்டும் தான் கேப்பாங்க. ஆனா, இங்கே என்னை ஆயிரக்கணக்கானவங்க டி.வி—ல

பார்ப்பாங்களே! தமிழ்நாடு பயந்நூடக் கூடாதேங்கிற பொது அக்கறைதான். ஆனா, விஜய் டிவியும் எங்க டீமும் தோற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காத ஷோவா, வித்தியாசமா இதைப் பண்ணனும்னு சொன்னதால, அந்தக் கவலை போயிடுச்சு!"ன்னு மூச்சு விடாம பேசிக்கிட்டே போன பாலாஜிக்கு முழு சுதந்திரம் கொடுத்திருக்கிறார்களாம் தயாரிப்பு தரப்பில்.

"அந்த சுதந்திரம்தான் மிகப் பெரிய பொறுப்பு, ரீட்டா! அதை சரியா பயன்படுத்தறதுதான் உண்மையிலேயே பெரிய விஷயம். அந்தப் பொறுப்பை உணர்ந்து நான் கவனமா பண்ணிட்டிருக்கேன்! இந்த ஷோவோட பெரிய சக்ஸஸ், இது குழந்தைகளுக்கு ரொம்பப் பிடிச்சுருக்குங்கறதுதான். எந்த விஷயம் குழந்தைகளுக்குப் பிடிக்குதோ, அது நிச்சயம் நல்லா ரீச் ஆகும்தானே!னு சொல்ற பாலாஜிக்கு எக்கச்சக்க ஃபேன்ஸ்.

"குறிப்பிட்டுச் சொல்ற மாதிரி யாராவது ?"னு கேட்டேன்.

"தாத்தா, பாட்டி, அங்க்கிள், ஆன்ட்டி, தம்பி, தங்கச்சின்னு மூணு தலைமுறையிலயும் ஃபேன்ஸ் இருக்காங்க. அதுல, 'வசூல் ராணி'க்கு சான்ஸ் கேக்கறவங்களும் உண்டு. ஒரு தடவை நந்தனம் சிக்னல்ல நின்னுட்டிருந்தேன். பக்கத்துல வேகமா வந்து நின்னுச்ச ஒரு பைக்— வைஃப், குழந்தைங்களோட ஸ்பல்ல இருந்த ஒருத்தர், 'ஏங்க— அகலிகைனு பதில் சொல்லத் தெரியாதவங்களுக்கெல்லாம் சான்ஸ் கொடுக்கறீங்க. என் வைஃப், எல்லாக் கேள்விக்கும் நல்லா பதில் சொல்வாங்க— அவங்களுக்கு ஒரு சான்ஸ் கொடுக்களேன்னா!"னு சிலாகிச்சுக் சொன்னவர், நடந்துக்கிட்டிருந்த ஷூட்டிங் 'வொர்க்கிங் வுமன்ஸ் ஸ்பெஷல்'னு ஒரு கூடுதல் தகவலும் சொன்னார். பேசிக்கிட்டிருக்கும் போதே பாலாஜிக்கு அழைப்பு வர, அவருக்கு 'பை' சொல்லிவிட்டு, பிரம்மாண்டமான செட்டுக்குள்ள நுழைஞ்சேன். கலர் கலரா விளக்குகள் மிரட்ட, டென்ஷனோட, நெத்தி வியர்வையைத் துடைச்சுக்கிட்டு நின்னாங்க நாலு பெண்களும். ஸ்கூல் டீச்சர்ஸ் விஜயலட்சுமி, சீஜா, தனியார் கம்பெனியில வேலை பார்க்கற பபிதா, டியூஷன் சென்டர் நடத்தற ராதா – நாலு பேருமே சென்னை வாசிகள். நாலு பேருக்குமே இது முதல் அனுபவம்ங்கறதால, அந்த ஏ.சி. லயும் வியர்த்து ஊத்துச்சு (ஸ்டுடன்ட்ஸ் கஷ்டம் டீச்சர்ஸ்க்குப் புரிஞ்சிருக்கும்....இல்ல?) பார்வையாளர்கள் பக்கத்துலருந்து அவங்களோட துணைவர்களும் வாரிசுகளும் உற்சாகமா கட்டை விரலை உயர்த்திக் காட்டி (அது சரி— அவங்களுக்கென்ன வந்தது?) டென்ஷனை இன்னும் ஜாஸ்தியாக்க, நான் வேற ஏன் இன்னும் பி.பி. யை ஏத்தணும்னு 'விஷ்' பண்ணிட்டு ஜூட் விட்டுட்டேன்.

படங்கள்: வி. செந்தில் குமார்.

## அழகின் ரகசியம் வழங்குகிறார் தேவிப்ரியா

'அழகான ராட்சஸியே—!' என்று தாராளமாகக் கூப்பிடலாம், தேவிப்ரியாவை. ஹீரோயின் அளவுக்கு செல்வாக்கு பெற்றிருக்கும் சின்னத்திரை வில்லி!





சென்னை – அடையாறில், 'செல்வி' ஷூட்டிங்கில் இருந்தார் தேவிப்ரியா. நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும் ரஞ்சனி... அதாவது, தேவிப்ரியாவுக்கும் அவரின் கணவருக்கும் ஏற்படுகிற வாய்த் தகராறு பெரும் சண்டையாகி, கடைசியில் ரஞ்சனியை கணவரே கீழே தள்ளி விடுவதில் முடிகிறது அந்த காட்சி. முக பாவங்களில் அவர் காட்டிய வேகமும், கீழே விழுந்ததில் பிரசவ வலியெடுக்க, வலி தாங்காமல் அவர் கதறிய கதறலும்.... பார்த்துக் கொண்டிருந்த நமக்கு, அது ஷூட்டிங் என்பதே மறந்துபோய், இதயம் உலுக்கிப்போடுகிறது. இயக்குநர் 'கட்' சொன்னதும் டக்கென்று கண்ணீரைத் துடைத்தபடி, கலகலவெனச் சிரிக்கிறார். அத்தனை நேரம் இறுகிப் போய்க் கிடந்த யூனிட், சட்டென்று சகஜமாகிறது.

**பெண் சாதனையாளர்**

| | | |
|---|---|---|
| பெண் தயாரிப்பாளர் | – | டிபிராஜலட்சுமி |
| பெண் இயக்குனர் | – | டிபிராஜலட்சுமி (1936) |
| பெண் ஒளிப்பதிவாளர் | – | பி.ஆர்.விஜயலட்சுமி |
| பெண் ஒலிப்பதிவாளர் | – | மீனாட்சி நாராயணன் |
| பெண்கள் இசைப்பாளர் | – | ராஜம்புஷ்பவனம் |
| பெண்கள் கலை நிர்மாணம் | – | மோகனம் |
| பெண்கள் வசனகர்த்தா | – | கோவை நாயகி |
| பெண்கள் நடன இயக்குநர் | – | திருமதி ரெயின்பாட் |
| பெண் பி.ஆர்.ஒ | – | ராஜூவி |
| 1000ம் மேல் படம் நடித்து கின்னஸ் சாதனை | – | மனோரமா |

| விருதுகள் | விருதுகளைப் பெற்றவர்கள் |
|---|---|
| 2005 ல் சாதனையாளர் (தினகரன் விருது) | சரோஜா தேவி |
| ராஜா சாண்டோ விருது | எஸ்டி.சுப்புலெட்சுமி (1982) |
| அறிஞர் அண்ணா விருது | அஞ்சலி தேவி (2000) |
| எம்.கே.தியாகராஜபாகவதர் விருது | வைஜெயந்தி மாலா (2001) |